மௌலானா

ரூமியின்

# கிதாபுல் மஸ்னவி

மௌலானா ரூமியின்

கிதாபுல்

# மஸ்னவீ

ஆர். பி. எம். கனி, பி. ஏ., பி. எல்.

# THE MATHNAWI
of
# MOULANA JALALUDDIN RUMI

Translation and Commentary of First 2011 Verses
in Tamil

by
R. P. M. GHANI B.A., B.L.

First Published in 1961

ISBN 955-8398-09-8

Reprint (2003) by
FUZIN TEXTS
23/3, Market Road, Dharga Town 12090 - Sri Lanka
Typeset by : Royal Computer Centre, Dharga Town
Printed by : JFZ Printers - Colombo-5
© M.P.M. Jawahir, Arul Nool Pathipakam 2, North Kadaya St.,
Tenkasi 627 811,Tirunelveli Dist., Tamilnad, India.

# சமர்ப்பணம்

*மாபெரும் அறிஞர், அருமையான மார்க்கஞான விளக்கங்கள் மூலம் எண்ணற்றவர்களின் இதயங்களில் உணர்ச்சியூட்டிய பேருரையாளர்; ஆயிரக் கணக்கிலான நல்லறிவாளர்களை உண்டாக்கியளித்த பேராசிரியர்; சமூகச் சேவைக்காகத் தம்மையே முற்றும் அற்பணித்த சேவகர், ஏழைகள் குறைய கற்ற விரைந்தோடும் ஏழை பங்காளர்; ஆத்மஞான விகாசிதங்களைக் கண்டுகொண்டிருக்கும் எஜமானர். அவர்களுடைய அன்றாட வாழ்க்கையின் அம்சங்கள் ஒவ்வொன்றுமே சேவையில் தோய்ந்ததாய் - அன்பின் ஊட்டம் பெற்றதாய் விளங்குகிறது. இவ்வுலகத் தொடர்புகளிடை - சேவைகளிடை - கடமைகளிடை ஓர் ஒலியுல்லாஹ்வாக விளங்கும் மகான் அவர்கள். எனக்கு அவர்களோடு அதிகமான தொடர்பு கிடையாது. ஒருக்கணம் பழகினும் பெரியார் கேண்மை பசுமையாக என்றும் இதயத்தில் தங்கிவிடுவதுதானன்றோ!*

*அந்த அறிஞர், மாமேதை, விரிவுரையாளர், சமூகச் சேவகர், ஏழைகளின் அன்பர், அன்பு பெருக்கெடுக்கும் பேரிதயம் படைத்த பெரியார், மெய்ஞான நாதரான எஜமானர், மௌலானா மௌலவி, அல்ஹாஜ் ஸையிது அப்துல் வஹ்ஹாப் சாஹிப் புகாரீ (சென்னை, புதுக்கல்லூரியின் தற்போதைய அதிபர்) அவர்களுக்கு இதயசுத்தியுடன் இதைச் சமர்ப்பிக்கிறேன்.*

**- ஆர். பி. எம். கனி**

**ஜூலை - 1961**

# முன்னுரை

மெய்ஞ்ஞானக் கடலான மௌலானா ரூமி (ரஹ்) அவர்களுடைய 'கிதாபுல் மஸ்னவீ'யைத் தமிழில் சமர்ப்பிக்க நல்லுதவி புரிந்த எல்லாம் வல்ல ரப்பில் ஆலமீனுக்கே சகல புகழும்!

மாபெரும் கிரந்தமான 'கிதாபுல் மஸ்னவீ'யைத் தமிழில் ஆக்குவது எத்துணை பாரதூரமான வேலை என்பதை யாவரும் அறிவர். அதில் ஒரு பாட்டைக்கூடத் தமிழாக்கும் தகுதி எனக்கு இல்லை. எனினும், அல்லாஹுத்தஆலாவின் கருணை என்னை இந்தப் பணியில் ஈடுபடுத்திவிட்டது. ஹஜ்ரத் கௌதுல் அஃலமின் 'பத்ஹுர் ரப்பானி' யைப் போலும் இமாம் கஸ்ஸாலீயின் 'பேரின்ப ரஸவாதம்' போன்றும் பாரதூரமான வேலை இது. அளவிலோ அவற்றையெல்லாம் விடப் பலமடங்கு பெரியது. அவற்றின் மூலநூற்களோ வசனத்தில் அமைந்தவை. அவற்றுக்கு விளக்க வியாக்கியானம் என்று எதுவும் தனியாகத் தேவையுமில்லாதிருந்தது. 'கிதாபுல் மஸ்னவீ'யோ பாடல்களில் ஆனது. (மஸ்னவீ என்பதே கஜல், கஸீதா, திவான் என்பன போன்று பாவினம் ஒன்றின் பெயர்தான்.) இதிலுள்ள தத்துவார்த்தங்களை விளக்கித் தனியாக எழுதுவதும் அவசியம். எனவே, இந்த மொழிபெயர்ப்பு வேலை பலவகையிலும் மிகவும் கஷ்டமானது. எல்லாம் வல்ல ரஹ்மானின் நல்லுதவியால் இதையெல்லாம் சமாளித்து இயன்றவரை இதை வெளியாக்குவது என்று துணிந்து முதல் 2011 பாடல்களையும் அன்பர்கள்முன் வைத்துள்ளேன். அன்பர்கள் இந்த முயற்சிக்குப் பூரண ஆதரவு தந்து, இது முழுமையும் வெளிவர ஊக்கமளிப்பார்களாக!

இதன் வியாக்கியானப் பகுதியில் தரப்பட்டுள்ள திருகுர்ஆன் வசனங்கள், ஹதீஸ்கள் ஆகியவற்றின் தர்ஜமாக்கள் கூடியவரை அவற்றின் கருத்தைத் தருவனவேயன்றி, அவற்றுக்கு நேரடியான மொழிபெயர்ப்புகளல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 'மஸ்னவீ' மொழிபெயர்ப்பிலும் கூடியவரை நேரடியாக மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளதாயினும், சிற்சில இடங்களில் அவ்விதமின்றி, பாடலின் கருத்து வருமாறு செய்யப்பட்டுள்ளது தவிர்க்க முடியாததாகும்.

பாடல்களுக்கான விளக்கவுரைகளை ஆங்காங்கே அடிக் குறிப்புகளாகத் தந்துவிடுவது என்றே முதலில் திட்டமிட்டு வேலை செய்தேன். ஆனால், மஸ்னவீயைப் படிப்பவர்கள் அடிக்குறிப்பு

*களில் தரப்படும் விளக்கவுரைகளைப் படிக்க ஆரம்பித்ததும் மஸ்னவீயைவிட்டே கவனம்திரும்பியவர்களாக இந்தக் குறிப்பு களைப் படிப்பதிலேயே கருத்துக்கொண்டு விடுவார்கள். அதனால், மஸ்னவீயைவிட்டுக் கவனம் வேறுபக்கம் போய்விடும்; அவ்விதம் நேராமலிருப்பதற்காக அதற்கான விளக்கவுரையைத் தனியே தருவது நலம் - அது கொண்டு அவசியமான சந்தர்ப்பங்களில் மட்டும் அதைத் திருப்பிப் பார்க்க வசதியாகும் - என்று அன்பர்கள் பலர் ஆலோசனை கூறினர். அதை ஏற்று விளக்கவுரை தனியாகத் தரப்பட்டுள்ளது.*

*இதிலுள்ள குற்றங்குறைகளை அறிஞர்கள் எடுத்துக்காட்டி னால் அன்புடன் அவற்றை ஏற்றுக்கொள்ள எப்போதும் தயாரா யுள்ளேன்.*

*இன்ஷா அல்லாஹ், 'கிதாபுல் மஸ்னவீ' யின் மற்ற பாகங்களும் அடுத்து அடுத்து வெளிவர ஆயத்தங்கள் செய்துகொண்டிருக் கிறேன். இந்த வழியில் அன்பர்கள் 'துஆ' இறைஞ்சுமாறு வேண்டுகிறேன்.*

**-ஆர். பி. எம். கனி**

**ஜூலை - 1961**

# மௌலானா ரூமி

பாரஸீகத்தின் மாபெரும் மெய்ஞ்ஞானக் கவிஞர்[1] மௌலானா ஜலாலுத்தீன் ரூமி (ரஹ்) ஆவார்கள். 'ஆசியாவிலேயே தலையாய ஸூபிக் கவிஞர் அவர்கள்தாம்.[2] 'ஜனாபெ மௌலவியெ மஃனவி' (மெய்ஞ்ஞானப் பெருங் கடலான மௌலானா)[3] என்று போற்றப் படும் மகான் அவர்கள்.

மௌலானா ரூமி ஹிஜ்ரி 604 ரபியுல் அவ்வல் பிறை ஆறில் (கி. பி.1207, செப்டம்பர் 30-ல்) குராஸான் மாகாணத்திலிருந்த பல்கு நகரில் பிறந்தார்கள்.[4] அவர்களுடைய இயற்பெயர் முஹம்மது என்பதாகும். அவர்கள் தந்தை பஹாவுத்தீன் முஹம்மது வலத் தமது ஊரில் செல்வாக்குமிக்க மார்க்க ஞானியாய்த் திகழ்ந்தார்கள். மௌலானா ரூமி அரபி வமிசத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும், அவர்கள் பரம்பரை ஹஜ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்களி லிருந்து தொடங்குவதும் குறிப்பிடத்தக்கவையாகும். அவர்களு டைய வம்சாவளி வருமாறு: மௌலானா ரூமி - பஹாவுத்தீன் முஹம்மது வலத் - ஜலாலுத்தீன் ஹுஸைன் - அஹ்மது காதிபுல் பல்கி - காஸீம் மூஸா - அப்துல்லாஹ் - அப்துர் ரஹ்மான்- ஹஜ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள். மௌலானா அவர்கள் பன்னிரண்டு வயதை எய்தியசமயம் மங்கோலிய முரடர்கள் குராஸானுள் நுழைந்து படுநாசம் விளைவித்து வந்தனர். அவர் களால் பல்கு நகருக்கு பேராபத்து விளையும் என்ற நிலையுண்டான போது, மற்றும் பலரைப்போல் மௌலானாவின் தந்தையான பஹாவுத்தீன் வலதும் தங்கள் குடும்பத்தாரோடு அங்கிருந்து வெளியேறினார்கள். பல ஊர்களிலும் சுற்றிவிட்டு அவர்கள் தற்சமயம் துருக்கியிலுள்ள ரூம் என்ற சிறிய ஆசியா வந்தடைந் தார்கள்.

---

1. Nicholson : Rumi, Poet and Mystic.

2. E. G. Brown : A Literary History of Persia.

3. ஜாமி

4. இங்கே தரப்பட்டுள்ள மௌலானா ரூமியின் சரிதைப் பகுதி பெரும்பாலில் அவர்களுடைய புதல்வர் சுல்தான் வலத் எழுதிய 'இப்திதா - நாமா' என்ற நூலிலுள்ள தகவல்களைக் கொண்டு தொகுக்கப்பட்டதாகும்.

அங்கே கோனியா என்ற நகருக்கு நாற்பது மைல்களுக்கு அப்பாலுள்ள ஐராந்தா என்னுமிடத்தில் முதலில் அவர்கள் தங்கினார்கள். அப்போதுதான் மௌலானா ரூமிக்குத் திருமணம் முடிந்தது. மறு ஆண்டில் (ஹிஜ்ரி 624 -ல் அவர்களுக்கு சுல்தான் வலத் என்ற ஆண் மகவு பிறந்தது. அதன்பின் மௌலானாவின் தந்தை அக்கால செல்ஜுூக் அரசாங்கத்தின் தலைமைப் பீடமான கோனியாவில் குடும்பசகிதம் குடியேறினார்கள். அங்கே அவர்கள் ஹஜ்ரி 630-ல் காலமானார்கள்.

சிறந்த மார்க்கஞான அறிஞரான தமது தந்தையிடமே மௌலானா அவர்கள் கற்றுத்தேர்ந்தார்கள். ஏழு வயது முதலே தொழுகை முதலிய மார்க்கக் கடமைகளை நிறைவேற்றுவதில் அவர்கள் மிகவும் அக்கறையுடன் நடந்துகொண்டார்கள். தமது தந்தை மறைந்தபின் ஸையிது புர்ஹானுத்தீன் முஹக்கீக் என்ற பெரியாரின் சகவாசத்தை அண்டி பல்வேறு கலைகளையும் அவர்களிடம் கற்றதுடன், அவர்களிடமே ஆத்மஞான தீக்ஷையும் பெற்று, ஆத்மஞான அப்பியாசங்களில் ஈடுபட்டு, பல்வேறு படித்தரங்களையும் கடந்தார்கள். மௌலானா தங்கள் குருநாதருடன் இவ்விதம் பத்து ஆண்டுகள் தொடர்பு கொண்டிருந்தபின் அந்தக் குருநாதரான ஸையிது புர்ஹானுத்தீன் காலமாகிவிட்டார்கள். அவர்கள் காலமாகுமுன் மௌலானாவைத் தங்கள் ஆத்மஞான வாரிசாக நியமித்திருந்தார்கள். எனவே, தங்கள் முப்பத்து மூன்றாம் வயதில் மௌலானா அவர்கள் ஒரு குருநாதரின் பீடத்தமர்ந்து ஞான தீக்ஷை அருளலானார்கள்.

இவ்விதம் நான்கு ஆண்டுகள்கிழித்தபின் ஹிஜ்ரி 642 -ல் (கி. பி. 1244 -ல்) மௌலானா அவர்கள் ஷம்ஸுூத்தீன் தப்ரேஜியைச் சந்தித்தார்கள். தாங்கள் தேடிக்கொண்டிருந்த சம்பூர்ண மனிதராகவே அவர்களைக் கண்ட மௌலானா அவர்கள், அவர்களிடம் மிகுந்த ஈடுபாடு உடையவர்களானார்கள். இரண்டாண்டுகள் அவர்களோடேயே தங்கள் வீட்டில் ஓர் அறையில் தனித்திருந்தார்கள். இருவரும் இணைபிரியா நேயர்களாக இருந்தார்கள். தங்கள் தந்தை ஷம்ஸே தப்ரேஜியிடம் கொண்ட நட்பை அவர்கள் புதல்வர் சுல்தான் வலத், மூஸா (அலை) அவர்கள் கிலுரு நபி (அலை) அவர்களோடு கொண்டிருந்த தொடர்புக்கு உவமித்துள்ளார். இவ்விதம் மௌலானா அவர்கள் முற்றும் ஷம்ஸே தப்ரேஜியிடம் ஈடுபாடு கொண்டு தங்கள் சீடர்களைக் கூடச் சரிவரக் கவனிக்காமலிருந்துவிட்டார்கள். இதனால் அந்தச் சீடர்கள் தமது குருநாதரின் கவனத்தையே முற்றும் கவர்ந்துவிட்ட ஷம்ஸ்மீது பொறாமை கொண்டனர். அவர்களை மிகவும் கடுமையாகத் தாக்கி, இழிவாகப்

பேசவே, அவர்கள் தமாஸ்கஸ் நகருக்கு ஓடிப்போய்விட்டார்கள். மௌலானா அவர்கள் ஷம்ஸின் பிரிவைச் சகிக்க மாட்டாதவர்களாகத் துடிதுடித்தார்கள். எனவே, அவர்கள் புதல்வர் சுல்தான் வலத், தமாஸ்கஸ் போய் அவர்களை அழைத்து வந்தார்கள். மீண்டும் ஒரு முறை மௌலானாவின் சீடர்கள் ஷம்ஸுடன் மோதி, அப்போதும் அவர்கள் அங்கிருந்தகன்றார்கள். அப்போதும் சுல்தான் வலத் அவர்களை மீண்டும் தங்கள் தந்தையாரிடம் கொண்டு வந்து சேர்த்தார். கடைசியில் ஹிஜ்ரி 645 -ல் இந்த மர்மமான பெரியார் மறைந்துவிட்டார்கள். அவர்கள் எப்படி மறைந்தார்கள் என்பது யாரும் சரிவர அறியாத மர்மமாகவே போய்விட்டது. இந்த ஷம்ஸுத்தீன் தப்ரேஜியை விளித்துப் பாடிய பாடல்கள் தாம் 'திவானெ -ஷம்ஸே - தப்ரேஜ்' என்று பெயர் பெற்றன. (சுமார் 2500 அடிகளைக் கொண்டவை இப்பாடல் தொகுப்பு.)

இப்போது மௌலானா அவர்களுடைய ஆத்மஞான போதனை ஓர் உச்சக் கட்டத்தையடைந்தது. ஆத்மஞானப் பயிற்சியில் வட்டமாக நின்றுகொண்டு - பின்னணியில் புல்லாங்குழல் ஒலிக்க - தெய்வ நாம பஜிப்பில் ஈடுபட்டுப் பரவசநிலை எய்தும் அப்பியாசங்கள் மௌலானா அவர்களுடைய மௌலவி தரீக்காவில் புகுத்தப்பட்டன. ஷம்ஸே தப்ரேஜி மறைந்தபின், அவர்களின் சீடர்களுள் ஒருவரான ஸலாஹுத்தீன் பரீதூன் சர்கப் என்பாரோடு அவர்கள் நெருங்கிப் பழகினார்கள். ஸலாஹுத் தீனைத் தமது கலீபாவாக நியமித்து, ஆத்மஞான அப்பியாசங்களை அவர்களைச் சொல்லிக் கொடுக்கும்படி செய்தார்கள். ஹிஜ்ரி 659 -ல் ஸலாஹுத் தீன் காலமானார்கள்

இப்போது மௌலானா அவர்கள் புதியதோர் உற்ற தோழரை அடையப்பெற்றார்கள். அவர்கள்தான் ஹுஸாமுத்தீன் ஹஸன் இப்னு முஹம்மது ஹஸன் இப்னு அகீ துருக். ஹுஸாமுத்தீன் மௌலானா அவர்களுடைய சீடர்களுள் ஒருவர்தான். ஆயினும், அவர்கள் மௌலானாவின் உற்ற நண்பராக விளங்கினார்கள். தங்களுடைய உபந்நியாசங்களிலெல்லாம் மௌலானா இவர்களைப் பாராட்டிப் பேசாமலிருப்பதில்லை. தங்களிடம் வரும் பணம் முழுவதையும் மௌலானா இவர்களிடமே கொடுப்பார்கள். இவர்கள் அதை ஏழைகளுக்கு வினியோகிப்பார்கள். மௌலானா இவர்களிடம் வைத்திருந்த மதிப்பை - இவர்களையே சம்பூரண குருநாதராகவும், தங்கள் உயிருக்குயிராகவும் கருதியதைப் பொதுவாக மஸ்னவீயில் நெடுகிலும், குறிப்பாக அவர்களுடைய

முன்னுரைகளில் காணலாம். மஸ்னவீக்கே அவர்கள் ஓரிடத்தில் 'ஹுஸாம் நாமா' (நான்காம் கிதாப் : பாடல் இரண்டில்) பெயர் கொடுத்துள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஹிஜ்ரி 672 ஜமாத்துல் ஆகிர் பிறை ஐந்தில் (கி.பி.1273 டிஸம்பர் 16 -ல்) மௌலானா அவர்கள் தங்கள் அறுபத்து எட்டாம் வயதில் காலமடைந்தார்கள். அதுவரை (பத்து ஆண்டுகளாகத்) தங்கள் கலீபாகவாகவிருந்த ஹுஸாமுத்தீனையே அவர்கள் தங்கள் ஆத்மீக வாரிசாகவும் நியமித்துச் சென்றார்கள். (பன்னிரண்டு ஆண்டுகள் ஹுஸாமுத்தீன் மௌலவி தரீக்காவின் குருவாக இருந்து, அதன் பின் அந்தப் பதவியை மௌலானா அவர்களின் புதல்வரான சுல்தான் வலதிடம் ஒப்படைத்துவிட்டார்கள்.)

### கிதாபுல் மஸ்னவீ

மௌலானா அவர்கள் மஸ்னவீயை எழுதுமுன்னர் அவர்களுடைய தரீக்காவைச் சேர்ந்த மாணவர்கள் ஹக்கீம் ஸனாயீயின் 'ஹதீகா', பரீதுத்தீன் அத்தாரின் 'மந்திக்குத் தைர்' ஆகிய மெய்ஞான அகமிய விளக்க நூற்களைப் படித்து வந்தனர். ஒரு நாள் காலையில் ஹுஸாமுத்தீன் மௌலானாவை அணுகி அவற்றையெல்லாம் விடப் பெரிய நூல் ஒன்றை அவர்களே ஆக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அப்போது மௌலானா அவர்கள், "சென்ற இரவில் நானும் இதேவிதம்தான் எண்ணினேன். அதன் பயனாய் இந்தப் பதினெட்டுப் பாடல்களையும் எழுதினேன்" என்று கூறித் தங்கள் தலைப்பாகையில் செருகியிருந்த தாள் ஒன்றை வெளியிலெடுத்து அதிலிருந்த பாடல்களை ஹுஸாமுத்தீனிடம் படித்துக்காட்டினார்கள்.

அதன்பின் தினமும் மௌலானா பாடல்களைச் சொல்லிவர ஹுஸாமுத்தீன் அவற்றை எழுதிவந்தார். இவ்விதம் தொடங்கிய 'கிதாபுல் மஸ்னவீ'யின் முதல் கிதாப் முடிவடைந்த சமயம், ஹுஸாமுத்தீனுடைய மனைவியார் காலமாகிவிட்டதால் இரண்டு ஆண்டுகள் அது மேலும் தொடர்ந்து எழுதப்படாமலே நின்று போய்விட்டது. பின்னர் மீண்டும் அதை எழுத ஆரம்பித்து மொத்தம் ஆறு கிதாபுகளில் இருபத்துஐயாயிரத்து அறுநூறு பாடல்களை முடித்த சமயம் மரணம் அவர்களைப் பிரித்துவிட்டது. எனினும், அதனால் மஸ்னவீ மௌலானாவின் முடிவுரையைப் பெறாதுபோயினும், பூரணத்துவத்தின் முத்திரையைப் பெற்றதாகவே திகழ்கிறது. மெய்ஞானநாதர் ஒருவரின் மகத்தான நூல் ஒன்று வேறு எவ்வாறு விளங்கமுடியும்!

தெய்வ உதிப்பின்மூலம் ஒரு மகான் என்ன சாதிக்க முடியும் என்பதை எண்பிக்கும் அருள்நூல் கிதாபுல் மஸ்னவீ. திருகுர்ஆன், ஹதீஸின் சாரத்தைத் தன்னகத்தே கொண்ட அற்புத சிருஷ்டி இது. இதனுடைய அதி அற்புத நடையும், ஓசை நயமும், பாடல்களின் காம்பீரியமும், கருத்தழகும், இத்தனைக்குமிடையில் அதன் எளிமையும் கற்றோரைப் பிரமிக்க வைப்பனவாகும். எத்துணையோ வாசகர்களுடைய மனங்களைக் கரைத்து அவர்களை மெய்ஞானப் பாதையில் திருப்பிவிட்ட பெருமை 'கிதாபுல் மஸ்னவீ'க்கு உண்டு.

"மௌலானா ரூமி பாரஸீகத்து மெய்நிலை கண்ட ஞானத்தை மிக உன்னதமாக வெளியிட்டவர்கள். ஸூபிப் பாடல்கள் என்ற பரந்த காட்சியைக் கண்ணோட்டமிடுவோமாயின் அவற்றிடை அவர்களை உன்னதமான மலைச்சிகரமாகவே பார்க்கிறோம். அவர்களுக்கு முன்னும், பின்னும் வந்த கவிஞர்கள், அவர்களோடு ஒப்பிடின் சாதாரணக் குன்றுகளாகவே தென்படுகின்றனர். அவர்களுடைய முன்மாதிரி, சிந்தனை, மொழி ஆகியவற்றின் பலம் அவர்களுக்குப் பின்னர் மிகவும் தீவிரமாக உணரப்பட்டுள்ளது. அவர்களுக்குப்பின் வந்த - பாரஸீக மொழி படிக்கும் திறனுள்ள - ஸூபி ஒவ்வொருவருமே தன்னேரிலாத அவர்களுடைய தலைமையை ஒப்புக்கொண்டே வந்துள்ளனர்."[1]

ஒருவகையில் பார்த்தால் மௌலானா ரூமி மெய்நிலை கண்ட அருளிலக்கியம் சமைத்தோர் வரிசையில் கிட்டத்தட்டக் கடைசி யான இடத்தை வகிப்பவர்களாவார்கள். ஸூபி மகான் அபூ ஸையிதில் தொடங்கிய ஆத்ம விசாரணை இலக்கியம், ஹஜ்ரத் கௌதுல் அஃலம், இமாம் கஸ்ஸாலீ, ஷைகுல் அக்பர் முஹியித்தீன் இப்னுல் அரபி, அப்துல் கரீம் ஜீலி போன்ற மகான்களின் எழுத் துக்களிலும் உபந்நியாசங்களிலும் சுடர்விட்டுப் பிரகாசிக்கலா யிற்று. எனவே, மௌலானா அவர்கள் ஸனாயி, அத்தார் போன்றோ ருடைய ஆத்மஞான விளக்கங்களுடன், தங்களுக்கு முந்திய காலத்தவர்களான இவர்களுடைய விளக்கங்களையும் படித்திருக்க ஏதுவுண்டு. எனினும், மௌலானா அவர்கள் தங்களுக்கென ஒரு தனி வழியை வகுத்துக்கொண்டிருப்பதையும், தத்துவார்த்த உண்மைகளை அவர்கள் வெளியிடும் முறை முற்றும் புதிதாக இருப்பதையும் மஸ்னவீயைப் படிப்போர் புரிந்துகொள்ள முடியும்.

1. A. J. Arberry in "Rumi, Poet and Mystic"

மஸ்னவீ பெற்றுள்ள முக்கியத்துவத்தை அது பல்வேறு மொழிகளிலும் வியாக்கியான உரைகளுடன் ஆக்கப்பட்டிருப்பது கொண்டே உணரலாம். முதன்முதலில் பாரஸீக மொழியிலேயே வியாக்கியான நூற்கள் வெளிவரத் தொடங்கினவாயினும், மௌலானா அவர்கள் வாழ்ந்த துருக்கி நாட்டின் மொழியான துருக்கியில்தான் முதன்முதலில் ஒழுங்கான, மஸ்னவீ முழுவதற்குமான மொழிபெயர்ப்பு - விரிவுரை நூற்கள் வெளிவந்தன. அவற்றில் மிக முக்கியமான வியாக்கியான நூற்கள் மூன்று. அவற்றை எழுதியோர் பெயர்கள் வருமாறு : சுரூரி, ஷமீ, இஸ்மாயீல் அங்கிறாவி. (இவர்களுள்ளும் இஸ்மாயீல் அங்கிறாவியின் விரிவுரை - ஆறு வால்யூம்களில் வெளிவந்துள்ளது - தான் மிகவும் சிறப்புடையதாகும்.)

துருக்கி மொழியில் விரிவுரை எழுதிய வேறு முக்கியமான விரிவுரையாளர்களின் பெயர்கள் வருமாறு : ஷைகுஸரி அப்துல் லாஹ் (முதல் கிதாபுக்கு மட்டும் ஆறு வால்யும்களில் மிகவும் அருமையான விரிவுரை வழங்கியுள்ளார்.) அங்கோரா அமீராக இருந்த ஆபிதீன் பாஷா (ஆறு வால்யூம் விளக்கவுரை). ஷைகு இஸ்மாயீல் ஹக்கீ (முதல் கிதாபுக்கு மட்டும் இரண்டு வால்யூம் களில் எழுதியுள்ளார்).

பாரஸீக மொழியில் நூற்றுக் கணக்கான வியாக்கியான நூற்களுண்டு. அவற்றில் சிலவற்றை எழுதியோர் பெயர்கள் வருமாறு : 1. கமாலுத்தீன் ஹுஸைன் அல்குப்ரவீ, 2. நிஜாமுத்தீன் மஹ்மூது ஷிராஜீ (இவ்விருவரும்தான் மஸ்னவீக்கே முதன்முதலில் வியாக்கியான உரை தீட்டியோராவர்). 3. மௌலவி முஹம்மது ரிஜா, 4. மௌலவி வலி முஹம்மது அக்பராபாத்தி, 5. மௌலானா பஹ்ருல் உலூம் அப்துல் அலீ முஹம்மது லக்னவீ.

இவர்களிலும், மௌலவி வலி முஹம்மதின் வியாக்கியான நூல் மிகவும் சிறப்புடையது. இந்தியரான மௌலானா பஹ்ருல் உலூம் அப்துல் அலீ லக்னவீயின் விரிவுரையும் மிகவும் அற்புதமானதும், பிரசித்தி வாய்ந்ததுமாகும்.

அரபியில் ஷைகு யூஸுப் இப்னு அஹ்மது மௌலவி என்பார் எழுதிய வியாக்கியானவுரையொன்று உண்டு. இது பெரும்பாலில் இஸ்மாயீல் அங்கிறாவியின் துருக்கி வியாக்கியான நூலின் தழுவல்தான்.

உர்துவில் குறிப்பிடத்தக்க மொழிபெயர்ப்புகள் இரண்டு.. ஒன்று, முஹம்மது யூஸுப் அலீ ஷாவால் எழுதப்பட்ட 'பிரஹானெ

யூஸுபி' என்பதாகும். இது பாட்டு நடையில் எழுதப்பட்டிருப் பதுடன், முற்றுப் பெறாமலும் இருப்பதால் பயனுடையதாயில்லை. மற்றொன்று, மௌலானா முஹம்மது நஜீர் சாஹிப் அர்ஷியால் எழுதப்பட்ட 'மிப்தாஹுல் உலூம்' ஆகும். இது உர்துவிலுள்ள மிகவும் பிரபலமான பதினெட்டு வால்யூம்களைக் கொண்ட வியாக்கியான நூல். இது மௌலானா ரூமியுடைய மஸ்னவீக்கு வியாக்கியானமாக மட்டுமன்றி மெய்நிலை கண்ட பல்வேறு ஞான விளக்கங்கள், சர்ச்சைகள், மெய்ப்பொருள் பற்றிய பல்வேறு கவிஞர்களுடைய பாடல்கள் ஆகியவையும் எடுத்தாளப்பட்டுள்ள பெரும் கிரந்தமாகவும் விளங்குகிறது.

ஆங்கில இலக்கியத்திலும் மஸ்னவீ ஒரு முக்கியமான இடத் தைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். மஸ்னவீயை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த அறிஞர்கள் வருமாறு:

1. ஜேம்ஸ் டபிள்யூ ரெட் ஹவுஸ் : முதல் பாகத்தை மட்டும் இவர் மொழிபெயர்த்தார். இது மஸ்னவீயை ஆங்கிலத்திலாக்கு வதில் முதல் முயற்சியாய் இருந்ததேயன்றி, வெற்றிகரமானதாய் அமையவில்லை.

2. இ. எச். வின்பீல்ட் : ஆறு கிதாபுகளிலிருந்து தொகுக்கப்பட்ட 3500 பாடல்களின் மொழிபெயர்ப்பு இது. நல்ல ஆங்கில நடையில் இது அமைந்துள்ளது.

3. டாக்டர் ஸி. இ. வில்ஸன் : இரண்டாம் கிதாபை மட்டும் மிகவும் சிறப்பான முறையில் மொழிபெயர்த்துள்ளார்.

4. ரெயினால்ட் ஏ. நிக்கல்ஸன் : ஆறு கிதாபுகளுக்கும் வரிக்கு வரி அதிஅற்புதமாக மஸ்னவீ முழுவதையும் மொழிபெயர்த் துள்ளதுடன், அதற்கு அற்புதமான வியாக்கியானவுரையையும் வழங்கிய பேரறிஞர். 'கஷ்புல் மஜிதூப்,' 'அஸ்ராரெ குத்இ' போன்ற பல பழைய புதிய அருமையான கிரந்தங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் இவர். 'தஸ்கிரத்துல் ஔலியா' போன்ற பல கிரந்தங்களைப் பதிப்பித்தவர்; மெய்ஞான நாதர்கள் பலருடைய வாழ்க்கை வரலாறுகளை எழுதியவர் அறிஞர் நிக்கல்ஸன். இவர் மௌலானா ரூமியின் மஸ்னவீயின் மூலத்தைப் பதிப்பித்துள்ள துடன், மொழிபெயர்ப்பைத் தனிவால்யூம்களாகவும் வியாக் கியானத்தைத் தனிவால்யூம்களாகவும் எழுதியுள்ளார். இவை யாவும் எட்டு வால்யூம்களில் தரப்பட்டுள்ளன. இந்த வேலையில் இவர் பதினெட்டு ஆண்டுக் காலம் ஈடுபட்டிருந்தார். இவரால் வளம்

பெற்ற ஆங்கில இலக்கியம் மட்டுமன்றி, முஸ்லிம் உலகமும் இந்தச் சேவைக்காக இவருக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

தமிழில் நம்முடைய முயற்சிக்கு முன்பு சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் - கோட்டார் இ. எஸ். பீர் முஹம்மது சாஹிபு என்ற அறிஞர் மஸ்னவீயை, 'மஸ்னவீ ஷரீப்' என்ற பெயரோடு சிறுகச் சிறுக சுமார் ஆயிரம் பாடல்கள்வரை மொழிபெயர்த்து வெளியிட்டுப் பின்னர் அவற்றை இரண்டு பாகங்களாக வெளியிட்டார். அத்துடன் இவருடைய முயற்சி நின்றுவிட்டது. எனினும், முதன்முதலில் மஸ்னவீயைத் தமிழ் நாட்டில் அறிமுகப்படுத்திய பெருமை இவருக்கு உண்டு. இவருடைய முயற்சி உர்துவிலுள்ள மேலே நாம் குறிப்பிட்டுள்ள 'மிப்தாஹுல் உலூ'மைத் தழுவியதாகும். அந்தப் பாணியில் மஸ்னவீ முழுவதையும் தமிழில் கொண்டுவருவதாயின் இவர் வெளியிட்டுள்ளதுபோல் சுமார் ஐம்பது பாகங்களாவது ஆகும். அது இன்று நம்முடைய சூழ்நிலைகளில் அசாதாரணமான காரியமுமாகும்.

எனவேதான் நாம் மிப்தாஹுல் உலூ'மைப் பயன்படுத்தி அதிலிருந்து சிற்சில குறிப்புகளை எடுத்துக்கொண்டோமாயினும் அதைப் பின்பற்ற விரும்பவில்லை. மஸ்னவீயின் மொழிபெயர்ப்பு - வியாக்கியான் நூல் சகலவகைகளிலும் மஸ்னவீயை விளங்க வைப்பதாக இருக்க வேண்டும். அதில் தரப்படுகிற ஒவ்வொரு வாக்கியமும் வார்த்தையும் கூட அதன் கருத்தை விளக்குவதற்காகப் பயன்படுவதாக இருக்க வேண்டுமேயன்றி, படிப்பவர் கவனத்தை வேறு திசையில் திருப்பக்கூடாது. மேலும், மஸ்னவீக்கு மிகவும் அற்புதமான வியாக்கியான கர்த்தாவாக மௌலானா ரூமியே விளங்குகிறார்கள். அவர்கள் ஒவ்வோரிடங்களில் வெளியிடும் கருத்துக்களுக்கு ஆங்காங்கோ, அல்லது வேறு இடங்களிலோ அருமையான விளக்கம் தந்துவிடுகிறார்கள். அதைச் சுட்டிக்காட்டு வதையும், திருகுர்ஆன், ஹதீஸின் கருத்துரைகள் எடுத்தாளப்பட் டுள்ள இடங்களில் அவற்றைச் சுட்டிக்காட்டி, அவசியமாயின் அவற்றின் தத்துவார்த்தத்தை விளக்குவதையும் மௌலானா அவர்கள் பல்வேறு தலைப்புகளில் தரும் விஷயங்களின் அவசியமான தத்துவார்த்தத்தை அறிவுறுத்துவதையுமே நம்முடைய தமிழ் முயற்சியின் லக்ஷியமாகக் கொண்டோம். அத்துடன், கருத்துத் தொடர்புகளை உணர்த்துவதற்காக ஆங்காங்கே பாடல்களின் மொழிபெயர்ப்புகளின் இடையிலேயே பிறைக்கோடுகளுள் அவசியமான சிறு விளக்கங்களைத் தந்துள்ளோம்.

மேலும், 'மிப்தாஹுல் உலூம்' போன்ற வியாக்கியான நூற்களில் இடைச்செருகல் பாடல்கள் ஆயிரத்துக்கும் அதிகமாகச் சேர்ந்துவிட்டன. மௌலானா அவர்கள் மஸ்னவீயை 25600 பாடல்களில் நிறுத்தியிருந்தார்கள். அவர்கள் காலமான ஐந்து ஆண்டுகளுக்குள் (ஹிஜ்ரி 677ல்) ஹுஸாமுத்தீனின் மேற்பார்வையில் இது கோனியாவில் பிரதியெடுக்கப்பட்டது. (இது கோனியாப் பிரதி எனப்படும். இஸ்மாயீல் அங்கிறாவீ இதையே பின்பற்றியுள்ளார்கள்.) பின்னர் எழுதப்பட்ட பிரதிகளில் கவிபாடும் திறமுடையவர்கள் ஆங்காங்கே பொருத்தமான பாடல்களை எழுதித் திணித்து வந்துள்ளனர். (இதுவே இடைச் செருகல் எனப்படும்.) எனவே, இந்த இடைச் செருகல்களிலிருந்தும் விடுபட்டு, கோனியாப் பிரதியைப் பின்பற்றிய பெரியோர்களை நாமும் பின்பற்றியுள்ளோம். இந்த முறையில் டாக்டர் நிக்கல்ஸனுடைய மொழிபெயர்ப்பும் விரிவுரையும் நமக்குப் பெரிதும் உதவின என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

*அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமான அல்லாஹ்வின் திருநாமத்தால் தொடங்குகிறேன்.*

### மௌலானா ரூமி அவர்கள் முதலாம் கிதாபுக்கு எழுதியுள்ள

## முன்னுரை *

இந்தக் 'கிதாபுல் மஸ்னவீ'[1] சன்மார்க்க அகமியம் (சத்தியம்) கைகூடுவதற்கான மர்மங்கள் திரையகற்றப்படுவது சம்பந்தமாயுமுள்ள (மூல) வேர்களின் வேர்களைத் தன்னகத்தே கொண்டதாகும். இறைவனின் கலைஞானங்களில் இது மகத்தானதாகும். இதுவே இறைவனுடைய தெளிவான (சன்மார்க்கப்) பாதையும், அவனுடைய மிகவும் பகிரங்கமான அத்தாட்சியுமாகும்.

இதன் ஒளிக்கு உவமையாவது மாடப் பிறையொன்றிலிருந்து அதிகாலை வெளிச்சத்தைவிடப் பிரகாசமாகச் சுடர் விடும் விளக்கின் வெளிச்சமாகும்.[2] நீர்ச்சுனைகளும் பூங்காக்களும் நிறைந்த இதயச் சொர்க்கமே இது. இந்தச் சுனைகளில் ஒன்றை இந்தப்

---

* இந்த முன்னுரை அரபியில் எழுதப்பட்டது. இதுவும், மூன்றாம், நான்காம் நூற்களுக்கான முன்னுரைகளும் அரபியிலும், இரண்டாம், ஐந்தாம், ஆறாம் நூற்களுக்கான முன்னுரைகள் பாரஸீக மொழியிலும் எழுதப்பட்டுள்ளன.

1. இங்கும், மூன்றாம் நூலுக்கான முன்னுரையிலும் இது 'கிதாபுல் மஸ்னவீ' என்றே அழைக்கப்படுகிறது. மற்ற இடங்களிலெல்லாம் அநேகமாக 'மஸ்னவீ' என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

2. திருகுர்ஆன் அத் 24 : வசனம் 35ல் இறைவனுடைய ஒளியை வருணிக்கும் பகுதி இது. மஸ்னவீயிலும் அந்த ஒளியே நின்று நிலவுவதால் மௌலானா அவர்கள் அதை இதற்கும் எடுத்தாண்டுள்ளார்கள். இதிலுள்ள ஆத்மீக உண்மையே இதன் ஒளியாகும். இந்த உண்மை திருகுர்ஆனின் சாரமாக வெளியாவதாக மௌலானா அவர்கள் கருதுகிறார்கள். எனவே, அவர்கள் இந்தந் தெய்வ வசனத்தைக் கொண்டே இதையும் சுட்டிக் காட்டுகிறார்கள்.

திருகுர்ஆனிலுள்ள அகமிய உண்மைகளைத் தெய்வீக ஒளியின் துணை கொண்டு விளக்கப்பட்டதுதான் 'கிதாபுல் மஸ்னவீ' என்று அவர்கள் இந்த நூலில் பல இடங்களில் சுட்டிக் காட்டியுள்ளார்கள். எனவே, இதற்குப் "பாரஸீக மொழியிலுள்ள குர்ஆன்" என்றே ஜாமி பெயர் கொடுத்துள்ளார்கள்.

*பாதையில் (தரீக்காவில்) செல்லும் பிரயாணிகள் ஸல்ஸபீல்'*[3] *என்பர். (மெய்நிலையறிவை எய்திய) தெய்வப் பேர் அருளை அடையப் பெற்றோர்க்கு இது (மஸ்னவீ) ஒரு தங்குமிடமாகவும், (மகாம் ஆகவும்) அருமையான (ஆத்மீகச்) சயனிக்குமிடமாகவும் பரிணமிக்கிறது.*[4] *இதனுள் நேர்மையாளர்கள் உண்ணுகிறார்கள், பருகுகிறார்கள். (ஆத்மீகமாகச்) சுதந்திரமடைந்தோர் மகிழ்வும் இன்பமுமடைகின்றனர். (கஷ்டங்களைப்) பொறுமையோடு சகித்துக்கொண்டவர்களுக்கு எகிப்திலுள்ள நீல நதியைப்போல இது தாகவிடாய் தீர்ப்பதாகும்; ஆனால், மமதை கொண்ட பிர்அவ்னின் கூட்டத்தாருக்கும் மெய்விஸ்வாமற்றோருக்கும் இது துயரமளிப்பதாகும்.*[5] *இறைவனே அருளியுள்ளதுபோல, "இதன் மூலம் அவன் பலரை வழிதவறச் செய்கிறான்: இதன் மூலம் அவன் பலருக்கு நேர்வழி காட்டுகிறான்".*[6] *(நோய் பிடித்த) இதயங்களுக்கு இது நோய் நிவாரணியாகும்;*[7] *துயரங்களைத் துடைப்பதாகும்; திருகுர்ஆனை விளக்கி வைப்பதாகும். (அளவற்ற தெய்வ) சம்மானம் அருளப்பட மூலஸ்தானமாகும்; (தீய) இயல்புகள் களையப்பட உறுதுணையாகும்; இதை எழுதிய கண்ணியமான நல்லோர்களான எழுத்துக்காரர்கள்,*[8] *"பரிசுத்தமானவர்களையன்றி வேறு யாரும்*

---

*3. ஸல்ஸபீல் - வானுலகிலுள்ள சுனையொன்றின் பானம் (திருகுர் ஆன் அத். 76: வசனம் 18 பார்க்க).*

*4. திருகுர்ஆன் அத். 25 : வசனம் 16ன் பகுதி*

*5. எகிப்தில் மூஸா (அலை) அவர்கள் மூலம் பிர்அவ்னின் கூட்டத் தார் மீது இறைவனால் அனுப்பப்பட்ட தண்டனைகளுள் ஒன்று நீலநதி யின் தண்ணீரையே அவர்களுக்கு இரத்த மயமானதாக ஆக்கியதாகும். மூஸா நபியின் கூட்டத்தார் பருகினால் அவர்களுடைய தாகத்தைத் தீர்த்த அதே தண்ணீர் பிர்அவ்னின் கூட்டத்தார் வாயில் வைத்ததும் இரத்தமாக மாறிவிட்டது. இதையே மௌலானா அவர்கள் தங்கள் மஸ்னவீ நல்லோர் கெட்டோர் விஷயத்தில் எப்படி விளங்கும் என்பதைச் சுட்டிக்காட்ட உவமையாக்கியுள்ளார்கள்.*

*6. திருகுர்ஆன் அத். 2: வசனம் 26-லுள்ளது. கொசு அல்லது அதைவிட அற்பமான ஒன்றை உதாரணமாகக் கூறுவது கொண்டு அல்லாஹ் நாடுவது யாது என்று வினவுவோர்க்குப் பதிலாகப் பிரஸ்தாப வாசகம் தரப்பட்டுள்ளது. இதுபோல், இங்கே மஸ்னவீயின் அகமியப் பொருளை விளங்கிக் கொள்ளாதவர்களை அது தவறச் செய்யும், அதை விளங்கிக் கொண்டோருக்கு அது வழிகாட்டும் என்று மௌலானா பகர்கிறார்கள்.*

*7. திருகுர்ஆன் அத். 10: வசனம் 57 பார்க்க.*

*8. திருகுர்ஆன் அத். 80: வசனம் 15, 16ல் விதிவசப் பட்டோலையில் (லௌஹில்) உள்ள திருகுர்ஆனைப் பிரதியெடுத்த அமரர்கள் இவ்விதம் சுட்டிக்காட்டப்பட்டனர்.*

இதைத் தொடக் கூடாது"[9] என்று தடுத்துள்ளனர். இதற்கு முன்னாலோ பின்னாலோ (வேறு எங்குமோ) இருந்து பொய்மை இதை அணுகாது.[10] ஏனெனில், இறைவன் இதைக் கண்ணோட்ட மிட்டுக் காத்து வருகிறான். அவனே சிறந்த பாதுகாவலன், அருள் காட்டும் யாவரிலும் அவனே மகா சிரேஷ்டமான பேர் அருளாளன்.[11] இதன் மீது இறைவன் சொரிந்த வேறு கண்ணியமான பெயர்களும் உண்டு.

இந்தத் தலைப்பைப் பற்றி (இதுவரை சொன்ன) இச்சிறிய அளவுடன் நிறுத்திக் கொள்கிறோம். ஏனெனில், அதிகமான ஒன்றுக்குக் குறைவான ஒன்று நமூனாவாகும்; ஒரு வாய் தண்ணீர் குளத்தின் தண்ணீருக்கு - அதன் தன்மைக்கு - அத்தாட்சிதானே! தானியக் களஞ்சியத்திலுள்ள தானியம் எத்தகையது என்பதைக் காட்ட அதிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு கை தானியம் போது மன்றோ![12]

மகா உன்னதமான இறைவனின் கருணையை விழைபவனான முஹம்மது இப்னு முஹம்மது இப்னுல் ஹுஸைனுல்பல்கி ஆகிய இந்தப் பல்ஹீனனான அடிமை தன்னிடமிருந்து இறைவன் இந்தச் சமர்ப்பணத்தை ஏற்றுக்கொள்ளுமாறு இறைஞ்சிவிட்டு எழுது கிறான்.

"இந்தப் பாடலுக்கு ஓசை நயம்மூலம் நான் நீளம் கொடுக்க முயன்றுள்ளேன். வினோதமான கதைகளும், அபூர்வப் பொன்

---

9. திருகுர்ஆன் அத். 56: வசனம் 79.
10. திருகுர்ஆன் அத். 41: வசனம் 42.
11. திருகுர்ஆன் அத். 12: வசனம் 64ல் பார்க்க.
12. இந்தப் பாராவில் மௌலானா அவர்கள் மஸ்னவீயின் பொருள டக்கம் பற்றியும், அதன் நடை பற்றியும் குறிப்பிட்டுவிட்டு, அது தங்கள் அருமை நண்பர் ஹுஸாமுத்தீனின் தூண்டுதல் மீது எழுதப்பட்டது என்று தெரிவிக்கிறார்கள். ஹுஸாமுத்தீன் தங்கள் காலத்துக் 'குத்பு' என்று அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். ஹுஸாமுத்தீன் மீது மௌலானா அவர்கள் கொண்டுள்ள மதிப்பை மஸ்னவீயில் நெடுகிலும் காணலாம். மஸ்னவீயின் முதல் 'கிதாப்' முடிவடைந்தபின், ஹுஸாமுத் தீன் மனைவியின் மரணம் காரணமாக இரண்டு ஆண்டுகள் எதுவும் எழுதாமலே இருந்திருக்கிறார்கள். ஹுஸாமுத்தீனைச் சம்பூரண மனிதர், பரிபூரணமடைந்த ஞானநாதர் என்றும் விவரித்துள்ளார்கள். மஸ் னவீக்கே 'ஹுஸாம் நாமா' என்று (நான்காம் கிதாபில் இரண்டாம் பாடலில்) பெயரும் தந்துள்ளார்கள். மௌலானாவுக்குப் பின் அவர்களு டைய மௌலவீ தரீக்காவின் குருநாதராக விளங்கியவர்கள் ஹுஸாமுத் தீன் ஆவார்கள்.

மொழிகளும், அற்புதமான உபதேசங்களும், விலை மதிப்பற்ற சமிக்ஞைகளும், மெய்ஞானியரின் பாதையும், பக்திமான்களின் (ஆத்மீகப்) பூங்காவும் - இவையாவும் வார்த்தையளவில் வெகு சுருக்கமாக, கருத்தளவில் விரிவானதாக இதில் தரப்பட்டுள்ளன. இத்தனையையும் எழுதும்படி வேண்டியவர்-எனக்கு ஆதரவாளர்-என் உடலில் உயிரின் இடத்திலிருப்பவர்-என்னுடைய இன்றைக் கும் நாளைக்கும் பொக்கிஷமாய் இருப்பவர், அதாவது ஷைகு ஆனவர்-இறைவனை அறிந்தோருக்கு முன்மாதிரியானவர்-நேர்வழி நடக்கும், மெய்யுறுதி அடையப்பெற்ற தலைவர் (இமாம்) - மனித இனத்துக்கு உதவியாளர் - அவர்களுடைய இதயங்களையும், மனச் சாட்சியையும் நம்பிக்கையுடன் பாதுகாப்பவர்-தன் சிருஷ்டிகளிடை இறைவனால் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டவர்-அவன் சிருஷ்டித்த வற்றில் அவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்-அவன் தன் திருத்தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு கட்டளைகள் இடப்பட்டதற்கு நோக்கமாக அமைந்தவர்-வானுலகச் செல்வங்களுக்குத் திறவு கோலானவர் - மண்ணில் தேக்கிவைக்கப்பட்டுள்ள பொக்கிஷங் களுக்குப் பாதுகாவலானவர் - நன்மைகளின் தந்தை-சத்தியத் தினதும் சன்மார்க்கத்தினதும் வாள் (ஹுஸாமுத்தீன்) ஹஸன் இப்னு முஹம்மது இப்னுல் ஹஸன் என்ற பெயருடைவர்-பொதுவாக இப்னுஅகி துருக் என்று அழைக்கப்படுவர்-தமது காலத்து அபூயஜீது [13] -அந்த யுகத்து ஜுனைது [14] -முற்றும் பரிசுத்த மான் பாட்டனாரையும், தந்தையாரையும் உடைய முற்றும் பரிசுத்த மானவர் (இறைவன் அவர்களிடமும் அவரிடமும் திருப்தியடை வானாக!)-உம்ரிய்யா என்னும் ஊரினர் [15] -“இரவில் நான் குர்தியனாய் இருந்தேன்; காலையில் அரபியாகிவிட்டேன்” என்று அருளிய ஷைகு [16] அவர்ளுடைய வழித்தோன்றல். இறைவன் அவர்களுடைய

---

13. அபூ யஜீது புஸ்தாமி - மிகவும் பிரபலமான ஞான நாதர். ஹிஜ்ரி 260ல் மரணமடைந்தார்கள்.

14. ஜுனைதுல் பக்தாதி - மிகப் பிரபலமான ஞானநாதர் ஹிஜ்ரி 297ல் காலமானார்கள்.

15. உம்ரிய்யா - ரஷ்யாவின் ஒரு மாகாணமான அஜர்பைஜானில் உள்ள ஊர்.

16. இந்த மொழியை அருளிய பெரியார் அபுல் வபா இப்னு அகிலில் குர்தி என்பதாகும். இவர்கள் கௌதுல் அஃலமின் காலத்தவர்கள். ஈராக்கில் ‘தாஜுல் ஆரிபீன்’ (மெய்ஞானியரின் மணிமுடி) என்று பெயர் பெற்றவர்கள். “தெய்வ மன்றத்தில் அபுல் வபா போன்ற குர்தியர் வேறு யாருமில்லை” என்று கௌதுல் அஃலமே இவர்களைப் பாராட்டியுள் ளார்கள். இந்த மொழியை அவர்கள் மொழிய நேர்ந்த சந்தர்ப்பமாவது:

வும், அவர்கள் வமிசத்தாருடையவும் ஆத்மாக்களைப் புனிதப் படுத்துவானாக! அவர்களுடைய வமிசத்தின் மீது சூரியனே தன் போர்வையைப் போர்த்தியுள்ளான். அவர்களுடைய பரம்பரை விண்மீன்களும் தம்முன் ஒளி மங்கும்படியான புகழுடையது. அவர்களுடைய (குடும்பத்தின்) முன்றில் என்றுமே அதிர்ஷ்டத்தின் திசையாக(கிப்லாவாக)வும், (ஆத்மீக) ஆட்சியாளர்களின் புதல்வர் கள் முகந்திரும்புவதாகவும், உதவி நாடி வரும் நாட்டமிக்கோரின் கோஷ்டிகள் வலம்வரும் நம்பிக்கையின் கஃபாவாகவும் விளங்கு கிறது. தாரகைகள் உதித்துக்கொண்டிருக்கும்வரை, பகலவன் கிழக்கிலிருந்து கிளம்பிக் கொண்டிருக்கும்வரை அது அவ்விதமே விளங்குமாக! தெய்வீகமான, ஆத்மிகமான, வானுலகுக்குரிய, அதையும் கடந்த மகான்களுக்கும், நோட்டத்தில் லயித்து மௌன மானோருக்கும், பிரசன்னமாயுள்ள பிரசன்னமற்றோர்க்கும், கந்தலுடையில் காட்சி தரும் அரசர்களுக்கும், நாடுகளிலுள்ள செல்வர்களுக்கும், மாட்சிமையின் உடைமையாளர்களுக்கும், (தெய்வீக) அத்தாட்சிகளை வெளிக்காட்டும் ஞானியருக்கும் அது என்றும் அவ்விதமே மிளிருமாக! சிருஷ்டிக்கப்பட்ட ஜீவன்கள் சகலவற்றினுடையவும் ரஷகா, அவ்விதமே நடக்க அருள்புரி! (ஆமின்) இது நிராகரிக்கப்படமாட்டாத ஒரு பிரார்த்தனையாகும். காரணம், இதனால் கிட்டக்கூடிய நன்மையில் சிருஷ்டிகளிலுள்ள சகல வகுப்பினருக்கும் பங்குண்டு. சகல ஜீவன்களையும் சிருஷ்டித்த வனான ரக்ஷகனான அல்லாஹுத்தஆலா ஒருவனுக்கே சகல புகழும்! சிருஷ்டிகள் அனைத்திலும் சிரேஷ்டரான முஹம்மது நபி (ஸல்) அவர்கள்மீதும், அவர்களுடைய கிளையார்கள் மீதும், தோழர்கள் மீதும் இறைவன் தன் ஆசியை (ஸலவாத்தை) வருஷித் தருள்வானாக! அல்லாஹ்வே நமக்குப் போதுமானவன், அவனே நம் சிறந்த பாதுகாவலன்.

---

ஷைகு அபுல் வபாவுக்கு அரபி மொழியில் தேர்ச்சி கிடையாது; போதிய கல்வியறிவுமில்லை. எனவே, மஸ்ஜிதில் அமர்ந்திருந்த அவர்களை ஓர் உபந்நியாசம் நிகழ்த்துமாறு சிலர் ஏளனமாகக் கேட்டனர். "இன்ஷா அல்லாஹ் (அல்லாஹ் நாடினால்) பேசுகிறேன்" என்று அவர்கள் பதில ளித்துவிட்டார்கள். அன்று இரவின் பெரும் பகுதியை அவர்கள் வணக்கத் திலேயே கழித்தார்கள். அதன்பின் நபிபெருமான் (ஸல்) அவர்கள் அபுல் வபாவின் கனவில் தோன்றி திருகுர்ஆனின் அகமியங்களைப் பற்றிப் பேசுமாறு பணித்துச் சென்றார்கள். மறுநாள் ஷைகு அபுல் வபா மிம்பர் (மேடை) மீது ஏறி நின்றுகொண்டு, "இரவில் நான் குர்தியனாய் இருந் தேன். காலையில் அரபியாகிவிட்டேன்" என்று தொடங்கினார்கள். அற்புதமான உபந்நியாசத்தை அரபியிலேயே நிகழ்த்தினார்கள்.

*அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமான அல்லாஹ்வின் திருநாமத்தால் தொடங்குகிறேன்.*

# கிதாபுல் மஸ்னவீ

**பீடிகை :**

*1. இந்தப் புல்லாங்குழல் எப்படி முறையிடுகிறது என்று கவனமாகக் கேள்; அது பிரிவாற்றாமைகள் பற்றிய கதையைச் சொல்கிறது.*

*அது சொல்கிறது: "நான் மூங்கில் பண்ணையிலிருந்து பிரிக்கப்பட்ட நாள் முதல் ஆண்பெண் அனைவருமே என் முறையீட்டின் கூச்சலோடு இணைய அழுது அரற்றுகின்றனர்".*

*காதலின் வேதனையை விளம்புவதற்கு (என்னைப் போன்று) பிரிவைத் தாங்காது உடைந்துசிதறிய நெஞ்சத்தையே நாடுகிறேன்.*

*தன் பிறப்பிடத்தைவிட்டுப் பிரிந்து தொலைவான தூரத்துக்குப் பயணமாகிவிட்ட ஒவ்வொருவனும் மீண்டும் அந்த மூலஸ்தானத்தில் ஐக்கியமாகவே ஆவலுறுகிறான்.*

*பற்பல சபைகளிலும் நான் சென்று அழுதேன்; துயருற்றவர், மகிழ்ச்சியில் திளைப்போர் யாவரோடும் பழகினேன்.*

*ஒவ்வொருவரும் தத்தம் மன இயல்புக்கு ஏற்ப என்னிடம் நேயம் பாராட்டினர்; எனினும், என் அந்தரங்கத்தை யாரும் அறியவில்லை.*

*என் புலம்பலின் தாத்பரியம் இலகுவாய்ப் புரிந்துகொள்ளக் கூடியதாய் இருந்தும் அதைப் புரிந்துகொள்ளும் வெளிச்சம் சாமானிய ஜனங்களின் காதுகளிலும், கண்களிலும் இல்லை.*

*உயிரைவிட்டு உடலும் உடலைவிட்டு உயிரும் திரைப் பட்டில்லாவிடினும் யாரும் உயிரைக் கண்ணால் காண இயல வில்லையல்லவா! புல்லாங்குழலிலிருந்து உண்டாகும் நாதம் செந்தழலாய் இருக்கிறது; அது வெறும் ஓசை மட்டுமன்று; இந்த நெருப்புப் பற்றாதார் இல்லாமல் போவது நலம்.*

*புல்லாங்குழலிலிருந்து உண்டாகும் நாதம் செந்தழலாய் இருக்கிறது;அது வெறும் ஓசை மட்டுமன்று; இந்த நெருப்புப் பற்றாதார் இல்லாமல் போவது நலம்.*

*10. புல்லாங்குழலுள் நெருப்பாய்த் தகிப்பது காதலே; மதுவில் கொதித்துப் பொங்குவதும் காதல்தான்.*

நேயனைவிட்டுப் பிரிந்த யாருக்கும் புல்லாங்குழல் உற்ற நண்பனாகும். அதன் இனிய கீதம் எங்கள் திரைகளைக் கிழித் தெறிகிறது.

விஷமாகவும் விஷத்துக்கு மாற்றாகவும் உள்ளது புல்லாங் குழல்போல் எதுவுமில்லை. அதனையொத்த ஆறுதலளிப்போன், ஏக்கமிக்க காதலன் யாருமில்லை.

காதலின் செங்குருதி படிந்த, கரடுமுரடான பாதையை அது எடுத்தியம்புகிறது; மஜ்னூனின் காதல் வெறியை பகிரங்கமாக்கு கிறது.

உணர்வற்றவர்களுக்கே இந்தப் பொருள் புலப்படுத்தப் படுகிறது. நாவுக்கு காதையன்றி வேறு வாடிக்கைக்காரரில்லை.

15. நமது துயரிலேநாட்கள் அகாலமடைந்துவிட்டன; நம் நாட்கள் பொசுக்கும் துயருடன் கைகோத்து நடக்கின்றன.

நம் நாட்கள் கழுவிப்போயிருப்பின் அது குறித்துக் கவலை யில்லை; நீ இருக்கிறாயல்லவா! உன்னை விடச் சிரேஷ்டன் யார்?

மீனல்லாதவன் தண்ணீரால் அலுப்படைகிறான்; உண்ண உணவு கிட்டாதவனுக்குக் காலம் கழிவது கடினமாய் இருக்கிறது.

காயாக (பக்குவமற்ற) நிலையிலுள்ளது, பழுத்த (பக்குவமான) நிலையிலுள்ளதைப் புரிந்துகொள்வது சாத்தியமல்ல. எனவே, நான் வார்த்தையைச் சுருக்கிக் கொள்கிறேன்; போய்வருகிறேன்!

மகனே, உன் (பந்தபாசமெனும்) விலங்குகளை உடைத்தெறிந்து சுதந்திரனாகுக! தங்கத்துக்கும் பொன்னுக்கும் எத்துணை காலந் தான் அடிமைப்பட்டுக்கிடப்பாய்!

20. கடலைக் கூஜாவில் அடைக்க முயன்றால் முடியுமா? ஒரு நாளைக்குத் தேவையான தண்ணீரைத்தான் அதில் பிடிக்க முடியும்.

பேராசைக்காரனின் கண் ஆகிய கூஜா ஒருக்காலும் நிரம்பு வதில்லை. சிப்பி (மழைத் துளியால்) திருப்தியடைந்தாலன்றி அதில் முத்து உண்டாவதில்லை.

(தீவிரமான) காதலால் தன் உடை கிழிக்கப்பட்டவனே பேராசையையும் சகலகுறைகளையும் விட்டு முற்றும் பரிசுத்தமான வனாவான்.

எங்களுக்குப் பெரும் லாபத்தைச் சேர்க்கும் காதலே, நீ வாழி! எங்கள் பிணிகளுக்கு நிவாரணமளிக்கும் வைத்தியன் நீயே.

எங்கள் அகந்தை, ஆடம்பரம் ஆகிய பிணிகளைத் தீர்க்கும் பிளேட்டோவும் (அப்லா தூனும்), கேவனும் (ஜாலினூஸூம்) நீயே!

25. காதலாலேயே பூதவுடல் விண்ணுலகு சென்றது; அதனால் தான் மலையும் ஆடத்தொடங்கி சுறுசுறுப்படைந்தது.

காதலனே, சீனா மலைக்கு உணர்ச்சியூட்டியது காதல்; அதனால் ஸீனா போதையுற்றது; *மூஸா (அலை) மயங்கி விழுந் தார்கள்!*[1]

என் இயல்புடன் இயைந்த ஒருத்தியுடன் நானும் உதடு பொறுத்த முடியுமாயின் நானும் புல்லாங்குழலைப் போல் சொல்லக்கூடிய யாவும் சொல்லிவிடுவேன்.

தன் பாஷையில் பேசும் ஒருவரிடமிருந்து பிரிக்கப்பட்ட எவனும் நூற்றுக் கணக்கில் பாடல்களைக் கற்றிருப்பினும் அவன் பாட இயலாத ஊமையேயாவான்.

ரோஜா மறைந்து, பூந்தோட்டத்தின் பசுமை மாண்டபின் புல்புல்லின் கதையை நீ கேட்க முடியாமல் போய்விடும்.

30. காதலியே யாவுமாவாள்; காதலன் ஒரு திரையேயன்றி வேறல்ல. காதலிதான் ஜீவன்; காதலன் உயிரற்ற ஜடப் பொருளே.

காதலிக்கு அவன் மீது பற்றில்லாவிடின் அவன் சிறகில்லாத பறவை தான்; அந்தோ, அவன் நிலையே பரிதாபத்துக்குரியதன்றோ!

என் காதலியின் வெளிச்சம் எனக்கு முன்னாலும் பின்னாலும் இல்லாமல் இருக்கும் நிலையில் முன் - பின் பற்றிய தன்னுணர்வு எனக்கு இருப்பதெங்கனம்?

இந்த வார்த்தை வெளியாக்கப்படவேண்டும் என்று காதலின் சித்தத்தில் எண்ணமுண்டாகிவிட்டது. கண்ணாடி (எதிரிலுள்ள தைப்) பிரதிபிம்பிக்காவிடின் அஃது கண்ணாடியாவதெப்படி?

(ஆத்மாவின்) கண்ணாடி எதையும் பிரதிபலிப்பதில்லை என்பதையும் நீ அறிவாயா? (அதன் காரணம்) அதன் முகத்தின் மீதுள்ள துரு அகற்றப்பட்டதுதான்.

## அடிமைப் பெண்ணிடம் காதல் கொண்டு அவளை விலைக்கு வாங்கி அவள் பிணியை அகற்றமுயன்ற அரசர் கதை

35. நேசர்களே, கேளுங்கள் இந்தக் கதையை! உண்மையில் இது நமது அந்தரங்க நிலையின் சாராம்சமாகவே விளங்குகிறது.

1. பார்க்க : குர்ஆன் 7 : 143

முன்னொரு காலத்தில் ஓர் அரசன் இருந்தான். அவன் லௌகீக, ஆத்மீக அதிகாரங்களை நிலைநிறுத்தி ஆட்சிபுரிந்து வந்தான்.

ஒரு நாள் அவன் தன் அவையாருடன் வேட்டைக்குச் சென் றான்;

போகும் வழியில் அடிமைப் பெண் ஒருத்தியைக் கண்டான்; அவளைக் கண்டதும் அவன் அவள்மீது காதல் மிகக் கொண்டான்.

அவன் ஆத்மப் பறவை தன் கூட்டினுள் சிறகடித்துக் கொண்டது. அவன் அவளைப் பணம் கொடுத்து வாங்கினான்.

40. அவளை வாங்கி தன் வசப்படுத்தியபின் அவள் பிணி யுற்றாள்.

ஒருவனிடம் ஒரு கழுதை இருந்தது; ஆனால், அதன் முதுகில் சாமான்களை ஏற்றுவதற்கான சேணமில்லை; அவனுக்குச் சேணம் கிடைத்தசமயமோ அவனுடைய கழுதையை ஓனாய் கடித்துச் சென்று விட்டது.

ஒருவனிடம் குடமிருந்தது; ஆனால், தண்ணீர் கிடைக்க வில்லை. தண்ணீர் கிடைத்த தருணத்தில் குடம் உடைந்து விட்டது.

(இவர்களைப் போல் நஷ்டவாளியான) அரசன் நெடுகிலு முள்ள வைத்தியர்களை அழைத்துவரச் செய்து, அவர்களிடம் சொன்னான்; "எங்கள் இருவருடைய உயிரும் உங்கள் கையிலே உள்ளன.

என் உயிர் ஒரு பொருட்டன்று; ஆனால், அவள் என் உயிரின் உயிராவாள். நான் புண்பட்டுத் துடிப்பவன்; அவளே அதற்கான அருமருந்தாவாள்.

45. என் உயிருக்கினிய அவளை குணப்படுத்துபவருக்கு என்னிடமுள்ள முத்துக்கள் பவளங்கள் யாவையும் உரிமையாக்கு வேன்."

அந்த வைத்தியர்கள் ஏகமனதாகக் கூறினர்; "இதற்காக எங்கள் உயிரையே உங்களுக்குப் பணயம் வைக்கிறோம். எங்கள் அனைவரு டைய அறிவாற்றலையும் ஒன்றுதிரட்டி அவள் பிணிக்கு நிவாரணம் காண்கிறோம்.

நாங்கள் ஒவ்வொருவருமே உலகின் ஒவ்வொரு பகுதியில் கற்றறிந்த மஸீஹ் (ஈஸாநபி) ஆக விளங்குகிறோம். எந்த வேதனைக் கும் எங்களிடம் மருந்துண்டு!"

*தம் அகந்தை காரணமாக அவர்கள் 'அல்லாஹ் நாடினால்' (இன்ஷா அல்லாஹ்) என்று சொல்லவில்லை. எனவே, மனிதன் எத்துணை பலஹீனமானவன், தன் சொந்த பலத்தால் மட்டும் எதுவும் செய்ய இயலாதவன் என்பதை இறைவன் அவர்களுக்குக் காட்டினான்.*

*'இறைவன் நாடினால்' என்று அவர்கள் சொல்லாததற்கு மரத்துப் போயிருந்த அவர்களுடைய கடினமான இதயம்தான் காரணம். (இதயப் பூர்வமாகவன்றி) வெறும் நாவளவிலாவது அவர்கள் இதைச் சொல்லியிருக்கலாம் என்பதல்ல என் கருத்து.*

*50. எத்துணையோ பேர்இவ்விதம் 'இறைவன் நாடினால்' என்று கூறவில்லைதான்; எனினும் அவர்களுடைய ஆத்மா அந்தப் பதப்பிரயோகத்தின் தாத்பரியத்தோடு ஒன்றியதாக இருந்துள்ளது. (அது நிற்க)*

*வைத்தியர்கள் (அந்த அடிமைப் பெண்ணுக்கு) மருந்துகளை அதிகமாகக் கொடுக்கக் கொடுக்க அவளுடைய வியாதி அதிகரிக்கவே செய்தது; தேவை நிறைவேறவில்லை.*

*அந்தப் பெண் உடல் மெலிந்து துரும்பானாள்; அரசனின் கண்கள் இரத்தக் கண்ணீரை ஆறாகப் பெருக்கின.*

*தெய்வச் சித்தத்தால் (பித்தத்தைத் தணிக்கும் இஞ்சியும் தேனும் கலந்த மருந்தான) சிகிஞ்சபீன் பித்தத்தை அதிகரிக்கச் செய்து, வரட்சியை உண்டாக்கிவிட்டது.*

*(மலமிளக்கும்) கடுக்காய் மலச்சிக்கலை அதிகமாக்கிற்று. தண்ணீர் நெருப்பைச் செந்தழல் நீட்டி எறியச் செய்யும் வாயுவாக ஆகிவிட்டது.*

### ***அரசனின் பிரார்த்தனையும், கனவும்***

*55. வைத்தியர்களால் எதுவும் இயலாது என்று கண்ட அரசன் காலில் செருப்புக் கூட போடாது மஸ்ஜிதுக்கு ஓடினான்.*

*மஸ்ஜிதுள் நுழைந்து மிஹ்ராபின் பக்கல் சென்று நின்று தொழுதான். அவனுடைய பச்சாதாபக் கண்ணீரால் தொழுகை விரிப்பே நனைந்துபோயிற்று.*

*பரவசப் பெருவெள்ள நிலையிலிருந்து மாறி, சுய உணர்வடைந்ததும் இறைவனைப் போற்றித் துதிக்கத் தன் நாவினை உசுப்பினான்.*

*சொன்னான்; "(இறைவா,) இவ்வுலகின் சாம்ராஜ்யம் உன் அற்பமானதோர் நன்கொடையாயுள்ளது. மறைவானதையும் நீ அறிந்துள்ள நிலையில் நான் என்ன சொல்லக்கிடக்கிறது?*

எங்கள் தேவையில் நாங்கள் புகலிடந் தேடுவது உன்னிடமே யல்லவா? மீண்டும் நாங்கள் வழிதவறி விட்டோம்.

60. எனினும், நீ அருளியுள்ளாய், 'உங்கள் அந்தரங்கத்தை நான் அறிந்திருப்பினும் உங்கள் புற நிலைக்கேற்ப அதை வெளியிட்டுக் கூறுங்கள்' என்று.

(இவ்விதம் அரசன்) உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து குரல் எழுப்பி அழுது முறையிட்டதும் (இறைவனின்) அருளானுக் கிரஹக் கடல் பொங்கி எழலாயிற்று.

அவனுடைய விம்மலிடை நித்திரை அவனை ஆட்கொண்டது. அப்போது தன் முன் முதியவர் ஒருவர் தோன்றுவதாகக் கனவு கண்டான்.

அந்த முதியவர் சொன்னார்: "அரசே உனக்கு நற்செய்தி சொல்கிறேன். உன் பிரார்த்தனை ஏற்கப்பட்டது. நாளை புதியவர் ஒருவர் உன்னிடம் வந்தால் அவர் என்னிடமிருந்து வருவதாக அறிந்துகொள்!

அவ்விதம் வருபவர் கைதேர்ந்த வைத்திய வல்லுனராவார். அவர் நம்பிக்கைக்குரியவராகவும், உண்மையானவராகவும் இருப்பதால் அவர் மீது ஐயங்கொள்ளத் தேவையில்லை.

65. அவருடைய சிகிச்சை அற்புதமானதாய் இருக்கும்; அவருடைய இயல்பில் இறைவனின் சக்தி மிளிரும்."

வாக்களிக்கப்பட்ட நேரம் வந்தது. கிழக்கில் வானம் வெளுத்தது. சூரியன் விண் மீன்களை எரிக்கத் தொடங்கிற்று.

தனக்கு அறிவிக்கப்பட்ட கனவின் செய்தி நனவாவதை எதிர்பார்த்தவனாக அரசன் ( தன் மனையில்) சாளரம் ஒன்றின் வழியாக வெளியே ஆவலோடு நோக்கிக் கொண்டிருந்தான்.

நிழலிடையே தோன்றிய பகலவன் போன்ற மதிப்புக்குரிய மனிதர் ஒருவரைக் கண்ணுற்றான்.

அவர் (உருவில் மெலிந்து) இளம்பிறையைப் போல் தோற்ற மளித்தார். மனப் பிரமையில் அவர் தோன்றியவராயினும் உண்மையில் அவர் தோன்றியவராய் இருந்தார்.

70. ஆத்மாவில் பிரமை (பொய்த் தோற்றம்) இல்லை; ஆனால் பிரமையைக் கடையாணியாகக் கொண்டு சுழலும் இவ்வுலகை நோக்குங்கள்.

*ஜனங்கள் ஒத்துவாழ்வதும் சச்சரவிடுவதும் ஒரு பிரமையில்; அவர்களிடையே அகந்தையும், தலைகுனிவும் உண்டாவதும் ஒரு பிரமையில்.*

*ஆனால் ஞானிகளை வளைத்துப்பிடிக்கும் பிரமைகளோ இறைவனின் மெய்ஞானப் பூங்காவில் உலவும் மதிவதனியரின் பிரதிபிம்பங்களாகவே உள்ளன.*

*அஃதேபோல், அரசன் தன் கனவில் கண்ட பிரமைகளை அந்தப் புதிய விருந்தினரின் திருவதனத்தில் இலங்கக் கண்டான்.*

*அரசன் அவரை எதிர் சென்றழைத்துவரத் தன் ஏவலாட்களை அனுப்பாமல், தானே நேரில் சென்று மறைவான இடத்திலிருந்து வந்த விருந்தாளியை எதிர் கொண்டு அழைத்துவந்தான்.*

*75. இவர்கள் இருவரும் (அறிவுக்) கடலில் நன்கு நீந்தும் திறமை பெற்றிருந்தனர். தைக்காமலே அவர்களிருவடைய ஆத்மாக்களும் பின்னிப் பிணைந்து கொண்டன.*

*அரசன் (அவரிடம்) சொன்னான்; "(யதார்த்தத்தில்) நீங்களே என் ஆருயிரானவர்; அந்த அடிமைப் பெண்ணல்லள். அதனால், இவ்வுலகில் ஒரு செயலிலிருந்து ஒரு செயல் வெளிப்படுகிறது. (அதனாலேயே முதலில் அவள் என் காதலியானாள்.) அதன் மூலம் நான் உங்கள் நட்பைப் பெறமுடிந்தது.*

*எனக்கு நீங்கள் (முஹம்மது) முஸ்தபா (ஸல்) அவர்களைப் போன்றவர்கள்; உங்களுக்கு நான் உமர் (ரலி) போன்றிருந்து உங்கள் ஆணைக்காகக் காத்திருக்கிறேன்."*

*தன் மனத்தைக் கட்டுப்படுத்தும் பலத்தை அருளுமாறு நாம் இறைவனிடம் இறைஞ்சுவோமாக! தன் மனத்தைக் கட்டுப்படுத்தா தவன் இறைவனின் கருணையைப் பெறமுடியாது.*

*தன் மனத்தைக் கட்டுப்படுத்தாதவன் தன்னை மட்டும் கெடுத்துக்கொள்வதோடு நிற்பதில்லை; உலகம் முழுமைக்குமே தீயிட்டவனாகிறான்.*

*80. விற்பது வாங்குவதுமின்றி, பேசுவதும் கேட்பதுமின்றி வானிலிருந்து உணவுத்தட்டம் ஒன்று வந்துகொண்டிருந்தது.*

*(அதிலும் திருப்தியடையாதவர்களாக), "வெங்காயம் எங்கே, பருப்பு எங்கே?" என்று அவர்கள் குறைகூறத் தொடங்கினர்.*

*உடனே அந்தத் தட்டும் அதில் வந்துகொண்டிருந்த உணவும் வராமல் நின்றுவிட்டன. எனவே, அவர்கள் உழைத்து உண்ண வேண்டிய நிர்ப்பந்தமுண்டாகிவிட்டது.*

பின்னர், ஈஸா (அலை) அவர்கள் (காலத்தில் அவர்கள்) இறைவனிடம் மன்றாடிக் கேட்கவே, மீண்டும் இறைவன் உணவுத் தட்டங்களை அனுப்பி அருளினான்.

ஆனால், மீண்டும் சின்னத்தனமானவர்கள் மரியாதைக் குறைவாக நடந்துகொண்டனர்; பிச்சைக்காரர்களைப் போல மிஞ்சிய உணவுகளை எடுத்து மூட்டை கட்டலாயினர்.

85. ஈஸா (அலை), "இவ்விதம் எப்போதும் வந்துகொண்டிருக்கும்; பூமியில் மறையாது.

மகத்துவமிக்க காருண்யனின் உணவுத் தட்டுகளின் முன் அமர்ந்துகொண்டு சந்தேகமும், பேராசையும் கொள்ளுதல் நன்றியற்ற தனமாகும்"என்று எச்சரித்தார்கள். (ஆனால் அவர்கள் பொருட்படுத்தவில்லை.)

அந்தக் கயவர்களின் போக்குக் காரணமாக கருணையின் வாயில் அவர்களுக்கு மூடப்பட்டதாயிற்று.

ஏழைவரியை (ஜகாதைச்) சரிவரக் கொடாததால் மேகம் மழைபொழிவதில்லை; விபசாரம் செய்பவர்களால் சகல திக்குகளிலும் கொள்ளை நோய் பரவுகிறது.

உனக்கு உண்டாகும் துன்பம், துயரம் யாவுக்குமே நீ எந்த வகையிலாவது ஒன்றில் ஒழுங்கீனமாக நடந்து கொண்டதும், உன்னுடைய அகங்காரமுமேதான் காரணமாய் இருக்கும்.

90. நேயனின் பாதையில் மரியாதைக் குறைவாக நடந்து கொள்ளும் எவனும் மனிதர்களைக் கொள்ளையிடும் அயோக்கியனாவான்; அவன் ஆண்மகனேயல்லன்.

நல்லொழுக்கத்தாலேயே இந்த வானவிதானம் ஒளி வெள்ளம் நிறைந்து விளங்குகிறது. ஒழுக்கத்தின் மூலமே அமரர்கள் அப்பழுக்கற்ற பரிசுத்தமுடையோராய்த் திகழ்கின்றனர்.

மரியாதைக் குறைவால் சூரியனைக் கிரகணம் பீடித்தது; நான் என்ற அகந்தையால் அஜாஸில் இறைவன் சந்நிதியிலிருந்து விரட்டியடிக்கப்பட்டான்.

**கனவில் கண்ட ஞானியை அரசன் சந்தித்தல்:**

அரசன் தன் இரண்டு கரங்களையும் நீட்டிவந்தவரைக் கட்டித்தழுவி, தன் ஆத்மாவில் காதலை வரவேற்பதுபோல் வரவேற்றான்.

அவர் கையையும் நெற்றியையும் முத்தமிட்டு, அவருடைய இருப்பிடம்பற்றியும், அவருடைய பிரயாணம் பற்றியும் விசாரிக்கலானான்.

95. அவரோடு உரையாடிக்கொண்டேஅவரை மேடைக்கு அழைத்தேகினான். "பொறுமையைக் கடைப்பிடித்ததால் கடைசியில் நான் ஒரு பொக்கிஷத்தைப் பெற்று விட்டேன்." என்று தனக்குள் கூறிக்கொண்டான்.

பின்னர் அவரை நோக்கி "இறைவனின் ஒளியானவரே, தொல்லையில் கைகொடுக்கும் ஏந்தலே 'இன்பத்தின் திறவுகோல் பொறுமையே' என்ற ஹதீஸின் சொரூபர் தாங்கள் தாம்.

சகல பிரச்சினைகளுக்கும் தங்கள் திருவதன தரிசனமே சரியான நிவர்த்தி நல்குவதாகும்; அவிழ்க்கக் கடினமான சிக்கலெல்லாம் எந்தச் சர்ச்சையுமின்றி உங்களால் விடுபடுபவையாகின்றன.

எங்கள் இதயங்களிலுள்ள சிக்கல்களுக்கு மாற்று நல்குபவர்கள் தாங்கள்; சேற்றில் சிக்கிய யாருக்கும் கைகொடுத்துத் தூக்கிவிடுபவர்கள் தாங்கள்.

இத்தகைய பெருமைக்குரிய பெருந்தகையோய்,உங்கள் வரவு நல்வரவாகுக! நீங்கள் வராதிருப்பின் விதி என்னை கொண்டு போயிருக்கும்; வாழ்வெனும் மண்டபம் பாழ்வெளியாகியிருக்கும்.

100. ஜனங்களின் பாதுகாவலர் நீங்களே; உங்களை விரும்பாதவன் உண்மையில் விலகி வராதவரை கெட்டழிந்தே போவான்."[1]

அந்தச் சந்திப்பும், தாராளமான (ஆத்ம) விருந்தும் முடிவுற்றதும், அவன் அவரைக் கையைப் பிடித்து அந்தப் புரத்துக்கு அழைத்தேகினான்.

நோயாளியின் கதையையும், அவள் பிணியையும் பற்றி அவரிடங்கூறி அவரை அந்த அடிமைப் பெண் அமர்ந்திருந்த படுக்கையருகில் அமர்த்தினான்.

வைத்தியர் அவள் முகத்தின் நிறத்தையும் , நாடியையும், சிறுநீர் வைத்திருந்த பாத்திரத்தையும் பார்த்தார்; அவளுடைய பிணிக்குரிய அறிகுறிகளையும், காரணங்களையும் பற்றி வினவினார்.

(பின்னர்,) அவர் சொன்னார்; "(போலி) வைத்தியர்கள் கொடுத்த மருந்துகளில் எதுவும் இந்த நோய்க்கு மருந்தன்று; அவர்கள் நாசத்தையே உண்டாக்கிவிட்டனர்.

105. அந்தரங்க நிலைபற்றி அவர்கள் யாதும் அறியார்கள்; அவர்களுடைய ஆராய்ச்சி முடிவுகளிலிருந்தும் நான் இறைவனிடம் புகலிடந்தேடுகிறேன்."

1. பார்க்க: குர்ஆன் 96 : 15

அவளுடைய வேதனையைக் கண்ட அவர் அதன் இரகசியம் என்னவென்பதை விளங்கிக் கொண்டார்.ஆனால், அவர் அதை அரசனிடம் தெரிவிக்கவில்லை.

அவளுடைய பிணி கறுப்பு அல்லது மஞ்சள் பித்தத்தால் உண்டானதன்று; எரியும் விறகு எத்தகைய மணமுடையது என்பதை அதன் புகையிலுள்ள வாசனையிலிருந்தே கண்டுகொள்ளலா மன்றோ!

அவளுடைய துயரத்திலிருந்து அவள் இதயத்தில் புண் உண்டாகியிருப்பதை அறிந்துகொண்டார். உடலில் எதுவுமில்லை; ஆனால், உள்ளம் பாதிக்கப்பட்டிருந்தது.

இதயப் புண் அவள் காதலுற்றிருப்பதைக் காட்டிற்று; இதயப் புண் போன்று மோசமான இதயநோய் வேறு எதுவுமில்லை.

110. காதலர் பிணி மற்றுண்டான சகல பிணிகளிலிருந்தும் தனித்தது; காதல் இறைவனுடைய மர்மங்களை அறிந்துகொள்ள உதவும் 'அளவுமானி' ஆகும்.

காதல் (மண்ணுலகாகிய) இந்தப் பக்கத்திலிருந்து உண்டாவ தாயினும், (விண்ணுலகாகிய) அந்தப் பக்கத்திலிருந்து உண்டாவதா யினும் அது கடைசிவரையில் காதல் பொருள்களுக்கெல்லாம் மூலஸ்தானமானவனிடமே கொண்டுசெல்வதாகவே இருக்கிறது.

காதலைப் பற்றி விளக்குவதில் நான் என்னதான் சொன்னா லும், (பிரத்தியட்சத்தில்) காதலுக்கு வந்ததும் அந்த விளக்கம்பற்றி நானே வெட்கித் தலைகுனிந்து விடுகிறேன்.

நாவின் விளக்கவுரை யாவற்றையும் தெளிவாக்குவதாயினும் நாவில்லாத காதல் அதைவிடத் தெளிவானதாய் இருக்கிறது.

பல விசயங்களையும்பற்றி எழுதும்போது விரைந்து கொண்டி ருந்த எழுதுகோல் காதல்பற்றிய விஷயத்துக்கு வந்ததும் முனை பிளந்துவிடுகிறது.

115. அதை (காதலை) விளக்கி உரைக்க இயலாத அறிவு உழையில் சிக்கிய கழுதைபோல் படுத்துவிடுகிறது. காதலைப் பற்றியும், காதலன் இயல்பு பற்றியும் சரியாக விளக்கங் கொடுக்கக் காதலுக்குத்தான் சாத்தியப்பட்டது.

சூரியனுடைய அத்தாட்சி சூரியனேதான். உனக்கு அத்தாட்சி தேவையாயின் சூரியனைவிட்டு முகத்தை அப்பால் திருப்பிக் கொள்ளாதே!

சூரியனின் நிழல் சூரியன் இருப்பதைச் சுட்டிக்காட்டுகிற தாயின், (ஆத்மீகச்) சூரியனோ ஒவ்வோரு கணமும் ஆத்ம ஒளி யளிப்பதாய் இருக்கிறது.

(சூரியனின்) நிழல் இரவில் அயர்ச்சியைப் போல் உனக்கு நித்திரையைக் கொணர்கிறது; சூரியன் உதித்து எழுந்ததும் சந்திரன் பிளந்து (மங்கி) விடுகிறது.[1]

உலகில் சூரியனைப் போன்ற அற்புதமான பொருள் எதுவு மில்லை; எனினும் ஆத்மாவின் சூரியன் நிரந்தரமானது; அதற்கு 'நேற்று' என்று எதுவுமில்லை.

120. புறச் சூரியன் அற்புதமானதாயினும், அஃதே போன்ற தொரு சூரியனைக் கற்பனை செய்துவிடுவது சுலபம்.

ஆனால், இவ்வுலகம் உண்டாகக் காரணமான ஆத்மீகச் சூரியனை மனத்தில் கற்பனை செய்யவோ, புறத்தே அதற்கு இணையான நமூனாவைக் காணவோ முடியாது.

அவன் உள்ளமையைக் கற்பனை செய்யவும் இடமிருக்க முடியுமா? ஏன் அவனைப் போன்றது என்று எதையாவது கற்பிக்கத்தான் இயலுமா?

சன்மார்க்கச் சூரியனின் (ஷம்சுத் தீனின்) வதனம் பற்றிய செய்தி வந்ததுமே நான்காம் வானத்தின் சந்திரன் (வெட்கத்தால்) தன் தலையை உள்ளே இழுத்துக் கொண்டுவிட்டது.

அவர்களின் பெயரை நான் பிரஸ்தாபிக்க நேர்ந்து விட்டதால் அவர்களுடைய தயாளமனம் பற்றியும் சிறிது கூறுவது அவசியமாகிவிட்டது.

125. இவ்வேளையில் என் ஆத்மா (நேயர் ஹுஸாமுத்தீன்) என் மேலங்கியைப் பற்றிப்பிடித்து நிறுத்துகிறார்; அவர் யூசுப் (அலை) அவர்களின் சட்டையின் வாசனையை இனம் கண்டுகொண்டார்.

அவர் சொன்னார்: "நமது பல்லாண்டு காலத் தோழமையின் பேரால் கேட்டுக்கொள்கிறேன், அந்தப் பேரின்பப் பரவசமூட்டும் விஷயங்களில் ஒன்றையேனும் நினைவூட்டுங்கள்.

அதன்மூலம் பூமியும் வானமும் (மகிழ்ச்சியால்) மலரும்; மதிநுட்பமும், ஆத்மாவும், நயனங்களும் பன்மடங்கு ஒளியுடையன வாகும்" என்று.

நான் சொன்னேன்: "என்மீது பொறுப்புச் சுமத்தாதீர்! நான் என்னை இழந்தவன் ('பனா' ஆனவன்) ஆகிவிட்டேன். என் மதியும்,

1. குர்ஆன் 54 : 1

புலன்களும் மழுங்கியுள்ளன. இந்த நிலையில் எப்படிப்போற்றுவது என்று எனக்குத் தெரியவில்லை.

தன்னுணர்வு இல்லாத ஒருவன் ஏதேனும் சொல்வானாயின் அதில் மிகைப்படுத்தலும், உண்மைக்கு மாற்றமானதும் இருந்துவிடின் அது சரிப்படாது.

130. என்னுடைய இரத்த நாளங்களில் எல்லாமே தன்னுணர்வற்றதாயுள்ள நிலையிலிருக்கும் நான் தனக்கு ஒப்பாரில்லாத அந்த நேயனை விவரிப்பது எங்கனம்?

இந்தப் பிரிவையும் இதயத்தின் இரத்தத்தையும் பற்றிய வருணனையை வேறோரு சமயத்தில் (இடத்தில்) செய்துகொள்வோம்."

அவர் சொன்னார்: "எனக்கு உணவு தாருங்கள்; நான் பசித்திருக்கிறேன்; காலம் கொலை வாளினைப்போல் நின்றுகொண்டிருப்பதால் துரிதமாக (அதைத்) தாருங்கள்.

ஸூபியானவர் (நிகழ்) காலத்தின் புதல்வராவார். தோழரே, அந்த மார்க்கத்தின்படி (தரீகாவின்படி) 'நாளை' என்று சொல்வது நியதியின்றல்லவா!

அப்படியாயின் நீங்கள் ஒரு ஸூபி அல்லவா! கையிலுள்ள கைமுதலைக் கொடுக்காது தள்ளிப்போடுவதால் அது கரைந்து போகலாம்."

135. நான் அவரிடங் கூறினேன்: "நேயனைப் பற்றிய ரகசியத்தை வெளியிடாது மறைத்துவைப்பது நலம். கதையைக் கவனமாகக் கேள்:

காதலரின் இரகசியம் பிறரின் பேச்சின் மூலம் வெளிப்படுவதே நலமாகும்."

அவர் சொன்னார்: "இதைத் திறந்து அப்பட்டமாக வெளியிடுங்கள்; சன்மார்க்கப் பேச்சு மறைவாகவன்றி வெளிப்படையாகவே இருக்க வேண்டும்.

திரையை அகற்றிவிட்டு பகிரங்கமாகப் பேசுங்கள்; அன்பானவனோடு துயில்கையில் நான் அங்கி அணிந்துகொள்வதில்லை."

நான் சொன்னேன்: "அவன் உன் காட்சியில் அப்பட்டமாகத் தோன்றுவானாயின் நீயோ, உன் நெஞ்சமோ வதனமோ இருக்காது.

140. உன் தேவையைத் தெரிவி; வரம்புக்கு உட்பட்டவனாக நின்று அவ்விதம் கேள்! ஒரு துரும்பு மலையைத் தாங்க முடியாது.

இவ்வுலகம் முழுவதற்கும் ஒளிதரும் பகலவன் இன்னும் சற்று உலகுக்கு நெருக்கமாக வருமாயின் உலகில் உள்ள யாவும் எரிந்து சாம்பலாகிவிடும்.

வீண் தொல்லையையும், குழப்பத்தையும், செந்நீர்சிந்தலையும் ஏன் வேட்கிறாய்? தப்ரீஜின் சூரியனைப்பற்றி இதற்கு அதிகம் பேசாதே!"

இந்த மர்மத்துக்கு முடிவே இல்லை; ஆரம்பத்தைப் பற்றிப் பேசு; முன் கூறிவந்த கதையின் தொடர்ச்சியை விவரி.

## அடிமைப் பெண்ணின் பிணி யாது என்று கண்டுபிடிப்பதற்காகத் தம்மைத் தனித்திருக்க அனுமதிக்குமாறு ஞானி அரசனிடம் கேட்டல்

வைத்தியர் அரசனிடம் சொன்னார்: "அரசே, இந்த மாளிகையைக் காலிசெய்!உற்றாரையும் மற்றாரையும் வெளியிலனுப்பு!

145. அடிமைப் பெண்ணிடம் நான் சில விசயங்களைக் கேட்க வேண்டியுள்ளது. எனவே, வெளிக்கதவுக்கு வெளியிலும் யாரும் நின்று ஒட்டுக் கேட்காது கவனி."

அந்த மாளிகை காலிசெய்யப்பட்டது. வைத்தியரையும், பிணிகொண்ட அந்த அடிமைப் பெண்ணையுமன்றி அங்கே வேறு யாரும் இருக்கவில்லை.

வைத்தியர் அந்தப் பெண்ணை அன்பொழுக விளித்து வினவலாயினார்: "(பெண்ணே,) உன் ஊர் யாது? ஒவ்வோர் ஊர் வாசிக்கும் சிகிச்சை முறை வேறு. (எனவே, இதை நான் அறிந்தாகவேண்டும்.)

அவ்வூரில் உனக்கு உற்றார் உறவினர் யார் யாருடன் தொடர்பிருந்தது?"

அவளுடைய நாடியைப் பரிசோதித்துக்கொண்டே மண்டலத்தின் அநீதி பற்றி ஒவ்வொன்றாகக் கேள்வி கேட்கலானார்.

150. ஒருவன் காலில் முள் தைத்துவிட்டதென்றால், அவன் மெதுவாக அந்தக் காலை மற்றோரு முட்டுக்காலின் மீது வைக்கிறான்.

ஓர் ஊசியின் நுனியால் அந்த முள்ளின் தலைப் பாகத்தைத் தேடுகிறான்; அது தட்டுப்படாவிட்டால் உமிழ்நீரால் (வலியெடுக்கும் பாகத்தை) நனைக்கிறான்.

காலில் தைத்த முள்ளை எடுக்கவே இவ்வளவு கஷ்டப்பட வேண்டியதிருக்கும் போது, இதயத்தில் தைத்த முள்ளைக்

கண்டுபிடிப்பது எத்துணை கடினமானது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்!

மனத்தில் தைக்கும் முள்ளைக் கண்டுபிடிப்பது கடையர்களுக்கும் சாத்தியமானதாகிவிடின் துயரம் என்பதே அர்த்தமற்றதாகி விடுமே!

கழுதையின் வாலில் ஒருவன் முள்ளைக் குத்தி விடுகிறான். அதை எப்படி அகற்றிக் கொள்வது என்று கழுதைக்குப் புலப் படுவதில்லை. உடனே அது குதிக்கத் தொடங்கிவிடுகிறது.

155. அது குதிக்கக் குதிக்க அந்த முள் அதிக ஆழமாகப் பதிந்துவிடுகிறது. அந்த முள்ளையெடுக்க அறிவுடைய ஒருவனல் லவா வரவேண்டும்!

அந்த முள்ளின் உறுத்தலிலிருந்து விடுபடுவதற்காக கழுதை (தன் உடம்பில்) நூற்றுக்கணக்கான இடங்களில் உதைத்து அதிகப்புண்ணாக்கிக்கொள்கிறது.

ஆனால், முள்ளெடுக்கும் நிபுணனோ தன் கலையில் கைதேர்ந்த வன். வாலில் ஒவ்வோரிடமாகத் தன் கையை வைத்து முள்தட்டுப் படுகிறதா என்று அவன் சோதிக்கிறான்.

(வைத்தியர்) அந்த அடிமைப் பெண்ணிடம் நடந்த விஷயங் களை விசாரித்து அறிந்தார்.

அவளும் தன் வீட்டையும், (முந்தைய) எஜமானர்களையும், ஊர்வாசிகளையும் பற்றிப் பல விஷயங்களை விவரிக்கலானாள்.

160. அவளுடைய நாடியைப் பிடித்து அதன் துடிப்பைக் கவனித்துக்கொண்டே அவர் அந்த விருத்தாந்தங்களைக் கேட்டு வந்தார்.

அதன்மூலம் அவளிடம் யாருடைய பெயரைப் பிரஸ்தாபிக்கும் போது அவள் நாடித்துடிப்பில் பரபரப்பு உண்டாகிறது என்று அறிந்து , அந்த நபர் உலகில் அவளுடைய ஆத்மாவின் தேட்டமான வன் என்று நிதானிக்க முடியும்.

எனவே, அவர் அவளுடைய ஊரிலுள்ள அவள் நண்பர்கள் பலருடைய பெயரை (அவள் சொன்ன பெயர்களை) ஒவ்வொன் றாகச் சொல்லி வந்தார். பின்னர் வேறோர் ஊரின் பெயரையும் பிரஸ்தாபித்தார்.

அவர் கேட்டார்: “நீ உன் சுயபதியைவிட்டு வெளியானதும் எங்கே அதிகம் வசித்தாய்?”

அவள் ஒரு நகரின் பெயரைச் சொன்னாள். பின்னர் வேறு விஷயங்களைப் பற்றிப் பேசலானாள். அப்போதும் அவள் முகநிறத்திலும், நாடித்துடிப்பிலும் எந்த மாறுதலுமில்லை.

165. பல எஜமானர்களையும், நகர்களையும் பற்றி ஒவ்வொன் றாக அவள் கூறிவந்தாள்; பல மாளிகைகளையும், உணவையும், ருசிகளையும் பற்றிப் பேசினாள்.

பல நகர்களையும் பல வீடுகளையும் பற்றி எடுத்துரைத்தாள். அப்போதும் அவள் நாடித்துடிப்புப் பரபரப்படையவில்லை; அவள் நிறம் மாறவில்லை.

சமர்க்கந்து என்ற தேனினும் இனிய நகரைப்பற்றி அவள் பிரஸ்தாபிக்கும்வரை அவள் நாடி தன் இயல்பான நிலையிலேயே துடித்துக் கொண்டிருந்தது. அந்த ஊர்ப் பெயரை அவள் கூறியதும் அவள் நாடி படபடக்கலாயிற்று. அவள் முகம் சிவக்கவும் வெளிறவுமாக இருந்தது.

ஏனெனில், சமர்க்கந்துவாசி ஒருவனை - நகைக் கடைக்காரன் ஒருவனைப் - பிரிந்த வேதனையால்தான் அவள் வருந்திக்கொண்டி ருந்தாள்.

அந்தப் பெண்ணிடமிருந்து வைத்தியர் இந்த இரகசியத்தைத் தெரிந்துகொண்டதும் அவள் பிணிக்கான மூல காரணத்தையும் கண்டுகொண்டார்.

170. “அவன் இருக்கும் வட்டாரம் யாது?” என்று அவர் வினவினார். ஸரெ-புல் (பாலத்தின் தலை மாட்டு) என்ற வட்டாரத் தில் காதபர் தெருவில் அவன் வசிக்கிறான் என்று அந்த அடிமைப் பெண் தெரிவித்தாள்.

அவர் சொன்னார் : “உன் பிணி யாது என்பதை நான் அறிந்து கொண்டேன். உனக்காக உடனே அதிசய நிவாரணத்தைப் பிரயோ கித்து உன் பிணியை அகற்றப் போகிறேன்.

மகிழ்ச்சியுடனிரு; கவலையை விடு; அஞ்சாதே! புல் தரையில் மழை பெய்வதால் (புல்லுக்கு) நன்மையுண்டாவது போல, என் செயலால் நீ நன்மையடையப் போகிறாய்.

உனக்காக நான் கவலைப்படுகிறேன். நீ கவலைப்பட வேண் டாம்; நூறு பெற்றோர்களை விடவும் நான் உன்னிடம் அதிகப் பரிவுள்ளவனாய் இருப்பேன்.

எச்சரிக்கை! யாரிடமும் இந்த இரகசியத்தைச் சொல்லாதே! அரசன் எவ்வளவுதான் துளாவித் துளாவி விசாரித்தாலும் அவனிடமும் சொல்லாதே!

175. உன் இரகசியத்துக்கு உன் இதயம் புதைகுழியாகிவிடின் உன் ஆசை விரைவிலேயே நிறைவேறிவிடும்."

தன் எண்ணங்களை மறைத்து வைப்பவன் தன் மனோபீஷ்டத்தை அடையப் பெறுவான் என்று நபி பெருமான் (ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள்.

வித்துக்கள் பூமியில் புதைக்கப்பட்டால் அவற்றின் அந்தரங்கம் பச்சைப்பசேல் என்ற பூங்காவாக மலர்கிறது.

தங்கமும் வெள்ளியும் (மண்ணுள்) மறைந்திராவிடின் நிலக் குகையுள் அவை விளைந்து பக்குவமாவது எப்படி?

வைத்தியருடைய வாக்குறுதிகளும், இதமொழிகளும் பிணியுற்றுக் கிடந்த பெண்ணை நிர்ப்பயமானவளாக ஆக்கின.

180. மனத்துக்கு அமைதியூட்டும் உண்மையான வாக்குறுதிகளும் உண்டு.

கண்ணியமானவர்களின் வாக்குறுதி என்றும் அள்ளி வழங்கும் பொக்கிஷமாகும்; தகுதியற்றோரின் வாக்குறுதி ஆத்மாவுக்கு அவஸ்தையைச் சேர்ப்பதாகும்.

**பிணியின் காரணத்தைக் கண்டறிந்த வைத்தியர் அதுபற்றி அரசனிடம் பேசுதல்**

பின்னர், வைத்தியர் எழுந்தார்; அரசனிடம் சென்றார். அந்த விஷயம் பற்றி அவசியமான அளவு அரசனிடம் தெரிவித்தார்.

அவர் சொன்னார்: "இந்தப் பிணியை அகற்றுவதற்காக அந்த மனிதனை இங்கே கொண்டு வருவதே (சிறந்த) திட்டமாகும். அந்தத் தூரத்திலுள்ள பிரஸ்தாப நகைக்கடைக்காரனை இங்கே வரச்செய்.

அவனுக்குக் கௌரவமான உடைகளையும் பொன்னையும் அனுப்பி அவனை மயக்கி இங்கே வரச்செய்!"

**நகைக்கடைக்காரனை அழைத்துவர அரசன் ஆட்களை அனுப்புதல்**

185. பின்னர் அரசன் திறமையும், சாதுரியமும், நேர்மையும் உள்ள அமீர்கள் இருவரை அந்தப் பக்கத்திற்கு அனுப்பினான்.

அவர்களிருவரும் சமர்க்கந்து வந்து நகைக்கடைக்காரனைக் கண்டு, அரசனின் நற்செய்தியை தெரிவித்தனர்.

அவனிடங் கூறினர்: "ஹே தொழில் வல்ல சிற்பி, சம்பூரணமான அறிவாற்றலுடையாய், உன் புகழ் மணம் சகல திக்குகளிலும் கமழ்கிறது.

*இப்போது இந்நாட்டு அரசன் தன் பொன் ஆபரணங்களைச் சமைப்பதற்காக உன்னை வரித்துள்ளான். ஏனெனில், இப்போது நீயே இந்தத் தொழிலில் தலை சிறந்தவனாயுள்ளாய்.*

*இதோ இந்தக் கௌரவ உடைகளையும், பொன் வெள்ளியையும் ஏற்றுக்கொள்! நீ அந்த அரசனிடம் வந்ததும் அவனுடைய அன்புக்குரிய நற்றோழனாகிவிடுவாய்!*

*190. அவன் அந்தப் பெரும் பொருளையும் உடைகளையும் கண்டான்; மயக்கமடைந்தான்; தன் ஊரையும், பிள்ளைகளையும் பிரிந்து புறப்பட்டுவிட்டான்.*

*தன் உயிருக்காக அரசன் கண்ணி வைத்துள்ளான் என்பதை அறியாத அந்த மூடன் உல்லாச நடைபோட்டு வெளிக்கிளம்பினான்.*

*அரபிக் குதிரையொன்றின் மீதமர்ந்து உள்ளம் மகிழ்ச்சியால் துள்ள விரைந்தான். (யதார்த்தத்தில்) தன் உயிரின் விலையாகத் தனக்குத் தரப்பட்டதை அவன் தன் கௌரவ உடையாகக் கருதிக்கொண்டான்.*

*(மூடா) பல நூறு தடவை இணங்கியவனாய் தன் காலாலேயே தன் மரணத்தை நோக்கிப் பயணிப்பவனான நீ உன் மரண யாத்திரையைத் தொடங்கிவிட்டாய்.*

*அவன் கற்பனையிலோ தான் செல்வத்தையும், அதிகாரத்தையும், ஆட்சியையும் அடைவதாகக் கனவு கண்டுகொண்டிருந்தான்; ஆனால், உயிர்வாங்கும் அமரர் இஸ்ராயீல் (அலை) அவர்களோ, ‘போ, போ, (அவற்றை) நீ அடைவாய்!’ என்று (ஏளனமாகக்) கூறினார்கள்.*

*195. அந்த அந்நியன் (அரசனின் அரண்மனைக்கு) வந்து சேர்ந்ததும் வைத்தியர் அவனை அரசன் சமூகத்துக்கு அழைத்தேகினார்.*

*படாடோபமாகவும், நாசூக்காகவும் ‘திராஸ்’ நகர, மெழுகு திரியில் (விட்டிலைப்போல்) விழுந்து மடிவதற்காக அரசர்க்கரசன் சந்நிதிக்கு அவன் அழைத்தேகப்பட்டான்.*

*அரசன் அவனை நோக்கினான்; அவனுக்கு அதிக மரியாதை காட்டினான்; பொன் நிறைந்த பொக்கிஷ அறையை அவன் பொறுப்பில் ஒப்படைத்தான்.*

*பின்னர் வைத்தியர் அரசனிடம் கூறினார் : “வல்லமையுடைய அரசே, அந்தப் பணிப்பெண்ணை இந்த எஜமானனுக்கு அளித்துவிடு.*

அதன்மூலம் அந்த அடிமைப் பெண் அவனோடு கலந்து இன்பமடைவாள். அந்தக் கலவை இன்பமாம் நீர் அவளுடைய (வேட்கை) நெருப்பை அணைத்துவிடும்.''

200. அரசனும் அவ்விதமே அந்த மதிமுக வதனியை அவனுக்கு அளித்து அவர்களிருவரும் ஒருவரோடொருவர் தழுவியிருக்குமாறு அவர்களுக்கு மணம் முடித்து வைத்தான்.

ஆறு மாதங்கள் அவர்கள் தங்கள் இச்சையைப் பூர்த்தி செய்துகொண்டார்கள். அதற்கிடையில் அந்தப் பெண்ணும் பூரணமாகக் குணமடைந்துவிட்டாள்.

அதன்பின் வைத்தியர் அந்த நகைக் கடைக்காரனுக்காக பானம் ஒன்றைத் தயார் செய்தார். அதை அவன் பருகியதும், அவள் கண்முன்பாகவே அவன் உடல் கரையலானான்.

அவனுக்குண்டான பிணியால் அவனுடைய அழகு அவனை விட்டு அகன்றது; அத்துடன் அந்தப் பெண்ணின் இதயமும் அவன் மீது ஆசைகொள்ளும் துன்பத்தை விட்டகன்றது.

அவன் விகாரமாகவும், கடுத்தவனாகவும், கன்னம் ஒட்டிய வனாகவும் ஆனதும், அவள் இதயத்தில் அவன் மீதிருந்த ஆசையும் சிறிது சிறிதாக ஆறிப்போய்விட்டது.

205. (தோல்) நிறத்தைக்கொண்டு மட்டும் உண்டாகும் காதல் உண்மையில் காதலல்ல; முடிவில் அது அபகீர்த்தியாகவே வந்துசேரும்.

அந்த அபகீர்த்திக்குரிய நிறமாவது நிரந்தரமானதாக இருந் திருக்கக்கூடாதா? அப்படி இருந்திருப்பின் அதன்மீது இந்தத் தீய தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்காதல்லவா!

அவன் கண்கள் இரத்தக் கண்ணீரை ஆறாகப் பெருக்கின. அவனுடைய (அழகிய) முகமே அவனுக்குப் பகைவனாக வந்து சேர்ந்தது.

மயிலின் தோகையே அதற்கு பகையாய் இருக்கிறது; எத்த னையோ அரசர்கள் தங்கள் மாட்சிமையால் மண்கௌவ நேர்ந் துள்ளது.

நகைக்கடைக்காரன் புலம்பலானான்: "நான் தன் அடிவயிற்றி லுள்ள கஸ்தூரிக்காக அந்த வேடனால் தன் ஒரு பாவமும் அறியா உயிர் வேட்டையாடப்பட்ட கஸ்தூரிமானாக இருக்கிறேன்.

*210. தனது தோலுக்காக வேடுவர்களால் வேட்டையாடப்படும் நரியாக நான் இருக்கிறேன்.*

*தன் எலும்புக்காக (தந்தத்துக்காக) மாவுத்தனாலேயே கொல்லப்படும் யானை நான்.*

*'நான்' அல்லாததற்காக (அதாவது, எனது அல்லாத, அழிந்து படுவதான என் அழகுக்காக) என்னைக் கொன்றவன் என் செங்குருதி (பழிவாங்கினாலன்றி) நிம்மதியடையாது என்பதை அறியானா?*

*இன்று எனக்குத் துயருண்டாகியுள்ளது; நாளை அவனுக்கு வரவிருக்கிறது. என் போன்ற ஒருவனுடைய செங்குருதி என்றுதான் இவ்வாறு வீணாயிற்று?*

*சுவரிலிருந்து (முதலில்) நீண்ட நிழல் விழுந்தாலும் பின்னர் (கடைசியில்) நிழல் சுவரிடமே திரும்பிவிடுகிறது.*

*215. இவ்வுலகு ஒரு மலை போன்றுள்ளது; நமது செயல்கள் ஒரு கூச்சலைப் போன்றுள்ளன. அந்தக் கூச்சலின் எதிரொலி நம்மிடமே திரும்புகிறது."*

*இவ்விதம் கூறிவிட்டு அவன் பூமியுள் புதைந்து போனான். (அதாவது, இறந்துபோனான்.) அடிமைப் பெண் காதலிலும் வேதனையிலுமிருந்து விடுதலையாகி விட்டாள்.*

*ஏனெனில், மீண்டும் நம்மிடை எழுந்துவர முடியாதுபோன இறந்தவர்கள்மீது கொள்ளும் காதல் நிலைத்து நிற்காது.*

*ஆனால், நித்திய ஜீவனுள்ளதன் மீது கொள்ளும் காதல் ஒவ்வொரு கணமும், ஆத்மாவுக்கும் காட்சிக்கும் மலரவிருக்கும் முகையைப் போல் புதுமை காட்டுவதாகும்.*

*என்றும் இருப்பவனான நித்தியன் மீது அன்புகொள்! ஜீவன் அதிகரிக்கச் செய்யும் மதுவை அவன் உனக்கு நல்குகிறான்.*

*220. சகல தீர்க்கதரசிகளுக்கும் (நபிமார்களுக்கும்) சக்தியையும், புகழையும் சேர்த்த இறையன்பை (காதலை) வரித்துக்கொள்!*

*" அரசனுடைய அவைக்குள் புக நமக்கு அனுமதி கிடைக்காது" என்றுமட்டும் சொல்லாதே! தயாளவானோடு பழகுவதில் கஷ்டம் ஏதுமில்லை.*

*வைத்தியர் அம்மனிதரைக் கொன்றது சம்மானங் கருதியோ பயத்தாலோ அல்ல.*

அரசனைத் திருப்திப்படுத்துவதற்காகவும், அவர் அவனைக் கொலைசெய்யவில்லை; தெய்வ உத்தரவும், அறிவிப்பும் உண்டான பின்னரே அவ்விதம் செய்தார்.

கிலுரு (அலை) அவர்கள் சிறுவன் ஒருவனின் கழுத்தை அறுத்துக் கொன்றதன் மர்மத்தைக் கடையர்கள் புரிந்துகொள்வ தெப்படி?

225. இறைவனிடமிருந்து ஞானோதயத்தையும், (தன் பிரார்த் தனைக்குப்) பதிலையும் பெறுபவர் எதைச் செய்தபோதிலும் அது நேர்மையின் சாராம்சமாகவே இருக்கும்.

ஆத்மீக உயிரளிப்பவர் உயிர் பறிப்பின் அது அனுமதிக்கப் பட்டதே. அவர் தெய்வப் பிரதிநிதி. அவர் கரம் இறைவனின் கரமேயாகும்.

இஸ்மாயீல் (அலை) அவர்களைப்போல் (அவர்கள் தமது தந்தை முன்பு கழுத்தை நீட்டியதுபோல்) நீயும் அவர்முன் (அறு படுவதற்காகக்) கழுத்தை நீட்டுவாயாக! அவருடைய வாளுக்கு முன் மகிழ்வாகவும் குதூகலத்துடனும் உன் உயிரைக் கிடத்துவாயாக!

அதன்மூலம் ஏகனுடன் அஹமது (ஸல்) அவர்கள் ஆத்மா (கலந்து) உறவாடுவதுபோல் உன் ஆத்மாவும் பேரின்பமடைய முடியும்.

காதலர்கள் தமது காதலியராலேயே கொல்லப்படும் அந்தத் தருணத்திலேயே (ஆத்மீக) உயிர் எனும் மதுக் கோப்பையைப் பருகித் திளைத்தவர்களாகின்றனர்.

230. அரசன் அந்த உதிரத்தைச் சிந்தியது தன் இச்சையைப் பூர்த்திசெய்து கொள்வதற்காகவன்று; எனவே, அவனைப் பற்றியும் கீழ்த்தரமாக எண்ணவோ விவாதிக்கவோ வேண்டாம்!

அவன் பாவகரமான ஒரு காரியத்தைச் செய்துவிட்டான் என்று நீ நினைக்கலாம்; நிர்மலமான மனநிலையில் புடமிடுதல் (உயரிய) உலோகத்தில் (கீழான) கலவையை விட்டுவைக்குமா?

இத்தகைய முரட்டுப் பயிற்சியும், கரடான நடைமுறையும் பொன்னிலிருந்து அழுக்கை அகற்றும் புடம் போடுதல்தான்.

நல்லதையும் தீயதையும் பரிசோதித்துப் பார்த்தல் பொன்னி லுள்ள அழுக்குகள் மேலே கிளம்புவதற்காகத்தான்.

அரசனின் நடவடிக்கை தெய்வ அனுக்கிரஹமற்றதாயின் அவன் ஓர் அரசனேயல்லன், தன் வேட்டைப் பிராணியைக் கிழித்துத் தின்னும் நாயேதான்.

235. பேராசையும், வெறியும், பொறாமையும் கொண்டு அவன் இதைச் செய்யவில்லை. அவன் செய்தது நன்மையான காரியம்; ஆனால், தீமையான அம்சத்தின் தோற்றத்தில் புலனாயிற்று.

கிலுரு (அலை) அவர்கள் கடலில் சென்ற படகை உடைத்தார்களாயினும் அது நேர்மையானதாய் இருந்தது நூறு தடவை உறுதி.

மூஸா (அலை) அவர்களின் ஞான விலாசத்துக்கும், உயரிய படித்தரத்துக்கும் இடையிலும், (கிலுரு அவர்களின்) அந்தச் செயலை அவர்கள் புரிந்துகொள்ள விடாதபடி அறிவுக்கு முன் திரையிடப்பட்டிருந்ததென்றால், இறக்கையற்ற நீ பறப்பதெங்ஙனம்?

(அரசனின் செயலான) அது ஒரு ரோஜா மலர் (புகழுக்குரியது) ஆகும்; அதை இரத்தம் சிந்தல் (கொலை) என்று கூறற்க! அவன் பகுத்தறிவுப் போதையுடையவன். அவனைப் பித்தன் என்று கூறவேண்டாம்!

ஒரு முஸ்லிமுடைய இரத்தத்தைச் சிந்துவது அவனுடைய நோக்கமாக இருந்திருப்பின் அவனுடைய பெயரை மரியாதையோடு பிரஸ்தாபித்ததற்காக நான் ஒரு நிராகரிப்பவன் ஆகியிருப்பேன்.

240. தீயவர்களைப் பாராட்டுவதால் உன்னதமான வான மண்டலமும் நடுநடுங்குகிறது; அவன் பாராட்டப்படுவதைக் கேட்கும் நல்லவன் தானும் தீயது செய்ய முடிவுகட்டுகிறான்.

அவன் அரசன்; விழிப்பான அரசன்; அவன் தேர்ந்தெடுக்கப் பட்டவன்; இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவன்.

இவ்விதம் அரசனால் கொல்லப்படுபவன் உன்னதமான பதவிக்கும், நல்லதிர்ஷ்டத்துக்குமே இட்டுச்செல்லப்பட்டவனாவான்.

அவனுக்கு (நகைக் கடைக்காரனுக்கு) இம்சையுண்டாக்கியதன் மூலம் அவனுக்கு நன்மையுண்டாகும் என்று அறிந்திருந்தாலன்றி அந்தப் பூரண கருணையாளன் இம்சையுண்டாக்க விழைவானா?

(விருத்த சேதனம் செய்யப்படுகையில்) சிறுவன் பண்டிதன் கையிலுள்ள கத்தியைக் கண்டு நடுநடுங்கினான்; (ஆனால்,) சிறுவனின் பரிவுள்ள தாயோ (தன் புதல்வனின்) வேதனையைக் கண்டு (அதனால் பின்னர், சுகமுண்டு என்று அறிந்து) மகிழ்கிறாள்.

245. அவன் பாதி உயிரை எடுத்துவிட்டு (அதற்குப் பகரமாக) நூறு உயிர்களைக் கொடுக்கிறான். அவன் கொடுப்பது உன் கற்பனைக்குள் அடங்கியதல்ல.

உன் நிலையை வைத்து அவன் நிலையும் அதுபோன்றது என்று எண்ணிக்கொண்டு நீ அவனை மதிப்பிடுகிறாய். ஆனால், நீ (உண்மையிலிருந்து) வெகு தொலை விலகிவிட்டாய். நன்கு சிந்தனைசெய்!

**மளிகைக் கடைக்காரன் - அவன் கிளிக் கதை**

மளிகைக்கடைக்காரன் ஒருவனிடம் இனிய குரலுடைய பேசும் திறம்படைத்த பச்சைக்கிளியொன்று இருந்தது.

(கடைக்காரனில்லாத போது,) அது அவன் அமர்ந்திருக்கும் பட்டடையில் அமர்ந்து கடையைக் கண்காணிக்கும்; வாடிக்கைக் காரர்களிடம் இனிமையாக உரையாடும்.

மனிதர்களிடம் அவர்களைப் போன்றே பேசும்; கிளிஇனத்தின் கீதமிசைக்கும் இயல்பிலும் அது சிறந்ததாய் விளங்கிற்று.

250. (ஒரு சமயம் எஜமானன் இல்லாத நேரத்தில்) பட்டடையி லிருந்து அது துள்ளிப் பறந்தது. அதனால் (மேலே அடுக்கி வைக்கப்பட்டிருந்த) தைலச் சீசாக்களைத் (தன்னையறியாமலே) தட்டிக் கவிழ்த்துவிட்டது.*

கடைக்காரன் வீட்டிலிருந்து கடைக்கு வந்தான். எல்லாக் கடைக்காரர்களையும் போல அவனும் ஆஸ்வாசமாகக் கடையிலமர்ந்தான்.

அப்போது பட்டடையின்மீது தைலம் கொட்டிக்கிடப்பதை யும், தன் துணியெல்லாம் அதனால் நனைந்து விட்டதையும் கண்டான். (கோபத்தால்) கிளியின் தலையில் ஓங்கி அறைந்து விட்டான். அதனால், அதன் தலை வழுக்கையாகிவிட்டது.

அதன்பின் கிளி வாய் பேசாது மௌனம் சாதித்தது. பச்சாதா பத்தால் கடைக்காரன் பெருமூச்சு விட்டான்.

அவன் தன் தாடியைப் பிய்த்துக்கொண்டு கூறினான்: "அந்தோ, என் வளத்தின் சூரியன் மேகங்களிடை மறைந்துபோயிற்றே!

---

*இவ்விதம் அது துள்ளிப் பறந்ததற்குக் காரணம் கூறும் வகையிலான கீழ்க்கண்ட இரண்டு அடிகள் மஸ்னவீயின் பிந்திய பிரதிகளில் உள்ளன. இவை கோனியா மூலப் பிரதியில் இல்லாததால் மௌலானாவால் எழுதப்பட்டவையன்று என்பது தெளிவு; " ஒரு நாள் கடைக்காரன் வீடு போயிருந்த சமயம் கிளி கடையைக் கவனித்துக் கொண்டிருந்தபோது ஓர் எலியைத் துரத்திக் கொண்டு பூனையொன்று கடையுள் தாவியது. உடனே கிளி உயிருக்குப் பயந்து..."

*255. அதை (அத்தகைய அறை) அறைந்த அந்த நேரத்தில் என் கை செயலற்றுப் போயிருக்கக்கூடாதா? இனிய மொழி பேசும் கிளியை அடிக்க எப்படித்தான் நான் துணிந்தேனோ!"*

*தன் கிளி மீண்டும் வாய் பேசட்டும் என்று மனத்தில் சங்கல் பித்துக்கொண்டு அவன் துறவிகளுக்கு தானதருமங் கொடுத்தான்.*

*மூன்று பகல்களும் மூன்று இரவுகளும் கழிந்தன; விரக்தியோடு, சோகமே உருவாக அவன் நம்பிக்கை இழந்தவன்போல் பட்டடையில் அமர்ந்திருந்தான்.*

*கிளி ஒருகால் பேசத் தொடங்கலாம் என்று (நம்பி) அதற்குப் பலவிதமான வேடிக்கைகளைக் காட்டினான்.*

*அச்சமயம் கம்பளி உடையணிந்த துறவியொருவர் மொட்டைத் தலையுடன் அவ்வழியே போய்க்கொண்டிருந்தார்; அவர் தலை செம்பின் பின் பாகத்தைப்போல் முற்றும் வழுக்கையாக இருந்தது.*

*260. அவரைக் கண்டதும் கிளி பேசத் தொடங்கிவிட்டது. தர்வேஷைக் கிரீச்சிட்டு அழைத்தது. "ஐயா, வழுக்கைத் தலைத் தோழரே!*

*நீர் எப்படி வழுக்கையர் கூட்டத்தில் சேர்ந்தீர்? நீரும் சீசாவிலிருந்த தைலத்தைக் கொட்டிவிட்டீரா?" என்று வினவலாயிற்று.*

*அங்கு நின்றவர்கள் கிளியின் ஊகத்தைப் புரிந்துகொண்டு சிரிக்கலாயினர். ஏனெனில், கம்பளி அங்கி அணிந்தவரும் தன்னைப் போன்றவர்தாம் என்று அது எண்ணிக்கொண்டதல்லவா!*

*புனித மகான்களின் செயல்களை உன் நிலையைக் கொண்டு (அவர்களும் உன்னைப் போன்றவர்கள்தாம் என்று) கணித்து விடாதே!*

*'ஷேர்' (சிங்கம்) என்பதற்கும் 'ஷீர்' (பால்) என்பதற்கும் எழுத்து ஒன்றுதான். (எனினும், அர்த்தத்தில் எத்துணை வேற்றுமை!) இவ்விதம் கணிப்பதாலேயே உலகம் வழிபிசகிப் போய்க்கொண்டிருக்கிறது. இறைவனுடைய நல்லடியார்களான 'அப்தால்'களை விளங்கிக் கொண்டவர்கள் அபூர்வமாகிவிட்டனர்.*

*265. இத்தகையோர் இறைவனின் தூதர்களோடு தாங்களும் சமமானவர்களே என்கின்றனர்; இறைவனின் நற்றோழர்களான நாதர்கள் தங்களைப் போன்றவர்களே என்றும் எண்ணிக் கொள்கின்றனர்.*

"பாருங்கள், நாங்களும் மனிதர்கள்தாம், அவர்களும் மனிதர் கள்தாம், நாங்களும் அவர்களும் தூக்கத்துக்கும் உணவுக்கும் அடிமைப்பட்டுள்ளவர்கள்தாம்" (எங்களிடை என்ன வித்தியாச மிருக்கிறது?) என்று இவர்கள் கூறுகின்றனர்.

தங்களுக்கும் (நபிமார்கள், நாதாக்களான) அவர்களுக்கு மிடையே எல்லையிலா, அகண்ட பெருவெளி வித்தியாசமிருப்பதை அவர்களுடைய கபோதித்தனத்தால் அவர்கள் உணரமுடியவில்லை.

(குளவி, தேனீ ஆகிய) இரண்டு ஈ இனங்கள் ஒரே இடத்திலி ருந்தே (மது) அருந்துகின்றன. ஆனால், ஒன்றுக்கோ கொடுக்கு உண்டானதுதான் கண்டபயன்; மற்றதிலிருந்து தேன் கிடைக்கிறது.

இரண்டு வகை மான் இனங்கள் (ஒரே இடத்தில்) புல் மேய்கின் றன; (ஒரே நீர்த்துறையில்) தண்ணீர் குடிக்கின்றன. ஒன்று வெறும் சாணம் போடுவதோடு நின்று விடுகிறது; மற்றொன்று சுத்தமான கஸ்தூரி நல்குகிறது.

270. இரண்டு கரும்பினங்கள் ஒரே தண்ணீரைக் குடித்துத்தான் வளருகின்றன; ஒன்று பேய்க் கரும்பாகிறது; மற்றது மதுரமான சர்க்கரை நிறைந்ததாய் இருக்கிறது.

இதுபோன்ற ஆயிரக்கணக்கான உதாரணங்களை எடுத்து அலசிப்பார்; அவற்றிடை எழுபது ஆண்டைய பிரயாணத்தூரம் (வேற்றுமை) இருப்பதைக் கண்டு கொள்வாய்.

இவன் உண்டால் மலம் வெளியாவதுதான் கண்ட பயனாயுள் ளது; அவர் உண்டால் அது முற்றும் இறைவனின் ஒளியாக மாறுகிறது.

இவன் உண்பதால் பேராசையும், பொறாமையுமன்றி வேறு எதுவும் விளையவில்லை; அவர் உண்டால் ஏகனின் ஒளியையன்றி வேறு எதுவும் பிறப்பதில்லை.

அவர் (பண்படுத்தப்பட்ட) நல்ல நிலம்; இவன் (எதற்கும் பயனற்ற) கெட்ட உவர் நிலம். அவர் அழகில் சிறந்தவர்; இவன் பைசாசம், வனவிலங்கு.

275. வெளித் தோற்றத்தில் இருவரும் ஒரே மாதிரியாகத் தெரிகிறார்களென்றால், அப்படித் தெரிவது சகஜமே. கடுப்பான தண்ணீரும், இனிய சுவையான தண்ணீரும் ஒரேவிதத் தெளிவுடன்தான் காணப்படுகின்றன.

(ஆத்மீகச்) சுவையறியும் தன்மையுடையவர்களையன்றி வேறு யார்தான் இந்த வேற்றுமையை அறிய முடியும்! (அவரைத்)

தேடிப்பிடியுங்கள்; அவர்தான் உப்புத் தண்ணீர் எது, நல்ல தண்ணீர் எது என்று பகுத்துக் காட்டக்கூடியவர்.

(இஃதேபோன்ற) கண்கட்டு வித்தையை (நபிமார்கள் செய்யும்) அற்புதங்களோடு ஒப்பிட்டு இரண்டுமே பித்தலாட்டத்தை அடிப்படையாகக் கொண்டவைதாம் என்று அறிவிலி கற்பனை செய்துகொள்கிறான்.

மூஸா (அலை) அவர்களோடு போட்டியிடுவதாக அவர்களுடைய கைத்தடி போன்ற ஒன்றை (மந்திரக்கோலை) மந்திரவாதிகளும் கையிலெடுத்துக்கொண்டனர்.

ஆனால், இந்தக் கோலுக்கும் அந்தக் கோலுக்கும்எத்தனை வேற்றுமை! இந்த (கண்கட்டும்) செயலுக்கும் அந்த (அற்புதமான) செயலுக்கும் இடையே எத்தனை பெரிய இடைவெளி!

280. இந்தச் செயலை இறைவனின் சாபம் தொடர்கிறது; அந்தச் செயலுக்கு இறைவனின் கருணை சம்மானமாகக் கிடைக்கிறது.

(நபிமார்கள் நாதாக்களோடு) சமத்துவம் கொண்டாட விழையும் நிராகரிப்பவர்கள் குரங்கைப் போன்றிருக்கின்றனர். இந்தத் (தீய) இயல்பு நெஞ்சத்தினுள்ளேயே பழுத்துக்கொண்டிருக்கும் பெரிய பிளவையாகும்.

மனிதன் செய்யும் காரியங்களைக் காணும் குரங்கு ஒவ்வொரு கணமும் அவனைப்போல் தானும் செய்து பார்க்கிறது.

'அவனைப்போல் நானும் செய்கிறேன்' என்று அது எண்ணிக் கொள்கிறது. அந்த சேஷ்டைக்கார ஜந்து இரண்டுக்கும் (அசலுக்கும் போலிக்கும்) உள்ள வேற்றுமையை அறிவதெப்படி?

இவர்கள் (நபிமார்கள், நாதாக்கள்) இறைவனின் கட்டளையுடன் இவ்விதம் செய்கிறார்கள்; (குரங்குபோல் அவர்கள் செய்தது போல் செய்ய முயலும்) அவன் சச்சரவைக் கிளப்புவதற்காக அதுபோல் செய்கிறான். சச்சரவு மூட்டும் முகமுடையவர்கள் தலையில் மண்ணை வாரிப்போடுங்கள்.

285. நயவஞ்சகன் (உண்மை) முஸ்லிம்களுடன் நின்று ஐங்காலத் தொழுகையைத் தொழுவதே இறைவனுக்கு அடிபணிவதற்காகவன்று; கலகமுண்டாக்குவதற்குத்தான்.

தொழுகை, நோன்பு, ஹஜ்ஜு, ஜக்காத் ஆகியவற்றில் (சிறந்து விளங்குவதற்காக) மெய்விஸ்வாசிகள் நயவஞ்சகர்களோடு முறையே வெற்றியையும் தோல்வியையும் தரும் மைதானத்தில் நிற்கின்றனர்.

இறுதியில் மெய்விஸ்வாசிகளுக்கு வெற்றி கிட்டுகிறது; நயவஞ்சகர்கள் மறுமையில் தோல்வியடைகின்றனர்.

ஒருவரோடொருவர் போட்டியிடுவதில் இருவரும் ஒருமனப் பட்டவர்களாய்க் காணப்படினும், யதார்த்தத்தில் அவர்கள் மெர்வ் நகரவாசியையும், ரைஇ நகரவாசியையும்போல் (ஒருவருக் கொருவர்) வெகு தொலைவில் இருக்கின்றனர்.

(அவர்களில்) ஒவ்வொருவரும் அவரவர் தரிபடவேண்டிய ஸ்தானத்தைச் சென்றடைவர்; ஒவ்வொருவருக்கும் அவர் பெறும் பேருக்கு ஏற்பவே சம்மானங்கிடைக்கிறது.

290. அவரை நீ உண்மையான விஸ்வாசி என்று அழைத்தால் அவர் மனம் குதூகலிக்கிறது; அவரை நீ நயவஞ்சகன் என்றால் கோபத் தீயால் அவர் கொதித்தெழுகிறார்.

மெய்விஸ்வாசியின் நாமம் அவன் தன்மை காரணமாக நேசிக்கப்படுகிறது; நயவஞ்சகனின் பெயர் அதன் நாசகாரத் தன்மை காரணமாக வெறுக்கப்படுகிறது.

('மூமின்' என்பதிலுள்ள) மீம், வாவ், மீம், நூன் ஆகிய இந்த எழுத்துக்களுக்குத் தனிச் சிறப்பேதுமில்லை. 'மூமின்' என்ற சொல் (இன்ன தன்மையவர்) என்று சுட்டிக்காட்டுவதற்காகப் பயன் படுகிறது.

(மெய்விஸ்வாசியான) அவரை நயவஞ்சகள் என்று நீ அழைத்தால் அந்த அருவருப்பான பெயர் அகத்தே தேளைப்போல் காட்டுகிறது.

அந்தப் பெயர் நரகத்துடன் தொடர்புள்ளதாய் இல்லாவிடின் அதில் ஏன் நரகின் ருசி (கோப நெருப்பு) தட்டுப்பட வேண்டும்.

295. அந்தப் பெயரின் துர்நாற்றம் எழுத்தினால் உண்டான தல்ல; கடல் நீரின் கைப்பு அது இருக்கும் பாத்திரத்திலிருந்து உண்டானதல்ல.

எழுத்து வெறும் பாத்திரந்தான்; அதன் பொருள் பாத்திரத் திலுள்ள தண்ணீர் போன்றிருக்கிறது. (ஆனால்,) 'உம்முல் கிதாபை' (நூற்களின் தாயை) தன்னகத்தே கொண்ட பரம் பொருளே [1] (ஞானப்) பெருங்கடலாய் இருக்கிறான்.

இம்மையில் கடுப்பான நீருள்ள கடலும், இனிய நீருள்ள கடலும் (பிரிந்துள்ளன). அவற்றிடைத் தடுப்புள்ளது. அவை அந்தத் தடுப்பைத் தாண்டி ஒன்றோடு ஒன்று கலப்பதில்லை. [2]

---

1. குர்ஆன் 13 : 39 2. குர்ஆன் 55 : 19, 20

இவை இரண்டும் ஒரே மூலஸ்தானத்திலிருந்து உண்டானவை என்பதை அறிந்துகொள்! இவை இரண்டையும் தாண்டி அவற்றின் மூலஸ்தானத்துக்கே போய்விடு!

உரைகல்லின்றிக் கலப்புத் தங்கம் எது, அசல் தங்கம் எது என்று மதிப்பிட உன்னால் ஒருகாலும் முடியாது.

300. இறைவனால் தம் மனத்தில் இந்த (ஞானமாம்) உரைகல் அருளப்படுபவர், யதார்த்தத்தைச் சந்தேகாஸ்பதமானதிலிருந்து திட்டமாகப் பிரித்து அறிந்துகொள்ள முடியும்.

உயிருள்ள மனிதனின் தொண்டையுள் துரும்பு ஒன்று புகுமாயின், அதை வெளியிலாக்கும்வரை அவன் நிம்மதியடை வதில்லை.

உயிருள்ள மனிதன், தான் உண்ணும் உணவில் எத்துணையோ கவனத்துடன் ஒரு சிறு துரும்பு தொண்டையுள் சென்றுவிடினும் தன் ஸ்பரிச உணர்வின் துணையால் அதை உடனே கண்டுகொள் கிறான்.

ஜடதத்துவ உலகின் (புலன்) உணர்வு இம்மைக்குரிய ஏணி யாகும்; சன்மார்க்க உணர்வு வானுலகு செல்வதற்கான ஏணியாகும்.

முந்தைய (ஜடதத்துவ) உணர்வின் நலனுக்கு வைத்தியரின் துணையை நாடு; பிந்திய உணர்வின் நலனுக்கு மெய்யடியாரின் துணையை நாடு.

305. முந்தையதன் ஆரோக்கியம் உடலின் ஊட்டத்தைப் பொறுத்தது; பிந்தியதன் ஆரோக்கியம் உடலை வசமாக்குவதால் உண்டாகிறது.

ஆத்மீகப் பாதை உடலை வருத்தி, வசக்கிப் பின் வளமான நிலைக்குக் கொண்டுவருகிறது.

அதை வருத்துவது அதிலுள்ள தங்கப் புதையலுக்காகவேதான். பின்னர் அந்தப் புதையலைக்கொண்டு மீண்டும் முன்பிருந்ததைவிட அதை அதிக வளமான தாக்குகிறது.

ஆற்றுக்குச் செல்லும் தண்ணீரை அணைபோட்டுத் தடுத்துக் கொண்டு, ஆற்றைச் சுத்தஞ்செய்து அதன்பின் தண்ணீர் விட்டது.

சருமத்தைக் கீறி உடலுள் பாய்ந்துள்ள அம்பின் முனையைப் பிடுங்கியபின் அதன் மீது புதிய சதை வளரச்செய்தது.

310. கோட்டையை ஹதம்செய்து நிராகரிப்பவரிடமிருந்து அதைக் கைப்பற்றிய பின்னர் அதில் கூடகோபுரங்களுள்ள கோட்டை கொத்தளத்தைக் கட்டிற்று.

தனக்கு உவமை இல்லாதான் செயலை விவரிப்பது எப்படி? இங்கு நான் கூறியது இப்போதுண்டான அவசியத்தை முன்னிட்டுத் தான்.

சில சமயம் (இறைவன் செயலாகிய) அது இவ்விதம் தோன்று கிறது; வேறு சிலசமயம் அதற்கு முரணானதாகத் தோன்றுகிறது. சன்மார்க்கத்தின் செயல்முறை முழுக்கப் பிரமிப்பானதுதான்.

இவ்விதம் பிரமிப்படையாத யாரும் இறைவன் பக்கல் முதுகைத் திருப்பிக்கொண்டவர்கள்தாம் என்பதே என்கருத்து. எனினும், இவ்விதம் (பேரின்பப் பரவசத்தால்) பிரமிப்படைந்த வர்களோ இறைவனின் சிந்தனையில் மூழ்கி, அந்தப் போதையில் மயங்கியவர்களாவர்.

ஒருவர் வதனம் அவனை நோக்கியுள்ளது; மற்றவர் வதனமோ தன் சொந்த முகத்தையே நோக்கிக்கொண்டிருக்கிறது.

315. ஒவ்வொருவர் வதனத்தையும் கூர்ந்து பார்; அவற்றை விழிப்புடன் கண்காணி! (துறவிகளுக்குச்) சேவை செய்வதன்மூலம் (உண்மையான மெய்ஞானியின்) வதனத்தை ஒருகால் நீ காணக் கிடைக்கலாம்.

ஷைத்தான்கள் பலர் ஆதமின் (வதனம் போன்று) வதனத்து டன் உலவுவதால் ஒவ்வொருவர் கையிலும் உங்கள் கையைக் கொடுக்க வேண்டாம்.

பறவைகளைத் தன் கண்ணியில் சிக்கவைப்பதற்காக வேடனே அவைகளைப்போன்று குரலெழுப்புவதுண்டு.

அப்போது பறவை தன் இனப் பறவைதான் குரல் கொடுக்கிறது என்று எண்ணிக்கொண்டு மேலிருந்து பறந்துவந்து கண்ணியையும், கத்தியையும் தரிசிக்க நேருகிறது.

(இதுபோன்றே) கடையர்கள் துறவியின் வசனங்களைக் களவாடிப்பேசி ஒன்றுமறியாத அப்பாவி ஜனங்களை மயக்கி ஏமாற்றுகின்றனர்.

320. மகான்களின் வேலை வெளிச்சமும், வெப்பமும் போன்றுள்ளது; கடையர்கள் வேலையோ வெட்கங்கெட்ட கபடத்தனமானதாய் இருக்கிறது.

இத்தகையோர் பிச்சையெடுப்பதற்காகக் கம்பளியில் சிங்கம் போன்று ஒன்றைச் செய்து வைத்துக்கொள்கின்றனர்; முஸைலமா வுக்கு அஹ்மது என்ற பட்டத்தைக் கொடுக்கின்றனர்.

ஆனால், முஸைலமாவுக்குக் 'கத்தாப்' (பொய்யன்) என்ற பெயரே மிஞ்சிற்று; முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கோ 'ஊலுல் அல்பாப்' (விளக்கமான அறிவுத்திறமுடையவர்கள்) என்ற பெயர் உண்டாயிற்று.

நபிபெருமானார் பரிசுத்தமான புனுகினால் முத்திரையிடப் பட்ட தெய்வீக மதுவாக இருக்கிறார்கள்; முஸைலமாவோ நாற்றத்தாலும், வேதனையாலும் மூடியிடப்பட்ட கள் ஆவான்.

**மதவெறியால் கிறிஸ்துவர்களை வதைத்த யூத அரசன் கதை**

யூதர்களிடையே கொடுங்கோல் அரசன் ஒருவன் இருந்தான். அவன் ஈஸா (அலை) அவர்களுடைய வைரியாகவும், கிறிஸ்தவர் களை இனநாசம் செய்பவனாகவும் இருந்தான்.

325. அது ஈஸா நபியின் யுகம், அவர்கள் தோன்றியிருந்தகாலம். அவர்கள் (யூதர்கள் நபியாக ஒப்புக்கொண்டுள்ள) மூஸா (அலை) அவர்களுடைய உயிராகவும், மூஸா (அலை) அவர்கள் ஈஸா (அலை) அவர்களின் உயிராகவும் திகழ்ந்தனர்.

ஆனால், வேற்றுமைக் கண்களுள்ள அரசன் இறைவன் பாதையில் ஒருவருக்கொருவர் மன ஒற்றுமை காட்டிய இருவரை யும் வெவ்வேறாகப் பிரித்தான்.

(உதாரணமாக) ஆசிரியர் ஒருவர் தனது சீடனை நோக்கி "அந்த அறையிலுள்ள கண்ணாடிப் புட்டியை எடுத்துவா" என்றார்.

அங்கே சென்று பார்த்துவிட்டு திரும்பிய கோணல் பார்வை யுள்ள மாணவன் கேட்டான். "அங்குள்ள இரண்டு புட்டிகளில் நான் எதை எடுத்துவர?" என்று.

ஆசான் பணித்தார்: "அங்கே இரண்டு புட்டிகள் இல்லை: துவிதமாகப் பார்ப்பதைக் கைவிடு; யதார்த்தத்தைவிட அதிகமாக எதையும் காணக்கூடாது" என்று.

330. "குருநாதரே என்மீது குறைகூறாதீர்கள்!" என்றான் மாணவன். "நீ கண்ட இரண்டு புட்டிகளுள் ஒன்றை உடைத்துவிடு!" என்றார் ஆசான்.

அவன் (அவ்விதமே) ஒன்றை உடைத்ததும் இரண்டுமே பார்வையிலிருந்து மறைந்துவிட்டன. (ஒன்றை இரண்டாகக் காணும்) மாறுகண் தன்மைக்கு, (தீய) சார்புகளும், கோபமுமே காரணமாகும்.

இருந்தது ஒரு புட்டிதான்; அவன் பார்வையில்தான் அது இரண்டாகத் தோற்றமளித்தது. அவன் ஒன்றை உடைத்ததும் அங்கே வேறு புட்டி இல்லாமல் போய்விட்டது.

கோபமும், ஆவேசமும் ஒருவனை மாறுகண்ணுடைய வனாக்குகின்றன; இவை அவன் ஆத்மாவையே நேர்மையைவிட்டு வழிதவறச் செய்கின்றன.

சுயநலம் தோற்றமானதும் நல்லியல்பு புதைந்து புதைந்து போகிறது; இதயத்திலிருந்து கண் முன் நூற்றுக்கணக்கான திரைகள் உண்டாகி விடுகின்றன.

335. நீதிபதி தன் இதயத்தை லஞ்சம் ஆட்கொள்ள இடமளித்து விட்டால் தவறு செய்தவன் யார், தவறினால் பாதிக்கப்பட்ட துரதிர்ஷ்டசாலி யார் என்று கண்டுகொள்வது எப்படி?

யூதமத வெறியனான அரசன் "இறைவா, நீயே காப்பாற்று, நீயே காப்பாற்று" என்று கதறும் அளவுக்கு மாறுகண்ணனாகிவிட்டான்.

பல்லாயிரக் கணக்கான (கிறிஸ்தவ) விஸ்வாசிகளைக் கொன்றான்.

## அரசனுக்கு மந்திரி சொல்லித்தந்த சதித்திட்டம்

இந்த அரசனுக்கு மந்திரியொருவன் இருந்தான். அவன் ஒரு விஷமி; பித்தலாட்டக்காரன்; அவனுடைய சாகசத்தால் தண்ணீரைக்கொண்டே முடிச்சுப்போட்டுக் காட்டுவான்.

அவன் சொன்னான் : "கிறிஸ்தவர்கள் தங்கள் உயிர்களைக் காப்பாற்றிக்கொள்ள முனைகின்றனர்; அரசரிடமிருந்து தங்கள் மார்க்கத்தை மறைக்கின்றனர்.

340. இவர்களைக் கொல்ல வேண்டாம்; அதனால் பயனொன்றும் உண்டாகப் போவதில்லை. மதத்தில் வாசனை கிடையாது; அது கஸ்தூரியோ சந்தனமோ அல்ல.

அதன் தாத்பரியம் ஒன்றுக்குள் ஒன்றான நூறு மூடிகளுள் அடைபட்டுள்ளது. அதன் வெளித்தோற்றம் உன்னோடு (ஒத்ததாக) இருக்கிறது; (ஆனால்), அதன் அகமோ (யதார்த்தமோ) உன்னோடு ஒத்ததாயில்லை."

அரசன் அவனிடம் (அந்த மதிமந்திரியிடம்) சொன்னான். "அப்படியாயின் எது (சிறந்த) திட்டம் என்பதை எனக்கு எடுத்துரை; அந்தப் பித்தலாட்டத்துக்கும் நயவஞ்சகத்துக்கும் எது மாற்று என்று விளங்கும்.

அதைக்கொண்டு உலகில் (உண்மையான) கிறிஸ்துவன் ஒருவன்கூட இல்லாதபடி செய்துவிடுவோம். வெளிப்படையிலோ, மறைவாகவோ அந்த மதத்தைத் தழுவியது யாருமே இல்லாது ஆக்குவோம்."

அந்த மந்திரி பேசலானான்: "அரசே, என் காதுகளையும், கைகளையும் வெட்டுங்கள்; என் மூக்கைக் கீறிப் பிளந்துவிடுங்கள்; இதற்கான கடுமையான உத்தரவை வெளியிடுங்கள்.

345. பின்னர் என்னைத் தூக்குமரத்தினடியில் கொண்டுபோய் நிறுத்துங்கள். அப்போது எனக்காக உங்களிடம் யாராவது மன்றாடட்டும்.

இந்தக் காரியத்தை ஜனங்கள் கூடும் நான்கு முக்குச் சந்தியில், யாவருக்கும் பிரகடனப்படுத்திவிட்டுச் செய்யுங்கள்.

பின்னர் (என்னை மன்னித்து) உங்கள் சமூகத்தை விட்டுத் தூரமான இடம் எதற்கும் ஓடிவிடுமாறு உத்தரவிடுங்கள். நான் கிறிஸ்தவர்களிடம் சென்று விஷமம் உண்டாக்கிக் குழப்பத்தை ஏற்படுத்துகிறேன்.

### கிறிஸ்தவர்களிடம் குழப்பம் உண்டாக்கிய மந்திரி

அப்போது நான் அவர்களிடம் சொல்கிறேன்: "அந்தரங்கத்தில் நான் ஒரு கிறிஸ்தவன்தான். மறைவான சகலவற்றையும் அறிந்தவனான இறைவா, நீயே என்னை நன்கு அறிவாய்!

என் கிறிஸ்தவ விஸ்வாசத்தை அறிந்த அரசன் வெறியுடன் என் உயிரையே குடிக்கத் துணிந்தான்.

350. நான் என் மார்க்கத்தை மறைத்து வைத்து அவன் மார்க்கத்தைப் பின்பற்றுபவன்போல் காட்டிக் கொள்ளமுயன்றேன்.

ஆனால், அரசன் என் அந்தரங்கத்தை எப்படியோ அறிந்து கொண்டுவிட்டான். (எனவே, நான் அவன்முன் நின்றபோது) அரசன் என் வார்த்தையை நம்பவில்லை.

அவன் சொன்னான்: "உன் பேச்சு ரொட்டியில் ஊசி ஏற்றுவது போல் இருக்கிறது. என் இதயத்துக்கும் உன் இதயத்துக்கும் இடையில் ஜன்னல் ஒன்றுண்டு.

அந்த ஜன்னல் மூலமாக உன் (யதார்த்த) நிலையை நான் கண்டுகொண்டுவிட்டேன். உன் மன நிலை யாது என்று நான் காண்கிறேன். எனவே, உன் பேச்சை நான் ஏற்கமுடியாது."

*ஏசுவின் ஆவி மட்டும் உனக்கு உறுதுணையாக நின்றிராவிடின், அவன் யூதர்களின் வழக்கப்படி என்னைப் பல துண்டுகளாகக் கிழித்துப்போட்டிருப்பான்.*

*355. ஏசுவுக்காக நான் என் உயிரைக் கொடுக்கவும் என் தலையைப் பணயம்வைக்கவும் - அவருக்குச் சகல வகையிலும் கடமைப்பட்டவனாக - ஆயத்தமாகவிருந்தேன்.*

*ஏசுவுக்காக என் உயிரைக் கொடுக்க நான் தயங்கவில்லை. ஆனால், அவர் மார்க்கத்தைப் பூரணமாக அறிந்தவன் நான்.*

*(எனவே), துயரம் என்னை ஆட்கொண்டது. இந்தப் புனித மார்க்கம் (அதை) அறியாதவர்களிடை அழிந்துபடுவதா என்று வேதனைப்படலானேன்.*

*என்னை இந்த மார்க்கத்துக்கு வழிகாட்டியாக்கிய இறைவனுக்கும், ஏசுநாதருக்கும் சர்வ புகழும் உரித்தாகும்.*

*"யூதர்களையும், அவர்களுடைய மார்க்கத்தையும் விட்டு (முற்றும்) தப்பியவனான நான், என் இடுப்பைக் (கிறிஸ்தவக்) கச்சையால் வரிந்து கட்டிக்கொண்டுள்ளேன்.*

*360. இது ஏசுநாதரின் யுகம்! மனிதர்களே! அவர் மார்க்கத்தின் அந்தரங்கங்களை உணர்ந்தவர்களாக உங்கள் ஆத்மாக்களை விழிப்படையச் செய்யுங்கள்." (இப்படியெல்லாம் தான் கிறிஸ்தவர்களிடையே போய் அவர்களுடைய நம்பிக்கைக்கு உரியவனாகி, அவர்களை வழிகெடுத்துவிடுவதாக அந்த மந்திரி அரசனிடம் விவரித்தான்.)*

*எனவே, அவன் யோசனைப்படி அரசன் அவனை அங்கஹீனப் படுத்திவிட்டான். இந்த மறைவான (மர்மத்) திட்டம் கண்டு ஜனங்கள் திகைப்படைந்தனர்.*

*அரசன் அவனைக் கிறிஸ்தவர்கள் இருந்த இடத்துக்கு விரட்டிவிட்டான். அதன்பின் அவன் (மந்திரி) கிறிஸ்தவர்களிடையே தன் (விஷமப்) பிரசாரத்தைத் தொடங்கினான்.*

### மந்திரியால் ஏமாற்றமடைந்த கிறிஸ்தவர்கள்

*சிறிது சிறிதாக அவன் தங்கியிருந்த இருக்கையில் ஏராளமான கிறிஸ்தவர்கள் வந்து குழுமலாயினர்.*

*அவர்களுக்கு அவன் சுவிசேஷத்தின் மர்மங்களையும் கச்சையையும், பிரார்த்தனையையும் போதிக்கலானான்.*

365. வெளிப்படையில் (மார்க்கத்தின் நியதிகளை ஏவல் விலக்கல்களை) அவன் விளக்கினான். ஆனால், அந்தரங்கத்தில் அவன் வேடன் எழுப்பும் பறவையொலியாகவும், கண்ணியாகவுமே விளங்கினான்.

இதனாலேயே நபி பெருமான் (ஸல்) அவர்களுடைய நற்றோழர்கள் சிலர் நபிபெருமானாரிடம் கீழான மனத்தின் ஏமாற்றும் இயல்புபற்றித் தங்களுக்கு விளக்க வேண்டும் என்று வேண்டினர்.

"தொழுகை, ஆத்மீக அப்பியாசங்கள் ஆகியவற்றில் எத்தகைய சுயநலப் பாங்கை அது கலந்துவிட முடியும்?" என்றும் வினவினர்.

அவர்கள் பயபக்தியின் (தக்வாவின்) மாண்பை விளக்குமாறு கேட்டனரேயன்றி, புறத்தேயுள்ள குறைபாடுகளைப்பற்றிக் கேட்கவில்லை.

கிர்பஸ் மலரிலிருந்து ரோஜாவைப் பகுத்தறிவதுபோல, அணுஅணுவாக, மயிர்க்கால் மயிர்க்காலாகக் கீழான மனத்தின் (நப்ஸின்) ஏமாற்றும் இயல்பை அவர்கள் அறிந்திருந்தனர்.

370. நபிபெருமானாரின் நற்றோழர்களில் மிகவும் விழிப்பான (பேணுதலான)வர்கள்கூடக் கேள்வி கேட்பவர்களுக்கு நபிபெருமான் (ஸல்) அவர்கள் தரும் எச்சரிக்கையைக் கேட்டு மனம் சோர்ந்துபோவதுண்டு.

### கிறிஸ்தவர்கள் மந்திரியைப் பின்பற்றல்

அவன் (மந்திரி) சொல்வதன் பக்கல் கிறிஸ்தவர்கள் மனந்திரும்பியவர்களாயினர். எதையும் சிந்தித்து முடிவுகட்டச் சக்தியற்ற சாதாரண ஜனங்கள் ஒன்றைப் பின்பற்றுகிறார்கள் என்றால் அதில் விஷேசம் ஏதும் இருந்துதான் ஆகவேண்டும் என்பதில்லையே!

அவர்கள் தங்கள் இதயங்களில் அவன் மீது அன்பை ஊன்றினர். அவன் ஏசுநாதரின் பிரதிநிதி என்றே கொண்டாடினர்.

அந்தரங்கத்திலோ அவன் ஏசுபெருமானின் பகைவன் (தஜ்ஜால்-ஒற்றைக் கண்ணன்) ஆகவே விளங்கினான். இறைவா, (கஷ்டத்திலிருப்பவர்களின்) அபயக்குரல் கேட்டு அவர்களுக்கு உதவியளிக்கும் நீ எத்தகைய பேருதவியாளன்!

இறைவா, (எங்கள் பாதையில்) தானியமணிகள் தூவப்பட்ட எண்ணற்ற கண்ணிகளும், வலைகளும் விரிக்கப்பட்டுள்ளன;

*நாங்கள் பசியால் தவிக்கும் பேராசைபிடித்த பறவைகள் போன்றிருக்கின்றோம்.*

*375. கணத்துக்குக் கணம் நாங்கள் ஒவ்வொருவருமே ஒரு ராஜாளி அல்லது சீமுர்க் (என்ற ராஜபறவை) ஆக இருந்தும் புதியபுதிய கண்ணியில் விழுந்துவிடுபவர்களாக இருக்கிறோம்.*

*தேவைகளேயில்லாப் பராபரா, ஒவ்வொரு கணமும் நீ எங்களை விடுவித்தருள்கிறாய். நாங்களோ மீண்டும் மீண்டும் ஏதேனும் ஒரு கண்ணியில் போய் மாட்டிக்கொள்கிறோம்.*

*நாங்கள் தானியங்களைக் குதிரில் போட்டுவைக்கிறோம்.. இப்படிச் சேமித்து வைத்த தானியங்களை பின்னர் இழந்து விடுகிறோம்.*

*(ஏன்,) இவ்விதம் தானியங்களுக்கு உண்டாகும் நஷ்டம் எலியால் விளைவதுதான் என்று நாம் புத்திசாதுரியமாகக் கண்டறிகிறோமா?*

*நமது குதிரில் எலி ஒரு பொந்து உண்டாக்கிவிடுகிறது; நமது குதிர் அதன் வேலையால் பாழ்பட்டுவிடுகிறது.*

*380. ஆத்மாவே, முதலில் எலியின் விஷமத்தைத் தவிர்த்துக் கொள்! பின்னர் தானியங்களைச் சேகரிப்பதில் கவனஞ் செலுத்து!*

*"எந்த வணக்கமும் அதில் மனம் ஈடுபடாத நிலையில் பூரண மாகாது" என்ற சர்தார்களுக்கெல்லாம் சர்தாராணவர்களின் (நபிபெருமானாரின்) மணிமொழியைச் சிந்தனைசெய்!*

*நமது குதிரில் திருடும் எலி இல்லையாயின் நாற்பது ஆண்டு களாகச் சிரமப்பட்டு (தொழுகையால்) சேமித்த தானியம் எங்கே?*

*நம் (வணக்கங்களின்) அன்றாட சித்தசுத்தி சிறிது சிறிதாக நமது இந்தக் குதிரில் சேர்த்துவைக்கப்படாதது ஏன்?*

*(நற்செயல்கள் என்ற) இரும்பிலிருந்து எத்தனையோ விண்மீன்கள் (சுடர்கள்) வெளிப்பட்டுள்ளன. எரியும் இதயம் அதை ஏற்று உள்ளே இழுத்துக்கொண்டுள்ளது.*

*385. ஆனால், இருளிலே மறைவான திருடன் ஒருவன் அந்த விண்மீன்கள் மீது விரலை நீட்டுகிறான்.*

*அந்த விண்மீன்களை ஒவ்வொன்றாக அணைத்துவிட்டால் (ஆத்மீக) வானிலே எந்த வெளிச்சமும் இல்லாது போகும்.*

*எங்கள் காலடியில் ஆயிரமாயிரம் கண்ணிகள் இருப்பினும் நீ எம்மோடிருப்பின் எந்தக் கஷ்டமும் இல்லை.*

ஒவ்வோர் இரவும் நீ உடலின் கண்ணியிலிருந்து ஆத்மாக்களை விடுவிக்கிறாய்; (மனம் எனும்) பலகையில் உண்டாகும் எண்ணப் பதிவுகளை அழித்தும்விடுகிறாய்.

ஒவ்வோரிரவும் ஆத்மாக்கள் இந்தக் கூண்டிலிருந்து விடுதலை பெறுகின்றன; அவை யாரையும் ஆட்சி செய்யாமலும், யாராலும் ஆட்சி செய்யப்படாமலும் சுதந்தரமானவையாகின்றன.

390. இரவில் கைதிகள் நமது சிறைச்சாலைபற்றிய நினைவற்று விடுகின்றனர்; இரவில் அதிகாரிகள் தங்கள் அதிகாரத்தைப்பற்றி நினைவற்று விடுகின்றனர்.

துயரமில்லை; லாப நஷ்டம் பற்றிய சிந்தனையில்லை; இவன் அவன் என்ற வேட்கையில்லை.

நித்திரையற்ற நிலையிலும் இதுவே மெய்ஞானியின் (ஆரிபின்) நிலையாகும். "அவர்கள் தூங்கும் போதே (அவர்கள் விழித் திருப்பதாக நீ கருது;)[1] இதில் அவநம்பிக்கை கொள்ளாதே!" என்று இறைவனும் அருளியுள்ளானன்றோ!

இறைவனின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட ஓர் எழுதுகோல் போல், இம்மையின் விவகாரங்கள் சம்பந்தப்பட்டவரை அவர் அல்லும் பகலும் துயில்பவராகவே இருக்கிறார்.

எழுதுவதில் (எழுதுகோலையன்றி அதைப் பிடித்திருக்கும்) கையைக் காணாதவன் பேனா தானாக எழுதிக்கொண்டுபோகிறது என்று எண்ணுவான்.

395. மெய்ஞானியின் (ஆரிபின்) இந்த நிலையின் அம்சங்களை இறைவன் வெளிப்படுத்திக் காட்டியுள்ளான்.; ஆனால் மதிநுட்பமோ புலன்களின் தூக்கத்திற்கு ஆளாகிக்கிடக்கிறது.

விவரிக்க இயலாப் பாலையிலே அவர்களுடைய ஆத்மாக்கள் சென்று உழல்கின்றன; அவர்களுடைய உடலும் சக்திகளும் ஓய்வு கொள்கின்றன.

ஒரு தடவை குரல் எழுப்புவதன்மூலம் மீண்டும் அவர்களை அவர்களுடைய கண்ணிகளுக்குள் திரும்பும்படி செய்துவிடலாம்; (அதன்மூலம்) அவர்கள் நீதியின் முன்னும், நீதிவானின் முன்னும் நிற்க வேண்டியவர்களாகவும் ஆகிவிடுவார்கள்.

இஸ்ராபிலைப்போல கிழக்கு வெளுக்கச் செய்பவன் அவர்கள் யாவரையும் அந்த (ஆத்மீக) உலகிலிருந்து இந்த ஜடங்களின் உலகுக்கு கொண்டுவருகிறான்.

---

1. பார்க்க : குர்ஆன் 18 : 18

(உடலைவிட்டு) அப்பாலாக்கப்பட்ட ஆத்மாக்களை அவன் (இறைவன்) ஆட்கொண்டு, மீண்டும் அவற்றைச் செயல்பட வைக்கிறான்.

400. ஆத்மாக்கள் சவாரிசெய்யும் குதிரையை அவன் சேணமற்றதாக்குகிறான்; "தூக்கம் மரணத்தின் சகோதரன்" என்ற நபி மொழியின் தாத்பரியம் இதுதான்.

ஆனால், பகலில் அவை திரும்புவதற்காக அவற்றின் காலை முளையொன்றில் நீளமான கயிற்றால் கட்டிப் போட்டுவைக்கிறான்.

அதன்மூலம் பகலில் அந்தப் புல்வெளியிலிருந்து திருப்பி விரட்டப்பட்டு, மேய்ச்சல் நிலத்திலிருந்து திரும்பிச் சுமையை ஏற்கச் செய்யப்படுகிறது.

இந்த ஆத்மாவை குகையின் தோழர்களைப்போல ('அஸ்ஹாபுல் கஹ்ஃ'பைப்போல)வோ, நூஹு நபியின் கப்பலைப் போலவோ அவன் பாதுகாப்பின்,

இந்த மனத்தையும், கண்ணையும், காதையும், விழிப்புநிலை, தன்னுணர்வு ஆகிய வெள்ளத்திலிருந்து விடுதலை செய்திருப்பின்.. .....

405. ஆஹா, இவ்வுலகில் இந்த நேரத்தில் உன்னையன்றி இன்னும் 'குகையின் தோழர்கள்' பலர் உன்முன் உள்ளனர்.

குகை அவர்களோடு உள்ளது; நேயன் அவர்களோடு உரையாடிக்கொண்டிருக்கிறான். ஆனால், உன் காதுகள் மீதும், கண்கள் மீதும் முத்திரை வைக்கப்பட்டுள்ள நிலையில் அதனால் (அந்த உரையாடலால்) நீ பயனடைவதெங்கே?

### லைலாவைக் கண்ட கலீபா

லைலாவைச் சந்திக்கநேர்ந்த கலீபா லைலாவிடம் கேட்டார், "மஜ்னூன் மதி மயங்கி வழிதவறிப் போகக் காரணமானவள் நீ தானா?" என்று.

(அவள் ஆம் எனவே) "நீ மற்ற அழகிகளைவிடச் சிறந்தவளல்லவே!" என்றார். லைலா சொன்னாள்: "சும்மா இரும்! (அதை முடிவு கட்ட) நீர் மஜ்னூன் அல்லவே!"

இம்மையின் சுகபோகங்கள் விஷயத்தில் விழித்தவர்களாக இருப்பவர்கள் (ஆத்மீக உலகின் விஷயத்தில்) அதிகமும் தூங்குபவர்களாவர். இவர்கள் விழித்திருப்பது இவர்கள் தூங்குவதை விடவும் மோசமானதாகும்.

410. நம் ஆத்மா இறைவனிடம் விழிப்புடையதாக இல்லாவிடின், நம் விழிப்பு என்பது (தெய்வ அனுக்கிரகம் உள்வராதபடி) நம் கதவை மூடிக்கொள்வதையே ஒக்கும்.

நாள் முழுவதும் பகற்கனவு காணும் பிரமையாலோ, லாப நஷ்டம் ஆகிய சிந்தனைகளாலோ, நசிவு பற்றிய பயத்தாலோ,

அதற்கு (ஆத்மாவுக்கு) இன்பமோ, காம்பீர்யமோ, பெருமையோ, வானை நோக்கி உயரும் வழியோ கிடைக்காது போகிறது.

ஆத்மீக விவகாரங்களில் தூங்கிவிடுபவன் வீணான மனப் பிரமைகளை நம்பி, அவற்றுடன் உறவு கொண்டுழல்கிறான்.

அந்தத் தூக்கத்தில் மாய மங்கையைக் காண்கிறான்; அவள் மீது மோகங்கொண்டு அவளோடு கூடுகிறான்.

415. ஒன்றுக்கும் உதவாத உவர் மண்ணில் தன் வம்ச விருத்திக்கான விதையை ஊன்றியதும் விழிப்படைகிறான். அந்தப் பிரமை - மாயப்பெண்ணின் தோற்றம் - அவன் மனத்தை விட்டகல்கிறது.

அந்தக் கலவியால் அவன் சிரசில் கனமும், உடலில் அசுத்தமும் உண்டாகின்றன. அந்த மாயப் பெண்ணை எண்ணி ஏங்கியதுதான் மிச்சமாகிறது.

உயரே பறவை பறக்கிறது; கீழே தரையில் அதன் நிழலும் ஒரு பறவை பறப்பதைப் போலவே அதைத் தொடருகிறது.

மூடன் ஒருவன் அந்த நிழலை (பறவையென்று எண்ணிக்) களைப்படையும் வரை அதைத் துரத்திக்கொண்டு ஓடுகிறான்.

வானில் பறக்கும் பறவையின் நிழல் அது. அந்த நிழலின் மூலஸ்தானம் வேறு என்று அறியாத அறிவீனன் அவன்.

420. அவன் அந்த நிழல் மீது அம்பெய்கிறான். (அதன் மீது எய்து எய்து) அவனுடைய அம்பறாத் தூணியே காலியாகி விட்டது.

அவன் வாழ்க்கையின் அம்பறாத் தூணி காலியாகிவிட்டது; அந்த நிழலைத் துரத்திக் கொண்டு ஓடி ஓடி அவன் வாணாளே (வீணாய்க்) கழிந்துவிட்டது.

ஆனால், இறைவனின் நிழல் அவன் தாதியானால் அது அவனைச் சகலவிதமான பைசாசங்களின் நிழல்களிலுமிருந்து காப்பாற்றுகிறது.

இறைவனின் நிழலாய் இருப்பவர் யார் எனின் இம்மையின் விஷயத்தில் மரணித்தவராய், இறைவன் மூலம் ஜீவிப்பவர்தாம்.

*ஐயமின்றி விரைந்து, அவர் முன்றானையைப் பற்றிப் பிடித்துக்கொள்! அதன்மூலம் (உலகின்) அந்திம காலத்தின் முன்றானையில் நீ பாதுகாக்கப்பட்டவனாகலாம்.*

*425. அவன் எவ்விதம் நிழலை நீளச்செய்கிறான்* [1] என்று திருமறையில் குறிப்பிடப்பட்டுள்ள நிழல், நாதாக்களின் உருவமேயாகும். அவைதாம் தெய்வீகச் சூரியனை அடைய வழி காட்டுபவையாகும்.

இந்தப் பள்ளத்தாக்கில் இத்தகைய வழிகாட்டியின்றி நடக்கவேண்டாம். (இப்ராஹீம்) கலீலைப்போல் *"அஸ்தமிப்பவைகளை நான் நேசிக்கவில்லை"*[2] என்று கூறிவிடு!

போ, நிழலிலிருந்து சூரியனையே பற்றிப் பிடி! (ஆத்மீக) அரசனின், ஷம்ஸெ - தப்ரீஜியின், முன்றானையைப் பற்றிப்பிடி!

இந்த மண விருந்து மண்டபத்துக்கான பாதையை நீ அறிந்திராவிடின் அதுபற்றி 'ஜியாவுல் ஹக்' (இறைவனின் பிரகாசம்) ஆன ஹுஸாமுத்தீனிடம் கேள்!

வழியில் பொறாமை உன் கழுத்தைப் பற்றினால், பொறாமையில் வரம்பு மீறுவது இப்லீஸின் கூட்டத்தில் சேர்த்துவிடும் என்பதை உணர்ந்து விலகிக்கொள்!

430. அவன் (இப்லீஸ்) தன் பொறாமை காரணமாகத்தான் ஆதம்(அலை) அவர்களை இகழ்ச்சியாகக் கருதினான்; பொறாமையாலேயே பேரின்பத்தோடு போராடுகிறான்.

(ஆத்மீகப்) பாதையில் இதைவிடக் கடினமான கணவாய் வேறு எதுவுமில்லை. பொறாமையைத் தோழமை கொள்ளாதவனே பாக்கியசாலியாவான்.

இந்த உடல் பொறாமையின் வீடாகும் என்பதையும், இதிலுள்ள பொருள்கள் பொறாமையால் மாசுபட்டவை என்பதையும் நீ உணரவேண்டும்.

உடல் பொறாமையின் புகலிடமாயினும், இறைவன் அதை மிகவும் பரிசுத்தமானதாகவே படைத்துள்ளான்.

*'இரட்டையர்களே, என் வீட்டைச் சுத்தமாக்குங்கள்'*[3] என்ற திருவசனம் அந்தப் பரிசுத்தத்தை விளக்குவதுதான். பரிசுத்த இதயம் தன் தாயத்தைப் பொறுத்தவரை இம்மண்ணுலகைச் சேர்ந்ததாயினும், (தெய்வீக) ஒளி மிளிரும் பொக்கிஷமாகும்.

---

1. குர்ஆன் 25 : 45   2. குர்ஆன் 6 : 76   3. பார்க்க குர்ஆன் 2 : 125

*435. பொறாமையற்ற ஒருவன் மீது நீ பொறாமை கொண்டால் உன் இதயத்தில் அந்தப் பொறாமையால் கறுப்புக் கறைகள் உண்டாகின்றன.*

*தெய்வ நேயர்களின் காலடியில் நீ தூசியாக ஆகிவிடு; நாம் செய்வதுபோல் நீயும் பொறாமையின் தலையில் மண்ணை வாரிப்போடு!*

**மந்திரியின் பொறாமை**

*அந்த அற்ப மந்திரி பொறாமையிலிருந்து உண்டானவன்; எனவே, தன் சளுக்கத்தன்மை காரணமாகத் தன் காதையும் மூக்கையும் காற்றில் விட்டான்.*

*அதன்மூலம் அப்பாவிகளின் (கிறிஸ்தவர்களின்) ஆத்மாக் களில் பொறாமையின் கொட்டுதலால் விஷத்தைச் சேர்க்கலாம் என அவன் நம்பினான்.*

*பொறாமையால் தன் மூக்கை உடைத்துக்கொள்பவன், தன்னைக் காதும் மூக்கும் (ஆத்ம உணர்வும் செவியும்) இல்லாத வனாக ஆக்கிக் கொள்பவன்தான்.*

*440. மூக்கும் ஒரு மணத்தைப் பற்றிப்பிடிக்கும்; அந்த மணம் அது வரும் இடத்துக்கு (ஆத்மீக உண்மைக்கு) இட்டுச் சென்று விடும்.*

*வாசனை உணர்வற்றவன் மூக்கற்றவனாவான்; (இங்கே குறிக்கப்பட்ட) மணம் சமயச் சார்புள்ள மணமாகும்.*

*ஒரு மணத்தைப் பெற்றவன் அதற்காக நன்றி காட்ட வில்லையானால், அந்த நன்றியற்ற தன்மை தலைதூக்கி அவன் மூக்கை உண்டுவிடுகிறது. (அவனுக்கு ஆத்ம உணர்வுபெறுவதற்கான சாதனத்தை அழித்தொழித்து விடுகிறது.)*

*இறைவனுக்கு நன்றி செலுத்துபவர்களின் அடிமையாய் இரு; அவர்கள் முன்னிலையில் மரணித்தவன்போல் மௌனமாய் இரு; நிலைத்து நில்!*

*அந்த மந்திரியைப்போல் பித்தலாட்டத்தைத் தொழிலாகக் கொள்ளாதே! கடமையான வணக்கங்களைவிட்டு ஜனங்களை அப்பால் திருப்பிவிடாதே!*

*445. விஷமியான மந்திரி (தோற்றத்தில்) ஓர் உண்மையான மதகுருவாக ஆகிவிட்டான். (ஆனால்) அவன் கபடமாகப் பாதாம் ஹல்வாவில் வெள்ளைப் பூண்டைக் கலந்துவிட்டான்.*

## கிறிஸ்தவர்களில் நிதான புத்தி படைத்தவர்கள் மந்திரியின் நயவஞ்சகத்தை உணரல்

(ஆத்மீகத்) தன்னுணர்வுள்ளவர்கள் அவன் வார்த்தைகளில் இனிப்புடன் கசப்பு ஊடாடக் கண்டனர்.

அவன் (தீய விஷயங்களுடன்) கலப்பான அரிய விஷயங்களை யும் சொல்லலானான்; ஆண்மையும் மதுரமும் நிறைந்த ஷர்ப்பத்தில் சிறிது விஷத்தைச் சேர்த்தான்.

வெளிப்படையில், "மார்க்கத்தில் விழிப்புடன் இரு" என்று அவன் கூறினானாயினும், அது யதார்த்தத்தில் ஆத்மாவை நோக்கி, "தளர்ச்சியடை!" என்று கூறியதாகவே இருந்தது.

வெள்ளியின் வெளிப்பரப்பு வெண்மையாகவும் புதிதாகவும் இருந்ததாயினும், அது பட்ட கைகளும், உடையுமே கறுப்பாகி விட்டன.

450. நெருப்பில் செந்நாக்கு நீட்டும் சுடர் (வெளிச்சம் தருவதாகவே பட்டதாயினும்) தன் சொல்லில் இருண்டவிதமாய் நடந்துகொள்வதைப்பார்!

பார்வைக்கு மின்னல் பிரகாசமுடையதாகத் தோன்றினும் உண்மையில் அது பார்வையைப் பறிக்கும் கொள்ளைக்காரனாகவே விளங்குகிறது.

பகுத்தறிய இயன்ற, விழிப்பான(கிறிஸ்த)வர்கள் சம்பந்தப் பட்டவரை, மந்திரியின் வார்த்தைகள் தமது கழுத்தில் பூட்டப்பட்ட விலங்குபோலவே காணப்பட்டது.

அரசனைவிட்டு விலகி ஆறு ஆண்டுகள் தனித்திருந்த மந்திரி கிறிஸ்தவர்களின் புகலிடமானான்.

ஜனங்கள் தமது மார்க்கத்தையும், இதயத்தையுமே பூரணமாக அவனிடம் பறிகொடுத்துவிட்டனர். அவன் கட்டளையிட்டால் அவர்கள் உயிர் தரவும் ஆயத்தமாகிவிட்டனர்.

## மந்திரிக்கு அரசனின் இரகசிய லிகிதம்

455. அவனுக்கும் அரசனுக்குமிடையில் செய்திப் போக்கு வரத்து நடந்தது; அந்தரங்கத்தில் அவனிடமிருந்து அரசனுக்கு ஆறுதல் தரும் செய்தி வந்துகொண்டிருந்தது.

அரசன் அவனுக்குப் பதில் எழுதினான், "என் அதிர்ஷ்ட சாலியே, காலம் வந்துவிட்டது; விரைவிலேயே என் மனத்தை நிம்மதியடையச் செய்!" என்று.

அவன் பதிலளித்தான், "அரசே, ஏசுவின் மார்க்கத்தில் குழப்பங்கள் உண்டாக்க நான் ஆயத்தங்கள் செய்துகொண்டிருக்கிறேன்" என்று.

## கிறிஸ்தவர்களில் பன்னிரு பிரிவினர் உண்டான விதம்

கிறிஸ்தவர்களிடை அவர்களை ஆட்சி செய்துவந்த பன்னிரண்டு அமீர்கள் இருந்துவந்தனர்.

ஒவ்வொருவரையும் ஒரு கூட்டத்தார் பின்பற்றி வந்தனர். ஒவ்வொரு கூட்டமும் தத்தம் அமீரிடம் விஸ்வாசமுடையதாய் இருந்தது.

460. இந்தப் பன்னிரண்டு அமீர்களும் அவர்களைப் பின்பற்றிய ஜனங்களும் தீய திட்டக்காரனான மந்திரியின் அடிமைகளாகவே அவனுக்குப் பலியாகி விட்டனர்.

அவர்கள் யாவரும் அவன் வார்த்தையில் நம்பிக்கை கொண்டனர்; அவன் வழிமுறையைத் தங்களுக்கு ஆதர்ஸமானதாக ஆக்கிக் கொண்டனர்.

அந்த அமீர்களில் யாரேனும் ஒருவரை நோக்கி, 'ஒரு குறித்த நேரத்தில், இடத்தில், நீ உயிர்விட வேண்டும்' என்று அவன் பணிப்பானேல் அவ்விதம் உயிர்விட அவர்கள் யாவரும் ஆயத்தமாயிருந்தனர்.

## வேதாகமத்தில் மந்திரியுண்டாக்கிய குழப்பம்

அவன் அமீர்கள் ஒவ்வொருவருக்கும் ஓர் ஏட்டைத் தயாரித்தான். அவை ஒவ்வொன்றிலும் ஒன்றுக்கு ஒன்று முரணான உத்தரவுகள் எழுதப்பட்டிருந்தன.

அந்த உத்தரவுகள் ஓர் ஏட்டிலிருந்தது மறு ஏட்டிலிருந்ததற்கு எழுத்துக்கு எழுத்து நேர் மாற்றமானதாய் இருந்தன.

465. அவற்றில் ஒன்றில் பச்சாதாபத்துக்குத் துறவும், பசித்திருப்பதுமே அடிப்படையாகும் என்றும், அவையே மனந்திருப்ப அவசியமானவை என்றும் அவன் எழுதியிருந்தான்.

இன்னொன்றில், "துறவால் பயனொன்றுமில்லை; இந்த மார்க்கத்தில் தயாளத்தையன்றி வேறு எதனாலும் விமோசனமில்லை" என்று அவன் எழுதியிருந்தான்.

வேறு ஒன்றில், "உங்கள் பசியும், தயாளமும் அவனோடு பிறவஸ்துக்களை இணைவைப்பதாகும்; அவன் மட்டுமன்றோ உங்கள் வணக்கத்தின் குறிக்கோளாக இருக்க வேண்டும்!

இறைவனிடம் நம்பிக்கையும், துயரத்திலும் மகிழ்விலும் பரிபூரணமான பரஞ்சாட்டுதலும் தவிர மற்ற யாவும் ஏமாற்றும், உங்களை அகப்படுத்தும் கண்ணியுமாகவே உள்ளன" என்று எழுதப்பட்டிருந்தது.

வேறு ஒன்றில், "புற வணக்கங்களை அனுசரிப்பது உங்கள் கடமையாகும்; இன்றேல், அவன்மீது பரஞ்சாட்டியதாக எண்ணுவதே ஐயத்துக்கு இடப்பாடானதாகிவிடும்" என்று எழுதப்பட்டிருந்தது.

470. இன்னொன்றில், "(தெய்வீக) ஏவல்களும், விலக்கல்களும் உள்ளன; ஆனால், அவை நாம் அனுஷ்டிப்பதற்காக அல்ல; (அவற்றை நாம் அனுஷ்டிக்க இயலாது என்ற) நமது இயலாமையைக் காட்டுவதற்குத்தான்.

இதன்மூலம், நாம் நம் பலவீனத்தை உணர்ந்து, தெய்வத்தின் சக்தியை விளங்கிக்கொள்ள வேண்டும்" என்று எழுதப்பட்டிருந்தது.

வேறு ஒன்றில், "உங்கள் பலஹீனத்தைப் பொருட்படுத்த வேண்டாம்; அந்தப் பலஹீனம் நன்றியற்ற செயலாகிவிடும், எச்சரிக்கை!

உங்கள் பலத்தைப் பொருட்டாக மதியுங்கள்; ஏனெனில் இந்தப் பலம் இறைவனிடமிருந்து வருவதாகும். உங்கள் சக்தி 'ஹூ' ஆகிய அவனுடைய சம்மானமாகும்" என்று எழுதப்பட்டிருந்து.

ஒன்றில், "இவ்விரண்டையும் ஒதுக்கிவிடுங்கள். பார்வையில் நிற்பது எதுவாயினும் அது விக்ரஹம்தான் (பலதெய்வ வழிபாடு போன்றதுதான்)" என்று எழுதப்பட்டிருந்தது.

475. இன்னொன்றில், "(பார்வையெனும்) இந்த விளக்கை அணைத்துவிடாதே! ஏனெனில், இந்தப் பார்வை என்பது (பாதையில் வெளிச்சங்காட்டி அகமியத்தில்) ஏகாக்கிரச் சித்தமடைய உதவும் விளக்காகும்.

பார்வையையும், பிரமையையும் நீங்கள் ஒதுக்கியதும், நள்ளிரவிலேயே விளக்கை அணைத்துவிட்டவர்களாவீர்கள்" என்று எழுதப்பட்டிருந்தது.

வேறு ஒன்றில், "அதை (விளக்கை) அணைத்துவிடுங்கள்; அதற்குப் பகரமாக எண்ணற்ற தோற்றங்களைக் காணநேருமே என்று அஞ்சவேண்டாம்!

*அதை அணைப்பதன்மூலம், ஆத்மாவின் விளக்கின் சக்தி கூடுகிறது. நீங்கள் 'தன்னை' மறுப்பதன்மூலம் ஆத்மாவின் விளக்கின் சக்தி கூடுகிறது. நீங்கள் 'தன்னை' மறுப்பதன்மூலம் உங்கள் லைலா (காதலி) உங்கள் மஜ்னூன் (காதலன்) ஆகிவிடுவாள்.*

*தன் துறவால் உலகையே உதறித் தள்ளிவிடுபவனிடம் உலகம் அதிகமும் நெருங்கி வரும்" என்று எழுதப்பட்டிருந்தது.*

*480. இன்னொன்றில், "உங்களுக்கு இறைவன் தந்துள்ளவற்றை அவன் உங்களுக்காக, அடிநாள் தொட்டே இனிமையானவை யாகவே ஆக்கியுள்ளான்.*

*அவை உங்களுக்குச் சுலபமாகக் கிடைக்கவும் அவன் வழி செய்துள்ளான். அவற்றை நீங்கள் மனமுவந்து ஏற்றுக்கொள்ளுங் கள்; நீங்கள் உங்களை வேதனையிடை வீழ்த்திக்கொள்ள வேண்டாம்!" என்று எழுதப்பட்டிருந்தது.*

*வேறு ஒன்றில், "அகத்துக்கு உரிய அனைத்தையும் உதறிவிடு; நீ உன் சுபாவத்தோடு இணங்கி நடப்பது சரியன்று.*

*வேறுபட்ட பாதைகள் (பின்பற்ற) இலகுவானவையாக இருக்கின்றன; ஒவ்வொருவருக்கும் அவரவர் மார்க்கம் உயிர் போன்று (மதிப்புடையதாக) ஆகிவிட்டது.*

*கடவுள் நேரான மார்க்கத்தை இலகுவானதாக ஆக்கி விட்டிருப்பின் யூதனும், நெருப்பு வழிபாட்டுக்காரனும் அவனை (இறைவனை) நன்கு அறிந்துகொண்டிருப்பர்" என்று எழுதப்பட்டி ருந்தது.*

*485. வேறு ஒன்றில், "இதயத்தின் ஜீவனுக்கு ஊட்டமளிக்கும் ஆத்மீக உணவுள்ளது (மட்டுமே) இலகுவானது; பாக்கியமுள்ளது.*

*இயற்கையின் இன்ப நுகர்ச்சிகள் முடிவை நெருங்கியதும், அவை களர் நிலம்போல் எந்தப் புல்பூண்டும், பயிரும் வளரத் தகுதியற்றவையாகி விடுகின்றன.*

*அதனால் கிடைக்கும் மகசூல் பச்சாதாபம் மட்டும்தான்; அதன் விற்றுமுதல் நஷ்டத்தையன்றி வேறு எதுவுமே இல்லை.*

*கடைசியில் அது இலகுவானதாய் இருக்காது; இறுதியில் அதன் (உண்மையான) பெயர் கடுமையானது என்றாகி விடுகிறது.*

*இலகுவானதைக் கடுமையானதிலிருந்து பகுத்தறியுங்கள். முடிவில் இதனுடையவும் அதனுடையவும் நல்லியல்பைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்" என்று எழுதப்பட்டிருந்தது.*

490. வேறு ஒன்றில், "ஓர் ஆசானைத் தேடு! மூதாதையர்களிடமிருந்து பெற்றடைந்த பண்புகளில் முடிவைப்பற்றிய தீர்க்கதிருஷ்டியை ஏற்காதே!

ஒவ்வொரு (கொள்கையுடைய) மதக்கூட்டமும் (தத்தம் ஊகப்படியான) முடிபைத் தீர்க்கதிருஷ்டியில் கண்டன. அதன் பயனாய்த் தவிர்க்க முடியாதபடி அவை தவற்றின் கைதிகளாயின.

முடிவைப் பற்றிய தீர்க்க திருஷ்டி ஒரு கைத்தறியைப்போல் அத்துணை சுலபமானதன்று; இன்றேல், மதங்களிடை வேற்றுமைகள் இருப்பதெப்படி?" என்று எழுதப்பட்டிருந்தது.

வேறு ஒன்றில், "நீயே ஆசான்; காரணம், நீ ஆசானை அறிந்துள்ளாய்.

மனிதனாய் இரு; மனிதனுக்கு அடிமைப்பட்டவனாய் இராதே! போ, உன் பாதையை நீயே வகுத்துக்கொள்! (வழிகாட்டியைத் தேடி அலைந்து மதிமயங்கித்) தலை கிறுகிறுக்கும் ஒருவனாக இருக்காதே" என்று எழுதப்பட்டிருந்தது.

495. இன்னொன்றில், "இந்தப் (பெருக்கமாகிய) பலவெனும் நிலையே ஒன்றுதான். இரண்டைப் பார்ப்பவன் (உண்மையில்) மாறுகண்ணுடையவனேயாவான்" என்று எழுதப்பட்டிருந்தது.

மற்றொன்றில், "நூறு ஒன்றாய் இருப்பதெப்படி? இவ்விதம் நினைப்பவன் கிறுக்கனாவான்" என்று எழுதப்பட்டிருந்தது.

இவ்விதம் அவன் எழுதிய கொள்கைகள் ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவையாய் இருந்தன. அவை ஒன்றாய் இருப்பதெப்படி? பாஷாணமும், கற்கண்டும் ஒன்றா என்ன?

கற்கண்டு, பாஷாணம் ஆகிய இரண்டுக்குமுள்ள பாகுபாடுகளைக் கடக்காதவரை ஏகத்துவம், ஒருமை என்ற சுகந்தத்தை முகர்வதெப்படி?

இந்த ரீதியில் ஏசுநாதரின் மார்க்கத்தின் பகைவன் பன்னிரண்டு 'சுவிசேஷங்களை' எழுதித் தள்ளிவிட்டான்.

### இந்த வேற்றுமைகள் இந்தத் தத்துவங்களின் உருவத்தில் உண்டானதேயன்றி பாதையின் யதார்த்த இயல்பால் உண்டானவையல்ல.

500. ஏசுநாதரின் ஏக வர்ணமான தன்மையின் வாசனையையும் அவன் அறியான்; ஏசுநாதரின் (ஏக) நிறச்சாயத் தொட்டியிலிருந்து ஒரு சிறிதாவது அவன் சாயம் பெற்றவனுமல்லன்.

நூறு விதமான வர்ண உடையும் அந்தச் சாயத்தொட்டியில் போட்டுத் துவைக்கப்படுவதால் பிரகாசம் பொருந்திய ஒரே நிறமுடையதாக ஆகிவிடும்.

இது கண்ணைக் கூசச்செய்யும் ஒரே வர்ணம் போன்றதன்று; இது தெள்ளிய தண்ணீரும், (அதில்) மீன்களும் உலவுவது போன்றது.

உலர்ந்த பூமியில் ஆயிரக்கணக்கான வர்ணங்கள் இருப்பினும் காய்ந்த நிலையோடு மீன்கள் போராட்டமே நடக்கின்றன. (தண்ணீரின்றி மீன்கள் வாழ முடியாது.)

என் உவமையில் கண்ட தண்ணீர் யார், மீன் யார்? சர்வ புகழுக்கும் சர்வ சக்திக்கும் உரிய இறைவனை இவற்றில் எதனுடன் தான் உவமிக்க இயலும்?

505. பிரகிருதியில் எண்ணற்ற கடல்களும், மீன்களும் கருணையாளனும், பேருதவியாளனுமான பரமன் முன் அவனைப் போற்றித் துதித்துப் பணிகின்றன.

கடலில் இறைவனின் அருட்கொடையான மழை பெய்து எத்துணையோ முத்துக்கள் சிதறியுள்ளன.

தயாளச் சூரியன்கள் எத்தனையோ பிரகாசித்துக் கடலுக்கும் மேகத்துக்கும் பிறர்க்குதவி செய்யக் கற்றுத்தந்துள்ளன.

அறிவின் ஒளிக்கற்றைகள் எத்தனையோ பூமிமீது களிமண்மீது பட்டு, பூமியும் பண்பட்டு விதையை ஏற்குமாறு செய்துள்ளன.

மண் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட அடைக்கலப் பொருளைப் பேணுகிறது. நீங்கள் அதில் விதைத்தது எதுவாயினும், அதை எவ்வித ஏமாற்றமுமின்றி உங்களுக்கு விளைவித்துத் தருகிறது.

510. அந்தத் தெய்வீக விஸ்வாசத்திலிருந்து இந்த விஸ்வாசத்தை அடைந்துள்ளது; அதனால், நீதமெனும் சூரியன் அதன்மீது பிரகாசித்துள்ளது.

வசந்தம் இறைவனின் நினைவு அடையாளத்தைக் கொண்டு வரும்வரை, மண் தன் இரகசியங்களை வெளிக்குக் கொண்டு வருவதில்லை.

அளவற்ற பேருதவியாளன் பகுத்தறிவற்ற இந்தப் பொருளுக்கு இந்த விபரத்தையும், விஸ்வாசத்தையும், நேர்மையையும் அளித்துள்ளான்.

அவன் கருணை பகுத்தறிவற்ற ஒரு பொருளுக்கு விபரமறிவிக்கிறது; (அதே சமயம்) அவன் கோபம் அறிவு படைத்த மனிதனைக் குருடனாக்கி விடுகிறது.

இதயம் பொங்கும் இந்தப் பரபரப்பை ஆத்மாவும், இதயமும் தாங்க முடியாது. நான் யாரிடம் பேசுவது? இவ்வுலகில் (அறியும் திறம் படைத்த) செவியுடைய ஒரு மனிதனைக்கூடக் காணோமே!

515. செவி படைத்திருந்தவர்கள் அவன்மூலம் கண்களும் உடையவர்களாயினர்; வெறும் கல்லாக இருந்தது அவன்மூலம் வைடூரியக் கல்லாக ஆகிவிட்டது.

அவன் ஒரு ரஸவாதி. (அவன் செயலோடு ஒப்பிடின்) ரஸவாதம் எம்மாத்திரம்! (அவன் நபிமார்களுக்கு) அற்புதங்களை அருளுபவன். (இந்த அற்புதங்களோடு ஒப்பிடின்) மந்திரம் எம்மாத்திரம்!

அவனைப் போற்றுவது (யதார்த்தத்தில்) அவனைப் போற்ற மறந்த நிலைதான்; காரணம், இது (புகழ்வது) என் உள்ளமையின் அத்தாட்சியாகும்; அதுவே ஒரு பாவமுமாகும்.

அவன் உள்ளமையின்முன் நாம் உள்ளமையற்றவர்களாக ஆகிவிடுவதுதான் முறையாகும். அவன் சந்நிதியில் (நமது) உள்ளமை என்பது யாது? நீலமாகவும், குருடாகவும் ஆகிவிடுவது தான்.

அது குருடாய் இல்லாவிடின் அவனால் அது உருகி நீறிப் போயிருக்கும். (தெய்வீகச்) சூரியனின் உஷ்ணத்தை அது கண்டு கொண்டிருக்கும்.

520. அழுது அரற்றி நீலம் பாரித்திராவிடின் (இப்பிரபஞ்சமெனும்) இப்பிரதேசம் பனியைப்போல் உறைந்திருப்பது எப்படி?

### இந்தச் சதியால் மந்திரி நாசத்துக்கு விரைந்த விதம்

மந்திரியும் (யூத) அரசனைப்போல அறிவிலி; பொடுபோக்கானவன்; நிரந்தரமானதுடன், தடுக்க முடியாததுடன் அவன் போராடிக்கொண்டிருந்தான்.

(அவன் போராடியது) ஒரே கணத்தில் நம்முடையதைப் போன்று, முன்னர் இயலாத நூறு வார்த்தைகளை உடனே உண்டாகுமாறு செய்யக்கூடிய ஒரே ஏகனுடன்தான்.

பார்வையில் நம்முடையவைபோன்று நூறு வார்த்தைகளை அவன் (இறைவன்) வெளியில் காட்டுகிறான்; அப்போது (தன் வெளிச்சத்தின்மூலம்) உங்கள் கண்களைப் பார்க்க வைக்கிறான்.

*இவ்வுலம் பரந்ததாகவும் எல்லையற்றதாகவும் உனக்குத் தெரிகிறதெனினும், அந்தச் சர்வ சக்தனுக்கு இது ஓர் அணுவைப் போலவே விளங்குகிறது என்பதை நினைவிலிருத்து.*

*525. இவ்வுலகம் உங்கள் ஆத்மாக்களின் சிறைக்கூடமேதான். இதற்கு அப்பால் செல்லும் திசையில் நடவுங்கள். அதுவே உங்களை உங்களுடைய திறந்த வெளிக்குக் கொண்டு செல்லும்.*

*இவ்வுலகம் வரம்புக்கு உட்பட்டது; யதார்த்தமாகவே, மறுமைதான் வரம்பற்றதாகும். அந்த யதார்த்தத்தை எய்துவதற்கு உருவமும், படிவமும் இடையூறானவையாகும்.*

*பிர்அவ்னின் எண்ணற்ற வாளாயுதங்களை, ஒரே ஒரு கைத்தடியைப் பிடித்திருந்த மூஸா (அலை) அவர்கள் சிதறடித்து ஹதம் செய்துவிட்டார்கள்.*

*ஜாலினூஸ் கற்றிருந்த வைத்தியப் பரிகார முறைகளோ எண்ணற்றவை; (ஆனால்,) ஈஸா நபி (அலை) அவர்களின் (மரணித்தவர்களுக்கு உயிர் தரும்) மூச்சின்முன் அவை வெறும் கேலிக் கூத்தாகிவிட்டது.*

*(இஸ்லாத்துக்கு முந்தியகால அரபிப்) பாடல்கள் எண்ணற்றவை இருந்தன! எழுத்தறிவற்ற ('உம்மி' யான) திருத்தூதர் ஒருவரின்மூலம் வெளியான தெய்வ வசனங்களுக்குமுன் அவை நாணி மறைந்தன.*

*530. சகல வகையிலும் வெற்றிகொள்ளும் வல்லானை எதிர்கொள்ள வேண்டியதிருக்கும் நிலையில் கடையானவனை-கேடுகெட்டவனைத் - தவிர வேறு யாரோ (தனக்குத் தானே) மரணித்தவனாக ஆகிவிடமாட்டான்!*

*(உறுதியும் பலமும் மிக்க) எத்தனையோ மரங்களை அவன் வேரோடு பிடுங்கி எறிந்துள்ளான்; கபடப் பறவையை அவன் அதன் கால்களைத் தலைகீழாகக் கட்டியே தொங்கவிட்டான்.*

*அறிவையும், புலன்களையும் நுண்மையாக்குதல் (சரியான) வழியன்று; (மனத்தில்) உடைந்தவர்களையன்றி வேறு யாரும் அரசனின் கருணாகடாக்ஷத்தைப் பெறுவதில்லை.*

*பணஞ்சேர்க்கும் பேராசையால் (புதையலைத் தேடி நெடுகிலும்) தோண்டித் தோண்டிப் பார்த்து, எருதின் தாடியானவர்கள் (ஏமாற்ற மடைந்தவர்கள்) இந்த வீண் சதிகாரனான மந்திரியின்முன் எம்மாத்திரம்!*

நீ அதன் தாடியாவதற்காக எருதாக ஆவது யார்? மண்ணின் மேலே கிடக்கும் குப்பை கூளமாவதற்காக, மண் ஆவது யார்?

535. தன் தீய செயலால் ஒரு பெண் (வெட்கி) முகம் வெளுத்த போது இறைவன் அவளை வெள்ளியாக (ஜுஹ்ராவாக) மாற்றி விட்டான்.

கீழ்ப்படிய மறுக்கும் குழப்பமானவனே, ஒரு பெண்ணை வெள்ளியாக ஆக்குவது உருமாற்றம் எனின், மண்ணாகவும் களிமண்ணாகவும் ஆவது மட்டும் என்ன?

உன் உணர்ச்சி உன்னை (வானுலகின்) உன்னதமான மண்டலத்துக்குச் சுமந்து சென்றது; நீயோ கீழானதிலும் கீழானவை யான தண்ணீரையும், களிமண்ணையும் நோக்கிச் சென்றாய்.

இந்த வீழ்ச்சியால், வானுலகின் அமரர்களுக்குப் பொறாமை எழும்படியாக நீ அடைந்திருந்த ஜீவித நிலையிலிருந்து உன்னை மாற்றிக் கொண்டுவிட்டாய்.

எனவே, இந்த உருமாற்றத்தின் இயல்பு எத்தகையது என்பதை எண்ணிப்பார்! (பெண்ணின்) இந்த உருமாற்றத்தை ஒப்பிட்டுப் பார்த்தால் உன்னுடைய மாற்றம் மிக மிகக் கடையானதாக இருப்பதைக் காணலாம்.

540. முன்னேறவேண்டும் என்ற உன் ஆசைக் குதிரையை நீ விண் மீன்களை நோக்கி விரட்டினாய். (வானவர்களால்) வணங்கப்பட்ட ஆதம் (அலை) அவர்களை நீ ஏற்றுக் கொண்டாயில்லை.

என்னவிருந்தாலும், நீ ஆதம் (அலை) அவர்களின் புதல்வன்; கடையனே, எத்துணை நாட்கள்தான் நீ கீழான தன்மையைக் கண்ணியமானதாகக் கருதிக்கொண்டிருப்பாய்!

“உலகம் முழுமையையும் நான் வெற்றிகொள்வேன்; இப்பிரபஞ்சம் முழுவதையும் என்னால் நிறைப்பேன்” என்று எத்தனை நாட்கள்தான் நீ சொல்லிக் கொண்டலைவாய்!

உலகம் ஒரு மூலையிலிருந்து மறு மூலைவரை பனியால் நிரம்பப் பெற்றிருப்பினும், சூரியனின் ஒளி ஒரே பார்வையால் அதை உருகியோடச் செய்ய முடியும்.

இறைவன் தன் (கருணையின்) ஒரே சுடரால் இந்த மந்திரியின் பாவச் சுமைகளையும், இவனைப்போன்ற நூறு பேர்களுடையவும், ஆயிரமாயிரம் மந்திரிகளுடையவும் பாவச்சுமைகளையும் அழித்துவிட முடியும்.

545. அந்தப் (பொய்யான) கற்பனையை உண்மை அறிவு மொழியாக அவனால் ஆக்க முடியும்; நஞ்சு சேர்ந்த தண்ணீரைக் குடிப்பதற்கு நல்ல தண்ணீராக ஆக்கக் கூடியவன் அவன்.

ஐயமெழுப்பக்கூடியதை அவன் திட்டமானதாக ஆக்கினான்; வெறுப்புக்கான காரணங்களிலிருந்து அதீதமான அன்பை உண்டாக்கினான்.

இப்ராஹீம் நபி (அலை) அவர்களை அவன் நெருப்பில் (குளிர்ச்சியாக்கிக்) காத்தான்; பயத்தை அவன் பாதுகாப்பு உணர்ச்சியாக ஆக்கினான்.

இரண்டாந்தரக் காரண சாதனங்களை அவன் எரித்துவிட்ட தால் நான் பித்தனானேன்; அவனைப் பற்றிய என் பிரமிப்பால் நான் காரண சாதனங்களை மறந்தவனானேன்.

## மந்திரியின் மற்றொரு சதித் திட்டம்

மந்திரி தன் மனத்தில் இன்னொரு திட்டமிட்டான்; உபந்நி யாசம் செய்வதை நிறுத்திவிட்டு அவன் தனிமையில் அமர்ந்து விட்டான்.

550. அவன் சீடர்கள் அவனைத் தரிசிக்க வேண்டும் என்ற ஆவலால் தவியாய்த் தவிக்கச் செய்தான். நாற்பது ஐம்பது நாட்கள் வரைகூட அவன் தனிமையில் (கல்வத்தில், சில்லா) இருக்கலானான்.

அவனைக் காணத் துடித்தும், அவனுடைய அருள் ஞான உபந்நியாசங்களையும், உணர்வையும் பெற அவாவியும் ஜனங்கள் பித்தர்களாயினர்.

அவர்கள் முகம் குப்புற விழுந்து அழுது அரற்றினர்; அவனோ நோன்பால் தன் முதுகைக் கூனல்களுள்ளதாக ஆக்கிக் கொண்டான்.

அவர்கள் சொன்னார்கள் : "நீ இன்றி எங்களுக்கு வெளிச்ச மில்லை; வழிகாட்டியற்ற குருடன் நிலை யாது?

நீ எங்கள்பால் கருணை காட்டுமுகத்தானும், கடவுளுக்காகவும் எங்களை இனியும் உன்னைவிட்டுப் பிரித்து வையாதே!

555. நாங்கள் குழந்தைகள்போல; நீ எங்கள் செவிலித்தாய் போலாவாய்! (உன் பாதுகாவல் என்ற) நிழலை நீ எங்கள்மீது பரப்புவதுதான் முறை."

அவன் சொன்னான் : "என்னை நேசிப்பவர்களைவிட்டு என் ஆத்மா வெகு தொலைவில் இல்லை; ஆனால், வெளியில் வர எனக்கு அனுமதியில்லை" என்று.

அமீர்கள் (அவனிடம்) மத்தியஸ்தம் நாடி வந்தனர்; சீடர்கள் பச்சாதாபத்துடன் வந்தனர்.

அவர்கள் யாவரும் கூறினர் : "கண்ணியமிகு தந்தாய், எங்களுக்கு உண்டான துரதிர்ஷ்டம்தான் என்னே! நீ இன்றேல் நாங்கள் எங்கள் இதயத்தையும், மார்க்கத்தையுமே இழந்த அனாதைகளாகி விடுவோம்.

நீயோ சாக்குப்போக்குச் சொல்லித் தட்டிக்கழிக்கிறாய்; நாங்களோ துயரத்தால் எரியும் எங்கள் இதயத்திலிருந்து விசனப் பெருமூச்சை வெளியில் தள்ளிக்கொண்டிருக்கிறோம்.

560. உன் தேனினும் இனிய உபந்நியாசங்களைக் கேட்டுப் பழக்கப்பட்டு விட்டோம்; உன் அறிவு ஊற்றில் பெருக்கெடுத்த அமுதை நாங்கள் அள்ளிப் பருகினோம்.

இறைவா, இறைவா, (ஈதென்ன கைசேதம்!) (எம் தலைவனே,) இவ்விதம் எம்மைக் கொடுமைப்படுத்த வேண்டாம்! இன்றே எங்களிடம் பரிவுகாட்டு; நாளைவரை அதைத் தள்ளிப்போட வேண்டாம்!

(உன்னிடம்) நமது இதயத்தைத் திறைகொடுத்தவர்கள் கடைசியில் ஒன்றுமே இல்லாதவர்களின் கூட்டத்தில் சேர்ந்துவிட வேண்டும் என்பதுதான் உன் திருவுளச் சித்தமா?

இவர்கள் யாவரும் தரையில் போடப்பட்ட மீன்களாகத் துள்ளித் துடிக்கின்றனர்; வாய்க்காலை அடைத்துள்ள அணையைத் திறந்துவிட்டு, தண்ணீரில் அவர்கள் உயிர் பிழைக்கச் செய்!

இவ்வுலகில் உனக்கு நிகர் யாருமில்லாத நிலையிலுள்ளவனே, இறைவனுக்காக, இறைவனுக்காக உன் ஜனங்களுக்கு உதவ விரைந் தோடிவா!"

### சீடர்களின் வேண்டுதலை மந்திரி மறுதலித்தல்

565. மந்திரி சொன்னான் : "வார்த்தைக்கும், பேச்சுக்கும் அடிமையானவர்களே, நாவின்மூலம், காதின் வழியாக விழிப்பூட்டப்பட நாடுவோரே, எச்சரிக்கையாய் இருங்கள்.

கீழான (உடல் சம்பந்தமான) இச்சையெனும் தலையிலுள்ள காதுள் பஞ்சை வைத்து அடையுங்கள்; உங்கள் கண்களுக்குப் போடப்பட்டுள்ள புலனுணர்வுக் கட்டை அவிழ்த்தெறியுங்கள்.

தலையிலுள்ள செவி மனசாட்சியின் செவியில் வைத்து அடைக்கப்பட்ட பஞ்சாகும்; புறச்செவி செவிடாகும்வரை அகச்செவி செவிடாகவேதான் இருக்கும்.

புலனுணர்வற்ற - கேள்வியற்ற - பார்வையற்ற - சிந்தனையில் லாதவர்களாகுங்கள்! அதன்மூலம் (இறைவன் ஆத்மாவை விளித்துத்) 'திரும்பு'[1] என்று கொடுக்கும் குரலை நீங்கள் கேட்க முடியும்.

விழிப்பில் உரையாடலில் நீங்கள் ஈடுபட்டிருக்கும்வரை தூக்கத்தில் (கனவில்) உரையாடலின் மணத்தைக்கூட நீங்கள் முகர முடியாது.

570. நம் பேச்சும், செயலும் புறத்தே செய்யப்படும் பிரயாண மாகும்; அகப் பிரயாணம் வானுலகுக்கு மேலுள்ளது.

(உடலின்) புலனுணர்வு உலர்ந்த தன்மையையே கண்டது; ஏனெனில், அது உலர்ந்த தன்மையுள்ள மண்ணிலிருந்தே பிறந்தது; ஆத்மாவின் ஈஸா கடல்மீது நடந்தது.

உலர்ந்த உடலின் பிரயாணம் உலர்ந்த தரையில் நடந்தது; (ஆனால்,) ஆத்மாவின் பிரயாணம் கடலின் நடுவில் நடக்கிறது.

உன் வாழ்க்கை பூமியின்மீது - சிலசமயம் மலைகளின்மீது, சிலசமயம் பாலைகள்மீது, ஆறுகள்மீது, - பிரயாணம் செய்வதில் கழிந்து போய்விட்டது.

இந்த நிலையில் ஜீவனின் தண்ணீரை நீ எய்துவதெப்போது? கடலின் அலைகளை நீ பிளப்பதெப்போது?

575. பூமியின் அலைகள் நம் கற்பனையும், அறியும் சக்தியும், சிந்தனையும்தாம். நீரின் அலைகளோ தன்னை இல்லாதாக்குவதும், மஸ்தடைவதும், அழிந்து போவதுமாம்.

நீங்கள் இந்தப் (புலனறிவின்) போதையில் இருக்கும்வரை, அந்த (ஆத்மீகப்) போதையைவிட்டு வெகுதொலைவிலிருப்பவர் கள்தாம். இதை நீங்கள் பருகிக்கொண்டிருக்கும்வரை, அந்தக் கிண்ணத்தைக் காணாத குருடர்கள்தாம்.

புறப் பேச்சும் உரையாடலும் மண்ணையே ஒக்கும்; சிறிது காலமாவது மௌனமாக இருக்கப் பழகுங்கள். எச்சரிக்கை!

### சீடர்கள் மீண்டும் அவனிடம் மன்றாடல்

அவர்கள் யாவரும் கூறினர் : "(தப்புவதற்குச்) சந்துபொந்தைத் தேடும் பெரியோய், கடுமையான, ஏமாற்றந்தரும் இந்த வார்த்தைகளை எங்களிடம் கூற வேண்டாம்!

---

1. பார்க்க : குர்ஆன் 89 : 28

ஒரு பிராணியின் முதுகில் அது தாங்குமளவுக்கான சுமையைத் தான் ஏற்ற வேண்டும்; பலஹீனமானவர்கள்மீது அவர்கள் பலத்துக்குத் தக்கபடியானதை(சுமையை)த் தான் சுமத்த வேண்டும்.

580. ஒவ்வொரு பறவைக்கும் அதன் அளவுக்குத் தக்கபடியான உணவைத்தான் கண்ணியில் கட்டிவைக்க வேண்டும். ஓர் அத்திப் பழத்தைக் காட்டி எல்லாப் பறவைகளையும் பிடிப்பதெப்படி?

சிசு ஒன்றுக்குப் பாலுக்குப் பதிலாக ரொட்டியைக் கொடுத்தால், அது ஜீரணிக்காமல் சிசு இறந்து போகாதா?

ஆனால், அந்தச் சிசுவுக்குப் பல் முளைத்து, அது வளர்ந்ததும் அதன் இதயம் ரொட்டியை நாடும்.

சின்னஞ்சிறு குருவிக்குஞ்சு ஒன்று பறக்கத் தொடங்கும்போது பசித்த பூனைக்கு ஒரு வாய் உணவாகவே அமைந்துவிடுகிறது.

ஆனால், அது வளர்ந்து இறக்கைகள் பெரிதானதும் எந்தத் தொல்லையுமின்றி அது தானாகவே பறக்க ஆரம்பித்து விடுகிறது. தாய்ப் பறவையின் (அல்லது பறவை பிடிப்பவனின்) குரலொலி அதற்குத் தேவையற்றதாகி விடுகிறது.

585. உன் பேச்சு ஷைத்தானை மௌனமாக்குகிறது; உன் பேச்சு எங்கள் காதுகளை அறிவால் நிரப்புகிறது.

நீ பேசுகையில் எங்கள் காதுகள் அறிவால் நிரம்பி விடுகின்றன; நீ சமுத்திரமானதும், எங்கள் காய்ந்த பூமி ஜீவ நதியாக ஆகி விடுகிறது.

ஹே மச்சம் முதல் சகலமும் உன்னால் ஒளிபெறச் செய்பவனே, உன்னோடு இருப்பதால் பூமியே சொர்க்கத்தைவிடச் சாலச் சிறந்ததாக இருக்கிறது.

நீ இன்றேல், சொர்க்கத்திலும் இருளே எங்களை ஆட்கொண்டு விடும். ஹே முழுமதியே, உன்னோடு ஒப்பிடின் இந்தச் சொர்க்கம் தான் என்ன (ஒரு பொருட்டா)?

வானங்களுக்கு மாண்பின் உருவமுண்டு; (ஆனால்), மாண்பின் சாரமோ பரிசுத்தமான ஆத்மாவுக்கே உரியது.

590. உடல்களுக்கு மாண்பின் உருவமுண்டு; உடல்கள் (வெறும்) பெயர்கள் தாம்; சாரமே எல்லாம்."

**மந்திரியின் மறுப்பு**

அவன் சொன்னான். "உங்கள் விவாதங்களை நிறுத்துங்கள்! என் யோசனை உங்கள் ஆத்மாக்களுள்ளும், இதயங்களுள்ளும் நுழையட்டும்!

நான் நம்பிக்கைக்குரியவன் எனின், நான் வானத்தைச் சுட்டிக் காட்டி அது பூமிதான் என்று சாதித்தாலும், நம்பிக்கைக்குரிய வனான என்மீது நீங்கள் ஐயங் கொள்ளக்கூடாது.

நான் பரிபூரணத்துவமடைந்தவன் எனின் என் பரிபூரணத் துவத்தில் இந்த அவநம்பிக்கை ஏன்? நான் பரிபூரணத்துவம் இல்லாதவனாயின் எனக்கு இடைஞ்சலுண்டாக்குதலும், தொல்லை கொடுத்தலும் அவசியமில்லையல்லவா!

இந்தத் தனிமையைவிட்டு நான் வெளிவர முடியாது; ஏனெனில், நான் இதில் அகத்தே (ஆத்மீக) அனுபவங்களை அடையப் பெற்றுக்கொண்டிருக்கிறேன்.

595. அவர்கள் யாவரும் சொன்னார்கள்: "எங்கள் மந்திரியே, இது நிராகரிப்பன்று; எங்கள் வார்த்தைகள் யாரோ அந்நியர்களு டையவை போன்றவையல்ல.

உன்னைவிட்டுப் பிரிந்திருந்ததாலேயே எங்கள் கண்கள் கண்ணீரால் நிரம்பியுள்ளன. (அதனாலேயே) எங்கள் ஆத்மாக்களி லிருந்து தொடர்படியாக விசனப் பெருமூச்சுக்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

ஒரு குழந்தை தன் தாதியின் சிசுருச்சையுடன் திருப்தியடைந்து விடுவதில்லை. அதற்கு நல்லது எது, தீயது எது என்று தெரியா விடினும் அது அழுகிறது."

நாங்கள் வீணையாக இருக்கிறோம்; நீ அதை மீட்டுபவனா வாய். புலம்பல் எங்களுடையதல்ல; நீ தான் புலம்பலை எழுப்பு பவன்.

நாங்கள் புல்லாங்குழல் போன்றவர்கள்; எங்களுள் உண்டாகும் இசை, உன்னிடமிருந்து வருவதுதான். நாங்கள் மலைக்கு ஒப்பா வோம்; எங்களிடமிருந்து உண்டாகும் எதிரொலி உன்னிலிருந்து வருவதுதான்.

600. நாங்கள் சதுரங்கக் காய்களாவோம்; வெற்றி தோல்வியில் ஈடுபட்டுள்ளோம். ஹே அழகிய குணநலமுடையவனே, எங்கள் வெற்றியும் தோல்வியும் உன்னிடமிருந்து வருப்வைதாம்.

எங்கள் ஆத்மாவின் ஆத்மாவே, உன்னைவிட்டு விலகியிருக்க நாங்கள் யார்?

நாங்களும் எங்கள் ஜீவிதமும் (உண்மையில்) ஜீவிதமற்றவை தாம்; நீயே முழுமுதல் ஜீவிதமானவன். உன்னிலிருந்தே அழிபவை எழுகின்றன.

*நாங்கள் யாவரும் சிங்கங்கள்; ஆனால், கொடியில் பொறிக்கப் பட்ட சிங்கங்கள். கணத்துக்குக் கணம் அவை பாய்ந்து போவது போல் தெரிவது காற்றின் அசைவினால்தான்.*

*அவை விரைவது தெரிகிறது; ஆனால், (அவற்றை விரை வாக்கும்) காற்று கண்ணுக்குத் தெரியவில்லை. புலனாகாமலிருப்பது எங்களைக் கைவிடாமலிருக்குமாக!*

*605. (எங்களை அசையவைக்கும்) எங்கள் காற்றும் , எங்கள் உள்ளமையும் நீ தந்த சம்மானங்கள் தாம். எங்கள் ஜீவிதம் முழுமையுமே நீ (எங்கள்) உள்ளமையை உண்டாக்கியதால் வந்ததுதாம்.*

*உள்ளமையற்றவற்றுக்கு உள்ளமையின் இன்பத்தை நீ காட்டினாய்; உள்ளமையற்றவற்றை உன்மீது காதல் கொள்ள வைத்தாய்.*

*உன் பேருதவியின் பரவசத்தை அப்பாலகற்றி விடாதே! உன் விருந்தையும், மதுவையும், மதுக்கிண்ணத்தையும் விலக்கிவிடாதே!*

*அதை நீ அப்பாலாக்கினால், அதுபற்றி உன்னிடம் கேள்வி கேட்பார் யார்? சித்திரம் அதைத் தீட்டியவனோடு தர்க்கிப்பது எப்படி?*

*எங்களைப் பார்க்க வேண்டாம்; எங்கள்மீது உன் விழியை நிறுத்தவேண்டாம். உன்னிடமுள்ள அன்பையும், தயாளத்தையுமே கண்ணோட்டமிடு!*

*610. நாங்கள் இல்லாமலிருந்தோம்; எங்களை மறைவான ஜீவிதத்திலிருந்து வெளியாக்கும்படி நாங்கள் வெளிப்படையாகக் கேட்டுக்கொள்ளவில்லை. (எனினும்,) வாய்விட்டு வேண்டப்படாத பிரார்த்தனைக்கு உன் கண்ணியம் விரைந்தோடி வந்தது. (வந்து, எங்களை ஜீவனுள்ளவர்களாக்கிற்று.)*

*சைத்ரீகனின் முன்னும், தூரியின் முன்னும் படம் நிர்க்கதி யானதாய் இருந்தது; கர்ப்பப் பையிலிருக்கும் சிசுவைப்போல் கட்டுப்பட்டிருந்தது.*

*சர்வசக்தியாளனின் முன்னே, (தெய்வீகச்) சபையின் (உலகின்) சகல சபையினரான ஜனங்களும் (பூவேலை செய்பவனின்) ஊசியின் முன் துணியைப்போல நிர்க்கதியானவர்களாய் இருந்தனர்.*

*சில சமயம் அவன் (இறைவன்) ஷைத்தானின் படத்தை எழுது வான்; சிலசமயம் ஆதம் (அலை) அவர்களின் படத்தைத் தீட்டுவான்.*

சிலசமயம் இன்பத்தின் படத்தையும், சிலசமயம் துன்பத்தின் படத்தையும் எழுதுவான்.

யாருக்கும் தம்மைத் தற்காத்துக் கொள்வதற்காக ஒரு கையை அசைக்கவும் சக்தியில்லை. கஷ்டம் அல்லது சுகம்பற்றி ஒரு வார்த்தை பேசவும் திராணி இல்லை.

615. திரு குர்ஆனிலிருந்து, "நீர் (மண்ணை) எறிந்தபோது (யதார்த்தத்தில் அதை) நீர் எறியவில்லை"[1] என்பதன் தாத்பரியத்தை உணர்!

நாம் ஓர் அம்பை எய்யும்போது அந்தச் செயல் நம்மிடமிருந்து உண்டாவதல்ல; நாம் வில்லாவோம்; அதை வளைத்து அம்பெய்பவன் இறைவன்தான்.

இது நிர்ப்பந்தமானது (ஜபர் ஆனது) அன்று; ஜப்பாரிய்யாவின் (சர்வ சக்தித் தத்துவவாதிகளின்) அர்த்தம் இது. சர்வ சக்தியின் பிரஸ்தாபம் நாம் பணிவுடையவர்களாக இருப்பதற்காகவே உண்டாயிற்று.

நமது பணிவு அவசியத்தின் அத்தாட்சியாகும். (ஆனால்,) நாம் தவறு செய்யும் உணர்வு சுய இச்சையின் அத்தாட்சியாகும்.

சுயஇச்சை இன்றெனின் இந்தத் தலைகுனிவு ஏன்? இந்தத் துயரமும், குற்றம்செய்த குழப்பமும், கேவலமும் யாவை?

620. ஆசான்களுக்கும், சீடர்களுக்குமிடையே அபிப்பிராய பேதங்கள் ஏன்? ஏற்கெனவே போட்ட திட்டங்களை மாற்றும் படியாக மனம் மாறிக்கொண்டிருப்பது ஏன்?

(சுய சித்தத்தை வற்புறுத்தும்) அவன் இறைவனின் நிர்ப்பந்தத்தைப் பொருட்படுத்துவதில்லை என்றும், இறைவனின் சந்திரன் (மகத்துவம்) சுயசித்தவாதியின் (கண்மூடித்தனம் எனும்) மேகத்துள் மறைந்துபோய் விட்டது என்றும் நீ சொல்வாயாயின்,

அதற்கு நல்ல பதிலொன்று உண்டு. நீ விழிப்படைந்தால் நீ விஸ்வாசமற்ற நிலையைக் கைவிட்டு, (உண்மையான) மார்க்கத்தில் ஆகிவிடுவாய்.

பச்சாதாபமும் பணிவும் பிணியுற்றிருக்கும்போது உண்டாகின்றன; பிணியுற்ற நேரம் (மனசாட்சி) முற்றும் விழிப்புடனிருக்கும் நேரமாகும்.

நீ பிணியுற்றிருக்கும்போது இறைவனின் கட்டளைகளை மீறியதை மன்னிக்குமாறு நீ இறைவனிடம் பிரார்த்தனை செய்!

1. குர்ஆன் 8 : 17

625. உன் பாவத்தின் கீழான தன்மை உனக்குக் காட்டப்பட்டதும் நீ (நேரான) பாதைக்கு மீண்டுவிடத் தீர்மானித்துக்கொள்!

இனி (இறைவனுக்குக்) கீழ்ப்படிதலையன்றி வேறு எந்த வழியிலும் திரும்புவதில்லை என்று அப்போது நீ பிரதிக்ஞை செய்துகொள்.

எனவே, பிணி உனக்கு மனச்சாட்சியையும், விழிப்பான நிலையையும் தருகிறது என்பது திட்டமாகிவிட்டது.

தாத்பரியத்தைத் தேடுவோனே, இந்தத் தாத்பரியத்தை மனத்தில் கொள்! வேதனையால் வருந்தும் ஒவ்வொருவனும் அதன் மணத்தை முகர்ந்தவனாவான்.

எவனும் தன் விழிப்பு நிலையின் அளவுக்கேற்ப அதிகமாகவோ, குறைவாகவோ வேதனைப்படுகிறான்; இறைவனை உணரும் அளவுக்கேற்ப அவன் முகமும் வெளுக்கிறது.

630. இறைவனுடைய 'ஜபரை' (நிர்ப்பந்தத்தை) நீ உணர்ந்திருப்பின், உன் பணிவு எங்கே? அவனுடைய 'ஜப்பாரி'யில் (சர்வ சக்தித் தன்மையில்) பிணைக்கப்பட்டதால் உண்டான உன் உணர்ச்சி எங்கே?

விலங்கினால் பிணைக்கப்பட்ட ஒருவன் மகிழ்ச்சி கொண்டாடுவது எப்படி? சிறையிலடைபட்ட ஒருவன் சுதந்தர மனிதனைப் போல் நடப்பது எப்படி?

உன் கால்கள் விலங்கால் பிணைக்கப்பட்டு, அரசனின் அதிகாரிகள் உன்னருகே காவலிருப்பதாகவும் நீ கண்டால்,

நீ நிர்க்கதியானவர்களிடம் ஓர் அதிகாரியைப்போல் (கொடுமையாக) நடந்துகொள்ளாதே! நிர்க்கதியான ஒருவனுடைய செயல் இதுவன்றல்லவா!

இறைவனுடைய நிர்ப்பந்தத்தை நீ உணராமலிருப்பதால் (நீ நிர்ப்பந்தப்படுத்தப்படுகிறாய் என்று) பேசாதே! நீ அதை உணர்ந்தால் அவ்விதம் நீ உணர்ந்துகொண்டாய் என்பதன் அத்தாட்சி எங்கே?

635. நீ செய்ய எண்ணும் ஒவ்வொரு செயலும் சம்பந்தப்பட்டவரை (அதைச் செய்ய உன்னால் ஆகும் என்று) உன் சக்தியை நீ தெளிவாக உணருகிறாய்.

ஆனால், நீ செய்ய மனம்படாத, விரும்பாத ஒவ்வொரு செயலும் சம்பந்தப்பட்டவரை மட்டும் உன்னை நீ ஒரு நிர்ப்பந்

தக்காரனாக ஆக்கிக்கொள்கிறாய். "இது இறைவனிடமிருந்து வந்துள்ளது" என்கிறாய்.

இவ்வுலகம் சம்பந்தப்பட்ட காரியங்களில் நபிமார்கள் நிர்ப்பந்தக்காரர்களாய் இருந்தனர்; மறுமையின் வேலைகள் சம்பந்தப்பட்டவரையோ நிராகரிப்பவர்கள் நிர்ப்பந்தக்காரர் களாயுள்ளனர்.

நபிமார்களுக்கு மறுமையின் வேலைகள் சுய சித்தத்துடன் கூடியவையாய் உள்ளன; மூடர்களுக்கோ இம்மையின் காரியங்கள் சுய சித்தத்துடன் கூடியவையாய் இருக்கின்றன.

ஒவ்வொரு பறவையும் தன் இனத்துப் பறவைகளோடுதான் பறந்துசெல்லும்; அதன் ஜீவன் முன்னே (அதை வழிநடத்திச்) செல்ல, அது தன் (ஜீவனைத்) தொடர்ந்து செல்கிறது.

640. நிராகரிப்பவர்கள் நரகில் வதியப் போகிறவர்களான படியால், இம்மையெனும் சிறையின் விஷயத்தில்தான் அவர்கள் அக்கறை காட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

நபிமார்கள் சொர்க்கத்தில் வதியவிருப்பவர்களாதலால் ஆத்மாவின், ஜீவனின் சொர்க்கத்தளவில் அவர்கள் மீண்டுள்ளார் கள்.

இந்த விஷயம் முடிவுற்றது; எனவே, நாம் இதை இங்கே நிறுத்திவிட்டு இப்போது (பேசிவந்த) கதையை எடுத்து முடிப்போம்.

### மந்திரி தன் தீர்மானத்தை மேலும் விளக்கல்

மந்திரி உள்ளிருந்து கத்தினான்: "சீடர்களே, என்னிடமிருந்து நீங்கள் இதை அறிந்து கொள்ள வேண்டும்:

ஏசுநாதர் எனக்கு அறிவித்துள்ள செய்தி ஒன்றில், "உன் நண்பர்கள், உற்றார் சகலரிடமிருந்தும் பிரிந்திரு;

645. உன் முகத்தைச் சுவர்ப்பக்கமாகத் திருப்பிக் கொள்; தனித்திரு, உன் உயிரைவிட்டுக்கூடப் பிரிந்தவனாய் இரு!' என்று அருளியுள்ளார்கள்.

இதன் பின்னும் நான் பேச அனுமதியில்லை; இதன் பின்னர் பேச்சுக்கும் எனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை.

நண்பர்களே, விடை பெறுகிறேன்! நான் மரணித்து விட்டேன். என் உடைமைகளை நான் நான்காவது வானத்துக்குக் கொண்டு போய்விட்டேன்.

நெருப்பு மயமான இந்தப் பிரதேசத்தில் நான் பச்சாதாபத்திலும், அழிவிலும் விறகென இனியும் எரியமாட்டேன்.

இனி நான்காம் வானத்தின் உச்சத்தில் ஏசுநாதரின் அருகில் நான் அமர்ந்திருப்பேன்."

## மந்திரி அமீர்கள் ஒவ்வொருவரையுமே தன் பிரதிநிதியாக நியமித்தல்

650. பின்னர் அவன் அந்த அமீர்களை ஒவ்வொருவராக அழைத்து, அவர்களோடு தனித்தனியே உரையாடினான்.

அவர்கள் ஒவ்வொருவரிடமும் அவன் சொன்னான்: "ஏசுவின் மார்க்கத்தில் நீயே இறைவனின் செய்தியை எத்திவைப்பவன்; என் பிரதிநிதி (கலீபா);

மற்ற அமீர்கள் (பதினோரு பேரும்) உனக்குக் கீழ்ப்படிய வேண்டியவர்கள்தாம். அவர்களை உனக்கு ஒத்தாசை புரிபவர்களாக ஏசுநாதர் ஆக்கியுள்ளார்.

(உனக்கு எதிராக) மற்ற அமீர்களில் யாரேனும் ஒருவன் தன் தலையை உயர்த்தினும் (கலகம் செய்யினும்) அவனைப் பிடித்து ஒன்று, தூக்கிலிட்டு விடு, அல்லது சிறையில் போட்டுவிடு.

ஆனால், நான் மரணமாகும்வரை இதைப் பிரகடனப்படுத்த வேண்டாம்! நான் இறக்கும்வரை இந்த மகத்தான அதிகாரத்தை மேற்கொள்ளவேண்டாம்!

655. நான் சாகும்வரை இதைப் பகிரங்கப்படுத்த வேண்டாம்; (அதுவரை) ஆட்சிக்கும் அதிகாரத்துக்கும் பாத்தியதை கொண்டாட வேண்டாம்!

இதோ ஏடு! இதில் ஏசுநாதரின் ஏவல் விலக்கல்கள் எழுதப்பட்டுள்ளன. அவைகளை ஒவ்வொன்றாய் (ஏசுவின்) ஜனங்களுக்குப் படித்துக்காட்டு."

இவ்விதம் ஒவ்வோர் அமீரிடமும், தனித்தனியே பேசினான். "இறைவனின் மார்க்கத்தில் வேதத்தை எத்திவைப்பவன் உன்னையன்றி வேறுயாருமில்லை" என்றான்.

(இவ்விதம்) அவர்கள் ஒவ்வொருவரையும் அவன் கண்ணியப்படுத்தினான். ஓர் அமீரிடம் சொன்னதையே மற்ற அமீர்களிடமும் கூறினான்.

ஒவ்வொருவரிடமும் அவன் ஏடு ஒன்றை ஒப்படைத்தான்; ஒன்றில் எழுதியிருந்தது மற்றவற்றில் எழுதப்பட்டிருந்ததற்கு நேர் முரண்பட்டதாக இருந்தது.

660. அந்த ஏடுகள் ஒவ்வொன்றும் முரண்பட்ட விஷயங்களைப் பேசின. அகர வரிசையில் 'அ' முதல் 'ஔ' வரையுள்ள எழுத்துக்கள் வெவ்வேறாக இருப்பது போல.

இவை எவ்வளவுதூரம் ஒன்றுக்கு ஒன்று முரண்பட்டிருந்தன என்பதை நாம் முன்னமேயே எடுத்துக்காட்டி விட்டோமல்லவா!

இதன்பின் அந்த மந்திரி நாற்பது நாட்கள் தான் இருந்த அறையை மூடிக்கொண்டு கிடந்தான். பின்னர் அவன் தன்னைக் கொன்றுகொண்டு தன் ஜீவிதத்திலிருந்து தப்பிவிட்டான்.

அவன் மாண்டுவிட்டதைக் கேள்வியுற்ற ஜனங்கள் அவன் சமாதியருகில் கூடினர்; மறுமை நாளில் எழுவது போன்ற புலம்பல் ஒலி அங்கே எழுந்தது.

எண்ணற்ற பெருங்கூட்டம் அங்கே கூடியிருந்தது; சிலர் துயரத்தால் தலைமயிரைப் பிய்த்துக்கொண்டனர்; சிலர் தமது உடைகளைக் கிழித்துக்கொண்டனர்.

665. அரபிகளும், துருக்கியர்களும், கிரேக்கர்களும், குர்தியர்களுமாக இவர்களுடைய எண்ணிக்கையை இறைவன்தான் மதிப்பிட முடியும்.

அவன் சமாதியின் மண்ணை அவர்கள் தங்கள் தலைமீது அள்ளிப் போட்டுக்கொண்டனர். அவனுக்காகத் துயருறுவது தமக்கான மருந்து என்று கருதினர்.

ஒரு மாதம்வரை ஜனங்கள் அவன் புதைகுழிமீது இரத்தக் கண்ணீர் வடித்து அரற்றிக்கொண்டிருந்தனர்.

**அவனுடைய 'பிரதிநிதி' யார் என்ற பிரச்சினை**

(இவ்விதம்) ஒரு மாதம் கழிந்தபின் ஜனங்கள் (அந்த அமீர்களை நோக்கி,) "தலைவர்களே, இவர் இடத்தில் (கலீபாவாக) அமீர்களில் யார் நியமிக்கப்பட்டுள்ளார்?

அதை நாங்கள் அறிந்தால் அவரை மந்திரியின் ஸ்தானத்தில் அமர்த்தி, எங்கள் மதகுருவாக ஏற்று, நாங்கள் மரியாதை காட்டலாமல்லவா! எங்கள் கைகளை அவர் கையில் வைக்கலாமல்லவா! (அவருக்கு விஸ்வாசப் பிரமாணம் செய்து கொடுக்கலாமல்லவா!)

670. பகலவன் அஸ்தமித்து, அது (தன் துயரச் சூட்டால்,) எங்கள் மனங்களில் சூடு போட்டுவிட்டுப் போயுள்ள நிலையில் (இருளை அகற்ற) அதற்குப் பகரமாக ஒரு விளக்கேனும் இருப்பது நலமல்லவா!

அன்பானவனோடு ஐக்கியமாகும் சாத்தியப்பாடு எங்கள் பார்வையைவிட்டு மறைந்துவிட்டபடியால் அவன் நினைவுச் சின்னமாக அவன் பிரதிநிதியொருவர் எங்களுக்கு வேண்டும்.

ரோஜா மலர் உதிர்ந்துவிட்டது; தோட்டம் நிர்மூலமாகி விட்டது. இந்த நிலையில் நாம் எங்கிருந்து ரோஜாவின் சுகந்தத்தைப் பெறமுடியும்? பன்னீரைத்தானே நாட வேண்டும்!"

இறைவன் நம் பார்வையில் வருவதில்லையாதலின் நபிமார்கள் தாமே அவன் செய்தியை எத்திவைப்பவர்களாயுள்ளனர்.

ஏன், நான் இதைத் தவறாகக் கூறிவிட்டேன்; பிரதிநிதியும், பிரதிநிதி யாரைக் குறித்துநிற்கிறாரோ அவரும் இருவர் என்று நீங்கள் கருதினாலே அது சரியன்று; தவறாகும்.

675. ஆமாம், உருவத்தை நீங்கள் வழிபடுபவர்களாயின், அவர்கள் இருவர்தாம்; (ஆனால்,) உருவத்தை விட்டுத் தப்பிவிட்டவனுக்கு அவர்கள் ஒருவராக ஆகிவிடுகின்றனர்.

நீங்கள் உருவத்தை நோக்கினால் உங்கள் கண்கள் இரண்டு தான்; கண்ணிலிருந்து வரும் வெளிச்சத்தை நோட்டமிடுங்கள்.

ஒருவன் இரண்டு கண்களின் வெளிச்சத்தின்மீது பார்வையைச் செலுத்தினால் அவை இரண்டின் வெளிச்சத்தையும் பகுத்தறிவது சாத்தியமேயல்ல.

ஓர் இடத்தில் பத்து விளக்குகள் இருப்பின், ஒவ்வொன்றும் உருவத்தில் மற்றதைவிட வேறுபட்டதாக இருக்கலாம்.

(ஆனால்,) ஒன்றின் வெளிச்சத்தை இன்னொன்றின் வெளிச் சத்திலிருந்து பிரித்தறிவதோ சாத்தியமன்று.

680. நீங்கள் நூறு ஆப்பிள் அல்லது நூறு மாதுளம் பழங்களை எண்ணி எடுத்து ஒன்றாக நசுக்கிச் சேர்த்துவிட்டால் (அதன் பின்னும்) அவை நூறாக இருப்பதில்லை ஒன்றாக ஆகிவிடுகின்றன.

ஆத்மீகமான விஷயங்களில் பிரிவும், எண்ணிக்கையும் கிடையாது; ஆத்மீகத்தின் பாதத்தைப் பற்றிப்பிடித்துக்கொள்! உருவம் தலைக்கனமுடையது. (ஆத்மீக ஒருமைக்கு எதிரிடையானது.)

அகந்தை மிகக்கொண்ட உருவத்தைச் சத்முயற்சியால் வாடிவதங்கச் செய்துவிட்டு புதையலைத் தோண்டி எடுப்பதைப் போல் அதற்குக் கீழிருந்து ஒருமையைக் கண்டெடுங்கள்.

நீங்கள் அதை வாடிவதங்குமாறு செய்யாவிடின், அவன் (இறைவன்) அருளானுக்கிரஹம் அதை வாடிவதங்கவைக்கும். அந்தோ, என் இதயம் அவன் கட்டுப்பாட்டுக்குள் உள்ளதன்றோ!

685. நம் இதயங்களுக்கு அவன் தன்னைக் காட்டவும் செய்கிறான்; தர்வேஷின் கந்தல் ஜுப்பாவை அவன் தைத்தும் தருகிறான்.

நாங்களும், எங்கள் சாரமும் எளிமையானவையாய் இருந்தன. நாங்கள் யாவரும் தலையும்காலும் இல்லாதவர்களாக இருந்தோம்.

சூரியனைப் போல் நாங்கள் ஒரே பொருளாய் இருந்தோம்; தண்ணீரைப் போலச் சிக்கலின்றிச் சுத்தமாய் இருந்தோம்.

அந்த நல்லியல்புள்ள வெளிச்சம் உருப்பெற்றதும், கோட்டைச் சுவர்களின் நிழல்களைப் போல் பல உருவங்களெடுத்தது.

'மிஞ்சினிக்' எனும் எறிசூத்திரத்தின் உதவியால் அந்தக் கோட்டைச் சுவரைத் தரைமட்டமாக்குக; (நிழல்களின்) இந்தக் கோஷ்டியின் இடையிலுள்ள வேற்றுமைகள் இதன்மூலம் அற்றுப்போய்விடும்.

690. இதை நான் சற்று விரிவாக எழுதியிருக்க முடியும்; ஆயினும், பலஹீனமான யாரேனும் தடுக்கி விழுந்துவிடக் கூடாதல்லவா! (அதனால் இத்துடன் நிறுத்திக்கொண்டேன்).

அதில் சம்பந்தப்பட்ட விஷயங்கள் கூரிய வாளைப்போல் கூர்மையானவை; உன்னிடம் கவசம் (புரிந்து கொள்ளும் சக்தி) இல்லையாயின் புறமுதுகிட்டு ஓடிவிடு!

இந்தக் கூரிய வாளின் வீச்சுக்கு எதிராக கவசத்தின் பாதுகாப்பின்றி நீ வர வேண்டாம்! ஏனெனில், இந்த வாள் துண்டிப்பதில் தலைகுனிவு (தயக்கம்) காட்டியதில்லை.

இந்தக் காரணத்தால் நானும் என் வாளை உறையுள் போட்டுவிட்டேன். தவறாகப் படிப்பவர்கள் யாரும் அதனால் மூலக்கருத்துக்கு முரணாகப் படிக்காமலிருப்பார்களாக! (என் வார்த்தையிலுள்ள கருத்துக்கு நேர் முரணான கருத்துக் கொள்ளாமலிருக்கட்டும்!)

இப்போது நாம் கதையை முடித்து, மந்திரியின் இடத்தில் பிரதிநிதியொருவரை நியமிக்கக் கோரி எழுந்த நேர்மையாளர்களான ஜனங்களின் விஸ்வாசத்தைப் பிரஸ்தாபிப்போம்.

695. தமது தலைவன் மாண்ட்பின் அவனிடத்தில் அவனுடைய பிரதிநிதியொருவன் அமர வேண்டும் என்று அவர்கள் வேண்டலாயினர்.

## அமீர்களிடையே சச்சரவு

அந்த விஸ்வாசமிக்க ஜனங்களிடையே அமீர் ஒருவர் வந்து நின்றார்; அவர் சொன்னார்:

"கேளுங்கள், நானே அவருடைய பிரதிநிதி; இப்போது நான்தான் ஏசுநாதரின் பிரதிநிதி.

நான்தான் அவருக்குப்பின் அவருடைய பிரதிநிதி என்பதற்கு இதோ இந்த ஏடே அத்தாட்சியாகும்" என்று.

தம் மறைவிடத்திலிருந்து மற்றோர் அமீர் வெளியில் வந்தார். அவரும் இதேமாதிரிப் பிரதிநிதிப் பதவி தமக்கேயுரியது என்றார்.

700. அவரும் தமது கட்கத்திலிருந்து ஏடு ஒன்றை எடுத்துக் காட்டினார். உடனே இந்த இரண்டு அமீர்களிடையேயும் யூதக் கோபம் கொப்பளித்தது.

உடனே மற்ற அமீர்களும் ஒருவர்பின் ஒருவராகக் கூரிய வாளை ஏந்தி எழுந்தனர்.

அவர்களுடைய ஒரு கையில் ஏடும், மறு கையில் வாளுமாக மதம் பிடித்த யானைபோல் ஒருவரோடொருவர் மோதத் தலைப்பட்டனர். (அவர்கள் ஒவ்வொருவரையும் பின்பற்றிய ஜனங்களும் தத்தம் அமீர்களுடன் சண்டையில் குதித்தனர்.)

பல்லாயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டு, மனிதர்களின் தலைகள் மலைபோல் குவிந்து கிடந்தன.

வலமும், இடமும் இரத்தம் வெள்ளம்போல் கொட்டிற்று. மலைபோன்றெழுந்த தூசி வானை முட்டிற்று.

705. மந்திரி விதைத்த கலக வித்துக்கள் அவர்கள் தலைக்கே பெரும் துயரானவையாக விளைந்துவிட்டன.

பிஸ்தாக் கொட்டைகள் (சடலங்கள்) உடைபட்டன; அவற்றுள் பருப்பு இருந்தவை கொல்லப்பட்ட பின் சுத்தமான அழகிய ஆத்மாவைப் பெற்றிருந்தன.

உடலை ஒழித்த வெட்டுதலும், நாசமும் மாதுளம் பழத்தையும், ஆப்பிளையும் உடைப்பது போன்றிருந்தது.

அவற்றில் இனிமையானவை மாதுளம் பழ (அல்லது ஆப்பிள்) ஷர்பத் ஆயின; அழுகிப்போனவை வீணாயின.

யதார்த்தமுடையவை (மரணத்துக்குப்பின்) தெளிவாய்த் தெரிந்தன; அழுகலானவை இகழ்ச்சியடைந்தன.

710. உருவை வணங்குபவனே, போ, யதார்த்தத்தை அடைய முயற்சிசெய்! உருவத்தின் உடலிலே இறக்கையாய் இருப்பது யதார்த்தம்தான்.

யதார்த்தத்தைப் பின்பற்றுவோரோடு உறவாடு; அதன்மூலம் நீ சம்மானம் பெறுவதுடன், இறைவனிடம் உன்னை ஒப்படைப்பதில் தயாளவானாகவும் ஆகலாம்.

இந்த உடலிலே உயிர் யதார்த்தமற்ற நிலையிலாயின் அது உறையுள் மரத்தலான வாளைச் செருகியுள்ளது போன்றாகிவிடும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

அது உறையுள் இருக்கும்வரை (வெளிப்படைக்கு) அது மதிப்புடையதுதான்; (ஆனால்,) அது வெளியில் உருவப்படினோ தீயில் போட்டு எரிப்பதற்கே தகுதியுடையதாய் இருக்கும்.

போர்புரிய மரத்தினாலான வாளை எடுக்காதே! (உன் வாள் உண்மையான வாள்தானா என்று) முதலில் கவனித்துக்கொள்! அதன்மூலம் உன் நிலை பரிதாபத்துக்குரியதாகாமல் நீ தற்காத்துக் கொள்ளமுடியும்.

715. அது மரத்தாலானதாயின் அதை விடுத்து வேறு ஒன்றைத் தேடி எடுத்துக்கொள்! அது (இரும்பாலானதாக) உறுதியானதாக இருப்பின், அதை வைத்துக்கொண்டு தைரியமாக முன்னேறு!

(யதார்த்தமெனும்) வாள் ஞானியரின்- நாதாக்களின்- ஆயுதச் சாலையில் உள்ளதாகும். அவர்களைக் காண்பது (அவர்களோடு பழகுவது) உனக்குப் பேரமுதமாகும்.

அறிஞர்கள் யாவரும் இதே விஷயத்தைத்தான் கூறியுள்ளனர். (இறைவனை அறிந்த) அறிஞர் சிருஷ்டிக்கப்பட்ட பொருள்களுக்கு (இறைவன் புறத்திலிருந்து வரும்) கருணையாவார்.[1]

நீ ஒரு மாதுளம் பழம் வாங்க விரும்பினால் அது சிரிக்கும் நிலையில் (உடைக்கப்பட்ட நிலையில்) அதை வாங்கு; அப்போது அதன் முத்துக்களின் இயல்பை அதன் சிரிப்பின் மூலம் (உடைக்கப்பட்டதன் மூலம்) அறிந்துகொள்வது எளிதாகும்.

1. பார்க்க : குர்ஆன் 22 : 107

ஆஹா, அதன் சிரிப்பு பாக்கியமுடையதாகும்; ஏனெனில், ஆத்மீகச் சிப்பி தன்னுள் உள்ள முத்தைத் திறந்து காட்டுவதுபோல அது தன் வாயைத் திறந்து அதன்மூலம் தன் இதயத்தையே காட்டுகிறது.

720. பூவரசம்பூவின் சிரிப்பு துர்ப்பாக்கியமானது, அதன் வாய்மூலம் அதன் இதயத்தின் கறுத்த தன்மை வெளிப்படுகிறது.

சிரிக்கும் மாதுளம் பழம் (தான் இருக்கும்) தோட்டத்தையே (மகிழ்ச்சியால்) சிரிக்கவைக்கிறது. (அது போல் மகான்களான) மனிதர்களோடு சகவாசம் கொள்வதால் நீயும் ஒரு (மகான் ஆன) மனிதனாவாய்.

நீ கல்லானாலும், பாறையானாலும், நீ இதயமுடையவனை (ஞானியை) அடைந்ததும் மாணிக்கமாகிவிடுவாய்.

உன் இதயத்துள் பெரியார்கள் மீது அன்பு கொள்ளுதல் என்னும் தருவை நட்டுவை; மகிழும் இதயம் படைத்தவர்களை நேசிப்பதற்காகவன்றி வேறு எதற்காகவும் உன் இயத்தை ஈடுபடுத்தாதே!

நிர்க்கதியான (நம்பிக்கையிழந்த) நிலையின் அருகிலும் அணுகாதே! நம்பிக்கைக்கு இடமுண்டு. இருளின் திசையில் போக வேண்டாம்; சூரியன்களுண்டு.

725. இதயம் இதயமுடையவர்களின் (ஞானியரின்) அருகாமையில் உன்னையும் கொண்டு சேர்த்துவிடுகிறது; உடல் தண்ணீராலும், மண்ணாலுமான சிறையுள் கொண்டுபோய்த் தள்ளிவிடுகிறது.

உன் இதயத்துக்கு அத்துடன் இயைந்த ஒருவரிடமிருந்து (அவரோடு உரையாடுவதன் மூலம்) உணவு கொடு. முன்னேறிய ஒருவரிடஞ் சென்று, (ஆத்மீக) முன்னேற்றத்துக்கு வழி தேடு!

## முகமது முஸ்தபா (ஸல்) அவர்களைப்பற்றிய இஞ்சீலின் முன்னறிவிப்பு

பரிசுத்தப் பெருங்கடலும், நபிமார்களில் தலையானவர்களுமான முஸ்தபா (ஸல்) அவர்களின் மகிமை பொருந்திய திருநாமம் இஞ்சீலிலுள்ளது.

அவர்களுடைய புறத்தோற்றமும், இயல்புகளும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளன. அவர்கள் நடத்திய போர்கள், அவர்கள் பிடித்த நோன்புகள், அவர்கள் உண்ணும் முறைபற்றியெல்லாம் அதில் எழுதப்பட்டுள்ளது.

கிறிஸ்தவர்களுள் சிலர் தெய்வ நல்லருள் எய்துவதற்காக தாங்கள் சுவிசேஷத்தைப் படிக்கும் போதேல்லாம் அந்தத் திருநாமமும், அவர்கள் பற்றிய விபரமும் வரும் போதெல்லாம்,

730. அந்தக் கண்ணியமிக்க திருநாமத்தின் மீது முத்தமிடு வதுண்டு; அந்த அருமையான விபரத்தின் மீது தங்கள் முகத்தைப் புதைப்பதுண்டு.

நாம் குறிப்பிட்ட போராட்டம் நடந்தசமயம் இந்தக் கூட்டத் தார் அழிவிலிருந்து கார்மானம் பெற்றுவிட்டனர்.

அஹ்மது என்ற திருப்பெயரின் பாதுகாவலில் புகலிடந்தேடிய இவர்கள் மந்திரியுடையவும், அமீர்களுடையவும் விஷமங்களி லிருந்தும் பாதுகாப்புப் பெற்றவர்களாகிவிட்டனர்.

இவர்களுடைய வமிசம் பல்கிப் பெருகிற்று; அஹ்மதெனும் விளக்கு இவர்களுக்கு உதவி, நேசம் பாராட்டிற்று.

கிறிஸ்தவர்களிடையிலிருந்த மற்றக் கூட்டத்தார் அஹ்ம தெனும் அந்தத் திருநாமத்தை இகழ்ச்சியாக எண்ணினர்.

735. அவர்கள் அந்தத் துன்மந்திரி உண்டாக்கிய பிளவுகளால் கேவலமாக்கப்பட்டுக் கடையர்களிலும் கடையர்களாயினர்.

மேலும், அவர்களுடைய மார்க்கமும், சட்டதிட்டங்களும் சகலவிதமான முரண்பாடுகளுங் கொண்ட ஏடுகளால் மாசுபடுத்தப் பட்டு (கெட்டு) விட்டன.

அஹ்மதெனும் திருநாமம் இதுபோன்று நல்லுதவியளிக்கிறது; (அவர்களைப் பின்பற்றுவோர்க்கு) அதன் ஒளி எவ்விதம் வழி காட்டுகிறது என்பதை இதிலிருந்து நிதானிக்கலாமன்றோ!

அஹ்மது என்ற திருநாமமே இவ்விதம் அசைக்க முடியாத கோட்டையாக ஆகிவிட்டதெனின், அவர்களுடைய நம்பிக்கைக் குரிய ஜீவனின் (ரூஹில் அமீனின்) பாதுகாவல் எத்தகையதாய் இருக்கும் என்பதை எண்ணிப்பார்ப்பது இயலுமா!

## ஈஸா (அலை) அவர்களின் மார்க்கத்தை அழிக்கத்துணிந்த மற்றொரு யூத அரசன் கதை

அந்தத் துன்மந்திரியின் நயவஞ்சகத்தால் (கிறிஸ்தவர்களிடை) உண்டான ஈடுசெய்ய முடியாப் படுநாசத்துக்குப்பின்னர்,

740. அந்த யூதனின் வம்சத்தைச் சேர்ந்த யூதன் ஒருவன் ஈஸா (அலை) அவர்களின் கூட்டத்தாரை அழித்தொழிப்பதில் கருத்துக் காட்டலானான்.

இந்த இரண்டாவது இனநாசத்தைப் பற்றி விபரமறிய வேண்டின், *'கிரகங்களையுடைய வானத்தின்மீது ஆணையாக'*[1] என்று தொடங்கும் திருக்குர்ஆன் அத்தியாயத்தை ஓதிப்பார்!

கிறிஸ்தவர்களை ஹதம்செய்ய முந்திய யூத அரசன் வகுத்துத் தந்த வழியையே இந்த அரசனும் பின்பற்றினான்.

தீய பாதையை வகுப்பவன்மீது சதாவும் இறைவனின் சாபம் இறங்கிக்கொண்டே இருக்கிறது.

நேர்மையானவர்கள் மறைந்தனரெனினும், அவர்கள் விட்டுச் சென்ற அவர்களுடைய முன்மாதிரி இன்றும் இருந்துகொண்டே இருக்கிறது; தீயவர்கள் மறைந்த பின்னரோ அவர்கள் செய்த கொலைபாதகங்களும், சாபக்கேடான செயல்களுமே எஞ்சியிருக்கின்றன.

745. மறுமை நாள்வரை அந்தத் தீயவர்களின் இனத்தைச் சேர்ந்தவர்களின் முகமும் அவர்கள் பக்கலே திரும்பியதாக இருக்கும்.

மதுரமான தண்ணீரும், கைப்பான தண்ணீரும் தத்தம் நாளங்களில்தாம் ஓடிக்கொண்டிருக்கின்றன. (அவை இரண்டும் ஒருகாலும் ஒன்றுடன் ஒன்று சேரப்போவதில்லை.) இறைவனின் சிருஷ்டிகளில் அவை மறுமை நாள் வரும்வரை இவ்விதமே ஓடிக்கொண்டிருக்கும்.

நேர்மையாளர்களுக்கு மதுரமான தண்ணீர் பிதுர்ராஜ்ஜித மானதாகும்; அந்தப் பிதுர்ராஜ்ஜிதம் எது தெரியுமா? *(நம் நல்லடியார்களுள் நாம் தேர்ந்தெடுத்துள்ளவர்களை) வேதநூலைப் பிதுர்ராஜ்ஜிதமாக அடையச் செய்கிறோம்'*[2] என்பதுதான்.

நீ சிந்தித்துப்பார்ப்பாயாயின், (இறைவனை) நாடுவோரின் பிரார்த்தனைகள் யாவும் நபித்துவத்தின் சாரத்திலிருந்து (செல்லும்) ஒளிக் கிரணங்கள் தாம் என்பதை விளங்கிக் கொள்வாய்.

அந்தக் கிரணங்கள் (தாம் கிளம்பிய) பொருள்களை (நபித்துவத்தின் சாரத்தை) வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றன. (கடைசியில்) அந்தப் பொருள்கள் உள்ள திசையில் சென்றடைகின்றன.

750. வீட்டினுள் சாளரத்தின் வழியாக விழும் சூரியனுடைய கதிர்கள் இடம்விட்டு இடம் மாறிக்கொண்டே இருக்கின்றன; ஏனெனில், வானத்தில் சூரியனும் (கிழக்கிலிருந்து மேற்காக) இடம் பெயர்ந்துகொண்டே இருக்கிறது.

---

1. குர்ஆன் 85 : 1

2. பார்க்க : குர்ஆன் 35 : 32

ஒரு கிரஹத்தோடு தொடர்பு உள்ள ஒருவன் அந்தக் கிரஹத்தின் இயல்புகளைத் தன்னகத்தே கொண்டவனாய் இருக்கிறான். உதாரணமாக, வெள்ளியைத் தன் உதய கிரஹமாகக் கொண்ட ஒருவனுடைய முழுக் கவனமும், பிரியமும், ஆசையும் இன்பந் துய்ப்பதிலேயே கருத்தாய் இருக்கும்.

செவ்வாயை உதய கிரஹமாகக் கொண்டவன் இரத்தம் சிந்தும் இயல்புடையவனாகச் சதாவும் போரையும் பகைமையையும் விழைபவனாக இருப்பான்.

இந்த (சடதத்துவக்) கிரஹங்களையன்றி, வேறு கிரகங்களும் உள்ளன; இவை எரிந்துபடமாட்டா; இவற்றில் தீய இயல்புகளும் கிடையாது.

755. இங்குள்ள, பலராலும் பெரிதாக மதிக்கப்படும் ஏழு வானங்களுக்கு அப்பாலுள்ள வேறு வானங்களில் இயங்கும் கிரஹங்கள் இவை.

தெய்வீக வெளிச்சத்தின் ஒளியுடன் திகழ்பவை; ஒன்றுடன் ஒன்று சேர்க்கப்படாமலும், ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கப்படாமலும் இருப்பவை இவை.

இவற்றைத் தம் ஜனன கிரஹமாகக் கொண்டவர், நிராகரிப்போரை வெருட்டும்போது, தம் ஆத்மாவால் அவர்களை எரித்துவிடும் தன்மை பெற்றவராயுமுள்ளார்.

அவர் கோபம் செவ்வாய் கிரஹத்தில் பிறந்தவனுடைய கோபத்தைப் போன்றதன்று; (தீமைகளைக் கண்டு வெகுண்டெழும்) கோபம் அது; சில சமயம் இவர் அதை ஆட்கொள்ளுகிறார்; சில சமயம் அது இவரை ஆட்கொள்ளுகிறது.

(மெய் ஞானியரின்) அந்த ஒளி இறைவனின் ஒளியின் இரண்டு விரல்களுக்கிடையில் எவ்விதக் குறைபாடுகளையும், மங்கிய தன்மையையும் விட்டுப் பரிசுத்தமானதாய் இலங்குகிறது.

760. இறைவன் அந்த ஒளியைச் சகல ஆத்மாக்கள் மீதும் பொழிந்துள்ளான்; ஆனால், பேரதிர்ஷ்டசாலிகள்தாம் அதை ஏற்க முன்றானையை ஏந்துகின்றனர்.

அவ்விதம் பொழியப்பட்ட ஒளியைப் பெற்றுக்கொண்ட பேரதிர்ஷ்டமுடையவர் இறைவனையன்றியுள்ள சகலவற்றையும் விட்டே அப்பாலாகிக்கொண்டவராவார்.

அன்பெனும் முன்றானை இல்லாதவர்கள் அந்த ஒளி பொழியப்பட்டதில் பங்கு பெறாதுபோன துரதிர்ஷ்டசாலிகளாவார்.

தனிப் பண்புள்ள எதுவும் அந்தப் பண்புக்குச் சார்பான ஒன்றின் பக்கலே மனந்திரும்பும்; புல்புல், ரோஜா மலரின் வதனத்திடமே காதல் கொள்ளும்.

எருதின் நிறம் அதன் புறத்தேயுள்ளது; (ஆனால்) மனிதன் விஷயத்திலோ அவனுடைய சிகப்பும் மஞ்சளுமான நிறத்தைக் காணவேண்டுமாயின் அவன் அகத்தே தேடு!

765. நல்ல வர்ணங்கள் பரிசுத்தமாகிய சாயத் தொட்டியிலிருந்து கிடைக்கின்றன; தீயவர்களின் வர்ணம் அநீதி என்ற கறுப்பு நீரிலிருந்து கிடைக்கின்றன.

அந்த நல்ல வர்ணங்கள் என்பது இறைவனின் ஞானஸ் நானமேயாகும்; தீயனவான வர்ணங்களின் நாற்றம் இறைவனின் முனிவுதான்.

கடலைச் சேர்ந்தது (கடைசியில்) கடலைச் சென்றடைகிறது. அது வந்த இடத்துக்கே (தன் மூலஸ்தானத்துக்கே) போய்விடுகிறது.

மலையுச்சியிலிருந்து கனவேகமாகப் பாய்ந்தோடும் ஆற்று நீரும், நம் உடலிலிருந்து அன்பு கலந்த வேகத்தோடு செல்லும் ஆத்மாவும் (தாம் புறப்பட்ட இடத்துக்கே) தமது மூலஸ்தானத் துக்கே போய்ச்சேருகின்றன.

### யூத அரசன் நெருப்பை எழுப்பினான்: அதற்கு அருகே விக்ரஹமொன்றை நிறுத்தினான்; அதைப் பணிபவர்கள்தீயைவிட்டுத் தப்பலாம் என்றான்.

நாய்ப்புத்தி படைத்த அந்த யூதன் என்ன செய்தான் என்று பாருங்கள்! (தான் எழுப்பிய) நெருப்புக் கிடங்கின் அருகே அவன் விக்ரஹம் ஒன்றைப் பிரதிஷ்டை செய்தான்.

770. "இந்த விக்ரஹத்துக்குச் சாஷ்டாங்கம் செய்பவன் உயிர் தப்பலாம்; அவ்விதம் செய்ய மறுப்பவன் இந்த நெருப்பின் இதயத்தில் அமர்த்தப்படுவான்" என்று பிரகடனம் செய்தான்.

தன் கீழான மனம் (நப்ஸ்) என்ற விக்ரஹத்துக்கு அதற்குரிய தண்டனையை அவன் அளியாத முறையில் அந்தக் கீழான மனத்தின் விக்ரஹத்திலிருந்து இந்த விக்ரஹம் உருப்பெற்றிருந்தது.

உன் கீழான மனத்தின் விக்ரஹம்தான் சகல விக்ரஹங்களுக்கும் தாயான விக்ரஹமாகும். ஏனெனில், (இந்தக் கல்லாலான) விக்ரஹம் ஒரு சாதாரணப் பாம்புதான்; இந்த (நப்ஸ் உண்டாக்கும்) விக்ரஹமோ பூதாகாரமான மலைப்பாம்பு ஆகும்.

*கீழான மனம் இரும்பும், சிக்கி முக்கிக் கல்லுமாகும்; (கல்) விக்ரஹமோ அவை மோதப்படுவதால் உண்டாகும் சுடர்களில் ஒன்றுதான். இந்தச் சுடர்களைத் தண்ணீரால் அணைக்கவேண்டும்.*

*ஆனால், தண்ணீரால் இரும்பையும், சிக்கிமுக்கிக் கல்லையும் சுடர் கொடுக்கவிடாமல் செய்வது எப்படி? இவை இரண்டையும் தன்னகத்தே கொண்டவன் பாதுகாப்புடையவனாக இருப்பது எங்ஙனம்?*

*775. (கல்) விக்ரஹம் கூஜாவினுள் மறைந்துள்ள சாக்கடை நீர் போன்றது; கீழான மனம்தான் அதன் ஊற்றுக்கண் ஆகும்.*

*விக்ரஹமுண்டாக்கும் கீழான மனம் தண்ணீர் போகும் வாய்க்காலில் - ஜீவிய நீருள்ள இடத்துக்கு இட்டுச்செல்லும் வாய்க்காலில் - சாக்கடை நீரைக் கொப்புளிக்கும் ஊற்றாக விளங்குகிறது.*

*ஒரு சிறு கல்லால் (ஒரு கூஜாவை மட்டுமல்ல) நூறு மண் குடங்களையே உடைத்துவிடலாம்; ஆனால், சதா நீரை உமிழ்ந்து கொண்டிருக்கும் நீரூற்றை நிறுத்துவது எப்படி?*

*ஓர் உருவத்தை உடைப்பது இலகுவான காரியம்; கீழான மனத்தை அடக்குவது இலகுவான செயல் என்று எண்ணுவதே மூடத்தனமாகும்.*

*மகனே, கீழான மனத்தின் உருவத்தை நீ காண நாடினால், ஏழு வாயில்களுடைய நரகின் கதையைப் படித்துப்பார்!*

*780. (இந்தக் கீழான மனத்திலிருந்து) ஒவ்வொரு கணமும் ஏமாற்றுவேலை ஒன்று வெளிப்பட்டுக்கொண்டே இருக்கிறது; இந்தப் பித்தலாட்ட வேலை ஒவ்வொன்றிலும் நூற்றுக்கணக்கான பிர்அவ்ன்கள் தம் பரிவாரங்களோடு மூழ்கிப் போய்க் கொண்டிருக்கிறார்கள்.*

*மூஸா (அலை) அவர்களின் இறைவனையும், மூஸாவையும் நோக்கி ஓடு! பிர்அவ்னின் (கலகஞ்செய்யும்) அகந்தையால் மெய்விஸ்வாசமெனும் தண்ணீரைக் கொட்டிக்கொள்ளாதே!*

*ஏகனையும், அஹ்மது (ஸல்) அவர்களையும் பற்றிக்கொள் சகோதரா, இவ்வுடலாகிய அபூ ஜஹலைவிட்டும் தப்பித்துக்கொள்!*

**நெருப்பிலிருந்து சிசு பேசிற்று; ஜனங்களை நெருப்பில் குதிக்குமாறு கூறிற்று.**

அந்த யூதன் குழந்தையை இடுக்கியிருந்த பெண்ணொருத்தியை அந்த உருவத்தின் முன் கொணர்ந்து நிறுத்தினான். நெருப்பு, செந்தழல் வீசி எரிந்துகொண்டிருந்தது.

அவன் அந்தக் குழந்தையை அவளிடமிருந்து பறித்து நெருப்பில் வீசினான்; பெண் திகிலடைந்தாள்; தன் விஸ்வாசத்தை விட்டுத் தன் மனத்தை வாபசாக்கிக்கொண்டாள். (தன் விஸ்வாசத்தைக் கைவிட்டாள்.)

785. அவள் விக்ரஹத்தின்முன் பணியப்போகும் சமயம் (நெருப்பில் வீசப்பட்ட) குழந்தை கத்திற்று: "நிச்சயமாக நான் இறக்கவில்லை.

அம்மா, இங்கே வா! நான் நெருப்பிடை இருப்பதாகத் தோன்றினாலும், நான் இங்கே மகிழ்வுடன்தான் இருக்கிறேன்.

நெருப்பு (சத்தியத்தைத்) திரையிட்டு மறைப்பதற்காகக் கண்களைக் கட்டிவிடும் சூனியமாகும்; (யதார்த்தத்தில்) இது மறைவான தலத்திலிருந்து தன் தலையைத் தூக்கியுள்ள தெய்வ அருள்தான்.

அம்மா, இங்கே வா! (வந்து) இறைவனின் அத்தாட்சிகளைப் பார்! ஆண்டவனுடைய நேயர்கள் அடையும் பேரின்பத்தைக் கண்கொண்டு பார்!

உள்ளே வந்து நெருப்பின் தோற்றமுடைய தண்ணீரைப் பார்! (யதார்த்தத்தில்) நெருப்பான - வெளித் தோற்றத்தில் மட்டுமே தண்ணீராகத் தோன்றும் ஓர் உலகைவிட்டு இங்கே வா!

790. வா இங்கே! நெருப்பிடை மல்லிகையும், முல்லையும் மலரக் கண்ட இப்ராஹீம் (அலை) அவர்களின் மர்மங்களை இங்கே பார்!

உன்னிலிருந்து நான் வெளிப்பட்டபோது மரணத்தையே கண்டேன்; உன்னிலிருந்து விழுந்தபோது நான் அடைந்த பீதி எல்லையற்றது.

ஆனால், நான் பிறந்த சமயம், (உன் கருப்பையாகிய) குறுகிய சிறையிலிருந்து தப்பி, காற்றோட்டமான, அழகிய பரந்த உலகில் வந்தடைந்தேன்.

இப்போது அந்த (மண்) உலகும் உன் கருப்பை போன்றே (சிறையாக) இருப்பதை நான் காண்கிறேன். ஏனெனில், இந்த நெருப்பிடை நான் அத்தகைய ஆஸ்வாசத்தைக் காண்கிறேன்.

இந்த நெருப்பினுள்ளே, ஒவ்வோர் அணுவும் ஈசாவின் உயிரளிக்கும் தன்மையுடையதாயுள்ள உலகை நான் காண்கிறேன்.

795. ஹா, வெளிப் பார்வையில் இல்லாததாயும், சாராம்சத்தில் இருப்பதாயுமுள்ள உலகம் இது! அந்த (மண்) உலகமோ வெளித்தோற்றத்தில் இருப்பதாயினும் சாஸ்வதமற்றதாக இருக்கிறது!

அம்மா, இங்கே வா! தாய்மையின் உரிமையால் உன்னை வேண்டுகிறேன்; இந்த நெருப்பைப் பார்! இதில் (நெருப்பினுள்) உக்கிரமில்லாதிருப்பதைப் பார்!

அம்மா, வா இங்கே! பெருவாழ்வு வந்துவிட்டது! அம்மா, இங்கே வா! நல்லதிர்ஷ்டத்தைக் கைநழுவ விடாதே!

அந்த (யூதக்) கொடுங்கோலனின் சக்தியை நீ கண்டாய்; உள்ளே வந்து இறைவனின் சக்தியையும், கருணையையும் பார்!

நான் உன் பாதத்தை (இங்கே) இழுப்பது உன்மீது கொண்ட இரக்கத்தால்தான். நான் அடைந்துள்ள பேரின்பப் பரவசத்தில் எனக்கு எதுபற்றியுமே கவலை இல்லாமலாகிவிட்டது.

800. உள்ளே வா! மற்றவர்களையும் இங்கே வருமாறு அழை! ஏனெனில், இந்த நெருப்பினுள்ளே அரசன் பெரிய விருந்தொன்றைச் சித்தப்படுத்தியுள்ளான்.

சத்திய விஸ்வாசிகளே, நீங்கள் யாவரும் உள்ளே வாருங்கள்! இந்தச் சத்திய சன்மார்க்கத்தின் இனிமையைத் தவிர மற்ற யாவும் சித்திரவதைதான்.

விளக்கைக் காணும் விட்டில்கள்போல் நீங்கள் யாவரும் உள்ளே வாருங்கள்! நூறு நூறு வசந்தங்களையுடைய இந்தப் பேரதிர்ஷ்டத்தை ஏற்க விரையுங்கள்!"

(இவ்விதம்) அந்தச் சிசு கூட்டத்தாரிடைக் கூக்குரல் எழுப்பிற்று; அது கேட்டு ஜனங்களின் இதயத்தில் பயபக்தி நிரம்பிற்று.

அதன்பின், ஜனங்கள் ஆண்களும் பெண்களும் தம்மை மறந்தவர்களாக நெருப்பினுள் குதித்தனர்.

805. காவலாளியின்றி, இழுக்கப்படுவதின்றி, கசப்பையும் இனிமையாக்குபவனான நேயன்மீது கொண்ட அன்புக்காக (தம்மை மறந்தவர்களாக நெருப்பினுள் குதித்தனர்).

கடைசியில் அரசனின் காவலாளிகள் ஜனங்களை நோக்கி, "நெருப்பில் விழ வேண்டாம்!" என்று கூறித் தடுத்து நிறுத்தும் அளவுக்கு (ஜனங்கள் தீவிரமாக நெருப்பில் குதித்தனர்).

அந்த யூதன் முகம் கறுத்தவனானான். (வெட்கத்தால் சாம்பியவன் ஆனான்.) ஏமாற்றத்தால் பெரிதும் வருந்தி மனம் புண்பட்டவன் ஆனான்.

ஏனெனில், ஜனங்கள் தங்கள் மெய்யுறுதியில் அதிகப் பற்றுதலுடையவர்களாகவும், தங்கள் உடலை நாஸ்தி (பனா) ஆக்குவதில் அதிக உறுதியானவர்களாகவும் ஆகிக் கொண்டிருந் தனர். (இது அவனுக்குப் பொறுக்கவில்லை.)

ஷைத்தானை அவனுடைய சதித் திட்டத்திலேயே சிக்கவைத்த இறைவனுக்கே சர்வ புகழும்! ஷைத்தானின் முகத்தைக் கறுப்பாக் கிய (அவனை மானபங்கப்படுத்திய) இறைவனுக்கே சகல புகழும்!

810. அந்த ஜனங்கள் (கிறிஸ்தவர்கள்) அனைவருடைய முகத்திலும் அவன் பூசிய அழுக்கு முழுமையுமே அந்தக் கடையனுடைய முகத்தில் போய்த் தேங்கிக் கொண்டது.

ஜனங்களின் உடையை (கண்ணியத்தையும், கட்டுப்பாட்டை யும்) கிழித்தவனுடைய உடை கிழிந்துபோய் விட்டது; ஆனால், அந்த ஜனங்களுடைய உடைகள் சிறிதுகூடப் பாதிப்படைய வில்லை.

**நபிபெருமான் (ஸல்) அவர்கள் நாமத்தை ஏளனமாக உச்சரித்தவனுடைய வாய் கோணிப் போய்விட்டது.**

அவன் வாயைக் கோணலாக வைத்துக்கொண்டு முஹம்மது (ஸல்) அவர்கள் பெயரை ஏளனமாக உச்சரித்தான்; அவன் வாய் கோணியபடியே நின்று போயிற்று.

அவன் நபிபெருமானாரிடம் சென்று, "இறைவனின் திருத்தூதரே, என்னை மன்னித்தருளுங்கள்! (தெய்வீக) மெய்நிலை கண்ட ஞானம் உங்களுக்கே உரியது.

என் மூடத்தனத்தால் நான் உங்களைக் கேலி செய்தேன்; நான் கேலிக்குரியவனாகிவிட்டேன்; இந்தத் தண்டனை எனக்கு வேண்டியதுதான்" என்று முறையிட்டான்.

815. இறைவன் யாருடைய திரையையாவது கிழித்தெறிய (யாரையாவது கேவலப்படுத்த) நாடுவானாயின் அவன் மகான்களை இகழ்வாகப் பேசுவதில் அவனைக் கருத்துக் காட்டச் செய்வான்.

இறைவன் யாருடைய குறையையாவது மறைக்க நாடினால் புகழப்பட வேண்டியவர்(பெரியோர்)களுக்கு எதிராக அவன் எந்தக் குறையையும் மூச்சுக்கூட விடாதபடி செய்துவிடுகிறான்.

இறைவன் நமக்கு உதவ நாடினால், நம் மனத்தைப் பணிவான புலம்பலில் ஈடுபடச் செய்கிறான்.

ஹா, அவனுக்காக வருத்தெடுக்கப்படும் (கஷ்டங்களைச் சகிக்கும்) இதயமே பாக்கியமுடையதாகும்.

சகல அழுகையின் முடிவும் சிரிப்புத்தான்; முடிவைத் தீர்க்கதிருஷ்டியால் காண்பவனே (இறைவனின்) பாக்கியமுள்ள நல்லடியானாவான்.

820. நீர் ஓடுமிடத்திலெல்லாம் பசுமையுண்டு; கண்ணீர் ஓடுமிடத்திலெல்லாம் (தெய்வக்) கருணை காட்டப்படுவதுண்டு.

தண்ணீர் இறைக்கும் ஜகடையைப் போல் அழுபவனாகவும், ஈரமுடைய கண்ணுடையனாகவும் இரு! (அதன்மூலம்) உன் ஆத்மாவின் முற்றத்தில் பசும் பயிர்கள் முளைக்கட்டும்.

நீ கண்ணீரை விரும்புவாயாயின் கண்ணீர் சிந்துவோரிடம் கருணை காட்டு; நீ கருணையை வேட்பாயாயின் பலஹீனமானோரிடம் கருணை காட்டு.

### நெருப்பு யூத அரசனை இடித்துக் கூறல்

அரசன் நெருப்பின் பக்கம் திரும்பி, "ஹே, பயங்கர இயல்புடையாய், உலகை உண்ணும் உன் இயல்பு எங்கே?" என்று வினவினான்.

அவன் மேலும் கேட்டான் : "நீ எரிக்காத காரணமென்ன? உன் தனிக்குணம் யாதாயிற்று? எங்கள் அதிர்ஷ்டத்தால் உன் எண்ணமே மாறிவிட்டதா?

825. நெருப்பை வணங்குபவனிடங்கூட இரக்கம் காட்டாதவனாயிற்றே நீ! அப்படியிருக்க உன்னை வணங்காத ஒருவன் காப்பாற்றப்பட்டது எப்படி?

நெருப்பே நீ, ஒருகாலும் பொறுமையாய் இருந்ததில்லையே! நீ இப்போது இப்படி எரிக்காமல் போனது ஏனோ? அது என்ன, உன்னிடம் சக்தியில்லையா?

கண்ணையோ மனத்தையோ கட்டும் மந்திர வாதமா இது? இவ்வளவு பெரிய நெருப்பு ஜுவாலை எரிக்காதது எப்படி?

யாரேனும் உன்மீது சூனியம் வைத்துவிட்டார்களா? அல்லது, மந்திரத்தால் இந்த நிலை உண்டாயிற்றா? அல்லது, எமது

துரதிர்ஷ்டத்தால் நீ உன் இயல்புக்கு மாற்றமாக நடந்துகொள் கிறாயா?"

நெருப்புப் பேசிற்று : "உருவத்தை வணங்குபவனே, நான் நானேதான்; நான் நெருப்பேதான். நீ உள்ளே வந்து என் தகிக்கும் தன்மையைக் காண்.

830. என் இயல்பும் தன்மையும் மாறவில்லை; நான் இறை வனின் வாளாவேன்; அவன் கட்டளை கொண்டு வெட்டுகிறேன்.

விருந்தாளிகள் முன் வாலாட்டிக்கொண்டு கூடாரவாயிலில் கிடக்கும் துருக்கியனின் காவல் நாய்கள்

யாரேனும் அந்நியன் அந்தக் கூடாரத்தின் பக்கம் வரக்கண் டால் அவன்மீது சிங்கங்கள்போல் பயங்கரமாக உருமிக்கொண்டு பாய்வதுண்டு.

பயபக்தியில் - எஜமான விஸ்வாசத்தில் நான் நாய்க்குச் சளைத்தவனல்லன்; ஜீவசக்தியில் இறைவன் ஒரு துருக்கியனைவிடச் சளைத்தவனல்லன்".

உன் இயல்பென்னும் நெருப்பு நீ வேதனையடையும்படி செய்யுமாயின், சன்மார்க்கத்தின் இறைவனின் கட்டளைப்படி அது எரிகிறதென்பதை உணர்.

835. உன் இயல்பென்னும் நெருப்பு உனக்கு மகிழ்ச்சியளிக்கு மாயின் (அதற்குக் காரணம்) சன்மார்க்கத்தின் இறைவன் அங்கே மகிழ்ச்சியை உண்டாக்குகிறான் என்பதை அறிந்துகொள்!

நீ வேதனைப்பட நேர்ந்தால் இறைவனிடம் பாவமன்னிப்புத் தேடு; சிருஷ்டியாளனின் உத்தரவால் உண்டாகும் வேதனை பயன் தருவதாகும்.

அவன் நாடும்போது வேதனையே இன்பமானதாகவும், விலங்கே விடுதலையாகவும் ஆகிவிடும்.

காற்றும், மண்ணும், தண்ணீரும், நெருப்பும் (அவன்) அடிமை களாகும்; உனக்கும் எனக்கும் மாண்டவையாயுள்ள அவை, அவன்முன் உயிருள்ளவையாகும்.

இறைவன் முன்பு, ஒரு காதலனைப்போல இரவும் பகலும் சதாவும் உடலைச் சுழலவிட்டுக்கொண்டு (அவன் கட்டளைப்படி நடப்பதற்காக) நெருப்பு காத்து நிற்கிறது.

840. நீ கல்லில் இரும்பை மோதினால் நெருப்பு வெளியில் குதிக்கிறது; இறைவனின் உத்தரவு கொண்டே அது வெளியில் காலெடுத்து வைக்கிறது.

அநீதி என்னும் கல்லையும் இரும்பையும் ஒன்றுடன் ஒன்று மோதாதே! ஏனெனில், இவை ஆணையும், பெண்ணையும்போல வம்சவிருத்தி செய்கின்றன.

இரும்பும் கல்லும் காரணப் பொருள்கள் தாம். ஹே நல்லவனே, (அவற்றுக்கும்) அப்பால் பார்!

இந்த (வெளிக்) காரணம், அந்த (ஆத்மீகக்) காரணத்தால் உண்டாவதுதான்; ஒரு காரணம் அதற்கான ஒரு காரணமின்றி வெளியாவதெப்படி?

நபிமார்கள் தமது பாதையில் நடப்பதற்கு வழிகாட்டிய காரணங்கள் இந்த (புறக்) காரணங்களை விட உன்னதமானவை யாகும்.

845. அந்த (ஆத்மீகக்) காரணம் இந்த (புறக்) காரணத்தை இயங்கச் செய்கிறது; சில சமயம் இதை அது பயனற்றதாக ஆக்கி விடுகிறது.

(சாதாரண) மனமுடையோர் இந்த (வெளிக்) காரணத்தையே நன்கு அறிவர்; ஆனால், நபிமார்களோ அந்த (ஆத்மீகக்) காரணத்தையே நன்கு அறிந்திருந்தனர்.

இந்தக் 'காரணம்' (ஸபப்) எனும் அரபி வார்த்தையின் அர்த்தம் யாது? கயிறு (ரசன்) என்று கூறு. இந்தக் கயிறு ஆதி கற்பனையால் (இம்மையெனும்) கிணற்றுள் வந்துள்ளது.

தண்ணீர் இழுக்கும் ஜகடையின் சுழற்சி கயிற்றை மேலும் கீழும் நகரச் செய்கிறது; (ஆனால்,) ஜகடையைச் சுழலவைப்பவனைக் காணாமலிருப்பது தவறாகும்.

எச்சரிக்கை, எச்சரிக்கை! இவ்வுலகிலுள்ள காரணங்களெனும் ...ள் (மறுமையின்) வேகமாகச் சுழலும் ஜகடையிலிருந்து ...வதாக எண்ணாதே!

...று எண்ணினால்) நீ வானுலக ஜகடையைப் ...ம், சுழல்பவனாகவும் இருந்து விடுவாய்; உன் ...ரக் கட்டைகள் போல் எரிந்து போவாய்.

காற்றும் நெருப்பும் இறைவனுடைய கட்டளைக்கு உட்பட்டவை; இறைவனின் மதுவைக் குடித்து இரண்டுமே மஸ்துடையவையாகிவிடுகின்றன.

மகனே, நீ கண்ணைத் திறந்தால் கருணை காட்டல் எனும் தண்ணீரும், கோபம் எனும் நெருப்புங்கூட இறைவனிடமிருந்தே வருவதைக் காணலாம்.

இறைவன் காற்றின் ஆத்மாவிடம் தெரிவிக்காதிருந்திருப்பின், ஆது கூட்டத்தாரிடை அது (விஸ்வாசிகளையும் நிராகரிப்பாளர்களையும்) பிரித்தறிந்திருப்பது எப்படி?

ஹூத் (அலை) அவர்கள் தங்களைச் சேர்ந்த மெய்விஸ்வாசிகளைச் சுற்றி ஒரு கோடு கிழித்தார்கள். அதனால், புயல் காற்று, (அவர்கள் இருந்த) அந்தப் பகுதியை அடைந்ததும் வேகம் தணிந்து மிருதுவாகிவிட்டது.

855. ஆனால், அந்தக் கோட்டுக்கு வெளியிலிருந்த அனைவரையும் அது தூக்கி வீசித் துண்டு துண்டாக்கி விட்டது.

இதுபோன்றே (ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்த ஞானி) ஷைபானுர் ராயியும் ஜும்ஆத் தொழுகைக்குப் போகும்போது,

அச்சமயம் ஓநாய் வந்து ஆடுகளை அடித்துத் தின்று விடாமலிருப்பதற்காக ஆட்டு மந்தையைச் சுற்றி நன்கு தெரியும் படியாகக் கோடு ஒன்றைக் கிழித்துவிடுவார்கள்.

எனவே, ஓநாய் எதுவும் அந்தக் கோட்டைத் தாண்டி உள்ளே போகாது; அந்தக் கோட்டைத் தாண்டி ஓர் ஆடுகூட வெளியில் போவதுமில்லை.

(கோட்டினுள் சென்று ஆடுகளைத் தின்ன ஆசைப்பட்ட) ஓநாயின் பேராசை என்ற காற்றும், (கோட்டைத் தாண்டி வெளியில் போய் மேய வேண்டுமென்று) ஆடுகள் கொண்டிருந்த வெகுளித்தனம் என்ற காற்றும் இறைவனின் மெய்யடியார் கிழித் கோட்டைக் கண்டு கட்டுப்பட்டுவிட்டன.

860. இவ்விதமே மரணம் என்ற காற்றும் மெய்ஞா நாதாக்களுக்குப் பூங்காவின் வசந்தமாகவே இனின விளங்குகிறது.

நெருப்பு தன்னில் வீசப்பட்ட இப்ராஹீம் களைத் துன்புறுத்தவில்லை; அவர்கள் அல்லா

என்று தெரிந்துகொண்ட பின்னும் நெருப்பு அவர்களைத் துன்புறுத்துவது எப்படி?

(பஞ்ச பூதங்களில் ஒன்றான நெருப்பு அல்லாஹ்வின் உண்மை யான நல்லடியார்களை எரிக்க முடியாதது போல,) இம்சையின் ஆசாபாசமென்ற நெருப்பும் சன்மார்க்க சீலர்களை (நாதாக்களை) ஒன்றும் செய்ய முடியாது; அது வழிகேடர்களைத்தான் நரகில் கொண்டு போய்ச் சேர்க்கும்.

(நைல்) நதியின் அலைகள் இறைவன் உத்தரவுப்படி பொங்கி எழுந்தபோது மூஸா (அலை) அவர்களுடைய கூட்டத்தாரையும், பிர்அவ்னின் கூட்டத்தாரையும் இனம்கண்டுகொண்டனவல்லவா! (முன்னவர் கடந்துசெல்ல விலகி வழிவிட்ட நீல நதி பின்னவர் வந்தபோது அவர்களைத் தன்னில் மூழ்கடித்துக்கொண்டது.)

காரூன் நின்ற மண்ணுக்கு இறைவன் கட்டளையிட்டதும், அது அவன், அவனுடைய செல்வம், அரசபீடம் யாவையும் தன்னுள் விழுங்கிவிட்டது.

865. தண்ணீராலும், களிமண்ணாலுமான உருவம் ஈஸா (அலை) அவர்களின் மூச்சுப் பட்டதும் இறக்கையை விரித்துக் கொண்டு பறக்கும் ஒரு பறவையாகிவிட்டது.

(இதுபோன்றே உன் சடலமான) தண்ணீரிலும் களிமண்ணிலு மிருந்து, இறைவனைப் பரிசுத்தப்படுத்தும் துதி (தஸ்பீஹ்) புறப்பட்டுக்கொண்டிருக்குமாயின் அது உன் இதயத்தின் சித்தசுத்தி (தக்வா)யின் ஊதுதலால் சுவன லோகத்துப் பறவையாக ஆகிவிடும்.

மூஸா (அலை) அவர்களுடைய (தெய்வீகமான) தேஜஸைக் கண்ட சீனா மலை, மகிழ்ச்சியால் குதித்தாடியவாறு, சம்பூரண மானதொரு ஸூபியாக ஆகி, சகல ஆசாபாசங்களையும் விட்டுப் பரிசுத்தமானதாக ஆகிவிட்டது.

மலை சம்பூரண ஸூபியானதில் வியப்பென்ன? மூஸா (அலை) அவர்களுடைய உடலும் ஒரு பிடி மண்ணால் ஆனதாகத்தானே இருந்தது!

## தன் உற்ற நேயர்களின் நல்லுரைகளையும் யூத அரசன் ஏற்க மறுத்து ஒதுக்குதல்

இத்தகைய பேராச்சரியமான விஷயங்களைக் கண்ட பின்னும், அந்த யூத அரசன் அவற்றைக் கேலி செய்யவும், மறுக்கவும் துணிந்தான்.

870. அவனுடைய ஆலோசகர்கள் அறிவுறுத்தினர், "அரசே, (இந்த அநீதியை) நீங்கள் வரம்பு மீறுமளவுக்கு நிலைநிறுத்தத் துணிய வேண்டாம்! பிடிவாதம் என்ற குதிரையை அந்த அளவுக்கு வெருட்ட வேண்டாம்!" என்று.

அந்த ஆலோசகர்களை அவன் விலங்கிட்டுச் சிறையில் தள்ளச் செய்தான்; தன் அக்கிரமச் செயல்களைத் தொடர்படியாக அதிகரித்துக்கொண்டே வந்தான்.

நிலைமை இத்தகைய படுமோசமான நிலையை எய்தியிருந்த சமயம், "ஹே யூத நாயே, நில்! இதோ நம் தண்டனை வந்துவிட்டது! அதை ஏற்கத் தயாராகு!" என்று ஒரு சப்தமுண்டாயிற்று.

அதன்பின், நெருப்பு நாற்பது கெஜ உயரம் எழுந்து அந்த யூத அரசனையும் அவன் கூட்டத்தாரையும் சூழ்ந்து, அவர்களை எரித்துவிட்டது.

அவர்களுடைய (ஆதி) மூலம் நெருப்பாகவே இருந்ததால்தான் கடைசியில் அவர்கள் தமது மூலஸ்தானத்துக்கே மீண்டுவிட்டனர்.

875. இந்த (ஷைத்தான் குணமுள்ள) ஜனங்கள் நெருப்பாலேயே சிருஷ்டிக்கப்பட்டிருந்தார்கள். ஆதலின் அவர்கள் நெருப்பிலேயே சென்று மறைந்துவிட்டனர்; (ஒரு பொருளின்) பகுதி (அதன்) முழுமையான மூலத்தின் பக்கல்தானே செல்லும்!

அவர்கள் மெய்விஸ்வாசிகளை எரிப்பதற்கான நெருப்பாய் இருந்தார்கள்; அவர்களுடைய நெருப்பு சருகுகளைத் தின்பது போல அவர்களை எரித்துவிட்டது.

'உம்மு ஹாவியா'[1] (என்ற நரக நெருப்பைத்) தன் தாயாகக் கொண்டவன் தங்குமிடம் 'ஹாவியா' (நரக நெருப்பு) ஆகவே இருக்கும்.

சிசுவின் தாய் சதா அதையே நாடுகிறாள். (மேலே) கிளைகளை யொட்டியே (கீழே) வேர்களும் ஓடுகின்றன.

தொட்டியில் தண்ணீரைத் தேக்கி வைத்திருப்பினும், காற்று அதை உறிஞ்சி வற்றவைத்துவிடுகிறது. ஏனெனில், தண்ணீரும் பஞ்ச பூதங்களில் ஒன்றாகையால் காற்றுடன் கலந்து போகிறது.

---

1. குர்ஆன் 101 : 9, 10

880. தண்ணீரைக் காற்று நீ அறியாவண்ணம் சிறுகச் சிறுக வெளியேற்றித் தன் மூலஸ்தானத்தில் இணைத்துக் கொள்கிறது.

இவ்வாறுதான் நமது சுவாசமும் நமது உயிரைச் சிறுகச் சிறுக இம்மை என்ற சிறைக்கோட்டத்திலிருந்து களவாடிக் கொண்டிருக்கிறது.

இறைவனைப் புனிதப்படுத்தித் துதிக்கும் தோத்திரங்களின் (ஹம்து, தஸ்பீஹுகளின்) நறுமணம் இறைவன் மாட்டுச் செல்கிறது. நம்மிலிருந்து வெளிப்படும் இது இறைவன் மட்டும் அறிந்துள்ள ஒரு மகத்தான ஸ்தலம்வரை சென்றடைகிறது.

நமது மூலமந்திர பஜிப்புகள் நமது பேணுதலின் புனிதத் தன்மையால் நாம் தரும் அன்பளிப்பாக நித்தியத்துவமான தலத்தை நோக்கி விரைகின்றன.

பின்னர் இறைவனின் கருணையால் (நமது) பஜிப்புகளின் நற்கூலி இரட்டிப்பாக நமக்கு அருளப்படுகிறது.

885. அப்போது (ஏற்கெனவே நாம் பஜித்தது போன்ற) மூலமந்திரங்களை நாம் உச்சாடனம் செய்கிறோம். அதன் பயனாய் இறைவன் தன் அடியார்களுக்கு (ஏற்கெனவே அருளியதுபோல்) மேலும் சம்மானங்களை நல்குகிறான்.

இவ்விதம் (நமது புனிதமான பஜிப்பு) மேலே ஏறஏற இறைவனின் கருணாகடாட்சம் நம்மீது இறங்கிக்கொண்டே இருக்கிறது; எனவே, இவை (அந்தப் பஜிப்பின் ஏற்றமும், தெய்வக் கருணையின் இறங்குதலும்) சதாவும் நடக்குமாறு நீ கண்காணித்துக்கொள்.

இப்போது நாம் நம் தாய்மொழியில் பேசுவோம்; அதன் பொருள் இதுதான்; (இறைவன் ஆத்மாவைத் தன் பக்கல் இழுப்பதாலுண்டாகும்) இந்த இன்பம் வருகிற அதே திசையிலிருந்துதான் தொழுகையிலும் அதைத் தொடர்ந்தும் உண்டாகும் பேரின்பப் பரவசத்தாலான அந்தச் சக்தியும் வந்துள்ளது.

தாங்கள் மனம் வைத்துள்ள இன்பத்தின் பக்கல் என்றாவது ஒரு நாள் போய்விட வேண்டும் என்ற நாட்டத்துடன் சகலவித ஜனங்களுடைய நயனங்களும் அந்தத் திசையில் கவனங்காட்டுகின்றன.

ஒவ்வொன்றுக்கும் தத்தம் இனத்தைச் சென்றடைவதிலேயே இன்பமுண்டாகிறது; ஒரு பொருளின் ஒரு பகுதி அதன் முழுமையில் மிஸிரமாவதில் இன்பமடைகிறது.

890. அந்தப் பொருளின் குறிப்பிட்ட பகுதிக்கு இனத்தன்மை இல்லாதிருப்பினும் அந்த முழுப் பொருளுடனும் அது இணைந்ததும், இனத்தன்மை தானாகவே வந்து அதையும் ஆட்கொண்டு விடுகிறது.

(ஒன்றின் இனமல்லாத ஒன்று அதன் இனமாவதற்கு உதாரணமாவது) ரொட்டியும், தண்ணீரும் (முதலில்) மனித இனத்தில் இல்லாதவையாய் இருப்பினும் (உணவாக மனித உடலுள் சென்று) மனித இனமாகி மனிதனில் கலந்துபோகின்றன.

சாதாரணமாக, ரொட்டிக்கும் தண்ணீருக்கும் நம் இனமாகும் தோற்றம் இன்றாயினும், (அவை நம் உணவாகி, ஜீரணித்து, நம் உடலின் அம்சமாகிவிடும்) அவற்றின் முடிவைக் கவனித்தால் அவை மனித இனமாகிவிட்டதைக் காண்பாய்.

ஒருகால் நாம் வேறு இனம் எதனிடமாவது வேட்கை கொள்வோமாயின் அப்போது அநேகமாக அது (அந்த வேற்று இனம்) நமது இனத்துக்கு ஒப்பானதாகவேனும் இருந்தே தீரும்.

இவ்வாறு இடையில் காணப்படும் இயல்பு கடன் வாங்கியதாகும்; கடன் வாங்கிய எதுவும் நிரந்தரமானதன்று.

895. பறவையானது வேட்டைக்காரன் தன் இனப் பறவைபோல் குரலெழுப்புவதைக் கேட்டு அந்தக் கவர்ச்சியில் கீழே இறங்கி வருமாயினும், (அவனைக் கண்டதும்) தன் இனப் பறவைகளைக் காணாது பீதியோடு பறந்து ஓடிப்போய்விடும்.

தாகமுடையவன் கானல் நீரைத் தண்ணீர் என்று நம்பி அதன் அருகில் செல்வானாயினும், ஏமாற்றத்தோடு தண்ணீருள்ள இடத்தைத் தேடி அங்கிருந்து அகல்வான்.

வறியவன் போலித் தங்கம் கிடைத்தாலும் மகிழ்ச்சியடைவானாயினும், அது மாற்றுப் பார்க்கும் இடம் சென்றதும் கவைக்கு உதவாது என்று கண்டுபிடிக்கப்பட்டு விடுகிறது.

எச்சரிக்கை! போலிகள் (நயவஞ்சகர்கள்) யாரும் உன்னை வழிகெடுத்துவிடாமல் விழிப்புடனிரு! எச்சரிக்கை, உண்மையற்ற தவறான சித்தாந்தங்கள் உன்னை (நாசமெனும்) கிணற்றில் தள்ளிவிடாமல் கவனித்துக்கொள்!

(இதற்கு மேற்கோளாக) 'கலீலா-வ-திம்னா' என்ற நூலிலிருந்து இந்தக் கதையைப் படித்து, இதிலடங்கிய நீதியைத் தேடி அடைந்துகொள்!

## வன விலங்குகளின் கதை!
## பரஞ்சாட்டுதலின் விளக்கம்

900. நீர் வளம், நில வளமுள்ள இடமொன்றில் வாழ்ந்த வேட்டைக்கு இலக்காகும் சாகபட்சணிகளான பிராணிகள் தொடர்படியாகச் சிங்கம் ஒன்றின் தொல்லைக்கு இலக்காகி வந்தன.

சிங்கம் புதரில் மறைந்திருந்து, சமயம் பார்த்து அவற்றின்மீது பாய்ந்து அவற்றில் ஒன்றிரண்டை அடித்துச் சென்று கொண்டிருந்தது; இதனால், அந்த மேய்ச்சலிடமே அவற்றுக்கு வெறுப்பூட்டுவதாக ஆகிவிட்டது.

அவை யாவும் ஓர் ஏற்பாடு செய்துகொண்டு சிங்கத்திடம் வந்தன. "தினமும் உங்கள் பசியாறுவதற்காக எங்களில் ஓரிருவர் தினமும் உங்கள் இருப்பிடத்தில் ஆஜராகிவிடுகிறோம்.

இனி (வேறு) வேட்டையை நாடி நீங்கள் வெளியில் வரவே கூடாது; அதனால் நாங்கள் மேயும் புல்லே எங்களுக்குக் கசப்பானதாக மாறிவிடுகிறது" என்று வேண்டிக்கொண்டன.

### சிங்கம் தந்த பதில்

சிங்கம் சொல்லிற்று : "சரி, உங்கள் ஏற்பாட்டில் நல்லெண்ணமிருப்பின், பித்தலாட்டமில்லாதிருப்பின், அதன்படியே செய்கிறேன். ஏனெனில், நான் ஜைதிடமும், பக்கரிடமும் (சாமான்யர்களிடம்) எத்தனையோ தடவை ஏமார்ந்ததுண்டு.

905. மனிதர்களுடைய கபடச் செயலாலும், ஏமாற்றாலும் நான் கொல்லப்பட்டுமிருக்கிறேன். (மனிதப்) பாம்புகளுடையவும், தேள்களுடையவும் கடியையும் நான் அனுபவித்திருக்கிறேன்.

(மற்றவர்கள் கிடக்கட்டும்) என்னுள் காத்துக் கிடக்கும் சதையுடைய மனிதனே (என் நப்ஸே) சகல மனிதர்களையும்விட மோசடியிலும், வஞ்சகத்திலும் கைதேர்ந்தவனாய் இருக்கிறானே!

'மெய்விஸ்வாசி இரண்டு தடவை கடிபட மாட்டான்' என்ற நபிமொழியை என் காதுகள் கேள்விப்பட்டுள்ளன."

### இறைவனிடம் பரஞ்சாட்டுதலின் பெருமையைப் பிராணிகள் வலியுறுத்தல்:

அவை கூறின: "அறிவுமிக்க பெரியோய், முன் எச்சரிக்கையாய் இருப்பதைக் கைவிட்டுவிடுங்கள்; தெய்வ விதிப்புக்கு எதிராக முன்னெச்சரிக்கையால் எதுவும் செய்யமுடியாது.

*முன்னெச்சரிக்கை என்பது குழப்பத்தையும், துயரத்தையுமே சேர்ப்பதாகும். எனவே, இறைவன் மீது பாவத்தைப் போடுங்கள். இறைவன் மீது பாரத்தைப் போடுங்கள். இறைவன்மீது பரஞ்சாட்டு வது எதையும்விடச் சிறந்ததாகும்.*

*910. பயங்கரமும், படுகோபமும் உடையோய், இறைவனின் விதிப்போடும் தீர்ப்போடும் (கலா, கத்ரோடு) எதிர்க்காதீர்கள். எதிர்ப்பின் அவை உங்களோடு மோத ஆயத்தமாக இருக்கின்றன.*

*இறைவனின் புனித ஆணைக்குமுன்பு (அதை எதிர்க்காமல்) பிணம்போல் தலைசாய்த்துவிடவேண்டும். இன்றேல், பொழுது உதயத்தின் நாயனு*[1]*டைய கோபத்துக்கு ஆளாக நேரும்."*

**முயற்சியின் பெருமையையே சிங்கம் மீண்டும் வலியுறுத்தல்**

*சிங்கம் பதிலளித்தது: "அது சரி, இறைவன்மீது பரஞ்சாட்டுதல் சரியான வழிகாட்டியாயின், முயற்சிப்பது நபிபெருமானார் காட்டிய புனித முன்மாதிரியையே பின்பற்றுவதல்லவா!*

*'இறைவன்மீது பரஞ்சாட்டுவதுடன் உம் ஒட்டகையின் முட்டுக்கால்களையும் கட்டிப்போடும்' என்று சப்தமிட்டு இறை வன் தூதர் பகன்றுள்ளார்களே!*

*'உழைத்து உண்பவனே இறைவனின் அன்புக்குரியவன்' என்ற நுட்பத்தின் தாத்பரியத்தை நீங்கள் அறிய வேண்டும்; பரஞ்சாட்டு தலின் பெயரால், நீங்கள் முயற்சியில் இறங்காமல் சோம்பிவிடக் கூடாது."*

**பிராணிகள் உழைப்பைவிட பரஞ்சாட்டுதலையே விரும்புதல்**

*915. பிராணிகள் சிங்கத்துக்குப் பதில் கூறலாயின: "முயற்சி செய்ய வேண்டும் என்ற எண்ணம் சிருஷ்டிகளிடமுள்ள பலஹீனத்தால் உண்டானதுதான்; வயிற்றின் அளவுக்கேற்ப அவை உண்டாக்கிக் கொண்ட பித்தலாட்டம் இது.*

*இறைவனிடம் பரஞ்சாட்டுவதைவிடச் சிறந்த நற்கைங்கரியம் எதுவுமில்லை; இறைவன்முன் அவன் ஆணைக்குப் பணிந்து போவதைவிடச் சிறந்தது எதுவுமில்லை.*

*இவர்கள் ஒரு சோதனையைவிட்டு ஓடமுயன்று அதைவிடப் பெரிய) சோதனையில் சென்று மாட்டிக்கொள்கின்றனர்; சிறு பாம்புக்குப் பயந்து தப்பி ஓடி மலைப்பாம்பிடம் சிக்கியவர்களா கின்றனர்.*

---

*1. குர்ஆன் 113 : 1 பார்க்க.*

மனிதன் ஒன்றை முடிவுசெய்கிறான்; அது (அவனை அகப் படுத்தும்) கண்ணியாகவே ஆகிவிடுகிறது. அவன் தன் வாழ்வின் சஞ்சீவி என்று எண்ணியதே அவன் இரத்தத்தை உறிஞ்சுவதாக அமைந்துவிடுகிறது.

பகைவன் வீட்டினுள் இருக்கும்போதே அவன் தன் வீட்டுக் கதவை அடைத்துத் தாளிட்டுக்கொண்டான். பிர்அவ்னுடைய சதித்திட்டம் இத்தகைய கதைதான்.

920. அந்தப் பழிகாரன் ஆயிரக்கணக்கான சிசுக்களைக் கொன்று குவித்தான்; ஆனால், அவன் கொல்ல நாடி (இத்தனையும் செய்த) அலைந்த சிசு அவனுடைய வீட்டினுள்ளேயே இருந்தது.

நம் கண் பார்வையில் கோளாறு உள்ளது; எனவே, நேயனின் (இறைவனின்) பார்வையில் உங்கள் பார்க்கும் சக்தியை நாஸ்தி (பனா) ஆக்குங்கள்!

நம்முடையதற்குப் பகரமாக அவனுடைய பார்வையைப் பெறுவது சாமான்யமான ஈடா? அவன் பார்வையில் உங்கள் இதய நாட்டம் முழுவதும் (நம் தேவைகள் அனைத்தும்) அடங்கிக் கிடப்பதைக் காண்பீர்கள்.

குழந்தை தானாகவே எதையும் பற்றிக் கொண்டு நடக்க இயலா தவரை தன் தந்தையின் கழுத்திலேயே சவாரி செய்யுமன்றோ! (அது போல் நீயும் அவன் பார்வையில் உன் பார்வையை நாஸ்தியாக்கி விடு.)

அவன் (சுய உழைப்பைப் பெரிதாக மதிப்பவன்) தன் கால் கைகளை அசைத்து (அதன் பயனால்) சோதனைகளுக்கும் துயரத்துக்கும் ஆளாகிறான்.

925. சிருஷ்டிக்கப்பட்டுள்ளவற்றின் ஜீவன்கள் உடலில் பிணைப்புக் கொள்வதற்குமுன்பு, தமது மெய் விஸ்வாசம் காரணமாக, பரிசுத்தத் தலங்களில் பறந்து திரிந்துகொண்டிருந்தன.

(அந்த நிலையில்) அந்த ஜீவன்களை நோக்கி, 'நீங்கள் கீழே இறங்குங்கள்"[1] என்று தெய்வக் கட்டளை உண்டானதும், (அவ் விதம் அவை தத்தம் உடலுள் புகுந்து) கோபம், அற்ப மகிழ்ச்சி என்ற சிறையில் சிறைப்பட்டுவிட்டன.

நாம் இறைவனின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். (சிசுக்களைப் போல்) பால் கேட்கும் நிலையிலுள்ளோம்; "சிருஷ்டிகள் இறைவனின் குடும்பத்தவையாகும்" என்று நபிபெருமானார் அருளியுள்ளார்கள்.

---

1. பார்க்க : குர்ஆன் 7 : 24

வானிலிருந்து மழையைப் பொழியவைக்கும் வல்லோன் (இறைவன்) தன் கருணையால் நமக்கு உணவும் நல்குகிறான்.''

### பாரஞ்சாட்டலைவிட முயற்சியே சிறந்தது என்று சிங்கம் சாதித்தல்

சிங்கம் பதிலிறுத்தது. ''மெய்தான். ஆனால், தன் அடியார்களின் இறைவன் (நம் லக்ஷியங்களை நோக்கி ஏறிச்செல்ல) நம் காலருகே (காரண சாதனமாகிய) ஏணியையும் வைத்துள்ளானல்லவா?

930. மாடியை நாம் அடையும்வரை அந்த ஏணியில் ஒவ்வொரு படியாக நாம் ஏறிச்செல்ல வேண்டும். (இறைவனே நம்மை உயரே ஏற்றிவிட வேண்டும் என்று) முரண்டு பிடித்துக்கொண்டு உட்கார நினைப்பது மூடத்தனமான எண்ணமாகும்.

உனக்கு கால்கள் இருக்கும்போது நீ உன்னை முடமாக்கிக் கொள்ள நினைப்பதேன்? உனக்கு கரங்கள் இருக்கின்றன. அப்படியிருக்க நீ (பற்றிப்பிடிக்க உதவும்) உன் விரல்களை ஏன் மறைத்து வைத்துக்கொள்ள வேண்டும்?

எஜமானன் வேலைக்காரன் கையில் மண்வெட்டியைக் கொடுத்தும், (இன்ன வேலைதான் செய்யவேண்டும் என்று) எதுவும் கூறப்படாமலே அவன் தன் வேலையை அறிந்துகொள்கிறான்.

கையும் மண்வெட்டியும் இறைவனின் திட்டமான அத்தாட்சிகள்தான். மேலும், (மனிதனின்) முடிவைப் பற்றிச் சிந்திப்பது (உழைத்து உண்ண யத்தனிப்பது) அவனுடைய ஸ்பஷ்டமான பிரகடனங்களின் கருத்துமாகும்.

நீங்கள் அவனுடைய அத்தாட்சிகள் பற்றிச் சிந்தித்துப் பார்ப்பீர்களாயின் (அவனுடைய திருச்சித்தத்தின்) அவன் சமிக்ஞையின் போக்கை நிறைவேற்றுவதிலேயே வாழ்நாளைக் கழிப்பீர்கள்.

935. நீங்கள் அந்த மெய்ஞான ரகசியங்களையெல்லாம் அறிந்து கொள்வதற்காக அவன் சில சமிக்ஞைகளைக் காட்டுவான்; (உங்கள் கஷ்டமெனும்) சுமையை உங்களைவிட்டு அகற்றி, நீங்கள் ஆத்மீக ஆதிக்கம் பெற்றவர்களாகும்படி செய்வான்.

இப்போது நீங்கள் (நல்லமல்களுடைய) சுமைகளைச் சுமக்கிறீர்களா? அப்படியாயின் அவன் உங்களை (இந்த அமல்களின் மீதேற்றி) உன்னதமான தலத்துக்குக் கொண்டுசெல்வான். (அவன் கட்டளைகளை இப்போது) நீங்கள் ஏற்கிறீர்களா? அப்படியாயின் அவன் உங்களைத் தன் கருணையின் நிழலில் ஏற்றுக்கொள்வான்.

நீங்கள் அவன் கட்டளையை ஏற்பவர்களாயின் நீங்கள் அதன் பிரதிநிதியாகிவிடுவீர்கள்; இன்று (அவனோடு) நீங்கள் ஐக்கியத்தை நாடினால், நிச்சயம் நாளை அவனோடு சேர்ந்தேவிடுவீர்கள்.

சுயேச்சையாகப் பாடுபடுவது இறைவனை அவனுடைய அருட்கொடைகளுக்காகப் போற்றுவதுதான்; நிர்ப்பந்தமாகச் செயலற்றிருக்கும் உங்கள் கொள்கை அந்த அருட்கொடைகளையே மறுப்பதாகும்.

சுயேச்சையாக நீங்கள் சக்தி பெற்றிருப்பதற்காக அவனுக்கு நன்றி செலுத்தினால் அதன்மூலம் உங்கள் சக்தி அதிகரிக்கிறது. நிர்ப்பந்தமான செயலற்ற நிலையிலாதல் அந்தச் சுயேச்சையெனும் சம்மானத்தை நீங்கள் பறிகொடுப்பதாகும்.

940. உங்கள் செயலற்றநிலை என்பது பாதையில் படுத்துத் தூங்குவதாகும். தூங்காதீர்கள்! நீங்கள் (தெய்வச் சந்நிதியின்) திருவாயிலையும், முற்றத்தையும் சென்றடையும்வரை தூங்க வேண்டாம்!

ஹே, எண்ணமற்ற முயற்சியற்ற சோம்பேறி, எச்சரிக்கை! தூங்கிவிடாதே! (மெய்ஞானக்கனிகளையுடைய) அந்த மரத்தின் நிழலை அடையும்வரை தூங்கிவிடாதே!

(அந்த மரத்தடியை அடைந்துவிட்டாலோ) அங்கே ஒவ்வொரு கணமும் காற்று அந்த மரத்தின் கிளைகளை அசைத்து, கீழே அமர்ந்திருப்பவன் மீது (தெய்வ நல்லருள் என்ற) கனிகளைச் சொரிந்துகொண்டே இருக்கும்.

சும்மா இருக்க எண்ணும் நிர்ப்பந்தவாதியாக, கொள்ளைக் காரர்களிடை படுத்துத்தூங்குபவனாக இருப்பதென்பது எத்துணை அபத்தமான காரியம்! அகால வேளையில் கூவும் சேவலை யாரே விட்டுவைப்பார்கள்!

அவனுடைய அத்தாட்சிகளின் பக்கல் முகம் திரும்பாமலே உங்களை நீங்கள் ஆண்களாக எண்ணிக்கொள்கிறீர்கள்: ஆனால், நன்கு சிந்தித்தால் நீங்கள் பெண்களாகவே இருப்பதை உணரலாம்.

945. (பெண்களைப் போல்) உங்களிடமுள்ள இந்த அற்ப சொற்ப நிதான புத்தியும் போய்விட்டது; தன் நிதானத்தை இழந்து விட்ட தலை உண்மையில் வாலாகவே ஆகிவிடுகிறது.

ஏனெனில் நன்றிமறத்தல் தீய செயல்; அருளற்ற காரியம்; நன்றிகொன்றவனை அது நரகின் அடிப்பள்ளத்தில் தள்ளவல்லது.

நீ ஆண்டவன்மீது பரஞ்சாட்ட விரும்பினால் உன்வேலை சம்பந்தப்பட்டவரை அவனிடம் அடைக்கலம் தேடு. (விதையை) விதைத்துவிட்டு, (அது பயிராகிப் பயன்தரச்) சர்வ வல்லமையாள னின் துணையை நாடு"

**சுய முயற்சி வேண்டாம்; பரஞ்சாட்டுதலே வேண்டும் என்று பிராணிகள் விவாதித்தல்**

பிராணிகள் யாவும் சிங்கத்தோடு விவாதிப்பதில் தமது குரலை உயர்த்தியவையாய்ப் பேசலாயின: "அப்படியாயின் (உழைப்பும் முயற்சியுந்தான் வேண்டும் என்றிருப்பின்) தமது நோக்கம் நிறைவேற உழைப்பே சிறந்தது என்ற விதையை விதைத்துவிட்ட இந்தப் பேராசைக்காரர்கள் -

ஆயிரமாயிரம் ஆண் பெண்கள் ஏன் அதிர்ஷ்டக் கட்டை களாகக் கிடந்து உழல்கின்றனர்?

950. உலகம் தோன்றிய நாள் முதலாய் ஆயிரமாயிரம் பரம்பரை யினர் (உழைப்பும் முயற்சியும் வேண்டும் என்று) பூதங்களைப்போல் தத்தம் வாயைப் பிளந்து கொண்டிருக்கின்றனர்.

இந்தப் புத்திசாலிகள் எத்துணையோ (முயற்சித்) திட்டங் களைத் தீட்டினார்கள்; மலையை வேரோடு கல்லி எடுத்தார்கள். (ஆனால், அவர்களுக்கு விதிக்கப்பட்டதற்கு அதிகம் அவர்களால் அணுவளவும் அதிகமாகத் துய்க்கமுடியவில்லை.)

மாட்சிமைமிக்க இறைவன், "அவர்களுடைய தில்லுமுல்லுகள் மலைகளின் சிகரங்களைக்கூட அசைத்துப்பிடுங்குமளவு[1]க்கு அதிகமாகி விட்டன" என்று அவர்களுடைய திட்டங்களையே விவரித்துள் ளான்.

(ஆனால்,) ஆதியில் (ரிஜ்கில்) அவர்களுக்காக முன்னமேயே விதிக்கப்பட்டதையன்றி, அவர்களின் பித்தலாட்டங்களின் பயனாய் வேறு எதுவும் தன் முகத்தைக்காட்டத் துணியவில்லை. (வேறு எதுவும் கிடைக்கவில்லை.)

தமது திட்டத்தாலும், செயலாலும் அவர்கள் எந்தப் பயனையும் துய்க்கவில்லை; அவர்களுடைய சிருஷ்டியாளனின் செயலும், கட்டளைகளுமே நிலைத்து நின்றன.

955. ஹே கண்ணியமுடையோய், உடலுழைப்பை வெறும் பெயராக மதிப்பதையன்றி அதற்கு வேறு எந்த முக்கியத்துவமும் அளிக்காதே! ஹே குயுக்திகள் நிறைந்தோய், (ஜீவனோபாயத்தைத்

1. குர்ஆன் 14 : 46

தேடி) முயற்சியெடுப்பது என்பது வெறும் கற்பனையான காரியம் என்பதற்கு அதிகமாக அதற்கு முக்கியத்துவமளிக்காதே!

## முயற்சி செய்வதைவிடப் பரஞ்சாட்டுதலே சிறந்தது என்பதற்கு மேற்கோள்: சுலைமான் நபி கால மனிதனும் இஸ்ராயீல் (அலை) அவர்களும்

ஒரு நாள் பிற்பகல் நற்குடிப்பிறந்த மனிதன் ஒருவன் ஓடோடியும் வந்து சுலைமான் நபி (அலை) அவர்களுடைய நீதி மண்டபத்திலே புகுந்தான்.

அவன் வதனம் துயரத்தால் வெளுத்திருந்தது; அவன் உதடுகள் உலர்ந்து நீலம் பாரித்திருந்தன. சுலைமான் (அலை) அவர்கள் அவனை விளித்து, "நல்லவரே, உமக்கு யாது வேண்டும்?" என்று வினவினார்கள்.

அவன் சொன்னான் "இஸ்ராயீல் (அலை) அவர்கள் என்னைக் கோபத்தோடும் வெறுப்போடும் பார்த்தார்கள்" என்று.

"அப்படியா, இப்போது உமக்கு என்ன (வரம்) வேண்டும் என்பதை உடனே சொல்லும்," என்று சுலைமான் நபி வினவினார்கள். "ஹே என் உயிரின் பாதுகாவலரே, நீங்கள் காற்றுக்கு உத்தரவிட்டு,

960. என்னை இங்கிருந்து உடனே இந்தியாவில் கொண்டு சேர்க்கச் செய்யுங்கள். ஒருகால் அங்கு போவதன்மூலம் இந்த அடியான் தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள முடியலாம்" என்று அவன் வேண்டினான்.

அந்தோ, இவ்விதம் ஜனங்கள் வறுமையைக் கண்டு ஓடுவதால் தான் அவர்கள் பேராசைக்கும் வீண் ஆவேசத்துக்கும் இரையாகிக் கொண்டிருக்கின்றனர்.

ஜனங்கள் வறுமைக்கு அஞ்சுவது அந்த மனிதனுடைய பீதியைப் போன்றும், பேராசையும் வீண் ஆவேசமும் இந்தியாவைப் போன்றுமாய் இருக்கின்றன.

சுலைமான் நபியின் ஆணைப்படி காற்று அவனைக் கடல் மார்க்கமாகத் தூக்கிவந்து இந்தியாவின் ஒரு மூலையில் கொண்டு போய் விட்டுவிட்டது.

மறுநாள், சுலைமான் (அலை) அவர்களுடைய சபை கூடியிருந்த சமயம் இஸ்ராயீல் (அலை) அங்கே வரவே அவர்களை விளித்து,

*965.“அந்த முஸ்லிமானவன் தன் வீடுவாசல்களை விட்டு வெகு தொலைவில் போய் உழல வேண்டுமென்றா அவனை நீங்கள் கோபத்தோடு பார்த்தீர்கள்?” என்று கேட்டார்கள்.*

*இஸ்ராயீல் (அலை) சொன்னார்கள், “எப்போது நான் அவனைக் கோபத்தோடு பார்த்தேன்? நான் போகும் வழியில் அவனைக் கண்டேன்; வியப்புடன் அவனைப் பார்த்தேன்;*

*ஏனெனில், இன்று அவன் உயிரை இந்தியாவில் போய் வாங்கும்படி இறைவன் எனக்குக் கட்டளையிட்டிருந்தான்.*

*அதனால் நான் எனக்குள் சொல்லிக்கொண்டேன், இவனுக்கு நூறு இறக்கைகள் இருப்பினும் (அவற்றின் உதவியால் இவன் பறந்தாலும்) இவன் இந்தியாவை அடைய முடியாதே!’ என்று. (இறைவன் கட்டளைப்படி நான் இந்தியாவை அடைந்து பார்த்தாலோ, அங்கே அவன் இருந்தான்; உடனே அவன் உயிரை வாங்கிவிட்டேன்.)”*

*இவ்விதமே நாம் உலகின் சகல விவகாரங்களையும் மதிப்பிட வேண்டும்; நம் கண்களைத் திறந்து பார்க்க வேண்டும்.*

*970. யாரைப் புறக்கணித்துவிட்டு நாம் ஓடுவது? நம்மையா? அது இயல்வதெங்ஙனம்? இறைவனையா? அந்தோ அதைவிடக் குடிகேடான செயல் யாதுளது?*

**மீண்டும் சிங்கம் தன் கட்சியை வலியுறுத்தல்**

*சிங்கம் பேசிற்று : “அது சரி, ஆனால், நபிமார்களும், சத்திய சன்மார்க்க விஸ்வாசிகளும் உழைப்பில் ஈடுபட்டதை எண்ணிப் பாருங்கள்!*

*அல்லாஹுத்தஆலா அவர்களுடைய உழைப்புக்கும், வெட்ப தட்பங்களால் அவர்கள் வேதனைப்பட்டதற்கும் சம்மானமளித்துத் தான் இருக்கிறான்.*

*அவர்களுடைய திட்டங்கள் எப்போதுமே மிகச் சிறந்தவை யாகவே விளங்கியுள்ளன; நல்லோர் ஒருவரால் செய்யப்படும் யாவும் நல்லதாகவே இருக்கும்.*

*தெய்வீகப் பறவையை அவர்கள் தமது கண்ணியில் அகப்படுத் தினர்; அவர்களுடைய குறைபாடுகள் யாவும் நிறைபாடுகளாகவே ஆகியுள்ளன.”*

*975. அறிஞனே, நபிமார்களையும், மெய்ஞானியரையும் பின்பற்றி அவர்களைப்போல் நீயும் சாத்தியமான வகையிலெல்லாம் முயற்சி செய்!*

*முயற்சி செய்வது விதிவசத்தை எதிர்த்துப் போராடுவதல்ல; ஏனெனில், விதிவசமே இதை (முயற்சி செய்வதை) நம்மீது சுமத்தியுள்ளதே!*

*மெய்யுறுதிகொண்டு நல்வணக்கம் என்ற சன்மார்க்க நெறி முறையில் நடப்பவர் யாவருக்கும் அவருடைய அந்த முயற்சியில் ஒரு கணமேனும் நான் இடைஞ்சல் செய்வேனாயின் நான் நிராகரிப்பவன் (காபிர்) ஆகிவிட்டேன்.*

*உன் தலையிலோ காயம் படவில்லை; அப்படியிருக்க அதில் கட்டுப்போடத் தேவையுமில்லை. இரண்டொரு நாள் (அற்பமான உன் வாழ்நாளில்) நல்லவர்கள் செய்யும் முயற்சியில் ஈடுபடு. பின்னர் (மறுமையில்) அதன் இன்பத்தை நீ காண்பாய்.*

*இம்மையை விழைபவன் தீய, கேடுகெட்ட இருக்கையைத் தேடிக்கொண்டவனே; மறுமையை விழைபவன் நல்ல நிலையைத் தேடிக்கொண்டவனாவான்.*

*980. இம்மையின் சுகபோகங்களைத் தேடும் நாசகாரமான திட்டங்கள் பயனற்றவையாகும்; இம்மையைத் துறப்பதற்கான திட்டங்கள் இறைவனால் ஆணையிடப்பட்டவையாம்.*

*கைதியானவன் சிறையைவிட்டுத்தப்ப அவனுக்கு நல்மார்க்கம், அவன் அதற்கான சுரங்கப் பாதை ஒன்றைத் தோண்டுவதுதான்; அப்படித் தப்பிக்கப் பாதையுண்டாக்கும் வழியையே அவன் தடுத்துக்கொள்வானாயின் அதைவிட மூடத்தனமான செயல் எதுவுமில்லை.*

*இம்மை ஒரு சிறைச்சாலையாகும்; நாம் அதிலுள்ள கைதிகளாவோம். சிறைச்சாலையிலிருந்து தப்புவதற்கான சுரங்க வழியைத் தோண்டு; அதன் மூலம் இதைவிட்டு வெளியாகு!*

***இம்மை என்பது யாது? இறைவனை மறப்பதே இம்மை;*** *அதுவாணிபப் பொருளோ, வெள்ளியோ, துலாக்கோலோ, பெண்களோ அல்ல!*

*சன்மார்க்கத்துக்குச் செலவிடுவதற்காக நீ வைத்திருக்கும் செல்வம், '(நேர்மையாளனுக்கு) நேர்மையான செல்வம் எத்துணை நன்மை பயப்பதாய் இருக்கிறது!' என்ற நபிமொழிக்கு அத்தாட்சி யானதாகும்.*

*985. படகினுள் தண்ணீர் புகுவது கவிழ ஹேதுவாக்குவதாம்; ஆனால், படகின் அடியில் தண்ணீர் இருப்பது (அது மிதந்து செல்வதற்கு உதவியான) ஆதாரமாகும்.*

அளவிலாச் செல்வம் படைத்திருந்த நபி சுலைமான் (அலை) அவர்கள் தங்கள் இதயத்திலிருந்து பொன், பொருள்பற்றிய ஆசைகளையெல்லாம் துறந்தவர்களாக இருந்தமையால் அவர்கள் தங்களை ஏழை (மிஸ்கீன்) என்ற பதத்தாலேயே அழைத்துக் கொண்டார்கள்.

காற்று நிரம்பிய, மூடப்பட்ட ஜாடி எந்தக் கொந்தளிப்பான தண்ணீரிலும் மிதக்கவே செய்யும்.

தன் அகத்தே ஏழ்மை என்ற காற்றை அடைத்துக்கொண்டவன் இம்மையெனும் தண்ணீரின் மேல்பரப்பில் சாந்திபடைத்த உள்ளத்துடன் மிதந்துகொண்டிருப்பான்.

இம்மை முழுவதுமே அவன் வசமாய் இருப்பினும், அவன் இதயக்கண்முன் அந்தச் சம்பத்து முழுமையுமே பூஜ்யமாகத்தான் தோன்றும்.

990. எனவே, உன் இதயத்தின் வாயை நன்றாக அடைத்து மூடிவிடு; இறையருள் (மின் லதுன்) என்ற ஜன்னல் வழியாக வரும் காற்றை அதனுள் தேக்கிக்கொள்.

முயற்சி செய்தல் யதார்த்தமானது; மருந்தும் நோயும் யதார்த்தமானவை. எனினும், முயற்சியும் வேண்டாம், உழைப்பும் வேண்டாம் என்று சாதிப்பவனும் அந்தச் சாதனையிலும் உழைப்பையே உணர்த்துகிறான்.

**பரஞ்சாட்டுதலைவிட உழைப்பே சிறந்தது என்ற வாதம்**

இவ்விதம் தனக்கு ஆதாரமாகச் சிங்கம் பற்பல ஆதாரங்களை வழங்கியது. அதனால் அதற்குப் பரஞ்சாட்டலின் அவசியத்தை வலியுறுத்திய பிராணிகளே பதிலளித்துச் சலிப்படைந்துவிட்டன.

நரியும், முயலும், மானும், ஓநாயும் பரஞ்சாட்டுதல் அவசியம் என்ற கோட்பாட்டை உறுதிப்படுத்திக்கொண்டதோடு, சிங்கத்தோடு விவாதிப்பதால் பயனில்லை என்று அதைக் கைவிட்டு விட்டன.

அவை அந்தப் பயங்கரச் சிங்கத்தோடு (அதற்குத் தினமும் தாமே வலிய வந்து உணவாவதாகக் கொடுத்த வாக்குறுதிப்படி நடப்பதாக) ஒப்பந்தம் செய்துகொண்டன; அதில் சிங்கத்துக்கு எந்த நஷ்டமும் ஏற்படாமல் பார்த்துக்கொள்வதாகவும் வாக்களித்தன.

995. சிங்கத்துக்கு அதன் உணவு தினமும் அதன் இருப்பிடத் துக்கே வந்துவிடும் என்றும், அதுபற்றி மேலும் சிங்கம் கேட்க வேண்டியதில்லை என்றும் அவை வாக்களித்தன.

தமக்குள் ஒவ்வொரு நாளும் யார் சிங்கத்துக்கு உணவாக வேண்டும் என்று திருவுளச்சீட்டு குலுக்கிப் போட்டு யார் பெயருக்கு சீட்டு விழுகிறதோ அவர் சிங்கத்துக்கு இரையாகச் சிறுத்தையின் வேகத்தில் விரைந்துவந்து ஆஜராக வேண்டும் என்றும் அவை ஏற்பாடு செய்து கொண்டன.

இவ்விதம் மரணக் கோப்பை முயலிடம் வந்தது. அப்போது முயல் ஆத்திரத்துடன், "இந்தக் கொடுமையை எத்துணை நாட்கள்தான் சகித்துக்கொண்டிருப்பது?" என்று கத்திற்று.

மற்றப் பிராணிகள் முயலை நோக்கி, "கொடுத்த வாக்கை நிறைவேற்ற நாங்கள் மட்டும் எங்கள் உயிரைத் தாரைவார்த்தோமே!

அப்படியிருக்க நீ ஏன் எங்களுக்குக் கெட்ட பெயர் வாங்கித் தரப் பார்க்கிறாய்? ஹே கலகக்காரா, சிங்கம் சீற்றங்கொள்ளுமுன் அதனிடம் விரைந்தோடு! சீக்கிரம் செல்!" என்று கூறின.

### முயல் சொன்ன கதை

1000. முயல் பதிலளித்தது, "நண்பர்களே, எனக்குச் சற்று அவகாசம் தாருங்கள். என் தந்திரோபாயத்தால் நீங்கள், (சிங்கத்தால் விளைந்துள்ள) துன்பத்திலிருந்து தப்ப வழியுண்டாகிவிடும்.

நான் செய்யப்போகும் சாகசச் செயலால் நீங்கள் உயிர் தப்புவதுடன், உங்கள் வருங்காலச் சந்ததிகளும் இந்த வனத்தைத் தமது சொந்தமானதாகக் கொண்டு வாழமுடியும்."

இவ்விதம்தான் இவ்வுலகில் ஒவ்வொரு நபியும் தத்தம் கூட்டத்தாரை அவர்கள் விமோசனம் பெறுவதற்கான இடமொன்றுக்கு அழைத்துக்கொண்டிருந்தார்கள்.

ஏனெனில், அவர்கள் அவர்களுடைய (அந்தக் கூட்டாத்தாருடைய) பார்வையில் கண்ணினுள் உள்ள (இமைகளால் மறைக்கப்பட்ட) கருமணிபோல முக்கியமற்றவர்களாகத் தோற்றமளித்தனராயினும், வானிலிருந்து தம் கூட்டத்தார் மீளும் வழியைக் கண்டுகொண்ட (தீர்க்கதிருஷ்டியின்) கண்களையுடையவர்களாகத்தான் திகழ்ந்தார்கள்.

எனினும், (அற்ப) மானிடர்கள் அவர்கள் கண்ணினுள் உள்ள கருமணி போல சிறியவர்கள் என்றே கருதினர். கண்ணினுள் உள்ள கருமணி எத்துணை முக்கியமானது என்பதை, அதன் மகத்துவம் யாது என்பதைப் புரிந்துகொள்ளும் அறிவை அவர்கள் பெற்றிருக்கவில்லை.

## முயலின் யோசனையை மற்றப் பிராணிகள் மறுதலித்தல்

*1005. மற்றப் பிராணிகள் முயலை நோக்கி "கழுதையே, நாங்கள் சொல்வதைக் கேள்! நீ ஒரு முயல்தான் (அதையன்றி வேறல்ல) என்பதை மறந்து பேசாதே!*

*ஈதென்ன பிதற்றல்! உன்னைவிடச் சிறந்தவர்களுக்கெல்லாம் தோன்றாத - அவர்கள் நினைத்தும் பார்த்திராத யோசனையல்லவா இது!*

*ஏதோ உன் கெட்டிக்காரத்தனத்தைப் பெரிதாக எண்ணிக் கொண்டனையா; அல்லது இவ்விதம் நம் தலைவிதி நம்மைத் தொடருகிறதா? இன்றேல் உன்னைப் போன்ற (அற்பத்திலும் அற்பமான பிராணியான) ஒருவனுக்கு இது அடுப்பது எப்படி?" என்று கடிந்து கூறின.*

## முயலின் பதில்

*முயல் சொல்லிற்று: "நண்பர்களே, எத்துணை பலஹீனமான ஒரு பிராணிக்கும் மிகப் பலமான யோசனை உண்டாகலாம் என்று இறைவன் எனக்கு உதிப்பை அருளினான்."*

*இறைவன் சின்னஞ்சிறு ஐந்துவான தேனீக்குக் கற்பித்த அறிவைச் சிங்கத்துக்கோ காட்டுக்கழுதைக்கோ கூட அறிவித்துக் கொடுக்கவில்லை.*

*1010. தேனீ மதுரமான ஹல்வாவினாலான வீட்டைக் கட்டிக் கொள்கிறது. அப்படிக் கட்டுவதற்கான அறிவின் வாயிலை இறைவன் அதற்குத் திறந்து விட்டுள்ளான்.*

*பட்டுப் பூச்சிக்கு இறைவன் கற்றுத்தந்துள்ள வித்தையைத்தான் பாருங்களேன்! பலத்தில் தன்னேரிலாத யானையால்கூட அந்த வித்தையைச் செய்யமுடியுமா?*

*மண்ணால் ஆன ஆதம் (அலை) அவர்கள் இறைவனிடமிருந்து நேரடியாக அறிவுபெற்றார்கள். அவர்களுடைய அறிவொளி ஏழாம் வானம்வரை தன் கிரணங்களைப் பரப்பிற்று.*

*அவர்கள் அமரர்களின் பேரையும், புகழையும்கூடத் தோற் கடித்துவிட்டார்கள்; இறைவனைப் பற்றி - அவனுடைய மாபெரும் சக்தியைப் பற்றி - ஐயங்கொண்டவன் (ஷைத்தான்) குழப்பத்துக் குள்ளானான்.*

*அறு நூறாயிரம் ஆண்டுகளாய்த் தன் வணக்கங்களால் புனிதத் துறவியாய் விளங்கியவனை (அஜாஜிலை) இறைவன் பச்சிளம்*

கன்றுக்குட்டியாக்கி, அவர்களை (ஆதத்தை) அவனுக்கு வாய்ப்பூட்டுப் போட்டவர்களாக ஆக்கிவிட்டான்.

1015. அவன் சன்மார்க்க அறிவெனும் பாலை அருந்தாமலும், அந்த மகத்தான மாளிகையில் வளையவராமலும் அவர்கள் இடைஞ்சல்செய்து (அவன் இப்லீஸ் என்று சபிக்கப்படவே காரணமாகி) விட்டார்கள்.

இவ்விதமே இறைவனின் மெய்ஞான அகமியங்களை மறுப்பவர்களான பூதபௌதீகர்களின் புற அறிவும் ஒரு வாய்ப்பூட்டாகவே உள்ளது; அதனால் இறைவனின் மெய்ஞான அகமியங்களை மறுக்கும் இந்தப் பௌதீகர்கள் அந்த மாபெரும் ஞானமெனும் பாலை அருந்த அது தடையாய் உள்ளது.

ஆனால், இதயமாகிய இரத்தக் கட்டியினுள்ளே, கடலுக்கோ வானத்துக்கோ அளிக்கப்படாத அதி அற்புதமான மாணிக்கம் பதிக்கப்பட்டுள்ளது.

எத்துணை நாட்கள் தான் வெளிக் கோலத்தில் மயங்கிக் கிடப்பாய்? அந்தோ, கோலத்தை வழிபடுபவனே, இன்னுமா உன் யதார்த்தம் காணாத இதயம் வெளிக்கோலத்தைவிட்டும் விடுதலை பெறவில்லை!

ஒரு மனிதன் தன் வெளித்தோற்றத்தால் மட்டும் மனிதனாக விளங்குவானாயின், அஹ்மது நபி (ஸல்) அவர்களும், அபூஜஹலும் சமமானவர்களாகவன்றோ ஆகிவிடுவார்கள்!

1020. சுவரிலுள்ள சித்திரம் ஆதத்தைப்போன்று தான் இருக்கிறது; அந்தச் சுவரிலுள்ள உருவத்தில் என்ன குறைபாடுளது என்பதை ஊன்றிக் கவனியுங்கள்.

அந்தப் பகட்டான உருவத்தில் ஜீவனில்லை; அபூர்வமாகக் காணப்படும் அந்த மாணிக்கத்தைத் தேடிப் பார்த்து அடைந்து கொள்!

குகையின் தோழர்களின் (அஸ்ஹாபுல் கஹ்பின்) நாய்மீது இறைவனின் அருட்கரம் ஒரு சிறப்பை உண்டாக்கிவிட்டதால், உலகிலுள்ள அத்தனை சிங்கங்களுடைய சிரங்களும் அதன்முன் பணிந்துவிட்டனவன்றோ!

தெய்வப்பேர் அருள் என்ற வாரிதியில் திளைத்துவிட்ட அந்த நாயின் ஜீவன் தன் உடல் அருவருப்பானதாய் இருப்பதைப்பற்றிக் குறைப்பட்டிருப்பது எங்ஙனம்?

(ஒருவனைப் போற்றி எழுதப்படும் கடிதத்தில் அவனுடைய) புறக்கோலத்தைப் பாராட்டி எழுதுவது வழக்கமன்று. கடிதங்களில் எழுதப்படுவது அறிஞனே (ஆலிமே), நீதியாளனே (ஆதிலே) என்பன போன்ற அகப் பண்புகளைத்தாமே!

1025. அறிஞன், 'நீதியாளன் என்பவை போன்ற பண்புகள் ஆத்மீக சாரமானவைதாம்; அவற்றை எந்த ஓர் இடத்திலோ, முன்னாலோ பின்னாலோ காண முடியாது.

ஜீவனின் சூரியன், 'இடம்' என்பதன் தொடர்பற்ற தலத்தி லிருந்து சடலத்தின்மீது தன் ஒளிக்கற்றைகளைச் செலுத்துகிறது. அது (அந்தச் சூரியன்) வானத்தில் நிலைகொண்டதுமன்று.

### முயலின் அறிவுபற்றிய விபரமும் ஞானத்தின் மாட்சி, சாதகம் பற்றிய விளக்கமும்

இந்த விஷயத்துக்கு ஒரு முடிவு கிடையாது; இப்போது கவனி; முயலின் கதையை நன்கு கேள்!

(விஷயங்களைக் கேட்டு உணராத) உன் காதைக் கொடுத்து விட்டு, (கேட்டு உணரத்தக்க) காதை வாங்கிக் கொள்! ஏனெனில், உன் (ஜடதத்துவக்) காதினால் இந்த விஷய விளக்கத்தை நீ புரிந்துகொள்ள முடியாது.

போ, முயலின் குள்ளநரித் தந்திரங்களை நோட்டமிடு; முயலின் தந்திரோபாயத்தையும், அது சிங்கத்தை எப்படி வீழ்த்தியது என்பதையும் நோட்டமிடு!

1030. அறிவு என்பது சுலைமான் (அலை) அவர்களுடைய அரசாங்க முத்திரையாகும். இந்த உலகம் முழுவதுமே வெளி உருவமாயின், அறிவு அதன் ஜீவநாடியாகத் திகழ்கிறது.

இந்தச் சிறப்பின் காரணமாகக் கடலிலும், மலையிலும், சமவெளிகளிலும் உள்ள பிராணிகள் யாவும் அதனிடம் (அதை யுடையவனான அற்ப மானிடனிடம்) கைவசமாகுபவையாய் உள்ளன.

அதன் காரணமாகச் சிறுத்தையும், சிங்கமும் (மனிதனைக் கண்டு) சுண்டெலி போல் நடுங்குகின்றன; ஆழமான ஆறுகளி லுள்ள முதலைகளும் (அவனுக்கு) அஞ்சி நடுங்குகின்றன.

ஜின்களும், பரிகளும்கூட அதையுடையவனான மானிடனுக்கு அஞ்சி ஊர்களைவிட்டு ஓடிப்போய், மறைவிடங்களில் வாழ் கின்றன.

மனிதனுக்கு மறைவான பகைவர்கள் பலருண்டு. ஆனால், விழிப்புடைய மனிதன் அறிவுடையவனாவான்.

1035. நம்மைச் சுற்றிலும் நல்லவையும், தீயவையுமான எத்துணையோ சிருஷ்டிகள் மறைந்துள்ளன. ஒவ்வொரு கணமும் அவற்றின் சேஷ்டை நம் இதயத்தைத் தாக்கிக்கொண்டே இருக்கிறது.

நீ குளிப்பதற்கு ஆற்றில் இறங்கினால், தண்ணீருள் கிடக்கக் கூடிய முள் எதுவும் உன் காலில் குத்தலாம்.

அது தண்ணீருள் அடியில் மறைந்து கிடக்கிறதாயினும், அது உன்னைக் குத்தி வேதனையுண்டாக்கியதிலிருந்து அது அங்கிருப்பதை அறிந்துகொள்கிறாய்.

(அமரர்களால் வரும்) உதிப்பெனும் முள்ளின் குத்துதலும், (ஷைத்தானிய) ஊசாட்டங்களின் குத்துதலும் ஒருவனால் மட்டுமல்ல, ஆயிரக்கணக்கானோராலும் உண்டாகின்றன.

உன் (சடதத்துவப்) புலன்களின் சக்தி மாறும்வரை பொறுத்திரு, அப்போது அந்த மறைவான பொருள்களை நீ காணலாம்; உன் தொல்லையும் தொலையும்.

1040. அப்போது, நீ யாருடைய (துயர) வார்த்தைகளை ஒதுக்கினாய், யாரை உன் தலைவனாக ஏற்றுக்கொண்டாய் என்பதையும் நீ காணலாம்.

### முயல் கையாளவிருக்கும் உபாயம் யாதெனப் பிராணிகள் வினவல்

பின்னர் அந்தப் பிராணிகள் முயலிடம் கேட்டன: "ஹே தந்திரக்கார முயலே, உன் உபாயங்களை எங்களுக்கும் சற்று விரித்துரை!

சிங்கத்தோடு கைகலக்கும் (தீர) முயலே, நீ தீட்டி வைத்துள்ள திட்டத்தை எங்களுக்கு அறிவித்துக்கொடு!

(பிறருடன்) கலந்து யோசிப்பதால் நுண்ணறிவும், தெளிவும் பிறக்கும். ஒருவருடைய மனம் மற்றோருடைய மனத்துக்கு உறு துணையாகும்.

'யோசனை சொல்பவனே, நீ உன் யோசனையை வெளியிடு முன் அது சரிதானா என்பதுபற்றி நம்பிக்கையான ஒருவருடைய அபிப்பிராயத்தைப் பெற்றுக்கொள்! ஏனெனில், யோசனை கேட்கப்படும் நபர்மீது ஜனங்கள் நம்பிக்கை வைத்தே அவ்விதம் கேட்க வருகிறார்கள்' என்று நபிபெருமானார் அருளியுள்ளார்கள்."

### முயல் தன் திட்டம் பற்றிய இரகசியத்தைச் சொல்ல மறுத்தல்

1045. முயல் பதிலளித்தது: "எல்லா இரகசியங்களையும் வெளியிடுவது கூடாது; ஏனெனில், இவ்வாறான சந்தர்ப்பங்களில் 'இரட்டை ஒற்றையாகவும், ஒற்றை இரட்டையாகவும் மாறுவதுண்டு ' என்றும் நபிபெருமானார் அருளியுள்ளார்கள்."

கண்ணாடியின்முன் நின்றுகொண்டு கண்ணாடிமீது நீங்கள் மூச்சுவிட்டால் அது தன் தெளிவை இழந்து நமக்கு மங்கலான தோற்றத்தைத்தான் தரும்.

நீ தூரப் பயணம் செல்வாயாயின், அதற்கான உன் ஆயத்தத்தையும், நீ எடுத்துச்செல்லும் செல்வத்தையும், உன் கோட்பாடுகளையும் பற்றி யாரிடமும் உன் நாவை உசுப்பி எதுவும் தெரிவித்துவிடாதே!

இந்த மூன்றின் விஷயத்திலும் பகைவர்கள் பலருண்டு. இவற்றை அவர்கள் அறிவாராயின் (உன்னிடமுள்ளதை அடித்துச்செல்ல) உனக்காக அவர்கள் வழியில் காத்துக்கொண்டு நிற்பார்கள்.

உன் இரகசிய ஏற்பாடுகளை ஒருவர் இருவரிடம் சொன்னால் போதும். அது (இரகசியமாய் இல்லாமல்) பராசியமாகிவிடும். எந்த இரகசியமாயினும் இரண்டு பேரிடம் எட்டியதும் நெடுகிலும் பரப்பப்பட்டுவிடுகிறது.

1050. இரண்டு மூன்று பறவைகளைக்கட்டி ஒரு கூண்டினுள் போட்டு அடைத்துவைத்தால் அவை துயரத்துடன் தரையில் தலையைப் போட்டவையாகத்தான் படுத்திருக்கும்.

ஆனால், உண்மையில் அவை (தாம் தப்புவதற்கான வழிவகைகளைப்பற்றித்) தமக்குள் மிகவும் சாதுரியமாக யோசனை கலந்து கொண்டிருக்கும். மேலாழ்ந்த வாரியாக பார்ப்பவர்களுக்கு அவை சும்மா இருப்பது போன்ற தப்பபிப்ராயம்தான் உண்டாகும்.

நபிபெருமானார் (ஸல்) அவர்களும் இரகசியம் யாவருக்கும் தெரிந்துவிடாத முறையிலேயே தங்கள் தோழர்களோடு ஆலோசனை கலப்பார்கள். தோழர்கள் அவர்களுடைய வினாக்களுக்குப் பதிலளிப்பார்களாயினும், பெருமானார் எந்த விஷயம் சம்பந்தமாகத் தங்களை வினவுகிறார்கள் என்பதை அறிந்தவர்களாய் இருப்பதில்லை.

பெருமானார் தங்கள் அபிப்பிராயங்களைப் பெரும்பாலில் சமிக்ஞையான கதைகள், உதாரணங்கள் மூலம் வெளியிடுவார்கள்.; அதனால், எதிரிகளுக்கு அவற்றில் தலைகால் புரியாமல் போய் விடும்.

பெருமானார் எதிரியிடமிருந்து தாங்கள் நாடும் பதிலை வரவழைக்கத்தக்க கேள்விகளைக் கேட்டுப் பதிலைப் பெற்றுக் கொள்வார்கள்; ஆனால், அந்த எதிரியோ அவர்கள் ஏன் அந்தக் கேள்வியைக் கேட்டார்கள் என்று அதன் குறிக்கோளை உணர்ந்து கொள்ள முடிவதில்லை.

### முயலின் திட்டம்

1055. முயல் சிங்கத்துக்கு உணவாகச் செல்வதற்கான நேரத்தைக் காலதாமதம் செய்துகொண்டிருந்தது.

இவ்விதம் முயல் வரத் தாமதமாவதைக் கண்ட சிங்கம் கோபத்தால் கொப்பளித்து கர்ஜித்தது; தன் கால்களால் தரை அதிர அறைந்தது.

அது சொல்லிக்கொண்டது: "இந்தக் கீழ் இனத்தினரின் வாக்குறுதியெல்லாம் வீணானவை, பலஹீனமானவை, என்றுமே காப்பாற்றப்படாதவை என்று நான் அன்றே சொன்னேன்.

இந்தப் பித்தலாட்டக்காரர்கள் என்னை நன்றாக ஏமாற்றி விட்டார்கள்; காலம் என்னை எவ்வளவுதான் ஏமாற்றும்? (ஹா,) எதுவரை இந்த ஏமாற்றம்?"

தாடியில் பலமற்ற (அறிவற்ற) அரசன் திசை தெரியாது திண்டாட நேருகிறது: அவன் தன் மூடத்தனத்தால் முன்னாலும் பின்னாலும் கவனிக்காமல் இருந்துவிடுகிறான்.

1060. பாதை வெளிப்பார்வையில் மிருதுவானதாகத்தான் தென்படுகிறது; ஆனால், அதன் அடியில் படுகுழிகள் மறைந்து கிடக்கின்றன. வெறும் பெயர்களில் (பட்டங்களில்) அர்த்தத்துக் குத்தான் பஞ்சமாகிவிட்டது.

வார்த்தைகளும், பெயர்களும் படுகுழிகளாகும்; பகட்டான பேச்சு நம் ஜீவனின் தண்ணீரையே உறிஞ்சிவிடும் மணல்தான்.

தண்ணீர் ஊற்றுப் பெருக்கெடுக்கும் மணல்வெளி அபூர்வ மாகத்தான் காணக்கூடியதாகும்; அதைத் தேடிப் பெறு.

மெய்ஞ்ஞானத்தைத் தேடுபவன்தான் மெய்ஞ்ஞான ஊற்றாக விளங்கமுடியும்; அவன்தான் காரணசாதனங்கள், சேமித்தல் ஆகியவற்றின் தயவு தேவையற்றவனாவான்.

பின்னர் அந்த மெய்ஞ்ஞான பாக்கியமான சக்தி விதிவசப் பட்டோலை (லௌஹுல் மஹ்பூல்) போன்று விளங்குகிறது. அவனுடைய அறிவு புனிதமான ஜீவனில் (ரூஹுல் குத்ஸியில்) இருந்தே உதிப்பாக்கித் தரப்படுகிறது.

ஆனால், உண்மையில் இப்போது தான் (அவை என்ன என்பதைப்) பிரத்தியக்ஷமாகக் காண்கிறேன். இதோ இதுவே (மூத்திரமே) கடல்; நான் அமர்ந்திருப்பதே (துரும்பே) கப்பல்; நானே அதை இயக்கும் மாலுமி; இதைத் திறம்பட நடத்துவதில் கைதேர்ந்தவன் நான் " என்று கூறலாயிற்று.

1085. இந்தக் 'கட' வில் அது தன் கப்பலை நடத்தாட்டிக் கொண்டிருந்தது. அந்தச் சிறு அளவு மூத்திரம் அதற்குப் பெருங் கடலாகக் காட்சிதந்தது.

அது சம்பந்தப்பட்டவரை அந்த மூத்திரம் எல்லை இல்லாதது ஆயிற்று. அதன் யதார்த்தமான நிலையைக் காணும் திருஷ்டி அதற்கு எங்கேயுள்ளது?

அதன் பார்வை எவ்வளவு தூரம் போகிறதோ அந்த வரம்புக்குள் அதன் உலகமும் அடங்கிப்போய்விடுகிறது. எனவே, அது தன் கண்கள் பெரியவை, தான் காணும் 'கடல்' பெரிது என்று எண்ணிக் கொள்கிறது.

திரு குர்ஆனைத் திரித்து வியாக்கியானம் செய்வோர் இந்த ஈயைப் போன்றவர்களாவர். ஈயினுடைய கற்பனையைப்போல் இவர்களுடைய கற்பனை-கழுதை மூத்திரம் போல் கீழானதாகும். இவர்கள் கருத்துரை ஈ அமர்ந்திருந்த துரும்பைப்போல் பதரான தாகும்.

ஈ, தன் சொந்த மனப்பிரமைப்படி வியாக்கியானம் செய்வதைக் கைவிடுமாயின், நல்லதிர்ஷ்டம் அதை (அதிஷ்டத்தை கொணரும்) ஹுமா என்ற பறவையாக ஆக்கியிருக்குமே!

1090. தெய்வ அருள்பெற்ற நல்லடியான், (தன் மனம்போன போக்கில் திருமறைக்கு வியாக்கியானஞ் செய்யாதவன் ) இந்த ஈயைப்போன்றவனல்லன்; அவனுடைய ஆத்மா அவன் அற்ப உடலுடன் ஒத்ததாய் இல்லாமல் சிரேஷ்டமுடையதாகவே விளங்கும்.

## முயலின் தாமதம் காரணமாகச் சிங்கம் கோபத்துடன் கர்ஜித்தல்

இஃதே போன்றுதான் சிங்கத்தை எதிர்க்கத் துணிந்த முயலின் ஆத்மாவும் (அதன் உடலையொத்ததாய் இல்லாது உன்னதமான தாகத்) திகழ்ந்தது.

சிங்கம் கோபம் கொந்தளிக்க உருமலாயிற்று: "என்பகைவர்கள் (பிராணிகள்) என் காதுமூலம் கண்ணைமறைக்க (என்னை ஏமாற்ற) இடம் கொடுத்துவிட்டேனே!

உழைப்பாளிகளின் கபடம் என்னைக் கட்டிப்போட்டு விட்டதே! அவர்களுடைய மரத்தாலான வாள் என்னைக் காயப்படுத்திவிட்டதே!

இனிமேல் நான் அவர்களுடைய மாய மொழிகளுக்குச் செவி கொடேன். அந்தப் பேச்செல்லாம் (என்னை ஏமாற்றத் துணிந்த) கூச்சலாக, பூதங்களின் இரைச்சலாகப் போய்விட்டது.

1095. அந்தோ என் மனமே, இனி அவற்றை அக்கு அக்காகக் கிழித்தெறிய தயங்கக் கூடாது. அவற்றுக்குத் தோலையன்றி வேறு எதுவுமில்லை."

தோல்தான் யாது? பல வர்ணங்களான - நீர்க் குமிழிகள் போன்று நிலையற்ற கவர்ச்சியான வார்த்தைகள் தாமே!

இந்த வெற்று வார்த்தைகளெல்லாம் வெறும் தோல்தான்; உன் அர்த்தமே சதை என்பதை அறிந்துகொள். இந்த வார்த்தைகள் வெளி உருவமாகும்; உட்பொருளே ஜீவனாகும்.

கெட்ட சதையின் தன்மையைத் தோல் மறைத்துக்கொள்கிறது; நல்ல சதையின் தன்மையையும் அது பேணிப் பாதுகாக்கிறது.

பேனா காற்றாலானதாகவும், எழுதும் தாள் தண்ணீராலான தாகவும் இருப்பின், நீ எழுதும் எதுவும் நிலைப்பதில்லை.

1100. அது (பிராணிகள் கொடுத்த வாக்குறுதி) தண்ணீரின்மீது எழுதப்பட்டதுதான்; அதன்படி அவை நடக்கவேண்டும் என்று நீ எதிர்பார்ப்பின் நஷ்டத்தால் நீ உன் கையைக் கடித்துக்கொள் வதுதான் கண்ட பயனாகும்.

மனிதனினுள்ள காற்று வீணாசையும், பேராசையும்தாம். இவற்றை நீங்கள் கைவிட்டால்தான் இறைவனிடமிருந்து செய்தி பெற நீங்கள் அருகதைபெற்றவர்களாவீர்கள்.

சிருஷ்டியாளன் தரும் நன்மாராயங்கள் இனியவையாகும்; ஏனெனில், அவைதாம் அடிமுதல் நுனிவரை நீடித்து நிற்பவை யாகும்.

அரசர்களைப் போற்றி (வெள்ளிக்கிழமைக்) குத்பாவில் பேசப்படுவது (அவர்கள் மறைவுடன்) மாறிவிடுகிறது; அவர்களு டைய ராஜ்ஜியங்களும் கைமாறிவிடுகின்றன. ஆனால், நபிமார் களின் (முத்திரைபெற்ற) குத்பாக்களும், ராஜ்ஜியங்களுமே நிலைத்து நிற்பவையாகும்.

இதற்குக் காரணம் அரசர்களுடைய ராஜ்ஜியம் வீணாசையாலும், பேராசையாலும் உண்டானது; நபிமார்கள் பெற்றுள்ள புகழ்மிக்க சலுகைகளோ இறைவனின் மகத்துவத்தால் உண்டானவையாகும்.

1105. அரசர்களின் பெயர்கள் (அவர்கள் காலமானதும் அவர்கள் வெளியிட்ட) நாணயங்களிலிருந்து அகற்றப்படுகின்றன. ஆனால், அஹ்மது (ஸல்) அவர்களின் திருநாமமோ நிரந்தரமாக அதில் முத்திரை குத்தப்பட்டுள்ளது.

அஹ்மது என்ற சிரேஷ்டமான பெயரில் சகல நபிமார்களுடையவும் திருநாமங்களும் அடங்கியுள்ளன; (ஒன்று இரண்டு என்று) நூறு எண்ணியதும், தொண்ணூறும் அதில் அடங்கிவிடுகிறதல்லவா!

## முயலின் தந்திரோபாயம்பற்றி மேலும் விளக்குதல்

முயல் (சிங்கத்திடம்) செல்வதில் அதிகமான காலதாமதம் செய்தது. (தான் செய்ய யோசித்திருந்த) திட்டத்தை அது தனக்குத் தானே முதலில் ஒத்திகை பார்த்துக்கொண்டது.

மிகவும் தாமதமானபின் அது சிங்கத்தின் காதில் இரண்டொரு இரகசியங்களைச் சொல்வதற்காக (சிங்கம் இருக்குமிடம் நோக்கி) அந்தப் பாதையில் காலெடுத்து வைத்தது.

அறிவில் மறைந்துகிடக்கும் உலகங்களை எண்ணிப் பார்! அறிவெனும் சமுத்திரம் எத்துணை பரந்ததாய் இருக்கிறது!

1110. இந்த இனிய சமுத்திரத்தில் உருவங்கள், தண்ணீர்மீது வெற்றுக் குவளை மிதப்பதுபோல் படுவேகமாக மிதந்து செல்கின்றன.

சமுத்திரத்தில் மிதக்கும் தட்டு தண்ணீரால் நிரம்பாதவரை மிதந்துகொண்டுதானிருக்கும். அதனுள் தண்ணீர் போய்விட்டால் அது மூழ்கிப்போகும்.

அறிவு மறைவானது. சடத்துவ உடலே வெளியில் தெரிவது. நம் சடலங்கள் (அந்த மறைவான சமுத்திரத்தின்) அலைகளாகவே இருக்கின்றன.

உருவம் எதைச் செய்தாலும் அறிவை அடைய அதை ஓர் உபகரணமாக ஆக்கிக்கொள்கிறது; அதே நடைமுறையால் சமுத்திரம் (அறிவு) உருவத்தை வெகுதொலைவில் கொண்டுபோய்த் தள்ளி விடுகிறது.

இதயம் தன்னுள் மனச்சாட்சியை உண்டாக்கியவனைக் காணாதவரை, அம்பு தன்னை எய்பவனைக் காணாதவரை இதே நிலைதான் நீடிக்கும்.

1115. இவ்விதம் குருடனாயுள்ளவன், தன் குதிரைமீது சவாரி செய்துகொண்டே, பிடிவாதமாகத் தன் குதிரை தொலைந்து போய்விட்டதாக எண்ணுபவனையொப்பான்.

அந்தப் புத்திசாலி தன்னைக் குதிரை காற்றினும் கடிய வேகத்தில் தூக்கிச் சென்றுகொண்டிருக்கும் நிலையிலேயேதான் தன் குதிரையைத் தொலைத்துவிட்டதாக எண்ணிக்கொள்கிறான்.

அந்த மூளையற்ற மடையன் புலம்பிக்கொண்டும், நெடுகிலும் விசாரித்துக்கொண்டும் தன் குதிரையைத் தேடி சகல திக்குகளிலுமுள்ள வீடுகளிலெல்லாம் அலைகிறான்.

“என் குதிரையைத் திருடியவன் யார்? அவன் எங்கிருக்கிறான்?” என்று விசாரிக்கிறான். (அவன்மீது அனுதாபம் கொண்ட ஒருவர்) “உன் தொடைக்குக் கீழே இருப்பது (நீ அமர்ந்திருப்பது) யாது?” என்று கேட்கிறார்.

“ஆம், அது குதிரைதான், ஆனால், என் குதிரை எங்கே?” என்று மீண்டும் அவன் கேட்கிறான்; “ஹே, குதிரைமீது இருந்துகொண்டே குதிரையைத் தேடுபவனே உன் மயக்கத்தைவிட்டு விடுபடு! உன் நிலையை உணர்!” என்று அவர் சொல்கிறார்.

1120. ஜீவன் மிகவும் நெருங்கியும், வெளிப்படையாகவும் இருப்பதால் அது நம் பார்வையில் படாமல் மறைந்திருக்கிறது. வயிறு நிறையத் தண்ணீரை நிறைத்துக்கொண்டிருக்கும் நிலையிலும் நீ ஒரு கூஜாவைப்போல் வாய் வறண்டவனாகவா இருக்கிறாய்?

முதலில் நீ வெளிச்சத்தைக் காணாதவரை சிகப்பு, பச்சை, ரோஜா முதலிய வர்ணங்களைக் காண்பதெப்படி?

உன் கவனம் முழுமையும் வர்ணங்களைக் காண்பதிலேயே மூழ்கிவிட்டிருப்பதால், அவை நீ வெளிச்சத்தைப் பாராவண்ணம் உனக்குத் திரையாக அமைந்துள்ளதை நீ பார்க்க முடியவில்லை.

இரவில் இந்த வர்ணங்கள் (தென்படாமல்) மறைந்துவிட்டதால் நீ அந்த வர்ணங்களைக் காண முடிந்தது வெளிச்சத்தின் உதவியால்தான் என்பதை விளங்கிக்கொள்கிறாய்.

புற வெளிச்சமின்றி வர்ணங்கள் புலப்படமாட்டா; அக வர்ணங்களைக் காணும் விஷயத்திலும் இதுவே உண்மையாகும்.

1125. இந்தப் புறவெளிச்சம் சூரியனிலிருந்தும் 'ஸுஹா' என்ற விண்மீனிடமிருந்தும் கிடைக்கிறது. அக வெளிச்சமோ தெய்வீக மாண்பின் ஒளிக்கற்றைகள் பிரதிபிம்பிப்பதால் உண்டாகிறது.

கண்ணுக்கு வெளிச்சம் தரும் ஒளி உண்மையில் இதயத்தின் ஒளிதான். இதயங்களின் ஒளியால்தான் கண்ணின் ஒளி உண்டாக் கப்படுகிறது.

மேலும், இதயத்துக்கு வெளிச்சம் நல்கும் ஒளி இறைவனுடைய ஒளியாகும். அந்த ஒளி சடதத்துவ, மதிநுட்ப ஒளியைவிட்டும் தனியானது, பரிசுத்தமானது.

இரவில் வெளிச்சமில்லை; நீ வர்ணங்களை அப்போது காணமுடியவில்லை. அப்போது வெளிச்சமானது அதற்கு எதிரிடை யானதான இருளினால்தான் தெற்றெனப் புரிவதாயிற்று.

(முதலில்) வெளிச்சத்தைப் பார்ப்பதும், பின்னர் வர்ணங் களைப் பார்ப்பதும் நிகழ்ந்தன. இதை நீ வெளிச்சத்தின் எதிரிடை யானதான இருளின் உதவியால் புரிந்துகொண்டாய்.

1130. இறைவன் துன்பத்தையும், துயரத்தையும் சிருஷ்டித்துள்ள காரணமே இந்த எதிரிடையானவற்றால் மனிதன் மகிழ்ச்சியின் மாண்பை உணரட்டும் என்றுதான்.

எனவே, மறைவான பொருள்கள் அவற்றுக்கு எதிரிடையான வற்றால் வெளிப்படையாக்கப்பட்டன; இறைவனுக்கு எதிரிடை யானது எதுவுமின்றாதலின் அவன் மட்டும் மறைவானவனாகவே இருக்கிறான்.

பார்வை முதலில் வெளிச்சத்தின்மீது விழுந்தது. பின்னரே அது வர்ணங்களின்மீது விழுந்தது. (வெண்மையான) கிரேக்கர்களையும், (கறுப்பான) எதியோப்பியர்களையும்போல எதிரிடையானது அதற்கு நேர் எதிரிடையானதால் உணர்த்தப்பட்டதாகிறது.

எனவே, வெளிச்சத்தை அதன் எதிரிடையால் (இருளால்) அறிந்துகொண்டாய். வெளியாவதில் எதிரிடை, தனக்கு எதிரிடை யானதை வெளிப்படுத்திக் காட்டுகிறது;

(சகல) ஜீவிதத்திலுமே இறைவனின் ஒளிக்கு எதிரிடையானது எதுவுமில்லை; அப்படியிருந்திருப்பின் அதன்மூலம் அவனே வெளிப்படையானவனாக ஆகியிருப்பானன்றோ!

1135. எனவே, நம் (ஊனக்) கண்கள் அவனைக் காண்பதில்லை; ஆனால், அவனோ நம்மைப் பார்த்துக்கொண்டே இருக்கிறான். இதை நீங்கள் ஸீனா மலையும், மூஸா (அலை) அவர்களும் சம்பந் தப்பட்ட விருத்தாந்தத்திலிருந்து நன்கு விளங்கிக் கொள்ளலாம்.

வடிவம் ஆத்மாவைவிட்டு வெளிப்படுவது காட்டிலிருந்து சிங்கம் வெளிப்படுவது போலும், எண்ணங்களிலிருந்து சப்தமோ, பேச்சோ வெளிப்படுவது போலுமாம்.

பேச்சும் சப்தமும் எண்ணத்திலிருந்து வெளிப்பட்டன; ஆனால், எண்ணமாகிய கடல் எங்குள்ளது என்று நீ அறியாய்.

எனினும், (எண்ணத்தின் பயனாய் எழும்) பேச்சு ஆகிய அலைகள் நல்லவையாய் இருப்பதால், (அதன் மூலஸ்தானமான) கடலும் சிறந்ததாய்த்தான் இருக்க வேண்டும் என்று நீ நிதானித்துக் கொள்கிறாய்.

எண்ண அலைகள் அறிவுக் கடலிலிருந்து எழுகையில், அது (அறிவுக் கடல்) அவற்றுக்குப் பேச்சு, சப்தம் ஆகிய வடிவங்களைக் கொடுக்கிறது.

1140. இந்த வடிவம் (மூல) வார்த்தையின் பயனாய் உதித்து மறைந்துவிடுகிறது; அலை மீண்டும் கடலைச் சென்றடைகிறது.

வடிவம் வடிவமற்றதிலிருந்து உண்டாயிற்று; பின்னர், தான் புறப்பட்ட இடத்துக்கே மீண்டுவிட்டது. *நிச்சயமாக நாம் அவனிடமே மீள்பவர்களாயுள்ளோம்.*[1]

ஒவ்வொரு கணமும், நீ மரணித்துக்கொண்டும், மீண்டுகொண்டும் இருக்கிறாய். எனவேதான், 'இம்மையின் வாழ்வு ஒருகண வாழ்வேயன்றி வேறில்லை' என்று முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்களும் அறிவித்துள்ளார்கள்.

நம் எண்ணம் (ஹூ ஆகிய) அவனிடமிருந்து காற்றில் (ஹவாவில்) எய்யப்பட்ட அம்பாய் இருக்கிறது; அது காற்றில் தங்கியிருப்பதெப்படி?

ஒவ்வொரு கணமும் இவ்வுலகம் புதுமைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது; வெளித்தோற்றத்தில் அந்தப் புதுப்பிக்கப்படுதல் புலனாகாததால் நாம் அதை உணராமலிருக்கிறோம்.

1145.வாழ்க்கை நீரூற்றைப்போல் சதா புதுமையடைந்து கொண்டேயிருக்கிறது. ஆனால், உடலின் வெளித்தோற்றத்திலோ அது அப்படியே இருப்பது போன்ற பிரமை தட்டுப்பட்டுக் கொண்டேயிருக்கிறது.

தீப்பந்தத்தை நீ கையில் பிடித்துச் சுழற்றும் போது தோன்றும் வளையம் தொடர்படியானதாகத் தோன்றுவதுபோல வாழ்க்கை

---

1. குர்ஆன் 2 : 156

யும் (அதிவேகமாக மாறிக்கொண்டுவரினும்) மாற்றமே நடவாதது போல் தோற்றமளிக்கிறது.

நீ சுழற்றும் தீப்பந்தம் வட்டவடிவமான நெருப்புக்கோளமாகத் தெரிவதுபோல,

இறைவன் நம் வாழ்வை அதிதுரிதமாகச் சுழலச்செய்வதால் காலம் நகராததுபோல் தோற்றமளிப்பதுடன், இறைவனின் செயல்முறையின் வேகத்தையும் உணர்த்துகிறது.

இந்த மர்மத்தை அறிய விழைபவன் எத்துணை பெரிய அறிஞனாய் இருப்பினும், அவன் இதை நன்கு அறிந்த ஹுஸா முத்தீனின் வழிகாட்டுதலை நாடுவானாயின் வெற்றி பெறலாம்.

### முயல் சிங்கத்திடம் வருதல்

1150. பெருங் கோபத்துடனும், பொறுமையிழந்த நிலையிலும் இருந்த சிங்கம் முயல் தன்னை நோக்கித் தூரத்தே வருவதைக் கண்டு கொண்டது.

முயலோ மனந்தளராமலும், நம்பிக்யையுடனும், கோபமாகவும், கசப்பாகவும் துள்ளிக்குதித்து ஓடிவந்துகொண்டிருந்தது.

பணிவுடன் வந்தால் சிங்கத்துக்குச் சந்தேகமுண்டாகி விடலா மல்லவா! துணிவுடன் வந்தால் ஐயமெழ இடமிருக்காதன்றோ?

அது மேலும் அருகில் செருப்புக் கழற்றும் இடத்துக்கு வந்ததும், சிங்கம், அதை நோக்கி, "அடே அயோக்கியா!" என்று கர்ஜித்தது.

"யானைகளை நார் நாராகக் கிழித்துபோட்ட என்னிடம், மற்றச் சிங்கங்களை எதிர்த்துப் போராடி வீழ்த்திய என்னிடம்,

1155. அறிவு கெட்ட, பலஹீனமான அற்ப முயலான நீ ஏன் ஏற்பாட்டின்படி நடக்கப் பின்தங்கினாய்!

அற்ப முயலுக்குரிய அலக்ஷியமென்ற தூக்கத்தைக் கைவிட்டு விட்டு, ஹே அறிவிலி, இந்தச் சிங்கத்தின் கர்ஜனைக்குச் செவி கொடு!"

### முயலின் பதில்

முயல் கத்திற்று; "என்மீது கருணை காட்டுங்கள்! தாங்கள் என்னை மன்னிப்பதாயின் நான் தாமதித்து வரநேர்ந்த காரணத்தை விளம்புகிறேன்."

"என்ன சால்ஜாப்பு! மூடர்களின் கண்மூடித்தனந்தான் என்னே! அரசர்களின் சந்நிதியில் வந்து நிற்க இதுவா நேரம்?

நீ அகாலமாய் வந்தவன்; உன் தலை துண்டிக்கப்பட வேண்டும். மூடனின் சமாதானத்தை யாரும் கேட்பதே சரியன்று.

1160. மூடனின் சமாதானம் பெருங் குற்றத்தைவிட மோசமான தாகும். அறிவீனனின் சமாதானம் சகல ஞானத்தையுமே கொல்லும் பாஷாணமாகும்.

முயலே, உன் நொண்டிச் சமாதானம் அறிவுக் கலப்பற்றது. அதை என் காதில் வாங்க நான் என்ன உன்னைப்போன்றதொரு மூடனா?" என்று சிங்கம் வினவிற்று.

முயல் பதிலளித்தது. "அரசே, கவைக்குதவாத ஒருவனைத் தகுதியுள்ளவனாகக் கருதுங்கள்; அட்டூழியத்துக்கு ஆளான ஒருவனுடைய விளக்கத்தை நீங்கள் கேட்டருளவேண்டும்.

குறிப்பாகத் தங்கள் உயரிய அந்தஸ்தின் தயாளத்தின் நமூனா வாகவாவது வழிதவறிய ஒருவனை உங்கள் வழியைவிட்டு விரட் டாதீர்கள்.

சகல நீரூற்றுக்குமே சிறிது தண்ணீரையேனும் தரும் கடல் தன் தலையிலும் முகத்திலும் (தன் மேல்பரப்பில்) சகல அசுத்தங்களை யும் ஏற்றுக்கொள்கிறது.

1165. இந்தத் தயாளத்தால் கடலின் பரப்பு சிறுத்து விடவில்லை; இந்தக் கருணையால் அது கூடிவிடவுமில்லை; குறைந்து விடவு மில்லை."

சிங்கம் சொல்லிற்று: "நான் இடம் பார்த்தே கருணை காட்டு வேன்; ஒருவரின் உடலின் அளவுக்கு ஏற்பவே துணியை வெட்டு வேன்."

முயல் சொல்லிற்று: "நான் உங்கள் கருணைக்கு அருகதையற்ற பொருளாய் இருப்பின், இதோ என் தலைஸ்ய உங்கள் பலாத்காரம் என்னும் பூதத்தின்முன் சாய்த்துவிடுகிறேன். (உங்கள் கோபத்துக்கு முன் சரணடைகிறேன்.)

உங்களுக்கு உணவாகவேண்டிய நேரத்தில் நான் கிளம்பி விட்டேன்; அரசரின் சந்நிதியை நோக்கி என் தோழன் ஒருவனுடன் வந்துகொண்டிருந்தேன்.

அந்த மிருகங்களின் கூட்டம் தங்களுக்காக என்னுடன் என் துணையாகவும், தோழனாகவும் இன்னொரு முயலையும் அனுப்பி வைத்தன.

1170. பாதையில் வேறொரு சிங்கம் உங்கள் பணிவுள்ள அடிமையைத் தாக்கலாயிற்று; உங்களிடம் வந்து கொண்டிருந்த எங்கள் இருவரையுமே அது தாக்க எத்தனித்தது.

நான் அதனிடம் சொன்னேன்: "நாங்கள் அரசர்க்கு அரசனான சிங்கத்தின் அடிமைகள்; அந்த உன்னத அவையின் கீழான குற்றேவல்காரர்கள்" என்று.

அது கேட்டது: "அரசர்க்கு அரசனா? வெட்கக்கேடு! கேடுகெட்ட ஒவ்வொருவனைப் பற்றியும் என்னிடம் பிரஸ்தாபியாதே!

இங்கிருந்து நீ நகன்றால் உன்னையும் உன் அரசனையுமே துண்டு துண்டாகக் கிழித்துப் போட்டுவிடுவேன்."

நான் அதனிடம் பதிலளித்தேன்: "நான் ஒரு தடவை மட்டும் என் அரசரிடம் போய் உங்களைப்பற்றி அவரிடம் சொல்லிவிட்டு வருகிறேன்" என்று.

1175. "அப்படியானால், அதற்குப் பிணையாக உன் நண்பனை என்னிடம் விட்டுவிட்டுப்போ; இன்றேல், என் சட்டப்படி உன்னை நான் பலிகொண்டுவிடுவேன்" என்று அச்சிங்கம் சொல்லிற்று.

நாங்கள் இருவரும் அதனிடம் எவ்வளவோ கெஞ்சினோம். பயனில்லை. அது என் தோழனைப் பிடித்து வைத்துக்கொண்டு என்னை மட்டும் வரவிட்டது.

என் நண்பன் தன் கொழுத்த தன்மையிலும், உடல் அழகிலும் என்னைவிட இரண்டு மடங்கு சிறந்தவன்.

இனி இந்தப் பாதை அந்தச் சிங்கத்தால் தடுக்கப்பட்டதாய் இருக்கிறது; இதுவே எனக்குக் கிடைத்த அநுபவம்; நான் யாவற்றையும் உள்ளது உள்ளபடி உங்களிடம் தெரிவித்துவிட்டேன்:

இனி உங்களுக்கு உணவு வரும் என்ற நம்பிக்கையையே கைவிட்டுவிடலாம்; நான் உண்மையையே சொல்கிறேன்; உண்மை எப்போதுமே கசப்பானதுதான்.

1180 உங்கள் நித்தியப்படியான உணவை நீங்கள் நாடுவீர்களாயின் உடனே பாதையைத் தடையற்றதாக்குங்கள்; உடனே புறப்பட்டுவந்து அந்த மரியாதையற்ற சிங்கத்தை முறியடியுங்கள்."

**சிங்கம் முயலுக்கு பதிலளித்து அதனுடன் செல்லுதல்**

சிங்கம் சொல்லிற்று: "இறைவன் பெயரால் வா போகலாம், அது எங்கே இருக்கிறது என்று நான் பார்க்கிறேன். நீ சொல்வது உண்மையாயின் முன்னால் நடந்துபோ.

அந்தச் சிங்கத்துக்கும் அது போன்ற மேலும் நூறு இருப் பின்அவற்றுக்கும் அவற்றுக்குத் தகுதியான தண்டனையை நான் அளிக்கிறேன். அல்லது, ஒருகால் நீ சொல்வது பொய்யாயின் உனக்குப் பொருத்தமான தண்டனையைத் தருகிறேன்."

இவ்விதம் முயல், சிங்கத்தை அதன் வலையின் பக்கல் இழுத் துச்செல்வதற்காக அதன் வழிகாட்டிபோல் முன்னால் நடந்து சென்றது.

அது சிங்கத்தை ஏற்கனவே திட்டப்படுத்தியிருந்த கிணறு ஒன்றின் பக்கம் அழைத்துச்சென்றது; அந்தக் கிணற்றைத்தான் சிங்கத்தின் உயிருக்குக் கண்ணியாக அது ஏற்படுத்திக் கொண்டி ருந்தது.

1185. இவ்விதம் அவை இரண்டும் நடந்து அந்தக் கிணற்றை அணுகின. பாருங்கள், அற்ப ஜந்துவான முயல் எப்படித் துரும்புக்கு அடியில் மறைந்துள்ள தண்ணீரைப்போல் ஏமாற்று வேலை செய்கிறது!

தண்ணீர் துரும்பைத் தன்னோடு கீழ்நோக்கி இழுத்துக் கொண்டு ஓடுகிறது. ஆனால், அந்தத் தண்ணீர் ஒரு மலையை எப்படித் தன்னோடு அடித்துச்செல்ல முடியும் என்றுதான் நான் வியப்படைகிறேன்.

முயலின் தந்திரோபாயம் சிங்கத்தின் கழுத்துக்குச் சுருக்குக் கயிறாயிற்று. ஒரு சிங்கத்தையே தன் வேட்டைப் பொருளாகக் கொள்ளும் இந்த முயல் அதி அற்புதமானதன்றோ!

ஒரு மூஸா (அலை) எவ்வித ஆயுத பலமுமின்றி பிர்அவ்னை யும், அவனுடைய பலம் வாய்ந்த படைகளையும் நீலநதியின் மூலம் கொன்றதுபோலும்.

பாதி இறக்கையேயுள்ள சிறிய கொசுவொன்று, நம்ரூதின் மண்டை ஓட்டினுள்புகுந்து மூளைவரை சென்றதுபோலும் (முயல் சிங்கத்தைக் கிணற்றை நோக்கி இழுத்துச்சென்றது.)

1190. தன் பகைவனின் வார்த்தையை நம்பியவனுடைய கதியைப் பாருங்கள்! பெருமை பிடித்த ஒருவனுடன் நட்புக் கொண்டவன் இவ்விதமான பலாபலனையே அடையநேரும்.

இதுவே ஹாமானுடைய சொல்லுக்குச் செவிசாய்த்த பிர்அவ் னுக்கும், ஷைத்தானைப் போற்றிக்கொண்டிருந்த நம்ரூதுக்கும் உண்டான நிலையாகும்.

*பகைவன் உன்னிடம் தோழமையான முறையில் பேசினாலும், அது உன்னை அகப்படுத்தும் கண்ணி என்பதையும், அவனுடைய மொழிகள் கவர்ச்சியானவையாய் இருப்பினும் அவை உனக்காகக் கண்ணியில் தூவப்படும் தானியங்கள்தாம் என்பதையும் உணர்ந்து கொள்!*

*உனக்கு அவன் ஒரு துண்டுக் கற்கண்டைத் தந்தால் நீ அதைப் பாஷாணமாகவே கருது. உன் உடலுக்கு அவன் ஒரு நன்மையைச் செய்தால் அதைக் கொடுமையான காரியமாகவே கருது.*

*இறைவனுடைய தீர்ப்பு (கலா) வந்துவிட்டால் நீ வெளிப் படையானதைத் தவிர வேறு எதையும் பார்க்க மாட்டாய். நண்பன் யார், பகைவன் யார் என்று உன்னால் நிதானிக்க முடியாது.*

*1195. நிலைமை இப்படி இருப்பதால் இறைவன் திருச்சந்நிதியில் புனிதமுடன் அமர்ந்து பணிவையும், தாழ்வையும் காட்டு. இறைவனைத் துதித்துப் போற்றி அவனிடம் அழுது கெஞ்சிக்கேள்.*

*தொடர்படியாக அழு! "மறைவான யாவையும் அறிந்துள்ள கருணையாளா, எங்களைக் கொடியவர்களின் தந்திரோபாயம் என்ற கல்லுக்கு அடியில் நசுங்கச் செய்துவிடாதே!*

*சிங்கத்தையும் சிருஷ்டித்தவனே, நாங்கள் நாய்போல் ஈனச் செயல் ஏதும் செய்திருப்பினும், மறைவிடத்திலிருந்து சிங்கத்தை (ஷைத்தானை) எங்கள் மீது பாயும் படி ஏவிவிட்டுவிடாதே!*

*அருஞ்சுவைத் தண்ணீருக்கு நெருப்பின் வடிவத்தை (தோற்றத்தை) அளிக்காதே! நெருப்பின்மீது தண்ணீரின் வடிவத்தை (தோற்றத்தை) உண்டாக்காதே!*

*எங்கள் ரக்ஷகா, உன் கோபாவேசம் என்ற பானத்தால் நீ எங்களைப் போதையடையச் செய்துவிட்டால், தோற்றமற்ற பொருள்களும் எங்கள் பார்வையில் தோற்றமுடையவைபோல் காணப்படும்.*

*1200. இந்தப் போதைதான் யாது? உண்மையான பார்வையை விட்டுக் கண்ணை மறைத்து, அதனால் ஒரு சாதாரணக் கல் நமக்கு ஓர் ஆபரணமாகவும், கம்பளி மரகத வைடூரியமாகவும் காட்சி பெறச் செய்வதுதான்.*

*இந்தப் போதையாவது யாது? புலன்கள் தலை புரளுதல்தான். (அந்தத் தலை புரண்ட நிலையில்) முருங்கை மரமும் சந்தன மரமாகவே தென்படும்.*

## தெய்வ விதிப்பு வந்துவிட்டால் கண்பார்வை மறைந்துவிடும்: ஹுதுஹுதுப் பறவையும் சுலைமான் நபியும்

சுலைமான் நபி (அலை)அவர்களுக்குக் கூடார முற்றம் ஆயத்தமானதும், பறவையினம் யாவும் தமது விஸ்வாசத்தைத் தெரிவிக்க அவர்கள்முன் வந்து குழுமின.

அவர்கள் தமது (பறவைகளின்) பாஷையிலேயே தம்மோடு உரையாடக் கண்டன. அவற்றோடு அவர்கள் சகஜமாகப் பழகினார்கள். அவை ஒவ்வொன்றும் (ஆர்வமிக்க) இதயத்தோடு அவர்கள் சந்நிதியில் வந்து நின்றன.

இந்தப் பறவைகள் யாவும் தாம் தாம் கூச்சலிடுவதை நிறுத்தி விட்டு உன் சகோதரன் உன்னோடு பேசுவதுபோல் சுலைமான் நபியோடு சரளமாகப் பேசின.

1205. ஒரே மொழி பேசுவது ஓர் ஐக்கிய பாவத்தை ஒன்றுபடுத்தும் தன்மையைக் காட்டுவதாகும். தான் நினைப்பதைத் தன்னோடிருப்பவர்களுக்கு (அவர்களுக்கு விளங்கும் மொழியில்) வெளியிட இயலாதவன், விலங்கிடப்பட்ட கைதிபோலாவான்.

இந்தியர்களிலும் துருக்கர்களிலும் எத்துணையோ பேர் ஒரே மொழியைப் பேசுகின்றனர்; துருக்கர்களுக்குள்ளேயே பலர் (ஒருவனுடன் ஒருவர் பேச இயலாது) ஒருவருக்கொருவர் அந்நியர்களாயுள்ளனர்.

எனவே, பரஸ்பரம் அறியவைக்கும் நாவே சிறப்புடையது. எண்ணத்தளவில் ஒன்றாய் இருப்பதைவிட, நாவளவில் (பேச்சில்) ஒன்றாய் இருப்பது நலமாகும்.

பேச்சின்றி, சைகையின்றி, எழுத்தின்றி இதயத்திலிருந்து நூற்றுக்கணக்கான விரிவுரையாளர்கள் எழுதுகின்றனர்.

பறவைகள் யாவும் சுலைமான் நபி அவர்களிடம் தமது திறத்தையும், அறிவையும், பழக்கத்தையும் வெளிப்படுத்திவந்தன.

1210. அத்துடன் அவர்களுடைய கவனத்துக்காக வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்து தம்மைத் தாமே போற்றிக்கொண்டன.

(அவ்விதம் அவை போற்றிக் கொண்டது) அகந்தையாலோ, சுயம்பிரதாபத்தாலோ அல்ல; அவர்கள் சமூகத்தில் அவர்கள் தங்களைத் தாராளமாக அனுமதிக்கவேண்டுமே என்றுதான்.

விற்பனைக்கு வந்துள்ள ஓர் அடிமை, தன் எஜமானன் தன்னை வாங்க வேண்டும் என்று நினைத்தால் தன் திறமையைப்பற்றி அவரிடம் விஷேசமாகக் கூறுவது உண்டல்லவா!

ஆனால், அவர் தன்னை வாங்கவேண்டாம் என்று நினைத்தால் அவன் தன்னை நோயாளிபோலவும், வாதநோய்க்காரன் போலவும், நொண்டிபோலவும், செவிடன் போலவும் காட்டிக்கொள்வான்.

கடைசியில் ஹூதுஹூதுப் பறவை சுலைமான் நபி அவர்களின் முன் வந்துநின்றது. அது தன் திறமையையும் புத்தி சாதுரியத்தையும் அவர்களுக்கு எடுத்துரைத்தது

1215. அது சொல்லிற்று: "அரசே, எனக்குத்தெரிந்தவற்றுள் மிகவும் கீழான திறமையொன்றை நான் உங்களிடம் சுருக்கமாகத் தெரிவிக்கிறேன்." என்று.

"அந்தத் திறமை என்னவென்று நான் அறியும்படி கூறு!" என்று சுலைமான் நபி உத்தரவிட்டார்கள். ஹூதுஹூது சொல்லலாயிற்று: "நான் வானில் வெகு தொலைவில் பறந்துகொண்டிருந்தபோது,

அந்த உயரத்திலிருந்து திட்டமான கண்களோடு கீழே நோக்கி னேன். பூமியின் அடியில் தண்ணீரைக் கண்டேன்.

உடனே அது எங்குள்ளது, அதன் ஆழம் எவ்வளவு என்பதை நான் நிதானித்துக் கொண்டேன்.

சுலைமான் நபியே, தாங்கள் தங்கள் பட்டாளத்தோடு அந்தப் பக்கமாகப் போகநேர்ந்தால் அதைத் தங்களின் படைகளின் தங்கு மிடமாக ஆக்கிக்கொள்ளலாம்."

1220. உடனே (இதுகேட்ட) சுலைமான் நபி அவர்கள் அதை நோக்கி, "நீண்ட தொலைவில் தண்ணீர் கிடைக்காத பாலையில் நீ உற்ற தோழன்" என்று பாராட்டினார்கள்.

### ஹூதுஹூது கூறியதைக் காகம் மறுத்தல்

இதைக் கேட்டுக்கொண்டிருந்த காகம் பொறாமையால் சுலைமான் நபி அவர்களின் முன்வந்து, "அது சொன்னது பொய்யாகும்.

அரசர் சந்நிதியில் இவ்விதம் தன்னைப் பராட்டிக் கொள் வதற்காக அபத்தமான பொய்யைச் சொல்வது சரியன்று.

இதற்கு எப்போதுமே இந்தச் தீக்ஷண்யமான பார்வை இருந்திருப்பின் ஒருபிடி மண்ணுள் மறைந்திருந்த கண்ணி இதன் கண்ணில் படாதது எப்படி?

இது அந்தக் கண்ணியில் மாட்டிக்கொண்டது எப்படி? கூட்டினுள் அது அடைக்கப்பட்டது எப்படி?

1225. சுலைமான் (அலை) அவர்கள் கேட்டார்கள் ஹுதுஹுதே, ஒரு கோப்பை குடித்ததுமே உனக்குப் போதையுண்டானது எப்படி?

மோரைக்குடித்த நீ (அதனால்) போதையுற்றுவிட்டதாக நடிப்பதும், என்முன் பிதற்றுவதும், பொய்சொல்வதும் சரியா?" என்று.

## ஹுதுஹுது சொன்ன பதில்

அது பதிலளித்தது: "அரசே நான் பரம தரித்திரனாய் இருக்கலாம். எனினும், எனக்கெதிராக என் எதிரி சொல்லும் வார்த்தைகளை இறைவனுக்காக நீங்கள் கேட்கக்கூடாது.

நான் சொல்வது பொய்யாயின் என் தலையை நான் தங்கள்முன் கிடத்திவிடுகிறேன்; என் கழுத்தை நீங்கள் துண்டித்துவிடலாம்.

இந்தக் காகத்துக்கு ஆயிரக்கணக்கான தந்திரங்கள் தெரியுமாயினும், தெய்வ விதிப்பின் பரிபூரணத் தன்மையை நம்பாத இது ஒரு நிராகரிப்பவன் (காபிர்)ஆகும்."

1230. உன்னிடத்தில் 'காபிரி'லுள்ள (முதல் எழுத்தான) 'காப்' மட்டும் இருப்பினுங்கூட நீ படுநாற்றத்தின் பெண்களின் மாதவிடாயின் தலமாகவே ஆகிவிடுகிறாய்.

தெய்வவிதிப்பு என் புலன்களின் கண்களை மறைக்காதவரை நான் வானில் பறக்கும்போது கண்ணியைக் காண்கிறேன்.

ஆனால், தெய்வவிதிப்பு வந்ததும் அறிவு உறங்கிப்போகிறது; சந்திரன் கறுத்துவிடுகிறது; சூரியனும் (பிரகாசிக்காமல்) ஸ்தம்பித்துவிடுகிறது.

தெய்வவிதிப்பின் இந்தப் பலாபலன் விசித்திரமானதல்லவே! (நான் ஏமாற்றப்பட்டது ஒன்றும் விசித்திரமானதல்லவே!) தெய்வவிதிப்பினால்தான் அவன் (காபிர்) தெய்வவிதிப்பையே மறுக்கிறான்.

## ஆதம் (அலை) அவர்களைத் தெய்வவிதிப்பு கண்ணை மறைத்துவிட்டது

மானிட இனத்தின் ஆதிபிதாவான - (இறைவன்) சொல்லிக் கொடுத்த நாமங்களின் எஜமானர் (ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்) பல்லாயிரக்கணக்கான ஞானங்களைத் தங்கள் இரத்த நாளங்களில் கூட அடையப்பெற்றிருந்தார்கள்.

1235. சகல பெயர்களின் ஞானமும் அவர்களுடைய ஆத்மாவில் சேர்ந்திருந்தது; அவை ஒவ்வொன்றும் (உலக) முடிவுவரை எந்த நிலையில் இருக்கும் என்பதையும் அவர்கள் அறிந்திருந்தார்கள்.

அவர்கள் வழங்கிய பெயர்கள் எதுவும் மாறவில்லை; அவர்கள் சுறுசுறுப்பானது என்று அழைத்த எதுவும் சோம்பேறியாகி விடவில்லை.

முடிவில் யார் யார் மெய்விஸ்வாசிகளாக இருப்பார்கள் என்பதை முதலிலேயே அவர்கள் அறிந்திருந்தார்கள். அதேபோல் கடைசியில் யார் யார் நிராகரிப்பாளர்களாக இருப்பார்கள் என்பதையும் முதலிலேயே அவர்கள் அறிந்திருந்தார்கள்.

அறிந்தவரிடமிருந்து யாவற்றின் பெயர்களையும் நீ கேட்டறிகிறாய்; *'அவன் நாமங்களைக் கற்றுக்கொடுத்தான்'* என்பதன் அகப்பொருளை நீ கேள்!

நமக்கு யாவுமே அதன் புறத்தோற்றத்தோடு சம்பந்தப்பட்டவையாக உள்ளன. சிருஷ்டியாளனுக்கோ அவைகளின் யதார்த்தமான (அகப்பொருள்) நிலைதான் முக்கியமாயுள்ளது.

1240. மூஸா (அலை) அவர்களுடைய பார்வையில் அவர்களுடைய கையிலிருந்தது வெறும் தடியாகவே இருந்தது; சிருஷ்டியாளனான இறைவன் பார்வையிலோ அது பாம்பாக இருந்தது.

இங்கே 'உமர்' என்ற பெயர் விக்ரஹ ஆராதனைக்காரருடையதாக இருந்தது; அங்கே (ஆத்ம உலகில்) அவர்கள் பெயர் மெய்விஸ்வாசி என்பதாகவே இருந்தது.

நமக்கு 'வித்து' என்ற பெயராக இருந்த பொருள் இறைவன் பார்வையில் என்னருகிலுள்ள (உன்னுடைய) இந்த உருவாய் இருந்தது.

ஜீவிதமற்ற நிலையில் இந்த 'வித்து' ஓர் உருவாக இருந்தது; இறைவனிடமோ அது ஜீவிதமுடையதாக இருந்தது. அதற்குக் கூடுதலாகவோ, குறைவாகவோ இருக்கவில்லை.

சுருக்கமாகச் சொல்வதாயின் நம் முடிவாய் இருப்பதே இறைவனிடம் நம் பெயராய் உள்ளது.

1245. ஒருவனுடைய இறுதி நிலைக்கேற்பவே இறைவன் அவனுக்குப் பெயர் தருகிறான். அவனுக்குக் கடனாகக் கொடுத்த பெயர் இறுதியானதன்று.

எனவே, (இறைவன் அருளிய) பரிசுத்த ஒளி என்ற கண்ணால் கண்ட ஆதம் (அலை) அவர்களுக்கு ஆத்மாவும் அதன் அந்தரங்கமான கருத்துமே புலப்படுவனவாய் இருந்தன.

1. குர்ஆன் 2 : 31

அவர்களிடம் அமரர்கள் இறைவனின் சுடரொளியைக் கண்டதும் அவர்கள்முன் சாஷ்டாங்கம் செய்து, அவர்களுக்குத் தங்கள் மரியாதையைக் காட்டிக்கொண்டனர்.

நான் போற்றிப் புகழும் ஆதம் (அலை) அவர்களுடைய நாமமும் இறுதிநாள்வரை போற்றிக்கொண்டிருப்பினும் போற்றி முடியாத (முடிவே காணமுடியாத) ஒன்றாகும்.

இவ்விதம் சகலவற்றையும் அவர்கள் அறிந்திருந்தார்கள்; (எனினும்,) தெய்வ விதிப்பு வந்ததும் ஒரே ஒரு 'வேண்டாம்' என்ற ஆணையை விளங்கிக்கொள்வதில் அவர்கள் தவறியவர்களாக ஆகிவிட்டார்கள்.

1250. இந்த விலக்கல் உண்டானது (விலக்கப்பட்ட பொருளை) கூடாததாக ஆக்கும் நோக்கத்துடனா அல்லது (வேறு விதமான) விளக்கத்துக்கும் (திகைப்புக்கும் இடம் வைத்தா?) என்று குழப்ப மடைந்தார்கள்.

(ஷைத்தானின் தூண்டுதலால்) ஆதம் (அலை) அவர்களுடைய நெஞ்சத்தில் 'நெருங்க வேண்டாம்' என்று விலக்கப்பட்டதற்கு வேறுவிதமான தாத்பரியம் ஏதும் இருக்கலாம் என்ற எண்ணம் உண்டானதும், அவர்கள் இயல்பில் குழப்பமுண்டாகி அவர்கள் கோதுமைக் கனியின் பால் விரைந்தார்கள்.

தோட்டக்காரனின் (ஆதமின்) காலில் முள் தைத்து விட்டதும் திருடனுக்கு (ஷைத்தானுக்கு) நல்ல வாய்ப்புக் கிட்டிவிட்டது. அவன் அங்கிருந்த பொருளைக் கொள்ளைகொண்டு போய் விட்டான்.

அவர்கள் அந்தத் திகைப்பிலிருந்து நீங்கியதும் (நேரான) பாதைக்குத் திரும்பினார்கள். ஆனால், அதற்குள் திருடன் வீட்டி லிருந்த பொருளைத் திருடிக்கொண்டு போய்விட்டதைக் கண் டார்கள்.

"இறைவா, (உன் ஆணையை மீறியதன் மூலம்) நாங்கள் தவறு செய்துவிட்டோம்" [1] (ரப்பனா லலம்னா) என்று புலம்பிப் பிரார்த்தித்தார்கள். "அந்தோ, எங்கள் இதயங்களில் இருளும் மருளும் சூழ்ந்து, நாங்கள் வழிதவறி விட்டோமே!" என்று அழுது பிரலாபித்தார்கள்.

1255. "எனவே, (சுலைமான் நபியவர்களே,) இந்தத் தெய்வ விதிப்பு என்பது சூரியனை மறைக்கும் ஒரு கருமேகம் போன்றது. அதன்முன் சிங்கங்களும், மலைப்பாம்புகளும்கூடச் சுண்டெலி களாகிவிடுகின்றன.

1. குர்ஆன் 7 : 23

(ஹூதுஹூதுவாகிய) நான் தெய்வ விதிப்புக்கு உட்பட்ட தருணத்தில் கண்ணியைக் காணவில்லையாயின், தெய்வ விதிப்பால் அறியாமைக்கு ஆளானவன் நான் மட்டுமன்றே!"

ஹா, (குயுக்தியையும் குதர்க்கத்தையும் கைவிட்டு) நேர்மையின் பால் திரும்பியவனே பாக்கியசாலி; தன் பலத்தைக் கைவிட்டு இறைவனிடம் முற்றாகச் சரண் அடைந்தவனே சுகம் பெற்றவன்.

தெய்வ விதிப்பு இரவின் இருளைப்போல் உன்னைத் தன்னுள் மறைத்துக்கொண்டாலும், (ஆதம் அலையைப் போல், நீ பச்சாதாபப்பட்டு இறைவனிடம் பிரார்த்தித்தால்) இறுதியில் அது உன் கையைப் பிடித்து உன்னை நேரான பாதையில் வழிநடத்தும்.

தெய்வ விதிப்பு உன் உயிருக்குப் பலதடவை உலைவைப்பினும், கடைசியில் அது உனக்கு உயிரளித்து உன்னைச் சுகம்பெறச் செய்கிறது.

1260. இறைவனின் தீர்ப்பு உன்னை எத்தனை தடவை வழிப்பறி செய்தாலும் (நீ உண்மையாகக் கெஞ்சினால்) கடைசியில் அது உன் கூடாரத்தை வானத்தின் உச்சியில் ஆயத்தமாக்கிவிடும்.

தெய்வத் தீர்ப்பு இறைவனின் அன்பாலும், பரிவாலும் உண்டானது என்பதையும், உன்னைப் பாதுகாப்பாகிய சாம்ராஜ்ஜியத்தில் நிலைநிறுத்துவதற்காகவே அவன் உன்னை அச்சுறுத்துகிறான் என்பதையும் நீ அறிந்துகொள்ள வேண்டும்.

இந்த விஷயத்துக்கு முடிவே இல்லை. இடையில் நீண்ட நேரம் கடத்திவிட்டோம். மீண்டும் முயல் - சிங்கக் கதைக்குத் திரும்புவோம்.

### கிணற்றை நெருங்கியதும் முயல் சிங்கத்தின் பின்னால் சென்றுவிட்டது

சிங்கம் கிணற்றருகில் வந்ததும், முயல் தன்னோடு நடவாமல் பின்தங்கிவிட்டதைக் கண்டது.

"ஏன் நீ பின்தங்கிவிட்டாய்? பின்னால் போகாதே! வா இங்கே!" என்று அது முயலை அழைத்தது.

1265. முயல் கூறிற்று: "என் ஒரு காலை அசைக்கக்கூட என்னால் இயலவில்லை. என் காலும் கையும் போய்விட்டன. என் ஆத்மா துடிதுடிக்கிறது; என் இதயம் (தைரியம்) பறந்தோடிவிட்டது.

தங்கம்போல் ஆகிவிட்ட (வெளிறிவிட்ட) என் முகத்தை நீங்கள் பார்க்கவில்லையா? என் நிறம் என் அகநிலையைத்தான் காட்டுகிறது."

(முகக்) குறியை விபரந் தெரிவிப்பது என்று இறைவன் அழைப்பதால் மெய்ஞ்ஞானியின் கண் அந்த அறிகுறியின் பக்கலே திரும்புவதாக நிலைத்து நிற்கிறது.

வர்ணமும், சுகந்தமும் ஒரு (சேகண்டி) மணியைப்போல் குறிப் பிடத்தக்கவையாகும். ஒரு குதிரையின் கனைப்பு அந்தக் குதிரை யைக் கண்டுகொள்ள உதவுகிறது.

எதனாலாவது உண்டாகும் சப்தம் அது பற்றிய அறிவை (நமக்கு) வெளிப்படுத்திக் காட்டுகிறது; எனவே, கழுதையின் கத்துதலையும், கதவு திறக்கும்போது உண்டாகும் 'கிரீச்' என்ற ஒலியையும் நாம் கண்டு கொள்கிறோம்.

1270. மனிதர்களை (ஒருவரை மற்றவரிலிருந்து) கண்டறிவது பற்றி நபிபெருமானார் (ஸல்) அவர்கள், "ஒருவனுடைய நாக்கு உள்ளே மடித்து வைக்கப்பட்டால் அவன் ஒளிந்திருப்பவனாவான்" என்று அருளியுள்ளார்கள்.

முகத்தின் நிறம் அகத்தின் நிலையைக் காட்டிவிடுகிறது. என்மீது இரக்கம் கொள்ளுங்கள்; உங்கள் இதயத்தில் என்மீது அன்பை ஊற்றி வையுங்கள்.

சிவந்த நிறம் நன்றியை (திருப்தியை) அறிவிக்கும் தொனி யுடையதாக இருக்கிறது; வெளிறிய நிறம் பொறுமையினது தொனியுடையதாயுள்ளது.

என் கையையும், காலையும், முக நிறத்தையும், பலத்தையும், சகல (புற) அடையாளங்களையும் எடுத்துக்கொண்டது (எதுவோ அது) என்னை முற்றுமே ஆட்கொண்டுவிட்டது.

அது தனக்கு எதிர்ப்பட்டவற்றையெல்லாம் அடித்து நொறுக்குவதாகும்; சகல மரங்களையும் அடி மூட்டோடு பிடுங்கி எறிவதாகும்.

1275. மனிதனையும், பிராணிகளையும், கனிப்பொருள்களையும், தாவர வர்க்கத்தையும் வெற்றிகொண்டது தான் என்னையும் ஆட்கொண்டுள்ளது.

இவை பகுதிகள் (மட்டுமே) தான்; ஆனால், முழுமையானவை மஞ்சள் நிறமாயும், துர்நாற்றமடிப்பதாயும் ஆக்கப்பட்டுள்ளன.

அதனால் உலகம் சில சமயம் பொறுமையுடனும், நன்றியுட னும் காட்சி தருகிறது. தோட்டம் சில சமயம் செழிப்புடன் பச்சைப் பசேலென்று இருக்கிறது. சில சமயம் சூனியமாகக் கிடக்கிறது.

நெருப்பு நிறமாக உதிக்கும் சூரியன், வேறு (ஒரு) சமயத்தில் வேகமாக (மேற்கே) அஸ்தமிக்கிறது.

நான்கு திக்கிலும் ஒளிவிடும் விண்மீன்கள் அப்போதைக் கப்போது எரிவதால் பாதிக்கப்படுவதுமுண்டு.

1280. விண்மீன்களை மிஞ்சிய அழகுடைய சந்திரன் ஏதோ கடுஞ் ஜுரத்தால் தாக்குண்டவன்போல் பிசாசாக (நிழலாக) ஆகியும் விடுகிறது.

அமைதியாகவும், கட்டுப்பட்டுமிருக்கும் பூமியே பூமியதிர்ச்சி யால் ஜுரநடுக்கம் நடுங்க ஆரம்பித்துவிடுகிறது.

ஹா இந்தப் பிதுர்ராஜ்ஜிதத் துயரால் உலகில் மலைகள் எத்தனையோ சிறு தூள்களாகவும் மண்ணாகவும் ஆகியிருக் கின்றன.

இந்தக் காற்று (அத்தியாவசிய) ஜீவனோடு பிணைந்துள்ளது; ஆனால், தெய்வீக நியதி வந்ததுமே அது வெறி பிடித்ததாக ஆகி அழிவையுண்டாக்கத் தொடங்கிவிடுகிறது.

உயிருக்கு ஒரு சகோதரிபோன்ற இனிய தண்ணீரோ (ஒரு தடாகத்தில் தேங்கி) நின்றபின் மஞ்சளாகவும், கலங்கியதாகவும், கைப்பானதாகவும் ஆகிவிடுகிறது.

1285. மீசையை முறுக்கும் (அகந்தை நிறைந்த) நெருப்பு, காற்றின் வேகமான தாக்குதலால் மரணத்தைத் தழுவிவிடுகிறது.

கடலோ - அதில் உண்டாகும் கொந்தளிப்பையும், அலை மோத லையும் கொண்டே அதன் நிலையை நீங்கள் உணர்ந்து கொள்ள லாம்.

சுழன்றுகொண்டிருக்கும் வான மண்டலமோ - நாடுவதும் தேடுவதுமாயுள்ள அதன் நிலையோ அதன் சிசுக்களுடைய நிலையை ஒத்ததாகவே விளங்குகிறது.

ஒரு சமயம் கிழக்கில், பின்னர் நடுவானில், பின்னர் அடி வானத் தில், அதிர்ஷ்டமானவையும் துரதிர்ஷ்டமானவையுமான எத்த னையோ விண்மீன்கள் உலவுகின்றன.

முழுமையினால் ஆன பகுதியானவனே, உன்னிலிருந்து ஒவ்வொரு சிறிய பொருளினது நிலையையும் நீ நோட்டமிட்டுப் பார்.

1290. முழுமையானவையே துயருறுகையில், பகுதிகள் முகம் வெளுக்காது (அழிவடையாது) இருப்பதெப்படி?

*அதிலும் குறிப்பாக, நீராலும் நெருப்பாலும், மண்ணாலும், காற்றாலுமான - இத்துணை முரண்பட்ட பூதங்களை அங்கமாகக் கொண்ட - ஒரு பகுதி அழியாதிருப்பது எப்படி?*

*எனவே, ஆடு ஓநாயைக் கண்டு ஒளிப்பதில் வியப்பில்லை. ஆனால், இந்த ஆடு ஓநாயின் நட்பை நாடுவது தான் வியப்பான விஷயமாகும்.*

*இந்த முரண்பாடானவைகளுக்கு இடையில் உண்டாகும் அமைதிதான் (சுமுகம்தான்) வாழ்வு; இவற்றிடையுண்டாகும் சண்டையே மரணம்.*

*இறைவனின் நல்லருள் முரண்பட்ட இயல்புள்ள சிங்கத்துக்கும் கழுதைப் புலிக்குமிடையில் சுமுகமுண்டாக்கியுள்ளது.*

*1295. இப்பிரபஞ்சமே பிணியாளியாயும், கைதியாயும் இருப்பதால், பிணியாளி காலமாவதில் (மரணிப்பதில்) வியப்பு என்ன இருக்கிறது?*

*இந்த அடிப்படையில் அது (முயல்) சிங்கத்துக்குப் புத்திமதிகள் புகன்றது. அது கூறிற்று, "இந்தத் தளைகளால் நான் பின்தங்கி விட்டேன்" என்று.*

**முயல் பின்தங்கிய காரணத்தைச் சிங்கம் வினவல்**

*சிங்கம் முயலிடம் சொல்லிற்று : "உனக்கு உண்டாகியுள்ள (பின்தங்கிவிட்ட) கோளாறுக்குப் பயம் என்ற நோய்தான் காரணமா அல்லது வேறு காரணம் ஏதும் உண்டா? அதைத் தெரிந்து கொள்வதுதான் என் நோக்கம்" என்று.*

*"(நான் குறிப்பிட்ட உங்கள் எதிரியான) அந்தச் சிங்கம் இந்தக் கிணற்றில்தான் இருக்கிறது; இந்தக் கிணறாகிய கோட்டையுள் அது எவ்வித ஆபத்துமின்றிப் பாதுகாப்பாக வாழ்ந்து வருகிறது" என்று முயல் தெரிவித்தது.*

*அறிவுடையவன் கிணற்றின் அடித்தளத்தில் சுவாசிப்பதைத் தான் விழைவான்; ஏனெனில், அங்கே தனிமையில் மனத் தெளிவும், தூய்மையும் கைவல்யமாகின்றன.*

*1300. கிணற்றினுள் உள்ள இருள் சிருஷ்டிகளாலுண்டாகும் இருளைவிடச் சிறந்ததாகும். சிருஷ்டிகளின் காலைப் பற்றுபவன் ஒருகாலும் தன் தலையைக் காப்பாற்றிக்கொள்ள முடியாது.*

*சிங்கம் சொல்லிற்று : "நீ (பயப்படாமல்) முன்னே வா! நான் அந்தச் சிங்கத்தை ஒரே அறையில் படிய வைத்துவிடுகிறேன். இப்போது அது கிணற்றினுள் இருக்கிறதா என்று மட்டும் பார்!"*

முயல் பதிலளித்தது : "அந்தச் சிங்கத்தின் கோபநெருப்பால் நான் தகிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறேன்; அவசியமாயின் உங்கள் பக்கமாக வருகிறேன்.

தயாளத்தின் சுரங்கமே, உங்கள் ஆதரவுடன் நான் கண்களைத் திறந்து கிணற்றினுள் நோக்குகிறேன்" என்று.

## சிங்கம் கிணற்றுள் பார்த்தது; தன்னுடையவும் முயலுடையவும் நிழலைக் கண்டது

சிங்கம் முயலைத் தன் அரவணைப்பில் வைத்துக்கொண்டதும், முயல் கிணற்றை நோக்கி ஓடிவந்தது.

1305. அவை இரண்டும் (ஒரே சமயத்தில்) கிணற்றுள் உற்றுப் பார்த்தபோது, அவற்றின் நிழல்கள் தண்ணீரில் பிரதிபிம்பித்தன.

சிங்கம் தன் பிரதிபிம்பத்தைத் தண்ணீருள் கண்டது; தண்ணீரில் கொழுத்த முயல் ஒன்றை அரவணைத்த சிங்கம் ஒன்றை அது கண்டது.

அது தண்ணீருள் தன் எதிரியைக் கண்டதும், முயலை விட்டுவிட்டுத் (தான் மட்டும்) தண்ணீருள் பாய்ந்தது.

சிங்கம் தான் தோண்டிய குழியில் தானே போய் விழுந்து விட்டது; காரணம், அது இழைத்த அநீதி அதன் தலைமீதே வந்து விடிந்தது.

தீமை புரிபவர்களின் அநீதமான காரியங்கள் கிணற்றின் இருள்போன்றவை என்பதே அறிஞர்களின் முடிபாகும்.

1310. ஒருவனுடைய அநீதி அதிகரிப்பதற்கு ஏற்ற அளவு அவனுடைய (வேதனை, தண்டனை) என்ற கிணறும் அதிகப் பயங்கரமானதாகவே இருக்கும். அதிகமான பாவத்துக்கு அதிகமான தண்டனையுண்டு என்பது தானே (தெய்வத்) தீர்ப்புமாகும்!

உன் பலம் மிகுதி காரணமாக அநீதியால் (மற்றோரைத் தள்ளுவதற்காகக்) கிணறு தோண்டுபவனே, நீ விழுவதற்காகவே தோண்டும் படுகுழி அது என்பதை அறிந்துகொள்!

(மூடனே,) பட்டுப்புழுவைப்போல் நீ உன்மீதே இழைகளைச் சுற்றிக்கொள்ளாதே! நீ தோண்டுவதோ நீயே விழப்போகும் கிணறுதான். எனவே, அதை அதிக ஆழமானதாகத் தோண்டாமல் ஓர் அளவுடன் நிறுத்திக்கொள்!

பலஹீனர்களுக்குப் பாதுகாப்பளிக்க யாருமில்லை என்று எண்ணாதே! திருகுர்ஆனிலுள்ள 'இறைவனுடைய நல்லருள்

வந்தது'[1] (இதாஜாஅ் நஸ்ருல்லாஹி) என்ற அத்தியாயத்தைப் படித்துப்பார்!

நீ ஒரு யானையாய் இருந்து, உன்னைக் கண்டு உன் எதிரி ஓடுவானாயினும், உனக்கான தண்டனை பறவைகளின் கூட்டத்தால்[2] (தைரன் அபாபீல்) உன் தலைமீது இறங்கும் என்பதை அறிந்துகொள்!

1315. ஏழை ஒருவன் கருணை நாடிப் பிரார்த்திப்பானாயின் (அவனைப் பாதுகாப்பதற்காக) வானுலகப் படைகளிடையே (அமரர்களிடையே) ஆரவாரமே உண்டாகியுள்ளது.

நீ அவனைப் பல்லால் கடித்து இரத்தம் வழியச் செய்வாயாயின், உன்னைப் பல்வலி பீடிக்கும். பிறகு நீ என்ன செய்ய முடியும்?

சிங்கம் கிணற்றுள் தன்னைக் கண்டது. தன் கோபத்தால் அந்தக் கணம் தன்னைத் தன் எதிரியிலிருந்து அதனால் பகுத்தறிய முடியவில்லை.

தன் பிரதிபிம்பத்தையே அது தன் எதிரியாக எண்ணிக் கொண்டது. எனவே, தன் வாளை உருவித் தன்னையே தாக்கிக் கொண்டது.

ஹே வாசகனே, பிறரிடம் நீ காணும் அநீதிகள் பல உண்மையில் அவர்களில் பிரதிபிம்பிக்கும் உன் சுபாவங்கள்தாம்.

1320. உன் நயவஞ்சகத்திலும், அநீதியிலும், அகந்தையிலும் நீ செய்யும் அக்கிரமங்களைத் தாம் அவர்களிடம் இருப்பதாக நீ காண்கிறாய். (உண்மையில் அவை உன் செயல்களின் பிரதிபிம்பம்தான்.)

நீயே அந்த அநீதிகளை இழைப்பவன்; நீ உன்னையே தான் சாடிக்கொள்கிறாய்; அந்தச் சமயத்தில் நீயே உன்மீது சாபத்தைப் பின்னிக்கொள்கிறாய்.

உன்னிலுள்ள தீமைகளை நீயே முழு மனத்துடன் (அவற்றின் பொருட்டால்) வெறுக்கத் தொடங்கிவிடுவாய்.

ஹே மூடனே, தன்மீது தானே பாய்ந்துகொண்ட அந்தச் சிங்கத்தைப்போல் உன்னை நீயே சாடிக்கொள்கிறாய்.

உன் சுபாவச் சேஷ்டைகளின் அடித்தளத்தை நீ அடைந்ததும் கீழான தன்மைகள் உன்னிலிருந்தே உண்டாயின என்பதை நீ கண்டுகொள்வாய்.

1. பார்க்க. குர்ஆன் அத்தியாயம்: 110   2. பார்க்க. குர்ஆன் அத்தியாயம்: 105

*1325. கிணற்றின் அடித்தளத்தை அடைந்த பிறகுதான், தான் வேறொரு சிங்கம் என்று எண்ணியது உண்மையில் தன்னுடைய பிரதிபிம்பமே என்று அந்த சிங்கம் கண்டுகொண்டது.*

*ஏழையின் பல்லைப் பிடுங்குபவன், தவறாகக் காணும் சிங்கம் செய்வதைச் செய்தவனாவான்.*

*உன் சிறிய தகப்பனுடைய முகத்தில் நீ காணும் விகாரமான மச்சம் உண்மையில் உன் சிறிய தகப்பனுடையதன்று, உன்னுடையதுதான். உன்னைவிட்டு நீயே ஓட வேண்டாம்.*

*"மெய்விஸ்வாசிகள் ஒருவருக்கொருவர் கண்ணாடியாவர்" என்று நபிபெருமான் (ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள்.*

*நீ கறுப்புக் கண்ணாடியை அணிந்துகொண்டு (அதன்மூலம்) உலகைப் பார்ப்பதால் உலகம் முழுவதுமே உனக்கு இருண்டதாகத் தெரிகிறது.*

*1330. நீ குருடனாய் இல்லாதிருப்பின், இந்தக் கருமை உன்னிலிருந்தே உண்டாவது என்பதை நீ அறிந்துகொள். உன்னைப்பற்றிக் குறை கூறிக்கொள்; மற்றோரைப்பற்றிக் குறை கூறாதே!*

*மெய்விஸ்வாசி இறைவனின் ஒளியால் காணாவிட்டால், மற்றோருக்குப் புலப்படாத பல விஷயங்கள் அவனுக்கு மட்டும் தோற்றமாவது எப்படி?*

*எனவே, நீ இறைவனின் நெருப்பால் பார்ப்பதால் நன்மை எது, தீமை எது என்று உன்னால் பகுத்தறிந்துகொள்ள முடியவில்லை.*

*துயரத்தால் வாடுபவனே, (மகான்களின் சகவாசம் என்ற) தண்ணீரைச் சிறிது சிறிதாக (உன் துயரம் என்ற) நெருப்பின்மீது தெளி! அதன்மூலம் (உன் துயர) நெருப்புக் குறையும்.*

*இறைவா, புனிதத்தையும் தூய்மையையும் உண்டாக்கும் (உன் அருள் என்ற) தண்ணீரை எங்கள்மீது தெளி! அப்போதுதான் (எங்களுடைய தீய சுபாவங்களான) நெருப்புத் தணிந்து முற்றும் வெளிச்சம் மட்டும் நல்குவதாக ஆகும்.*

*1335. கடலிலுள்ள தண்ணீரெல்லாம் உன் கட்டளைக்கு உட்பட்டவை; நீரும் நெருப்பும் நீ உண்டாக்கியவை.*

*நீ நாடினால் நெருப்பும் நறுஞ்சுவைத் தண்ணீராகிவிடும்; நீ (இவ்விதம் நாடாவிட்டால்) தண்ணீர்கூட நெருப்பாகிவிடும்.*

*எங்களிடமுள்ள இந்த நாட்டமும் தேட்டமும் உன்னால் உண்டாக்கப்பட்டவைதாம். இறைவா, அநீதியிலிருந்து விமோசனம் பெறுவது உன் சம்மானமாகும்.*

நாங்கள் கேட்காமலே இந்த நாட்டதேட்டங்களை எங்களில் உண்டாகியுள்ளாய். நீ எங்களுக்கு அருளியுள்ள அருட்கொடைகளுக்கு அளவுமில்லை; முடிவுமில்லை.இவ்வாறே நாங்கள் சொர்க்கம் புகும்வரை நபிபெருமான் (ஸல்) அவர்கள் பொருட்டால் எங்கள் மீது உன் அருள்மாரியைப் பொழிந்து கொண்டிருப்பாயாக!

## சிங்கம் கிணற்றுள் விழுந்தபின் அதை முயல் மற்றப் பிராணிகளிடம் தெரிவித்தல்

*சிங்கத்திடமிருந்து விடுதலை பெற்றதால் மகிழ்ச்சியடைந்த முயல் மற்றமிருகங்கள் வசித்துவந்த காட்டை நோக்கி ஓடிற்று.*

*1340. சிங்கம் கிணற்றுள் துர்மரணமடைந்ததைக் கண்டபின் அது மேய்ச்சல் துறையை நோக்கி மிகவும் குதூகலமாகத் துள்ளிக் குதித்தோடிற்று.*

*மரணத்தின் கையிலிருந்து தப்பியதால் மகிழ்வுடன் கை கொட்டியவாறு பசுமையான கிளையும் இலைகளும் காற்றில் அசைவதுபோலக் கும்மாளம் போட்டுக் கொண்டு சென்றது.*

*கிளையும், இலைகளும்கூட (இப்படித்தான்) மண்ணின் பிடிப்பிலிருந்து விடுதலை பெற்றுக் காற்றின் தோழர்களாய்த் தலையைத் தூக்கிக் கும்மாளமிடுவதுண்டு.*

*கிளையிலிருந்து புதிய தளிர்கள் வெளிப்பட்டதும், அவை மரத்தின் உச்சியைச் சென்றடைய நாடுகின்றன.*

*(விதை ஊன்றப்பட்டுக்) கிளைத்தெழும் தாவர இனம் ஒவ்வொன்றும் தத்தம் மரத்தை அல்லது கனியை வெளிப்படுத்தி அந்த நாவுகொண்டு இறைவனைத் துதிக்கின்றன.*

*1345. "காருண்யவாளனான நன்கொடையாளன் நாங்கள் இவ்வளவு பெரிதாய் வளர்ந்து, நிமிர்ந்து நிற்குமளவு[1]க்கு எங்களை ஊட்டி வளர்த்தான்" என்று அவை அவனைத் துதிக்கின்றன.*

*(அஃதேபோல்) உடல் என்ற களிமண்ணுள் சிறையுண்டு கிடக்கும் (மகான்களின்) ஆத்மாக்களும் அதை விட்டுச் சாந்தி பெற்றவையாக வெளியானதும்,*

*தெய்வீக அன்பு என்ற காற்றில் குதித்தாடுகின்றனர்; பூரணச் சந்திரனின் வட்டத்தைப்போல் மாசற்றவர்களாக ஆகிவிடுகின்றனர்.*

*அவர்களுடைய சடலங்கள் (பரவச நிலையில்) ஆட்டம் அசைவுகளுக்கு உள்ளாகும்போது அவர்களுடைய ஆத்மாக்களின்*

---

*1. பார்க்க : குர்ஆன் 48 : 29*

பேரானந்தம்பற்றிக் கேட்கவும் வேண்டுமா? ஆத்மாவைச் சூழ்ந்துகொள்ளும் அன்பு - அந்தோ அதுபற்றி ஒன்றும் கேட்கா தீர்கள்!

முயல் சிங்கத்தை (நாசம் என்ற) சிறையில் தள்ளி அடைத்து விட்டது. கேவலம்; ஓர் அற்ப முயலால் முறியடிக்கப்பட்ட சிங்கம் இகழ்ச்சிக்குரியது.

1350. (முயல்போன்ற கீழான மனத்தால் முறியடிக்கப்பட்ட) நீ இத்துணை படுகேவலத்துக்கு ஆளான பின்னும் 'பக்ருத்தீன்' (சன்மார்க்கத்தின் பெருமை) என்று அழைக்கப்பட ஆசிக்கிறாயே, அந்தோ வெட்கம்!

இந்த (இம்மையின் ஆசாபாசம் என்ற) கிணற்றில் ஏகாந்தமாகக் கிடந்துழலும் சிங்கமானவனே, முயலைப்போல் உன் கீழான மனம் உன்னைக் கொன்றுதின்பதாய் இருக்கிறதே!

உன் கீழான மனம் முயலைப்போல் (இம்மையின் ஆசாபாசம் என்ற) காட்டில் மேய்ந்து கொண்டிருக்கிறது. நீயோ எப்படி, ஏன் (என்ற வாக்குவாதச் சர்ச்சையாகிய) கிணற்றின் அடிச் சேற்றில் புதையுண்டு கிடக்கிறாய்.

சிங்கத்தைச் சிறைப்படுத்திய முயல் மிருகங்களிடம் சென்று பேசிற்று. "என் இனத்தாரே, மங்களமுண்டாகட்டும்! உங்களுக்குச் சுபசோபனம் சொல்பவன் வந்துள்ளேன்.

ஹே மகிழ்ச்சியில் திளைப்போரே; நற்செய்தி, நற்செய்தி! நரகத்து நாய் மீண்டும் நரகத்துக்கே போய்விட்டது.

1355. நற்செய்தி, நற்செய்தி! உங்கள் உயிர்களை வதைத்துவந்த உங்கள் பரமவைரி - அவனுடைய பல், சிருஷ்டியாளனின் பழிவாங்குதலால் பிடுங்கப்பட்டுவிட்டது.

நம்மில் பலருடைய தலைகளைத் தன் கால் நகங்களால் பிளந்த அவனையும் மரணம் என்ற துடைப்பம் குப்பையாகக் கூட்டி அப்பால் விட்டெறிந்து விட்டது."

### பிராணிகள் முயலைச் சுற்றிநின்று அதைப் போற்றுதல்

காட்டிலிருந்த (மேய்ச்சல்) மிருகங்கள் அனைத்தும் ஒன்றுகூடி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தன.

அவை ஒரு வளையம்போல் கூடின. அவற்றின் மத்தியில் முயல் ஒரு மெழுகுதிரியைப்போல் காட்சியளித்தது. வனவிலங்குகள் யாவும் அதன்முன் பணிந்து அதற்குத் தங்கள் மரியாதையைத் தெரிவித்துக்கொண்டன.

அவை முயலை நோக்கிப் பேசின: "(முயலே,) நீ வானுலக அமரனா, அல்லது ஜின்னா அல்லது சிங்கத்தை ஒழித்துக்கட்ட வந்த உயிர்வாங்கும் இஸ்ராயீல் (அலை) அவர்களா?

1360. நீ யாராயினும் சரி, (சிங்கத்தின் கொடுமையிலிருந்து எங்களைக் காப்பாற்றிய) உனக்கு எங்கள் உயிர்களையே அர்ப் பணம் செய்கிறோம். நீ உன் ஆற்றலையும் அறிவையும் நிலைநாட்டி விட்டாய். உன் கையும், புஜமும் (உன் சக்தியும் ஆற்றலும்) நீடூழிக் காலம் நிலைத்திருக்கட்டும்.

உண்மையில் இறைவன்தான் இந்த வெற்றியை உனக்கு அளித்தான். உன் கையும் புஜமும் நீடுவாழட்டும்!

நீ எந்த உபாயத்தைக் கையாண்டாய், அந்தக் கொடுமைக் காரனை எப்படி ஏமாற்றி ஒழித்துக்கட்டினாய் என்பதையெல்லாம் எங்களிடம் விபரமாகக்கூறு.

உன் வரலாற்றைக் கேட்டு எங்கள் மனப்புண் ஆறும் பொருட் டாவது அதை எமக்கு எடுத்துரை! அது எங்கள் ஆத்மாவுக்கு சஞ்சீவியாகட்டும்.

அந்தக் கொடுமைக்காரனின் அட்டூழியங்களால் எங்கள் உயிரில் உண்டான வடுக்கள் எண்ணிலடங்கா! எனவே, அவற்றுக்கு உன் வரலாற்றால் மருந்திடு!"

1365. முயல் சொல்லிற்று, "கனவான்களே, எல்லாம் இறைவன் உதவியால் நடந்ததுதான். இன்றேல், அற்ப முயலான நான் இவ்விதம் செய்வது சாத்தியமாகுமா?

இறைவன் எனக்குச் சக்தியைக் கொடுத்தான், என் இதயத்தில் ஒளியை உண்டாக்கினான். அந்த ஒளியே என் கைகால்களுக்கு பதிலளித்தது" என்று கூறியது.

## சதா மாறிக்கொண்டிருக்கும் இந்த அதிர்ஷ்டம்பற்றி மகிழ வேண்டாம் என்று உபதேசித்தல்

இறைவனின் திவ்விய சமூகத்திலிருந்தே சிறப்பும், உன்னதப் பதவிகளும் அருளப்படுகின்றன; (அந்தச் சிறப்பான நிலையிலிருந்து கீழான நிலைக்கு) மாற்றமுண்டாவதும் அவன் ஆக்ஞைப்படிதான்.

இந்தத் தெய்வ நல்லுதவிகளை இறைவன் சிறந்தோருக்கும், தாழ்ந்தவர்களுக்கும் மாற்றி மாற்றித் தந்து அருள்புரிகிறான்.

எச்சரிக்கை, (ஒரு கையிலிருந்து மறு கைக்கு) மாற்றி மாற்றி அருளப்படும் இந்த சாம்ராஜ்ஜியம் கண்டு அகந்தைகொள்ளாதே!

மாற்றங்கள் என்ற நியதிக்கு அடிமையான நீ உன்னைச் சுதந்தர வானாக எண்ணிக் கொண்டு அலையாதே!

1370. மாற்றங்களுக்கு அப்பாற்பட்ட சாம்ராஜ்ஜியம் ஆயத்தஞ் செய்யப்பட்டுள்ளவர்களைப்பற்றி (அவர்களுடைய மகிமையைப் பற்றி) பறையறையப்படுவது ஏழு வானங்களுக்கு அப்பாலும் ஒலிக்கும்.

இந்த சாயுஜ்ஜிய நிலையடைந்த மன்னர்கள் மாற்றங்களுக்கு அப்பாற்பட்ட நிலையில் இருக்கின்றனர். (பேரின்ப) மது அருளுபவனோடு அவர்களுடைய புனிதமான ஆத்மாக்கள் திளைத்துக் கொண்டிருக்கின்றன.

(உலக இன்பங்கள் என்ற மதுவை) நீ சில நாட்கள் (உன் இம்மை வாழ்வில்) பருகாது ஒதுக்குவாயாயின், நீ சுவனலோக அமுதில் உன் வாயை நனைக்கப்போவது நிச்சயம்.

## "சிறிய ஜிஹாதிலிருந்து பெரிய ஜிஹாதுக்குத் திரும்பிவிட்டோம்" என்ற ஹதீஸின் தாத்பரியம்

பெரியார்களே, நாம் நமது புறப் பகைவனைக் கொன்று விட்டோம். (ஆனால்,) அவனைவிடக் கெட்ட எதிரியொருவன் நம்முள் இருக்கிறான்.

இந்தப் பகைவனைக் கொல்வதென்பது மதிநுட்பத்தாலோ, அறிவாலோ ஆகும் காரியமல்ல; அகத்திலுள்ள (கீழான மனமாகிய) சிங்கத்தை (அறிவாகிய) முயலால் அசைக்கமுடியாது.

1375. கீழான மனம் (நப்ஸ்) நரகம் (போன்றது.) நரகமோ நெருப்புக் கக்கும் பூதமாகும். அதன் அனலை அணைக்கக் கடல் நீர் முழுவதுமே போதாது.

ஏழுகடல்களின் நீரையும் நரகின்மீது ஊற்றினாலும் அத்தனையையும் உண்டுவிட்டு, சகல சிருஷ்டிகளையும் தகிக்கும் அது கொஞ்சமும் குறையாத நெருப்புடையதாகவே விளங்கும்.

கற்களும் கல்லையொத்த மனம் படைத்த கசடர்களும்தாம், அவமானத்தோடும், இழிந்த நிலையோடும் அதில் நுழைவார்கள்.

இந்த ஆகுதியாலெல்லாம் அதன் பசி தணிவதில்லை. கடைசியில் இறைவன் புறத்திலிருந்து இந்தக் குரலொலி எழும்.

"உன் வயிறு நிறைந்துவிட்டதா? உன் வயிறு நிறைந்து விட்டதா?" "இன்னும் நிறையவில்லை; இதோ உஷ்ணம் குறையாத, தகிப்பு மாறாத அதே நெருப்பு!" என்று அது பதிலளிக்கும்.

1380. அது இந்த உலகம் முழுவதையும் தின்று விழுங்கிய பின்னும், அதன் குடல், 'இன்னும் ஏதும் இருக்கிறதா?'[1] என்றுதான் சப்திக்கும்.

இறைவன் இடமில்லாத இடத்திலிருந்து தன் காலை அதன் மீது வைக்கிறான்; வைத்து, "தண்மையாகு" என்கிறான்; அது தணிந்துவிடுகிறது.

நமது கீழான மனமும் (நப்ஸும்) நரகின் ஒரு பகுதிதான்; எனவே, முழுமையுருவான நரகின் தன்மைகள் யாவும் அதன் பகுதியான கீழான மனத்திலும் உண்டு.

அதை வதைக்கும் திருப்பாதம் இறைவனுக்கேயுரியதாகும்; அவனையன்றி வேறு யாராலும் அதன் வில்லை நாணேற்ற முடியாது.

கோணலில்லாத நேரான அம்பைத்தான் வில்லில் நாணேற்ற முடியும். (ஆனால், கீழான மனத்தின்) இந்த அம்புகள் கோணியும், பின்னோக்கி வளைந்துமுள்ளனவே!

1385. அம்பைப்போல் நேரானவனாய் இருந்து அம்பிலிருந்து வெளியாகு; ஏனெனில், வில்லைவிட்டுத்தன் நேரான நிலையுடன் வெளியாகும் அம்புதான் அதன் இலக்கைச் சென்றடைய முடியும்.

எனவே, நான் வெளியில் நடத்திய சண்டையில் ஈடுபட்டு (வெற்றிகண்டு) திரும்பிவிட்டேன்; இப்போது (கீழான மனத்துடன்) அகப் போராட்டம் நடத்தப்போகிறேன்.

நாம் (யுத்தகளத்தில் நடத்தும்) சிறிய சண்டையை முடித்துவிட்டோம்; இப்போது நபிபெருமான் (ஸல்) அவர்களின் அடியொற்றி நடந்து பெரிய போராட்டத்தில் (ஜிஹாத் அக்பரியில்) ஈடுபடுவோம்.

ஓர் ஊசியால் (மெதுவாகவேனும்) 'காப்' என்ற மலையை பெயர்த்துத்தள்ளும் வகையில் நான் என் கீழான மனத்தை அடக்கியவன் என்று பெருமிதமடைவதற்கான பலத்தையும் நல்லுதவியையும் அருளுமாறு இறைவனை இறைஞ்சுகிறேன்.

(பகைவனின்) படைகளை எதிர்த்துச் சாடி வெற்றிக் கொள்ளும் சிங்கமாக விளங்குவது பெரிதன்று; தன்னோடு (தன்கீழான மனத்தோடு) போராடி அதை வெற்றிகொள்பவனே உண்மையான சிங்கமாவான்.

1. குர்ஆன் 50 : 30

### கலீபா உமர் (ரலி) அவர்களைக் காணவந்த ரோமாபுரி மன்னனின் தூதுவன், அவர்களிடம் கண்ட மாட்சிகள்

*1390. மதீனாவில் (கலீபாவாக) உமர் (ரலி) அவர்கள் இருந்த சமயம், ரோமாபுரி மன்னனின் தூதுவர் ஒருவர் அவர்களைக் காண வந்தார்.*

*அவர் (மதீனாவில் எதிர்ப்பட்டவர்களை நோக்கி), "ஜனங்களே, கலீபாவின் மாளிகை எங்குள்ளது? என் சாமான்களையும் குதிரையையும் நான் அங்கே கொண்டுபோக விரும்புகிறேன்" என்றார்.*

*ஜனங்கள் சொன்னார்கள்: "அவர்களுக்கு மாளிகை கிடையாது; அவர்களுடைய மாளிகையெல்லாம் ஒளி பொருந்திய அவர்களுடைய நல் ஆத்மாதான்.*

*(மெய்விஸ்வாசிகளின்) தளபதி என்ற அளவில் அவர்களுக்கு மாபெரும் மதிப்பும் புகழும் உண்டாயினும், அவர்களும் ஏழைகளோடு ஏழையாக மண் குடிசையொன்றில்தான் வாழ்கிறார்கள்.*

*சகோதரரே, உம் இதயக்கண்கள்மீது (கண்மூடித்தனம் என்ற) மயிர் வளர்ந்து உமது (அகப்) பார்வையை அது மறைத்துக் கொண்டிருப்பதால் நீர் அவர்களுடைய மாளிகையைக் காண முடியாது.*

*1395. உம் இதயக்கண்ணின்மீதுள்ள மயிரையும், கோளாறையும் அகற்றும்; பின்னர், அவர்களுடைய மாளிகையைக் காணும் ஆதரவு வையும்!*

*(கீழான மனத்தின்) ஆசாபாசங்களைவிட்டும் புனிதமாகியவர்களின் நல்லாத்மாக்கள்தாம் அந்த மாளிகையின் முன்வாசலையும் திவ்விய சமூகத்தையும் தரிசிக்க முடியும்.*

*நபிபெருமான் (ஸல்) அவர்கள் (இந்த ஆசாபாச) நெருப்பையும் (அதன் அறிகுறிகள் என்ற) புகையையும் விட்டுப் புனிதம் பெற்ற பின்னரே, தாங்கள் திரும்பிய திசையிலெல்லாம் இறைவனின் திருவதன தரிசனத்தைப் பெற்றுக்கொண்டிருந்தார்கள்.*

*சபிக்கப்பட்டவனின் (ஷைத்தானின்) தீய ஊசாட்டங்களின் நண்பரான நீர் 'அங்கு இறைவனின் திருவதனம் உள்ளது'[1] என்பதை (அதன் யதார்த்தமான பொருளை) அறிவதெப்படி?*

*புனித இதயக் கதவு திறக்கப்பட்டவனே ஒவ்வொரு நகரிலும் (சத்தியமயமான) சூரியன் ஒளிவீசக்காண்பான்.*

*1400. இறைவன் மற்ற சிருஷ்டிகளிடை விண்மீன்களுக்கிடையில் பூரணச் சந்திரன்போல் இலங்கிக் கொண்டிருக்கிறான்.*

*1. குர்ஆன் 2 : 115*

உமது இரண்டு கண்கள்மீதும், உம் விரல்களில் இரண்டின் நுனியை வைத்து (மறைத்துக்) கொண்டு உலகின் பொருள்களை நீர் காணமுடியுமா? உண்மையைக் கூறும்!

நீர் இவ்வுலகைக் காணாவிடினும் அது இல்லாமல் போய் விடவில்லை. அதை நீர் காணாத குற்றம் உம் கீழான மனமாகிய விரல்களால் உண்டானதுதான்.

உம் கண்களின் மீதுள்ள விரல்களை அகற்றிவிட்டு, நீர் விரும்பியதைப்பாரும்!

நூஹு நபி (அலை) அவர்களிடம் அவர்களுடைய கூட்டத்தார் வினவினர், "(நீங்கள் வாக்களித்த) சம்மானங்கள் எங்கே?" என்று, "உங்கள் திரைக்கு அப்பால் உள்ளது"[1] என்று நூஹு (அலை) பதிலளித்தார்கள்.

1405. உம் முகத்தையும், கைகளையும் துணிகளால் மூடிக் கொள்கிறீர்; (அதன் பயனாய்) கண்ணிருந்தும் குருடராய் இருக்கிறீர்.

(உண்மை) மனிதன் கண்ணைப்போன்று (காணும்) சக்தியுள்ளவனாவான்; மற்றவர்கள் வெறும் தோல் போர்த்த உடலுள்ளவர்களே. அதிலும், தன் அன்பானவனை (இறைவனை)ப் பார்க்கும் சக்தியிருந்தால்தான் அந்தக் கண் பார்க்கும் சக்தியுடையது என்று அர்த்தம்.

அன்பானவளைப் பார்க்க இயலாமல்போனால், கண்குருடாய் இருப்பதே நலம். நிரந்தரமற்றவனான காதலன் இல்லாதொழிவதே சிறப்பாகும்.

ரோமாபுரித் தூதர் உமர் (ரலி) அவர்களின் அகமியப் படிவங்கள் பற்றிய உண்மைகளைக் கேட்டு உண்மை கொண்டதும் அவர்களைக் காணும் தாபமுடையவரானார்.

தமது உடைமைகளையும், குதிரையையும் தொலைத்துவிட்டு உமர் (ரலி) அவர்களைத் தேடுவதில் முனைந்தார்.

1410. அந்த மாபெரும் கர்ம வீரரைத் தேடிப்பித்தனைப்போல் நெடுகிலும் விசாரித்து அலைந்து திரிந்தார்.

"உலகில் அப்படி ஒருவர் இருக்க முடியுமா? இப்படி உயிரைப் போல் உலகின் விஷயத்தில் அவர் மறைந்தவராக இருக்கமுடியுமா?" என்று அவர் தமக்குத் தாமே வினவிக்கொண்டார்.

அவர்களுடைய அடிமையாவதற்காக அவர்களைத் தேடினார். தேடுவோன் கடைசியில் தான் தேடுவதைக் கண்டுகொள்வது இயல்புதானே!

1. பார்க்க : குர்ஆன் 71 : 7

அந்தத் தூதர் அந்நியராக - விருந்தினராக அங்கே வந்திருப் பதை அறிந்து காட்டரபிப் பெண் ஒருத்தி, "அதோ பாருங்கள், உமர் அந்த ஈச்ச மரத்தடியில் இருக்கிறார்கள்.

இறைவனின் நிழலான (கலீபாவான) அர்கள் அந்த மரத்தின் நிழலில் படுத்திருக்கிறார்கள் பாருங்கள்!" என்று சுட்டிக் காட்டி னாள்.

**மரத்தடியில் கலீபா உமர் (ரலி) யைத் தூதுவர் காணல்**

1415. அங்கே சென்ற அந்தத் தூதுவர் அவர்களை நெருங்காமல், அவர்களைப் பார்த்ததும் உடல் நடுங்கலானார்.

தூங்கிக்கொண்டிருந்த அவர்களைக் கண்டதும் அவர்களிட மிருந்து வெளிப்பட்ட ஒருவகைப் பீதி அவரை ஆட்கொண்டு விட்டது. அதன் பயனாய் அவர் இதயத்தில் பேரின்ப ஊற்றுப் பெருக்கெடுத்தது.

அன்பும் பீதியும் எதிரிடையானவை. இவ்விரு எதிரிடைகளும் தம் இதயத்தில் ஐக்கியப்பட்டிருப்பதை அவர் கண்டார்.

அவர் சொல்லிக் கொண்டார்: "நானும் எத்தனயோ அரசர்களைக் கண்டிருக்கிறேன்; சுல்தான்களுடைய சபைகளில் நானும் பெரிதாக மதிப்பு மரியாதைகளைப் பெற்றிருக்கிறேன்.

ஆனால், எந்த அரசனைக் கண்டும் நான் இப்படிப் பீதி யடைந்ததில்லை. இவர்களைக் கண்டதும் பீதியால் என் அறிவே மழுங்கிப் போய்விட்டது.

1420. நான் சிங்கங்களும் சிறுத்தைகளும் உலாவும் காடுகளி லெல்லாம் சஞ்சரித்திருக்கிறேன். ஆனால், அவற்றைக் கண்டு என் முகம் சிறிதும் மாறியதில்லை. (நான் சிறிதும் அஞ்சியதில்லை)

போர்க்களத்தில் எதிரிகள் பயங்கரமாகத் தாக்கும் போது நானும் சிங்கம்போல் (அச்சமின்றி) ஆக்ரோசமாகச் சண்டை செய்திருக்கிறேன்.

எத்தனையோ காயங்களை உண்டாக்கியும், வாங்கியுமுள் ளேன். ஆனால், அத்னாலெல்லாம் என் மனத்திட்பம் அதிகரித்த தேயன்றிக் குறைந்ததில்லை.

(இதோ இங்கோ) இந்த மனிதர் எந்த ஆயுதமும் இன்றிக் கட்டாந்தரையில் படுத்து உறங்குகிறார்கள்; ஆனால், இந்த நிலையில் இவர்களைக் கண்டும் என் சர்வாங்கங்களும் நடுநடுங்கு கின்றன. அதன் காரணம் யாது?

*(ஆம்) இது இறைவனால் உண்டான பயம்தான்; மனிதனாலன்று. ஒட்டுப்போட்ட முரட்டு உடையை அணிந்துள்ள இவர்களால் உண்டான பயமன்று இது.*

*1425. இறைவனுக்கு அஞ்சி, இறையச்சத்தையே தன் சன்மார்க்கமாகக் கொள்பவனுக்கு அவனைக் காணும் ஜின்னு, மனிதர் மற்றுமுண்டான அனைத்தும் அஞ்சும்."*

இவ்விதச் சிந்தனையில் மூழ்கியவராக இருந்த தூதர் தமது கைகளைக் கட்டிக்கொண்டு மரியாதையோடு நின்றுகொண்டிருந்தார். சற்று நேரத்துக்கெல்லாம் உமர்(ரலி) அவர்கள் விழித்தெழுந்தார்கள்.

அந்தத் தூதர் உமர் (ரலி) அவர்களுக்கு முகமன் (ஸலாம்) கூறினார். "உரையாடத் தொடங்குமுன் முகமன் கூறிக்கொள்ளுங்கள்" என்பது திருநபி அருள்வாக்காகும்.

உமர் (ரலி) அவர்களும் அவர்களுடைய முகமனுக்குப் பதில் சொல்லி, அவரை அருகிலழைத்து, ஆஸ்வாசப்படுத்தித் தங்கள் அருகே அமர்த்திக்கொண்டார்கள்.

*அஞ்சுவோருக்கு 'அஞ்சற்க!' என்ற அபயமொழிதான் விருந்துபசாரமாகும். பயம் கொண்டவர்களை ஆசுவாசப்படுத்த வேண்டிய வழி அதுவே.*

*1430. யாரேனும் அச்சமடைவானாயின் முதலில் அவனைப் பய உணர்ச்சியற்றவனாக ஆக்குங்கள்; அதன் மூலம் அவன் இதயம் அமைதியடையும்.*

*அச்சமற்ற ஒருவனை நோக்கி, 'அஞ்சற்க!' என்று நீ சொல்வதெப்படி? அவனுக்குப் பாட போதனை செய்ய வேண்டாம்; அது அவசியமன்று.*

எனவே, உமர் (ரலி) அவர்கள் அந்தத் தூதரின் பீதியடைந்த இதயத்தை மகிழ்ச்சியுடையதாக்கி, அவருடைய விரக்தியான மனநிலையை மாற்றினார்கள்.

அதன்பின் உமர் (ரலி) அவர்கள் அந்தத் தூதரிடம் இறைவனின் கல்யாண குணங்களைப்பற்றிய நுட்பமான விஷயங்களையெல்லாம் விவரித்தார்கள். அவன் எத்துணை சிறந்த நேயன் என்பதை எடுத்துரைத்தார்கள்.

இறைவன் புறத்திலிருந்து அவனுடைய நல்லடியார்களுக்கு (அப்தால்களுக்கு) அருளப்படும் சம்மானங்களைப்பற்றிய

மர்மங்களையெல்லாம் அந்தத் தூதருக்கு விளக்கமாக்கி, 'மகாம்' (ஸ்திரமான நிலை) என்ன, 'ஹால்' (ஒருகணத்தில் தோன்றி மறையும் நிலை) என்ன என்றெல்லாம் எடுத்துரைத்தார்கள்.

1435. (மேலும்,) 'ஹால்' என்பது அந்த அற்புத மணப்பெண் தன் முகத்திரையைச் சற்றே விலக்கிக் காட்டுவது போன்றது; 'மகாம்' என்பதோ அரசனே அந்த மணப்பெண்ணோடு தனித்திருந்து குலவுதல் போலாகும்.

மணப்பெண் முகத்திரையை விலக்குவதை அரசனுடன் மற்றோரும் காணலாம். ஆனால், மணப்பெண் அரசனோடு தனித் திருக்கும் போது அவர்கள் இருவரையுமன்றி அங்கு வேறு யாரும் இருக்கமாட்டார்கள்.

மணப்பெண், பிரபுக்கள், சாதாரண ஜனங்கள் அனைவருடைய முன்னிலையிலும் தன் முகத்திரையை அகற்றிக் காட்டுகிறாள்; மணவறையிலோ மணப்பெண் அரசனுடன் ஏகாந்தமாய் இருக் கிறாள்.

'ஹால்' என்பது சித்தியான ஞானநாதர்கள் பலருண்டு; ஆனால், 'மகாம்' சித்தியானவர்கள் அவர்களில் ஒரு சிலரே.

ஆத்மா கடக்கும் (ஆத்மீகப்) படித்தரங்களையும், அதன் சஞ்சாரங்களையும் அவர்கள் விவரித்தார்கள்.

1440. (சிருஷ்டிகள்) காலத்தோடு பிணைக்கப்படாமலிருக்கும் உலகத்தையும், இறைவனின் மாட்சியில் (ஜலாலியத்தில்) மிதந்து கொண்டிருக்கும் புனிதப் படிவங்களையும் அறிவித்துக்கொடுத் தார்கள்.

இந்த (ஜடத்துவ) உடலில் நுழையுமுன் ஜீவன் என்ற பறவை நல்லருளை ருசித்தவாறு சஞ்சரித்துக்கொண்டிருந்த வான விதா னத்தைப் பற்றியும் விளக்கினார்கள்.

அதன் சஞ்சாரம் ஒவ்வொன்றும் இவ்வுலகின் வானவிதானத் தைவிடப் பெரிதானதும் - நம்பிக்கையையும், தாபம் கொண்ட காதலனின் பேராசையையும் உண்டாக்குவதுமான தலங்களில் நிகழ்வதை எடுத்துரைத்தார்கள்.

தோற்றத்தில் அந்நியராகக் காணப்பட்ட அந்தத் தூதரை உண்மையில் உமர் (ரலி) அவர்கள் ஒரு நண்பராகவே கண்டார்கள். அவருடைய இதயம் தெய்வீக அகமியங்களை அறிந்துகொள்ளத் துடிப்பதை அறிந்துகொண்டார்கள்.

குருநாதர் (உமர் (ரலி) அவர்கள்) பரிபூரண சித்தியடைந்த வராயும், சீடன் (தூதர்) ஞானப்படித்தரங்களைக் கடக்கும் மார்க்கத்தை அறியப் பேராவலுள்ளவராயும் இருந்தனர். சவாரி செய்பவன் கைதேர்ந்த வீரன்; சவாரிக்கு ஆயத்தமாகியிருந்த குதிரையோ உயர்ந்த இனத்தைச் சேர்ந்தது.

1445. அவர் (தூதர்) வழிகாட்டுதலை ஏற்று நடக்கும் ஆற்ற லுடையவர் என்பதை ஆத்மீக வழிகாட்டி (உமர் (ரலி) அவர்கள்) கண்டுகொண்டார்கள். அவர்கள் நல்ல விதையை நல்ல மண்ணில் விதைத்தார்கள்.

### உமர் (ரலி) அவர்களிடம் தூதுவர் வினவுதல்

அந்தத் தூதுவர் அவர்களை விளித்து, "மெய்விஸ்வாசிகளின் காவலரே, ஆத்ம உலகிலிருந்து சிருஷ்டிகள் மண்ணுலகுக்கு எவ்வாறு இறங்கிவந்தன?

அந்த அரூபியான பறவை (உடல் என்ற) கூண்டில் எவ்வாறு புகுந்துகொண்டது?" என்று வினவினார். "இறைவன் தான் உண் டாக்க நாடியதை நோக்கி,'ஆகுக' (குன்) என்ற வரலாற்றைக் கூறி னான்; உடனே அது உடலில் புகுந்துகொண்டது.

உள்ளமையற்ற, காதோ, கண்ணோ இல்லாத ஒன்றை நோக்கி, ('ஆகுக' என்ற) மந்திரோச்சாடனத்தை அவன் மொழிந்ததும், அது (ஜீவன் பெற்று, உணர்ச்சி பெற்று) துள்ளிக்குதிக்க ஆரம்பித்து விடுகின்றது.

அவனுடைய இந்த உச்சாடனத்தால் உள்ளமையற்ற பொருள் கள் அக்கணமே' உள்ளமை'யின் பக்கம் விரைகின்றன.

1450. இவ்வாறே 'உள்ளமை' யுள்ள பொருள் ஒன்றை நோக்கி, (அது இல்லாமல் போக) ஆணையிடுவானாயின் உடனே அது 'நாஸ்தி' யாகிவிடுகிறது.

ரோஜா முகையின் காதில் அவன் பேசியதும், அது சிரித்துக் குலுங்குகிறது; கல்லிடம் அவன் ஏதோ ஓதியதும் அது ரத்தினமாகச் சுடர்விட ஆரம்பிக்கிறது.

(இவ்வாறே) அவன் உடலுக்கு ஆணையிட்டதும் அது உயிர் பெற்றுவிடுகிறது; சூரியனுக்கு உத்தரவிட்டதும் அது சுடர்விடத் தொடங்குகிறது.

சூரியனின் காதில் அச்சமூட்டும் அகமியத்தை ஓதியதும், அது நூற்றுக்கணக்கான கிரஹணங்களால் ஆட்கொள்ளப்படுகிறது.

*அந்த ஆணையாளன் மேகத்தின் செவியில் என்ன சொன் னானோ, அது தோல் குடம்போல் கண்ணீரைக் கொட்ட ஆரம் பித்துவிட்டது.*

*1455. பூமியின் காதில் அவன் யாது மொழிந்தானோ அது மௌனமாகி, (எதையோ) எதிர்பார்ப்பதாய் விளங்குகிறது.*

*குழப்பமடைந்த ஒருவனுடைய மனம் சஞ்சலமடையக் காரணமும் அவன் காதில் அந்த வல்லான் ஏதோ ஒரு புதிரைக் கூறியதுதான்.*

*அதனால் அந்த மனிதன், “இறைவன் சொன்னபடி செய்வதா அல்லது அதற்கு மாற்றமாக நடப்பதா?” என்று இரண்டு வகையான ஐயங்களுக்கு ஆளாகித் தவிக்கின்றான்.*

*(கடைசியில்) இறைவனருளால் இவற்றில் ஒன்றே சரியானது என்று முடிவுகட்டி, அதை வரித்துக்கொள்கிறான்.*

*உன் மனநிலை குழப்பமானதாக ஆகக்கூடாது என்று நீ நினைத்தால், உன் ஆத்மீகக் காதை (இம்மையின் பாசம் என்ற) பஞ்சினால் அடைத்துக்கொள்ள வேண்டும்!*

*1460. அப்படியானால்தான் அவனுடைய புதிர்கள் உனக்கு விளங்கும். அப்போதுதான் இரகசியமான, பகிரங்கமான அத்தாட்சிகளை நீ விளங்கிக் கொள்வாய்.*

*அந்த நிலையில்தான், ஆத்மக் காது ‘வஹி’ (தெய்வச் செய்திகள்) இறங்கும் தலமாகும். ‘வஹி’ என்பது யாது? ஐம்புலன் களாலும் மறைக்கப்பட்டுக் கிடக்கும் பேச்சுத்தான். (புலன்களை அடக்கினால் அது ஒலிக்க ஆரம்பிக்கிறது.)*

*ஆத்மக் காதும், கண்ணும் ஐம்புலன்களின் உணவைவிடச் சிறந்தவையாகும். புலனறிவின் கண்ணும், அபிப்பிராயம் சொல்லும் காதும் இந்த உதிப்பைப் பெறாதவை.*

*‘நிர்ப்பந்தம்’ (ஜபர்) என்ற வார்த்தை என்னைக் காதலின் நிமித்தம் கட்டுப்படுத்த இயலாதவனாக்கிவிட்டது; ஆனால், காதலற்றவனை அது பலவந்தம் என்ற சிறையில் தள்ளிவிட்டது.*

*இந்த (எல்லாம் அவனே என்ற ‘ஜபர்’) நிலை இறைவனுடன் ஒன்றித்திருக்கும் மாபெரும் படிவமாகும். ‘ஜபர்’ (எல்லாம் அவன் செயல்) என்பது பழிக்கத்தக்க விஷயமன்று. இது மேகம் போன்று இருண்டதாய் இல்லாமல், சந்திரன்போல் வெளிச்சம் நல்குவதாகும்.*

*1465. இது (யாவும் அவன் செயல் என்ற ஜபர்) அறிவீனர்களின் நிர்ப்பந்தம் போன்றதன்று; சுயநலங்கொண்ட ‘நப்ஸ் அம்மாரா வின்’ (அகந்தையுடைய மனத்தின்) நிர்ப்பந்தம் போன்றதுமன்று.*

மகனே, இறைவனால் தமது ஆத்ம ஊற்றுக்கண் திறந்து விடப்பட்டவர்கள்தாம் இந்த ஜபரின் மகிமையை அறிந்துகொள்ள முடியும்.

அவர்களுக்கு வருங்காலமும், மறைவானவையும் தோற்றப் படுகின்றன; கடந்த காலச் சம்பவங்களை நினைவூட்டிக் கொள் வதோ அவர்களுக்கு ஒரு பொருட்டேயன்று.

அவர்களுடைய சுயேச்சையும், பலவந்தமும் (சாதாரண மானவர்களுடையவையிலிருந்து) முற்றும் வேறுபட்டவை. அவர்கள் தமக்குள் விழும் மழைத்துளிகளை முத்துக்களாக ஆக்கிக்கொள்ளும் சிப்பிகள் போன்றுள்ளனர்.

சிப்பிக்கு வெளியே நீர்த்துளி சிறிதாகவோ, பெரிதாகவோ (எப்படி) இருப்பினும் அது வெறும் தண்ணீர்தான்; ஆனால், சிப்பியுள் புகுந்துவிட்டால் அது சிறிய அல்லது பெரிய முத்தாக வன்றோ ஆகிவிடுகிறது.

1470. அந்த (ஞான) மகான்களின் இயல்பு, கஸ்தூரி மானின் சுரப்பியைப் போன்றுள்ளது; அந்தச் சுரப்பிக்கு வெளியில் வெறும் இரத்தமாய் இருந்தது, அந்தச் சுரப்பியினுள் நுழைந்ததும் கஸ்தூரியாக ஆகிவிடுகிறது.

"இந்தச் சுரப்பியே இரத்தக் கட்டியாகத்தானே இருக்கிறது. இதனுள் இரத்தம் சென்றதும் இது கஸ்தூரியாவதெப்படி?" என்று ஆட்சேபிக்காதே!

"இந்தப் பித்தளை புறத்தே கேவலமானதாகத்தானே இருந்தது, ரஸவாதத்தால் இது எப்படித் தங்கமாகிவிட்டது?" என்று நீ ஆட்சேபிக்காதே!

உன்னில் சுயமான சித்தமும், நிர்ப்பந்தமும் இருப்பதாக நினைப்பது வெறும் பிரமைதான்; ஆனால், (மெய்ஞ்ஞானியரான) அவர்களுடைய இதயங்களில் அவை புகுந்ததும் அவை இறை வனின் மகத்துவமிக்க ஒளியாக மாறிவிடுகின்றன.

ரொட்டி துணி விரிப்பின்மீது வைக்கப்பட்டிருக்கும்வரை வெறும் அசேதனப் பொருள்தான். (ஆனால்,) மெய்ஞ்ஞானியரின் உடலில் அது சேர்ந்து ஜெரித்து, ஜீவனின் இன்பமாக மாறி விடுகின்றது.

1475. துணி விரிப்பின்மீது இருக்கும்வரை ரொட்டி தன் அசேதன நிலையில் எந்த மாற்றமும் ஏற்படாததாகவே இருந்தது. ஆனால், மனித ஆத்மா தன்னிடமுள்ள 'ஸல்ஸபீல்' என்ற அமுதின் உதவியால் அதன் தன்மையை மாற்றி அதை ஜீவனுக்குத் தெம்பு தருவதாக ஆக்கிவிடுகிறது.

*ஒழுங்காகப் படிக்கும் வாசகரே, மனித ஆத்மாவின் சக்தியே இப்படிப்பட்டதாக (ரொட்டியான அசேதனத்தை உயிர்த்துடிப் பின் பாகமானதாகச் செய்யும் சக்தியுள்ளதாக) இருக்கும்போது, ஆத்மாக் களுக்கு ஆத்மாவானதன் தன்மை எத்துணை மகத்தான தாய் இருக்கும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்!*

*வெறும் சதைத்துண்டமான மனிதன் தன் ஆத்மாவாலும் மதிநுட்பத்தாலும் மலையையே கால்வாயாகவும், சுரங்கமாகவும் பிளந்து தள்ளிவிடுகிறான்.*

*மலைகளைப் பிளக்கும் பலமுள்ள ஆத்மாவின் தன்மையை அது மலைகளைப் பிளப்பதிலிருந்து கண்டு கொள்ளலாம்; ஆத்மாக்களுக்கு ஆத்மாவானதன் தன்மையை சந்திரன் இரண்டா கப் பிளந்ததிலிருந்து உய்த்துணரலாம்.*

*இந்த மர்மம் என்ற பெட்டியின் மூடியை அகற்றும் இதயம் படைத்தவரின் ஆத்மா உன்னதவானை நோக்கி ஓடமுடியும்.*

### ***ஆதம் (அலை) தங்கள் தவறுக்குத் தங்களையே குறைகூறிக்கொண்டார்கள்;[1] ஷைத்தான் தன் வழிகேட்டுக்கு இறைவனைக் குறைகூறினான்.[2]***

*1480. இறைவனின் செயல்களையும், நம் செயல்களையும் எண்ணிப்பாருங்கள்! நம் செயல்கள் உருவானவை என்றே கருதுங்கள். இது வெளிப்படையானது.*

*சிருஷ்டிக்கப்பட்டவற்றின் செயல்கள் இவ்விதம் உருவானவை (உள்ளமையுள்ளவை)யாய் இல்லாமலிருப்பின், யாரையும் நோக்கி, "நீ ஏன் இப்படிப்பட்ட (பாவகரமான) காரியத்தைச் செய்தாய்?" என்று நீங்கள் கேட்க முடியாது.*

*இறைவனின் சிருஷ்டித்தத்துவம் நம் செயல்களை உருவாக்கி யுள்ளது; நம் செயல்கள் யாவும் இறைவனின் சிருஷ்டித்தத்துவத்தின் பிரதிபலிப்புகள்தாம்.*

*அறிவுடைய ஒருவன் (நான் பேசுகையில்) ஒன்று (புற சமிக்ஞை யான) எழுத்துக்களைக் கவனிக்கலாம்; அல்லது, (அகநோக்கான) அதன் பொருளைக் கவனிக்கலாம். ஒரே சமயத்தில் அவன் இரண்டையும் கவனிப்பது சாத்தியமன்று.*

*பொருளைக் கவனிக்கும்போது அவன் எழுத்துக்களை மறந்துவிடுகிறான்; ஒரே சமயத்தில் நம் கண்கள் முன்னுள்ளதையும் பின்னுள்ளதையும் பார்ப்பதெப்படி?*

---

*1. குர்ஆன் 7 : 23* *2. குர்ஆன் 7 : 16*

1485. நீ உனக்கு முன்னால் பார்க்கும் அதே சமயத்தில் உனக்குப் பின்னால் பார்ப்பது சாத்தியமா? இதை முதலில் உய்த்துணர்!

ஆத்மா ஒரே சமயத்தில் எழுத்தையும் அதன் பொருளையும் உய்த்துணர முடியாதிருக்கும் நிலையில், இவை இரண்டையும் சிருஷ்டித்தது ஆத்மாவாக இருப்பது எப்படிச் சாத்தியமாகும்?

மகனே, இறைவன் யாவையும் சூழ்ந்தறிகிறான். ஒன்றைச் சூழ்ந்தறியும் செயல் அவன் விஷயத்தில் மற்றதைச் சூழ்ந்தறியும் செயலுக்கு இடையூறாய் இருப்பதில்லை.

ஷைத்தான் (இறைவனை நோக்கி,) " நீ ஏன் என்னை வழி கெடுத்தாய்?" என்று கேட்டான்; அந்தச் சாபக்கேடான இப்லீஸ் தன் (வழிகெடுக்கும்) செயலை மறைத்துப்பார்த்தான்.

(ஆனால்,) ஆதம் (அலை) அவர்களோ, "இறைவா, எங்கள் ஆத்மாவுக்கு நாங்களே தீங்கு இழைத்துக்கொண்டோம்" என்று பிரார்த்தித்தார்கள். (தங்கள் தவறை தாங்களே ஒப்புக்கொண்டு மன்னிப்புத் தேடினார்கள்.) நம்மைப்போல், அவர்கள் தெய்வச் செயல்பற்றி அலஷியங்காட்டவில்லை.

1490. மரியாதை காரணமாக ஆதம் (அலை) அவர்கள் தங்கள் பாவம் சம்பந்தமாக இறைவன் செய்ததை மறைத்துவிட்டார்கள்; பாவத்தை அவர்கள் தங்கள் மீதே போட்டுக்கொண்டதால் அவர்கள் உண்ட கனியே அவர்களுக்கு பாக்கியமுடையதாக ஆகிவிட்டது.

அவர்கள் பாவமன்னிப்புத் (தௌபா) தேடி மீண்டபின், இறைவன் அவர்களை விளித்து, "ஆதமே, உம்மில் அந்தப் பாவத்தையும், சோதனைகளையும் சிருஷ்டித்தவன் நானல்லவா!

என் ஆதி ஏற்பாடும், விதிப்பும்தானே (கலா கத்ரும் தானே) அதை உண்டாக்கிவிட்டன! பாவமன்னிப்புத் தேடிய சமயம் நீர் ஏன் அதை மறைத்துவிட்டீர்?" என்று வினவினான்.

ஆதம் (அலை) அவர்கள், "நான் அச்சம் பூண்டவனானேன்; உனக்குரிய மரியாதையைக் காட்டவே அவ்வாறு செய்தேன்" என்று பதிலளிக்கவே, "உம் விஷயத்தில் நானும் அதனாலேயே தாக்ஷண்யங் காட்டினேன்" என்று இறைவன் அருளினான்.

மரியாதை காட்டுவோர், மரியாதையைப் பகரமாகப் பெறுவர்.. கற்கண்டு கொண்டுவருபவன் 'ஹல்வா' உண்பான்.

1495. நல்ல பெண்கள் யாருக்கு? நல்ல மனிதர்களுக்குத்தான்![1] உன் நண்பனை உன்னிடம் திருப்தியடைந்தவனாக ஆக்கு;

1. பார்க்க : குர்ஆன் 24 : 26

அவனுக்கு மரியாதைக் குறைவு செய்தால் அதன் பயனையும் நீ கண்டுதான் கொள்வாய்.

இதயமே, சுய இச்சை யாது, பலவந்தம் யாது என்பதைப் பகுத்துணர்வதற்காக மேற்கோள் ஒன்றை நீ காட்டு.

நடுக்கல் வியாதியால் தானாகவே நடுங்கிக்கொண்டிருக்கும் கை ஒன்று; (தானாக ஆடாமலிருக்கும்போது) நீ பிடித்து ஆட்டுவதால் ஆடும், இன்னொரு கை.

இவ்விரண்டு கைகளையும் அசையச்செய்பவன் இறைவன் தான்; எனினும், முந்திய நடுக்கத்தைப் பிந்திய நடுக்கத்தோடு ஒப்பிடுவது சாத்தியமேயன்று.

நீ பிடித்து ஆட்டியதால் ஒரு கை ஆடியதுபற்றி நீ வருத்தப் படுகிறாய்; நடுக்கல் வியாதியால் பீடிக்கப்பட்டவன் தன் கை ஆடுவதுகுறித்து வருத்தம் தெரிவிக்கக் கண்டதுண்டா?

1500. இது அறிவின் தேட்டமாகும்; ஆனால், அந்தச் சாதுரிய மானது எந்த அறிவு வகையைச் சேர்ந்தது? அதை நாடக் காரணம், ஒருகால் அற்ப அறிவு படைத்த யாரேனும் அதன் உதவிகொண்டு உண்மை யான நிலையை ஓரளவு புரிந்துகொள்ள முடியலாம்.

பகுத்தறிவுச் சர்ச்சைகள் முத்துக்கள், பவளங்கள் போன்று சிறந்தவையாயினும், இதற்கும் ஆத்மீகச் சர்ச்சைக்கும் வெகு தூரமுண்டு.

ஆத்மீகப் பிரச்சினைகள் வேறொரு தலத்தைச் சேர்ந்தவை; ஆத்ம மதுவின் ஊற்றுக்கண் இருப்பதே முற்றும் வேறான தலத்திலாகும்.

அறிவை அடிப்படையாகக் கொண்டே சர்ச்சைகள் நடந்து வந்த (அறியாமைக்) காலத்தில் உமர் (ரலி) அபுல் ஹிகமின் உற்ற தோழராய் இருந்துவந்தார்கள்.

ஆனால்,அறிவு வாதக் கட்சியைப் புறக்கணித்துவிட்டு, ஆத்ம சாபல்யப் பாதையில் புகுந்த பின்னர், அதன் காரணங்களைத் தேடிக் கண்டறிய முடியாமல் அபுல் ஹிகம் (அறிவின் தந்தை) அபூஜஹல் (அறியாமையின் தந்தையாக) ஆகிவிட்டான்.

1505. அவன் பகுத்தறிவு வாதத்தில் எத்துணையோ சிறந்தவனாக இருப்பினும், ஆத்மீக விவகாரங்களில் அவன் முழு மூடனாகவே விளங்கினான்.

அறிவும், புலன்களும் (முழுமுதல் காரணத்தைக் கைவிட்டு) இரண்டாந்தரக் காரணசாதனங்களைத் தேடி அலைபவைதாம்.

ஆத்மீகத் தேட்டமோ பிரமிப்பின் தந்தையாகவோ, பிரமிப்பான தாகவோ விளங்குவதாகும்.

ஹே ஞான ஜோதியைத் தேடுபவனே, ஆத்மாவில் ஞான ஜோதிச் சுடர் வீசுவதுகாரண காரியங்களாலோ, பகுத்தறிவுச் சர்ச்சைகளாலோ அன்று;

(அவ்விதம் அது சுடர் வீசக்) காரணம், தம்மீது இறைவனின் ஜோதிச் சுடர் உதயமாவதைக் காண்பவர், குருடன் கையிலுள்ள கோலைப்போன்ற தர்க்கரீதியான முடிவுகளின் தேவையற்றவராக இருப்பதால்தான்.

### *"நீங்கள் எங்கிருப்பினும் அவனும் உங்களோடுள்ளான்"* [1] என்ற திருவசனத்தின் தாத்பரியம்

மீண்டும் நாம் நம் கதைக்கு திரும்புவோம்; நாம் கதையை (எங்காவது) விட்டுவிட்டோமா என்ன?

1510. நாம் அறியாமைக்கு ஆளாகி சோதனைகளில் சிக்கினாலும் அதுவும் அந்தச் சர்வ சக்தனின் சிறைக்கூடம்தான். அப்படியின்றி நாம்மெய்ஞானப் பேரொளியால் சூழப்படினும் அதுவும் அவனுடைய மாளிகைதான்.

நாம் தூக்கத்துக்கு ஆளானாலும் அவனுடைய மயக்கத்தில் கிடப்பவர்கள்தாம். நாம் விழித்த நிலையிலிருப்பினும் அவன் கைகளில் அகப்பட்டவர்கள்தாம்.

அழுதுகொண்டிருந்தாலும் அவனால் சிதறப்பட்ட கருணை மேகமாகவே விளங்குகிறோம்; நாம் சிரித்தாலும், அச்சமயம் அது அவனுடைய மின்னலாகவே ஒளிர்கிறது.

நாம் கோபத்திலும் சண்டையிலும் இறங்கினால், அது அவன் வல்லமையின் (கோபத்தின்) பிரதிபிம்பம்தான். சமாதானத்திலும், மன்னிப்பிலும் ஈடுபட்டாலும் அது அவனுடைய அன்பின் பிரதி பிம்பம்தான்.

நாம் யார்? சிக்கல்கள் நிறைந்த இந்த உடலில் (அவனையன்றியுள்ள) எது 'அலிப்' எழுத்தைப் போல் தனித்ததாய் உள்ளது? ஒன்றுமில்லை; ஒன்றுமே இல்லை!

### இந்தச் சடலமாம் மண்ணில் ஆத்மாக்கள் படும் அவதிகள் பற்றி அந்தத் தூதர் உமர் (ரலி) அவர்களிடம் வினவல்

1515. அந்த ரோமானியத் தூதர் உமர் (ரலி) அவர்களை நோக்கி, "அந்தப் பரிசுத்தமானதை (ஜீவனை) இந்த அழுக்கான இடத்தில் (பூத உடலில்) அடைத்துவைத்துள்ளதன் மர்மம் யாது?

1. பார்க்க : குர்ஆன் 58 : 7

சுத்தமான தண்ணீர் சேற்றினுள் புதைந்துபோய்விட்டது; பரிசுத்தமான ஜீவன் உடலுள் கட்டுப்பட்டுவிட்டது. (இதன் காரணம் யாது?)'' என்று வினவினார்.

உமர் (ரலி) அவர்கள் பதிலளித்தார்கள்: மிக ஆழமான விசாரணையை நீர் தொடங்கிவிட்டீர்; ஒரே வார்த்தையில் ஒரு பொருளை வெளியிட்டுள்ளீர்.

(நிபந்தனையற்ற) சுதந்தரமான கருத்து ஒன்றை நீர் சிறை வைத்துவிட்டீர்; காற்றையே ஒரு வார்த்தையில் பிணைத்துள்ளீர்.

இதை ஒரு நல்ல நோக்கத்துடனேயே நீர் செய்துள்ளீர்; இறைவனின் நோக்கம் பற்றி நீர் இதுவரை அறியாதவராகவே (கண்ணிருந்தும் குருடாகவே) இருந்துள்ளீர்.

1520. சகல நன்மைகளையும் வெளிப்படுத்தித் தருபவனான இறைவன், நாம் காண்பதைத் தான் காணாமல் இருப்பதெப்படி?

அவன் அருளிய நன்மைகள் லக்ஷக் கணக்கானவை; அவற்றில் எந்த ஒன்றை உற்றுநோக்கினும் அது சிறந்ததாகவே விளங்குகிறது.

உன்னுடைய அங்கங்களின் ஒரு பகுதியான உன் பேச்சின் மூச்சே நன்மை தருவதாக இருக்கும்போது, சம்பூரணத்தின் சம்பூரணம் (உடலுக்கும் உயிருக்கும் உள்ள பொதுவான தொடர்பு) நன்மையற்றதாக இருப்பதெப்படி?

(பூரணமற்ற) அற்ப சிருஷ்டியான நீ செய்யும் காரியங்களி லேயே நன்மைகள் இருக்கும்போது, பரிபூரணமானவனின் செயல்களில் பயனில்லை (நோக்கமில்லை) என்று குறைகூறுவது சாத்தியமா?

பேச்சால் பயனொன்றும் இன்றேல் பேசாதிரு; அதில் பயனி ருப்பின் ஆட்சேபமெழுப்பாதே! (அதை அருளியவனுக்கு) நன்றி நவில முயற்சிசெய்!

1525. இறைவனுக்கு நன்றி தெரிவிப்பது ஒவ்வொருவருடைய கழுத்திலும் பூட்டப்பட்ட பட்டையாகும்.(ஒவ்வொருவருடையவும் கடமையாகும்.) இறைவன்செயலைப்பற்றித் தர்க்கிப்பதும், முகத்தைச் சுழிப்பதும் அவனுக்கு நன்றி தெரிவிப்பதாகாது.

முகத்தைச் சுழிப்பதுதான் நன்றி தெரிவிப்பதன் சின்னமாயின் (புளிப்பான) காடிபோல் நன்றி தெரிவிப்பவர் யாரும் இருக்க மாட்டார்கள்.

காடியைச் சுவையுள்ளதாக்கி, வயிற்றை ஏற்கச் செய்ய வேண்டுமானால் தேனோடு சேர்த்து 'சிகிஞ்சபீன்' ஆக ஆக்கிக் கொள்ளவேண்டும்.

பாடலில் வெளியிடப்படும் கருத்து, திட்டவட்டமானதல்ல. அது (ஆடிக்கொண்டிருக்கும்) ஓர் ஊஞ்சலைப் போன்றது; கட்டுப் பாட்டுக்கு உட்பட்டதன்று."

## "இறைவனோடு இருக்க நினைப்பவன் மெய்ஞானி ஒருவரோடு அமர்வானாக!" என்பதன் தாத்பரியம்

(ஹஜ்ரத் உமர் அருளிய) இந்த இரண்டொரு கிண்ணம் ஆத்ம விளக்க அமுதால் அந்தத் தூதுவர் தம்மை மறந்தார்; தாம் தூதுவராக வந்தவர் என்பதையும், ஏதோ செய்தி சொல்ல வந்தவர் என்பதையும் அவர் மறந்துவிட்டார்.

1530. அவர் மஸ்தடைந்தவரானார். அரச தூதராக அங்கே வந்தடைந்த அவர் இப்போது அரசராகவே ஆகிவிட்டார்!

ஆற்று வெள்ளம் கடலில் கலந்ததும் கடலாகவே ஆகி விட்டது; வித்து வயலைச் சென்றடைந்ததும் தானியக் கிடங்காக ஆகிவிட்டது.

ரொட்டி மனித உடலில் சென்றடைந்ததும், அசேதனப் பொரு ளான அது உயிருள்ளதாகவும், அறிவுடையதாகவும் ஆகிவிட்டது.

மெழுகையும் விறகையும் நெருப்பிலிட்டதும், அவற்றின் இருண்டநிலை மாறி அவை ஒளி வீசும் பொருள்களாகிவிட்டன.

கல்லாக இருந்த சுருமாக் கண்ணில் போடப்பட்டதும் கண் பார்வையாகவும், கண்ணைக் கண்காணிப்பதாகவும் ஆகிவிட்டது.

1535. தன்னைவிட்டும் விடுதலையாகி ஜீவனுள்ள ஒருவரின் (சம்பூரண குருநாதரின்) ஜீவிதத்தோடு ஐக்கியமாகுபவனே பேரின்பமடைபவனாவான்.

அந்தோ! உயிரற்றவர்களோடு (போலி ஞானாசிரியர்களோடு) உறவாடும் உயிருடையான் நஷ்டவாளிதான். அவன் மரணித்து விட்டவன்தான்; உயிர் அவ்னைவிட்டு அகன்றுவிட்டது.

சத்திய வேதமான திரு குர்ஆனின் பக்கல் (செயல்படத்) திரும்புவீராயின் நபிமார்களின் புனித ஆத்மாக்களோடு கலந்துற வாடும் நற்பேற்றைப் பெற்றுக்கொள்வீர்.

திரு குர்ஆனின் போதனைப்படி நடவாமல் வெறுமனே அதைப் படித்துக்கொண்டிருப்பதால் யாது பயன்? நீர் நபிமார் களையும் ஞான நாதர்களையும் பார்த்தும், அவர்கள் காட்டிய வழிமுறையைப் பின்பற்றாவிட்டால் யாதுபயன்? (ஒரு பயனு மில்லை.)

1540. அப்படியின்றி அதை (திரு குர்ஆனை) ஏற்று அதன்படி ஒழுகிவரும் நிலையில், அதில் கூறப்பட்டுள்ள (நபிமார்களின்) வரலாறுகளை நீர் படித்தால் உம் ஆத்மப் பறவையும் (தான் அடைபட்டுள்ள இம்மை என்ற சிறையைவிட்டுத் தப்ப வேண்டுமே என்று) சிறகடித்துக்கொள்ளும்.

கூண்டினுள் கைதியாக அடைபட்டுக் கிடக்கும் பறவை தப்ப முயலவில்லையானால் அதற்குக் காரணம் அதன் அறியாமைதான்.

இம்மையின் பந்தபாசங்கள் என்ற கூண்டைவிட்டு, விடுதலையான பறவைகள்தாம் நபிமார்களும், உண்மையான மெய்ஞ்ஞானியருமாவர்.

மேலேயிருந்து (அவர்களுடைய புனித ஆவிகள் இருக்குமிடத்திலிருந்து) மறுமையை விவரித்து அவர்கள் இவ்விதம் குரல் எழுப்புகின்றனர்: "இதோ இதுதான் நீங்கள் தப்பிக்கும் மார்க்கம்!

இதன் மூலம்தான் நாம் அந்தக் கூண்டைவிட்டுத் தப்பினோம். அந்தக் கூண்டைவிட்டுத் தப்ப இதைவிட்டால் வேறு வழியே இல்லை.

1545. எனவே, நீங்களும் இம்மையின் பேராசைகளாம் சிறையை விட்டு வெளியாகப் பணிவுடன் அழுது இறைவனிடம் இறைஞ்சுங்கள்."

இம்மையின் பந்தபாசங்கள் (உங்கள் கால்களைப் பிணைக்கும்) மாபெரும் விலங்காகும். மெய்ஞ்ஞானப்பாதையில் (தரீக்காவில்) இது இரும்பு விலங்கேயன்றி வேறில்லை.

**வர்த்தகனும் அவன் வளர்த்த கிளியும்: அவன் இந்தியா சென்றபோது சிறைப்பட்ட அது சொல்லி அனுப்பியசெய்தி**

வர்த்தகன் ஒருவன் கிளியொன்றை வளர்த்து வந்தான்; அதை அவன் கூண்டில் அடைத்துவைத்திருந்தான்.

அந்த வர்த்தகன் (ஒரு சமயம்) பிரயாண ஆயத்தங்களோடு இந்தியாவுக்குப் புறப்பட்டுக்கொண்டிருந்தான்.

அவன் தயாள குணமுடையவனாக இருந்தபடியால் புறப்படும்போது தன்னிடம் வேலைபார்த்த ஆண், பெண் அடிமைகள், பணிப் பெண்கள் அனைவரிடமும், "உங்களுக்கெல்லாம் என்னென்ன வாங்கிவர வேண்டும்? சீக்கிரம் சொல்லுங்கள்!" என்று கேட்டான்.

1550. ஒவ்வொருவரும் தத்தம் இச்சைக்கு உகந்த பொருளை வாங்கிவருமாறு தெரிவித்தனர். அந்த நல்லவன் அவர்கள் கேட்டவற்றை வாங்கிவருவதாக வாக்களித்தான்.

(கடைசியில்) அவன் அந்தக் கிளியை அணுகி, "இந்திய பூமியிலிருந்து உனக்கு நான் என்ன சம்மானம் கொண்டுவர வேண்டும் என்று நீ ஆசைப்படுகிறாய்?" என்று வினவினான்.

கிளி அவனிடம் சொல்லிற்று: "அங்கே நீங்கள் கிளிகளைக் காணும்போது, இங்கே என் (பரிதாப) நிலையைக்.கூறுங்கள்.

உங்களைத் தேடித் தவித்துக்கொண்டிருக்கும் இன்னவிதமான கிளி தெய்வ விதிப்பால் என்னிடம் கைதியாகியுள்ளது.

அது உங்களுக்கு 'ஸலாம்' சொல்கிறது. உங்களிடமிருந்து நீதியை வேண்டுகிறது. நேர்வழி காட்டப்படுவதற்கான வழி வகைகளையும் உங்களிடமிருந்து அறிய ஆவலுறுகிறது."

1555. அது சொல்கிறது: உங்களை நாடித் தவிக்கும் நான் பிரிவின் துயரால் இங்கே செத்து மடிவது சரியா?

நான் இங்கே கட்டுண்டு கிடக்க, நீங்கள் அங்கே பச்சைப் பசேலென்ற மரஞ் செடிகளில் அமர்ந்திருப்பது சரியா?

நண்பர்களிடை உண்டாகும் நம்பிக்கை இத்தகையது தானா? நான் இந்தச் சிறையில் கிடக்க, நீங்கள் அங்கே ரோஜாத் தோட்டத்தில் திளைப்பதா?

ஹே கண்ணியமானவர்களே, இந்தப் பரிதாபகரமான பறவையைச் சற்றே நினைவில் கொணருங்கள். (என் நினைவாக ) மேட்டு நிலத்தில் காலைப்பானம் பருகுங்கள்.

நண்பர்களால் நண்பன் நினைக்கப்படுவது நண்பனுக்கு மகிழ்வளிப்பதாகும். அதிலும் குறிப்பாக அவர்கள் லைலாவும் மஜ்னூனும் ஆக இருந்துவிட்டால் (அந்த மகிழ்ச்சிக்குக்) கேட்கவும் வேண்டுமோ!

1560. உங்கள் அன்புக்குரிய வனிதையருடன் நீங்கள் இன்பத்தில் திளைக்கும்போது நான் என் இரத்தம் நிறைந்த கிண்ணத்தையா பருகுவது?

(என் அன்புடையவனே,) நீ எனக்கு நீதம் வழங்க நாடினால் என் ஞாபகார்த்தமாக ஒரு கிண்ணம் மதுவாவது அருந்து.

ஹா, எங்கே அந்த ஒப்பந்தம்? எங்கே அந்தப் பிரமாணம்? கற்கண்டையொத்த கனிவாய்த் தந்த வாக்குறுதிகள் எங்கே?

நீ உன் அடிமையைக் கைவிட்டது அவன் உனக்குச் செய்த கெட்ட செயலுக்காகத்தான் எனின், பின்னர் (ஆண்டான், அடிமைக்கு இடையில்) இருவருக்குமுள்ள வேற்றுமைதான் யாதோ?

*1565.* ஹா, நீ கோபத்திலும், சச்சரவிலும் செய்யும் தீங்கு இனிய வீணையின் நாதத்தையும், இன்னமுதமான கானத்தையும் விட எனக்கு அதிக இன்பம் தருவதாகும்.

ஹா, உன் கொடுமை மகிழ்வைவிட இனியது; உன் பழிவாங்கல் உயிரைவிட அருமையானது.

இது உன் நெருப்பு. உன் விளக்கு எப்படி இருக்க வேண்டும்? இது உன் புலம்பல்; உன் திருவிழா எப்படி இருக்க வேண்டும்?

உன் கொடுமையிலுள்ள இனிமையும், உன் பேரெழிலும் சம்பந்தப்பட்டவரை யாரும் உன் அடித்தளம்வரை எட்ட வில்லையே! (யாரும் உன் இனிமையையும் பேரெழிலையும் எல்லை காணவில்லையே.)

நான் முறையிடுகிறேன்; எனினும், என் முறையீட்டை நம்பி அவன் தன் கொடுமையைக் குறைத்துவிட்டால் என்ன செய்வது என்றும் பயமாய் இருக்கிறது.

*1570.* அவன் பலாத்காரத்தின்மீதும், மென்மையின்மீதும் நான் அளவற்ற பிரேமை கொண்டுள்ளேன். இந்த இரண்டுவித முரண் பாடுகளுடனும் நான் காதல் கொண்டிருப்பது விசித்திரம்தான்.

இறைவன் மீது ஆணையாக, இந்த (துயர) நெருஞ்சியிலிருந்து தப்பி, (மகிழ்வுப்) பூங்காவில் புகுந்தால், அதனாலேயே நான் புல்புலைப்போல் புலம்பத் தலைப்பட்டு விடுவேன்.

ரோஜா முட்களையும், மலர்களையும் ஒருங்கே தின்னத் தன் வாயைத் திறக்கும் இந்தப் புல்புல் விசித்திரமானது.

இது என்ன புல் புல்! இது ஒரு பயங்கரப் பூதம். இதன் காதல் காரணமாக இனிமையற்ற யாவும் இதற்கு இனிமையாகிவிட்டன.

பிரபஞ்சத்தையே காதலிப்பது இது; இதுவே பிரபஞ்சம்; இது தன்னையே காதலிக்கிறது; தன் காதலையே நாடுகிறது.

### தெய்வப் புலன்களான இறக்கைகளையுடைய பறவைகள்

*1575.* ஆத்மாவெனும் கிளியின் கதையும் இதுதான். (ஆத்மப்) பறவைகளின் அந்தரங்கம் அறிந்த பறவை எங்கே?

பலஹீனமான, ஒரு பாவமுமறியாத, பறவை - ஆனால், (சக்தி பல பெற்றிருந்த) சுலைமான் நபியையும், அவர்கள் பரிவாரங் களையுமே தன்னகத்தே கொண்ட பறவை எங்கே?

நன்றி தெரிவித்தலோ, முறையீடோ இன்றி அவன் கசப்புடன் புலம்புகையிலே ஏழு வானங்களிலுமே ஒரு பெருங் கூக்குரல் எழுந்தது.

அப்போது அதற்கு இறைவன் புறத்திலிருந்து ஒவ்வொரு கணமும் நூற்றுக்கணக்கான செய்திகள் வருகின்றன. 'என் இறைவா' (யா ரப்பி!) என்ற அதன் ஓர் அபயக் குரலுக்கு 'இதோ குரல் கொடுத்தேன்' (லப்பைக்க) என்ற பதில் குரல் இறைவன் புறத்திலிருந்து நூற்றுக்கணக்கான தடவைகள் எழுகின்றன.

அவனுடைய பின்னடைதலும் இறைவன் பார்வையில் பணிவைவிடச் சிறந்ததாயுள்ளது; அவனுடைய அவிஸ்வாசத்தின் முன் சகல விஸ்வாசங்களுமே வெறும் கதைகள்தாம்.

1580. ஒவ்வொரு கணமும் அவன் (இந்த ஆத்மாவை உடையவன்) தனக்கேயுரிய ஏற்றத்தைப் பெறுபவனாய் இருக்கிறான்; இறைவனும் அவன் தலையில் அவனுக்கே உரித்தான நூற்றுக் கணக்கான மணிமுடிகளைச் சூட்டுகிறான்.

அவன் உருவம் பூமியிலுள்ளது; அவன் ஜீவனோ 'ஓரிடமற்றதில்', 'ஓரிடமற்றதாய்' (மெய்ஞானப் பாதையில்) பிரயாணம் செய்பவர்களுடைய கற்பனைக்கே எட்டாததாய் இருக்கிறது.

இத்தகைய ஓரிடமுமற்றது உனக்குப் பிடிபட வேண்டும் என்பதோ, ஒவ்வொரு கணமும் அதுபற்றி (அது இப்படித்தான் இருக்கும், இப்படித்தான் இருக்கும் என்று) கற்பனையுண்டாக வேண்டும் என்பதோ அவசியமில்லை.

சொர்க்கத்திலுள்ளவர்களுக்கு நான்கு ஆறுகளும் கட்டுப்பட்டிருப்பதுபோல, இடமும், இடமற்றதும் அவன் கட்டுப்பாட்டிலுள்ளன.

இந்த விளக்கத்தை இத்துடன் நிறுத்து; இதிலிருந்து உன் பார்வையை அப்பால் திருப்பு; இதற்கதிகம் ஒரு வார்த்தையும் வெளியிடாதே. எது சரியென்பதை அல்லாஹ்வே நன்கறிந்தவன்.

1585. நேயர்களே, (இதை விடுத்து) நாம் நமது 'பறவை - வர்த்தகன் - இந்தியா' பற்றிய விஷயத்துக்கு மீண்டும் திரும்புவோம்.

வர்த்தகன் கிளி சொன்ன செய்தியை ஏற்றுக்கொண்டு சம்பந்தப்பட்ட கிளிகளிடம் அதைத் தெரிவிப்பதாக உறுதி கூறிவிட்டுப் பிரயாணமானான்.

### வர்த்தகன் இந்தியக் கிளியிடம் வந்து தன் கிளியின் செய்தியைத் தெரிவித்தல்

இந்தியாவில் அவன் வெகு தொலைவு சென்றபின் அங்கே ஒரு சமவெளியில் அவன் கிளிகள் பலவற்றைக் கண்டான்.

உடனே அவன் தான் ஏறி இருந்த வாகனத்தை நிறுத்தினான்; தன் வாயைத் திறந்து - தன் கிளி சொன்ன - செய்தியை எத்தி வைத்தான்.

அங்கிருந்த கிளிகளில் ஒன்று அது கேட்டதும் நடுநடுங்கியது. உடனே கீழே விழுந்து இறந்துபோய்விட்டது.

1590. அந்தச் செய்தியைத் தெரிவித்தது குறித்து வர்த்தகன் பெரிதும் வருந்தினான். "நான் இதைச் சொல்லத் துணிந்தேனே!

இது என்னுடைய கிளியின் உறவின் முறையிலுள்ளது என்பது திண்ணம். இவை இரண்டும் ஈருடலும் ஒருயிருமாக இருந்திருக்க வேண்டும். (எனவேதான், அது என்னிடம் சிறைப்பட்டிருப்பதைக் கேட்டதும் இது அதிர்ச்சியால் செத்துவிட்டது.)

நான் ஏன் இதைச் செய்தேன்! நான் ஏன் அந்தச் செய்தியைக் கூறினேன்? இந்த மூடப் பேச்சால் ஒரு பாவமும் அறியாத இந்த ஜந்துவை நான் சாம்பலாக்கி விட்டேனே!" என்று அவன் புலம்பினான்.

இந்த நாவு கல்லைப்போல; ஆனால், இரும்பையும் போல. அதிலிருந்து எழுவது நெருப்பையொத்துள்ளது.

வீணுக்கு (சிக்கிமுக்கிக்) கல்லையும் இரும்பையும் ஒன்றின்மீது ஒன்றை மோதாதே! ஒரு கதை சொல்வதற்காகவோ சுயபிரதாபம் பாராட்டவோ அப்படிச் செய்யாதே!

1595. ஏனெனில், எங்கும் இருள் கப்பியுள்ளது; நாற்புறமும் பஞ்சுப் பொதிகள் நிறைந்த மைதானமேயுள்ளது; பஞ்சுப் பொதியில் நெருப்புப் பொறி பறக்கவிடலாமா?

தமது கண்களை மூடிக்கொண்டு இத்தகைய வீண் வார்த்தைகளால் உலகைப் பற்றியெரியச் செய்பவர்கள் அநீதக்காரர்களாவர்.

ஒரே வார்த்தை உலகையே நெருப்பால் பொசுக்கிவிடும்; செத்த நரிகளைச் சிங்கங்களாக எழச்செய்யும்.

அசலில் ஜீவன்களிடம் ஈஸா (அலை) அவர்களின் உயிரூட்டும் மூச்சு உண்டு. சில சமயம் அது புண்ணாகவும், வேறு சில சமயங்களில் அது புண்ணுக்கு மருந்தாகவும் விளங்குகிறது.

ஜீவன்களைவிட்டு (சடதத்துவத்) திரைகள் அகற்றப்பட்டால் ஒவ்வோர் ஆத்மாவின் பேச்சும் மஸீஹ் (அலை) (ஈஸா நபி) அவர்களின் மூச்சையே ஒத்திருக்கும்.

1600. கற்கண்டைப் போன்ற மொழி பேச நீ அவாவினால், மூர்க்கமான, மோகாவேசமான பேச்சைத் தவிர்த்துக்கொள்; (சதையின் இச்சைகள் என்ற) மிட்டாயைத் தின்னாது ஒதுங்கிக் கொள்!

தன்னைக் கட்டுப்படுத்தல் என்பது அறிவாளிகள் அடைய அவாவுவதாகும்.

தன்னை அடக்கியவர்கள் சொர்க்கத்தை எய்துகின்றனர்; மிட்டாய் தின்பவர்கள் கீழே தங்கிவிடுகின்றனர்.

**புலனுணர்வில் திளைப்பவனையும், ஆத்மஞானங் கண்டவரையும் பற்றி பரீதுத்தீன் அத்தார் சொல்லியுள்ளதன் விளக்கம்**

ஆத்மஞானங் கண்டவர் (ஞானி) யாவருங் காணும்படி விஷங் குடித்தால்கூட அதனால் அவருக்கு எந்தத் தீங்கும் உண்டாகாது.

ஏனெனில், அவர் (ஆத்மீக) ஆரோக்கியம் அடையப்பெற்ற வராவார்; நிதானம் எனும் தலையைவிட்டு விடுபட்டவராவார். ஆனால், இறைவனைத் தேடும் அப்பாவி முரீதோ (நாட்டக் காரனோ) ஜுர நிலையிலிருப்பவனாவான்.

1605. நபிபெருமான் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: "ஹே (உணவு முதலியன) படியளக்கப்பட வேண்டும் என்று நாடுவோனே, எச்சரிக்கை! நீ நாடப்படுபவன் எவனுடனும் திருப்தியடைந்து விடாதே!" என்று.

உன்னுள் நம்ரூது ஒருவன் இருக்கிறான்; எனவே நெருப்பினுள் போகாதே! நீ அதை அணுக விரும்பினால் முதலில் இப்ராஹீம் (அலை) ஆக ஆகிக்கொள்!

உனக்கு நீந்தத் தெரியாத, கடலில் பழக்கமற்ற நிலையில், வீண் முரண்டுக்காகக் கடலில் குதித்து வையாதே!

அவர் (மெய்ஞானி) நெருப்பிலிருந்து சிவந்த ரோஜாக்களை வெளிக்கொணர்வார்; நஷ்டத்திலிருந்து அவர் லாபத்தை மேல் தளத்துக்குக் கொண்டுவருவார்.

சம்பூரண மனிதர் (ஞானி) மண்ணைக் கையில் அள்ளினாலும் அது பொன்னாகிவிடுகிறது; அரைகுறையானவன் தங்கத்தை எடுத்தாலும் அது சாம்பலாகிவிடுகிறது.

1610. நேர்மையாளன் இறைவனால் ஏற்கப்பட்டவனாதலால், சகல விஷயங்களிலும் அவன் கரம் இறைவனின் கரமாய் உள்ளது.

அரைகுறையானவனின் கரம் ஷைத்தானின் கரமாகும். ஏனெனில், அவன் நயவஞ்சகம் என்ற கண்ணியில் அகப்பட்டுக் கொண்டுள்ளான்.

(சம்பூரண மனிதனான) இவனிடம் அறியாமை வந்தால் அதுவுமே அறிவாகிவிடுகிறது; நிராகரிப்பவனிடம் செல்லும் அறிவும் அறியாமையாகிவிடுகிறது.

தீயவன் எடுக்கும் எதுவும் தீயதாக ஆகிவிடுகிறது. (ஆனால்,) சம்பூரண மனிதன் விஸ்வாசமற்ற தன்மையை ஏற்றாலும் அதுவும் சன்மார்க்கமாகவே ஆகிவிடுகிறது.

கால்நடையாக நடந்து போய்க்கொண்டு, குதிரைமீது சவாரி செய்யும் ஒருவரோடு (சம்பூரண ஞானியோடு) சண்டையிடும் நீயா உன் தலையைக் காத்துக்கொள்ளப் போகிறாய்! இப்போதே நீ திருந்திக்கொள்!

### மூஸா (அலை) அவர்களும் மந்திரவாதிகளும் [1]

1615. சபிக்கப்பட்ட பிர்அவ்னின் காலத்தில் வாழ்ந்த மந்திர வாதிகள் மூஸா (அலை) அவர்களுடன் பகையால் போட்டியிட்ட சமயம் - மூஸாவை மதித்து அவர்களுக்கு முதலிடம் கொடுத்தனர்.

அவர்கள் மூஸாவிடம் சொன்னார்கள் : "உத்தரவிட வேண்டி யது நீங்கள் தாம்; நீங்கள் முதல் ஆளாக இருக்க விரும்பினால், நீங்களே முதலில் உங்கள் கைத்தடியைத் தரையில் போடலாம்" என்று.

மூஸா (அலை) சொன்னார்கள் : "மந்திரவாதிகளே! நீங்கள் விரும்பினால் நீங்களே அந்தமாதிரித் தந்திரங்களை முதலில் (யாவரும் காணும்படியாக) நடு இடத்தில் விட்டுக் காட்டுங்கள்" என்று.

இந்த அளவு அவர்கள் தம்மிடம் மதிப்புக்காட்டியதால் அந்த மந்திரவாதிகளுக்கு உண்மையான மார்க்கத்தில் நம்பிக்கையுண்டாக லாயிற்று.

இதனால், அவர்களுடைய போட்டியின் கைகளையும், கால்களையும் அது (உண்மையான மார்க்கம்) வெட்டி வீசிவிட்டது. (அவர்களோடு அதிகமாக விவாதிக்க விடாமல் தடுத்துவிட்டது.)

1620. அவர்களுடைய (மூஸா நபியுடைய) உரிமையை மந்திரவாதிகள் ஒப்புக்கொண்டதும், அந்தப் போட்டிக்குப் போன

---

1. பார்க்க : குர்ஆன் 7 : 115 - 122

பாவத்துக்காக அவர்கள் தமது கைகால்களைத் தத்தம் செய்து விட்டனர்.

சம்பூரண மனிதனுக்கு ஒவ்வொரு கவள உணவும், ஒவ்வொரு வாசகமும் ஆகுமானதாகும். (ஹலால் ஆகும்.) நீ பூரணமடைய வில்லை; புசியாதே! வாய்மூடி மௌனியாய் இரு!

நீ காதுபோலும், அவர் (சம்பூரணமடைந்தவர்) நாவு போலுமாம். (எனவே,) அவர் உன் இனத்தைச் சேர்ந்தவரல்லர். இறைவன் காதுகளை நோக்கி, *"மௌனமாகக் கேட்டுக் கொண்டிரு!"* [1] என்று கூறினான்.

குழந்தை பிறந்ததும் முதலில் சற்று நேரம் மௌனமாக இருந்து, யாவையும் காதுகொடுத்து வாங்குகிறது.

சிறிது நேரம் பேசக் கற்கும்வரை உதடுகளை மூடிக் கொண்டி ருக்கிறது.

1625. அது காதைப்போல் மௌனமாகவிருக்காமல், சளபுளா வென்று சப்தம் செய்தால் அது உலகிலேயே ஊமை என்று பெயரெடுத்துவிடும்.

இயல்பால் செவிடானவன், அடிநாளில் காதில்லாதவன் ஊமையாவான். அவன் பேச இயல்வதெப்படி?

பேசுவதற்கு முதலில் யாரும் (பிறர் என்ன சொல்கிறார்கள் என்று) கேட்கவேண்டுமாதலால் கேட்பதன்மூலமே நீ பேச இயல்பவனாவாய்.

வாயில் வழியாய் வீட்டினுள் செல்! காரணங்களில் முடிவு களைத் தேடு!

தேவையற்றவனான சிருஷ்டிகர்த்தாவின் பேச்சையன்றி வேறு எந்தப் பேச்சும் கேள்வியில்லாமல் உண்டாவதில்லை.

1630. அவன் (இறைவன்) யாவையும் உண்டாக்குபவன்; அவன் யாரையும் பின்பற்றவில்லை. சகல பொருள்களுக்கும் ஆதரவான வன் அவனே. அவனுக்கு எதன் ஆதரவுமில்லை.

மற்றவர்கள், தொழில்களிலும் பேச்சிலும் ஈடுபட்டுக்கொண்டு, ஓர் எஜமானனைப் பின்பற்றுகின்றனர்; ஒரு வழிமுறை அவர் களுக்குத் தேவையாய் இருக்கிறது.

இந்தப் பேச்சைக் கேட்க நீ தகுதியற்றவனாயின், ஒரு துறவியின் உடையை உடுத்துக்கொண்டு எங்காவது நிர்மானுஷ்யமான இடம் ஒன்றில் போய் அமர்ந்து கண்ணீர் சிந்து!

---

1. பார்க்க : குர்ஆன் 7 : 204

ஆதம் (அலை) அவர்கள் கண்ணீராலேயே தங்கள்மீது உண்டான பழிப்பிலிருந்து தப்பினார்கள்; கண்ணீர் பச்சாதாபப் படுபவனின் ஜீவ மூச்சாகும்.

அழுகைக்காகவே ஆதம் (அலை) அவர்கள் மண்ணுலகுக்கு வந்தார்கள்; இங்கே அழுதுகொண்டும், துயரப்பட்டுக்கொண்டும், புலம்பிக்கொண்டுமிருப்பதற்காக (வந்தார்கள்.)

1635. சுவனபதியையும், ஏழு வானங்களையும் விட்டு அப்பாலாக்கப்பட்ட ஆதம் (அலை) அவர்கள், தங்களை (பாவமன்னிப்புக் கேட்பதில்) மறக்கடிப்பதற்காக 'செருப்புக் கிடக்கும் வரிசைக்குச் சென்றார்கள்'.

ஆதமின் முதுகந்தண்டிலிருந்து வந்தவனாயின் அவர்கள் கூட்டத்தில் சேர்ந்தவனாகச் சதாவும் பாவமன்னிப்புத் தேடு!

இதய நெருப்பாலும் (தகிக்கும் துயரத்தாலும்), கண்ணின் நீராலும் நல்லுணவைச் சமைத்துக்கொள்! மேகத்தாலும், சூரியனாலும்தான் தோட்டம் திறந்ததாக (மலர்கள் மலர்வதாக) ஆகும்.

கண்களின் தண்ணீரின் ருசியை நீ எங்கே அறிவாய்! நீதான் குருட்டு (பிச்சைக்கார) மனிதர்களைப்போல் ரொட்டிப் பிரியனாக அலைகிறாயே!

இந்த ஜோல்னாப் பையிலுள்ள ரொட்டியை நீ காலியாக்கினால், அதைப் புகழ்மிக்க ரத்தினங்களால் நிறைத்துக்கொள்ள முடியும்.

1640. உன் ஆத்மாவெனும் சிசுவை ஷைத்தானின் முலைப் பாலிலிருந்து அப்பாலாக்கு; பின்னர் அதை அமரரோடு உரையாட விடு.

நீ முகங் கறுத்துக் குழம்பியவனாக இருந்தால் ஷைத்தான் குடிக்கும் முலைப்பாலையே நீயும் குடிக்கிறாய் என்பதையுணர்!

அதிக ஒளியும், பூரணத்துவமும் தரும் கவளம், ஆகுமான சம்பாத்தியம் கொண்டு கிடைத்ததாகும்.

நமது விளக்கின் தாகந் தணிக்கும் எண்ணெயிருக்கிறதே - அது ஒரு விளக்கின் தாகந் தணிப்பதால் அதைத் தண்ணீர் என்று அழை.

ஆகுமான கவளம் உணவால் அறிவும் ஞானமும் உண்டாகின்றன; ஆகுமான கவளத்தால் அன்பும், மெல்லிதயமும் உண்டாகின்றன.

1645. ஒரு கவளம் சோற்றில் நீ பொறாமையையும், பித்தலாட்டத்தையும் காண்பாயாயின் - அதுகொண்டு அறியாமையும் மௌட்டீகமும் உண்டாகக் காண்பாயாயின் - அது விலக்கப் பட்டது (ஹராமானது) என்று அறிந்துகொள்.

நீ கோதுமை விதைத்தால் அதில் பார்லியா விளையும்? குதிரையானது கழுதைக் குட்டியை ஈனக் கண்டதுண்டா?

கவள உணவு வித்தாகும்; சிந்தனைகள் அதன் கனிகளாகும். கவள உணவு கடலாகும்; சிந்தனைகள் அதில் கிடக்கும் முத்துக் களாகும்.

ஆகுமான கவளத்தால் (இறைவனுக்குச்) சேவை செய்ய வேண்டும், நல்ல வணக்கம் புரிய வேண்டும் என்ற எண்ணமும், மறு உலகம் (சொர்க்கம்) புக வேண்டும் என்ற உறுதியும் உண்டாகும்.

**வர்த்தகன் தன் கிளியிடம் வருதல்**

வர்த்தகன் (இந்தியாவில்) தன் வர்த்தக வேலைகளை முடித்துக்கொண்டு, தன் உற்றார் மகிழும்வண்ணம் (லாபத்தோடு) வீடு திரும்பினான்.

1650. தன் வீட்டிலிருந்த ஆண் அடிமைகள் அனைவருக்கும் ஒவ்வோர் அன்பளிப்பாக வழங்கினான். பெண் அடிமைகள் அனைவருக்கும் பரிசுகள் நல்கினான்.

இந்தக் கிளி கேட்டது: "என் சம்மானமெங்கே? நீர் சொன்னதையும், கண்டதையும் என்னிடம் தெரிவியும்" என்று.

வர்த்தகன் சொன்னான்: "அந்தோ, நீ சொன்ன செய்தி என் கையைப் பிறாண்டி, என் விரலைக் கடித்து, நான் பச்சாதாபப் படும்படி செய்துவிட்டது.

இப்படி முன்பின் யோசனையற்ற செய்தியை நான் உன்னிட மிருந்து பெற்றுச் சென்றதே அறியாமையாலும், என் மூடத்தனத் தாலும்தான்" என்று.

கிளி கேட்டது: "எஜமானனே, நீர் ஏன் பச்சாதாபப்படுகிறீர்? நீர் இப்படி வேதனைப்படும்படியும் துயரப்படும்படியும் என்ன நடந்தது?

1655. வர்த்தகன் பதிலளித்தான் : "உன்னையொத்த கிளிகளின் கூட்டமொன்றிடம் உன் செய்தியை நான் விண்டேன்.

அவற்றினுள் ஒன்று உன் வேதனையை உணர்ந்து கொண்டது. உடனே அதன் இதயம் உடைந்து, உடல் வெடவெடத்து அது மாண்டுபோய்விட்டது.

'நான் ஏன் இதைச் சொன்னேன்?' என்று என்னை நானே நொந்துகொண்டேன். ஆனால், அதைச் சொன்ன பின்னர், நான் பச்சாதாபப்பட்டுப் பயனென்ன?"

நாவைவிட்டு வெளிப்பட்ட பேச்சு, வில்லைவிட்டுக் கிளம்பி விட்ட அம்பையொக்கும் என்பதறி!

மகனே, அது தன் போக்கில் போவதை நிறுத்திக்கொண்டு, தான் இருந்த இடத்துக்கு மீள்வதில்லை; அதன் மூலஸ்தானத் திலேயே அதைக் கிளம்பிவிடாது தடுக்க நீ பாலம் அமைக்க வேண்டும்.

1660. அதன் மூலஸ்தானத்தைவிட்டு அது புறப்பட்டதும், அது ஓர் உலகையே சுற்றிவிடுகிறது; அது உலகையே அழித்தொழிப் பினும் வியப்பொன்றுமில்லை.

நம் செயல்களுக்குக் கண்ணுக்குத் தென்படாத ஆட்டுவிக்கும் தன்மையுண்டு. அதன் பயனாய் விளைவன (மானிட) சிருஷ்டிகளின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவையன்று.

அந்தப் பலாபலன்கள், நாம் அவற்றைச் செய்வதாகச் சொல்லப்படினும், இறைவனால் வேறு எந்தப் பங்காளியுமற்ற முறையில் உண்டாக்கப்படுபவைதாம்.

ஜைது அம்ரின் திசையில் அம்பொன்றை எய்தார். அந்த அம்பு அம்ரை ஒரு சிறுத்தையைப்போல் பற்றிக்கொண்டது.

நீண்ட காலம் - ஒருவருடம்வரை - அது கொடிய வேதனை தந்தது. வேதனையை உண்டாக்குபவன் இறைவன்; மனிதனன்று.

1665. அம்பை எய்த ஜைது அந்தக் கணமே பயத்தால் மாண்டிருப்பினும், அம்ரின் உடலில் தொடர்ந்து அவர் மரணம் வரை வேதனை இருந்துகொண்டுதானிருக்கும்.

இந்த அம்பால் தாக்குண்டு அம்ரு இறந்துபட்டால் அம்பை எய்த ஜைதின் மீது கொலைகாரன் என்று குற்றம் சாட்டுகிறோம்.

யாவுமே சிருஷ்டியாளனின் வேலையாயினும், அந்த வேதனைகளுக்கு ஜைதையே பொறுப்பாளியாக்குகிறோம்.

அதுபோன்றுதான் விதைப்பதிலும், மூச்சு விடுவதிலும் (அதாவது பேசுவதிலும்,) கண்ணி வைப்பதிலும், சம்சர்க்கத்திலும் அந்தச் செயல்களின் பலாபலன் இறைவனால் நிர்ணயிக்கப் படுவதாக இருக்கிறது.

ஞானியர்கள் இறைவனிடமிருந்து சக்தியை அடையப் பெற்ற வர்கள். (வில்லிலிருந்து) வெளிக்கிளம்பிவிட்ட அம்பை திரும்பவும் வில்லினுள் போகுமாறு செய்ய அவர்களால் இயலும்.

1670. ஞானி பச்சாதாபப்படும்போது, காரண சாதனங்களின் கதவையே இறைவன் கரங்கொண்டு அடைபடச் செய்துவிடுகிறார்.

(தெய்வ அருள் என்னும்) கதவைத் திறப்பதன்மூலம் சொன்னதை அவர் சொல்லாததாக ஆக்கிவிடுகிறார். (அதாவது, எந்தத் தீங்கும் உண்டாகாது அதன்மூலம் தடுத்துவிடுகிறார்.)

அதைக் கேட்டவர்கள் மனத்தைவிட்டும் அதை அழித்து அது எங்குமே இல்லாதபடி ஆக்கிவிடுகிறார்.

அன்பா, இதுபற்றிய கண்கூடான சான்று உனக்குத் தேவை யாயின், *"(எந்தவொரு) வசனத்தையும் (நாம் ரத்துச் செய்கிறோம் அல்லது) மறக்கும்படி செய்கிறோம்"*[1] என்ற வசனத்தைப் படித்துப்பார்!

*"அவர்கள் என் எச்சரிக்கையை நீங்கள் மறக்கும்படி செய்துவிட்டனர்"*[2] என்ற திருவசனத்தையும் படி! (மனித இதயங்களில்) மறதியை உண்டாக்கும் சக்தி அவர்களிடம் (ஞானியரிடம்) உண்டு என்பதை ஒப்புக்கொள்!

1675. நீ ஒன்றை நினைவுகூறவோ, மறக்கவோ செய்யும்படி அவர்களால் ஆக்கமுடியும். எனவே, அவர்கள் சிருஷ்டிகளின்மீது சக்தியுடையவர்களாக இருக்கின்றனர்.

அவர் (ஞானி) உன் புலனுணர்வை மறதியால் அடைத்துக் கட்டிப்போட்டதும், உன்னிடம் எவ்வளவுதான் நன்மை இருப்பினும் உன்னால் எதையும் செய்ய இயலாதுபோய் விடுகிறது.

அந்த உன்னதம்பெற்ற நாதாக்களையா நகைத்ததற்குரிய வர்களாக நினைக்கிறாய்? "அவர்கள் உன்னை மறக்கச் செய்தார்கள்" என்ற திரு குர்ஆன் வசனத்தையாவது படித்துப்பார்!

ஒரு கிராமத்தை அடையப்பெற்றிருப்பவர் சடலங்களின் அதிபதி; இதயத்தை அடையப்பெற்றிருப்பவர் (ஞானி) உங்கள் இதயங்களின் அதிபதியாவார்.

செயல் என்பது பார்ப்பதன் ஒரு பிரிவுதான் என்பதில் ஐயமில்லை. எனவே, மனிதன் சிறிய மனிதனேயன்றி (கண்ணிலுள்ள கருமணியேயன்றி) வேறல்லன்.

---

1. பார்க்க : குர்ஆன் 2 : 106    2. பார்க்க : குர்ஆன் 23 : 110

*1680. இந்த விஷயத்தை முழுவதும் விவரிக்க எனக்குத் துணிவில்லை. மத்தியிலுள்ளவர்களிடமிருந்து அதற்குத் தடையுண்டாகியுள்ளது.*

*(இறைவனின்) சிருஷ்டிகளை மறதியிலாக்குவதோ, நினைவு மீண்டவர்களாக ஆக்குவதோ மெய்ஞானியால் இயலக்கூடியது; எனவே, அவரை உதவிக்கு அழைத்ததும் அவர் உதவ விரைகிறார்.*

*ஒவ்வோர் இரவும் அந்தப் புகழ்மிக்கவர் எத்தனையோ நல்ல கெட்ட எண்ணங்களை ஜனங்களுடைய இதயங்களிலிருந்து அகற்றுகிறார்.*

*பகலிலோ அவர்கள் இதயங்களை நிரப்புகிறார். அந்தச் சிப்பிகளை நன்முத்தால் நிரப்புகிறார்.*

*(தெய்வ) வழிகாட்டலால் (தூக்கம் கலைந்ததும்) முந்திய பொருள்களைப்பற்றிய நினைவுகள் யாவும் (தாம் எவற்றுடன் சம்பந்தப்பட்டிருந்தனவோ) அந்த ஜீவன்களை இனம் கண்டு கொள்கின்றன.*

*1685. வழிவகை என்னும் கதவை உனக்காகத் திறந்துவிடும் பொருட்டு, உன் கைவன்மையும், திறமையும் உன்னிடம் மீளுமாக!*

*பொன் வேலை செய்யும் திறமை (இரும்பு வேலை செய்யும்) கொல்லனிடம் போவதில்லை. நல்லியல்பு உடையவனின் தன்மை தீய இயல்பு உடையவனிடம் போவதில்லை.*

*நியாயத் தீர்ப்பு நாளில் கவின் கைத்திறன்களும், இயல்புகளும், அவற்றுக்கு உடையவனிடம் அவனுடைய சொத்துக்களைப்போல் மீண்டும் வந்து சேர்ந்துவிடும்.*

*நித்திரைக்குப் பின்னருங்கூட, கைத்தொழில்களும், இயல்புகளும் தம்மைத் தம்முடையவை என்பவர்களிடம் திரும்பி விடுகின்றன.*

*பொழுது உதயமாகும் தருணம் கைத்தொழில்களும், எண்ணங்களும் முன்னர் நன்மையும், தீமையுமிருந்த தலங்களில் போய் அமர்ந்துகொள்கின்றன.*

*1690. கடிதங் கொண்டுசெல்லும் புறாக்களைப்போல் பிற நகரங்களிலிருந்து பயனுள்ளவற்றை அவை தம் சொந்த நகரங்களுக்குக் கொண்டுசெல்கின்றன.*

### கிளியின் மரணமும், வர்த்தகன் புலம்பலும்

*மற்றக் கிளி இறந்ததுகேட்ட இந்த (வர்த்தகனுடைய) கிளியும் உடனே உடல் கிடுகிடுவென நடுங்கி விழுந்து துடித்துச் செத்துப் போய்விட்டது.*

அது இப்படி விழுந்து இறப்பது கண்ட வர்த்தகன் தன் தொப்பியை எடுத்துத் தரையில் வீசியவாறு குதித்தான்.

அதை இந்தக் கோலத்தில், இந்த நிலையில் கண்டதும், அவன் துள்ளிக்குதித்துக்கொண்டு தன் சட்டையின் முன்புறத்தைக் கிழித் துக்கொண்டான்.

அவன் சொன்னான்: "ஹா, எந்தன் அழகிய கிளியே, இனிய குரல் படைத்த உனக்கு நேர்ந்த இக்கதிதான் என்னே! நீ ஏன் இவ்விதமானாய்?

1695. அந்தோ என் தீங்குரல் பறவையே, அந்தோ என் உற்ற தோழனே, என் அந்தரங்கமறிந்தவா!

அந்தோ! உன் இனிய கீதம் என் ஆத்மாவின் மதுவாக விளங் கிற்றே! என் பூங்காவாகவும், சப்ஜா இலையாகவும் திகழ்ந்ததே!

சுலைமான் நபி (அலை) அவர்களிடம் இதுபோல் பறவை யொன்று இருந்திருப்பின், அவர்கள் மற்றப் பறவைகளை ஏறெடுத் தும் பார்த்திருக்க மாட்டார்களே!

'ஹா, மலிவாகக் கிடைத்த பறவை என் முகத்தை விட்டு விரைவில் மறைந்து விட்டதே!

ஹா நாவே, நீ எனக்குப் பெருத்த இடைஞ்சல் செய்கிறாய்! நீ மனித இனத்துக்கே பெருத்த தீங்கிழைப்பவன்.

1700. நாவே, நீ நெருப்பாகவும், நெருப்பில் ஆகுதியாவதாகவும் விளங்குகிறாய்? எத்துணை நேரந்தான் நீ இந்த நெருப்புக் குவியலில் கிடந்து எரிந்துகொண்டிருப்பாய்?

நீ சொன்னவாறெல்லாம் என் ஆத்மாக் கேட்கிறதாயினும், அந்தரங்கத்தில் உன்னால்தான் அது சுமை தாங்காது முணுமுணுக் கிறது.

நாவே, முடிவற்ற பொக்கிஷம் நீ! நாவே, நீ நிவாரணமற்ற பிணியுமாவாய்.

நீ பறவைகளுக்கு ஒரே சமயத்தில் அவற்றைப்போல் போலிக் குரலெழுப்புபவனாகவும், அவற்றைப் பிடிக்கும் கண்ணியாகவும் திகழ்கிறாய். (அன்புக்குரியாள்) வராததால் உண்டான ஏக்கத்திடை ஆறுதலளிப்பவன் நீ.

கருணையற்றவளே, என்னைப் பழிவாங்க அம்பை நாணேற்றி யுள்ளவளே, எத்துணை காலந்தான் நீ எனக்குக் கருணையருள்வாய்!

*1705. அந்தோ, நீ என் பறவையைப் பறந்து போகுமாறு செய்து விட்டனையே; அநீதியெனும் புல் மேட்டில் அதிக நேரம் புல் மேயாதே!*

*ஒன்று எனக்குப் பதிலளி; அல்லது, எனக்கு நஷ்டஈடு தா! அல்லது, மகிழ்வுபெறும் மார்க்கம் எது என்பதை எனக்குக் காட்டியருள்!*

*அந்தோ, இருளை விழுங்கும் என் ஒளியே, பகலைக் கொணரும் அருணோதயமே, அந்தோ, என் பகலொளியான வெளிச்சமே!*

*அந்தோ, நன்கு பறந்த என் பறவையே, என் முடிவை (கடைசி நிலையை) விட்டு என் தொடக்கத்துக்கு (ஆரம்ப நிலைக்கு) நீ பறந்துபோய் விட்டனையே!*

*அறியாதவன் (மெய்ஞ்ஞானியல்லாதவன்) நிரந்தர வேதனைமீது அன்புகொண்டுள்ளான். எழு, (திரு குர்ஆனில்) 'நான் சத்தியம் செய்கிறேன்' என்பதுமுதல் 'தொல்லையில்'[1] என்பதுவரை படித்துப்பார்!*

*1710. உன் வதனத்தோடிருந்த சமயம் நான் தொல்லைகளை விட்டு அப்பால் விலகியிருந்தேன். உன் ஆற்றில் நுரைகளால் நான் அழுக்காகாமலிருந்தேன்.*

*இந்த 'அந்தோ அந்தோ!' என்னும் பேச்செல்லாம் (காதலியைப்) பார்ப்பதாக உண்டாகும் பிரமையாலும், என்னுடைய இன்றைய ஜீவிதத்தைவிட்டுப் பிரிந்ததாலும் உண்டானதுதான்.*

*அது இறைவனின் பொறாமையாகும். அவனுக்கு எதிராக எந்த யுக்தியுமில்லை. அவன்மீது கொண்ட காதலால் ஆயிரம் சுக்கல்களாக நொறுங்காத இதயமும் ஓர் இதயமாகுமா!*

*சகல வஸ்துக்களைவிட்டும் அவன் வேறானவனாய் இருப்பதும், விளக்கப்படுவதற்கும் வார்த்தைகளின் கூச்சலுக்கும் அப்பாற்பட்டவனாய் இருப்பதும்தான் இறைவனின் பெருமையாகும்.*

*ஹா, என் கண்ணீர் பெருங்கடலாக இருந்தாலும், அதை அந்த மயக்கு எழிலாளுக்குத் திரையாகச் சமர்ப்பிப்பேனே!*

*1715. என் கிளி, என் அதிசாதுரியப் பறவை, என் எண்ணங்களுக்கும், அகத்துள் எழும் உணர்வுகளுக்கும் விரிவுரை தந்ததாகும்.*

*அடிநாள்தொட்டே அந்தக் கிளி கூறிவந்தது, எனக்கு நன்மை தீமையாக ஒதுக்கப்பட்டுள்ள பாகம் எது வரினும்கூட, நான் அதை*

---

*1. பார்க்க : குர்ஆன் 90 : 1 - 4*

*நினைவுகூர்வேனென்று! (இவ்வாறு கிளியை இழந்த வர்த்தகன் புலம்பினான்.)*

*(தெய்வ) உதிப்பால் குரலெழுப்பும் கிளி, ஜீவிதத்தின் ஆரம்பத்துக்கும் முன்னாலேயே ஆரம்பமுடைய கிளி -*

*உன்னுள் புதைந்துகிடக்கிறது. அதன் பிரதிபிம்பத்தை நீ இதிலும் அதிலும் காண்கிறாய். (ஸ்தூல உலகின் பொருள்களில் பார்க்கிறாய்.)*

*அது உன் மகிழ்வை அப்பாலாக்குகிறது; அதனாலேயே நீ மகிழ்ச்சியடைகிறாய். இனி அதனிடமிருந்து அதுவே நியதி என்பது போல - நீ துன்பமடைகிறாய்.*

*1720. உடலுக்காக ஆத்மாவை எரித்துக்கொண்டிருப்பவனே, நீ ஆத்மாவைப் பொசுக்கி, உடலுக்கு வெளிச்சம் கொடுத்துவிட்டாய்.*

*(தெய்வக் காதலால்) நான் எரிகிறேன். யாருக்கேனும் சிக்கிமுக்கிக் கல் வேண்டுமெனின் என்னிடமுள்ள நெருப்பால் அவர்கள் தமது குப்பைகூளங்களுக்கு நெருப்பிடுவார்களாக!*

*சிக்கிமுக்கி நெருப்புண்டாக்குமாதலால் (உடனே) நெருப்புப் பிடிக்கும் சிக்கிமுக்கியை எடுத்துக்கொள்!*

*அந்தோ, அந்தோ, இத்தகைய முழுமதி மேகத்துள் மறைந்து விட்டதே!*

*நான் ஒரு வார்த்தையேனும் பேசுவதெப்படி? என் இதயத்துள்ள நெருப்பு வெகு தீவிரமாக எரிய ஆரம்பித்துவிட்டது; (காதலியிடமிருந்து) பிரிந்த பிரிவு எனும் சிங்கம் கடுங்கோபத்தோடு இரத்தம் சிந்தத் துடிக்கிறது.*

*1725. புத்தித் தெளிவோடிருக்கும்போதே தீவிரமாகவும், பயங்கரமாகவும் நடப்பவன் தன் கையில் மதுக் கிண்ணமேந்திவிடின் எப்படி இருப்பான் என்று சொல்லவும் வேண்டுமா?*

*விவரிக்க வொண்ணாப் பயங்கரச் சிங்கத்துக்குச் சமவெளியே போதாததாகும்.*

*நான் ஓசை நயம்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருக்கிறேன். என் காதலி சொல்கிறாள், தன் தோற்றத்தையன்றி வேறு எதையும் நான் எண்ணிப்பார்க்கக்கூடாது என்று.*

*எதுகை மோனைகளைப்பற்றி எண்ணிக்கொண்டிருக்கும் நண்பா, ஆஸ்வாசமாக அமரு! என் சந்நிதியில் நீ பேரின்பத்தோடு திளைப்பவனாகினாய்.*

நீ வார்த்தைகளைப்பற்றிச் சிந்திக்குமளவுக்கு அவை அத்துணை முக்கியமானவையா? வார்த்தைகள் என்பவை யாவை? திராக்ஷைத் தோட்டத்திலுள்ள முட்புதர்கள் தாம் அவை.

1730. வார்த்தையையும், சப்தத்தையும், பேச்சையும் நான் குழப்பத்துள் தூக்கி வீசிவிட்டு, இம்மூன்றுமின்றி உன்னோடு உரையாடுகிறேன்.

இவ்வுலக விவகாரங்களிலேயே மூழ்கிக்கிடப்பவனே ஆதம் (அலை)யிடமிருந்து நான் மறைத்துவைத்த வார்த்தையை உன்னிடம் பேசுகிறேன்.

நான் இப்ராஹீம் (அலை)யிடம் தெரிவிக்காத வார்த்தையை, ஜிப்ரயீல் அறிந்திராத அந்த வார்த்தையின் வேதனையை (காதலை) நான் உன்னிடம் சொல்கிறேன்.

மஸீஹ் (அலை) ஒரு பேச்சும் மூச்சுவிடாத வார்த்தையை, இறைவன் பொறாமையால் 'மீம்' கூட இல்லாமல் பேசாததை (நான் உன்னிடம் சொல்கிறேன்).

பாஷையில் 'மீம்' என்பதுதான் யாது? உண்டென்பதும் இல்லையென்பதுமாம். நான் உண்டென்பதில் திட்டமானவனாய் இல்லை; தான் என்பதற்றவன், இல்லையானவன்.

1735. தனித் தன்மையற்றதில் நான் தனித்தன்மையைக் காண்கிறேன். எனவே, நான் என் தனித்தன்மையைத் தனித்தன்மையற்றதான நிலைக்கு ஆக்கிக்கொண்டு வருகிறேன்.

சகல அரசர்களுமே தங்கள் அடிமைகளுக்கு அடிமையாகியுள்ளனர்; தங்களுக்காக உயிர்கொடுக்க ஆயத்தமாயுள்ளனர்.

தம்முன் அடிபணியும் ஒருவன் முன் சகல மன்னர்களும் மண்டியிடுகின்றனர். தங்களால் (தங்கள்மீது கொண்ட அன்பால்) போதையாகியுள்ள ஒருவனுக்காக சகல ஜனங்களுமே போதையாகின்றனர்.

வேடன் திடீரென்று பறவைகளைத் தன் வேட்டையில் அகப்படுத்துவதற்காக முதலில் அவற்றுக்குத் தான் வேட்டையாக ஆகிறான்.

இதயத்தை கொள்ளைகொள்வோரின் இதயங்கள் தம்மிடம் இதயத்தை இழந்தோரிடம் சிறைப்பட்டு விடுகின்றன; காதலிக்கப்பட்ட அனைவரும் தத்தமது காதலரின் வேட்டைப் பொருளாகி விடுகின்றனர்.

1740. நீ காதலனாகக் கருதும் யாரையும் காதலிக்கப்பட்டவனாகவும் கருது; யதார்த்தத்தில் அவன் அவனாகவும், இவனாகவும்தானே இருக்கிறான்!

தாகமுடையவர்கள் உலகில் தண்ணீரைத்தேடி அலைகின்றனர். தண்ணீரும் உலகில் தாகமுள்ளவர்களைத் தேடவே செய்கிறது.

அவன் (இறைவன்) உன் காதலனாயின், நீ மௌனமாய் இரு! அவன் உன் காதைப் பிடித்து இழுத்தால் முற்றும் காது கொடுத்தவனாகு!

(பரவச) வெள்ளம் பெருக்கெடுக்கும்போது அதற்கு அணை போட்டுத் தடு! இன்றேல், அது தலைகுனிவையும் அழிவையும் உண்டாக்கிவிடும்.

அழிவே வரினும் எனக்கென்ன கவலை? அழிவுக்கு அடியில் ஓர் அரசாங்க கஜானாவேயன்றோ உள்ளது!

1745. இறைவனில் மூழ்கிப்போனவன் இன்னும் ஆழமாக மூழ்கவே விழைகிறான்; அவன் ஜீவன் கடலில் அலைகளைப்போல் மேலும் கீழுமாகத் தூக்கிவீசப்படுகிறது.

அது கேட்கிறது, "கடலின் அடித்தளம் அதிக இன்பமளிப்பதா அல்லது, மேல்தளமா? அவன் அம்பு அதிகமாக மனங்கவர்வதா அல்லது, அவன் கவசமா?" என்று.

இதயமே மகிழ்வுக்கும் துயரத்துக்குமிடையே நீ எந்த வேற்றுமையையும் கண்டாயாயின், நீ தீய எண்ணங்களால் சிதறடிக்கப்படுகிறாய் என்பதை உணர்.

உன் ஆசையின் நோக்கம் கற்கண்டை ருசிப்பதுதானாயினும், எந்த ஆசையூட்டும் பொருளும் இல்லாதிருப்பதுதானே உன் காதலியின் ஆசையின் நோக்கம்!

அவனுடைய விண்மீன் ஒவ்வொன்றும் ஒரு நூறு நிறை பிறையின் உயிருக்கான நஷ்டஈடாகும். உலகம் முழுவதன் செங்குருதியையுமே சிந்துவது அவனுக்கு ஆகுமானது (ஹலால் ஆனது) ஆகும்.

1750. விலையையும், உயிருக்கான நஷ்டஈட்டையும் நாம் அடையப்பெற்றோம். நம் ஆத்மாவைப் பணயம் வைத்துச் சூதாட விரைந்துவிட்டோம்.

ஹா, காதலர்களின் வாழ்வே சாவதில்தான் உள்ளது. உன் இதயத்தை இழப்பதன் மூலமன்றி வேறு எதனாலும் உன் அன்புடையாளின் இதயத்தைக் கவர முடியாது.

நான் எத்துணையோ வகைவகையான சமிக்ஞைகளாலும், கடைக்கணிப்பாலும் அவன் இதயத்தைக் கவர முயன்றேன். ஆனால், அவனோ சாக்குப்போக்குக் காட்டி என்னை இகழ்வாகப் புறக்கணித்துவிட்டான்.

நான் சொன்னேன்: "என்ன இருந்தாலும் இந்த (என்) மனமும் ஆத்மாவும் உன்னில்தானன்றோ மூழ்கியுள்ளன!" என்று. அவன் சொன்னான் : "தொலைந்துபோ, தொலைந்துபோ! இப்படியெல் லாம் என்னை (மந்திரத்தால்) கட்டிப்போட முயலாதே! (என்னை ஏமாற்றத் துணியாதே!)

உன் உள்ளத்துள் உண்டாகும் எண்ணம் என்ன என்பது எனக்குத் தெரியாதா? இரண்டாகப் பார்ப்பவனே, நீ காதலியைப் பார்ப்பது எப்படி?

1755. ஹே குதர்க்கமான போக்குடைய ஜீவனே, நீ என்னை மலிவாக விலைக்கு வாங்கிவிட்டதால் என்னை மிகவும் அலக்ஷிய மாக மதிப்பிடுகிறாய்.

மலிவாக வாங்கியவன் மலிவாகவே கொடுப்பான். ஒரு குழந்தை ஒரு முத்தை ஒரு துண்டு ரொட்டிக்குப் பதிலாகவும் தந்து விடும்."

நான் மூழ்கியுள்ள காதலிலே முதல் காதல்களும், கடைசிக் காதல்களும் மூழ்கியுள்ளன.

நான் அதை விவரிக்காது சுருக்கிக் கூறியுள்ளேன். இன்றேல், உன்னை விளங்கவைக்கும் என் சக்தியும், என் நாவுமே எரிந்து சாம்ப லாகியிருக்கும்.

நான் உதட்டைப்பற்றிப் பேசும்போது அது (ஏகத்துவம் என்னும்) கடலின் (கரையாகும்) உதட்டைக் குறிப்பதை அறி! நான், 'இல்லை' என்னும்போது அது 'தவிர' என்ற பொருளில் பயன் படுத்தப்படுவதைக் கண்டுகொள்!

1760. (அகத்தில்) இனிமை உண்டானதால் நான் முகம் களித்த வனாக அமர்ந்திருக்கிறேன். பூரணமான பேசுந்தன்மையால் நான் மௌனமாய் இருக்கிறேன்.

முகம் சுளித்தல் என்ற முகத்திரையால் என் இனிமையை நான் இரண்டு உலகங்களிடமிருந்துமே மறைத்துவிட முடிகிறது.

இந்த விஷயம் கண்டவர் காதிலெல்லாம் படாமலிருப்பதற் காக, ஆத்மஞானப் பரிபாஷை (சங்கேதப்) பேச்சுக்கள் நூற்றுக் கணக்கானவற்றுள் ஒன்றைமட்டும் இங்கே விவரிக்கிறேன்.

**"பாதையில் (தரீக்காவில்) உன்னைப் பின்தங்கச் செய்வது எதுவானால் என்ன, அது விஸ்வாசமானால் என்ன, நிராகரிப் பானால் என்ன (எல்லாம் ஒன்றுதான்).**

**காதலியைவிட்டு உன்னை மிகவும் பின்தங்கவைப்பது எது வானால்தான் என்ன, அழகானதாயினும், விகாரமானதாயினும் (எல்லாம் ஒன்றுதான்)" என்ற ஹக்கீம் ஸனாயின் வாய்மொழிக் கும்,**

**"திண்ணமாக சஅது பொறாமையுடையவர்; நான் அவரை விடப் பொறாமையுடையவன். இறைவன் என்னைவிட அதிகப் பொறாமையுடையவன். அவனுடைய பொறாமையால் அவன் நமது புற அக நடவடிக்கைகளில் கெட்ட செயல்களை விலக்கி யுள்ளான்" என்ற ஹதீஸுக்கும் விளக்கம்.**

இறைவன் தன் பொறாமையில் உலகம் முழுவதையுமே மிகைத்தவனாக இருப்பதால் உலகம் முழுமையுமே பொறாமை யுடையதாக ஆகிவிட்டது.

அவன் ஜீவனைப்போன்றுள்ளான்; உலகம் உடலைப் போன் றுள்ளது. ஜீவனிலிருந்து வரும் நல்லது கெட்டதை உடல் ஏற்றுக் கொள்கிறது.

1765. தொழுகைப் பாயில் (தெய்வ) உதிப்பை அடையப்பெறும் ஒருவன் மெய்விஸ்வாசத்திடம் மீள்வது தலைகுனிவானது என்று நீ கருதுகிறாயா?

அரச உடைகளின் பாதுகாப்பாளனாக ஆக்கப்பட்டுவிட்ட ஒருவன், அரசன் சார்பில் பேரம்பேசுவது அவனுக்கு நஷ்டமாகும்.

அரசனின் நெருங்கிய நண்பனாகிவிட்ட ஒருவன் அவன் மாளிகை வாயிலில் காத்துநிற்பது அவனுக்கு இழிவானதும் முறையற்றதுமாகும்.

அரசனின் கைகளை முத்தமிடும் நற்பேறு பெற்ற ஒருவன் அவன் கால்களை முத்தமிட முனைவது பாவமாகும்.

அரசன் காலில் தலையை வைப்பது அவனுக்குப் பணிவு காட்டும் செயல்தானாயினும், முந்திய செயலோடு ஒப்பிடின் அது குற்றமும், பிற்போக்குமாகும்.

1770. அரசனும் தன் வதனத்தைப் பார்த்தபின்னும் தன் வாசனையை மட்டும் கொண்டு திருப்தியடைய விரும்பும் ஒருவனு டைய விஷயத்தில் பொறாமையுடையவனாகி விடுவான்.

சங்கேதமாகக் குறிப்பிடுவதெனின், இறைவனின் பொறாமை நெல்லாகும்; ஜனங்களின் பொறாமை வைக்கோல் போரிலுள்ள வைக்கோலாகும்.

சகல பொறாமைகளினதும் மூலவேர் இறைவனிடமே உள்ளது என்பதை அறி! மனிதனுடைய பொறாமை இறைவனுடைய பொறாமையை ஒத்ததாய் இல்லாவிடினும், அதிலிருந்து உண்டானதுதான்.

இதுபற்றிய விளக்கத்தை இத்துடன் நிறுத்திவிட்டு, அந்தச் சபல புத்தி படைத்த அழகியின் கொடுமைபற்றி முறையிடுகிறேன்.

நான் அழுது அரற்றுகிறேன். காரணம், அழுது அரற்றல் அவனுக்கு இனிமை பயப்பதாகும். இரு உலகிலிருந்துமே அவன் அரற்றலை விழைகிறான்.

1775. அவன் ஏமாற்றுக்குறித்து நான் அழாமலிருப்பது எப்படி? நான்தான் அவன்மீது பொறாமை கொண்டோரின் கூட்டத்தில் சேர்ந்தவனாகவில்லையே!

அவனுடைய பகலும், பகலொளிதரும் வதனமுமின்றேல், நான் இரவைப்போல் இருண்டுகிடக்காமல் வேறு என்ன செய்யமுடியும்!

அவனுடைய இனிமையற்ற தன்மை என் ஆத்மாவுக்கு இனிமையளிக்கிறது. என் இதயத்தைத் துயரடையச் செய்யும் காதலிக்காக நான் என் ஆத்மாவையே திறைகொடுக்க ஆயத்தமாயுள்ளேன்.

என் ஒப்பற்ற அரசனுக்குத் திருப்தி தருவதற்காக என் துயரத்தையும் வேதனையையும் நான் நேசிக்கிறேன்.

துயரமெனும் புழுதியை என் கண்ணுக்கு மையாக இடுகிறேன் - அதன்மூலம் என் இரண்டு கண்களாம் கடல்களிலும் முத்துக்கள் நிரம்பட்டும் என்று.

1780. அவனுக்காக ஜனங்கள் வடிக்கும் கண்ணீர்த் துளிகள் முத்துக்களாகும். அவை கண்ணீர்த் துளிகள் தாம் என்று ஜனங்கள் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.

நான் ஆத்மாவின் ஆத்மாவைப் பற்றிக் குறை கூறுகிறேன்; ஆனால், (யதார்த்தத்திலோ) நான் குறை கூறவில்லை. நான் உண்மையைத்தான் விவரிக்கிறேன்.

என் இதயம் சொல்கிறது "அவனால் நான் சித்திரவதை செய்யப்படுகிறேன்" என்று. அதனுடைய அபத்தமான சாக்குப் போக்கைக் கண்டு நான் நகைக்கிறேன்.

நேர்மையாளரின் மாட்சியானவா, எனக்கு நேர்மை வழங்கு! நீ மேடையாவாய்; நான் உன் வாயிலின் அடிப்படியாவேன். (எனக்கு நீ நேர்மையருள்!)

யதார்த்தத்தில் மேடை எங்கே, அடிப்படி எங்கே? நம் காதலியுள்ள இடத்தில் 'நாம்', 'நான்' என்பவை ஏது?

1785. 'நாம்' 'நான்' என்பதைவிட்டு விடுபட்ட ஆத்மாவுடையவர்களே, ஆண்பெண்ணிலுள்ள சாராம்சமாக அமைந்துள்ளவர்களே!

ஆணும் பெண்ணும் ஒன்றாகும்போது அந்த ஒன்று நீயேயாவாய். தனிநபர் தன்மைகள் அற்றுப்போனதும், ஏகத்துவமே மீதமாகிறது.

உன்னை நீயே வணங்கும் விளையாட்டாக இந்த 'நான்', 'நீ' என்பதை நீதான் உண்டாக்கினாய்.

- கடைசியில் சகல 'நான்', 'நீ' என்பதெல்லாம் ஒரே ஆத்மாவாகி யாவும் காதலியில் சங்கமமாவதற்காக.

இவை யாவும் உண்மையே. 'குன்' (ஆகுக) எனும் பதத்துக்கு அதிபதியானவனே, வருகை என்பதையும் பேச்சையும் கடந்தவனே, வா!

1790. உடல் அதற்கேயுரிய அதன் இயல்புடன் தான் உன்னைக் காண இயலும். அது உன் துயரத்தையோ, மகிழ்ச்சியையோ கற்பனை செய்துகொள்கிறது.

இத்தகைய துயரம், மகிழ்வுபோன்ற இயல்புகளுக்குள் கட்டுப்பட்ட இதயம் உன்னை (யதார்த்தமாகக்) காண அருகதையற்றது என்று கூறிவிடாதே!

துயரத்தாலும் மகிழ்வாலும் கட்டுண்டவன் இந்தக் கடன் வாங்கிய (நிலையற்ற) இருவித இயல்புகளாலேயே வாழ்கிறான்.

எல்லையற்ற காதலென்னும் பசுஞ்சோலையிலே துயரம், மகிழ்வு ஆகிய இரண்டையுமன்றி இன்னும் எத்தனையோ வகையான கனிகளுண்டு.

காதல் இவ்விருவகை உணர்வுகளையும்விட உயர்வானதாகும். வசந்தமின்றி, குளிர்காலமின்றி அது எப்போதுமே புதுமையானதாகவும், பசுமையானதாகவுமே இருக்கிறது.

1795. ஹே பேரழகி, உன் முகவதனத்துக்கான திறையைக் கொடு! சுக்கல்களாக நொறுங்கிய ஆத்மாவின் கதையை எடுத்துரை!

காதல் வெறியோடு நோக்கும் இயல்புடைய ஒருத்தியின் ஒரு கடைக்கண் நோக்கு என் இதயத்தில் புதிதாகச் சூடுபோட்டு விடுகிறது.

அவன் என் குருதியைச் சிந்தினாலும் அதற்கான பொறுப்பிலிருந்து அவனை விடுவித்துவிட்டேன். "உன்னை விடுவிப்பது ஆகுமானது தான்" என்று நான் கூறியதும், அவன் (என்னை விட்டு) ஓடுகிறான்.

புழுதியைப் போன்றவர்களின் புலம்பலிலிருந்து ஓடி ஒளியும் நீ, துயரமுடையவர்களின் இதயங்களில் உன் துயரத்தைப் பொழிவது ஏன்?

கிழக்கில் வெளுக்கும் உதயம் ஒவ்வொன்றும் (சூரியனின்) ஒளிமிகு சுடர் ஊற்றுக்கண்போல் (அளவற்ற காருண்யனாக) உன்னைக் கண்டுள்ளது.

1800. (அப்படியிருக்க) விலை மதிப்பிலா அதரம் படைத்தவளான நீ உன்மீது காதல் வெறிகொண்டவனை ஆசைகாட்டி மோசம் செய்தது சரியா?

பழைய உலகுக்குப் புதிய ஆத்மாவானவனே, ஆத்மாவோ, இதயமோ அற்ற என் உடலிலிருந்து எழும் கூச்சலைக் கேள்!

ரோஜாவின் கதையை விட்டொதுக்கு! இறைவனுக்காக ரோஜாவை விட்டுப் பிரிக்கப்பட்ட புல்புலின் கதையை எடுத்துரை!

நம் மன எழுச்சிகளுக்குக் காரணம் துயரமும், மகிழ்வுமன்று. நமது தன்னுணர்வுக்கும், கற்பனைக்கும் எந்தத் தொடர்புமில்லை.

(தன்னுணர்வில்) வேறொரு நிலையுண்டு; அது அபூர்வமானது. இதை நீ நம்பவில்லையா? இறைவன் சர்வசக்தியுள்ளவன்.

1805. மனிதனின் சாதாரண நிலையை வைத்து முடிவுகட்டாதே! தவறு செய்வதிலும், நன்மை செய்வதிலும் நிலைத்துவிடாதே!

தவறு செய்வதும் நன்மை செய்வதும், துயரமும் மகிழ்வும் பிறப்பதால் உண்டாகுபவை; பிறப்பவை யாவும் இறப்பவைதாம். இறைவன் தான் அவற்றின் அநந்தரக்காரன்.

பொழுது புலர்ந்துவிட்டது. பொழுது உதயத்தின் உதயமானவனே, அதன் புகலிடமாகவும் உள்ளவனே, என் எஜமானன் ஹுஸாமுத்தீனிடம் (எனக்காக) மன்னிப்புக்கேள்!

பிரபஞ்சத்தின் இதயத்திடமும், ஆத்மாவிடமும் மன்னிப்புக் கேட்பவன் நீ; ஆத்மாவின் ஆத்மாவும் நீ; பவளத்திலுள்ள மாட்சி நீ.

புலரும் பொழுதின் வெளிச்சம் ஒளி நல்குகிறது. உன் விளக்கின் வெளிச்சத்தில் அமர்ந்து உன் மன்ஸூருடன் சேர்ந்து காலைப் பானத்தைப் பருகுகிறோம்.

*1810. உன் சம்மானம் என்னை இவ்விதம் மதிமயங்க வைக்கும் போது, வேறு எந்த மதுதான் எனக்குப் பரவசமூட்ட முடியும்!*

*பொங்கும் மது நமது பொங்குதலுக்காக மன்றாடும் யாசகனாகும்; சுழலும் வானமண்டலம் நாம் தன்னுணர்வடைவதற்காக வாதாடும் யாசகனாகும்.*

*நம்மோடு சேர்ந்ததாலேயே மதுவுக்குப் போதையுண்டாயிற்று; அதனோடு நாம் சேர்ந்ததால் நமக்குப் போதையுண்டாகவில்லை. நம்மிலிருந்தே உடலுண்டாயிற்று: நாம் அதிலிருந்து உண்டாகவில்லை.*

*நாம் தேனீயாவோம்; நம் உடல் தேன் கூடாகும் தேன் கூட்டின் அறைகளைப்போல ஒவ்வொரு பகுதியாக நாம் உடலை உண்டாக்கினோம்.*

### இந்தியா சென்று திரும்பிய வர்த்தகனின் கதைத் தொடர்

*இந்த விஷயம் மிகவும் நீண்டுவிட்டது. அந்த நல்லவனான வர்த்தகனுக்கு என்ன நேர்ந்தது என்று காண்பதற்காக அவன் கதையைத் தொடரலாம்.*

*1815. (துயர) நெருப்பாலும், தாபத்தாலும், வேதனையாலும் துடிதுடித்துக் கொண்டிருந்த வர்த்தகன் எத்துணையோ துயரப் பெருமூச்சுகளை வெளியிட்டான்.*

*முன்னுக்குப்பின் முரணாகப் பேசினான்; ஒருகணம் இழிவாகவும், மறுகணம் பணிவாகவும், சிறிது நேரம் யதார்த்தத்தின்மீதுள்ள தாகத்தோடும், சிறிது நேரம் பரிபாஷையிலும் அவன் புலம்பினான்.*

*நீருள் மூழ்குபவன் மரணத்துயரமனுபவிக்கிறான் : எந்தத் துரும்பையும் எட்டிப்பிடிக்கிறான்;*

*தன் தலை (உயிர்) போவதைப்பற்றிய பயத்தால் யாரேனும் ஆபத்தில் உதவுவார்களோ என்று அவன் கையையும், காலையும் நெடுகிலும் உதைக்கிறான்.*

*இந்தப் போராட்டத்தை நேயன் விரும்புகிறான். சும்மா வீழ்ந்துகிடப்பதைவிட வீணுக்காகவேனும் போராடுவது சிறந்ததாகும்.*

*1820. சகலருக்கும் அரசனானவன் சும்மா இருக்கவில்லை. அவனிடமிருந்து புகார் வருவதென்பது ஓர் அற்புதம். ஏனெனில், அவன் பிணிக்கு ஆளாகவில்லை.*

*இதனாலேயே, கருணையாளனான இறைவன் சொன்னான், 'மகனே, ஒவ்வொரு கணமும் அவன் ஒரு புதிய நிலையிலுள்ளான்'*[1] என்று.

இந்த வழியில் நீயும் சதாவும் திரும்பிக்கொண்டும், சொறிந்துகொண்டும் (சதாவும் செயலாற்றிக்கொண்டு) இரு! உன் இறுதி மூச்சுவரை ஒருகணத்தையும் வீணாக்காதே!

அதன்மூலம் தெய்வ அனுக்கிரஹம் உன் உற்ற நண்பனாக உள்ள நிலையில் உன் கடைசி மூச்சு வெளியாவதாகட்டும்!

ஆணோ பெண்ணோ - யாராயினும் சரி - அவர்கள் எதைச் செய்ய முயன்றாலும், ஆத்மாவின் அரசனின் காதும், கண்ணும் ஜன்னலில் நின்று (அதைக்) காண்கின்றன; கேட்கின்றன.

1825. இதன்பின்னர், வர்த்தகன் அந்தக் கிளியின் உடலைக் கூட்டுக்கு வெளியே தூக்கி எறிந்தான். உடனே அந்தச் சின்னஞ்சிறு கிளி இறக்கை அடித்து மிகவும் உயரமான ஓரிடத்தில் சென்றமர்ந்தது.

அது பறந்த வேகம் கீழ்த் திசையிலிருந்த சூரியன் திடீரெனப் பாய்ந்தது போலிருந்தது.

வர்த்தகன் அதன் செயல்கண்டு திகைத்துவிட்டான். விபரமின்றி அவன் அந்தப் பறவையின் மர்மங்களைக் கண்டான்.

அவன் தன் முகத்தை உயர்த்தி, "ஹே புல்புலே, உன் நிலையை விளக்கி (அது கொண்டு) நான் பயனடையச் செய்!

அங்கே (இந்தியாவில்) அந்தக் கிளி செய்ததை நீ புரிந்துகொண்டு, ஒரு தந்திரம் செய்து, நம்மைத் துயரத்தால் தகித்துவிட்டாய்" என்று வேண்டினான்.

1830. கிளி பகன்றது: "அந்த இந்தியக் கிளி எனக்கு அறிவித்தது இதுதான்; அதாவது, 'நீ உன் குரலின் கவர்ச்சியைக் கைவிடு; (உன் எஜமானின்மீது) நீ கொண்டுள்ள பற்றுதலை உதறிவிடு.

உன் குரல்தான் உனக்கு அடிமைத் தளையைப் பூட்டிற்று. இந்தச் செய்தியை எனக்கு அறிவிப்பதற்காகவே அந்தக் கிளி செத்ததுபோல் விழுந்து பாசாங்கு செய்தது.

'மேலானவர், கீழானவர் யாவர் முன்னும் பாட்டுக்காரனாகிவிட்ட நீ என்னைப்போல் மரணித்தவனாகு; அதன்மூலம் விடுதலை பெறு' என்று அறிவுறுத்திற்று".

---

1. பார்க்க : குர்ஆன் 55 : 29

நீ ஒரு தானிய மணியானால் சிறு பறவைகள் உன்னைக் கொத்திக்கொண்டு போய்விடும். நீ ஒரு முகையானால் சிறு குழந்தைகள் உன்னைக் கொண்டுபோய்விடும்.

தானியத்தை மறைத்து, (அது மறைக்கப்பட்ட) கண்ணியாக ஆகிவிடு; முகையை மறைத்து மேலேயுள்ள புல்லாகிவிடு.

1835. தன் அழகை ஏலம் விடுபவனை வசமாக்க நூற்றுக் கணக்கான விதிவசங்கள் கிளம்பிவிடுகின்றன.

தோல் பையிலிருந்து தண்ணீர் கொட்டுவதுபோல் அவன் தலையில் தீய பார்வையும், கோபமும், பொறாமையும் கொட்டப் படுகின்றன.

பகைவர்கள் பொறாமையால் அவனைச் சந்து சந்தாகக் கிழிக் கின்றனர்; நண்பர்கள்கூட அவன் வாணாளைக் கவர்ந்துவிடுகின் றனர்.

விதைக்கும் காலத்தையும், வசந்தத்தையும்பற்றி அக்கறை யற்றவன் வாழ்நாளின் மதிப்பை அறிவதெங்கனம்?

இறைவனின் கருணையெனும் புகலிடத்துள் நீ சரணடைந்து விடு; அவனே நம் ஜீவன்களின்மீது ஆயிரக்கணக்கில் அருளைச் சொரிந்து,

1840. நாம் புகலிடம் தேட உதவுகிறான். அப்படியிருக்க உனக் குப் புகலிடங் கிடையாது போவது எப்படி? நெருப்பும் நீருமே உன் சைனியங்களாகிவிடுமே!

நூஹு (அலை) அவர்களுக்கும், மூஸா (அலை) அவர்களுக்கும் கடல் நண்பனாகவில்லையா? அவர்களுடைய பகைவர்களை வஞ்சம் தீர்ப்பதில் அவை கடுமையாக நடந்துகொள்ளவில்லையா?

நெருப்பு இப்ராஹீம் (அலை) அவர்களுக்குக் கோட்டையாகி, நம்ரூதின் இதயத்திலிருந்து (கைசேதமெனும்) புகையை எழுப்ப வில்லையா?

மலை யஹ்யா (அலை) அவர்களைத் தன்னிடம் அழைத்துக் கொண்டு, அவர்களைத் துரத்திவந்தவர்களைக் கல்லால் அடித்து விரட்டவில்லையா?

"யஹ்யாவே, வாரும்! என்னிடம் புகலிடம் தேடும்! கூரிய வாளி லிருந்து உம்மைப் பாதுகாக்கிறேன்" என்று அது கூறவில்லையா?

1845. பிரஸ்தாபக் கிளி வர்த்தகனுக்கு (ஆத்ம) வாசனையுள்ள பாசாங்கற்ற சில அறிவுரைகள் நல்கிற்று. பின்னர் அது பிரிவு கூறிப் புறப்பட்டது.

*வர்த்தகன் அதை நோக்கி, "போய் வா! இறைவன் உன்னைக் காப்பானாக!. இப்போது நீ எனக்குப் புதிய வழியொன்றைக் காட்டித்தந்துவிட்டாய்" என்று கூறினான்.*

*வர்த்தகன் தனக்குத்தானே கூறிக்கொண்டான் : "இதுவே எனக்குப் பொருத்தமான உபதேசம்; நான் இந்த வழியில் (தரீக்காவில்) நடப்பேன். ஏனெனில், இந்தப் பாதையில் வெளிச்சம் ஒளிவிடுகிறது.*

*என் ஆத்மா கிளியைவிட இழிவானதாய் இருப்பதெப்படி? ஆத்மா இத்தகைய நல்லதொரு பாதையில் நடப்பதே அதற்கு நலமானதாகும்."*

### ***ஜனங்களால் மதிக்கப்படுவதாலும், பிரபலமாவதாலும் உண்டாகும் தீங்குகள்***

*உடல் ஒரு கூண்டுபோன்றது. உள்ளே வரவும் வெளியே போகவுமாக இருப்பவர்களின் இடித்துக் கூறல்களால் ஆத்மாவுக்கு அது ஒரு முள்ளாகிவிட்டது.*

*1850. இவன் சொல்கிறான் : "நான் உன் அந்தரங்க நண்பன்" என்று. அவன் சொல்கிறான் : "நான் உன் கூட்டாளி" என்று.*

*இவன் அவனிடம் சொல்கிறான் : "அழகிலும் பிரபலத்திலும், அன்பிலும், தயாளத்திலும் உன்னை மிகைத்தவர் யாருமில்லை" என்று.*

*இவன் அவனிடம் கூறுகிறான் : "இரண்டு உலகங்களுமே உன்னுடையவைதாம்; எங்கள் ஆத்மாக்கள் யாவும் உன் ஆத்மாவின் புல்லுருவிகள்தாம்" என்று.*

*அவன்மீது ஜனங்கள் போதை கொண்டுவிட்டார்கள் என்று கண்டதும் அவனுக்கு அகந்தை உண்டாகி அவன் தன்னைக் கட்டுப்படுத்தும் சக்தியை இழந்து விடுகிறான்.*

*(படுநாசமெனும்) ஆற்று வெள்ளத்தில் ஷைத்தான் இவனையொத்த பல்லாயிரக் கணக்கானவர்களைத் தூக்கி எறிந்திருப்பதை இவன் அறியான்.*

*1855. உலகில் நயவஞ்சகமும், இன்சொல்லும் இனிமையுடையனவாகும். அவற்றில் சிறிதளவே உண்ணவேண்டும்.*

*அதன் நெருப்பு மறைந்தும், அதன் ருஜி வெளிப்படையாயுமுள்ளன. அதன் புகை கடைசியில்தான் வெளியாகிறது.*

*"அந்தப் புகழை நான் எப்படி விழுங்குவது? அவனோ (சம்மானத்தை எதிர்நோக்கி) ஆசையால் பேசுகிறான்; நான் அவன்*

பாதையிலுள்ளேன். (அவன் எதை நாடுகிறான் என்பதை நன்கு காண்கிறேன்)'' என்று சொல்லாதே!

உன்னைப் போற்றித் துதிப்பவன் மட்டும் பகிரங்கமாக உன்னை இகழத் தலைப்படுவானாயின், அந்த இழிசொற்களின் சூட்டால் உன் இதயம் பல நாட்களாக வெந்துகொண்டிருக்குமே!

உன்னிடம் அவன் வைத்திருந்த நம்பிக்கை வீண்விரயமாகி, அதனால் அவன் அப்படித் தூற்றுகிறான் என்பதை நீ அறிந்திருந் தால்கூட -

1860. அதன் எதிரொலி உனக்கு அறிவித்துக்கொண்டே இருக்கிறதே! புகழ் விஷயத்திலும் உனக்கு இதுவே நேருகிறது.

அதன் எதிரொலியும் பல நாட்கள் உன்னுள் தலைதூக்கி நிற்கிறது. அதனால் ஆத்மாவில் அகந்தையும் ஏமாற்றமும் உண்டா கின்றன.

ஆனால், அது வெளியில் தெரிவதில்லை; ஏனெனில், புகழ் இனிமையானதாகும். இகழோ பளிச்சென உடனே வெளியில் தெரிந்துவிடுகிறது. ஏனெனில், அது கசப்பானதாக இருக்கிறது.

குறைகூறல் கசப்பான கியாழம் மாத்திரைகள் போன்றது. அதை நீ விழுங்கியதுமே நீண்டநேரம் தொல்லையையும், வேதனை யையும் உண்டாக்குகிறது.

ஆனால், நீ (புகழெனும்) ஹல்வாவைத் தின்றால் அதன் இனிப்பு தற்காலிகமானதாக இருக்கிறது. மற்றதைப்போல் அது நீடிப்பதில்லை.

1865. அது வெளிப்படையில் நீடிப்பதில்லையாயினும், யதார்த் தத்தில் நீடிக்கிறது. எதிரிடையானது எதையும் அதற்கு எதிரிடை யானதைக் கொண்டு நிதானிக்க வேண்டும்.

சர்க்கரையின் இனிப்பு மறைந்திருந்தபின், சிறிது நேரத்துக்குப் பின் கொப்புளங்களை உண்டாக்கிக் கத்திக்கொண்டு சத்திர சிகிச்சை செய்யவேண்டிய நிலையையே ஏற்படுத்திவிடுகிறது.

கீழான மனம் பல புகழ் மொழிகளை ஏற்றதால் (அகந்தையால்) ஒரு பிர்அவ்ன் ஆகவே ஆக்கப்பட்டுவிட்டது. பணிவுடன் தாழ்ந்து நட; அடக்கி ஆளாதே!

உன்னால் இயன்றவரை அடிமையாக இரு; அரசனாகாதே! அடியைத் தாங்கு; பந்தாக ஆகு; பந்தடிக்கும் மட்டையாக ஆகாதே!

*இன்றேல், உன்னுடைய காம்பீர்யமும், அழகும் உன்னை விட்டகன்றதும் (உன்னைப் புகழ்ந்து பேசிய) அதே நேசர்களால் நீ இகழப்படுவாய்!*

*1870. பித்தலாட்டமாக உன்னைப் போற்றித் துதித்த கோஷ்டியார் இப்போது உன்னைக் கண்டால் பேயன் என்றும் இகழ்வர்.*

*தம் வீட்டு வாயிலில் நீ அடியெடுத்துவைக்கக் கண்டாலே அவர்கள், "உண்மையாகவே செத்துப்போனவன் புதைகுழியிலிருந்து வந்துவிட்டான்" என்று கூக்குரலிடுவர்.*

*அவர்கள் 'எசமான்' என்று கேலியாகப் பேசி இழிவுபடுத்தி உன்னை ஒரு பாலனைப்போல் நடத்துவர்.*

*அவன் இழிவு எனும் தாடியை வளர்த்துக்கொண்டபின் ஷைத்தானும் அவனைத் தேட வெட்கமடைவான்.*

*ஷைத்தான் மனிதனை அணுகுவதே ஏதேனும் விஷமஞ் செய்வதற்குத்ததான். அவன் உன்னை அணுகுவதில்லை; (ஏனெனில்,) நீ தான் ஷைத்தானைவிடக் கெட்டவனாய் இருக்கிறாயே!*

*1875. நீ மனிதனாக இருந்தவரை ஷைத்தான் உன் காலடியில் கிடந்து தன் மதுவை நீ ருசி பார்க்கும்படி வேண்டிக்கொண்டிருந்தான்.*

*நீ ஷைத்தானிய வேலைகளில் ஸ்திரமானதும், ஒன்றுக்கு உதவாத உன்னைக் கண்டால் ஷைத்தானே ஓடி ஒளியத் தலைப் பட்டுவிடுகிறான்.*

*அப்போது அவர்கள் (உன் நண்பர்கள்) உன்னோடு ஒட்டி உறவாடினர்; நீ இப்படியானதும் அவர்கள் யாவரும் உன்னை விட்டு ஓடியே போய்விட்டனர்.*

### "இறைவன் நாடியது நடக்கும்" (மாஷா அல்லாஹுகான) என்ற ஹதீஸின் விளக்கம்

*இந்த வார்த்தைகளையெல்லாம் நாம் பேசிவிட்டோம். ஆனால், (நம்முன் உள்ள மறுமைக்கான பிரயாணத்துக்காக) நம்மை ஆயத்தப்படுத்துவதில் இறைவனின் அருளானுக்கிரஹம் இன்றேல் நம்மால் எதுவும் செய்ய இயலாது.*

*இறைவனுடையவும், அவனுடைய நேயர்களுடையவும் நல்லருளைப் பெறாதவரை ஒருவன் எத்துணைதான் அமரரின் தன்மையுடையவனாய் இருப்பினும் அவன் செயல்களின் பட்டியல் இருண்டதாகவே இருக்கும்.*

1880. இறைவா, சகல தேவைகளையும் பூர்த்தி செய்யும் கருணை யாளா, தனக்கு இணை துணையற்றவனே.

இந்த அளவு நேர்வழிகாட்டலை நீ எங்களுக்கு அருளியுள் ளாய். இன்றுவரை எங்கள் குற்றங் குறைகள் எத்தனையையோ நீ மறைத்துள்ளாய்.

இதுவாற்றானும் நீ எமக்கு அருளிய மெய்ஞான அறிவெனும் துளியை உன் மெய்ஞானக் கடலில் சேர்த்துக் கருணை புரிவாயாக!

என் ஆத்மாவில் ஒரு துளி மெய்ஞானமுள்ளது; அதை இச்சாபாசங்களின் தீமையிலிருந்தும், மண்ணுலகின் கெடுதல்களி லிருந்தும் பாதுகாத்தருள்!

இந்த மண்ணுடல் அதை உண்டுவிடுமுன்னர், இச்சாபாசக் காற்று அதை வற்றச்செய்யுமுன்னர் (நீ அதைப் பாதுகாத்தருள்!)

1885. ஒருகால் அவற்றால் அந்த மெய்ஞானத்துளி உண்ணப் பட்டுவிடுமாயினும், அவற்றிடமிருந்து அவற்றை மீட்டுத் தரும் வலிமையுடையவன் நீ!

காற்றில் மறைந்த, அல்லது மண்ணால் உறிஞ்சப்பட்ட துளி - அந்த நிலையிலும் உன்னுடைய சர்வ சக்தியை விட்டுத் தப்புவது தான் சாத்தியமா?

அது நாஸ்தியாகிவிடினும், நூற்றுக்கணக்கான நாஸ்தி நிலைகளைக் கடந்துவிடினும், நீ குரல் கொடுத்துவிட்டால் அது தலைகுப்புற ஓடோடியும் வருமன்றோ!

லக்ஷக்கணக்கான எதிர்மறைப் பொருள்கள் தம் எதிர் மறையானவற்றை அழித்துக்கொண்டே இருக்கின்றன. எனினும், உன் அழைப்பு (நாஸ்தியானவற்றை அந்த நிலையைவிட்டு) மீண்டும் எழுந்துவரச் செய்துவிடுகிறது.

இறைவா, ஜீவிதமற்ற (நாஸ்தியான) நிலையிலிருந்து ஜீவித மான நிலையை நோக்கி சாரி சாரியாகப் பொருள்கள் வந்து கொண்டே இருக்கின்றன.

1890. குறிப்பாக ஒவ்வோரிரவும் புலனுணர்வுகளும், அறிவும் (தூக்கம் என்ற) ஆழ்ந்த கடலில் மூழ்கி நாஸ்தியான நிலையை அடைகின்றன.

சூரியன் உதயமாகும் தருணம் அந்த இயல்புகள் அந்தக் கடலி லிருந்து மீன்களைப்போல் தமது தலைகளை வெளியே நீட்டு கின்றன.

குளிர்காலத்தில் எண்ணற்ற மரக் கிளைகள் தத்தம் இலை தழைகளை இழந்து மரணக் கடலில் மூழ்கிவிடுகின்றன.

இவ்விதம் தன் பசுமையை இழந்ததுபற்றி கறுப்பு உடை போர்த்தித் துக்கங் கொண்டாடுவதுபோல் காகம் அங்கிருந்து கரைகிறது.

(வசந்தம் வந்ததும்) மீண்டும் சர்வலோக ரக்ஷகன் நாஸ்தியை நோக்கி, "நீ தின்று ஜீரணித்ததை மீண்டும் கொடுத்துவிடு!

1895. ஹே இருண்ட மரணமே, நீ விழுங்கி ஜீரணித்த தருக்கள், கிளைகள், மூலிகைகள், புற்பூண்டுகள் அனைத்தையும் திருப்பிக் கொடு!" என்று உத்தரவிடுகிறான்.

சகோதரா, உன் அழிவை ஒருகணம் நிதானமானதாக்கிச் சிந்தனைசெய்! உன்னுள் ஒவ்வொரு கணமும் குளிர் காலமும், வசந்த காலமும் மாறி மாறி வந்துகொண்டிருப்பதை நோட்டமிடு.

உன் இதயப் பூங்காவில் பச்சைப் பசேல் என்று தண்மையும் புதுமையும் நிறைந்த ரோஜா, மல்லிகை , பிச்சி முதலியவை பூத்துக் குலுங்குவதைப் பார்!

அங்கே இலைகளின் செழுமையால் கிளைகளே தெரியா மலிருப்பதையும், மலர்கள் குவிந்துள்ளதால் பூங்காவும், மாளிகை யுமே மறைக்கப்பட்டுள்ளதையும் காண்!

சம்பூரண ஞானத்தால் வெளிப்படுபவையான இந்த வார்த்தை கள் அந்த ரோஜா, மல்லிகை, பிச்சி முதலியவற்றின் மணத்தைக் காட்டுபவையாகும்.

1900. ரோஜா இல்லாத இடத்தில் ரோஜாவின் சுகந்தத்தை நீ முகர்ந்ததுண்டா? மதுவில்லாத இடத்தில் மது பொங்குவதை நீ கண்டதுண்டா?

இந்த நறுமணம்தான் உன் வழிகாட்டி; உன் பாதையில் உன்னைஅது நடத்திச் செல்லும். அது சுவனபதியையும், கௌதர் எனும் ஆற்றையும் உன்னிடம் கொணரும்.

பார்வையற்ற கண்ணுக்கு நறுமணம் நல் நிவாரணமாகும்; அது கண்ணுக்கு ஒளியுண்டாக்குவது. யாகூப் நபி (அலை) அவர்கள் கண் பார்வை பெற்றதும் (யூஸுப் (அலை) அவர்களின்) வாசனையைப் பெற்றதால்தான்.

கெட்ட வாடை (இவ்வுலகக் கல்வி ஞானம்) கண்களை இருளச் செய்கிறது; யூஸுப் நபியின் நறுமணம் (மெய்ஞானம்) கண்ணை ஒளியுடையதாக்குகிறது.

நீ யூஸுஃப் நபி போன்றில்லாவிடினும், யாகூப் நபி போன்றாவது இரு! அவர்களைப்போல் இறைவனிடம் அழுது கெஞ்சிக் கேள்!

1905. கஜினி நகரின் இந்த மெய்ஞ்ஞானியின் (ஹக்கீம் ஸனாயியின்) மூதுரைக்குச் செவி கொடு; அதன் மூலம் உன் பழைய உடலில் நீ புதுமையடையலாம்.

(அவர்கள் சொல்கிறார்கள்:) "எதையும் பொருட்படுத்தாத தன்மைக்கு ரோஜா மலர்போன்ற வதனமுடைமை வேண்டும். அத்தகைய வதனத்தை அடையப் பெறாதவரை நீ வீணில் சுற்றித் திரியவேண்டாம்!

விகாரமான முகத்தில் இகழ்ச்சி என்பது விகாரமானதாகத் தான் இருக்கும்; பார்வையற்ற கண்ணிலுண்டாகும் கண் வேதனை அதிகமும் கஷ்டமளிப்பதுதான்."

யூஸுஃபின்முன் (அழகு சௌந்தரியன் போல்) பாசாங்கு செய்யாதே; யாகூப் (அலை) அவர்களின் பணிவையும், விசனப் பெருமூச்சையுமன்றி வேறு எதையும் வெளிக்காட்டாதே!

கிளி சுட்டிக் காட்டிய 'மரணம்' என்பதன் தாத்பரியம் தன்னை நாஸ்தியாக்குவதுதான்; பணிவிலும், சத்முயற்சியிலும் உன்னை நீயே நாஸ்தியானவனாக்கிக் கொள்!

1910. (அப்படியாயின்) ஈஸா (அலை) அவர்களுடைய மூச்சு உனக்குப் புத்துயிரூட்டி உன்னை அதைப்போல் பாக்கியமுடையதாகவும், அழகுடையதாகவும் சமைத்துவிடும்.

வசந்தப் பசுமை கடுமையான பாறையைப் போர்த்துவதெப்படி? நீ மண் தரையானால், உன்மீது பல வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கும்.

பல்லாண்டுகளாக நீ இதயம் இளகாத பாறையாக இருந்தாகிவிட்டது; இனியேனும், ஒரு சோதனைக்காகவேனும், மண்ணாக ஆகிப்பார்!

## ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள் காலத்தில் வாழ்ந்த தம்பூராக்காரன் கதை

உமர் (ரலி) அவர்கள் காலத்தில் வாழ்ந்த சிறந்த, புகழ் பெற்ற தம்பூராக்காரனைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

அவன் குரலின்முன் புல்புலின் கீதமெல்லாம் வெட்கிவிடும். அவனுடைய அற்புதமான குரலால் பரவசம் பொங்கி வழியும்.

*1915. கூட்டங்களிலும், சபைகளிலும் அவன் மூச்சே ஓர் அணி கலனாய் விளங்கிற்று; அவன் குரல் செத்தவர்களையும் எழுப்பு வதாய் இருந்தது.*

*மரணித்த உயிர்களை தத்தம் உடலில் புகுந்து எழச் செய்யும் குரலுடைய இஸ்ராபீல் (அலை) அவர்களையொத்திருந்தான் அவன்.*

*அல்லது, அவனை இஸ்ராபீல் (அலை) அவர்களுக்குப் பக்க வாத்தியம் ஊதுபவன் என்றும் சொல்லலாம்; அவன் குரலினிமை யால் யானைகூடச் சிறகு கட்டிப் பறந்துவிடும்.*

*ஒரு நாளில் இஸ்ராபீல் (அலை) தங்கள் கொம்பின் நாதத்தை எழுப்பியதும், நூறாண்டுகளாக மடிந்து மக்கிய மனிதன்கூட எழுந்துவிடுவான்.*

*நபிமார்களிடமும் இத்தகைய இனிய (ஆத்மீகக்) குரலுண்டு; இறைவனை நாடுவோர்க்கு அவர்களிடமிருந்து புத்துயிர் வரு வதுண்டு.*

*1920. இந்தக் குரலை ஜடதத்துவக் காது கேட்க முடியாது; அது அநீதிகளால் மாசடைந்துள்ளது.*

*ஜின்னு, பரிகளின் தீங்குரலை மனிதன் கேட்க முடிவதில்லை; ஏனெனில், அவற்றின் மர்மங்களை இவன் அறிந்துகொள்ள வில்லை.*

*உண்மையில் பரிகளின் குரல் இந்த ஜடதத்துவ உலகைச் சேர்ந்ததுதான்; (அப்படியும் மனிதனுடைய ஜடதத்துவக் காது களுக்கு அவை எட்டுவதில்லை. ஆனால்,) மனிதனுடையவும், பரிவுடையவும் குரல்களைவிட இதயத்தின் குரல் உன்னதமானது.*

*காரணம், பரியும் மனிதனுமே கைதிகள்தாம்; இந்த அறியாமை எனும் சிறையில் அவர்கள் அடைபட்டுள்ளனர்.*

*'கருணையாளன்' (அர்- ரஹ்மான்) என்ற திரு குர்ஆன் அத்தியாயத்தில், 'ஜின்னு, மனுக் குலத்தவரே' என்று வரும் வசனத்தை ஓதிப்பாருங்கள்; 'இவற்றில் எதை நீங்கள் பொய்யென மறுப்பீர்கள்?'[1] என்பதன் தாத்பரியத்தை நோட்டமிடுங்கள்.*

*1925. நாதாக்களின் அகக்குரல் முதலில் சொல்வது இதுதான்: "நாஸ்தியின் ('லா'வின்) பரமாணுக்களே!*

*உஷாராகுங்கள், இல்லாமையாகிய 'லா'வைவிட்டு உங்கள் தலையை உயர்த்துங்கள். இந்தப் பிரமையையும், வீண் கற்பனை யையும் ஒதுக்கித் தள்ளுங்கள்.*

---

*1. பார்க்க : குர்ஆன் 55 : 33*

*உற்பத்தி, அழிவு என்ற உலகில் (ஜடதத்துவ உலகில்) நாற்ற மடித்துக்கொண்டிருந்த உங்கள் அனைவருக்கும், உங்கள் ஆத்மாக் கள் சிறிதும் வளரவோ, பிறக்கவோகூட இல்லை."*

*அந்த (மெய்ஞான) கீதம் பற்றி நான் சிறிது விவரிப்பேனாயின், ஆத்மாக்கள் உடலெனும் தமது புதைகுழிகளிலிருந்து (புத்துயிர் பெற்றுத்) தலையை வெளியில் நீட்டும்.*

*நன்றாக (ஆத்மீகக் காது சாய்த்துக் கேள்; அந்தக் கீதம் அதி தொலைவிலில்லை. ஆனால், அதை உன்னிடம் தெரிவிக்க எனக்கு அனுமதியில்லை.*

*1930. எச்சரிக்கை, ஞானநாதர்கள்தாம் இன்றைய இஸ்ராபீல் களாவர்: அவர்களிடமிருந்தே ஜீவனற்றவர்களுக்கு உயிரும், புதுமையும் வருகின்றன.*

*அவர்கள் குரல் கேட்டதும் உடலெனும் புதைகுழியிலிருந்து ஆத்மாக்கள் துள்ளிக் குதித்து அணிவகுத்துவிடும்.*

*இவ்விதம் விழிப்படைந்த ஆத்மாக்களில் ஒன்றையுடையவன் சொல்வான்: "(நாதாக்களின்) இந்தக்குரல் மற்றக் குரல்களை விட்டும் முற்றும் மாறுபட்டதாகவன்றோ இருக்கிறது! (மரணித் ததைப்) புத்துயிர் செய்ய வைப்பது இறைவன் குரலின் வேலை யல்லவா!*

*நாங்கள் செத்து, மக்கிப்போய்விட்டோம்; இறைவனின் குரல் வந்தது; எழுந்துவிட்டோம்" என்று.*

*இறைவன் குரல் திரையுடனிருப்பினும் சரி, திரையில்லாதிருப் பினும் சரி அது தன்னிடமிருந்து மரியம் (அலை) அவர்கள்மீது சொரிந்ததை மடிந்து மக்கிய ஆத்மாக்கள்மீதும் சொரியக் கூடிய தாகும்.*

*1935. உடலுள் இதயம் செத்து நாற்றமெடுத்துவிட்ட நிலை யிலுள்ளவர்களே, நேயன் குரல் கேட்டாவது நாஸ்தியற்ற நிலையை விட்டு ஜீவன் பெற்றவர்களாகுங்கள்.*

*அது (இறைவனின்) நல்லடியாரின் தொண்டையிலிருந்து வெளிவருவதாயினும்கூட அது அரசனின் (இறைவனின்) குரல்தான் என்பதில் அணுவளவும் சந்தேகமில்லை.*

*இறைவன் தன் நல்லடியார்களான ஞான நாதர்களை நோக்கிக் கூறுகிறான் : "நானே உன் நாவும் உன் கண்ணுமாவேன்; உன் புலன் களுமாவேன்; உன் மகிழ்வும் கோபமுமாவேன்.*

'என்னால் அவன் கேட்கிறான்; என்னால் அவன் பார்க்கிறான்' என்று யாரைப்பற்றி நான் அருளினேனோ அவன் நீதான். (தெய்வீக நல்லுணர்வே நீதான். 'தெய்வ) நல்லுணர்வைப் பெற்றுள்ளவன் நீயே' என்பதன் தாத்பரியம்தான் யாது?

"நீ பிரமிப்பின் மூலம் 'இறைவனுக்குச் சொந்தமான அவன்' ஆக ஆகிவிட்டதால். நான் உன்னுடையவன் ஆகவும் ஆகி விட்டேன். ஏனெனில் 'இறைவன் அவனுக்கு உரியவன்'.

1940. "சிலவேளைகளில் 'அது நீதான்' என்றும் வேறுசில வேளைகளில், 'அது நான்தான்' என்றும் நான் உன்னிடம் சொல் கிறேன். நான் எதைச் சொன்னாலும், சகலவற்றுக்கும் ஒளியூட்டும் பகலவனாக நான் இருக்கிறேன் என்பதையுணர்.

ஒரு (தெய்வ வசனம் என்ற) மூச்சின்மூலம் எந்த மாடப் பிறையிலிருந்து நான் ஒளிதந்தாலும், அது உலகம் முழுவதிலுமுள்ள சிக்கல்களை உடைத்தெறிந்துவிடும்.

மண்ணுலகச் சூரியனால் அகற்ற முடியாத இருளையெல்லாம் என் மூச்சின்மூலம் ஒளியுள்ளதாக ஆக்குகிறேன்."

ஆதம் (அலை) அவர்களுக்கு அவன் தன் சொந்த உள்ளமையில் நின்று, (தெய்வத்) திருநாமங்களை அறிவித்துக் கொடுத்தான். மற்றோர்க்கு அவன் ஆதம் (அலை) அவர்கள்மூலம் தன் திருநாமங் களை வெளிப்படச் செய்தான்.

அவன் ஒளியை நீ ஆதம் (அலை) அவர்களிடமிருந்தோ அல்லது அவனிடமிருந்து நேரடியாகவோ பெற்றுக்கொள்கிறாய். மதுவை ஜாடியிலிருந்து நேரடியாகவோ கிண்ணத்தில் ஊற்றப் பட்டநிலையிலோ பருகலாம்.

1945. ஏனெனில் இந்தக் கிண்ணத்துக்கும், அந்த ஜாடிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. அந்தப் பாக்கியம் பொருந்திய கிண்ணம் உன்னைப்போல் ஜாடியை விட்டுப் பிரிந்திருப்பதில்லை.

முஸ்தபா நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: "என்னைக் கண்டவனும், என்னைக் கண்டவனைக் கண்டவனும் பாக்கிய முடையவர்களாவார்கள்" என்று.

ஒரு விளக்கு ஒரு மெழுகுதிரியிலிருந்து தீபமேற்றப்பட்டதும், அந்த விளக்கைக் காண்போரெல்லாம், மெழுகுதிரியையும் காண்கின்றனர்.

இவ்விதம் விளக்கேற்றுதல், ஒன்றிலிருந்து ஒன்றுக்கு என்று நூறுவிளக்குகள்வரை ஏற்றப்படினும், கடைசியில் ஏற்றப்பட்ட

விளக்கைக் காண்பது முதலில் தீபமேற்றிய மெழுகுதிரியையே காண்பதாகும்.

கடைசியாக ஏற்றப்பட்ட விளக்கின் ஒளியிலிருந்து பயனடையினும், முதலில் தீபமேற்றிய மெழுகுதிரியிலிருந்து பயனடையினும் இரண்டும் ஒன்றுதான்.

1950. கடைசி விளக்கின் (ஞானியரின்) ஒளியைப் பார்! அல்லது, அதற்கு முன்பிருந்த (நாதாக்கள், நபிமார்களாகிய) விளக்குகளுக்கு ஒளியேற்றிய (இறைவன் ஒளியான) மெழுகுதிரியின் ஒளியை நோட்டமிடு!

### "உங்கள் இறைவன் உங்கள் நாட்களில் சில மூச்சுக்களை வெளியாக்குகிறான் : அவற்றைப் பெறத் தெண்டியுங்கள்" என்ற ஹதீஸின் விளக்கம்

நபிபெருமான் (ஸல்) அவர்கள் அருளினார்கள். "இந்த நாட்களில் இறைவனின் மூச்சுக்கள் நிலவுகின்றன.

இவற்றின் விஷயத்தில் காதும், மனமும் கொண்டு கருத்துடையவர்களாகி, அந்த மூச்சுக்களைப் பிடிக்க முயலுங்கள்" என்று.

தெய்வ மூச்சு வந்தது; உங்களைக் கண்டது; போய்விட்டது; அது விரும்பியவர்களுக்கு ஜீவனளித்துவிட்டுப் போய்விட்டது.

இன்னொரு மூச்சு வந்தது; தோழா, இதையாவது நழுவவிடாமல் எச்சரிக்கையுடன் நடந்துகொள்!

1955. ஆத்மா தன்னிலுள்ள நெருப்பை அணைப்பதற்கான ஆதாரத்தைக் கண்டது. மாண்டுபோன ஆத்மா தன்னுள் (அமரத்துவமான ஜீவனின்) ஆட்ட அசைவுகளை உணர்ந்தது.

இது சுவன விருக்ஷத்தின் பசுமையாகும்; இது பிராணிகளின் ஆட்டம் அசைவுபோன்றதன்று.

இது மண்மீதும் விண்மீதும் படுமாயின் அவை (பயத்தால்) உருகிப்போகும்.

உண்மையாகவே, இந்த எல்லையிலா மூச்சினாலேயே அவை பயமுடையவையாய் விளங்குகின்றன; (இறைவன் 'ஏற்கிறீர்களா?' என்று அவற்றை நோக்கிக் கேட்ட அமானிதத்தை) *'அவை அதை ஏற்க மறுத்துவிட்டன'*[1] என்ற திருமறை வசனத்தைப் படித்துப் பாருங்கள்!

---

1. பார்க்க : குர்ஆன் 33 : 72

இன்றேல், ஒருகால் மலையின் இதயம் இரத்தமாக ஆகாமலிருந்திருப்பின், 'அதிலிருந்து அவை பின்வாங்கிவிட்டன''[1] என்று (திருமறையில்) சொல்லப்பட்டுள்ளதன் அர்த்தம்தான் யாது?

1960. நேற்றிரவு இந்த மூச்சு வேறு தோற்றத்தில் என்முன் காட்சி தந்தது; ஆனால், ஒரு பிடி உணவு குறுக்கிட்டு (அதைக் கைப்பற்றும்) வழியை அடைத்துக்கொண்டது.

ஒரு கவள உணவுக்காக ஒரு லுக்மானே பிணை நிற்க நேர்ந்தது. ஒரு கவள உணவே, தொலைந்துபோ, இது லுக்மானின் நேரமாகும்.

ஒரு கவள உணவின் ஆசையால் இந்த (சதை எனும்) முள்தான் என்னமாய்க் குத்திக்கொண்டிருக்கிறது! லுக்மானின் காலிலிருந்து முள்ளைப் பிடுங்கி எறி!

(உண்மையில்) அவர் காலில் முள் தைக்கவுமில்லை, முள்ளின் நிழல்தானுமில்லை. உன்னுடைய கோணல் பார்வையால் நீ அதை நிதானிக்காமலிருக்கிறாய்.

முள் என்பது எது தெரியுமா? உன் பொறாமை காரணமாகவும், கண்மூடித்தனம் காரணமாகவும் நீ பேரீச்சை என்று எண்ணிக் கொண்டிருக்கிறாயே அதுதான் அந்த முள்.

1965. லுக்மானின் ஆத்மாவே இறைவனின் ரோஜாத் தோட்டமாக இருக்கும்போது, அவர்கள் ஜீவனின் பாதம் முள்ளால் பாதிக்கப்படுவதெப்படி?

இப்படி முள்ளைத் தின்னும் வாழ்வு ஒட்டகத்துடையது. இந்த ஒட்டகத்தின்மீது முஸ்தபா நபி (ஸல்) அவர்களுக்குப் பிறந்த ஒருவர் ஏறிச் சவாரிசெய்கிறார்.

ஒட்டகமே, உன் முதுகின்மீது ரோஜா மலர்கள் (மூட்டை மூட்டையாக) ஏற்றப்பட்டுள்ளன; அவற்றின் நறுமணத்தால் உன்னுள் எத்தனையோ (இறை) தியான மாலைகள் உருவாகின்றன.

உன் மனப்போக்கோ முட்புதரையும், மணலையும் நாடுவதாயுள்ளது; பயனற்ற முட்புதர்களிலிருந்து எந்த ரோஜாவை நீ சேகரிக்கப்போகிறாய்!

இந்தத் தோட்டத்தில் இடம் இடமாக அலைந்து திரிபவனே, எத்துணை நாட்கள்தான், "ரோஜாத் தோட்டம் எங்குள்ளது?" என்று விசாரித்தலைவாய்!

1970. உன் காலில் தைத்துள்ள இந்த முள்ளை அகற்றாதவரை உன் கண் இருண்டதாய்த்தானிருக்கும்; (அந்த நிலையில்) நீ எப்படி வெளியில் நடமாடுவாய்?

---

1. பார்க்க : குர்ஆன் 33 : 72

இவ்வுலகினுள்ளேயே அடக்கமாகாதவனான மனிதன் கேவலம் முள்ளினால் மறையுண்டவனாகிறான்.

சாந்தியையுண்டாக்குவதற்காகவே முஸ்தபா நபி (ஸல்) அவர்கள் இவ்வுலகில் அவதரித்தார்கள்; அவர்கள், "ஹுமைராவே, என்னிடம் பேசு! என்னிடம் பேசு! என்று சொல்வதுண்டு.

ஹுமைராவே, குதிரை லாடத்தை நெருப்பில் வையுங்கள்; அந்த லாடத்தால் இந்த மலை (காதலால்) வைடூரியங்களாக ஜொலிக்கட்டும்!

இந்த 'ஹுமைரா' என்பது பெண்பால் பெயர்; 'ஜீவன்' என்ற பதமும் பெண்பால்தான் என்பர் அரபிகள்.

1975. ஆனால், ஜீவன் பெண்பாலாய் இருப்பதால் கெடுதலொன்றுமில்லை. ஜீவனுக்கு ஆணுடனோ, பெண்ணுடனோ தொடர்பு எதுவுமில்லை.

அது பெண்ணினம், ஆணினம் இரண்டுக்கும் அப்பாற்பட்டது. உலர்ந்த தன்மையும், ஈரமான தன்மையும் கலந்த ஜீவன் இதுவன்று.

உணவுன்பதால் பெருத்துவிடக்கூடிய ஜீவன் இதுவன்று; சில சமயம் இதுபோன்றும், வேறு சில சமயம் அது போன்றும் இருக்கக் கூடிய ஜீவன் இதுவன்று.

இது இனிமையானதைச் செய்யும்; தானே இனிமையானது; இனிமையின் சாராம்சமானது. இறைவனையன்றி மற்றதைக் கொள்வோனே, (அக) இனிமையின்றி வேறு இனிமை இல்லை என்பதறி!

சர்க்கரையால் நீ இனிப்புடையவனாயின், ஒருகால் ஏதாவது ஒரு சமயத்தில் அந்தச் சர்க்கரை முழுவதுமே உன்னைவிட்டு மறைந்துபோகலாம்.

1980. ஆனால், மெய்விஸ்வாசத்தால் உண்டான பயனாய் நீ சர்க்கரையுடையவனாயின், அப்போது சர்க்கரை சர்க்கரையை விட்டுப் பிரிவதெப்படி?

(தெய்வீகக்) காதலன் தன் அகத்தேயே பரிசுத்தமான மதுவால் ஊட்டமளித்துக்கொள்வானாயின், அந்த நிலையில் தோழா, அறிவு தன்னை இழந்ததாய் - நிர்க்கதியானதாய்ப் போய்விடும்.

பகுத்தறிவு காதலை மறுப்பதாகும்; ஆயினும், அது காதலின் அந்தரங்க ஆலோசகன்போல் நடித்துக்கொள்கிறது.

அது விஷயமறிந்தது; சாதுரியமுடையது. ஆனால் அது சுய ஜீவிதமுடையது. அமரராயினும் அது (இறைவனில்) நாஸ்தியான தாக ஆகாவிடின் அது ஷைத்தான்தான்.

சொல்லிலும் செயலிலுமே பகுத்தறிவு நம் நண்பன்தான். ஆனால், அக இன்பம் (பரவசநிலை) சம்பந்தப்பட்டவரையோ அது பொருட்டானதே இல்லை.

1985. அது ஒரு பொருட்டானதாக இல்லாமல் போன காரணம் ஜீவிதத்தைவிட்டு மறைந்து, அது ஜீவிதமற்றதாக ஆனதுதான். தானாகவே முன்வந்து அது தன்னை ஒரு பொருட்டற்றதாய் ஆக்காததால் (அது அவ்விதம் ஆகித்தீர வேண்டியது அவசிய மாதலால்) தானாக முன்வராமலே அது (மற்றும் பல பொருள் களைப் போல்) ஒரு பொருட்டற்ற நிலையை அடைந்தது.

'ஜீவன்' பரிபூரணமானது; அதன் அழைப்பும் பரிபூரண மானது. முஸ்தபா நபி (ஸல்) சொல்வதுண்டு: "பிலாலே, நம் மனம் குளிர்ச்சியடையச் செய்யும்.

பிலாலே, உம் இதயத்துள் நாம் மூச்சுவிட்ட அந்த மூச்சிலிருந்து உம் இன் குரலை எழுப்பும் (தொழுகை அழைப்புக்கான 'அதான்' ஒலி எழுப்பும்!

அந்தத் தீங்குரலால் முஸ்தபா நபி (ஸல்) தம்மை மறந்தவர் களானார்கள்; இரவின் பிற்பகுதியில் (தங்கியிருந்த இடத்தில்) அதனால் அவர்கள் தொழுகை தப்பிவிட்டது.

1990. அன்று அந்தப் பாக்கியமான தூக்கத்திலிருந்து அதி காலைத் தொழுகை நேரம் மறைந்து சூரியன் உதிக்கும் வரைஅவர்கள் தலையை உயர்த்தவில்லை.

அந்த (இரவின்) பின்னேரத்தில் மணமகளின் சந்நிதியில் அவள் கரங்களை முத்தமிடும் பேற்றைப் பெற்றார்கள்.

காதலும், ஜீவனும் ஆகிய இரண்டுமே மறைந்து, திரையிடப் பட்டவையாய் இருந்தன. அவனை (இறைவனை) நான் 'மணமகள்' என்பதற்காக என்மீது குறைகூற வேண்டாம்!

ஒருகண நேரமேனும் எனக்கு அவன் அவகாசமளித்திருப்பின், காதலியின் அதிருப்திக்குப் பயந்தாவது நான் வாயை மூடிக் கொண்டிருந்திருப்பேன்.

ஆனால், அவனோ, "மேலே சொல்லு! அது குற்றமன்று; மறைவான உலகின் (தெய்வீக) விதிவசத்தின் தேவையில் சேர்ந்தது தான் அது" என்று தூண்டிக்கொண்டே இருக்கிறான்.

1995. யாவிலும் குறையையே காண்பவன்மீதுதான் குறையுள்ளது; மறைவான தன் பரிசுத்தமான ஜீவன் குறை காண்பதெப்படி?

அறியாமை நிறைந்த சிருஷ்டிதான் குறையுடன் தொடர்புடையது; அருள்மாரி சொரியும் அருளாளனுடன் அதற்குத் தொடர்பில்லை.

விஸ்வாசமற்ற தன்மைகூட சிருஷ்டியாளன் சம்பந்தப்பட்டவரை அறிவுதான்; சிருஷ்டிகளான நாம் சம்பந்தப்பட்டவரை அது கேடுகெட்ட ஒன்றாகும்.

நூறு நன்மைகளுடன் ஒரு குறையிருப்பின் அது கரும்பிலுள்ள சக்கையைப் போன்றாகிவிடுகிறது.

(சக்கையும் சாறுமான நிலையில்தான்) இரண்டும் சேர்த்தே மதிப்பிடப்படுகின்றன. ஏனெனில், அவை இரண்டும் உயிரும் உடலும்போல் சேர்ந்தே இருக்கின்றன.

2000. "ஞானநாதர்களின் சடலங்கள் அவர்களுடைய ஆத்மாக்களைப்போல் பரிசுத்தமானவையாகவே இருக்கின்றன" என்ற மகான்களின் வாக்கு வெறும் பேச்சன்று.

அவர்களுடைய பேச்சும், ஆத்மாவும், உருவமும் - யாவுமே புறத்தே எந்தத் தடமுமில்லாத பரிபூரண ஜீவன்களாகவே உள்ளன.

அவர்களைப் பகைமையுடன் நோட்டமிடுபவன் ஜீவன் வெறும் சடலம்தான்; 'நர்த்' என்ற விளையாட்டிலுள்ள கூட்டல் அடையாளத்தைப்போல் அவன் பெயரளவில் உள்ளவன்தான்.

அவன் (ஞானியரின் பகைவன்) உடல் மண்ணினுள் புதைந்து மண்ணாகப் போய்விட்டது. அவர்களின் (ஞானியரின்) சிரேஷ்ட மேனியோ உப்பினுள் சென்று முற்றும் பரிசுத்தமானதாக ஆகிவிட்டது.

இந்த (ஆத்மீக) உப்பின்மூலம் மற்ற யாரையும்விட அதிகமும் பரிசுத்தமானவர்கள் நபிபெருமானார்தாம், உப்பிடப்பட்ட (இனிய மொழி படைத்த) யாவரிலும் சிறந்த மொழியுடையவர்கள் அவர்கள்.

2005. அந்த உப்பு அவர்கள் விட்டுச்சென்ற செல்வத்தில் இருக்கிறது. அவர்களுடைய அந்த வாரிஸ் உன்னோடேயேயுள்ளார். அவரைத் தேடி அடை!

அவர் (நபி பெருமானாரின் ஆத்மீக வாரிஸானவர்) உன் முன்னாலேயே அமர்ந்திருக்கிறார்; ஆனால், உன்முன் என்பது

*எங்கேயுள்ளது? அவர் உனக்கு முன்பக்கத்தில்தான் இருக்கிறார்; ஆனால், முன் என்பதை எண்ணிப் பார்க்கும் ஆத்மா வேண்டுமே! (அதை உன்னிடம் காணோமே!).*

*உனக்கு ஒரு 'முன்னாலும்' ஒரு 'பின்னாலும்' உண்டு என்று எண்ணிக்கொள்வாயாயின் நீ உடலுடன் கட்டிப் போடப்பட்டவன் தான்; உயிரற்றவன்தான்.*

*'மேலே - கீழே' 'முன்னால் - பின்னால்' என்பதெல்லாம் உடலுடன் தொடர்புள்ளவைதாம்; ஒளிபொருந்திய ஜீவனுக்குத் திசை கிடையாது. (இத்துடன் அது கட்டுப்பட்டதன்று.)*

*அரசனின் பரிசுத்த ஒளியின் உதவியால் உன் (அகப்) பார்வையைத் திறந்துகொள்! கண்பார்வை மங்கிய ஒருவனைப்போல் நீயும்,*

*2010. சுக துக்கங்களை அனுபவிக்கும் இந்த உடல் மட்டுமே நீ என்று கற்பனை செய்துகொள்ளாதே! நீ உண்மையில் நாஸ்தியானவன்; நாஸ்தியானதற்கு 'முன்னால்' 'பின்னால்' என்பதெல்லாம் ஏது?*

*இது மழையுள்ள நாள்; இரவுவரை தொடர்ந்து பிரயாணஞ் செய்! - இந்த (மண்ணுலக) மழையால் அன்று, இறைவனின் (காருண்ய) மழையால் தூண்டப்பட்டவனாக மேலே நட!*

# கிதாபுல் மஸ்னவீ

## விளக்கவுரை

1. தன்னை அறிந்த (மெய்ஞானக்) காதலர்கள் தமது (தெய்வக்) காதலியிடமிருந்து பிரிய நேர்ந்தது பற்றி முறையிடுகின்றனர். அவளுடைய கொடுமைக்காக அவளைக் குறை கூறுகின்றனர். மெய்ஞானியரின் முறையீடு யதார்த்தத்தில் இறைவனை அடைய அவர்கள் கொண்டுள்ள எல்லையற்ற ஏக்கத்தின் கதையாகவே திகழ்கிறது. இதை வெளியிடுவதற்கான உதிப்பையருளுபவனும் இறைவனேதான். மெய்நிலைகண்ட ஞானியர் தம்மை மறந்த நிலையிலாகும் போது அழுவதும், புலம்புவதும் இயல்புதான்.

புல்லாங்குழல் உண்மையில் சம்பூரண ஞானியரின் ஆத்மாவையே குறிக்கிறது. அவர்கள் சதாவும் இறைவனுடைய சந்நிதியை அடைய வேண்டும் என்பதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளனர்.

மௌலானா ரூமிக்குப் புல்லாங்குழல் மிகவும் பிரியமானதாகும். அவர்களுடைய ஆத்மஞான வழிகாட்டுதலில் புல்லாங்குழலிசைக்கு இடம் தந்துள்ளது, இந்த அடிப்படை உண்மையை அவர்களுடைய சீடர்கள் சதாவும் உணர்ந்தவர்களாய் - அவன் சந்நிதியை அடைவதையே தங்கள் லக்ஷியமாகக் கொள்வதற்குத் தான். இந்த நூலிலும், அவர்களுடைய திவான்களிலும் பல இடங்களில் குழலை அவர்கள் பிரஸ்தாபிக்கிறார்கள்.

2. தன் யதார்த்தமான இடமான சுத்த உள்ளமையினதும், பரிபூரண ஏகத்துவத்தினதும் பரவெளியிலிருந்து (ஆத்மீக உலகிலிருந்து) பிரிக்கப்பட்டதால், மீண்டும் அதை அடைய வேண்டும் என்று தன்னை அறிந்துகொண்ட ஆத்மா ஏங்கித் தவிக்கிறது.

3 - 6 சம்பூரண மனிதர் (இன்ஸானெ காமீல்) இவ்வுலகில் அந்நியர் போன்றிருக்கிறார். அவர் தம் துயரையோ, அனுபவங்களையோ சாதாரணமானவர்கள் புரியும்படி சொல்ல இயலவில்லை; அவரைப் போன்ற சம்பூரணமான மெய்ஞானி ஒருவர்தான் அதை உணர முடியும். அவர் சகல வகைப்பட்ட மக்களோடும் உரையாடுகிறார். ஆனால், தமக்குத் தேவையான பரிவையும், தம் நிலையை உணரும் ஆற்றலையும் அவர்களிடம் காண முடியவில்லை. இதில் ஸூபியாக்கள் கூறும் 'மனிதனின் இரக்கம்' (நுஜூல்) பற்றிய தத்துவார்த்தம் பொதிந்துள்ளது. அதாவது, இந்தப் பிரபஞ்சம் இறைவனிடமிருந்து பல படித்தரங்களில் வெளியாகியுள்ளது. யதார்த்த உண்மை(தாத்தெ ஹகீகத்)யிலிருந்து அடுத்தடுத்த படித்தரங்கள் ஒவ்வொன்றும் தமக்கு மேலுள்ளதைப் பிரதிபலிப்பதாயுள்ளன. இவ்விதம் யதார்த்த உண்மையைவிட்டுப் பல படித்தரங்களுக்கு அப்பாலுள்ளவை அதைவிட்டு அதிகமும்

இதற்கான முதல் வேலை இம்மையின் பந்தபாசங்களை முற்றும் துறந்து விடுவதுதான். ஆத்மத் தந்தையான குருநாதர் தன் சீடனான சாதகனை 'மகனே' என்று அழைப்பதுதான் முறை. "சாதகனுக்கும் அவன் குருநாதருக்கும் இடையிலுள்ள தெய்வீகத் தொடர்பு காரணமாக இயற்கையில் மகன் தந்தையின் ஒரு பாகமாக இருப்பது போல, சாதகன் குருநாதரின் ஒரு பகுதியாக ஆகிவிடுகிறான்." (ஷிஹாபுத்தீன் சுஹ்ரவர்தீயின் 'அவாரிபுல் மஆரிப்') சாதகன் தன் குருநாதரிடம் பயிற்சி பெறும் காலத்தைப் பாலகன் தாயிடம் பால் குடிக்கும் பருவத்துக்கு ஒப்பிடுவதுண்டு.

20. ஒவ்வொருவனுக்கும் இறைவன் விதித்துள்ள அன்றாட உணவுக்கு (ரிஜ்குக்கு) அதிகமாகவோ, குறைவாகவோ அவனுக்குக் கிடைப்பதில்லை. எனவே, கிடைப்பது கொண்டு திருப்தியடைதல் தான் அறிவுடைமையாகும்.

21. தன்னுள் மழைத்துளி விழுந்ததும் வாயை மூடிக்கொண்டு தண்ணீரின் அடிக்குச் சென்றுவிடும் சிப்பிதான் முத்துடையதா கிறது. இதுபோல் கிடைப்பது கொண்டு திருப்தியடைபவன் சிறப் படைவான்.

22. தெய்வக் காதலின் பரவசம்தான், ஆத்மாவைப் பொதிந் துள்ள தானெனும் அகந்தையை அகற்ற முடியும்.

24. தத்துவஞானி பிளேட்டோவும், கேலனும் யூனான் என்ற கிரேக்க நாட்டு வைத்திய வல்லுநர்களுமாவர்.

25 - 26. நபி பெருமான் (ஸல்) அவர்கள் விண்ணுலக யாத்திரை (மிஃராஜ்) சென்று வந்ததையும், ஈஸா (அலை) அவர்கள் வானுலகுக்கு உயர்த்தப்பட்டதையும் குறிப்பிடுகிறார்கள். 25-ஆம் பாடலின் பிற்பகுதியும், அடுத்த பாடலும் சீனா மலைமீது அல்லாஹுத்தஆலாவின் சுடர்கள் (தஜல்லி) பாய்ந்தபோது அது சாம்பலானதைக் குறிப்பிடுகின்றன. மூஸா (அலை) அவர்கள் இறைவனைக் காண நாடியபோது, அவர்கள் அவ்விதம் காண இயலாது என்றும், தன் சுடர்களின் சக்தியை சீனா மலை தாங்கு கிறதா என்று பார்க்கும்படியும், அவ்விதம் அது தாங்குமாயின் மூஸா (அலை) அவர்களும் தன்னைக் காண முடியும் என்றும் கூறி இறைவன் தன் சுடர்களை சீனா மலைமீது பாய்ச்சினான். உடனே அந்த மலை எரிந்து சாம்பலாகிவிட்டது. மூஸா (அலை) மயங்கி விழுந்துவிட்டார்கள். (திருகுர்ஆன் அத். 7; வசனம் 143 பார்க்க.) மெய்ஞ்ஞானியரின் சுபாவச் சேஷ்டைகள் என்ற 'மலை' சாம்பலா னால் அன்றி அவன் தரிசனம் என்ற சிரேஷ்டமான பேற்றை அவர்கள் பெற இயலாது என்பதே இதன் தத்துவார்த்தமாகும்.

27 - 28. மூன்றாம், பதினான்காம் பாடல்களின் கருத்தை ஒட்டியவை.

30. தனக்கும் உள்ளமையுண்டு என்ற காதலனின் பிரமை ஒரு திரையாகும். அதுவே அவனைத் தெய்வக் காதலியிடமிருந்து பிரிக்கிறது. மெய்ஞான ஐக்கியத்தில்தான் இந்த மனப் பிரமை மறைந்து, சுத்த பரிபூரணமானவனின் ஏகமான தன்மை தெளிவு படும்.

31. இறைவன்மீது உண்டாகும் காதல் இறைவனிடமிருந்தே தொடங்குகிறது; அவன் அநுக்கிரஹத்தால்தான் அது உண்டா கிறது. தன் அன்பர்களிடம் அவனுக்கு அக்கறையில்லாதபோது, தன் அநுக்கிரஹத்தை அவன் நிறுத்திக்கொள்கிறான். அதன் பயனாய் அவர்கள் தம்மைவிட்டுத் தப்ப இயலாதவர்களாய் உழல்கின்றனர்.

32. சகல மெய்நிலை அறிவுக்கும் மூலஸ்தானம் அக ஒளியா கவே இருக்கிறது. எனவேதான், நபிபெருமானாரும், "உண்மையான மெய்விஸ்வாசியின் பார்வையைப்பற்றி எச்சரிக்கையாய் இரு; ஏனெனில், அவன் அல்லாஹ்வின் ஒளியின் உதவியால் பார்ப்பவனா வான்" என்று அருளியுள்ளார்கள்.

33 - 34. தமக்கு உதிப்பாக்கப்பட்ட மர்மங்களைப் பிரகடனப் படுத்தும்படி காதல் மௌலானா அவர்களைத் தூண்டிவிட்டது. முகம் பார்க்கும் கண்ணாடியில் பிரதிபிம்பம் விழுவதுபோல இந்த மர்மங்கள் பரிசுத்தமான இதயங்களில் உதிப்பாகின்றன. தன்னகத் தேயுள்ள தெய்வீகக் குணங்களையும் கருத்துக்களையும் இதயம் பிரதிபலிக்கத் தவறுவானேன்? காரணம், அது இம்மையின் பாசங் களாலும், பாவத்தாலும், தான் என்னும் (நப்ஸின்) அகங்காரத் தாலும் மாசுண்டுபோய் இருப்பதுதான். இந்த மாசு அகற்றப் படுவதற்குத்தான் மெய்ஞான வழிகாட்டி (காமிலான குரு) ஒருவருடைய உதவி அவசியமாயுள்ளது. அவர் காட்டும் வழியில் நின்று சதாவும் அல்லாஹுத்தஆலாவைப் பஜிப்பதன்மூலம் (திக்று செய்வதன் மூலம்) இந்த மாசுகளை அகற்றி இதயத்தை ஒளியுடன் திகழச் செய்ய முடியும். கீழே வரும் சங்கேதக் கதையில் இதன் அவசியத்தை மௌலானா அவர்கள் எடுத்து இயம்புகிறார்கள். அடிமைப் பெண் - யூத அரசன் கதையிலுள்ள தத்துவார்த்தம் இக்கதை முடிவில் (240ம் பாடலின் விளக்கவுரையைத் தொடர்ந்து) தரப்பட்டுள்ளது. அங்கே அதைக் கண்டுகொள்க.

41. இதில் கழுதை என்பது மனித உடலையும், சேணம் என்பது இவ்வுலகச் செல்வங்களையும், ஓநாய் மரணத்தையும் குறிப்பதாக வும் கொள்ளலாம்.

47. ஈஸா நபி (அலை) அவர்கள் அல்லாஹுத்தஆலாவின் அனுமதிகொண்டு இறந்தவர்களுக்கு உயிர் கொடுத்தார்கள். (திருகுர்ஆன் அத். 3: வசனம் 49 பார்க்க.) இந்த வைத்தியர்கள் சாவின் பிடியிலுள்ளவர்களையும் காப்பாற்றிவிடத்தக்க அளவு தங்களிடம் திறமையுண்டு என்று காட்டுவதற்காகத் தங்களை ஈஸா நபியுடன் ஒப்பிட்டுக் கொள்கின்றனர்.

48. எந்த வேலையையும் 'செய்வேன்' என்று கூறு முன் 'அல்லாஹ் நாடினால்' (இன்ஷா அல்லாஹ்) என்று கூற வேண்டுவது அவசியம். இதுபற்றிய இறைவன் கட்டளை திருகுர்ஆன் அத். 18: வசனங்கள் 23, 24ல் உள்ளன.

50. இறைவனின் நாட்டத்தில் தம்மை இழந்துவிட்ட மெய்ஞ்ஞானியர் அவன் சித்தமே தமது சித்தம் என்று ஆகிவிட்டதால் இவ்விதம் வெளிப்படையாகக் கூறாமலிருக்கலாம். ஆனால், சகலவற்றையும் ஆட்டிப் படைப்பவன் அவனே என்பதை அனுபவப்பூர்வமாகக் காண்பவர்கள் அவர்கள்.

60. "என்னை அழையுங்கள்; நான் உங்களுக்குப் பதிலளிக்கிறேன்" என்று இறைவன் அருளியுள்ளான். (திருகுர்ஆன் அத். 40: வசனம் 60)

70. பகுத்தறியும் இயல்புள்ளதான ஆத்மா யதார்த்த உலகைச் சேர்ந்தது. புலனுணர்வுகளால் உண்டாகும் நிகழ்ச்சிகளைப் பதிவு செய்யும் பிரமையோ நீரில் குமிழியொத்த நமது ஜீவிதத்தின் மூலதனமாகும்.

72. சுத்த பரிபூரணப் பேரழகின் (ஜமாலின்) கல்யாண குணங்கள் மெய்ஞ்ஞானியரின் இதயத்தே பிரமைகளாகத் தோற்றமளிக்கின்றன.

80. பனீ இஸ்ராயீல் கூட்டத்தாருக்கு மன்ன-ஸல்வா என்ற உணவுத் தட்டங்கள் வந்ததுபற்றி திருகுர்ஆன் அத். 2: வசனம் 61லும், அத். 7: வசனம் 160லும் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

83 - 87. இந்தச் சம்பவம் திருகுர்ஆனில் அத். 5ல் 112 முதல் 115 வரையுள்ள வசனங்களில் விவரிக்கப்பட்டுள்ளது.

88. "ஏழைவரி கொடாதவர்களால் பஞ்சம் உண்டாகிறது" என்ற ஹதீஸுடையவும், "சமூகத்தில் விபச்சாரம் அதிகரிப்பதால் 'வபா' என்ற கொள்ளைநோய் அதிகரிக்கிறது" என்ற ஹதீஸுடையவும் கருத்தை இதில் காண்க.

92. அஜாஸில் என்பது ஷைத்தான் இறைவனுக்குக் கீழ்ப்படிய மறுக்குமுன் பெற்றிருந்த பெயர். அவன் இறைவனின் சாபத்துக்கு ஆளாகிச் சொர்க்கத்திலிருந்து விரட்டப்பட்ட வரலாற்றை திருகுர்ஆன் அத். 2: வசனம் 34, அத். 7: வசனம் 11, 12, அத். 15: வசனம் 31 - 37 முதலியவற்றில் காணலாம்.

100. ‘உண்மையில், அவன் விலகிவராதவரை கெட்டழிந்தே போவான்’ என்பது திருகுர்ஆன் அத். 96: வசனம் 15-ன் முற்பகுதி யாகும்.

110. அஸ்தர்லப் : வானமண்டலத்தை ஆராய்ந்து கணிக்க உதவிய கருவி.

111. காதல் மானிடர்மீது கொள்வதாயினும் இறுதியில் அது தெய்வ ஞானத்துக்கு இட்டுச் செல்வதாகவே இருக்கிறது. உலக அழகு முழுவதுமே தெய்வ அழகின் பிரதிபிம்பம்தான். எனவே, பிரதிபிம்பம் மறைந்ததும், அதன் மூலஸ்தானமான ஒளியை நோக்கி நாம் நம் பார்வையைத் திருப்புகிறோம்.

115. சாதாரணப் பகுத்தறிவு பேரின்பப் பரவசநிலையையோ, தெய்வீக ஐக்கியத்தையோ உய்த்துணரச் சக்தியற்றது. இது காதலனுக்கு ஆத்ம அனுபவத்தால் வெளிப்படுத்திக் காட்டப்படும் ஒன்றாகும்.

116. “நான் என் இறைவனை என் இறைவன்மூலம் அறிவேன்” என்று நபிபெருமானார் அருளியுள்ளார்கள். மெய்ஞானியருக்கு அவர்களுடைய அக ஒளிதான் அதற்கான அத்தாட்சியாகும்.

118. மெய்ஞானியர் இறைவனின் தன்னுணர்விலேயே திளைத்திருப்பர்; மற்றோர், அவனை மறந்த தூக்கத்தில் ஆழ்ந்து கிடப்பர். இறைவன் தன்னை வெளியாக்கிக் காட்டி, காதலின் மாட்சியால் இதயத்தே ஒளியுண்டாக்கும்போது, அவனிடமிருந்து ஒருவகை வெளிச்சத்தையே பெற்றுவரும் அறிவு - சூரியன் உதிக்கும் போது சந்திரன் வெளிறிப்போவதுபோல் - வெளிறிவிடுகிறது. சந்திரனை இரண்டாகப் பிளக்கும்படி நபிபெருமானார் காட்டிய அற்புதம் திருகுர்ஆன் அத். 54 : வசனம் 1ல் பிரஸ்தாபிக்கப்பட்டுள் ளது.

119. ஆத்மீகச் சூரியன் என்பது சம்பூரண மனிதரில் வெளிப் படாநிற்கும் தெய்வ ஒளியைக் குறிப்பதாகும். அது சடதத்துவச் சூரியனோடு ஒப்பிடப்படுகிறது.

123. ஷம்ஷுத்தீன் என்பது ஷம்ஷெ-தப்ரேஜியைக் குறிக்கும். சம்பூரண ஞானியான ஷம்ஷெ-தப்ரேஜி மௌலானா ரூமியின்

குருநாதராவார்கள். அவர்கள் காலமாகிப் பதினைந்து ஆண்டுகளுக் குப்பின் மஸ்னவீ எழுதப்பட்டது.

125. ஹுஸாமுத்தீன் மௌலானா ரூமியின் ஆத்மநேயர். அவர்களுடைய தூண்டுதலால்தான் மௌலானா மஸ்னவீயையே எழுதத்தலைப்பட்டார்கள்.

காணாமற்போன யூஸுஃப் (அலை) அவர்களின் சட்டையின் மணத்தை அவர்கள் தந்தையான யாகூப் (அலை) அவர்கள் வெகு தொலைவில் வைத்தே புரிந்துகொண்டுவிட்டார்கள். இந்த விபரம் திருகுர்ஆன் அத். 12: வசனங்கள் 93, 94-ல் தரப்பட்டுள்ளன.

128. 'என் மதியும் புலன்களும் மழுங்கியுள்ளன; இந்த நிலையில் எப்படிப் போற்றுவது என்று எனக்குத் தெரியவில்லை' என்ற அடி: நபிபெருமானாரின் விண்ணுலக யாத்திரையின்போது அவர்களை நோக்கி இறைவன் தன்னைத் துதிக்குமாறு கூறிய சமயம், அவர்கள், "நான் உன் அருட்கொடைகளை அளவிட முடியவில்லை; உன்னை நான் புகழவேண்டிய விதத்தில் எல்லையற்ற துதியையும், புகழையும் உன்மீது என்னால் சொரிய முடியவில்லை" என்று அருளிய ஹதீஸை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

224. கிலுரு நபி (அலை) அவர்களிடம் ஆத்மீகப் பயிற்சி பெறச்சென்ற மூஸா நபி (அலை) அவர்களுடைய வரலாறு திருகுர்ஆனில் அத். 18: வசனம் 65 முதல் விவரிக்கப்பட்டுள்ளது. தான் செய்யும் எதுபற்றியும், 'ஏன் அப்படிச் செய்தீர்?' என்று காரணங் கேட்கக்கூடாது என்ற நிபந்தனையின்மீதுதான் கிலுரு (அலை) மூஸா நபியைத் தம்மோடு சேர்த்துக்கொண்டார்கள். எனினும், அவர்கள் அழகிய சிறுவன் ஒருவனுடைய கழுத்தை முறித்து அவனைக் கொன்றதைப் பார்த்ததும் மூஸா நபியால் தாங்கமுடியவில்லை. 'ஏன் அப்படிச் செய்தீர்கள்? ஓர் உயிரை இப்படி அநியாயமாகக் கொல்லலாமா?' என்று கேட்டுவிட்டார் கள். ஆனால், பின்னர் கிலுரு (அலை) அவர்கள் தாங்கள் அவனைக் கொன்ற காரணத்தை விளக்கியதும்தான் அவர்கள் செய்தது சரி என்பதை மூஸா நபியால் புரிந்துகொள்ள முடிந்தது. அந்தச் சிறுவனால் அவன் பெற்றோர்கள் வழிதவறி நாசமாக இருக்கிறார் கள் என்பதை உணர்ந்து, தெய்வ உத்தரவு கொண்டே அந்தச் சிறுவனை கிலுரு (அலை) கொன்றார்கள். இந்தச் சம்பவத்துக்கும், நகைக்கடைக்காரன் விஷமிடப்பட்டதற்குமுள்ள ஒற்றுமையை 'அராய்ஸுல் பயான்' ஆசிரியர் இவ்வாறு எழுதுகிறார்கள்: "அந்தச் சிறுவன் அழகுமிக்கவனாக இருந்திருக்கிறான்; அந்த அழகு இறைவனின் அழகு என்னும் உடையிலிருந்து உண்டானது. எனவே,

யதார்த்தத்தை (ஹக்கைப்) பின்பற்றுவோர் இறைவனையே தியானிப்பதை விடுத்து இவன் பக்கம் மனம் திரும்பலாம்; இவனில் கண்ட தெய்வ ஒளியிலேயே மனம் திளைக்கலாம். எனவே, இறைவன் பொறாமை கிலுரு (அலை) அவர்களை, அவனைக் கொன்று இறைவனுக்கும் அவன் அடியார்கள், நேயர்களுக்கு மிடையில் எந்தக் குறுக்கீடும் இல்லாது நீக்கும்படி செய்தது."

226. தெய்வப் பிரதிநிதி சத்பூரண மனிதர் (இன்ஸானெகாமீல்) ஆவார். அவரிடமுள்ள தெய்வச் சக்திகள் அனைத்தும், அவர்மூலம் இறைவனால் பிரயோகிக்கப்படுபவைதாம். "நீர் (எதிரிகள்மீது) மண்ணை எறிந்தபோது, (யதார்த்தத்தில்) அதை எறிந்தவர் நீர் அன்று; அல்லாஹ்வேதான் அதை எறிந்தான்" (திருகுர்ஆன் அத். 8: வசனம் 17) என்ற கருத்து இங்கே கையாளப்பட்டுள்ளது.

227. இஸ்மாயீல் (அலை) அவர்கள் இப்ராஹீம் நபியின் புதல்வர். தமக்குப் புதல்வரில்லாத குறை அகல்வதற்காக இறைவனிடம் மன்றாடியதன் பயனாய்ப் பிறந்த பாலகர் இஸ்மாயீல். ஆனால், இப்ராஹீம் நபியின் மெய்யுறுதி எத்தகையது என்பதைச் சோதிக்க விரும்பிய இறைவன் அவர்களை அந்தப் புதல்வரை அறுக்கும்படி கட்டளையிட்டான். அதன்படி அவர்கள் நபி இஸ்மாயீலை அறுக்கத் துணிந்தார்கள்; அப்போது இஸ்மாயீல் (அலை) அவர்களும் தமது தந்தை முன் அறுபடுவதற்காகக் கழுத்தை நீட்டியவர்களாகப் படுத்திருந்தார்கள். அந்தத் தருணத்தில் இறைவனின் கட்டளை வந்து இப்ராஹீம் நபி தங்கள் புதல்வரை அறுக்காமல் தடுத்துவிட்டது. இந்த விவரம் திருகுர்ஆன் அத். 37 : வசனம் 102 முதல் 105 வரை விவரிக்கப்பட்டுள்ளது.

228. அஹ்மது என்னும் திருநாமத்தின் மகிமையை ஸூபியாக்கள் பெரிதும் கொண்டாடுகின்றனர். நபிபெருமானாரை 'மீம்' இல்லாத அஹ்மது என்றே பலர் தம் கவிதைகளில் கூறியுள்ளனர். அஹ்மது என்ற அரபிப் பதத்தில் 'மீம்' என்ற எழுத்து இல்லாவிட்டால் அது 'அஹது' என்றாகிவிடும். 'மீம்' என்ற எழுத்துக்கு அப்ஜத் கணக்குப்படி மதிப்பு நாற்பது ஆகும். எனவே, அது அஹதிலிருந்து மனிதனுக்கிடையிலுள்ள நாற்பது படித்தரங்களைக் குறிப்பதாகக் கூறுவர். முதல் படித்தரம் மனிதனில் தொடங்குகிறது; நாற்பதாவது படித்தரம் அஹதில் முடிகிறது. பரிபூரண மனிதரில் சிரேஷ்டரான நபிபெருமானார் அகண்டமான அறிவின் சாரமாயுள்ளார்கள். பரிபூரண மனிதர் நிரந்தரமானவர்களாக, தெய்வீகமான சத்தை உடையவர்களாக இருப்பினும் அவர்கள் இறைவனாக மாட்டார்கள்.

*236. கிலுரு (அலை) அவர்களுடன் மூஸா (அலை) அவர்கள் பிரயாணம் செய்தபோது ஏற்பட்ட இன்னொரு சம்பவம் இங்கே பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. (224ம் பாடலுக்கான குறிப்பில் அவர்கள் சிறுவன் ஒருவனைக் கொன்றதற்கான காரணம் விளக்கப்பட்டுள்ளது.) அவர்கள் இருவரும் நீல நதியில் ஒரு படகில் சென்றபோது கிலுரு நபி அந்தப் படகில் ஓர் ஓட்டையை உண்டாக்கினார்கள். இதைக்கண்ட மூஸா (அலை), "இதில் நீர் ஓட்டை போட்டது படகிலுள்ளவர்களை நீரில் மூழ்கடிக்கவா! நீர் செய்தது மிகவும் தப்பான காரியம்" என்று கிலுரு நபியைக் கண்டித்தார்கள். ஆனால், அதன் காரணம் விளக்கப்பட்டபோதோ மூஸா நபி அது நேர்மையான செயல்தான் என்று அறிந்துகொண்டார்கள். அந்தப் படகு ஏழை உழைப்பாளிகள் சிலருடையது. அவர்களுடைய அரசன் நல்ல படகுகளையெல்லாம் பலாத்காரமாகப் பறிமுதல் செய்து வந்தான். எனவே, இந்தப் படகும் அவ்விதம் அரசனால் பறிமுதல் செய்யப்படாமலிருப்பதற்காகவே கிலுரு (அலை) அதில் ஓட்டையை உண்டாக்கினார்கள். (திருகுர்ஆன் அத் 18 : வசனங்கள் 71, 79 பார்க்க)*

*237. கிலுரு (அலை) அவர்களுடைய ஞானம் மூஸா (அலை) அவர்களுடைய ஞானத்தைவிட இந்த அம்சத்தில் மிகுந்ததாக இருந்தது எப்படி என்பதை உணர விலாயத்துக்கும் நுபுவ்வத்துக்கும் உள்ள பாகுபாட்டை நாம் அறிய வேண்டும். ஷைகுல் அக்பர் இப்னுல் அரபி தங்களுடைய 'புஸூஸுல் ஹிக'மில் சொல்வதன் சாரமாவது: ஞானியான தன்மை (தெய்வத் தோழமை விலாயத்), நபித்துவத்தின் (நுபுவ்வத்தின்) அந்தரங்க அம்சமாகும். எனவே, ஒவ்வொரு நபியும் ஓர் ஒலியாகவும் இருக்கிறார்கள்; ஆனால், எந்த ஒலியும் ஒரு நபியாக இல்லை. மக்களுக்கு வழிகாட்டி, அவர்களை நேர்மைப்படுத்தும் சாதனம் என்ற முறையில் நபித்துவம் முடிவடைந்துவிட்டது. 'எனக்குப் பின் நபி இல்லை' என்று நபிபெருமானார் அருளியுள்ளார்கள். ஆனால், இறைவனிடமிருந்தோ, ரூஹெ முஹம்மதீ என்ற ஜீவனிலிருந்தோ உண்டான மெய்ஞானமோ முடிவடையாததாகும். நுபுவ்வத்தையும், ரிஸாலத்தையும் தன்னகத்தே கொண்டது விலாயத். எனவே, நபியாய் இருப்பதுடன் ஞானியாயும் உள்ளவர் நபியாய் இருப்பதுடன் தீர்க்கதரிசியாகவும் (ரஸூலாயும்) உள்ளவரைவிட மேலானவராவார். கிலுரு (அலை) மெய்ஞான சித்தியடைந்த நபி; மூஸா நபி பெற்றிராத சில ஞானங்களை அவர்கள் அடைந்திருந்தார்கள். ஏனெனில், 'தன் நபிமாரிடமிருந்து இறைவன் தெய்வ உத்தரவின் மர்மம்பற்றிய (ஸிர்ருல் கதர் பற்றிய) ஞானத்தை மறைத்து*

வைக்கிறான்; அவர்கள் அதை அறிந்தால் தமது கடமையிலிருந்து - இறைவன் அவர்களிடம் ஒப்படைத்துள்ள மக்களுக்கு அவன் செய்தியை எத்திவைக்கும் கடமையிலிருந்து - அவர்கள் வழுவி விடலாம் என்றே அவ்விதம் செய்கிறான்.

தெய்வ ஞானமோ, மெய்யுறுதியோ, உதிப்போ இல்லாதவர்கள் மெய்ஞானியரின் செயல்களைப் புரிந்துகொண்டதாக எண்ணிப் பேசுவதோ அவற்றைக் கண்டிப்பதோ கூடாது.

மூஸா நபி - கிலுரு நபி வரலாற்றிலிருந்து இமாம் பைளாவி தமது திரு குர்ஆன் வியாக்கியானத்தில் இந்த நீதியைச் சுட்டிக் காட்டுகிறார்கள்: "தனக்கு விருப்பமற்றதைக் கண்டிக்க யாரும் அவசரப்படக்கூடாது; ஏனெனில், அவன் அறியாத ஆத்மீக அடிப் படையில் அது அமைந்திருக்கலாம்."

240. "தீயோரைப் பாராட்டும்போது சிருஷ்டியாளனின் கோபம் பொங்குகிறது; வான மண்டலமே நடு நடுங்குகிறது" என்ற ஹதீஸின் கருத்து இங்கே எடுத்தாளப்பட்டுள்ளது.

**'அரசனும் அடிமைப் பெண்ணும்' பற்றிய கதையின் தத்துவார்த்த விளக்கம்:** 36 முதல் 246 வரையுள்ள பாடல்களில் விவரிக்கப்பட்ட அரசனும் அடிமைப் பெண்ணும் பற்றிய கதையின் தத்துவார்த்தமாவது:

இந்தக் கதையில் வரும் அரசன் ஆத்மாவை (ரூஹை) குறிக்கிறான்; அடிமைப் பெண் கீழான மனத்தை (நப்ஸைக்) குறிக் கிறாள். அவள் மோகத்துக்கு ஆளான நகைக் கடைக்காரன் இவ்வுலக இன்பமாவான். அதைக் கண்டுபிடித்து, அந்த இன்பத்தின் அழியும் தன்மையைக் கீழான மனத்துக்கு உணர்த்தி, அது அந்த இன்பத்தை வெறுக்கும்படியும், ஆத்ம அரசனிடம் கவனம் செலுத் தும்படியும் செய்யும் வைத்தியர் தாம் சம்பூரண வழிகாட்டியான குருநாதர் (முர்ஷித காமீல்) ஆவார். இவர் அகண்டமான மதி நுட்பத்தின் உருவகமாகவே விளங்குகிறார். இவர் முயற்சியால்தான் நப்ஸ் ஆத்மீக அரசனிடம் மீண்டும் முகம் திரும்பியவளாய், தன் உண்மை அன்புக்குரிய அவனுடன் இணைந்துகொள்கிறாள்.

'மஸ்னவீ'க்குப் பழைய விரிவுரை எழுதிய பெரியார் ஒருவர் இதிலுள்ள தத்துவார்த்தத்தை இவ்விதம் விவரிக்கிறார் : "அரசன் மனிதனிலுள்ள 'ஆத்மா' ஆவான்; அவன் காதலிக்கும் அடிமைப் பெண் 'நப்ஸ்' (கீழான மனம்) ஆவாள். அவன் அவளைப் பரிசுத்தப்படுத்தி அதன்மூலம் பற்பல ஆத்மீகப் பயிற்சிகளிலும் முறைப்படி அவள் ஈடுபடவும், மெய்ஞான அறிவை அடையவும்

வேண்டும் என்று விழைகிறான். அவளுக்கு அவனிடம் ஓரளவு பற்றுதல் இருப்பினும் அவள் இச்சைகளைத் துய்ப்பதில் மனம் நாட்டமானவளாய் பிணிக்கு ஆளாகிறாள். அதனால், அரசன் அவளைவிட்டு விலகியிருக்கிறான். அவள் பிணி அகற்ற பகுத்தறிவு (அக்லு) வைத்தியர்களின் உருவில் வந்து முயலுகிறது. அதன் பயனாய் அவள் பிணி அதிகரிக்கிறது. எனவே, பகுத்தறிவுக்குட் பட்ட நோய் நிவாரணங்கள் பயனளியாத நிலையில், ஆத்மா இறை வனிடம் மன்றாடி இறைஞ்சுகிறது; தன் நிர்க்கதியான நிலையைக் கூறி உதவி தேடுகிறது. இறைவன் தன் பேரழகை (ஜமாலை) அனுப் புகிறான். அது ஆத்மாமுன் பெரியார் ஒருவரின் (மெய்ஞ்ஞானியின்) உருவில் காட்சிதருகிறது. (தெய்வப் பேரழகு வெளிப்படும் இதயமே மெய்ஞ்ஞானியாவார்.) ஆத்மா அவரிடம் சொல்கிறது, "யதார்த்தத் தில் நீங்களே என் ஆருயிரானவள்; தன்னைத்தானே குணப்படுத்திக் கொள்ள முடியும் என்ற மனம் (தில்) அல்ல" என்று. பின்னர், ஆத்மாவுடன் இணக்கமான நிலையில் இதயம் நப்ஸை அதன் காதலனான உலக இச்சைக்கு (ஹவாவுக்கு) மணமுடித்து வைக் கிறது. அதற்குச் சிறிது பின்னர் இச்சைக்கு மெய்ஞ்ஞானமென்னும் (இர்பான் என்ற) பானத்தைப் படிப்படியாக இதயம் புகட்டுகிறது. அதனால், இச்சை நசித்துத் தன் கவர்ச்சியை இழந்ததாக, நப்ஸா லேயே வெறுக்கப்பட்டதாக மடிகிறது. இவ்விதம் இச்சையின் உறைவிடமாய் இருந்த நப்ஸ் (நப்ஸெ அம்மாரா) சாந்தி பெற்ற நல்லாத்மா (நப்ஸெ முத்மஇன்னா) வாக ஆகிவிட்டது."

247. இந்தக் கிளிக் கதையைப் போன்றதொரு கதை தமிழ் நாட்டில் உண்டு. குடியானவன் ஒருவன் கடன் வாங்கியே கெட்டுப்போய்விட்டான். அவன் ஒரு கடன் காரனுக்குப் பயந்து ஓடும்போது அவன்முன் எதிர்ப்பட்ட ஜைனக் கோயில் ஒன்றினுள் நுழைந்தான். அங்கே ஜைனர்களின் தெய்வமான அருகன் சிலை நிர்வாணமாக் நிற்கக் கண்டான். உடனே அவன் அந்தச் சிலையைப் பார்த்து "அப்பனே, நான் ஓர் ஏர் வைத்துப் பயிர்செய்துஇப்படி உடுத்திய கந்தல் துணியோடாவது ஓடிவந்தேன். நீ எத்தனை ஏர் வைத்துப் பயிர்செய்தாய்? இப்படி நிர்வாணமாகிவிட்டாயே!" என்று வினவினான்.

264. அப்தால்: பல படித்தரங்களைக் கடந்த மெய்ஞ்ஞானி; குத்பு என்ற படித்தரத்துக்கு அடுத்த தரத்தில் உள்ளவர். ஏழு அப்தால்கள் உலகில் இருந்துகொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

266. இவ்விதம் இறைவனின் திருத்தூதர்களிடமே விவாதித்த நிராகரிப்பாளர்கள் பற்றிய விபரம் திருகுர்ஆன் அத். 14 : வசனம் 10, 11லும் அத். 25 : வசனம் 7-லும் உள்ளது.

277. அற்புதங்கள் (மௌஜுஸாத்) செய்துகாட்டிய நபிபெருமான் (ஸல்) அவர்களை மக்காக் காபிர்கள் மந்திரவாதி என்றனர். இவ்விதம் இறைவனின் தீர்க்கதரிசிகள் செய்யும் அற்புதங்களும் மந்திரவாதிகளின் கண்கட்டு வித்தைகளும் ஒன்றுதான் என்பது அறிவீனமாகும். நிராகரிப்பவர்களிலும் சிலர் அபூர்வமான காரியங்களைச் செய்யும் சக்தி பெற்றிருக்கின்றனர். இவர்களுடைய இத்தகைய செயல்கள் 'உருட்டுதல்' (இஸ்தித்ராஜ்) எனப்படும்.

278. இந்த வரலாறு திருகுர்ஆன் அத். 20: வசனங்கள் 55 முதல் 70 வரை விவரிக்கப்பட்டுள்ளது.

296. "உம்முல் கிதாப் அவனிடம் (இறைவனிடம்) இருக்கிறது" (திருகுர்ஆன் அத். 13 : வசனம் 39) 'லௌஹுல் மஹ்பூழ்' என்ற விதிவசப் பட்டோலையில் குறிக்கப்பட்டவையும், நபிமார்களுக்கு இறக்கியருளப்பட்டவையுமான வேதங்களின் அசல் 'உம்முல் கிதாபில்' (நூற்களின் தாய் என்பதில்) தான் உள்ளது. அத்துடன், 'உம்முல் கிதாப்' தெய்வஞானமும், விதிப்புக்கள், கற்பனைகளும் அடங்கியதும் கூட. தொடக்கம் முதல் இறுதிவரை நடந்த, நடக்கும், நடக்கவிருக்கும் விஷயங்கள் யாவும் அதில் எழுதப்பட்டுள்ளன. மெய்விஸ்வாசியைத் தன் கருணைக்குப் பாத்திரமானவனாகவும், நயவஞ்சகனைத் தன் கோபத்துக்குப் பாத்திரமானவனாகவும் இறைவன் ஆக்கியுள்ளான். முந்தியவர் பேரின்பமடைய வேண்டும். பிந்தியவர் படுநாசமடைய வேண்டுமென்பதே அவன் விதிப்பதாகும்.

297. இதில் திருகுர்ஆன் அத். 55 : 19, 20-ம் வசனங்களின் கருத்து எடுத்தாளப்பட்டுள்ளது. இந்த வசனங்கள் வருமாறு: "இறைவன் இரண்டு கடல்களைச் சந்திக்கச் செய்துள்ளான்; அவற்றிடைத் தடுப்பு ஒன்று உண்டு; அவை அதைத் தாண்டிப் போவதில்லை." ஒன்று உப்புத் தண்ணீருள்ளது; மற்றது நல்ல தண்ணீருள்ளது. அதாவது, தீயவர்களும் நல்லவர்களும் இவ்வுலகில் சந்திக்கிறார்கள். ஆனால், ஒருவரோடொருவர் கலப்பதில்லை. இவர்களை (ஆத்மீகமாகப்) பிரிக்கும் தடுப்பு (பர்ஜக்) என்பது முன்னரே நிர்ணயமான இவர்களுடைய இயல்பும், தன்மையுமாம். ஸஹல் இப்னு அப்துல்லாஹ் துஸ்துரி (ரஹ்) இந்த வசனத்துக்கு இவ்விதம் விளக்கம் நல்குகிறார்கள்: "இவ்விரண்டு கடல்களில் ஒன்று இதயம் (கல்பு); அதில் மெய்விஸ்வாசம், மெய்ஞானம், ஏகத்துவம் போன்ற முத்துக்கள் கிடைக்கின்றன. இன்னொரு கடல் கீழான மனம் (நப்ஸ்); இதில் வெறுப்பு, பொறாமை, நிராகரிப்பு, பேராசை, கோபம் போன்ற துர்க்குணங்கள் அடங்கியுள்ளன." (இது அராயிஸுல் பயானில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.)

*298. தனக்கு ஒப்புவமையோ, எதிர்ப்போ இல்லாதவனான இறைவன் சகலவற்றுக்கும் - நன்மைக்கும் தீமைக்கும் மெய்விஸ் வாசத்துக்கும் நிராகரிப்புக்கும், இதுபோன்று ஒன்றுடன் ஒன்று எதிரிடையான சகலவற்றுக்குமே - மூலஸ்தானமானவனாக விளங்குகிறான்.*

*இந்தக் குணங்கள் யாவும் அவனுடைய கல்யான குணங்களான சாத்வீகம் - தீவிரம், கருணை-கோபம் போன்றவற்றின் பிரதிபலிப் புகள்தாம். இந்த அம்சங்கள்மூலம் இறைவன் மனித இதயத்துக்கு தன்னை வெளிப்படுத்திக்காட்டுகிறான். சடத்துவ உலகின் தோற்றத்துக்கு அவை முரண்பட்டவையாகத் தோன்றினாலும் யதார்த்தத்தின் மெய்ஞ்ஞானத் தோற்றத்தில் அவை ஒன்றுபட்டவை யாகவே காட்சி தருகின்றன. நாம் நன்மையானது என்றும், தீமை யானது என்றும் விவரிக்கும் சகலமுமே எல்லையிலாத் தெய்வீக சம்பூரணத்துவத்தில் அடங்கும் என்பதைத் தெய்வ ஒளியால் காணும் மெய்ஞ்ஞானி அறிந்துகொள்கிறார். தமது கீழான மனத்தின் சேஷ்டைகளை உதறிவிட்டு, நன்மையோடு சதாவும் தீமை போராடிக்கொண்டிருக்கும் இவ்வுலகையும் புறக்கணித்துவிட்டு, சுத்த பரிபூரணத்தில் சேரவேண்டும், சகல தடைகளையும் தகர்த்து ஏகத்துவ உணர்வை எய்தவேண்டும் என்று மௌலானா அறி வுறுத்துகிறார்கள்.*

*307. மனிதனின் ஆத்மீக சாரமான தெய்வீகச் சுடர் அவனுடைய மண் தன்மைக்கு அடியில் புதையுண்டுள்ளது. வீட்டுத் தளத்துக்கு அடியில் புதையல் இருப்பதுபோல இதுவும் மறைந்து கிடக்கிறது.*

*308. இது இதயத்தைப் பரிசுத்தமாக்கும் மார்க்கத்தை விவரிக்கிறது. அதற்காக முதலில் அதனுள் சென்றுகொண்டிருக்கும் காமம், குரோதம் முதலிய தீய உணர்ச்சிகளாகிய ஆறுகளை அணை கட்டித் தடுத்து வெளியாக்க வேண்டும். அதன் பின்னரே தெய்வீக உதிப்பாகிய ஊற்றுக்கண் திறக்கும். இத்தகைய தீய குணங்கள் யாவை, அவற்றைக் களையும் வழிவகைகள் யாவை என்பதை யெல்லாம் இமாம் கஸ்ஸாலீயின் 'இஹ்யா'வில் விரிவாய்க் காணலாம். (நமது 'பேரின்ப ரஸவாதம்' பக்கம் 187 பார்க்க)*

*309. கீழான மனத்தை அடக்க நடத்தும் போராட்டத்தைப் 'பெரிய ஜிஹாத்' என்று நபிபெருமானார் கூறியுள்ளார்கள். எனவே, போரில் தைத்த அம்பின் முனையைச் சருமத்தைக் கீறி அகற்று வதற்கு இந்தப் போராட்டத்தை மௌலானா ஒப்பிட்டுள்ளது வெகு பொருத்தமாகும்.*

310. இதுவும் இமாம் கஸ்ஸாலீயிடமிருந்து எடுத்தாளப்பட்ட உவமைதான். உடல் இறைவனால் ஆத்மா வைக்கப்பட்ட ஒரு கோட்டையாய் உள்ளது. கீழான மனம் (நப்ஸ்) ஆன காபிர் அதைத் தாக்காமல் பாதுகாக்கும்படி அவன் கட்டளையிட்டுள்ளான். அதில் தீய குணங்கள் படியுங்கால் ஆத்மா அவற்றோடு போராடி அவற்றை வெளியாக்கிவிட்டு, மீண்டும் அந்தக் கோட்டையைப் பாதுகாப் புள்ளதாகவும், எதிரி தாக்க இடமற்றதாகவும் கட்ட வேண்டும்.

311 - 312. தெய்வச் செயலை அது என்ன விதமானது என்று விவரிப்பது சாத்தியமேயல்ல. தங்கள் கருத்தை விளக்குவதற்காக அவசியமான அளவு மேலேகண்ட விஷயத்துக்கு விளக்கம் நல்கிய பின், தெய்வச் செயல் வெளிப்படும் எத்துணையோ வழி முறை களைச் சிந்திப்போர் அதனால் அடையும் பிரமிப்பைச் சுட்டிக் காட்டுகிறார்கள். ஏனெனில், பகுத்தறிவின் துணைகொண்டு ஆராய்ந்தால் அது விளங்காத ஒன்றாகவே இருந்துவிடும். இந்தப் பாடல்களில் மௌலானா அவர்கள், ‘சுலூக்’ என்ற (திக்று முறை) மூலமும் இறைவனையடைவதையும் எதிர்எதிராக நிறுத்திக் காட்டுகிறார்கள் என்று விரிவுரையாசிரியர்கள் பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

316. ஞான தீட்சை பெறச் சாதகன் தன் குருவின் கைமீது கையை வைத்துப் ‘பைஅத்’ என்ற பிரமாணம் செய்து கொடுக்க வேண்டும். நபிபெருமானாரிடம் அவர்கள் கால முஸ்லிம்கள் அனைவரும் இவ்விதம் விஸ்வாசப் பிரமாணம் செய்துகொடுத்தனர். (திருகுர் ஆன் அத். 48 : வசனம் 10 பார்க்க.) இவ்விதம் ஞானதீட்சை பெறு வதற்காக சரியான குருநாதரைத் தேடி அடைவது அவசியமாகும். நடிப்பு ஞானிகள் அதிகமாயுள்ளார்களாதலால், கண்டவர்களிட மெல்லாம் விஸ்வாசப் பிரமாணம் செய்துகொடாதே என்று மௌலானா எச்சரிக்கிறார்கள்.

321. திருவிழாக் காலங்களில் யாசகம் பெறுவதற்காக கம்பளியால் சிங்கம் போன்ற ஒன்றைச் செய்து வைத்திருப்பார்கள். இது எங்கே, நிஜமான சிங்கம் எங்கே! நடிப்புத் துறவிகள் வெளித்தோற்றத்தால் மட்டும் உண்மைத் துறவிகளாகிவிட முடியுமா? நபிபெருமானார் காலத்தில் வாழ்ந்த பொய்யன் முஸைலமா தானும் ஒரு நபிதான் என்று கூறிக்கொண்டான். நபிபெருமானார் செய்த காரியங்களைப்போல் தானும் செய்து காட்டினான். அவர்கள்மூலம் திருகுர்ஆன் வசனம் இறங்குவது கண்டு தானும் அதுபோல் வசனம் தரமுடியும் என்று அபத்தக் களஞ்சியமாக உளறினான். ஒருவனுடைய கண் பார்வை ஒளியில்லா

திருந்ததை நபிபெருமானார் உமிழ்நீரைத் தடவிப் பார்வை வரச்செய்துவிட்டார்கள். இதைக் கேள்விப்பட்ட அவன் தானும் அப்படிச் செய்யமுடியும் என்று கண்ணோய் கண்ட ஒருவன் கண்களில் தன் உமிழ்நீரைத் தடவினான். உடனே அவன் கண்களே குருடாகிவிட்டன. உப்புத் தண்ணீருள்ள கிணறு ஒன்றில் நபிபெரு மானார் உமிழ்நீரைத் துப்பியதும் அது மதுரமான தண்ணீருடைய தாக ஆகிவிட்டது. உடனே முஸைலமாவும் குறைவாகத் தண்ணீர் இருந்த கிணறு ஒன்றில் துப்பினான்; உடனே அந்தத் தண்ணீர் நாற்ற மெடுத்துவிட்டது.

முஸைலமா பனு ஹனிபா என்ற கூட்டத்தின் தலைவன், இவனுடைய ஆட்சிபீடம் இமாமா என்ற இடத்திலிருந்தது. இவனுடைய படைபலம் பெரிது. மேலும், தானும் ஒரு நபி என்று நடித்த பெண் ஒருத்தியை மணந்து இவன் தன் செல்வாக்கை அதிகப்படுத்திக்கொண்டுமிருந்தான். ஹஜ்ரத் அபூபக்கர் (ரலி) ஆட்சியின்போது முஸ்லிம் படைகள் இவனோடு கடுமையான போராட்டம் நடத்தி இவனை முறியடித்தன.

323. வானுலகில் சொர்க்க வாசிகள் பருகும் பானம் புனுகினால் முத்திரையிடப்பட்டது. (திரு குர்ஆன் அத் 83, வசனங்கள் 25, 26 பார்க்க) - தெய்வீக சத்தியத்தையும், அறிவையும் தன்னகத்தே கொண்ட அந்தப் பானத்தைப் பருகுவதால் உண்டாகும் ஆத்மப் பேரானந்தம் சாமான்யமானதா? அதற்கு நபி பெருமானாரை மௌலானா உவமித்துள்ளார்கள். இம்மையின் பாசமும் காமக் குரோதங்களுமாகிய கள் இருமையிலும் துயரத்தைத்தான் சேர்க்கும். முஸைலமாவை மௌலானா இந்தக் கள்ளுக்கு உவமை காட்டி யுள்ளார்கள்.

**மத வெறியால் கிறிஸ்தவர்களை வதைத்த யூத அரசன் கதை**

மார்க்க விஷயத்தில் நயவஞ்சகர்களான - உள்ளொன்று வைத்துப் புறமொன்றான - கடையர்களின் திட்டங்கள் எத்துணைப் பயங்கரமானவை, மனித உடையில் திரியும் இந்த ஓநாய்களைவிட்டு அப்பாலாகாவிட்டால் என்னென்ன பயங்கரங்கள் நிகழும் என்பதையெல்லாம் இந்தக் கதை எடுத்துக்காட்டுகிறது.

கிறிஸ்தவ மதம் பரவ ஆரம்பித்த ஆரம்பகாலக் கதை இது. இதன் சாரமாவது: வெறி பிடித்த யூத அரசன் ஒருவன் கிறிஸ்தவர் களை இனநாசம் செய்யத் திட்டமிட்டான். கிறிஸ்தவ மதத்தை யாரும் தழுவக்கூடாது; தழுவினால் மரண தண்டனை என்று பிரகடனப்படுத்தி அதை அமுலாக்கிவந்தான். இதனால், பலர்

ரகசியமாகக் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்தனர். எனவே, இவர்களை எப்படித் தொலைப்பது என்பதுபற்றி அவன் மந்திரியிடம் ஆலோசனை கலந்தான். அந்த மந்திரி இவ்வாறு யோசனை கூறினான். தான் அந்தரங்கத்தில் கிறிஸ்தவனாய் இருப்பதை அரசன் கண்டுபிடித்தது போல் தனக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும். ஆனால், கடைசி நிமிஷத்தில் பலரும் கேட்டுக்கொண்டதால் அங்கஹீனனாக்கி விரட்டிவிட வேண்டும். தான் கிறிஸ்தவர்களிடையே சென்று இருந்துகொண்டு, அவர்கள் நம்பிக்கையைப் பெற்றபின் அவர்கள் நாசமாவதற்கான பாதையை வகுக்க முடியும்.

மந்திரியை அரசன் அவன் யோசனைப்படியே அங்கஹீனனாக்கி அடித்து விரட்டிவிட்டான். அவன் கிறிஸ்தவர்களிடைச் சென்று, தன் பட்டினியாலும் விரதங்களாலும் அவர்களுடைய பூரண நம்பிக்கைக்கு உரியவனாகிவிட்டான். கிறிஸ்தவர்கள் அனைவரும் அவன் எது சொன்னாலும் செய்யத் தயார் என்ற அளவுக்குப் பக்குவமாகிவிட்டனர். உசிதமான நேரம் வந்ததும் தான் தேர்ந்தெடுத்து வைத்திருந்த பன்னிரண்டு பேர்களிடமும், ஒருவருக்குத் தெரியாமல் ஒருவரிடம் ஒவ்வொரு 'சுவிசேஷத்தை' அளித்தான். அவை ஒவ்வொன்றும் ஒன்றுக்கு ஒன்று நேர்முரண்பட்ட கருத்தமைந்த உபதேசங்களையுடையவையாய் இருந்தன. மேலும், அந்த அமீர்கள் ஒவ்வொருவரிடமும் தனக்குப்பின் அவரே தன் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ளதாகவும், இதைத் தான் இறக்கும்வரை ரகசியமாய் வைத்திருக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டான். கடைசியில் தனி அறையொன்றில் அமர்ந்தவாறு அவன் தன் உயிரை மாய்த்துக்கொண்டான். உடனே பிரஸ்தாப அமீர்கள் பன்னிருவரில் ஒவ்வொருவரும் தாமே அவன் பிரதிநிதி என்றனர். அவர்களது கூட்டத்தாரிடை சண்டை வலுத்துப் பலர் மாண்டனர். மற்றவர்கள் அந்தச் 'சுவிசேஷங்'களால் வழிகெட்டனர்.

இவ்விதம் கிறிஸ்தவர்களை வழிகெடுத்த மந்திரி சுவிசேஷமருளிய 'பால்' என்பவர்தான் என்பது முஸ்லிம் அறிஞர்களுடைய கருத்தாகும். இது சம்பந்தமாக, 'கஸஸுல் அன்பியா' என்ற நூலில் தரப்பட்டுள்ள விவரமாவது : "இவ்விதம் (அவர்) கூட்டத்தினர் தமக்குள் அபிப்பிராயபேதமுடையவர்களாயினர்" (அத். 19: வசனம் 37; அத். 43: வசனம் 65) என்று அல்லாஹுத்தஆலா அருளியுள்ளான். இறைவன் ஈஸா (அலை) அவர்களை வானுலகுக்கு உயர்த்தியபின், பால் என்பான் வந்து தங்களை வழிகெடுக்கும்வரை கிறிஸ்தவர்கள் நேரான பாதையிலேயே நடந்துகொண்டிருந்தனர். இந்தப் 'பால்' என்பான் யூத மதத்தினன். ஈஸாவிடமும், அவர்கள் கூட்டத்தாரிடமும் துவேஷமுடையவன். சதா அவர்களைப்பற்றி அவதூறாகப்

பேசிப் பகைமை பாராட்டி வந்தான். அவன் வயது முதிர்ந்த கிழவனானதும், "என் துவேஷம் அவர்களைவிட்டுத் துண்டிக்கப்படுவதை நான் விரும்பவில்லை" என்று கூறியவனாக, தன் கண் ஒன்றைக் குத்திக்கொண்டு, கிறிஸ்தவர்களிடம் வந்தான். "என்னைத் தெரிகிறதா?" என்று வினவினான். "இறைவன் சிருஷ்டிகளில் நீ மகா மோசமானவன்" என்று அவர்கள் பதிலளிக்கவே, அவன் சொல்லலானான்: "நேற்று இரவு என் கனவில் நான் ஈஸாவைக் கண்டேன். அவர்கள் என் கண்ணில் ஓங்கி அறைந்தார்கள். 'நீ இன்னும் எத்தனை நாட்கள்தான் என் மதத்தைப் பழித்துப் பேசுவாய்?' என்று கேட்டார்கள். நான் பதறிக்கொண்டு துள்ளி எழுந்தேன். என் கண்களில் ஒன்று குருடாகியிருந்தது. எனவே, ஈஸா (அலை) அவ்ர்களுடைய திருப்தியைப் பெறுவதற்காக நான் அவர்களுடைய மார்க்கத்தில் சேரவே இங்கு வந்துள்ளேன்" என்று.

இதுகேட்ட கிறிஸ்தவர்கள் அவனை ஏற்றுத் தம்மில் ஒருவனாக ஆக்கிக்கொண்டனர். அவன் கடுமையான துறவை மேற்கொண்டான். இரவெல்லாம் வணக்கம், பகலெல்லாம் நோன்பு என்று கழிந்தது. இதனால் மக்கள் அவன் பக்கம் மதிமயங்கித் திரும்பினர். அவன் கிறிஸ்தவர்களிடையிருந்த பல்வேறு கூட்டத்தாரையும் அணுகிக் கவர்ச்சியான விவாதங்களால் அவர்கள் மனதைக் கெடுத்தான். அவர்களிடையே வேற்றுமை வித்துக்களைத் தூவினான்; கடைசியில் அவர்களிடையேயுள்ள மூன்று முக்கியத் தலைவர்களைத் தனித்தனியே அழைத்தான். ஒவ்வொருவரிடமும், "நீதான் எனக்குப்பின் என் பிரதிநிதி" என்று கூறினான். ஒருவரிடம், "மரியம், ஈஸா, கடவுள் ஆகிய மூவரையும் ஒன்றாகவே வணங்க வேண்டும்" என்றான். இன்னொருவரிடம், "ஈஸா உடலுள்ளவரோ, மனிதரோ அல்லர்; அவர் கடவுளின் மகனாவார்" என்று கூறினான். மூன்றாமவரிடம், "ஈஸாவே ஆரம்பமும் முடிவுமற்ற கடவுள்" என்றான், இவ்விதம் போதனை செய்தபின் அவன் தற்கொலை செய்துகொண்டான். இவ்விதம் ஈஸா (அலை) அவர்களின் அசல் மார்க்கம் அழிந்து, பித்தலாட்டமான பேச்சு கிறிஸ்தவத்தில் புக வைத்தான் பால். கிறிஸ்தவமும் இதனால் பல பிரிவுகள் ஆயிற்று.

'கஸஸுல் அன்பியா'வில் வந்திருப்பினும் இது ஆதாரப்பூர்வமான செய்திதான் என்பதைக் கிறிஸ்தவ ஞானியரில் பிரதானமான ஒருவரான பீட்டர் முனிவரின் கூட்டத்தார் எடுத்தியம்பியுள்ளனர். இது நபிபெருமானாருக்கு முன்னரே உள்ள தகவல். பால் முனிவர் பன்னிரண்டு சுவிசேஷக்காரர்களுடையவும் மெய்விஸ்வாசப் பிரகடனங்களைத் திருத்திவிட்டார் என்று இவர்கள் கூறுகின்றனர்.

இதே கருத்தைப் பிற்கால யூத அறிஞர்களும் தெரிவித்துள்ளனர். யூதர்களிடம் பால் இதற்கான லஞ்சம் பெற்றார் என்றும் அவர்களே சொல்வதாக முஸ்லிம் ஸ்பெயினில் வாழ்ந்த இப்ன் ஹஸம் அறிவித்துள்ளார். 'கஸஸுல் அன்பியா'வில் மூன்று அமீர்களிடம் பால் பேசிக் கலகம் உண்டாக்கினான் என்றுதான் காணப்படுகிறது. ஆனால், மௌலானா அவர்கள் பீட்டர் முனிவர் கூட்டத்தார் குறிப்பிடும் பன்னிரண்டு சுவிசேஷக்காரர்களையும் சுட்டிக்காட்டு வது கவனிக்கத்தக்கதாகும்.

325. நபிமார்கள் யாவருமே தம்மூலம் இறைவனின் மறைவான இயல்பை வெளிப்படுத்திக் காட்டுவோர் என்ற முறையில் இறைவ னுடன் ஒன்றானவர்கள்; ஒருவருக்கொருவர் சமமானவர்கள். (திருகுர்ஆன் அத். 2: வசனம் 136 பார்க்க. இவர்களிடையுள்ள பாகுபாடு எத்தகையது என்பதை அத். 2: வசனம் 153 விவரிக்கிறது.)

332. கீழான மனத்தின் (நப்ஸின்) இச்சா பாசங்கள் ஒன்றை இரண்டாகக் காணும் சாளையத் தன்மையை உண்டாக்குகின்றன. இந்தப் பிரமையை அழித்தொழித்த மெய்ஞ்ஞானி சகல ஜீவன்களும் ஒன்றிலிருந்து உண்டானவைதாம் என்பதைக் கண்டுகொள்கிறார்.

334. இதயத்தை இறை தியானத்தைவிட்டும், தெய்வஞானத்தை விட்டும் அப்பாலாக்கும் எதுவுமே திரை (ஹிஜாப்) தான்.

335. லஞ்சம் வாங்கும் நீதிபதி நியாயம் இன்னதுதான் என்பதைக் கண்டுகொள்ள முடியாததுபோல, சுயநலம், அகந்தை காரணமாக இதயம் உண்மையை உணர முடியவில்லை.

340. வாளால் நீ கிறிஸ்தவ மதத்தை அழித்துவிட முடியாது; ஏனெனில், வெளியில் தாங்கள் யூத மதத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறிக்கொண்டு அகத்தே வேறு மார்க்கத்தைப் பின்பற்றுவோரைக் கண்டுபிடிப்பது எப்படி? அவர்கள்மீது புனுகு சந்தனம் போன்று ஏதும் விசேஷ மணம் கமழும் என்று இருந்தாலும் அதன் உதவியால் அவர்களைக் கண்டுகொள்ளலாம். அதுதான் சாத்தியமல்லவே!

365. இந்தக் கதையின் அந்தரங்கத்தை இங்கே சுட்டிக்காட்டுவது அவசியமாகும். இந்த ஜடதத்துவ உலகில் யூத அரசன் என்பது ஷைத்தானையும், அவன் மதி மந்திரி என்பது மெய்ஞ்ஞானம் முற்றும் கைவல்யமான மகான் போன்று வேடமிட்டலையும் நயவஞ்சகனை யும் குறிக்கின்றன. ஆனால், அகமியத்தில் அரசன் கீழான மனத்தை (நப்ஸை)யும், அவன் மந்திரி அறிவின் வீணான கற்பனைகளையும், ஏசுநாதர் ஆத்மாவையும், கிறிஸ்தவர்கள் ஆத்மீக சக்தியையும் குறிக்கின்றனர்.

*368. கீழான மனம் எத்தகைய வணக்கவாளியையும் தன் சாகசத்தால் ஏய்த்துப் பாவஞ் செய்பவர்களாக ஆக்கிவிடக்கூடியது. ஒருவர் தம்மை மற்றவர்கள் சிறந்த வணக்கவாளி என்று எண்ண வேண்டும் என்று நினைத்தாலே போதும் அவருடைய வணக்கங்கள் வீணாகிவிடுகின்றன. (இது 'ரியா' என்ற பாவமாகும்.) எனவேதான், கீழான மனத்தின் விஷயத்தில் மிகவும் விழிப்புடனிருக்க வேண்டுவது அவசியமாயிற்று. அதற்கான வழிவகைகளை நபிபெருமானாரின் தோழர்கள் அவர்களிடமிருந்து அப்போதைக்கப்போது விசாரித்துத் தெரிந்து கொண்டனர்.*

*373. தஜ்ஜால் யுக முடிவையொட்டிக் கிளம்புவான். அவனுக்கு ஒரே கண்தான் உண்டு. அவன் யாவையும் தன் வசப்படுத்தி நாற்பது நாட்கள் ஆட்சிசெய்வான். பின்னர், ஈஸா (அலை) அவர்கள் பூமியில் தோன்றி அவனைக் கொல்வார்கள். அது யுக முடிவின் அடையாளமாகும்.*

*374- 406. கிறிஸ்தவர்களை இந்த நயவஞ்சகனான மந்திரி 'எத்துணை இலகுவாக ஏமாற்றிவிட்டான் என்பதை எண்ணியதுமே, எவ்வளவு உண்மையான விஸ்வாசியையும் பேராபத்துகளும், இச்சாபாசங்களும் சூழ்ந்துள்ளன என்பதை உணர்ந்த மௌலானா இறைவனிடம் அபயந் தேடுகிறார்கள். "அகத்தே பொய்யுடையோராய் இருப்பதால் நாம் நம்பிக்கைத் துரோகத்துக்கு ஆளாகிறோம்; நமது இச்சாபாசங்கள் அடிக்கடி நம் நல் வணக்கங்களின் பயனைக் கொள்ளையடித்துவிடுகின்றன. கீழான மனத்தின் தூண்டுதல்களிலிருந்து நம்மைக் காப்பாற்றி, அவனில் நாம் திளைத்திருக்க உதவுமாறு அல்லாஹுத் தஆலாவிடம் இறைஞ்சுவோமாக! நித்திரையில் ஆத்மா அதற்கான ஒரு வரம்புக்குள் சுதந்திரமாகச் சுற்ற அனுமதிக்கப்படுகிறது. ஆனால், இறைவன் நேயத்தைப் பெற்றுவிட்ட நல்லடியார்களான ஒரு சிலர் தான் விழிப்பிடையிலும் பரிபூரண சுதந்தரத்தையும், அருளையும் அடைந்துகொண்டிருக்கின்றனர். இவ்வுலகில் அப்படிப்பட்ட நாதாக்கள் பலர் இலைமறைகாயாக இருக்கவே செய்கின்றனர். நீ அகமியச் செவிடனாயும், அகமியக் குருடனாயும் இல்லாதிருப்பின் நீ அவர்களைக் காண்பாய்; அவர்கள் வசனிப்பதைக் கேட்பாய்."*

*377-380. இந்த உபமானக் கதையில் நெல் குதிர் என்பது இதயத்தையும், தானியம் என்பது நல்லமல்களின் பயனையும், எலி என்பது ஷைத்தானின் தூண்டுதலால் உண்டாகும் தீய எண்ணங்கள் ஊடாடலையும், இதயத்துள் புகுந்து அங்குள்ள மெய்விஸ்வாசத்தையும், தெய்வ இயல்பையுமே நாசம்செய்யும் உடலின் மிருக*

இயல்பையும் குறிப்பனவாகும். இறைவனால் நமக்குத் தரப்பட்ட ஆத்மீக உணவை (ரிஜ்கை) சேகரித்துப் பாதுகாத்து வைக்க வேண்டியது நம்முடைய தலையாய கடமையாகும்.

384-386. அதேபோன்ற இன்னொரு சங்கேதக் கதை இங்கே பேசப்பட்டுள்ளது. சிக்கிமுக்கிக் கல்லின்மீது சிறிது பஞ்சை வைத்துக்கொண்டு இரும்பினால் தட்டினால் பஞ்சு தீப்பிடித்துக் கொள்கிறது. இதுபோல பயபக்தியுடன் செய்யப்படும் நல்லமல்கள் இதயத்தில் விளக்கேற்றும் ஒளியை நல்குகின்றன. இச்சாபாசங் களாகிய இருளில் கள்ளனைப்போல் மறைந்திருக்கும் ஷைத்தான் அந்த இதயத் தெய்வீக வெளிச்சம் உண்டாகக்கூடாதே என்று அந்த ஒளியை அணைத்துவிடுகிறான்.

391. இறைவனையறிந்து அவன் தியானத்திலேயே லயித்து விட்டவனை இம்மையின் கவர்ச்சிகளோ, எண்ணங்களோ துன் புறுத்துவதில்லை.

392. மெய்ஞானியர் இம்மையின் விஷயங்களில் விழித்தவர்கள் போல் தோன்றினும் யதார்த்தத்தில் இறைவனில் லயித்தவர்களாய், தமது செயல்கள்பற்றி எதுவும் அறியாதவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் குகையின் தோழர்கள் (அஸ்ஹாபுல் கஹ்பு) இருந்த நிலையில் இருப்பவர்களாவர். திரு குர்ஆனில் இந்தக் குகையின் தோழர்களின் விருத்தாந்தம் அத் 18: வசனங்கள் 8 முதல் 22 வரை பேசப்பட்டுள்ளது. இந்த அடியின் பிற்பகுதியில் பிரஸ்தாப அத்தியாயத்திலுள்ள வசனம் 18-ன் கருத்து தரப்பட்டுள்ளது. "அவர்கள் தூங்கிக்கொண்டிருப்பினும் அவர்களை விழித்துக் கொண்டிருப்பவர்களாகவே கருதுவீராக! அவர்களை இடமும், வலமுமாக நாம் திருப்பிக்கொண்டிருக்கிறோம். அவர்களுடைய நாயோ தன் முன்னங் கால்கள் இரண்டையும் (குகையின்) வாயில் பக்கமாக நீட்டிக்கொண்டு படுத்திருக்கிறது" என்ற அந்த வசனத்துக் குப் பெரியார் நஜ்முத்தீன் குப்ரா கீழ்க்காணும் தத்துவார்த்தத்தைத் தந்துள்ளார்கள்: " 'அவர்களை விழித்துக்கொண்டிருப்பவர் களாவே கருதுவீராக!' என்பது அவர்கள் வதனங்களில் நீர் காணும் தெய்வீக ஒளியின் தேஜஸைக் கொண்டு அவர்கள் விழித்திருப் பதாகவே நீர் கருதவேண்டும் என்ற கருத்திலாகும். 'அவர்கள் தூங் கிக் கொண்டிருப்பினும்' என்பது தங்கள் ஜீவிதம் சம்பந்தப்பட்ட வரை அவர்கள் மரித்து (பனா ஆகி) விட்டவர்களாகவும், இறை வனில் நித்தியத்துவம் பெற்று (பகா ஆகி) விட்டவர்களாகவும், ஒரு நிலையிலிருந்து மறு நிலைக்கு உயர்ந்துகொண்டு செல்பவர்களாக வும் இருக்கிறார்கள் என்று பொருளாகும்.' அவர்களுடைய

நாயோ . . . படுத்திருக்கிறது' என்பது அவர்களுடைய இச்சாபாசங் களைக் கொண்ட கீழான மனம் தூக்கத்தில் ஆழ்ந்துள்ளது என்பதைச் சுடடிக்காட்டுவதாகும்."

பிரஸ்தாப வசனத்தின் கடைசிப் பகுதியில், 'அவர்களை நீர் பார்த்திருப்பின், அவர்களைவிட்டே வெருண்டு ஓடிப்போயிருப் பீர்; உம் மனத்தை திகில் ஆட்கொள்ளும்" என்று கூறப்பட்டுள்ளது. எனவேதான் மௌலானா அவர்கள் மெய்ஞ்ஞானியரின் படித்தரங் களைப்பற்றி நம்பிக்கைக் குறைவாகப் பேசக்கூடாது என்று எச்சரிக்கிறார்கள்.

393. "மெய்விஸ்வாசியின் இதயம் கருணையாளனான இறைவனின் இரண்டு விரல்களுக்கு இடையிலுள்ளது" என்ற ஹதீஸின் கருத்து இங்கே எழுத்தாளப்பட்டுள்ளது.' கருணை யாளனின் இரண்டு விரல்கள் என்பன அவனுடைய 'ஜலால்' என்ற தீவிர சக்தியும், 'ஜமால்' என்ற (சாத்வீகமான) பேரழகுமாகும். மெய்ஞ்ஞானிக்கு இறைவன் தன்னை இவ்விரண்டில் எந்தத் தன்மையில் வெளிப்படுத்திக் காட்டுகிறானோ அதற்கேற்ப அவர் இதயம் துயரத்தால் சுருங்கவோ, ஆனந்தத்தால் விரியவோ செய்யும்.

394. மெய்ஞ்ஞானியை ஆட்டிப்படைப்பவன் அல்லாஹுத் தஆலாதான்; அவருடைய பல்வேறு மாறுபட்ட நிலைகளுக்கு காரணகர்த்தன் அவன்தான் என்பதை அறியாதவர்கள் அவருடைய உணர்ச்சிகளும், செயல்களும் அவர் புறத்தாலேயே உண்டாகின்றன என்று எண்ணிக்கொள்கின்றனர்.

397. நீதியின் முன்னும் நீதிவானின் முன்னும் இவ்வுலகமே ஒரு நீதிஸ்தலமாகத்தான் இருக்கிறது; இங்கேயே இறைவன் நீதியாட்சி செய்கிறான். கடமையான வணக்கங்களைச் செய்யவேண்டும் என்று அவன் சட்டமுண்டாக்கி, அதை மீறுபவர்களைத் தண்டிக்கவும் செய்கிறான்.

398. இஸ்ராயீல் என்ற அமரர் மறுமையில் 'சூர்' என்ற கொம்பை ஊதியதும், சகல ஆத்மாக்களும் தத்தம் உடலில் புகுந்தவையாக வெளியாகும். இங்கே இறைவனின் செயல் இந்தச் சூர் ஊதலுக்கு ஒப்பிடப்பட்டது.

399. ஆத்மாவை உடலோடு ஒட்டவைப்பதன்மூலம் உடலுக்கு மார்க்க சம்பந்தமான, உலகம் சம்பந்தமான வேலைகள் உண்டாகி விடுகின்றன.

400. தூக்கத்தில் ஆத்மா உடலுடன் பிணைக்கப்பட்டில்லா விடினும், மரணம்தான் அதை நிரந்தரமாகப் பிரிக்கிறது. மரணத்தில்

இறைவன் ஆத்மாக்களைத் தன் பக்கல் எடுத்துக்கொள்கிறான்; தூக்கத்தில் எடுத்துக்கொண்டவற்றை குறித்த காலம்வரை விட்டு வைக்கிறான். (குர்ஆன் அத் 39 : வசனம் 42 பார்க்க,) விடுவிக்கப்பட்ட ஆத்மாவை, சேணம் அகற்றப்பட்டுப் புல்மேயவிடப்பட்டதாயினும் அது தப்பித்துக்கொண்டு போய்விடாமல் ஒரு முனையில் கட்டப் பட்ட நீளமான கயிற்றுடன் பிணைக்கப்பட்ட - குதிரைக்கு மௌலானா உவமை காட்டியுள்ளார்கள்.

405. இப்போதும் நம்மிடையே மெய்ஞானியர் பலர் இருந்து கொண்டுதான் இருக்கின்றனர். அவர்கள் அல்லாஹ்வையன்றியுள்ள சகலவற்றையும் விட்டு அப்பாலாகித் தம்மை இழத்தல் என்ற குகையில் தனிப்பட்டவர்களாக இருக்கின்றனர்.

407-408. முன்னுள்ள பாடலில் சொன்ன விஷயத்துக்கு உதாரணமாக மௌலானா இதைத் தருகிறார்கள். பொருள்களின் யதார்த்தமான தன்மையை அறியவேண்டுமாயின் அதற்கு ஞானக் கண் வேண்டும். காதலால் ஞானப்பார்வையை அடையப் பெற்றி ருந்த மஜ்னூன் லைலாவில் தெய்வீகப் பேரழகின் பிரதிபிம்பத்தைக் கண்டான். ஆனால், மற்றோர்க்கு அவள் சாதாரணமானவளாகத் தோன்றினாள். (லைலாவைக் கலீபா சந்தித்த விபரமான கதையை இமாம் ஷைகு சஅதியின் 'குலிஸ்தா'னில் காணலாம். நமது இமாம் ஷைகு சஅதி' பக்கம் 143 பார்க்க.)

409. மனமும் ஐம்புலன்களும் எவ்வளவுக் கெவ்வளவு அதிக மாக இயங்குகின்றனவோ, அவ்வளவுக்கு அவ்வளவு ஆத்மா தெய்வ யதார்த்தத்தைப்பற்றித் தியானிக்கும் சக்தியை இழந்துவிடுகிறது. தன்னுணர்வுதான் பெரிய பாவம். எனவே, இந்த அர்த்தத்தில் விழித்திருப்பது என்பது ஆத்மீக உறக்கத்தைச் சுட்டிக் காட்டுகிறது.

417. இம்மையின் பந்தபாசங்களில் சிக்கி உழல்பவன், யதார்த்த மான ஜீவனுக்கும் (பறவைக்கும்), தற்செயலான ஜீவனுக்கும் (நிழலுக்கும்) வேற்றுமை அறியமாட்டாதவனாய், பிந்தியதற்குத் தனியான ஜீவிதம் உண்டுபோலும் என்று எண்ணிக்கொள்கிறான்.

422- 436. இந்தப் பிரமைகளிலிருந்து விடுபட்டு நீ உய்வடைய வேண்டுமாயின் அதற்கு உண்மையான ஞானி ஒருவருடைய வழிகாட்டுதல் அவசியமாகும். அவர் சகவாசத்தில் நீ பொறாமையை யும் அகந்தையையும் களைந்தவனாக, அவர் காட்டும் பாதையில் நடந்து யதார்த்த நிலையைக் கண்டுகொள்ளலாம்.

422. 'இறைவனின் நிழல்' என்பது இறைவன் அளிக்கும் பாதுகாவலை நமக்கு காட்டித்தரும் சம்பூரண குருவையாகும்.

*423. அந்தக் குருநாதர் இறைவனையன்றியுள்ள எதனுடைய நினைவுமற்றவராய், தம் தியானத்திலேயே நிலைத்து நிற்பவர்.*

*424. 'அந்திம காலத்தின் . . . பாதுகாக்கப்பட்டவனாகலாம்'- இம்மையின் முடிவில் அல்லது, மெய்ஞானப் பாதையில் இறைவனை நோக்கி நீ செய்யும் பிரயாணத்தின் முடிவில் நீ பாதுகாக்கப் பட்டவனாவாய்.*

*425. அந்தத் திருமறை வசனங்கள் முழுமையும் வருமாறு: "உமது இறைவன் நிழலை எவ்வாறு நீளச் செய்கிறான் என்பதை நீர் பார்க்கவில்லையா? அவன் நாடியிருப்பின் அதை ஒரே நிலையில் நிற்கச்செய்திருக்கலாம். பின்னர் சூரியனை நாம் நிழலுக்கு வழிகாட்டியாக ஆக்கினோம்.: பின்னர் அதைச் சிறிது சிறிதாக நம்பக்கல் இழுத்துக்கொண்டவர்களும் நாம்தான்" (அத் 25: வசனங்கள் 45, 46). நிழல் சூரியனுக்கு வழிகாட்டுவதுபோல, ஞானியர் இறைவனை அடைய மார்க்கம் காட்டும் நிழல்களாவர் என்று மௌலானா சுட்டிக்காட்டுகிறார்கள். இப்பிரபஞ்சமே இறைவனின் நிழலாகத்தான் இருக்கிறது. இவ்வுலகில் ஞானியர்கள் காட்சிதரும் தோற்றம் தெய்வச் சூரிய ஒளியின் புறப்படிவமாகவே உள்ளது. அதன்மூலமே அவர்கள் யாவருக்கும் தோற்றமாகுபவர் களாயும், அதைப் பரம்பரை பரம்பரையாக மானிடர்களுக்கு கொடுப்பவர்களாயும் உள்ளனர். அந்த ஒளிதான் 'முஹம்மதின் ஒளி' (நூரெ- முஹம்மதி) ஆகும்.*

*426. 'இந்தப் பள்ளத்தாக்கு' என்பது அன்பினதும் சோதனை களினதும் பாதையாகும். ஆத்மஞானப் பாதையில் நடப்பவன் இதைக் கடந்துதான் மேலே போகவேண்டும்.*

*"அஸ்தமிப்பவைகளை நான் நேசிக்கவில்லை" (குர்ஆன் அத். 6: வசனம் 76) - விண்மீன், சந்திரன், சூரியன் ஆகிய, உதித்து அஸ்தமிப்பவற்றை (இறைவனையன்றி எதையும்) வணங்க மாட்டேன் என்று ஒதுக்கித் தள்ளிய இப்ராஹீமைப் போன்று, இறைவனையன்றியுள்ள சகலவற்றையும் புறக்கணித்துவிடு.*

*இறைவன் இப்ராஹீம் (அலை) அவர்களைத் தன் நேயர் (கலீல்) ஆக ஏற்றுக்கொண்டான். (குர்ஆன் அத் 4: வசனம் 125 பார்க்க.) எனவே, 'கலீல்' என்பதே அவர்களைக் குறிக்கும் பதம்தான்.*

*427. ஒரு நிழல் (மெய்ஞானி) உன்னை ஒரு சூரியனின் பால் (நூரெ- முஹம்மதி என்ற யதார்த்த ஒளியின்பால்) நடத்திச்செல்லட்டும். ஆத்மீக அரசரான ஷம்ஸெ தப்ரேஜியிடம் (உன்மீது அவருடைய சிரேஷ்டமான திருப்பார்வைபடுமாறு) வேண்டுதல்செய்!*

428. மணவிருந்து மண்டபம் என்பது மெய்ஞ்ஞானத்தின் மர்மங்களையும், தெய்வீக ஐக்கியத்தையும் குறிப்பதாகும். "இறைவனின் நேசர்கள் அவனுடைய மணப்பெண்களாவர்: மஹரமல்லாத - மணமுடிக்கும் உறவுமுறையற்ற - உற்றாரையன்றி வேறுயாரும் அவர்களைப் பார்க்கமுடியாது" என்று பாயஜீது புஸ்தாமி (ரஹ்) அருளியுள்ளார்கள்.

'ஜியாவுல் ஹக்: (குர்ஆன் அத் 10 : வசனம் 5ல்), "ஹுவல்லதீ ஜஅலஷ் ஷம்ஸ ளியாஅன் ..." (அவனே சூரியனை ஒளியுடையதாகவும் . . . ஆக்கினான்)என்றுள்ள வசனத்தை மனத்தில் கொண்டே ஹுஸாமுத்தீனுக்கு மௌலானா இந்தப் பட்டத்தைக் கொடுக்கிறார்கள்.

429-431. மஸ்னவீயில் பன்முறை செய்யப்படும் எச்சரிக்கையை இந்த அடிகளிலும் காண்கிறோம். அப்படி எச்சரிப்பது எத்துணை அவசியமானது என்பதை மௌலானாவைவிட நன்கறிந்தவர்கள் யாருமிருக்க முடியாது. ஷம்ஸெ தப்ரீஜியோடும், ஹுஸாமுத்தீனோடும் அவர்கள் கொண்டிருந்த தோழமை அந்தத் 'தரீக்கா' வைச் சேர்ந்த பலரிடையிலேயே, அவர்களுடைய கூட்டத்தாரிடையிலேயே - பொறாமையை உண்டாக்கிவிட்டதை அவர்கள் அனுபவ பூர்வமாகக் கண்டவர்கள். ஆதம் (அலை) அவர்களுக்கு அமரர்கள் யாவரும் அடிபணிந்தபோது, இப்லீஸ் மட்டும் அடிபணிய மறுத்தது பொறாமையாலன்றோ!

432. கீழான மனத்தால் (நப்ஸால்) விஷமூட்டப்பட்ட உடலிலுள்ள, மனத்திலுள்ள சக்திகள் யாவும் பொறாமையால் மாசுபட்டுள்ளன.

433. நபிமார்கள், மெய்ஞ்ஞானியர் ஆகியோருடைய உடல்கள் பரிசுத்தமானவையாகும்.

434. குர்ஆன் அத் 2: வசனம் 125- ல் இப்ராஹீம் (அலை) அவர்களையும், இஸ்மாயீல் (அலை) அவர்களையும் விளித்து, கஃபாவிலுள்ள விக்ரஹங்களை அகற்றி அதைச் சுத்தமாக்கும்படி இறைவன் கட்டளையிட்ட விபரமுள்ளது. அதையே இங்கே மௌலானா பிரஸ்தாபிக்கிறார்கள்.

"பரிசுத்த இதயம் .... பொக்கிஷமாகும்" என்பதில் பிரஸ்தாபத் திருவசனத்தின் அகமியத்தையே சுட்டிக்காட்டியுள்ளார்கள். சடலம் மண்ணாலான தாயத்துக்கூடு போன்றுள்ளது; அது தன்னுள் மறைவான பொக்கிஷமான ஒளியொன்றை வைத்துப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறது. அப்பொக்கிஷம்தான் தெய்வச் சுடரும்,

மனிதனின் ஆத்மீக சாரமும் ஆகும். அதைப் பீடித்துள்ள மயக்கம் அகற்றப்பட்டால், 'அவன் பேச்சு ஒளியாகவும், அவன் செயல்கள் ஒளியாகவும், அவன் ஆட்டம் அசைவு யாவும் ஒளியாகவும் ஆகி விடும்'; அவன் இதயத்தில் இறைவன் மட்டுமே குடியிருப்பான்.

435. பொறாமைக்காரன் பிறருக்குத் தீங்கிழைப்பதுடன் அதனால் தன் ஆத்ம சக்தியையே அழித்துக்கொள்பவனாயும் இருக்கிறான்.

440. "யூஸுஃபின் வாசனையை நான் இதோ நுகர்ந்து கொண்டிருப்பது உண்மை" (அத் 12 : வசனம் 94) என்ற திருகுர்ஆன் வசனத்தை மனத்தில்கொண்டு இந்தப் பாடல் எழுதப்பட்டுள்ளது.

441. ஆத்மீக உள்ளுணர்வற்றவன் மூக்கிலுண்டான பினீசம் போன்ற கோளாறால் மணத்தை முகர இயலாத நிலையிலுள்ளவனை ஒப்பான். எனவே, இவன் மூக்கற்றவனுக்கே சமமாகிறான்.

442. மெய்ப்பொருள் ஞானம் தெய்வ சம்மானமாக அருளப்படுவது. அதை அருளுபவனுக்கு நன்றி நவிலத்தவறுபவன் அதைப் பெறும் சக்தியைப் பறிகொடுத்துவிடுகிறான்.

443. நன்றி செலுத்துவோர் - இறைவனின் எல்லையற்ற கருணைக்காகச் சதாவும் அவனைத் துதித்துப் போற்றும் மெய்ஞானியர். அவர்கள் கையில் குளிப்பாட்டுவர் கையில் பிரேதத்தைப் போல் பணிவுள்ளவனாய் இரு.

444. "இறைவன் பாதையில் நடப்பவர்களை வழிகெடுக்கும் ஷைத்தானாக ஆகாதே! கடமையான வணக்கங்களில் சித்தசுத்தியுடன் நடந்துகொள்வோரை அதைவிட்டும் அப்பாலாக்காதே" என்று மௌலானா உபதேசிக்கிறார்கள்.

498. கற்கண்டும் பாஷாணமும் இவ்வுலகின் இரண்டு எதிரிடையான இயல்புகளைக் குறிப்பவை. இங்கே இறைவனின் கல்யாண குணங்களான ஜலால் (மாட்சி), ஜமால் (பேரழகு) ஆகிய இரண்டும் தமது புற உருவங்களில் வெளியாகின்றன. ஏகமானவனிலிருந்து புறத்தே நமக்குப் புலனாகும் அவனுடைய பல்வேறு அம்சங்களையும் கடக்காதவரை நாம்மெய்ஞானமெய்த இயலாது.

500. ஈஸா நபி (அலை) அவர்களுடைய மாசற்ற தன்மையையும், ஏகாக்கிர நிலையையும் அவர்களைப் பின்பற்றுவதாகச் சொல்பவர்கள் அறிந்துகொள்ள வேண்டுமன்றோ! இறைவனுடைய 'ஆகுக!' என்ற சொல்லைக்கொண்டு உண்டான 'ரூஹுல்லாஹ்' (அல்லாஹ்வின் ஜீவன்) அவர்கள்.

*501. ஈஸா நபி (அலை) அவர்கள் செய்த அற்புதம் ஒன்று இதில் தொக்கிநிற்கிறது. அவர்கள் பள்ளிப்படிப்பை முடித்த பின்னர், அவர்களின் தாயார் அவர்களைச் சாயத்தொழிலாளி ஒருவரிடம் ஒப்படைத்துத் துணிகளுக்குச் சாயம் ஏற்றும் தொழிலைத் தமது மகனுக்குக் கற்றுத்தரும்படி ஏற்பாடு செய்தார்கள். இவ்விதம் அவர்கள் சாயத் தொழில் கற்றுவருகையில் ஒருநாள் அவர்கள் ஆசிரியர், அவர்களை நோக்கி, "இந்தத் தொழிலை நீ இப்போது நன்கு கற்றுக்கொண்டுள்ளாய். நான் வெளியூர் போய்வரவேண்டிய தாயுள்ளது. இதோ சாயமேற்றப்பட வேண்டிய துணிகள் சில உள்ளன. இவை ஒவ்வொன்றிலும் என்னென்ன சாயமேற்றப்பட வேண்டும் என்று அவற்றில் அடையாளமிட்டுள்ளேன். நான் வருமுன் நீ அவற்றைச் சாயமேற்றி வை!" என்று உத்தரவிட்டு வெளியூர் போய்விட்டார். அவர் போனதும், ஈஸா (அலை) அந்தத் துணிகள் அனைத்தையும் ஒரே சாயத்தொட்டியுள் அள்ளிப் போட்டு, "இறைவன் அருளால், இவை யாவும் என் நாட்டப் படியான வர்ணமுடையவைகளாகட்டும்!" என்று கூறினார்கள். அவர்களுடைய ஆசிரியர் பத்துநாட்களில் திரும்பி வந்தார். "துணிகளை என்ன செய்தாய்?" என்று அவர் கேட்டார். அவற்றுக்கு தாம் சாயமேற்றிய விதத்தை ஈஸா (அலை) தெரிவித்தார்கள். "ஐயோ நீ என் துணிகளை நாசமாக்கிவிட்டாயே!" என்று அவர் வேதனைப் பட்டார். உடனே ஈஸா (அலை) அவரைச் சாயத் தொட்டியின் பக்கம் அழைத்துச்சென்று, அதனுள்ளிருந்து ஒவ்வொரு துணியாக வெளியிலெடுத்தார்கள். தமது ஆசான் கட்டளையிட்டபடியே அந்தத் துணிகள் ஒவ்வொன்றும் சாயமேற்றப்பட்டிருப்பதைக் கண்டு அவர் மலைத்துவிட்டார். அவரும், அவருடைய சீடர்களும் ஈஸா (அலை) அவர்களுக்கு வழிபட்டவர்களாகி அவர்களுடைய 'சுவிசேஷக்காரர்' (ஹவாரியூன்)களும் ஆனார்கள். இந்த விபரம் 'கஸஸுல் அன்பியா' என்ற நூலில் உள்ளது. ஆனால் ஹக்கீம் ஸனாயீயின் தகவலின்படி, ஈஸா (அலை) அவர்கள் பலவர்ணங் களையும் ஒன்றுசேர்த்து அவற்றில் துணிகளைச் சாயமேற்றியபின் எடுத்துப்பார்த்ததில் அவை யாவும் தூய்மையான வெண்மை யுடையவையாய் இருந்தன என்று சொல்லப்பட்டுள்ளது. இந்தப் பிந்திய விபரத்தையே மௌலானா ஏற்றுள்ளார்கள் என்பது அவர்களுடைய இந்தப் பாடலிலிருந்து விளங்குகிறது.*

*மெய்யான நாதாக்களுடைய இதயம் அதை அணுகுவோரை இவ்வுலக வாழ்வின் மாசுகளைவிட்டே சுத்தமானதாக ஆக்கிவிடும் தன்மையாகும்.*

*502-503. இம்மையின் பந்தபாசங்களில் உழல்பவர்கள் சலிப் புக்கு ஆளாவர். ஏகத்துவத்திலேயே திளைத்துக்கொண்டிருக்கும்*

நாதாக்கள், மீன் தண்ணீருள் இருப்பதுபோல, சலிப்பற்றவர்களாக (ஏகத்துவத்தில் ஒன்றியவர்களாக) இருப்பார்கள். ஆத்மாவே அவர்களின் உயிர்; உருவமுள்ள சடதத்துவ உலகையும், அதிலுள்ள வண்ணங்களையும் அவர்கள் வெறுத்து ஒதுக்கிவிடுகின்றனர்.

504. நித்தியமானதற்கும் இவ்வுலகின் உவமைகளைச் சங்கேதமாகக் கூறிக்காட்ட நேர்ந்ததற்காக மௌலானா அவர்கள் தங்களையே நொந்துகொள்கிறார்கள். இறைவனைக் கடலாகவும், உலகில் உண்டாகி மறையும் யாவையும் அதில் எழுந்து மறையும் அலையாகவும் மெய்ஞ்ஞானிகள் கொள்வதுண்டு. இந்தக் கருத்தை மௌலானாவும் பல இடங்களில் வெளியிட்டுளளார்கள்.

512-513. பிரபஞ்சத்திலுள்ள யாவும் இறைவனின் கட்டளைக்குக் கீழ்ப்படிகின்றன; அவனைத் துதித்துப் புகழ்கின்றன என்று திரு குர்ஆனில் பல்வேறு இடங்களில் (உதாரணமாக அத் 17: வசனம் 44 பார்க்க.) விவரிக்கப்பட்டுள்ளது. ஒருவனைத் துதிப்பது என்றால், அவனைப்பற்றி அறியாமல் செய்யமுடியாதல்லவா! எனவே, சிருஷ்டிகள் யாவும், தம்மைப் படைத்தவனை ('ஆகுக!' என்றதும், ஆகிவிட்டவையான அவை தம் சிருஷ்டியாளனை) அறிந்துதான் துதித்துப் புகழவேண்டும். அவை அவனை உணர்கின்றன, அவன் கட்டளைகளுக்குப் பணிகின்றன என்பது நாதாக்கள் சிலருடைய கருத்தாகும். இறைவனால் உயிரூட்டப்பட்ட யாவும் தத்தம் அசல் இயல்புக்கு ஏற்ற முறையில் இறைவனைத் துதித்து அவனுக்கு வழிபடுகின்றன என்று ஷைகுல் அக்பர் இப்னுல் அரபி (ரஹ்) தங்கள் 'புஸூஸுல் ஹிக்'மில் எழுதியுள்ளார்கள். (தங்கம், வெள்ளி, இரும்பு போன்ற) கனிப்பொருள்கள் சிருஷ்டியில் உயரிய நிலையிலுள்ளவை; அடுத்துத் தாவர இனமும், அதையடுத்துப் பிராணி இனமும் நிற்கின்றன. இவை யாவும் ஞானதிருஷ்டி மூலம் (கஷ்பு மூலம்) இறைவனை அறிகின்றன. ஆனால், மனிதனோ தன் அறிவுக்கும், சிந்தனைக்கும், நம்பிக்கைகளுக்கும் அடிமையாகிக்கிடப்பதால் அவன் இவற்றை விட்டு விடுபடும்வரை இந்த ஞானதிருஷ்டியைப் பெறமுடியவில்லை. அவனுடைய கீழான மனம் (நப்ஸ்) அவன் தன் சிருஷ்டியாளனை அறியாவண்ணம் அவனைத் தடுத்துக் கொண்டிருக்கிறது. அதை அவன் அடக்கினால், இறையுணர்வும், அதனால் கிட்டும் பாக்கியங்களும் சாத்தியமாகும்.

515-516. தெய்வீக அருளால் உண்டாகும் மாபெரும் மாற்றத்தை இந்தப் பாடல்கள் விவரிக்கின்றன. இந்த அருள் மூன்றாந்தர அறிவைத் தெய்வஞானமாக (கஷ்பு ஆக) வும், சாதாரண மனப் பயிற்சியை தீர்க்கதிருஷ்டிவாய்ந்த தன்மையதாகவும், புலன்களைச்

சேர்ந்த அறியாமை என்ற சாதாரணக் கல்லை, ஆத்மீக வைடூரிய மாகவும் மாற்றி விடுகிறது.

517. தனிப்பட்ட முறையில் ஜீவித்திருப்பதாகவும், செயல்பட்டுக் கொண்டிருப்பதாகவும் எண்ணுவதே எகத்துவத்தை மறுப்பதுதான். தன் உள்ளமையை அவனுடையதால் மூழ்கடிப்பதுதானன்றோ ஏகத்துவத்தை யதார்த்தமாக உணர்ந்துவிட்டதன் அர்த்தம்! அவ்விதமன்றி, தன் உள்ளமையின் உணர்வுடன் அவனைப் புகழ்வதே ஒரு பாவம்தான் என்பது ஞானியரின் கருத்தாகும்.

519-520. ஜடதத்துவ உலகம் இறைவனின் கல்யாண குணங் களையும், தெய்வீக சாரத்தையும் வெளியிட்டுக் காட்டிக் கொண்டு தான் இருக்கிறது. எனவே அதைப் பனிக்கட்டிக்கு உவமானமாகச் சொல்லலாம். பனிக்கட்டி யதார்த்தத்தில் தண்ணீர்தானே! ஆனால், அது தன்னுடைய திடப்பொருளான தன்மையிலிருக்கும்வரை இறைவனைவிட்டுப் பிரிக்கப்பட்டதாகவும்தான் இருக்கும். பாரஸீ கத்தில் துக்கத்தைக் காட்டக் கருநீல உடையணிவது வழக்கம்.

523. தெய்வ ஒளியை அடையப்பெற்ற மெய்ஞானியின் இதயம் இறைவனின் கல்யாண குணங்களுடையவும், சாரத்துடையவும் அகண்டமான உலகங்களை (மலக்கூத், ஜபரூத்) கண்டு அதில் திளைக்கிறது. இந்த ஜடதத்துவ உலகு அந்த உலகங்களோடு ஒப்பிடப்படின் மிகவும் அற்பமானதாய் இருக்கிறது.

526. "இவ்வுலகம் மெய்விஸ்வாசிகளுக்குச் சிறைச் சாலை யாகவும் பஞ்சமுண்டாக்குவதாகவும் உள்ளது; அவர்கள் இதை விட்டு விடுதலையானவர்களாயின் சிறையிலிருந்தும் பஞ்சத்தி லிருந்தும் தப்பியவர்களாவர்" என்ற ஹதீஸின் கருத்தை இப்பாட லில் காண்க.

527. மூஸா (அலை) அவர்கள் தாங்கள் விடுவித்த பனீ இஸ்ராயீல் கூட்டத்தாரோடு நீல நதிக் கரையை அடைந்த சமயம், அவர்கள் யாவரையும் அழித்து ஒழிப்பதற்காக பிர்அவ்ன் தன் படை பலம் முழுவதையும் திரட்டிக்கொண்டு வந்தான். மூஸா (அலை) இறைவன் பெயரைச் சொல்லித் தங்கள் கைத்தடியை உயர்த்தியதும், அவர்களுக்கும் அவர்கள் கூட்டத்தாருக்கும் விலகி வழிவிட்ட ஆறு, பிர்அவ்ன் கூட்டத்தார் தன்னை அணுகியதும் அவர்கள் அனை வரையும் தன்னில் மூழ்கடித்துவிட்டது. இந்தப் பாடலும், அடுத்த இரண்டு பாடல்களும் நபிமார்கள் காட்டிய அற்புதங்கள் மூலம் இறைவனின் சர்வசக்தி வெளிப்பட்டுள்ளதைச் சுட்டிக் காட்டு கின்றன.

529. நபிபெருமானார்மூலம் திரு குர்ஆன் இறக்கியருளப் பட்டதையும் அது சாதித்த அற்புதத்தையும் குறிப்பிடுகிறது. 'உம்மி' என்பது எழுதப் படிக்கத் தெரியாத பெருமானாரைக் குறிப்பதாகும். (திரு குர்ஆன் அத்7:வசனம் 158ன் பிற்பகுதியில் இறைவன் நபிபெருமானாருக்கு இந்தப் பெயரை வழங்கியுள்ளான்.)

காலத்துக்கு தக்கவாறு அவ்வப்போது தோன்றிய நபிமார் களும் ஜனங்களின் மனத்தை இறைவனின் சர்வசக்தியின் பக்கல் இழுப்பதற்கான அற்புதங்களைக் காட்டியுள்ளனர். எகிப்து தேசத்தில் கண்கட்டு வித்தைகள் மிகைத்து, ஜனங்கள் இதைவிடச் சிறந்த அற்புதம் எதுவுமில்லை என்று எண்ணிக்கொண்டிருந்த சமயம், மூஸா (அலை) அவர்கள் தோன்றி தங்கள் கைத்தடியால், அந்த மந்திரவாதிகளின் வித்தைகளெல்லாம் வெறும் குழந்தைப் பிள்ளைகளின் விளையாட்டுத்தான் என்று நிரூபித்து ஜனங்களை இறைவனின் மார்க்கத்தின் பக்கம் திருப்பினார்கள். கிரேக்க வைத்திய சிகிச்சை முறையை மிஞ்சியது எதுவுமே இல்லை என்று ஜனங்கள் எண்ணிக்கொண்டிருந்த காலையில் ஈஸா (அலை) அவர்கள் இறந்தவர்களுக்கு உயிர் வழங்கி இறைவனின் மாட்சியை ஜனங்களுக்கு உணர்த்தினார்கள். நபிபெருமானார் அவதரிக்கும் வரை மக்காவில் வாழ்ந்த மக்கள் கவிதைகளையே மகா உன்னத மானவையாகக் கருதிக் கொண்டாடிவந்தனர். கஃபத்துல்லா விலேயே சிருங்காரரஸம் மிக்க இப்பாடல்கள் எழுதித் தொங்க விடப்படும் அளவுக்கு முக்கியத்துவமடைந்திருந்தன. ஆனால் நபிபெருமானார்மூலம் திரு குர்ஆன் இறங்கியதும், அந்தப் பாடல்களில் மக்களுக்கு இருந்த ஈடுபாடே போய்விட்டது. திரு குர்ஆன் வசனங்களின்முன் எதுவும் நிற்கமுடியாது என்றாயிற்று. விஷேச கவித்துவமுடைய பாடல்கள் என்று கஃபத்துல்லாஹ்வில் கட்டிவிடப்பட்ட பாடல்களை எழுதிய லபீத் இப்னு ராபிய்யா போன்றவர்களே திரு குர்ஆனின் ஆரம்ப வசனங்களைப் படித்து அதில் மனம் பறிகொடுத்து முஸ்லிம்களாகிவிட்டனர்.

531. கபடப் பறவை என்பது எதையும் நுட்பமாகக் கண்டு கொள்ளக் கூடிய பறவை. இதைச் சாதாரணமாகக் கண்ணியில் அகப்படுத்துவது கடினம். ஆனால், மந்திரியின் சூழ்ச்சியோ இத்த கைய பறவையையும் (இதுபோன்ற மதிநுட்பமுடையோரையும்) கண்ணியில் மாட்டிக்கொண்டு தலைகீழாகத் தொங்கச்செய்யும் தன்மையதாய் இருந்தது.

532. இந்தப் பாடலின் பிற்பகுதியில், "எனக்காக இதயம் உடைந்தவர்களோடு நான் இருக்கிறேன்" என்ற ஹதீஸ் குத்ஸியின் கருத்து எடுத்தாளப்பட்டுள்ளது.

535. வெட்கி முகம் வெளுத்தபெண்-ஆதமுடைய சேஷ்டைக் கார மக்களைவிடத் தாங்கள் உயர்ந்தவர்கள் என்று அமரர்கள் ஜம்பம் பேசியபோது, இறைவன் அவர்களில் ஹாரூத் மாரூத் என்ற இருவருக்குக் காம உணர்வூட்டி, அவர்களைப் பூவுலகுக்கு அனுப்பினான். அவர்கள் அழகிய பெண்ணொருத்தியைக் கண்டு அவள் மீது மோகங்கொண்டனர். அவளோ, அவர்கள் வானுலகுக்கு ஏறுவதற்கான சக்தியருளும் மொழியாகிய ரகசியத்தைத் தனக்கு அவர்கள் அறிவித்துக் கொடுத்தாலொழிய அவர்கள் இச்சைக்கு இணங்கமுடியாது என்றாள். உடனே அவர்கள் அந்தத்தெய்வ ரகசியத்தை அவர்களுக்கு அறிவித்துக்கொடுத்தனர். அவர்கள் தமது காமத்தைத் தீர்த்துக்கொண்ட பின், அவன் அந்த ரகசியத்தின் உதவியால் வானுலகு சென்றாள். இறைவன் அவளை வெள்ளியாக (ஜுஹ்ராவாக) ஆக்கிவிட்டான். ஹாரூத்தும், மாரூத்தும் தமது பாவங்களுக்காக மறுமையில் சதாவும் துன்பமநுபவிப்பதற்குப் பதிலாக இம்மையிலேயே பாவமன்னிப்புத் தேடுவதை நாடினர். எனவே, பாபிலோனில் குழியொன்றில் அவர்கள் தலைகீழாகத் தொங்கியவாறு பாவமன்னிப்புக் கேட்பவர்களாய் இருக்கின்றனர். (ஹாரூத், மாரூத் ஆகிய இருவரும் இவ்வுலகில் தோன்றினர், அது நல்லோரையும் கெட்டோரையும் சோதிப்பதற்காகத் தான் என்ற அளவுக்கே அவர்கள் வரலாறு திரு குர்ஆனில் (அத். 2, வசனம் 102) உள்ளது. இதில் கண்ட மற்ற விபரங்கள் 'கஸஸுல் அன்பியா' என்ற நூலில் உள்ளதாம்.)

537. ஒரு பெண் ஒரு நக்ஷத்திரமாக உருமாற்றப்பட்டது அவளுக்கு விகாரமானதாயின், ஆண் ஒருவன் தன் ஆத்மீகத் தன்மைகளைக் கொஞ்சங் கொஞ்சமாக அழித்து நாசமாக்குவது அவனுக்கு எத்துணை பெரிய விகாரமான உருமாற்றமாக இருக்க வேண்டும்.

538. "நாம் மனிதனை அழகான அமைப்பில் சிருஷ்டித்தோம். பின்னர், அவனைக் கடையனிலும் கடையனாக ஆக்கிவிட்டோம்" (அத் 95 : வசனம் 4,5) என்ற திரு குர்ஆன் வசனங்களின் கருத்தைக் காண்க.

540. வானசாஸ்திரிகளின் ஆராய்ச்சிகள் விண்மீன்கள் பற்றிய ஹேஷ்யங்களுக்கு உட்பட்டவை. லோகாயதத்துக்கும் மெய்ஞானத் துக்கும், இம்மைக்கும் மறுமைக்கும் உள்ள வேற்றுமையைச் சுட்டிக்காட்டுவதற்காக மௌலானா அவர்கள் வானசாஸ்திரியின் ஆராய்ச்சியை இங்கே குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்கள்.

"ஆதம் (அலை) அவர்களில் இறைவன் தன் சுடரை (தஜல் லியை) வெளியாக்கிக்காட்டியுள்ளான். எனவே, அவர்கள் உருவுக்குமுன் அமரர்கள் சாஷ்டாங்கம் செய்தனர் என்பதை நீ மறக்கலாமா?" என்று அவர்கள் மனிதனை நோக்கி வினவுகிறார்கள்.

541 - 544. தெய்வக் கோபம் இம்மையின் சகல சுகபோகங் களையும் ஒரே கணத்தில் - சூரியனில் பட்ட பனிபோல மறைந்து போகச்செய்கிறது. இதுபோன்ற தெய்வக் கருணையின் ஒரு பொறி எண்ணற்ற பாவாத்மாக்களின் பாவங்களை எரித்துப் பொசுக்கி விடுவதும் சாத்தியமே.

545. இறைவன் செயலுக்கு எந்தக் கட்டுப்பாடுமில்லை. அவன் தான் நாடியதைச் செய்கிறான். அவன் காரண கர்த்தன் (முஸப்பிபுல் அஸ்பாப்), படிவங்களை மாற்றுபவன் (முபத்தில் அஃயான்) ஆவான்.

547. இப்ராஹீம் நபி (அலை) அவர்கள், அவர்களுடைய கூட்டத்தார் வணங்கிய விக்கிரஹங்களை உடைத்துவிட்டார்கள் என்பதற்காக நம்ரூத்து அவர்களை நெருப்பில் தள்ள உத்தர விட்டான். அவர்கள் அந்த நெருப்புக் குண்டத்தில் தள்ளப்பட்ட போது, இறைவன் அதை அவர்களுக்கு இனிமையான பூங்காவாக ஆக்கியருளினான். (திரு குர்ஆன் அத். 21: வசனம் 69.)

548. சகல காரண சாதனங்களையும் சிருஷ்டித்தவனான இறைவன், இரண்டாந்தரக் காரண சாதனங்கள்மூலம் தன் செயல்களை வெளிப்படுத்துகிறான். ஆயினும், இன்ன காரணத் துக்கு இன்ன பயன் என்று உண்டாக்குவதும், உண்டாக்காம லிருப்பதும் முற்றும் அவன் திருச் சித்தத்தைப் பொறுத்ததாகும். வழக்க விரோதமான செயல் எதுவும் நிகழ்ந்துவிடின் மெய்ஞானி யானவர் சத்தியசொரூபனின் முன் நேருக்குநேர் கொண்டுபோய் நிறுத்தப்படுகிறார். அப்போது அவர் அறிவு பிரமிப்படைகிறது; இறைவனின் நேரடியான செயல்படலை அவர் காண்கிறார்; இறை வனையன்றி வேறு எதையும் காணாத நிலையில் இறைவன் உண்டாக்கும் சகல இரண்டாந்தரக் காரணங்களும் (காரண சாதனங்களும்) வெறும் பிரமையானவை என்று அவர் கண்டு கொள்கிறார்.

565. வெறும் ஏட்டுப் படிப்பால் மட்டும் மெய்ஞானம் உண்டாகிவிட முடியாது. அதற்குக் குருநாதர் காட்டிய வழியில் நடந்து இதய உதிப்புப் பெறவேண்டும் என்பதை மகான்கள் பலரும் வற்புறுத்தியுள்ளனர். (இமாம் கஸ்ஸாலீ எழுதிய 'பிழையிலிருந்து விடுதலை' பார்க்க.)

566. "புலன்களின் கதவுகளை அடையுங்கள், மனத்திலுள்ள உருவங்களை அகற்றுங்கள்; அப்போது தெய்வ உதிப்பாகிய ஒளி உங்கள் இதயத்தில் படலாம்" என்று ஞான நாதர்கள் அருளியுள்ளதை மந்திரியும் கூறுகிறான்.

568. "சாந்தியடைந்த ஆத்மாவே உன் இறைவனிடம் திருப்தியடைந்ததாகவும், அவன் திருப்தியைப் பெற்றதாகவும் அவனிடம் திரும்புவாயாக!" (அத். 89: வசனங்கள் 27, 28) என்ற திருகுர்ஆன் வசனங்களின் கருத்து இங்கே கையாளப்பட்டுள்ளது.

571. ஈஸா (அலை) அவர்கள் கடல்மீது நடந்த விபரம் பலராலும் விவரிக்கப்பட்டுள்ளது. புலன் அறிவும், சடதத்துவ உருவமும், பன்மையான தன்மையும் தெய்வ உதிப்புடனும் யதார்த்த நிலையுடனும், ஏகத்துவத்துடனும் இங்கே எதிர் எதிராக்கிக் காட்டப்பட்டன. (ஈஸா (அலை) அவர்களுடைய மெய்யுறுதி (யகீன்) மட்டும் இன்னும் அதிகமானதாய் இருந்திருப்பின் அவர்கள் காற்றின்மீதுகூட நடந்திருக்க முடியும் என்று நபிபெருமானார் அருளியுள்ளார்கள்.)

574. ஜீவனின் தண்ணீர் (ஆபெ ஹயாத்) கிலுரு (அலை) அவர்களால் இருண்ட பூமியில் கண்டுபிடிக்கப்பட்டதென்றும், அதைப் பருகியதாலேயே அவர்கள் நித்தியத்துவமடைந்தார்களென்றும் சொல்லப்படுவதுண்டு.

577. தற்பெருமை பேசும், 'தான்' என்னும் தன்மையை அதிகப்படுத்தும் பேச்சு - தூசியால் கண்ணாடி வெளிச்சத்தைப் பிரதிபலிக்காது போவதுபோல - இதயத்தை இருளடையச் செய்கிறது. மௌனமாய் இருப்பது என்பது மெய்நிலை காணும் பாதையில் பிரமிப்படைதலும், தன்னை இழத்தலுமாகும்.

579. "எங்கள் இறைவா, நாங்கள் தாங்கமுடியாத கஷ்டங்களை எங்கள்மீது சுமத்திவிடாதே!" (திருகுர்ஆன் அத். 2: வசனம் 286.)

580. உயரிய மெய்ஞான உண்மைகளை யாவரும் இலகுவில் விளங்கிக்கொள்ளலாம் என்பது சாத்தியமன்று. மெய்ஞானப் பாதையில் தங்களுக்கு வழிகாட்டியொருவர் தேவை என்றும், மெய்யருள் பெறத் தாங்கள் இன்னும் பக்குவம் பெற்றுவிடவில்லை என்றும் சீடர்கள் மந்திரியிடம் முறையிடுகின்றனர்.

587. இதில் மந்திரியை உலகம் முழுவதற்கும் ஒளி நல்கும் சம்பூரண மனிதனாக அவன் சீடர்கள் பேசுகின்றனர்.

590. உயிரைப் பொறுத்தவரை உடல் பெயரிடப்பட்ட பொருளின் யதார்த்தத்தை (மஅனாவை) மறைக்கும் பெயர் (இஸ்மு) ஆகவே விளங்குகிறது.

592. சம்பூரண மனிதனுடைய சகல சொல்லும், செயலும் இறைவனால் உதிப்பூட்டப்பட்டவையாகவே இருக்கும். அதனால் அவர் செய்யும் எதையும், ஏன் எப்படி என்று வினவுதல் கூடாது.

598. மௌலானா அவர்கள் தங்கள் சொந்தக் கருத்தாக இதை எழுதுகிறார்கள். யாவற்றுக்குமே சிருஷ்டிகள் சிருஷ்டியாளனின் துணையைப் பெறவேண்டியதாய் இருப்பதை அவர்கள் வற்புறுத்து கிறார்கள்.

602. ஜடதத்துவ உலகம் சம்பந்தப்பட்டவரை மனிதன் ஜீவிதமற்றவன்தான். அவன் பரிபூரணப் பொருளிடமிருந்து பெற்றுள்ள நீர்க்குமிழிபோன்ற ஜீவிதம் வெறும் நிழல்தான். ஒரே ஒரு யதார்த்த சொரூபியான இறைவன் இந்த ஜடதத்துவத்தைத் தோன்றும்படி செய்துள்ளான். அல்லது அவற்றின் வடிவில் தன் கல்யாண குணங்களும் செயல்களும் வெளிப்படுவதற்காக அவ்வாறு தன்னை வெளியாக்கிக் காட்டுகிறான்.

603-604. கொடிகளில் சிங்கம் பொறிக்கப்பட்டிருக்கும். காற்றின் அசைவால் அந்தக் கொடிகள் படபடக்கும்போது அவற்றில் வரையப்பட்டுள்ள சிங்கங்களும் துள்ளுவதுபோல் தெரிகிறது. யதார்த்தத்தில் அவற்றுக்கு உயிருமில்லை; எதுவுமில்லை. அதுபோன்றே மனிதனுடைய ஆட்டம் அசைவு யாவும் இறைவ னின் செயல்களால் உண்டாகுபவைதாம். அவற்றுக்கென்று ஜடதத்துவத்தில் தனி ஜீவிதமில்லை.

606-610. இந்த அடிகளில் வெளியிடப்பட்ட மூலக்கருத்து ஷைக்குல் அக்பர் இப்னுல் அரபி (ரஹ்) அவர்களுடையதாகும். ஏகன் (அல்-ஹக்கு, யதார்த்தன்) சகலவற்றின் சாரமானவனாயும் இருக்கலாம், அல்லது, அந்தச் சாரத்தின்மூலம் வெளிப்படும் தோற்றமுடையவன் (அல்-கல்கு; தோற்றம், உலகம், பலவானது) ஆகவும் இருக்கலாம் என்பது அவர்களுடைய தத்துவஞான விளக்கத்தின் ஒரு கருத்தாகும். இந்த ஏகன் மட்டுமே ஜீவித்திருப் பவன்; அவனையன்றி வேறு எதுவுமில்லை. ‘ஜீவன் இல்லாதது’ என்பது உண்மையிலேயே ஜீவிதமற்ற யாவையும் குறிப்பதாகும். அவை இருக்கவே முடியாது. எனினும், ஒரு கருத்தில் அவை ஜீவிதமற்றவையாயினும் ஒரு கருத்தில் அவற்றுக்கு ஜீவிதம் இருப்பதாக வைத்துக்கொண்டே விஷய விளக்கம் செய்ய வேண்டுவதாய் இருக்கிறது. உதாரணமாக, புற உலகுக்கு சாரம் என்ற முறையில் ஜீவிதம் இல்லாவிடினும், ஓர் உருவமுடையது என்ற முறையில் ஜீவிதமுண்டு. இதுபோன்றே, அறிவு உலகம் உருவ முடையதாய் இல்லாவிடினும், ஒரு கருத்து என்ற முறையில் அது ஜீவிதமுடையதாம்.

606. 'உள்ளமையற்றவை' என்பது பொருள்களின் மறைவான சாரங்கள் உண்டாகுமுன் அவை இறைவனின் அறிவில் ஒரு கருத்தாக நின்ற தன்மையை (அஃயானெ தாபிதாவைக்) குறிப்பதாகும். அவை பின்னர் யதார்த்தமான ஜீவிதமுடையவையாக ஆக்கப்பட்டன. இறைவன் இந்த 'உள்ளமையற்றது' தன்னை நேசிக்கும்படி செய்தான். 'அஃயானெ தாபிதா' ஒவ்வொன்றுமே அவனால் அருளப்பட்ட ஜீவிதத்தைப் பெறத் தகுதிவாய்ந்ததாக அவனால் ஆக்கப்பட்டிருந்தது. (இப்னுல் அரபியின் 'புஸூஸ்' பார்க்க.)

610. நாங்கள் வெளிப்படையில் ஜீவித்திராத நிலையில், நாங்கள் வெளிப்படையில் உன்னிடம் வேண்டிக்கொள்ளாத நிலையில் எங்கள் மறைவான வேண்டுதலால் நாங்கள் யதார்த்த ஜீவிதமடைந்தோம். ஜீவிதம் (உஜூது) இறைவனின் அருட்கொடை; வேண்டுதல் (சுவால்) மூலமே தெய்வ அருட்கொடைகளை அடையப்பெற முடியும். அந்த வேண்டுதல் வெளிப்படையானதாகவோ, மறைவானதாகவோ (வெளிப்படையாக இல்லாததாகவோ) இருக்கலாம் அல்லது கேட்பவனின் நிலையை அவன் கேட்காவிட்டாலும் அவன் தேவையை உணர்த்துவதாய் இருக்கலாம். உதாரணமாக, வெளியில் உலர்ந்த செடி தான் கேளாமலே, தன் நிலையாலே தனக்குத் தண்ணீர் தேவை என்பதை உணர்த்துகிறது. மண்ணுள் புதைந்த வித்து, தான் முளைத்து வளர்வதை மறைமுகமாக வேண்டுகிறது.

615. பத்ரு யுத்தம் நடந்தபோது, நபிபெருமானார் (ஸல்) இறைவன் உத்தரவு கொண்டு ஒருபிடி மண்ணை அள்ளி எதிரிகள் மீது வீசினார்கள். உடனே முஸ்லிம்கள்முன் நின்று போராட முடியாதவர்களாக எதிரிகள் தோற்று ஓடலாயினர். அதை எறிந்தவர்கள் நபிபெருமானார் தாமாயினும் யதார்த்தத்தில் அதை எறிந்தவன் இறைவன்தான். "மெய்விஸ்வாசிகளுக்கு அதன்மூலம் தன் நல்லருள் பற்றி அத்தாட்சியைக் காட்டுவதற்காகவே" இறைவனால் அவ்விதம் செய்யப்பட்டது என்று திரு குர்ஆன் (அத். 8: வசனம் 17) கூறுகிறது. பிரபஞ்சத்திலுள்ள சகல நடவடிக்கைகளுக்குமே மூலஸ்தானமானவன் இறைவன்தான் என்பதற்காக இது இங்கே மௌலானாவால் குறிப்பிடப்பட்டுள்ளது. பொதுவாக நபிமார்களும், நாதாக்களும் செயல்படுவது இறைவனில் ஒன்றியவர்களான நிலையில்தான். எனவே, அவர்கள் கையைப் பற்றினாலே இறைவன் கரத்தைப் பற்றியதாகவே ஆகும் என்பதற்கு ஆதாரமாக இந்த வசனம் குறிப்பிடப்படுவதுண்டு.

616. இறைவனின் சர்வ சக்தனான தன்மை வெளியாக மனிதன் ஒரு கருவியாகத்தான் இருக்கிறான். இவன் அந்தச் செயல் தன்னிலிருந்து உண்டானதாக நினைத்துக்கொள்கிறான்.

617. "நம் செயல்கள் யாவும் இறைவனாலேயே உண்டாக்கப் பட்டு, சித்தப்படுத்தப்பட்டு, வெளியாக்கப்படுகின்றன. எனவே, அவற்றைக் கட்டுப்படுத்த நம்மால் முடியாது. அதாவது, மனிதன் தன் விருப்பப்படி எதையும் செய்ய முடியாது;அவன் செய்யும் யாவும் தெய்வ நிர்ப்பந்தத்தால் (ஜபரால்) தான் நடக்கின்றன" என்று கூறும் கொள்கையுடைய ஒரு கூட்டத்தார் உண்டு. இவர்கள் ஜப்பாரியாக்கள் எனப்படுவர். கீழ்ப்படிவதும், கீழ்ப்படியாமலிருப் பதும் இறைவனாலேயே திட்டப்படுத்தப்பட்டு விட்டதால், மனிதன் பலஹீனமானவனாயும், இறைவனே சர்வ சக்தனாகவும் இருப்பதை தெய்வ உத்தரவுகள் நிரூபிக்காதவரை அவை பயனற்றவையாக ஆகிவிடும் என்பது இவர்களுடைய வாதம்.

இவர்களுக்கு எதிரிடையான ஒரு கூட்டத்தாருமுண்டு. இறைவன் மனிதனுக்கு வேண்டுமளவு சுதந்தரமளித்துள்ளான். மனிதன் அதன் உதவியால் தான் நாடியபடி நடந்துகொள்ளலாம். தன் சுயசித்தப்படி எதையும் செய்யலாம் என்பது இவர்கள் கோட்பாடு. இவ்விரண்டும் தவறான சித்தாந்தங்களாகும். இவற்றுக்கு நடுவான வழியில் நடப்பதுதான் ஷரீஅத்துடன் இணைந்த போக்காகும். மனிதன் தன் செயல்களைத் தானே சிருஷ்டித்துக்கொள்ளவுமில்லை. நிர்ப்பந்தப்படுத்தப்படவுமில்லை. மனிதனிடமிருந்து வெளிப்படும் செயல்களை உண்டாக்குபவன் இறைவன்தான். அதில் மனிதனுக்கும் சுயமாக நடக்கும் இஷ்டபூர் வத்துக்கு இடமுண்டு - இந்தக் கொள்கையையே மௌலானா அவர்கள் பல்வேறு இடங்களிலும் வற்புறுத்துகிறார்கள்.

இறைவன் திருகுர்ஆன் (அத். 59: வசனம் 23ல்) தன்னை 'ஜப்பார்' (வற்புறுத்துவோன்) என்றும் அழைத்துக்கொள்கிறான். நாம் அவன் அடியார்கள், முற்றும் அவன் திருச்சித்தத்துக்கு உடன்பட்டவர்கள்; அவன் முன் கெஞ்சிப் பிரார்த்திப்பதையன்றி நமக்கு வேறு புகலிடமில்லை என்பதை நமக்கு நினைவூட்டுவதற் காகவே அவன் தன் அழகிய பெயர்களில் இதையும் ஒன்றாகக் கொண்டுள்ளான்.

621. நாம் சுதந்தரமானவர்களாக இருப்பதுபோல் நமக்கு உணர்வு உண்டாகக் காரணம் நமது அறியாமைதான் என்று ஜப்பாரிய்யாக்கள் வாதிக்கின்றனர். 'இறைவனின் சந்திரன்' சுயசித்தம் என்ற மேகத்தால் மறையுண்டிருப்பினும் ஒரு கணம்கூடப் பிரகாசியாமலிருப்பதில்லை என்பது பாட்டின் கருத்தாகும்.

626 - 641. ஜப்பாரிய்யாக்களுக்கு இந்த அடிகளில் பதில் தரப்பட்டுள்ளது. நீ பிணியுற்று, வேதனையால் துடிக்கும்போது உன் மனச்சாட்சி விழித்துக்கொள்கிறது; பச்சாதாபம் உன்னை

ஆட்கொள்கிறது; அந்த நிலையில் நீ உன் பாவங்கள் மன்னிக்கப் படுவதற்காகக் கண்ணீர் வடித்துக் கதறுகிறாய். இவை தானாக எதுவுமே செய்யமுடியாத பாவாத்மா ஒருவனின் உணர்வுகளும், செயல்களுமாகுமா? மேலும், நிர்ப்பந்தத்துக்கு ஆளாகிச் செயல்படு வதாகவே நீ உணர்ந்தாலும் அதுபற்றிய அறிகுறி எதையும் காட்டுகிறாயில்லையே! நீ மிகவும் பணிவும் தாழ்வும் காட்டுகிறாயா? நிர்க்கதியானவர்களைக் கொடுமைப்படுத்தாமலிருக்கிறாயா? இல்லையே! இந்த விஷயங்களில் நீ உன் சொந்த இச்சைகளைத் தானே பூர்த்திசெய்து கொள்கிறாய்! நேர்மையான அமல்களைச் செய்யும்படி அழைக்கப்பட்டால் மட்டும் 'நிர்ப்பந்த' வாதத்தைக் கையாள்கிறாய். நபிமார்களோ இதற்கு நேர் எதிரிடையான நடைமுறையைக் கடைப்பிடித்துள்ளதைச் சிந்தித்துப்பார்!

623. பிணி உடல் பிணியாகவும் இருக்கலாம். ஆத்மப் பிணியாகவும் (அதாவது மெய்ப்பொருளின்மீது காதல் உண்டாவ தால் வரும் பிணியாகவும்) இருக்கலாம். பொடுபோக்கான நிலையி லிருந்து விழித்தெழுந்து பச்சாதாபப்படுபவன் இறைவனை நேசிப்பவனாவான்.

629. தெய்வ உணர்வு அதிகரிப்பதற்கேற்ப, தெய்வ அகமியங் கள் பற்றிய ஞானம் அதிகமாவதற்கேற்ப, ஒருவனுடைய காதலும், தாபமும் அதிகரிப்பதே நியதியாகும். எனவே, ஜப்பாரிய்யாக்கள் இறைவனுடைய கட்டாயத்தை உண்மையிலேயே உணர்பவர் களாயின் அவர்கள் முகம் வெளுத்த, துயரடைந்த காதலனைப் போல, பயபக்தியுடனும், பணிவுடனும் இறைவன் பக்கல் திரும்பு வதுதானே முறையாகும்!

637 - 641. ஒவ்வொருவருமே தமது யதார்த்த இயல்புக்கு ஏற்றதை - அவ்விதம் இறைவனால் நிர்ணயிக்கப்பட்டதை - நாடி அடை கின்றனர். நபிமார்கள் தமது தெய்வீக இயல்பு காரணமாக நிராகரிப்போர் கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கும் இம்மையின் வேலைகளை வெறுத்து ஒதுக்குகின்றனர். நிராகரிப்போரோ, தமது நரக இயல்பு காரணமாக, நபிமார்கள் தேர்ந்தெடுத்துள்ள மறுமைக்கான வேலைகளை - ஆத்மீகச் செயலாற்றலை - வெறுத்து ஒதுக்குகின்றனர்.

639. ஒவ்வொருவரும் தத்தம் ஜீவனின் போக்கில் போகின்றனர். பறவைகள் தத்தம் கூட்டாளிகளை நோக்கிப் பறந்துபோவதுபோல, பாக்கியவான்களும், பாவாத்மாக்களும் தத்தம் ஆத்மீக இயல்பு களுக்கு ஏற்ற வழியில் நடக்கின்றனர்.

640. "இம்மை மெய்விஸ்வாசிக்குச் சிறைக்கூடமாகவும், நிராகரிப்போருக்குச் சொர்க்கமாகவும் விளங்குகிறது" என்ற ஹதீ ஸின் கருத்து இங்கே எடுத்தாளப்பட்டுள்ளது.

654. தனித்திருத்தல் (கல்வத்) என்பது 'தான்' என்பதும், தன்னுணர்வுமே அற்றவனாய் இருப்பதுதான்.

649. ஈஸா (அலை) அவர்கள் வானுலகுக்கு உயர்த்தப்பட்ட போது அவர்கள் நான்காம் வானில் இருத்தப்பட்டார்கள், அங்கேயே இருக்கிறார்கள் என்பது பெரியார்கள் பலருடையவும் கருத்தாகும்.

672. இந்த அடிகளில் இஸ்லாத்துக்கு முந்திய கால பிரபல அரபிக் கவிஞர் முதநப்பி எழுதிய பாடலின் இரண்டு அடிகளின் கருத்துத் தொக்கி நிற்கிறது. அது வருமாறு:

"சையாருப்னு முக்ரிம் காலமாகிவிடின், (அவர் வாரிசான) நீ இருப்பினும், ரோஜா மலர் மறைந்துபோன நிலையில் நீ பன்னீராகவே இருக்கிறாய்."

673. ஆத்மீக வாரிசைப் பற்றிய பேச்சு வந்ததும் மௌலானா அவர்கள் நபிமார்கள் இறைவனுடைய பிரதிநிதிகளாய் இருப்பது பற்றியும், அந்தப் பிரதிநிதித்துவம் எத்தகையது என்பதுபற்றியும் பேசுகிறார்கள்.

674-675. நபி இறைவன் பிரதிநிதி என்றதும் பிரதிநிதிக்கும் பிரதிநிதியை நியமிப்பவனுக்கும் மாறுபாடு உண்டுபோலும் என்று யாரும் எண்ணவேண்டாம்; சாரத்தில் அவர்கள் ஒன்றுதான் என மௌலானா காட்டுகிறார்கள். பொருள்களின் புறத் தோற்றத்தைக் காண்பதாலேயே பன்மையான மனப்பான்மை உண்டாகிறது. யதார்த்தத்திலே நபிமார்கள் யாவரும் இறைவனுடன் ஒன்றானவர் கள்; ஒருவருக்கொருவரிலும் ஒன்றானவர்கள். "திருத்தூதருக்குப் பணியும் யாரும் அல்லாஹ்வுக்கு பணிபவர்களே" (அத். 4: வசனம் 59, 69) என்றும், "சொல்லும், அவன் தூதர்களிடை நாம் எந்த வித்தியாசமும் பாராட்டலில்லை என்று" (அத். 3: வசனம் 84) என்றுமுள்ள திருகுர் ஆன் வசனங்களைப் பார்க்க.)

676-677. கண்கள் இரண்டாயினும், அவை பார்ப்பது ஒன்றையே- அவற்றின் பார்வை ஒன்றே. இதுபோல் நபிமார்களின் உடல்கள் பலவாயினும் அவர்களுக்கு ஒளியூட்டிய உயிர்கள் யாவும் ஒன்றுதான்.

682. உருவம் - தனித்தன்மை பாராட்டல், வரம்பு கட்டுதல், பன்மையான தன்மை ஆகிய யாவும் ஏகத்துவத்துக்கு எதிரிடை யானவையாம்.

683-684. சகலவற்றின் அடித்தளத்திலுமே காணப்படாநிற்கும் ஏகத்துவத்தை எய்த சாதகர் எந்தக் கஷ்டத்தையும் பெரிதாக

எண்ணக்கூடாது. அவர் முயற்சி வீணாயினும்கூட, அவருடைய சொந்த முயற்சியால் அவர் சாதிக்க இயலாத எதையும் தெய்வக் காதல் கைவல்யமாக்கிக் கொடுத்துவிடும். "கருணையாளனின் மிகச் சிறியதாக இருப்பதும் மனு ஜின்னுகள் அனைத்தும் ஒருங்குசேர்ந்து செய்யும் முயற்சிக்கு ஒப்பாகும்" என்று ஹதீஸ் அருளுகிறது. இந்த அடிகளில் மௌலானா அவர்கள் 'சாலிகெ - மஜ்தூப்' (சித்திபெற்ற மஸ்தான்), 'மஜ்தூபெ - சாலிக் (மஸ்தடைந்த சித்தியாளர்) ஆகியவர்களைச் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

685. இறைவன் தன் அன்பர்களுக்கு தன்னைத் தரிசிக்கும் ஞானதிருஷ்டியை அருளி தன்னிடமிருந்து அவர்கள் பிரிந்ததால் அவர்களில் உண்டான புண்ணை ஆற்றிவிடுகிறான். (அதாவது, அவர்களை மீண்டும் தன்னோடு ஐக்கியப்படுத்திக்கொள்கிறான்.)

686-687. சிருஷ்டிக்கப்பட்ட சகல பொருள்களுடையவும் அசல் பொருளின் பெயர் 'வெண்ணிற முத்து' (அத்துர்ரதுல் பைளா) என்பதாகும். அதையே 'நூரெ-முஹம்மதீ' என்றும் சொல்வர். மனிதனுடைய ஆத்மீக சாராம்சமே அதுதான். நஜ்முத்தீன் தாயா அவர்களுடைய 'மிர்சாதுல் இபாத்' என்ற நூலில் இது சம்பந்தமாக எழுதப்பட்டுள்ளதாவது: "இறைவன் 'நூரெ- முஹம்மதீ' (முஹம்மதின் ஜோதி)யை அன்புக் கண்ணால் நோக்கினான். உடனே அது வெட்கத்தால் ஆட்கொள்ளப்பட்டு, அதற்கு வேர்க்கலாயிற்று; வியர்வைத் துளிகள் முத்து முத்தாக உதிரலாயின. இந்த வியர்வைத் துளிகளிலிருந்து இறைவன் நபிமார்களின் ஆத்மாக்களை சிருஷ்டித்தான். அந்த நபிமார்களின் ஆத்மாக்களுடைய ஒளியிலிருந்து அவன் மெய்ஞான நாதர்களின் ஆத்மாக்களைச் சிருஷ்டித்தான். இவற்றிலிருந்து மெய்விஸ்வாசிகளின் ஆத்மாக்களைச் சிருஷ்டித்தான். அவற்றிலிருந்து கீழ்ப்படியாதவர்களின் ஆத்மாக்களையும், அவற்றிலிருந்து நிராகரிப்பவர்கள், நயவஞ்சகர்கள் ஆகியோருடையவும் ஆத்மாக்களை ஆக்கினான். மனித ஆத்மாக்களின் ஒளியிலிருந்து அவன் அமரர்களின் ஆத்மாக்களையும், அமரர்களின் ஆத்மாக்களிலிருந்து ஜின்னுகளுடைய ஆத்மாக்களையும், அவற்றிலிருந்து ஷைத்தான்களுடையவும், கலகஞ்செய்யும் துர்த்தேவதைகளுடையவும் ஆத்மாக்களையும் உண்டாக்கினான். இவற்றின் சக்கையிலிருந்து பிராணிகளின் ஜீவன்களைச் சிருஷ்டித்தான். பின்னர் ஜட உலகிலுள்ள மரம், புல்பூண்டு, உலோகப் பொருள்கள், மூலப்பொருள்கள் போன்ற யாவும் ஜீவிதம் பெற்றன."

688 - 689. ஒரே ஏகவனின் கல்யாண குணங்களின் வெளிப்பாடுகளால் பல்வேறுபட்ட ஜடதத்துவங்கள் வெளியாகியுள்ளன.

இதைச் சுவர்மீது சூரியன் வெளிச்சம் விழுவதால் உண்டாகும் பலதரப்பட்ட நிழல்களுக்கு ஒப்பிடலாம். 'தான்' எனும் இந்தச் சுவரை இடித்துத் தள்ளிவிட்டால் சகல நிழல்களும் மறைந்துபோய், ஏகத்துவத்தின் சூரியனையன்றி வேறு எதையும் பார்க்க முடியாத நிலை உண்டாகிவிடும்.

690. "ஏகத்துவத்தின் (தெளஹீதின்) யதார்த்தம் யாது என்பதை நான் இன்னும் விரிவாகக் கூறியிருக்க முடியும். ஆனால், இந்த மர்மங்களை ஏற்கத் தகுதியற்ற, இவற்றைப் புரிந்துகொள்ளும் சக்தியற்ற மனிதர்கள் அதனால் வழி பிசகிவிடக்கூடாதே என்று இத்துடன் நிறுத்திக்கொள்கிறேன்" என்கிறார்கள்.

691 - 692. இறைவன் அருளாலும், சரியான குருநாதர் ஒருவரின் வழிகாட்டுதலாலும் பாதுகாக்கப்படாத யாரும் ஏகத்துவம் பற்றிய ரகசியங்களை அறிந்துகொள்வதால் அவர்களுடைய மெய்விஸ் வாசம் அழிந்துபட ஏதுவாகும்.

706. பருப்புடைய பிஸ்தாக் கொட்டைகள் என்றது உண்மை யான ஏகத்துவவாதிகளின் சடலங்களையாகும். கொட்டைகளின் தோடு உடைபட்டதும் உள்ளே என்ன இருக்கிறது என்பது நிதரிசன மாகிவிடுகிறது. இதுபோன்றே உண்மை ஏகத்துவவாதியின் சடலம் மரணத்தால் உடைபட்டதும், அவன் உயிர் மெய்ஞானம், மெய்விஸ் வாசம், மெய்க்காதல் ஆகியவற்றால் ஒளிபெற்றிருந்ததாலும், இறை வனோடு ஒன்றித்து இருந்ததாலும் அமரத்துவமடைந்துவிட்டது என்று திட்டமாகிறது. இன்றேல், அந்த உயிர் ஒன்றுக்கும் உதவாதது என்று கண்டுகொள்ளலாம்.

708 - 709. மேலே கண்ட அதே விஷயம் பிஸ்தாவுக்குப் பதில் பழங்களை உவமை காட்டிப் பேசப்படுகிறது.

712. மரத்தாலான வாள் என்பது, இந்தக் கதையில் வரும் மந்திரியைப்போன்று மார்க்க விஷயங்களில் உள்ளொன்று வைத்துப் புறமொன்றாக நடக்கும் நயவஞ்சகர்களையாகும்.

713. நயவஞ்சகனுடைய ஆத்மா உடலைவிட்டுப் பிரிந்த பின் நரக நெருப்புக்கே தகுதியுடையதாக ஆகிவிடுகிறது.

714. (நீதித் தீர்ப்பு நாளில்) உன் விதிவசம் தீர்மானிக்கப் படவிருக்கும் போர்க்களத்துக்கு நீ போய்ச்சேருமுன் (அல்லது, ஷைத்தானையும் உன் இச்சாபாசங்களையும் எதிர்த்து நீ பெரிய சன்மார்க்கப் போராட்டத்தில் - ஜிஹாதுல் அக்பரில் - இறங்குமுன்) உன்னிடம் உண்மையான வாள் இருக்கிறதா என்று கவனித்துக் கொள். இன்றேல், உன் நிலை படுமோசமானதாக ஆகிவிடும்.

716 - 727. மெய்ஞ்ஞானியரான நாதாக்கள்தாம் மேலே பிரஸ்தாபித்த உண்மையான வாளை உனக்கு உண்டாக்கித் தரமுடியும். தெய்வ நேயர்களான அவர்களை நேசி; அவர்களைப்போல் ஆக நீ சத்முயற்சியெடு.

716. மெய்ஞ்ஞானியரின் உண்மையான தன்மையை அறிந்து, அவர்களை முற்றும் பின்பற்றி நடப்போர், தம் ஆத்மீகப் பதவிகள் உயரக்காண்பர்.

717. (மெய்யறிவுபெற்ற) அறிஞர்கள் நபிமார்களின் வாரிசுகளாவர் என்ற நபிமொழிக்கேற்ப அவர்கள் (ஆலிமெ-ரப்பானி ஆகிய ஞானநாதர்கள்) நபிமார்களுடைய குறிப்பாக நபிபெருமான் முஹம்மது (ஸல்) அவர்களுடைய ஆத்மீக வாரிசுகளாவர். "(முஹம்மதே,) நாம் உம்மை அகிலங்களுக்கெல்லாம் கருணையாகவே அனுப்பியுள்ளோம்" (அத்21 :வசனம் 107) என்பது திருமறை வாக்காகும். நபிபெருமானாரின் ஆத்மீக வாரிசுகளான மெய்ஞ்ஞானியரும் அவர்களைப் போன்றே சிருஷ்டிக்கப்பட்ட பொருள்களுக்கு (இறைவன் புறத்திலிருந்துவரும்) கருணையாகவே விளங்குகின்றனர்.

718-719. நீ ஒரு மாதுளம்பழம் வாங்க விரும்பினால் நன்கு முதிர்ந்து பழுத்ததாக வாங்க விரும்புகிறாய். எனவே, அதை உடைத்துப் பார்த்து, அதன் வித்துக்கள் நன்கு விளைந்தவையாய் இருப்பின் அது நல்ல பழம் என்று கண்டுகொள்கிறாய். இதுபோல், இறைவனை அடையும் பாதையில் உனக்கு ஒரு நல்ல வழிகாட்டி கிடைக்கவேண்டும் என்று நீ விரும்பினால் தெய்வக் காதலும், மெய்ப்பொருள் அறிவும் நிரம்பப்பெற்ற இதயம் வாய்ந்தமெய் ஞானநாதர் ஒருவரை - அவருடைய வாக்காலும் செயலாலும் - நீ கண்டுபிடித்து அவரோடு உன்னைப் பிணைத்துக்கொள்!

720. நயவஞ்சகன் ஒரு பூவரசம் பூவையொப்பான். அவனுடைய திரையகற்றப்பட்டால் அவனுடைய இருண்ட இதயம் வெளியாகி விடுகிறது. பூவரசம்பூ வெளிப்பார்வைக்கு மஞ்சளாய்த் தெரியினும் அதன் உள்ளே நடுப்பகுதியில் கறுத்திருப்பதை நயவஞ்சகனுடைய இதயக் கறுப்புக்கு உவமித்துள்ளார்கள்.

721. நன்கு முதிர்ந்த பழங்கள் வெடிப்பதால் பழத்தோட்டமே குதூகலமுடையதாக ஆகிவிடுகிறது. இது போன்று மகான்களின் தொடர்பால் கிட்டும் ஆத்மீகப்பண்புகளும், உணர்வுகளும் உன் இதயமாகிய தோட்டத்தைக் குதூகலமுடையதாக ஆக்கிவிடுகின்றன.

*724. இறைவன் கருணை கிடையாதோ என்று நம்பிக்கை இழத்தல் தெய்வ நிராகரிப்பான செயலாகும். (திருகுர் ஆன் அத். 12 : வசனம் 87 பார்க்க.)*

***தலைப்பு: "முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்களைப் பற்றிய முன்னறிவிப்பு"***

*மகான்களுடைய சகவாசத்தால் உண்டாகும் நற்பேறுகளைப் பற்றி இதுவரை பேசிவந்த மௌலானா அவர்கள் அதற்கு அத்தாட்சி தரும் வகையில் இந்தத் தலைப்பில் பேசுகிறார்கள். ஹம்மது நபி (ஸல்) அவர்கள் தோன்றுவதற்குப் பன்னெடுங் காலத்துக்கு முன்பே அதுபற்றி ஈஸா நபி (அலை) அவர்கள்மூலம் இறக்கியருளப்பட்ட இஞ்சீல் வேதம் முன்னறிவிப்புச் செய்துள்ளது. அவர்களுடைய அக, புறக் குணாதிசயங்களையும் அது எடுத்து இயம்பியுள்ளது. எனவே, அதைப்படித்த ஆரம்பகாலக் கிறிஸ்தவர் கள் சிலர் அவர்கள் திருநாமத்தைப் போற்றி அவர்கள்மீது விஸ்வாசம் கொண்டிருந்தனர். எனவே இத்தகைய கிறிஸ்தவர்கள் மந்திரி உண்டாக்கிய (பித்தலாட்டமான) 'சுவிசேஷங்'களை ஏற்க மறுத்து விட்டனர். வேதங்கள் யாவும் லௌஹுல் மஹ்பூழிலிருந்து இறக்கியருளப்பட்டவைதாம். திருகுர்ஆன் போதிக்கும் ஏகத்துவத் தையே அவையும் போதித்தன. ஆனால், யூதர்களும், கிறிஸ்தவர் களும் தத்தம் வேத நூற்களையே தமது மனப்போக்கிற்கு ஏற்ற வண்ணம் மாற்றி அமைத்துக் கொண்டனர். அதனால் அவை தமது புனிதத்தையே இழந்துவிட்டன.*

*727. "மரியமின் மகன் ஈஸா சொன்னார், 'இஸ்ராயீல்களின் சந்ததியினரே, எனக்கு முன்னர் வந்த தௌராத்தை உறுதிப் படுத்துவதற்காகவும், எனக்குப்பின் தோன்றவிருக்கும் அஹ்மது என்னும் நாமமுடைய நபியைப்பற்றி நற்செய்தி அறிவிப்பதற்காக வும் நான் அல்லாஹ்வால் உங்களிடை (தூதனாக) அனுப்பப்பட்ட வனாவேன்" என்று. (திருகுர்ஆன் அத். 61: வசனம் 6.)*

*738. இறைவன் ரூஹெ முஹம்மதியிடம்தான் கல்யாண குணங்கள் வெளிப்படும் பொறுப்பை ஒப்படைத்திருந்தான். (ரூஹுல் அமீன் என்ற பெயர் திருகுர் ஆனில்-அத் 26: வசனம் 193-ல் ஜீப்ரயீலுக்கு வழங்கப்பட்டுள்ளது.)*

*740-741. "விறகுகள் போட்டு எரிக்கும் நெருப்புக் குண்டங்கள் வெட்டியவர்கள் நாசமாயினர்" (அத் 85: வசனங்கள் 4,5) என்ற திருகுர்ஆன் வசனங்களில் எமன் நாட்டு யூத அரசன் து நவாஸ்*

என்பான் நஜ்ரான் கிறிஸ்தவர்களை நெருப்பில் தூக்கிவீசிக் கொன்ற சம்பவம் குறிக்கப்பட்டுள்ளதாக விரிவுரையாளர்கள் பலரும் சுட்டிக்காட்டுகின்றனர். அந்தப் படுகொலையை நினைவில் கொண்டே மௌலானா அவர்கள் இதை எழுதியுள்ளார்கள்.

743. "ஓர் அழகிய முன்மாதிரியை (ஸுன்னத்தை) ஸ்திரப்படுத்தியவர் அதற்கான சம்மானத்தையும், அதை மற்றோர் பின்பற்றுவதற்கான சம்மானத்தையும் அடைந்து கொள்வார்; தீய முன்மாதிரியை உண்டாக்குபவன் அதற்கான தண்டனையையும், அதை மற்றோர் பின்பற்றுவதற்கான தண்டணையையும் அடைவான்" என்பது ஹதீஸ்.

747. "பின்னர் நம் அடியார்களில் நம்மால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிடம் வேத நூலைப் பிதுர்ராஜ்ஜிதமானதாகக் கொடுத்தோம்." (திருகுர்ஆன் அத் 35: வசனம் 32) இதில் 'தேர்ந்தெடுக்கப்பட்டோர்' என்று குறிப்பிட்டிருப்பது முஸ்லிம் மார்க்க அறிஞர்களையாகும் அல்லது, முஸ்லிம் சமுதாயம் முழுவதையுமாகும் என்று 'பைளாவி' வியாக்கியான நூலில் காணப்படுகிறது. 'அராயிஸுல் பயான்' என்ற வியாக்கியான நூல் இவ்விதம் கூறுகிறது: "இறைவனின் மெய்ஞானத்தையும், அன்பையும் அடைவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களான ஞானநாதர்களிடமே அவன் வேதநூலை ஒப்படைத்து, அதன் அற்புதங்களையும், அகமியங்களையும் வெளியாக்கிக் காட்டியுள்ளான். தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னரே பிதுர்ராஜ்ஜிதம் வருகிறது. எனவேதான், 'பின்னர் நாம் நம் வேதநூலை பிதுர்ராஜ்ஜிதமாகக் கொடுத்தோம்' என்று இறைவன் கூறுகிறான். அதாவது, அவர்கள் மெய்ஞானிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதன் பொருட்டால் ஐக்கியத்துடையவும், நெருக்கத்துடையவும் மர்மங்களை விளங்கிக் கொள்ளும் சக்தியை இறைவன் அவர்களுக்கு அருளினான்."

748-750. சகல தீர்க்கதரிசனத்துடையவும், மெய்ஞானத்துடையவும் சாரமான 'நூரெ-முஹம்மதீ' (முஹம்மதின் ஒளி)யிலிருந்து தான் இறைவன்மீது மெய்ஞானிக்கு உண்டாகும் காதலும் தாபமும் கிளம்பி வருகின்றன. இந்த ஒளி சாதகனுடைய இதயத்தில் வெளிச்சம் சிந்துகிறது. அவனுடைய ஆத்மீகச் சிந்தனைகள், உணர்வுகள் செயல்கள் யாவும் அதனிடமாகவே உண்டாகின்றன. சூரியன் கிழக்கிலிருந்து மேற்காக நகருகையில் அதனுடன் நகர்ந்துகொண்டிருக்கும் அதன் கிரணங்கள் நமது மூலஸ்தானத்துக்குத் திரும்புமுன் வீடுகளிலுள்ள சகல ஜன்னல்கள் வழியாகவும் வீடுகளினுள் வெளிச்சம் பரப்புவதை இது ஒத்திருக்கிறது.

*751-759. ஜடதத்துவ உலகில் (பூத பௌதீக உலகில் மனிதர்களின் இயல்புகள் கிரஹங்களோடு இயைந்தவைகளாக இருக்கின்றன. ஆனால், தேர்ந்தெடுக்கப்பட்டவர் (ஞானியர்)களின் நல்ல திர்ஷ்டமோ, தெய்வச் சாரம் என்ற வானிலே நிரந்தமாக ஒளி வீசிக் கொண்டிருக்கும் ஆத்மீகக் கிரஹங்களால் உண்டாகுபவையாய் உள்ளன.*

*756. இறைவனின் திருநாமங்களும் கல்யாணகுணங்களும் தமது பயன்கள் சம்பந்தப்பட்டவரை பல்வேறு திறத்தவையாயினும் பிரிக்கப்பட முடியாதவையாகும். ஆனால், அவை சகல பாகுபாடுகளுக்கும் அப்பாற்பட்ட தெய்வ சாரத்திலுள்ளவை என்பதைக் கவனித்தால் அவை யாவும் ஒன்றுடன் ஒன்று இணைந்தவை என்பது தெளிவாகும்.*

*757. 'இவற்றைத் தம் ஜனனகிரணமாகக் கொண்டவர்' - சம்பூரண மனிதர். இவர் தெய்வ நல்லருளின் நேரடியான பார்வையில் அகப்பட்டவராவர். எனவே, இவர் நிராகரிப்பை எரித்துவிடுபவராவார். வானத்தில் எரியும் விண்மீன்கள் தம்மோடு வீசப்பட்ட ஷைத்தான்களை எரிப்பதுபோல் இவர் நிராகரிப்பை எரித்துவிடுகிறார். ("அந்த விண்மீன்களை ஷைத்தான்களுக்கு எறிகற்களாகவும் ஆக்கினோம்." குர்ஆன் அத். 67: வசனம் 5 பார்க்க.)*

*759. மெய்ஞானியரின் ஒளிபொருந்திய இதயம் கருணையாளனின் பேரழகு (ஜமால்), மகத்துவம் (ஜலால்) ஆகிய இரண்டு விரல்களுக்கு இடையிலிருக்கிறது.*

*760. "இறைவன் சிருஷ்டிகளை இருளில் படைத்தான்; பின்னர் அவற்றின்மீது தன் ஒளியில் சிறிதைத் தூவினான்; அந்த ஒளியில் சிறிதாயினும் அடையப்பெற்றோர் நேர்வழியில் நடந்தார்கள்; அதை அடையப்பெறாதோர் நேர் பாதையைவிட்டுத் தவறி விட்டனர்" என்பது ஹதீஸ்.*

*761. அந்தப் பாக்கியமுடைய தெய்வத் திரு ஒளியைப் பெற்றவர்களிலும், ஒவ்வொருவரும் தாம் அதை எந்த அளவுக்குப் பெறத் தகுதியுடையவர்களாகச் சிருஷ்டிக்கப்பட்டிருந்தனரோ அந்த அளவு அதைப் பெற்றுக்கொண்டனர்.*

*762. இறைவனால் நேசிக்கப்பட்டு அவன் நேசத்தைப் பெற்றுக்கொண்டோரே பாக்கியசாலிகளாவர். ஆதி ஏற்பாட்டின்படி தெய்வ அன்பு என்னும் அருட்கொடையை அடையப்பெறாதவர்கள் ஒளி பெற இயலாதுபோகின்றனர்.*

*763. ஒவ்வொன்றும் தத்தம் மூலஸ்தானத்துக்கே திரும்புகிறது. ஒன்றின் பகுதி, அது எதன் பகுதியோ அந்த முழுதுடன் சேருகிறது; மெய்ஞானியின் இதயத்திலுள்ள தெய்வ ஒளிச்சுடர் இறைவனின் ஒளியில் ஐக்கியமாகிறது.; புல் புல் ரோஜா மலருடன் சேர்ந்துவிடு கிறது. நாசமடைவதற்காகவே சிருஷ்டிக்கப் பட்டவர்கள் போலி ஒளியையே நேசிப்பர்; ஏனெனில், அது போலியானது என்று நிதானிக்கும் உள்ளொளி அவர்களிடமில்லை.*

*764 - 765. நேர்மையானவர்களைத் தீயவர்களிலிருந்து நீங்கள் பகுத்தறிய நாடினால், புறத் தோற்றங்களை ஒதுக்கி அகத்தே நோக்கவேண்டும். இவை யாவுமே இறைவன் ஆதியில் நல்லியல் புடையோராகவோ, தீய இயல்புடையோராகவோ அவர்களைப் படைத்ததால் உண்டான நிலைகள்தாம்.*

*766. மெய்விஸ்வாசிகளை இறைவன் விஸ்வாசத்தாலும் தன் ஏகத்துவ ஞானத்தாலும் - சாயமேற்றுபவன் தன் துணிகளில் நல்ல சாயத்தை ஏற்றுவது போல் - இதயம் நனைந்தவர்களாக ஆக்கி விடுகிறான். நிராகரிப்போரின் நிலை இதற்கு நேர்மாற்றமானதாக ஆகிவிடுகிறது.*

*767-768. மேலே 763ம் பாடலில் சொல்லப்பட்ட கருத்தை இது விவரிக்கிறது. சகல ஜீவிதமுமே ஒரே ஏகனிலிருந்து வெளிப்பட்டு அவனிடமே மீளுகிறது. ஆற்றுநீர், தான் புறப்பட்ட மூலஸ்தான மான கடலிலேயே போய்ச் சேருவதுபோல் அன்பால் தூண்டப் பட்ட ஜீவன்தான் இறைவனோடு ஐக்கியமாகி விடுகிறது.*

***தலைப்பு: "யூத அரசன்...... அதைப் பணிபவர்கள் தீயை விட்டுத் தப்பலாம் என்றான்"****: ஒரு யூதன் விக்ரஹ ஆராதனையை வற்புறுத்தியது எப்படி என்று வினா எழலாம். இந்த து நவாஸ் என்பான் ஹிம்யார் கூட்டத்தைச் சேர்ந்தவன். இவன் யூதனாயினும் பல தெய்வ வணக்கம் செய்பவனாயும் இருந்தான் என்று சொல்லப்படுகிறது.*

*771. "தன் கீழான மன இச்சைகளைத் தன் தெய்வமாக ஆக்கிக்கொண்டவனை நீர் பார்த்திருக்கிறீரா?" (அத் 25: வசனம் 43) என்ற திருவசனத்தின் கருத்து இதில் எதிரொலிக்கிறது. 'ஷிர்க்' (இணைவைத்தல்) என்பது வெறும் விக்ரஹங்களை வணங்குவது மட்டுமன்று. தன் கீழான மனத்தின் இச்சைகளின்படி வழிபடுவதும் இணைவைத்தல்தான். இப்படி இணைவைப்பவன் செய்யும் தொழுகையும், வணக்கங்களும் பயனற்றவையாகிவிடும்.*

772. "கீழான மனம் (அதன் தீய இச்சைகள்) சகல விக்ரஹங் களுக்கும் தாயாகும்" என்று பெரியார்கள் அருளியுள்ளனர்.

773-774. கீழான மனத்தின் இச்சைகளும், பாவச் செயல்களும் பச்சாதாபத்தால் (தௌபாவால், பாவமன்னிப்புக் கேட்பதால்) துடைக்கப்படுகின்றன. ஆனால், இவை வெறும் அறிகுறிகள் தாம்; அகத்தே அவற்றின் மூலஸ்தானமாயுள்ளதை அகற்றினாலன்றி அவை மீண்டும் வளர்ந்துவிடும். இதைச் சத்முயற்சி (முஜாஹதா) யின் மூலம்தான் சாதிக்க முடியும்.

776. நம் கீழான எண்ணங்களும், காமக் குரோதமும் உடலென் னும் கால்வாயில் ஓடிக்கொண்டிருக்கும் சேற்று நீராகும். இவற்றுக்கு ஊற்றுக்காலாய் இருப்பது கீழான மனமாகும்.

778. மேலே 773 - 774க்கான விளக்கவுரையைப் பார்க்கவும்.

779. கீழான மனம் நரகின் ஒரு பகுதியானதுதான். சாரத்தில் அது ஷைத்தானுடன் ஒன்றானது. எனவே, (நப்ஸ் அம்மாராவின் உருவில்) நரகம் யதார்த்தத்தில் உன்னுள்ளேயே இருக்கிறது. நரகின் ஏழு வாயில்கள் என்பது படு நாசத்தையுண்டாக்கும் தீய குணங் களைக் குறிப்பனவாகும். அவை, அகந்தை, துராசை, காமம், பொறாமை, கோபம், பேராசை, துவேஷம் ஆகியவையாம். இதனா லேயே நரகை ஏழு தலையுடைய பூதம் என்பதுமுண்டு.

782. அபூஜஹல் : நபி பெருமானாரின் பரம வைரிகளுள் ஒருவன். எனவே, முதலில் 'அபுல் ஹிகம்' (அறிவின் தந்தை) என்று பெயர் பெற்றிருந்தவன் பின்னர் 'அபூஜஹல்' (மடமையின் தந்தை) ஆனான்.

786 - 802. இந்தக் கதையின் தத்துவார்த்தம் இப்பாடல்களில் தரப்பட்டுள்ளது. நெருப்பில் வீழ்ந்து வீரமரணமடைவது என்பது தன் கீழான மனம் சம்பந்தப்பட்டவரை மரணித்தவனாக ('பனா' ஆனவனாக) ஆவதாம். அதுதான் நித்தியத்துவமான வாழ்வுக்கு ('பகா'வுக்கு) வழியாகும். அறிவெனும் குழந்தை (அக்லு) இயற்கையாகிய தன் தாயை (தாபியாவை) விட்டுப் பிரிந்து, மெய்நிலை காணும் நெருப்பினுள் புகுகிறது. அங்கே இறைவனின் அன்புக்குரியார் அனுபவிக்கும் ஆத்மீகப் பேரின்பங்களைக் காண்கிறது; பரிபூரண விஸ்வாச நிலையை எய்துகிறது. தன் தாயையும், புலனின்பங்களை விழையும் அனைவரையும் அந்த நெருப்பினுள் வருமாறு அது அழைக்கிறது.

*787. தன்னை நாஸ்தியாக்குவதிலுண்டாகும் வேதனைகள் யாவும் உண்மையில் பாக்கியமானவைதாம். தெய்வ அன்பாலும் கருணையாலும் அவை உண்டாகின்றன. ஆனால், கடையர்கள் இந்த உண்மையைக் காணாதபடி இறைவன் தடுத்துவிடுகிறான்.*

*789. ஆத்மீக ஏழ்மையும் (பக்ரும்), தன்னை நாஸ்தியாக்கலும் (பனாவும்) எரியும் தணலையொத்துள்ளன. ஆனால், உண்மையில் அவை தண்ணீரைப்போன்று இனிமையும், ஆஸ்வாசமும் அளிப்பவைதாம். இம்மையின் இன்பங்களோ இதற்கு நேர்மாற்ற மான பயன் தருபவையாகும்.*

*794 - 795. ஆவி உலகின் ஒவ்வோர் அணுவும் உயிருள்ளது; பேசுவது, கேட்பது; ஈஸா (அலை) அவர்களைப்போல் மரணித்தவர்களுக்கு உயிர் கொடுப்பது. அது பரிசுத்தமான, பரிசுத்தப்படுத்தும் ஆத்மீக உப்பளமாகும். இந்த (ஆவி) உலகம் யதார்த்தமானதாயினும், தோற்றமற்றிருப்பதால் வெளியில் ஜீவிதமற்றதுபோல் காணப்படுகிறது. ஆனால், ஜடதத்துவ உலகம்தான் உண்மையில் தோற்றத்தில் மட்டும் ஜீவிதமுடையதாய் இருக்கிறது.*

*799. சுபாவமான இச்சைகளையும், பந்தபாசங்களையும் விட்டு அப்பாலான நிலையிலுள்ளவரான மெய்ஞ்ஞானி இறைவனுடைய லயிப்பில் திளைத்தவராய் இருக்கிறார். இவர் மற்றோரைப் பாவ சாபல்யம் பெற அழைப்பது தெய்வக் கருணையால் உந்தப்பெற்ற நிலையில்தான்.*

*809. இப்பாடலில் யூத அரசனும் ஷைத்தானும் ஒன்றுதான் என்று காட்டப்பட்டுள்ளது.*

**தலைப்பு : "நபி பெருமான் (ஸல்) அவர்கள்...."**

*"தன் சகோதரனை விழவைக்கக் குழி தோண்டுபவன் தானே அதில் விழுவான்" என்ற முதுமொழியை விளக்கும் உதாரணம்.*

*"என் நேயர் யாரையும் துன்புறுத்துபவன் என்னைத் துன்புறுத்துபவனாவான்" என்றும், "ஞானநாதர் ஒருவரை அவதூறாக நடத்துபவன் என்மீதே போர் தொடுத்தவனாவான்" என்றும் இறைவன் அருளியுள்ளதாக ஹதீஸ் குத்ஸியில் உள்ளது. இதை இங்கே விவரிக்கப்பட்டுள்ள சம்பவம் எண்பிக்கிறது.*

*816. இறைவன் நம் குற்றங்குறைகளை மறைப்பவன் (அஸ்-ஸத்தாரு); அவை மறைக்கப்படுவதை விரும்புபவன். "ஒரு பாவம் செய்து விட்டதற்காகத் தன் சகோதரனைப் பழித்துப் பேசுபவன்*

தான் இறக்குமுன் அதே பாவத்தைச் செய்துவிடுவான்" என்று ஒரு ஹதீஸ் உண்டு.

817. "தன் சிருஷ்டிகளில் யாரையும் இறைவன் நேசிக்கும்போது அவர்மீது அவன் அதிகமான துக்கத்தைப் பொழிகிறான். (அவர் அதிகமும் துக்கப்படும்படி செய்கிறான்.)" என்று புதாயிலுப்னு ஆயாஜ் (ரஹ்) அவர்கள் அருளியுள்ளார்கள்.

819 - 820. நன்கு உணர்ந்து, பணிந்து இதயம் உருகிக் கண்ணீர் சிந்துவது வரவிருக்கும் ஆத்மீகப் பேரின்பத்துக்கு அடையாளமும், அத்தாட்சியுமாகும்.

830 - 853. இறைவன் ஒருவன்தான் முழுமுதலானவன்; யாவையும் நடத்துகிறான். ஜடதத்துவ உலகிலுள்ள சகல இரண்டாம் பட்சமான காரணங்களும் அவனால் உண்டாக்கப்பட்டவைதாம். அவை முதற் காரணங்களுக்கு உட்பட்டவை. அதாவது, சகல பயன்களையும் உண்டாக்கவோ, உண்டாக்காமலிருக்கவோ சக்தி பெற்றவையான அவன் திருநாமங்களும், கல்யாண குணங்களுமே முதற் காரணங்களாம்.

834 - 835. இங்கே மௌலானா அவர்கள் ஜடதத்துவ நெருப்பிலிருந்து ஆத்மீக நெருப்பின் தன்மைக்கு வருகிறார்கள். துன்பமும் (அதாவது, கீழ்ப்படியாமை, நிராகரிப்பு ஆகியவையும்), இன்பமும் (அதாவது, பயபக்தி, அன்பு, மெய்விஸ்வாசம் ஆகியவையும்) இறைவன் ஆதியிலேயே ஆத்மாக்களில் உண்டாக்கியுள்ள தன்மையை ஒட்டியே உண்டாகின்றன.

841. அநீதி என்னும் நெருப்பை உண்டாக்கும் கல்லும் இரும்பும் முறையே கீழான மனமும் (நப்ஸூம்), புலனிச்சைகளும் (ஹவாவும்)ஆம்.

842 - 843. ஒவ்வொரு காரணமும் வேறொரு காரணத்தின் பயனாகத் தோன்றினும் யதார்த்தத்தில் சகல காரணங்களையும் பயன்களையும் உண்டாக்குபவன் இறைவன்தான். பஞ்சை சிக்கிமுக்கிக் கல்லில் அடித்தால் நெருப்பு உண்டாகிறது. ஆயினும், நெருப்பை உண்டாக்கியது யார்? இறைவனன்றோ! இதுபோல், கிரஹங்களால் உண்டாகும் நல்லவை கெட்டவையும், மூலப் பொருள்களின் குணங்களும் இறைவனுடைய திருச்சித்தத்தால் உண்டானவைதாம். இதுபோன்றே உணவு பசி தீர்ப்பதும், மருந்து நோயகற்றுவதும் அந்த இரணமளிப்பவன், நோயகற்றுவோன் தன் குறிப்பிட்ட நோக்கங்களுக்கான சாதனங்களை அவற்றில் உண்டாக்கியதால்தான். ஷைத்தானும், கீழான மனமும்கூட

பாவத்தையும், வேதனைகளையும் சேர்ப்பவை என்ற முறையில் மானிடரின் நிரந்தரமான விதிவசங்களை நிறைவேறச்செய்யும் - ஆக்கும் அவனுடைய கருவிகள்தாம்.

844. தெய்வ இயல்பு நபிமார்களுக்கும், அவர்களியல்பிலும் வெளியாகியுள்ளது. எனவே, சகல வாழ்வுடையவும், செயலுடைய வும் யதார்த்தமான காரணங்கள் இறைவனின் அறிவு, சித்தம், சக்தி போன்ற கல்யாண குணங்களால் உண்டானவை என்பதை அவர்கள் அறிந்திருந்தனர்.

845. முன்னுள்ள 548ம் பாடலுக்கான விளக்கவுரையைப் பார்க்கவும்.

847 - 850. காரண சாதனம் (ஸபப்) என்பதன் நேரடியான அரபி மொழி அர்த்தம், தண்ணீர் இழுப்பதற்காகக் கிணற்றினுள் வாளியைக் கட்டியிழுக்கும் கயிறு என்பதுதான். இங்கே மௌலானா அவர்கள் இம்மையைக் கிணற்றுக்கு உவமிக்கிறார்கள்; சகல காரண சாதனங்களையும் வாளி கட்டி ஜகடை மூலம் இழுக்கப்படும் கயிற்றுக்கு உவமிக்கிறார்கள். ஜகடை உருளுவதால் கயிறு கிணற்றினுள் போவதுபோலும், மேலே வருவதுபோலும் தெரிகிறது. ஆனால், யதார்த்தத்தில் தண்ணீர்க் கயிற்றை இழுப்பது மனிதனின் கையன்றோ! இதுபோன்றே வானிலுள்ள கிரஹங்கள் மனிதனின் நிலைகளைப் பாதிக்கின்றன என்பதும் அவற்றை ஆட்டுவிக்கும் சர்வலோக ரக்ஷகனை மறந்த செயலாகும்.

**தலைப்பு : "ஹூத் நபி (அலை) அவர்கள் கூட்டத்தாரைக் காற்று அழித்த வரலாறு"**

இந்த விபரம் திருகுர்ஆனில் அத். 7: வசனங்கள் 65 முதல் 72 வரையும், அத். 11: வசனங்கள் 50 முதல் 60 வரையும் அத். 69: வசனங்கள் 6 முதல் 8 வரையும் விவரிக்கப்பட்டுள்ளன.

854. "ஹூத் நபியையும் அவரிடம் விஸ்வாசங்கொண்ட வர்களையும் நாம் காப்பாற்றினோம்." (திருகுர்ஆன் அத். 11: வசனம் 58 பார்க்க.) ஹூத் நபியும், அவர்களைப் பின்பற்றியோரும் ஆடுகள் அடைக்கும் வேலியொன்றுக்குள் புகுந்துகொண்டனர். மற்றோ ரைப் பந்தாடிய புயல் காற்று, அதனுள் தென்றலாகவே வீசிக் கொண்டிருந்தது.

856. ஞானி அபூமுஹம்மது ஷைபானுர் ராயீ தமாஸ்கஸைச் சேர்ந்தவர்கள். ஞானிகள் நாயகம் ஸுஃப்யானுத் தௌரியின் உற்ற நண்பர். அவர்கள் துறவு வாழ்க்கையை மேற்கொண்டு லெப்னான்

மலையில் ஆடு மேய்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் சற்றுத் தொலைவிலுள்ள ஊர் மஸ்ஜிது எதிலும் சென்று ஜுமுஆத் தொழுகையைத் தொழுது வருவார்கள். எனவே, அவர்கள் திரும்பும்வரை தங்கள் ஆடுகள் வெளியில் போகாமலும், ஓநாய்கள் ஆட்டை நெருங்காமலும் இருக்க ஒரு கோட்டைக் கிழித்துவிட்டுப் போவது வழக்கம்.

*863. திருகுர்ஆன் அத். 2: வசனம் 50ல் இந்த விபரமுள்ளது. இந்த வசனம் மூஸா நபி கடந்து சென்றது கடலைத்தான் என்று தெரிவிக்கிறது. பைபிளில் இது செங்கடல் என்று கூறப்பட்டுள்ளது.*

*864. பெருஞ் செல்வனான காருனை மண் விழுங்கிய விபரம் திருகுர்ஆன் அத். 28: வசனங்கள் 76-82ல் விவரிக்கப்பட்டுள்ளது.*

*865. திருகுர்ஆன் அத். 5: வசனம் 110ல் ஈஸா (அலை) மண்ணா லான பறவை உருவுக்கு உயிர் தந்த விபரம் உள்ளது.*

*866. உயிரற்ற களிமண்ணின்மீது ஈஸா (அலை) அவர்கள் தங்கள் மூச்சை ஊதி உயிருள்ள பறவைகளை உண்டாக்கியதுபோல, நீ சித்தசுத்தியுடன் இறைவனைப் போற்றித் துதித்து (தஸ்பீஹ் செய்து) கொண்டு இருப்பாயாயின் அந்தத் துதி வானுலகில் பறவைகளாகச் சென்று அமர்ந்துவிடும். மெய்விஸ்வாசிகளின் துதிகளும், போற்றுதல்களும் வானுலகப் பறவைகளாகின்றன என்று ஹதீஸில் சொல்லப்பட்டுள்ளது.*

*867 - 868. ஸீனா மலையில் மூஸா (அலை) அவர்கள் இறைவனின் ஜோதிச் சுடரைத் தரிசித்ததை விவரிக்கிறது. இறைவ னின் தீவிரச் சுடர் தன்மீது பட்டதும், ஸீனா மலை பரவச நிலை (ஜத்பு)யை அடைந்த ஸூபியைப்போல் ஆடத் தலைப்பட்டு விட்டது என்று மௌலானா வருணிக்கிறார்கள். ஆதியில் ஸீனாவைப்போல் மூஸாவும் ஜடமாகத்தான் இருந்தார்கள். உணர்ச்சியூட்டியவன் இறைவன்தான். இதுபோன்று அவன், தான் விரும்பியோருக்கு இந்த ஜீவனை அளிக்கிறான்.*

*874. அவர்களுடைய அசல் இயல்பு பயங்கரமானதாகவும், நரகின் தன்மையுடையதாகவும் இருந்தது.*

*877. நேரான பாதையில் நடந்த நல்லவர்களை அவர்கள் எரிக்கத் துணிந்தனர், அவர்கள் காதல் நெருப்பால் தகிக்கப்பட வில்லை. எனவே, தங்கள் கீழான இச்சைகளால் அவர்கள் எரிக்கப்பட்டுவிட்டனர்.*

876. "(நற்செயல்களால்) தன் எடை கனமானவன் நன்கு திருப்தியடைந்த வாழ்வையடைவான்; ஆனால், தன் எடை கனமற்ற தாயுள்ளவன் நரகின் அடித்தளத்தை (உம்முஹாவியாவை)யே தன் உறைவிடமாகக் கொள்வான். (நபியே,) அது எத்தகையது என்பதை உமக்குச் சுட்டிக்காட்டக்கூடியது என்ன? அது ஜுவாலை விட்டெரியும் பெரு நெருப்புத்தான்." (திருகுர்ஆன் அத்.101: வசனங்கள் 6-11.) "தன் தாய் (அதாவது, தன் அசல் தன்மை) நெருப்பாக அடையப்பெற்றவன் இறுதியில் நரக நெருப்பினுள் சென்றடைகிறான். அவன் கோபம் கொப்புளிக்கும் பாத்திரமா வான். தனக்கான ஆதி ஏற்பாட்டை அவன் நிறைவேற்றியே ஆக வேண்டும்" என்பதுதான் இந்தப் பாடலின் கருத்தாகும்.

879. தண்ணீர் கடலிலுள்ளது. காற்றால் அது மேகங்களாகத் தள்ளிச்செல்லப்பட்டு மழையாகப் பெய்கிறது. மீண்டும் அது காற்றால் உறிஞ்சப்பட்டுக் கடலில் சேர்க்கப்படுகிறது. இவ்விதம் அது திரும்பவும் கடலிடம் மீள்கிறது.

881. நமது ஆத்மா தெய்வீக இயல்புடையது. எனினும், அது தொட்டியில் தண்ணீர் தேக்கப்பட்டுள்ளதுபோல் இவ்வுலகில் கட்டுப்பட்டுள்ளது. நமது மூச்சு அதைச் சிறுகச் சிறுகக் களவாடிச் செல்கிறது. அது நல்ல தெய்வப் பூஜிப்புடன்கூடிய மூச்சாயின் அதனால் நன்மையுண்டாகிறது. இம்மையின் பேராசை கலந்த மூச்சாயின் அதனால் தீமையுண்டாகிறது.

882. திருகுர்ஆனில், "புகழை விழைவார் யாரும் - புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே என்பதை அறிய வேண்டும். தூய சொற்களும் தூய அமல்களும் அவன்பால் செல்கின்றன. அவற்றைத் தன்பக்கல் உயர்த்துபவன் அவனேயாவான்" (அத். 35: வசனம் 11) என்று இறைவன் அருளியுள்ளான். இதில் 'தூய சொற்கள்' என்பது 'லாஇலாஹ, இல்லல்லாஹு' ஸலவாத்துகள் போன்ற பஜிப்புகளைக் குறிக்கும். இமாம் கஸ்ஸாலீ (ரஹ்) தூய சொற்கள் என்பது மெய்ஞானம் (மஃரிபா) என்றும், நல்லமல்கள் என்பது இதய சுத்தியருளும் செயல்கள் என்றும் (இஹ்யாவில்) எழுதியுள்ளார்கள்.

887 - 888. எல்லையற்ற கருணையுடையோனான இறைவன் நமக்கு ஆத்மீக உணர்வையூட்டி, நம்மிடம் சிருஷ்டி அமைப்பிலேயே உண்டான நமது சக்திக்கு ஏற்ற அளவு நாம் உண்மையான (மெய்) ஞானத்தை அடைய உதவுகிறான். நம்மை அவன்பக்கல் இழுப்பவை தெய்வ அன்பும், தெய்வ அறிவுமேயாகும். இவைதாம் நம்மை ஜீவிதமடையச் செய்பவை. ஆத்மா (நித்திய) ஜீவன்மீதும்

நித்தியத்துவம் படைத்த ஏகன்மீதுமே ஆசைகொண்டுள்ளது. காரணம், அதன் மூலஸ்தானம் அந்தப் பரமாத்மாவேயன்றோ! மனிதர்கள் அனைவருமே தாங்கள் ஆத்மீக வீடாகக் கருதுவதைப் பற்றி இன்பத்தோடு எண்ணுவர்; அங்கே திரும்பத் தவிப்பர்.

894. உண்மையான பற்றுதலால் - ஒருவர்பால் ஈர்ந்தலால் - அன்றி, வெறும் தோற்ற ஒற்றுமையால் உண்டாகும் இன்பம் தற்காலிகமானது. திரும்பிக் கொடுக்கும்வரை பயன்படும் இரவல் வாங்குதலை அது ஒக்கும்.

898. இந்தப் பாடலின் பிற்பகுதி அடுத்துத் தொடரும் கதையின் நீதியைச் சுட்டிக்காட்டுகிறது.

899. 'கலீலா-வ-திம்னா' என்பது மிகப் பிரசித்தி பெற்ற பஞ்ச தந்திரக் கதைகளின் தொகுப்பின் பெயராகும். இது இந்தியாவில் சமஸ்திருத மூலத்தில் எழுதப்பட்டதாயினும், 'கலீலா-வ-திம்னா' என்ற பெயரில் அப்துல்லாஹ் இப்னு முகப்பா என்பாரால் மொழிபெயர்க்கப்பட்டு முஸ்லிம் உலகம் முழுவதும் இது பெயர் பெற்றுவிட்டது. இந்தக் கதைகளில் ஒன்றில் வரும் கரடகன், தமனகன் என்ற பெயர்களை அரபியில் கலீலா, திம்னா என்று அரபி ஆசிரியர் பெயர் சூட்டிவிட்டார். இதை நஸ்ருல்லாஹ் என்பார் இதே பெயரில் பாரஸீக மொழியில் சுருக்கி எழுதியுள்ளார். இங்கே மௌலானா அவர்கள் பிரஸ்தாபிக்கும் சிங்கமும் முயலும் பற்றிய கதையின் தொடர்பாக அடுத்துவரும் ஐந்நூறு பாடல்களில் (900 - 1385) அற்புதமான தத்துவார்த்த விளக்கங்கள் வெளியாகியுள்ளன. ஆனால், இவற்றில் ஐம்பதுக்கும் குறைவானவைதான் இந்தக் கதை சம்பந்தப்பட்டவை. ஏனையவற்றில் பரஞ்சாட்டுதல், நிர்ப்பந்தம் (904 - 997) மெய்ஞான உதிப்பு (1008 - 1026) யதார்த்த உலகமும், தோற்றமான உலகமும் (1109 - 1149) தெய்வ அறிவும், சர்வ ரக்ஷகத்தனமும் (1194 - 1262) தீமையின் இயல்பு (1309 - 1338) போன்ற விஷயங்களும் பல மேற்கோள்களான பேச்சுக்களும் உள்ளன.

முயலால் ஏமாற்றி அழைத்துச் செல்லப்பட்ட சிங்கம் கிணற்றுள் தென்பட்ட தன் நிழலை வேறு சிங்கம் என்று எண்ணிக் கொண்டு அதனோடு போரிடுவதாக நினைத்துக் கிணற்றினுள் குதித்துச் செத்தொழிந்தது. இந்தச் சிங்கம் கீழான மனத்தையும் பகுத்தறிவையும் குறிக்கிறது. முயல் நபிமார்களுடையவும், மெய்ஞானியருடையவும் தெய்வ ஒளிபொருந்திய மெய்யறிவைக் குறிக்கிறது.

*தலைப்பு: ‘வனவிலங்குகளின் கதை: பரஞ்சாட்டுதலின் விளக்கம்’* - பரஞ்சாட்டுதல் (தவக்குல்) என்பது இறைவனிடமே இதயப்பூர்வமாகச் சகல பொறுப்புக்களையும் சாட்டிவிடுவதாகும். இதனால் ஒருவன் எந்த அளவு தன் சுய முயற்சியில் நம்பிக்கை வைக்கலாம் என்ற பிரச்சினையும் எழுந்துள்ளது.. ‘ரிஜ்கு’(அன்றாட உணவு) விஷயத்தில் ஒருவன் எப்படி நடந்துகொள்வது, இதையும் இறைவன் பொறுப்பில் சாட்டிவிட்டுச் சும்மா இருப்பதா, அல்லது அதற்காகப் பாடுபடுவதா என்ற பிரச்சினையும் உண்டாயிற்று. ஞானியர்களில் பலர், உண்மையான பரஞ்சாட்டுதலுடையவன் (முதவக்கிலு) நேரடியாகவோ, மறைமுகமாகவோ, தன் உணவுக்காக எந்தக் கவலையும்படக்கூடாது; நாளைக்கு என்ன என்ற எண்ணமே வரக்கூடாது; யாவையும் இறைவன் புறத்தில் ஒப்படைத்துவிட்டு அங்கிருந்து வருவதை - அது எதுவாயினும் - ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளனர். இதுபற்றிய சாதக பாதகங்களை மௌலானா அவர்கள் சிங்கத்துக்கும் மிருகங்களுக்கும் இடையி லான உரையாடலாகக் காட்டியுள்ளார்கள். இதுபற்றிய அவர்களு டைய சொந்த அபிப்பிராயம் (975 -991ம் பாடல்களிலுள்ளது.) ஆத்மீக லக்ஷியங்களை அடைய நாம் முழு மூச்சுடன் பாடுபட்டாக வேண்டும் தான். ஆனால், சிங்கத்தைப்போல் சுயநலத்துடனும், இம்மையை விரும்பியும் முயற்சிகளில் ஈடுபடுபவர்கள் அந்தச் சிங்கம் அடைந்த தண்டனையையே அடைவர் என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

901. சிங்கம் என்பது சில சமயங்களில் ஆத்மாவையும், சில சமயங்களில் கீழான மனத்தையும் குறிப்பதாகச் சொல்லும் வியாக்கியான கர்த்தா ஸாரீ அப்துல்லாஹ் அதற்குக் கீழ்க்கண்ட இரண்டுவித விளக்கங்களைத் தருகிறார்கள்: 1. சிங்கம் ஆத்மா, பிராணிகள் புலனுணர்வு சக்திகள் முதலியவையாகும். இவற்றைப் பின்பற்றியதால் சிங்கம் லோகாயதம் என்னும் கிணற்றினுள் விழநேர்ந்தது. 2. சிங்கம் தீயவற்றைச் செய்யத் தூண்டும் ஆத்மா (நப்ஸ் அம்மாரா)வாகும்; பிராணிகள் சத்முயற்சி, ஆத்மஞானப் பயிற்சி ஆகிய புல்வெளியில் மேயும் ஆத்ம சக்திகளாகும். இவை, தங்கள் பயங்கர எதிரி கொல்லப்படும்வரை தாக்குதலுக்கு உள்ளாகும் நிலையிலேயே இருந்துவருகின்றன. இந்தக் கதையில் சிங்கம் தன் நோக்கத்துக்குப் பொருத்தமான சிறந்த அறிவுரைகளை அள்ளிவீசுகிறதாயினும் அது நெடுகிலும் தீய சக்தியின் பிரதி பிம்பமாகவே காட்சியளிப்பது குறிப்பிடத்தக்கது.

*904-907. இப்பாடல்களில் சிங்கம் பயபக்தியுள்ள ஒரு முஸ்லி மைப்போல் நடித்துப் பேசுகிறது.*

*906. "உன் இரண்டு விலாக்களுக்கும் இடையிலுள்ள கீழான மனம் (நப்ஸ்) தான் உன்னுடைய படுமோசமான எதிரி" என்ற ஹதீஸின் கருத்து.*

*907. "பாம்புப் புற்று ஒன்றிலிருந்து மெய்விஸ்வாசி இரண்டு தடவைகள் கடிபடமாட்டான்" என்பது இந்த ஹதீஸின் முழு வாசகமுமாகும். அபூ அஜ்ஜா அம்ருப்னு உபைதுல்லாஹ் என்பான் பதுரு யுத்தத்தில் முஸ்லிம்களின் கைதியானான். இனி முஸ்லிம் களோடு போரிடுவதில்லை என்று வாக்குக் கொடுத்ததன்மீது அவன் விடுவிக்கப்பட்டான். ஆனால், மீண்டும் அவன் தன் வாக்குறுதியை மீறி உஹதுப் போரிலும் குறைஷிக் காபிர்களோடு சேர்ந்து கொண்டுபோரிடவந்து பிடிபட்டுவிட்டான். அப்போது அவன் தனக்கு மன்னிப்பருளும்படி நபிபெருமானாரிடம் கேட்டதற்கு இந்தத் திரு மொழியை அவர்கள் அருளி, அவனுக்கு மீண்டும் மன்னிப்பளிக்க மறுத்துவிட்டார்கள். மெய்விஸ்வாசி ஒருதடவை செய்த தவறை மறுதடவையும்செய்து இரண்டுமடங்கு தண்டனை யைப் பெறமாட்டான் என்று இதற்கு அர்த்தம் கூறப்படுகிறது. ஆயினும், இப்பாடலில், ஒருதடவை கடிபட்டவன் அவ்விடத்தை மறுபடியும் அணுகமாட்டான்; ஒரு தடவை சூடுண்ட பூனை மீண்டும் அடுப்பை நெருங்காது என்ற கருத்தில் இந்த ஹதீஸ் எடுத்தாளப்பட்டுள்ளது.*

*911. "பொழுது உதயத்தின் நாயன்" (ரப்புல் பலக்) திருகுர் ஆன் அத் 113 : வசனம் 1 பார்க்க. "குளிப்பாட்டுபவன் கையில் கிடக்கும் மையித்து எப்படித் திருப்பப்படினும் தன் இஷ்டப்படியான அசைவு ஏதுமின்றித் திரும்புவதுபோல், நாமும் இறைவன் கையில் (அவன் ஆட்டம் அசைவுகளுக்கு உட்பட்டவர்களாகக்) கிடந்து விட வேண்டும். இதுவே பரஞ்சாட்டுதலின் (தவக்கலின்) முதல் படியாகும்" என்று அருளியவர்கள் சஹலுப்னு அப்துல்லாஹ் துஸ்தரி (ரஹ்) அவர்களாவர். சாதகன் குளிப்பாட்டுபவர் கை மையித்தைப்போலும், தாதி கையில் சிசுவைப்போலும் கிடந்துவிட வேண்டும் என்று ஹஜ்ரத் கௌதுல் அஃலம் (ரலி) அவர்களும் பன்முறை வற்புறுத்தியுள்ளார்கள். ('புதூஹுல் கைப்' பார்க்க)*

*912-913. தெய்வ உதவியை நாடுவதை விட்டுவிட்டு காரண சாதனம் (ஸபப்) எதையும் பயன்படுத்தல் பரஞ்சாட்டுதலை மீறிய காரியமாகும் என்று சொல்லப்பட்டுள்ளது. இந்த அதி தீவிரமான கருத்துக்களுக்கு மாற்றமானவர்கள் கீழ்க்கண்ட மேற்கோளைக்*

காட்டுகின்றனர்: நபி பெருமானாரிடம் ஒருவர் வந்து தமது ஒட்டகத்தைக் கட்டிப்போடாமல் இறைவன்மீது பரஞ்சாட்டி வெளியில் விட்டு வந்துள்ளதாகச் சொன்னபோது, "நீர் இறைவன்மீது பரஞ்சாட்டுவதுடன், உமது ஒட்டகத்தின் முட்டுக் கால்களைக் கட்டியும் போடும்" என்று அவர்கள் அருளினார்கள்.

914. "ஒரு கைத்தொழிலை அறிந்தவானாய்த் தன் குடும்ப சம்ரக்ஷணைக்கு அது கொண்டு தானே பாடுபடுபவனாய் இருப்பவனை இறைவன் நேசிக்கிறான்" என்பது நபிமொழியாகும். இதுபோன்ற மற்றும் பல ஹதீஸ்கள் உண்டு. உங்களில் யாரும் கோடாரியை எடுத்துக்கொண்டு காட்டுக்குப்போய் விறகு சேகரித்துவந்து விற்று, தானும் உண்டு தருமமும் செய்தால், அது பிச்சையெடுப்பதைவிடச் சிறந்த செயலாகும்" என்பது அவற்றில் ஒன்றாகும். நபிபெருமானாருடைய மெய்விஸ்வாசத்துடையவும், ஏகத்துவத்துடையவும், அக நிலையுடையவும் சாரமே இறைவன் மீது பரஞ்சாட்டலாகத்தான் இருந்ததாயினும், பாடுபட்டுப் பொருள் ஈட்டுவது அவர்களுடைய முன்மாதிரியின் (சுன்னத்தின்) அம்சமாக இருந்திருப்பதால் அதைப் பின்பற்றுவதில் தவறொன்று மில்லை. கடையர்கள் அன்றாட உணவை அல்லது, இம்மையின் சுகபோகங்களை அடைவதுபற்றிய சிந்தனையிலேயே பராக்கா கிறார்கள்; ஆனால், மகான்களோ பரமார்த்தீக, ஆத்மீக அப்பியா சங்களில் ஈடுபடுவதையே தங்கள் உழைப்பாகக் கொள்கின்றனர். "ஒவ்வொரு நபியும் ஒரு தொழிலை உடையவராய் இருந்தார்; எனக்கு இரண்டு தொழில்களுண்டு. அவை ஏழ்மையுணர்வும், (ஆத்மீக) புனிதப் போராட்டமுமாகும்" என்று நபிபெருமானார் அருளியுள்ளார்கள்.

915. மெய்யுறுதி பலமற்ற நிலையால் மனிதர்கள் சுயநல நோக்கங்களுக்காகச் செயல்படத் தொடங்குகிறார்கள். அவர்களு டைய சுயநலம் அதிகரிப்பதற்கேற்ப அவர்களுடைய செயல்களும் அதிகமும் பொய் மிகுந்தவையாயும், நயவஞ்சகமானவையாயும் அமைந்துவிடுகின்றன.

922. இறைவன் தான் நேசிப்பவர்களுடைய கண்ணாகவும், காதாகவும், கையாகவும் இருப்பதாகக் கூறியுள்ள வசனம் ஹதீஸ் குத்ஸியிலுள்ளது.

927. இதிலுள்ள ஹதீஸின் முழுவாசகமும் வருமாறு: "சிருஷ்டிகள் யாவும் இறைவனின் குடும்பத்தைச் சேர்ந்தவை. இறைவனுக்கு மிக அருமையானவர்கள் யார் எனின் அவன் குடும்பத்தாருக்கு அதிகமும் உதவிசெய்பவர்களே."

929. மனிதன் சிருஷ்டிக்கப்பட்டதே இறைவனை வணங்குவதற்காகத்தான். (அத். 51 : வசனம் 56 பார்க்க.) வணக்கத்தின் குறிக்கோள் தெய்வஞானம் (மஃரிபா) அடைவதாகும்; பரஞ்சாட்டுதல் அடிப்படையானதுதான். ஆயினும், இறைவன் அவனை நாம் அறிவதற்காக நமக்குத் தந்துள்ள மனம், உடல் ஆகியவற்றின் சக்திகளைப் பயன்படுத்திப் பாடுபடுவது பரஞ்சாட்டலுடன் இணக்கமானதுதான், மாற்றமானதல்ல என்பது சிங்கத்தின் கட்சியாகும்.

933. இறைவன் நமக்குத் தந்துள்ள கைகள், ஒரு எஜமானன் தன் வேலைக்காரனிடம் கொடுக்கும் மண்வெட்டியையொக்கும். அதாவது, எஜமானன் தன் கையில் மண்வெட்டியைத் தந்ததுமே தான் இன்ன வேலைதான் செய்யவேண்டும் என்பதை வேலைக்காரன் - எஜமானன் சொல்லாமலே - தெரிந்துகொள்வதுபோல, இறைவன் நமக்குக் கைகளைத் தந்துள்ள நிலையில், அவன் அவற்றைத் தந்துள்ளது உழைப்பதற்குத்தான் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும் என்பதே இதன் கருத்தாகும். மேலும், இறைவன் நமக்கு அறிவைக் கொடுத்துள்ளான். நம் செயல்களின் பலாபலன்களை அதன் மூலம் நாம் அறிந்துகொள்ள உதவியுள்ளான். எனவே, நற்செயல்களைச் செய்யும் முயற்சியில் நாம் தீவிரமாக வேண்டும் என்பதும் இதன் கருத்தாகும்.

939. இப்பாடலின் முதல் பகுதியில், "நீங்கள் நன்றி செலுத்தினால் நான் (என் அருட்கொடைகளை) அதிகமாகத் தருவேன்" (அத். 14: வசனம் 7) என்ற திருவசனத்தின் கருத்து தொக்கியுள்ளது.

941. "சொர்க்கலோகத்தின் மரம் ஒன்றை நீங்கள் அடைந்ததும் அதன் நிழலில் அமர்ந்து அதன் கனிகளைப் புசியுங்கள்" என்று அருளிய நபிபெருமானார் அந்த மரம் ஓர் 'ஆலிம்' ஆவார் என்றும் தெரிவித்துள்ளார்கள். இங்கே மௌலானா அவர்கள் மெய்ஞானக் குருநாதரையே இவ்விதம் மரம் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

942. அந்த மரம் சொரியும் கனிகள் என்றது தெய்வ உதிப்புக் கொண்டு மெய்ஞானியின் வாயிலிருந்து உதிரும் மெய்நிலைபற்றிய அகமியங்களாகிய உண்மைகளையாகும்.

943. கொள்ளைக்காரர்கள் என்றது இம்மையும், நம்உடலிச்சைகளும், ஷைத்தானுமாகும். அகால வேளையில் - வேளை தவறிக் கூவும் சேவலால் யாருக்கும் பயனில்லை. காலைத் தொழுகைக்கு ஜனங்களை எழுப்பக் கூவவேண்டிய சேவல் நடு ஜாமத்தில் கூவினால் அதனால் யாருக்கும் பயனில்லை. இந்தச் சேவலைப் போன்று காலம் தவறிக் காரியம் செய்பவன் காலங்கடந்து தன்

மரணப் படுக்கையில் பச்சாதாபப்படுபவன் எந்தப் பயனையும் அடைந்துகொள்ள மாட்டான்.

952. "மேலும் (ஆத், சமூக கூட்டத்தார் போன்றோரான) அவர்கள் தங்கள் சதித் திட்டங்களைத் தீட்டினர்; ஆனால், அவர்களின் சதித்திட்டங்கள் மலையையே அசைத்துப் பிடுங்கு மளவுக்குப் பலமானவையாய் இருப்பினும், அவை இறைவனிடமே யுள்ளன. (அவன் அவர்களைக் குழப்பத்திலாழ்த்துகிறான்.)" (அத் 14: வசனம் 46) என்ற திருகுர்ஆன் மொழி இங்கே சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

**தலைப்பு : "முயற்சி செய்வதைவிட..... இஸ்ராயீல் (அலை) அவர்களும்"** : பைளாவி திருகுர்ஆனுக்கு எழுதியுள்ள விரிவுரை நூலில், (அத் 31: வசனம் 34) "நாளை தான் அடையவிருப்பது யாது என்பதையும், தான் எந்த நிலத்தில் மரணிப்பான் என்பதையும் எந்த மனிதனும் அறியமாட்டான்" என்ற வசனத்துக்கான வியாக்கியான உரையில் இந்தக் கதையை எடுத்தாண்டுள்ளார்கள். இமாம் கஸ்ஸாலீயின் இஹ்யா, கீமியா ஆகிய நூற்களிலும் இது எடுத்தாளப்பட்டுள்ளது. (நமது 'பேரின்ப ரஸவாதம்' பார்க்க,)

961-962. ஆத்மீக ஏழ்மை என்பது தன்னில் நாஸ்தியானவனாய், அல்லாஹ்வையன்றியுள்ள சகலவற்றையும் உதறித் தள்ளியவனாய் ஆவதுதான். இந்த நாஸ்தியை (மரணத்தை) விட்டுத் தப்பி, இம்மையின் சுகபோகங்களில் திளைத்துக்கொண்டிருக்க நாடுவது வீண் வேலை; இந்தக் கதையில் கண்ட மனிதன் இஸ்ராயீல் (அலை) அவர்களுடைய கையிலிருந்து தப்பி ஓட முயன்றதையே அது ஒக்கும்.

965. முன்னுள்ள 639 - ம் பாடலுக்கான விளக்கவுரை காண்க.

970. இமாம் கஸ்ஸாலீ தங்களுடைய 'இபாஹா' என்ற கிதாபில் எழுதுவதாவது : சுதந்தரமாய் இருப்பது அடிமைத்தனத்தைவிடச் சிறந்தது என்பது உண்மைதான். ஆனால், சுதந்தரம் இரண்டு வகைப்படும். ஒன்றாவது, இறைவனுக்கு அடிமையாய் இருப்பதை விட்டு ஒருவன் தப்புவது. அதாவது, சிருஷ்டி சிருஷ்டியாளனாக வேண்டும்; காலத்தில் இடம் பெற்றது காலமற்றதாய், நிரந்தர மானதாய் ஆக வேண்டும். இது சுத்த அபத்தமான கூற்றாதலின், யாரும் இறைவனுக்கு அடிமையாய் இருப்பதைவிட்டுத் தப்பி சுதந்தரமடையலாம் என்பதும் அபத்தமான பேச்சுத்தான். இரண் டாவது வகைச் சுதந்தரம், தன் சுபாவச் சேஷ்டைகளையும், ஆவேசங் களையும்விட்டு விடுதலையாகி, இறைவனையன்றியுள்ள எதற்கும் அடிமையாகமலிருத்தலாகும்.

*971-974.* மனிதனின் செயலாற்றல், நபிமார்கள், மெய்விஸ்வாசிகள் ஆகியோருடைய முன்மாதிரியால் சரி என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. தெய்வக் கருணையால் அவர்களுடைய உழைப்பு அவர்களுக்கு ஆத்மீகப் பரிபூரணத்துவத்தையும், பேரின்பத்தையுமே நல்கிவிட்டது.

*975-991.* இங்கே சிங்கத்தின் கட்சி எடுத்துப் பேசப்பட்டுள்ளது. இறைவன்மீது பரஞ்சாட்டுபவர்கள் அவன் சித்தப்படியான, உத்தரவுகளின்படியான வேலைகளைச் செய்வதில் முயற்சி எடுக்கவேண்டும்.

*972.* இறைவனின் விதிப்போடும் தீர்ப்போடும் மோதுவதே சுயமுயற்சியாகும் என்று 910-ம் பாடலில் சொல்லப்பட்ட கருத்துக்கு மாற்றுக் கருத்து இந்தப் பாடலில் தரப்பட்டுள்ளது. ஆத்மீகப் போராட்டத்தை (ஜிஹாதை) நடத்துவதில் நாம் முழு மூச்சுடன் ஈடுபடுவோமாயின் அது தெய்வ உத்தரவுப்படியான கடமையாகிவிடும்; அது தெய்வ சித்தத்தோடு மோதுவதாகவும் ஆகாது. ஆனால், அவனால், ஆதியிலேயே ஜீவன் முக்தர்களாவதற்குரியவர்கள் என்று விதிக்கப்பட்டு விட்டவர்களுக்கு அதை அடைவதற்கான காரண சாதனங்களைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு அவனால் உதிப்பு உண்டாக்கித் தரப்படுகிறது.

*983.* இம்மையின் செல்வங்கள் அவற்றைப் பொறுத்தவரை நல்லவைதாம். நாம் விலகத் தெண்டிக்க வேண்டிய இம்மை யாதெனின், செல்வத்தை விழைவதும், அவற்றைக் கட்டிப் புரள்வதும், அவற்றைவிட்டுப் பிரிய மனமற்றவர்களாக இருப்பதும்தான். "உன்னை உன் ரக்ஷகனைவிட்டும் அப்பால் திருப்பும் எதுவுமே உன் இம்மைதான்" என்று நபிபெருமானார் அருளியுள்ளார்கள். இம்மையைவிட்டு வெருண்டோடும்படி மீண்டும் மீண்டும் எச்சரிக்கும் ஹஜ்ரத் கௌதுல் அஃலம் தங்கள் பிரசங்கம் ஒன்றில் இம்மை யாது என்பதை இவ்விதம் விவரித்துள்ளார்கள்: "உன்னுடைய கீழான மனத்தையும், அதன் ஆசாபாசங்களையும், சுபாவச் சேஷ்டைகளையும்தான் நான் இம்மை என்று கூறுகிறேன். மனித இயற்கைக்கு அவசியமானவையும், அழிவதற்கு உரியவையும் இம்மையல்ல . . . இறைவனே உனக்காகக் கடமையாக்கி விட்டதையன்றி, நீயே உன் முயற்சியால், அவ்வ உழைப்பால் தேடிக்கொண்டவைகளே இம்மை என்பது. எவை எவை மனித வாழ்க்கைக்கு அவசியப்படுகின்றனவோ அவை இம்மையாக மாட்டா. குடியிருக்கப் போதிய வீடும், உடலை மறைத்துக்கொள்ள அவசியமான துணியும், ஆத்ம சாந்தியை நல்கும் மனைவியும் இம்மையில் சேரமாட்டா. சிருஷ்டிகருத்தாவான பரமனைப் புறக்கணித்துவிட்டுச் சிருஷ்டி

களின் பக்கம் சாய்ந்துவிடும் நிலையே (விலக்கப்பட்ட) இம்மை யாகும்." (கௌதுல் அஃலமின் "மல்பூஜாத்" பக்கம் 106 பார்க்க.)

985. செல்வம் வேண்டுமென்ற ஆசை இதயத்துள் புகுந்து விட்டால் அதன் பரிசுத்தத்தையே அந்த ஆசை பாழ்படுத்திவிடும். செல்வத்தின் பற்றில்லாது, அதைச் சன்மார்க்கக் காரியங்களுக்குப் பயன்படுத்திக் கொள்வதைத் தண்ணீர்மீது படகு மிதப்பதற்கு மௌலானா உவமித்தார்கள். அதிலும், இச்சை புகுமாயின், பரமார்த்திகச் சாதனைகளைத் தன்னகத்தே கொண்ட அந்தப் படகாகிய சாதகன் கவிழ்ந்து அதனுள் மூழ்கிப்போவான்.

986. காற்றுமுதல் சகலவற்றையும் இறைவன் சுலைமான் (அலை) அவர்களுக்கு வசப்படுத்திக் கொடுத்திருந்தான். ஆனால், அவர்களோ, எந்தச் செல்வத்தின்மீதும் சற்றும் பற்றுதலற்ற பரம ஏழையாகவே வாழ்ந்தார்கள். அவர்கள் ஏழைகளை அழைத்துத் தங்கள் அருகில் அமர்த்திக்கொண்டு பேசுவது வழக்கம். செல்வத் திடையிலும் அவர்களுடைய பற்றற்ற துறவு நிலையை அடைந்து விட்டவர்களை, இம்மை என்ன, எந்தப் பாவமுமே அண்ட முடியாதன்றோ!

987-989. இம்மையின் ஆசைகள் இதயத்தினுள் நுழையாத வகையில் அதன்மீது முத்திரையிட்டுக் கொள்ளும் துறவி நீரில் மூழ்குவதோ, அழிவதோ இல்லை. அவருடைய ஆத்மீக வறுமை அவர் சகல இச்சாபாசங்களையும் ஒதுக்கித்தள்ளி, பூரண நிம்மதி யாக வாழ உதவுகிறது. அவர் இறைவனின் பிரதிநிதி என்ற முறையில் இறைவன் இவ்வுலகின் நிர்வாகத்தையே அவரிடம் கொடுப்பான்.

990. 'மின் லதுன்' என்ற தெய்வஞானம் கிலுரு (அலை) அவர்களுக்கு அருளப்பட்டதாகத் திருகுர் ஆன் (அத்.18: வசனம் 65) பிரஸ்தாபிக்கிறது.

998-999. இங்கே சங்கேதம் ஒரு புதுத் தரத்தை எட்டுகிறது. உடலிச்சையாகிய சிங்கத்துக்கு நேர் எதிரிடையான மெய்யறிவாக முயல் விளங்குகிறது. உடலின் சேஷ்டைகளால் அழிக்கப் படக்கூடிய ஆபத்துக்கு உள்ளாகியுள்ள ஆத்மீக சக்திகள் மற்ற மிருகங்களாகக் காணப்படுகின்றன.

1004. நபிமார்களுடைய சடலம் பலஹீனமானதாயும் (மற்ற மனிதர்களுடையதைப்போல்) சிறிய உருவமுடையதாகவும் இருந்ததாயினும், அவர்களுடைய ஆத்மீக மாண்பும் மகத்துவமும் எத்துணை மகத்தானவையாய் இருந்தன என்பதை இந்தப் பாடல் சுட்டிக் காட்டுகிறது. மெய்யொளி பெற்ற ஞானியை மௌலானா

அவர்களே (வேறு சில இடங்களில்) கண்ணின் கருமணி என்று குறிப்பிட்டுள்ளார்கள். மனிதனுக்குக் கண்ணின் கருமணி முக்கியத் துவம் வாய்ந்ததாக இருப்பதுபோல, இறைவனுக்கு சம்பூரண மனிதர் முக்கியத்துவமுடையவராய் இருக்கிறார்; அவர்மூலம் இறைவன் தன்னைத் தன் பல்வேறு அம்சங்களிலும் உணருகிறான்; இறைவன் தன் செயல்களைக் காண அவர் அவனுக்கு உலகின் கண்களாக விளங்குகிறார் என்று இப்னுல் அரபி (ரஹ்) அவர்கள் (தங்கள் 'புஸுஸுல் ஹிக'மில்) எழுதியுள்ளார்கள்.

1008-1012. யதார்த்தமான அறிவு தோற்றத்தையோ, படிவத் தையோ பொருட்படுத்தாத தெய்வ உதிப்பால் உண்டாவதாகும்.

1009-1010. இந்தப் பாடல்களில் கீழ்க்கண்ட திருகுர்ஆன் வசனங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன: "உம் இறைவன் தேனீக்கு உதிப்பை அருளினான், 'மலைகளிலும், மரங்களிலும், கட்டடங் களின்மீதும் நீ உன் வீடுகளை நிர்மாணி; பிறகு நீ சகலவித (மலர்) களையும் உண்டு, உனக்கு எளிதாக்கப்பட்ட உன் இறைவன் காட்டிய வழியைப் பின்பற்றி (உன் வீடுகளுள்) ஒடுங்கிக்கொள்!' என்று இதனால் அதன் வயிற்றிலிருந்து பல வர்ணங்களையுடைய, மனிதருக்குக் குணமளிக்கும் பானம் (தேன்) வெளிப்படுகிறது." (16 வசனங்கள் 68, 69), தேன் தேனீயின் வயிற்றிலேயே ஜீரணமாகி விடுவதால், அது சிறு குழந்தைக்கும் எளிதில் ஜீரணிக்கக் கூடியதா யுள்ளது.

1012-1013. "இறைவன் ஆதமுக்கு சகல பெயர்களையும் கற்றுக் கொடுத்தான்" (அத் 2: வசனம் 31); மற்றும் கல்யாண குணங்களை அருளினான். அதன்மூலம் அவர்கள் அமரர்களுக்கும் பாடம் சொல்லிக்கொடுப்பவர்களானார்கள். அமரர்கள் அவர்களுக்கு சாஷ்டாங்கம் செய்தனர். அப்போது அஜாஜிலாய் இருந்த ஒரே ஓர் அமரன் மட்டும் இறைவன் கட்டளைக்குப் பணிய மறுத்து 'இப்லீஸ்' ஆனான்.

1014-1015. ஆதம் மெய்ஞான அறிவைக் குறித்து நிற்கிறார்கள்; வீண் குதர்க்க வாதம் பேசிய இப்லீஸ் வெறும் அறிவைக் குறித்து நிற்கிறான். அவன் தன் அறிவுதான் பெரிது என்ற அகந்தையால் ஆதம் (அலை) அவர்கள் அடைந்திருந்த மெய்யறிவை ஏளனஞ் செய்தான். எனவே, அவன் வீழ்ந்துபட்டான். (ஆதம் (அலை) அவர்களைவிடத் தான் உயர்ந்தவன் என்பதற்கு இப்லீஸ் சொன்ன தர்க்கரீதியான காரணம் திருகுர்ஆன் அத். 38: வசனம் 76-ல் தரப் பட்டுள்ளது.)

1017. இதயத்தினுள்ளே மிகச் சிறியதோர் கறுப்பு இரத்தக் கட்டியுள்ளது. அதில் ஜடதத்துவமற்ற ஆத்மா அடங்கியுள்ளது. அந்த இதயத்தைப் பரிசுத்தமாக்கி, அதில் அன்பு பொங்கச் செய்தால், மறைவானதைக் காணும் மற்றோர் இதயத்தை அது உண்டாக்குகிறது. இந்த இரத்தக்கட்டியுள்ள இடமே தெய்வ உதிப்பும், மெய்ஞானமும் இறங்கும் தலமாகும். இந்தப் பேழையுள் தான் இப்பிரபஞ்சத்திலுள்ள எதுவும் உய்த்துணர முடியாத 'மாணிக்கத்தை' (ஜௌஹறை) இறைவன் வைத்துள்ளான். "என் பூமியோ, என் வானமோ என்னைத் தமதகத்தே கொள்ள முடிய வில்லை; ஆனால், மெய்விஸ்வாசமுள்ள என் அடியான் இதயத் திலே நான் அடங்கிப்போய்விடுகிறேன்" என்று இறைவன் அருளியுள்ள வசனம் ஹதீஸ் குத்ஸியில் காணப்படுகிறது.

1018-1026. மனிதனுடைய உண்மையான மதிப்பெல்லாம்அவன் பெற்றுள்ள ஆத்மீக அந்தஸ்தைப் பொறுத்ததுதான் என்பதை இந்தப் பாடல்கள் எடுத்தியம்புகின்றன.

1018. முன்னாலுள்ள 706-712-ம் பாடல்கள் பார்க்க.

1022. குகையின் தோழர்களில் (அஸ்ஹாபுல் கஹ்புகளின்) நாய் பலாஅம் என்ற ஒரு மனிதனுடைய உருவில் சொர்க்கத்தில் அனுமதிக்கப்படும் என்றும், பலாஅம் ஒரு நாயின் உருவில் நரகில் தள்ளப்படுவான் என்றும் சொல்லப்படுகிறது. (குகையில் தமது நாயுடன் விஸ்வாசிகளான இளைஞர்கள் சிலர்-எழுவர் என்று சொல்லப்படுகிறது - இறைவனால் சுமார் இருநூறு ஆண்டுகள் தூக்க நிலையிலேயே வைக்கப்பட்டிருந்தனர். பிறகு அவர்களும் அவர்களுடைய நாயும் தூக்கம் நீங்கி எழுந்த விபரம் திருகுர் ஆனில் அத். 18: வசனங்கள் 9 முதல் 22 வரை விவரிக்கப்பட்டுள்ளது.)

1023. பன்றியைப்போல், நாயும் அசுத்தமான மிருகம்தான். எனினும், தெய்வ அருள் பெற்ற இந்தக் குகையின் தோழர்களின் நாய் சுவனபதி அடையும் பேறு பெற்றது அற்புதமல்லவா!

1024-1026. ஒருவருக்குக் கடிதம் எழுதும்போது நாம் அவரு டைய தோற்றத்தையும், அங்க அவயவங்களையும் வியந்து எழுது வதில்லை. ஏனெனில், அவருடைய அக இயல்புகளோடு ஒப்பிடப் படின் இவை எந்த மதிப்புமற்றவை. அவரகத்தேயுள்ள ஆத்மா தானே முக்கியமானது. அது காலம் தூரம் ஆகிய இரண்டையுமே கடந்ததன்றோ!

1028. இக் கதையின் அந்தரங்கப் பொருளை அறிந்து கொள்ள ஒருவனுக்கு ஆத்மச் செவி சீரானதாக இருந்தாக வேண்டும்.

*1030. சம்பூரண அறிவின் வெளித் தோற்றமே இந்த ஜடதத்துவ உலகம். ஜீவன் உடலுக்கு அசைவூட்டி அதை ஆட்கொண்டுள்ளதுபோல, இந்த ஜடதத்துவ உலகுக்கு உயிராய் இருந்து அதை ஆட்கொண்டுள்ள தெய்வ ஞானம்தான் அதன் சாரமாகும். இந்த ஞானத்தை அடையும் சக்தி ஒவ்வொரு மனிதனிடமும் புதையுண்டு கிடக்கிறது. மனிதர்கள், ஜின்னுகள், மிருகங்கள், பறவைகள் ஆகிய சகலவற்றின் மீதும் ஆதிக்கம் செலுத்திய சுலைமான் (அலை) அவர்களுடைய மந்திர முத்திரைக்கு இந்த ஞானத்தை உவமை கூறலாம்.*

*1038. அமரர்கள், ஷைத்தான்கள் ஆகியோரில் எண்ணற்றவர்கள் உன் இதயத்தைச் சுற்றிக் கூடிக்கொண்டிருக்கின்றனர்.*

*1039-1040. நியாயத் தீர்ப்பு நாளில் பாவாத்மாவின் நல்ல கெட்ட சக்திகள் - அமரர்கள், ஷைத்தான்கள் அவனுக்கு எதிராகச்சாட்சி சொல்லி, அவன் முகத்துக்கு எதிரிலேயே அவனுடைய பாவங்களை எடுத்துரைக்கும்.*

*1044. தான் நம்பும் ஒருவனிடம் மனிதர்கள் யோசனை கேட்டுக்கொள்வர். அபுல் ஹைறத்தம் இப்னுத் தையிஹான் (ரலி) என்பார் நபிபெருமானாரிடம் இரண்டு அடிமைகளைச் சுட்டிக் காட்டி, அவர்களுள் வீட்டு வேலை செய்ய அதிகம் தகுதியுடையவர் யாராய் இருக்கலாம் என்று கேட்டபோது நபிபெருமானார் இந்தப் பதிலை கூறி அருளினார்கள்.*

*1046. அதாவது, நீ உன் மனத்திலுள்ள ரகசியங்களை யாரிடமாவது திறந்து சொல்வாயாயின், அதில் அவனிடம் நீ சுத்தமான சித்தத்தை எதிர்பார்ப்பாயாயின், அவன் விரைவிலேயே உன் நம்பிக்கையைச் சிதறடித்து உன் ரகசியத்தைப் பகிரங்கப்படுத்துவதைத்தான் காண்பாய்.*

*1050 - 1051. அறிஞன் தன்னைக் காட்டிக்கொடுத்துக் கொள்ளாமல் தன் காரியத்தைச் சாதித்துக்கொள்வான். கண்ணியில் அகப்பட்ட பறவைகளை வேடன் ஒன்றுசேர்த்துக் கட்டிப்போட்ட நிலையில் அவை தம் விதிவசம் அதுதான் போலும் என்று இணங்கிப் பணிந்துகிடப்பது போல் பாசாங்குகாட்டி, அவன் தமது கட்டுகளை அவிழ்த்துவிடச் சூழ்ச்சி செய்கின்றன. அவன் தமது கட்டுகளை அவிழ்த்ததும் அவை சிறகடித்துப் பறந்து ஓடிப்போய் விடுகின்றன. அறிஞன் தன் லக்ஷிய சித்திக்காக இப்பறவைகளின் போக்கை அனுசரித்தே செயலாற்றுவான்.*

1053. 'நபிபெருமானாரின் எதிரிகளுக்கு' என்றது நபிபெருமானார் யார் யாரிடம் விஷயங்களைத் திறந்து பேச விரும்பவில்லையோ அவர்களையாகும்.

1060. வெறும் பெயர்கள், அதாவது பொருள்களுக்கும் மனிதர்களுக்கும் சொல்லப்படும் பெயர்கள் மேலாழ்ந்தவாரியானவை, யதார்த்தத்தோடு சம்பந்தமற்றவை என்பது இப்பாடலின் பிற்பகுதியின் கருத்தாகும்.

1061. தண்ணீரை மணல் உறிஞ்சிவிடுவதுபோல இறைவன் பாதையில் ஈடுபடவேண்டிய விலைமதிப்பிலா மூச்சு நயவஞ்சகர்களின் பகட்டான வார்த்தைகளைக் கேட்பதிலேயே வீண்விரயமாகிக் கொண்டிருக்கிறது.

1062. 'தண்ணீர் ஊற்றுப் பெருக்கெடுக்கும் மணல் வெளி' என்றது தன் சீடர்களின் ஆத்ம உயிருக்கும், வளர்ச்சிக்கும் வற்றாத ஊற்றாக நின்றிலங்கும் சர்க்குருவையாம்.

1063 - 1065. விதிவசப்பட்டோலை (லௌஹுல் மஹ்பூல்) ஆதிதொட்டு கடைசிவரையுள்ள சகலமும் பதிவுசெய்யப்பட்டுள்ள ஏடாகும். சாதகன் தெய்வ ஞானம் பெருக்கெடுக்கும் ஊற்றுக் கண்ணாக ஆகிவிடின், அவன் பகுத்தறிவிடமிருந்தோ, புத்தியிடமிருந்தோ எதையும் கற்றுக்கொள்ள வேண்டிய அவசியமற்றவனாகி விடுகிறான். இவற்றை அவன் பின்னால் விட்டுவிட்டு, - நபிபெருமானார் ஸித்ரத்துல் முந்தஹா என்ற மரத்தடியை அடைந்ததும் ஜிப்ரயீலைப் பின்னால் விட்டுவிட்டு மேலே சென்றதுபோல் - இவனும் மேலே போய்விடுகிறான்.

1066 - 1067. இப்பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ள நபிபெருமானாரின் விண்ணுலக யாத்திரைபற்றிய சம்பவம் திருகுர்ஆனில் அத். 17; 1-ல் பிரஸ்தாபிக்கப்பட்டு, அதன் விவரங்கள் சில அத். 53-ல் தரப்பட்டுள்ளன. "அவர் (முஹம்மது நபி) இறங்கினார். பின்னர் நெருங்கினார், இன்னும் நெருங்கி இரண்டு விற்களை (ஒன்றுடன் ஒன்று சேர வட்டமாக) வளைத்தாற்போன்ற அளவுக்கு அல்லது அதையும்விடச் சமீபமாக நெருங்கினார். அவன் வெளியாக்கிக் காட்டியதையெல்லாம் அவன் அப்போது தன் அடியாருக்கு அறிவித்துக் கொடுத்தான்" (வசனங்கள் 8 - 10) என்றும், "இன்னொரு முறை அங்கே 'ஸித்ரதுல் முந்தஹா' என்னும் மரத்தடியில் அவரை அவன் கண்டது உறுதி. அதன் அருகில்தான் நல்லடியார்களின் புகலிடமான சுவனபதியுள்ளது. அந்த மரத்தை மூடியிருந்தவை அதை நன்கு மறைத்துக்கொண்டன. அப்போது பார்வை அதைவிட்டு

விலகவோ, வரம்பு மீறவோ இல்லை. அவர் தமது இறைவனின் மகத்தான அத்தாட்சிகளைக் கண்டது நிச்சயம்'' (வசனங்கள் 13 - 18) என்றும் விவரிக்கப்பட்டுள்ளது. அத். 81: வசனம் 19-லும் இது மீண்டும் பிரஸ்தாபிக்கப் பட்டுள்ளது. நபிபெருமானார் இறைவனின் சந்நிதியில் நுழையவிருந்த சமயம் ஜிப்ரயீல் பின்தங்கிவிட்டதைக் கண்ட நபிபெருமானார், அவர்களை நோக்கி, "சகோதரரே, நீங்கள் ஏன் பின்தங்கிவிட்டீர்கள்?'' என்று வினாவினார்கள். அதற்கு ஜிப்ரயீல், "நான் மேலும் ஒரு விரல் நுனியளவு முன்னே வந்தாலும் நான் எரிந்துபோவது நிச்சயம்'' என்று பதிலளித்தார்கள். ஜிப்ரயீல் (அலை) அவர்களின் வரம்பு ஸித்ரதுல் முந்தஹாவாக அமைந்திருந்ததுபற்றி ஷைகுல் அக்பர் இப்னுல் அரபி தங்கள் தப்ஸீரில் அது ஏழாம் வானிலுள்ளதென்றும், அதற்கு அப்பால் அமரர்களின் ஞானம் செல்வதில்லை என்றும், அதுவே 'ரூஹுல் அஃலம்' (தலையாய ஜீவன்) என்றும் விரிவுரை தந்துள்ளார்கள்.

1068-1070. மெய்யறிவைத் தேடுவோன் தன்னைப் பாரமார்த்தீகப் பயிற்சிகளில் அதிகமும் ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும். 'நிர்ப்பந்தத்தால்' (ஜபரினால்) தான் அவ்விதம் செய்யவில்லை, அது தனக்கு இயலாததாக ஆகிவிட்டது என்று வேண்டுமாயின் அவன் தன் புறக்கணிப்புக்கு நொண்டிச் சமாதானம் கூறலாம். நோயில்லாத போதே நோயால் பீடிக்கப்பட்டவர்களாக நடிப்பவர்கள் அந்த நோய்க்கே பலியாக நேர்வதுபோல அவர்களுடைய கதியையே இவனும் அடைவான்.

1071-1072. முன்னுள்ள 978 -ம் பாடல் பார்க்க.

1073-1075. முன்னுள்ள 935-936 பாடல்கள் பார்க்க. இப்பாடல்களில் நபிபெருமானாரைப்பற்றிச் சுட்டிக்காட்டப்படுவதாகச் சிலர் நினைக்கின்றனர். ஆனால், இதன் நேரடியான பொருளை வலிமுஹம்மது அவர்கள் இவ்விதம் தருகிறார்கள்: "கடுமையான தவத்தாலும், இறைவனை ஏகாக்கிரச் சித்தமாகச் செய்யும் தியானத்தாலும் ஒருவன் 'ஜப்ரெ - மஹ்மூது' என்ற படித்தரத்தை எய்தி, தெய்வ சக்தி என்னும் புராக்கின் மீது ஏறியவனாகி விடுகிறான். அந்த நிலையில் இறைவனின் நோக்கப்படிதான் அவனிடமிருந்து எந்தச் செயலும் வெளிப்படும்; அவை தன்னிலிருந்து உண்டாவதாக அவனே கூறமாட்டான்; ஏனெனில், இறைவனையன்றி செயல்படும் வேறு யாரையும் அவன் காணான்.''

1076. முன்னேயுள்ள 751-ம் பாடலையும் அதற்கான விளக்கவுரையையும் காண்க.

1077. சந்திரன் இரண்டாகப் பிளந்தது நபிபெருமானார் நிகழ்த்திய அற்புதங்களில் ஒன்றாகும். இதை நேரில் கண்ட ஸஹாபிகள் பலரும் இதைத் தெரிவித்துள்ளனர். இது மிகவும் பிரசித்தமான ஒரு சம்பவமாக புஹாரீ, முஸ்லிம் போன்ற ஹதீஸ் கிரந்தரங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. வரலாற்று நூற்களிலேயே இவ்வளவு ஆதாரப்பூர்வமான - பலரும் நேரில் கண்ட - அற்புதம் பற்றிய விபரம் வேறு எதற்கும் இல்லை. எனவே, மௌலானா அவர்கள் இதன்மீது ஐயங்கொள்பவன் பெரிய மடையன் என்று கருத்துப்படக் குறிப்பிட்டுள்ளார்கள். (இந்த அற்புதம் பற்றிய பிரஸ்தாபத்துடன் தொடங்குகிறது 'அல்-கமர்' என்ற திருகுர்ஆன் அத்தியாயம்.)

1098. செல்வமும் அந்தஸ்தும் பல குறைகளை மூடிமறைத்து விடுகின்றன.; மெய்ஞானியரான நாதாக்களின் அசல் இயல்பும் அவர்களுடைய தோற்றத்தாலும், நடவடிக்கைகளாலும் கடையர்களின் பார்வையைவிட்டும் மூடிமறைக்கப்பட்டுள்ளன.

1099-1101. மேலே 1096-ம் பாடலிலுள்ள உவமையின் விளக்கம் போன்று அமைந்துள்ளன. சுயநலத்தாலும், மோகத்தாலும், வீண் டம்பத்துக்காகவும் பேசப்படும் வார்த்தைகள் தண்ணீர்மீது எழுதப்பட்ட வார்த்தைகள் போன்றவைதாம்; குளத்துத் தண்ணீரின் மீது உண்டாகும் அலைகள் போல் உடனே மறைந்து விடுபவைதாம். தன்னை நாஸ்தியாக்கலின் மூலம்தான் நீ இறைவனின் செய்தியைப் பெறுபவனாகலாம்.

1105. ஸுன்னத் வல் ஜமாஅத்தைச் சேர்ந்த ஆட்சியாளர்கள், பெரும் பாலில், ஒரு பக்கம் தமது பெயரையும், மறு பக்கம் கலிமாவையும் பொறித்த நாணயங்களை வெளியிடுபவர்களாய் இருந்தனர். எனவே, ஒரு மன்னர் மறைந்து மறுமன்னர் ஆட்சிபீடம் ஏறியதும் பழைய நாணயங்களை அழித்துவிட்டுத் தமது பெயருடன்கூடிய புதிய நாணயங்களை வெளியிடுவார். ஆயினும், எப்போதும்போல் நாணயத்தின் மறுபக்கத்தில் மட்டும் கலிமா பொறிக்கப்பட்டே இருந்தது. எனவே, 'முஹம்மதுர் ரஸுலுல் லாஹ்' என்ற பெயர் மட்டும் சதாவும் மாறாமல் இருந்துவந்தது.

1106. முன்னேயுள்ள 1103-ம் பாடலின் பிற்பகுதியில் நபிமார்களின் (முத்திரை பெற்ற) குத்பாக்களும், ராஜ்ஜியங்களுமே நிலைத்து நிற்பவை என்று கூறிய மௌலானா அவர்கள் இந்தப் பாடலில் சகல நபிமார்களுமே முஹம்மது நபி (ஸல்) அவர்களில் அடக்கம் என்று கூறியுள்ளார்களே, நபிபெருமான் வந்த பின்னும் மற்ற நபிமார்களுடைய ஆத்மீக சாம்ராஜ்ஜியங்கள் இருந்தனவா

என்ற சர்ச்சையுண்டாகலாம். அப்படியன்று. சிறிய எண்ணிக்கைகள் பெரிய எண்ணிக்கையில் அடங்கிவிடுவதுபோல - நூறு என்ற எண்ணிக்கை, அதற்குக் கீழ்ப்பட்ட சகல எண்ணிக்கைகளையும் தன்னகத்தே கொண்டிருப்பதுபோல நபிமார்களின் முத்திரையான முஹம்மது (ஸல்) அவர்களும் சகல நபிமார்களுடைய சம்பூரணத் துவங்களைத் தங்களகத்தே கொண்டவர்களாக இருக்கிறார்கள். நபிமார்கள் யாவரும் சாரத்தில் அவர்களோடு ஒன்றானவர்கள். அவர்களுக்குச் செலுத்தப்படும் மரியாதை யாவிலும் மற்ற நபிமார்களும் பங்கு பெறுகிறார்கள். இதை மௌலானா அவர்கள் இப்பாடலின் பிற்பகுதியில் கணித மேற்கோள் மூலம் அருமையாக விளக்கிவிட்டார்கள்.

*1109-1148.* இந்த அருமையான பாடல்களில் மௌலானா அவர் களின் இதயம் தனிப்பட்ட ஒரு விஷயத்திலிருந்து பொதுப்பட்ட ஒன்றின் பக்கல் திரும்புகிறது. யதார்த்தமும் மெய்யறிவுமான உலகம் ஒரு சமுத்திரம் போன்றது. ஜடதத்துவ உலகின் உருவங்கள் யாவும் அதன்மீது அடுத்தடுத்து எழுந்து மறையும் அலைகளைப் போன் றுள்ளன. அல்லது அவை சமுத்திரத்தின்மீது மிதந்துகொண்டி ருந்து, தம்முள் தண்ணீர் நிறைந்ததும் மூழ்கிவிடும் வெற்றுக் குவளைகள் போலுள்ளன. தாம் உண்டான தெய்வீக மைதானத் துக்கும் தனி மனிதனுக்கும் உள்ள தொடர்பு இத்தகையதாகவே இருக்கிறது. உருவங்களால் மிரண்டவர்களாகி, நம்மிலுள்ள ஜீவனின் தன்மையை மறந்தவர்களாய் நாம் ஓய்வை நாடுவது வீண் வேலையாகும். அதைக் காணும் ஒரு சிலர் சம்பூரண மனிதர்களாவர். ஏனெனில், இறைவன் தன் ஜீவனால் அவர்களை நிரப்புகிறான்; அதனால் அவர்கள் தமது யதார்த்தமற்ற தனித்தன்மையை இழந்து, அவனில் முற்றும் லயித்தவர்களாக ஆகிவிடுகின்றனர். வர்ணங்கள் உண்டாவது வெளிச்சத்தால்தான்; வெளிச்சமின்றேல் வர்ணங்கள் தென்படமாட்டா. ஆயினும், நாம் நம் பார்வையை வர்ணங்களின் மீதே லயிக்கவிட்டுள்ளோம். இந்த நிலையில் பரிசுத்த வெளிச்சத்தை நாம் காண்பதெப்படி? ஆனால், வெளிச்சத்தின் தன்மை இருளி னால் உய்த்துணரப்படுகிறது. நாம் பொருள்களின் தன்மையை அவற்றுக்கு எதிரிடையானதால் உய்த்துணர்கிறோம். எனவேதான், தனக்கு எதிரிடையானதற்றவனாகிய இறைவனை நாம் உய்த்துணரா திருக்கிறோம். எனினும், நம் புலன்களாலும் மனத்தாலும் நாம் உய்த்துணரும் உருவங்களிலிருந்து பரிசுத்த ஜீவனின் மாட்சியை நாம் நிதானிக்கலாம். அதன்மீது தொடர்படியானது போன்று தோற்றமளிக்கும் ஜடதத்துவ உலகம் எழுவதும், அழிவதும், மீண்டும் புத்துயிர் பெறுவதுமாய் இருக்கிறது.

1111. அறிபவனின் மெய்ஞானம் பரிபூரணமானதாகும்வரை அவன் புற உலகில் தான் ஒரு நபர் என்ற உணர்வுடனேயே இருப்பான்; தன்னை இழந்த மெய்யுணர்வு அவனுக்கு உண்டாகிவிடாது.

1112. ஜடதத்துவ உலகின் சகல உருவங்களுக்குமிடையில் நிபந்தனையற்ற தெய்வசாரம் ஊடாடுகிறது. இந்தப் பாடல் 'வஹ்தத்துல் உஜூது' என்ற தத்துவத்தை வெகு சுருக்கமாக வெளியிட்டுள்ளது. மௌலானா மெய்ஞானம், மெய்யறிவு, அன்பு என்ற பெயர்களை 'இறைவன்' என்பதற்குப் பதிலாகப் பல பாடல்களில் பயன்படுத்தியுள்ளார்கள். இந்தப் பகுதியில் அவர்கள் மெய்யறிவு எனும் பதத்தை உபயோகித்துள்ளது மிகப் பொருத்தமாயுள்ளது. ஏனெனில், இந்தக் கதை முழுவதிலுமே மெய்யறிவு (தெய்வ அறிவு, அதாவது, முயலின் உருவத்தில் காட்டப்பட்டுள்ள அறிவு) வீண்பிரமைகளை மனிதன் வெற்றிகொள்ளவேண்டும் என்றும், தான் மூலச் சுடரில் சேர்ந்தவன், சகலவற்றுக்கும் அதுவே மறைவான ஆதாரமாயுள்ளது என்பதை உணர வேண்டும் என்றும் சுட்டிக்காட்டுவதாக இருப்பது கவனிக்கத்தக்கதாகும்.

1113. இறைவனைத் தேடிக் கண்டுபிடிக்க முயல்வதன் மூலமோ, மறையக்கூடிய எதன் உதவியாலோ இறைவனை அடைந்துவிடலாம் என்பது நடவாத காரியமாகும். சாதகனுக்கும் தனக்குமிடையிலுள்ள திரையை அகற்றும் தெய்வக் கருணையின் பயனாய்த்தான் ஐக்கியமுண்டாக முடியும். இறைவனைத் தேடவேண்டியதுதான்; ஆனால், அதற்காகக் காரண சாதனம் எதன் உதவியையும் நாடுவதால் பிரிவுதான் உண்டாகும்.

1115-1119. மனிதனிலுள்ள தெய்வீக அம்சமுள்ள ஜீவன் ஒரு குதிரைக்கு ஒப்பிடப்பட்டுள்ளது. அதன்மீது சவாரி செய்யும் மனிதன் அதைப் பார்க்க முடியாமல், அது காணாமல் போய் விட்டது என்று நினைக்கிறான்.

1121-1135. வெளிச்சமும், வர்ணங்களும் பற்றிய உவமை மௌலானா அவர்களுக்கு அதிகமும் பிரியமானது. இதைப் பல இடங்களில் அவர்கள் கையாண்டுள்ளார்கள். இமாம் கஸ்ஸாலீ (ரஹ்) அவர்கள் தங்களுடைய 'மிஷ்காத்துல் அன்வார்' என்ற நூலில் இந்த வெளிச்சம் - வர்ணம் பற்றி இவ்வாறு எழுதியுள்ளார்கள்: "பலர் வெளிச்சம் என்பது வெறும் அர்த்தமற்ற வார்த்தை, வர்ணங்களுடன் வர்ணங்களையன்றி வேறு எதுவுமே இல்லை என்று வாதாடியிருக்கின்றனர். வெளிச்சம் மற்ற யாவற்றையும்விட அதிகமும் புலப்படுவதாய் இருப்பினும், வெளிச்சம் இருக்கிறது என்பதையே அவர்கள் மறுத்தனர். அதன்மூலமே சகல பொருட்

களையும் பார்க்க இயலும்போது அந்த வெளிச்சமே இல்லை என்பது எப்படிச் சரியாகும்? அது தானும் புலனாவதாய் இருந்து கொண்டு ஏனைய பொருட்களையும் புலப்படச் செய்வதாய் இருக்கிறதல்வா! இதை அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால், சூரியன் மேற்குத் திக்கில் அமிழ்ந்ததும், வானில் விளக்கு பூமியிலிருந்து மறைந்தது; இரவின் நிழல் படர்ந்தது. அப்போது யதார்த்தமான நிழலுக்கும், யதார்த்தமான வெளிச்சத்துக்கும் இடையிலுள்ள முக்கியமான வேற்றுமையை அவர்கள் புரிந்து கொண்டனர். அப்போது அது வர்ணங்களோடு இரண்டறக் கலந்ததால்தான் அதை உணரமுடியவில்லை. அதனுடைய முற்றும் விளக்கமான நிலையினால் அது தென்படாதிருந்தது என்று உணர்ந்துகொண்டனர். இந்த அதி தீவிரதன்மையால்தான் அது தென்படவில்லை; காரணம், ஒரு வரம்புக்கு அப்பால் போகின்றவை அதற்கு நேர்மாறான எதிர்வரம்பை எட்டிவிடுவதுண்டு." ('மிஷ்காத் துல் அன்வார்' நமது தமிழ் மொழிபெயர்ப்பு. பக்கம் 44-45 பார்க்க.)

1124-1125. சூரியன், சந்திரன், விண்மீன்கள் ஆகியவற்றின் வெளிச் சத்தாலேயே வர்ணங்கள் உண்டாகின்றன. அதுபோன்று இறை வனின் ஒளியிலிருந்து பிரதிபலிக்கப்பட்டதான அகமெய்யறிவு அறிவு, சத்தியம் ஆகியவற்றின் லக்ஷியப்படிவங்களை வெளிப் படுத்துகிறது.

1126-1127. இதயத்தின் ஒளியான மெய்யறிவு கண்களின் ஒளியான பார்வைப் புலனை ஒளிபெறச்செய்கிறது. அதன்மூலம் கண் தான் காணும் பொருள்களின் யதார்த்தமான தன்மையைத் தெரிந்துகொள்கிறது. எனவே, "இதயத்தின் ஒளியினால் கண்ணில் வெளிச்சமுண்டாகிறது என்றே கூறலாம். மிருகங்களுக்கு இதய ஒளியற்ற வெறும் பார்க்கும் சக்தி மட்டும் இருப்பதால்தான் அவற்றுக்கு மனிதனுக்குள்ள பகுத்தறியும் தன்மையின்றி அவை தம் மனம்போன போக்கில் நடந்துகொள்கின்றன. இவ்விருவகை வெளிச்சங்களுமே, தெய்வ ஒளியுடன் நேரடியான தொடர்பற்றவை யாயினும் தமது வெளிச்சத்துக்கு அதையே மூல ஸ்தானமாகக் கொண்டுள்ளன. எனினும், மெய்ஞ்ஞானியின் இதயம் எந்தத் திரையு மின்றி ஒளிபெறுகிறது; அதனால் அவர் அந்தச் சிரேஷ்ட ஞானத் தின் ஒளியாலேயே பார்க்கிறார். (இந்தப் பாடல்களின் கருத்தை இன்னும் நன்கு விளங்கிக்கொள்ள விரும்புவோர் மிஷ்காத்துல் அன்வார்" நமது தமிழ் மொழிபெயர்ப்பு பக்கங்கள் 29 முதல் 48 வரை படித்துப் பார்க்கலாம்.)

1128 - 1135. வெளிச்சம், வர்ணம் ஆகியவைபற்றிய சங்கேதப் பேச்சைத் தொடர்ந்து மௌலானா அவர்கள் நாம் வெளிச்சத்தை

இருளிலிருந்து பாகுபடுத்துவது கொண்டு அறிகிறோம் என்கிறார்கள். ஆனால், சகல ஜடதத்துவ சாரத்துடையவும் உயிரும், ஆத்மாவுமான தெய்வ சாரம் என்றுமே நம்மிடமிருந்து மறைவானதாகவே கிடக்கிறது. ஏனெனில்,யதார்த்தத்தில் அதுவல்லாதது எதுவுமில்லை. இறைவனோடு ஒப்பிடவோ, எதிர்மறையாக்கிக் காட்டவோ எதுவுமில்லாததால் மனம் அவனைக் கண்டுகொள்ள முடியவில்லை. அவன் வெளிப்படும் பல்வேறு படிவங்களில்தான் அது அவனைக் கண்டுகொள்ள முடியும்.

1130. ஒரு பொருள் எதுவல்ல என்பதை நாம் தெரிந்துகொள்ளாதவரை அது எது என்பதை நாம் தெரிந்துகொள்ள முடியாது. நன்மை வெளிப்படத் தீமையின் தோற்றம் அவசியமானதாய் இருந்தது. மௌலானா அவர்கள் வேறு பல இடங்களில் இதை விவரித்துப் பேசுகிறார்கள்.

1131. இமாம் கஸ்ஸாலீ (ரஹ்) அவர்களின் 'மிஷ்காத்'தில், "ஒரு பொருளைப்பற்றிய அறிவை அடைந்துகொள்ள மிகவும் வெளிப்படையான வழி அதற்கு எதிரிடையானவற்றை அறிந்துகொள்வதுதான்" என்றும், இறைவன் மறைந்திருக்கக் காரணம் அவனுக்கு எதிரிடையில்லாமலிருப்பதுதான் என்றும் எழுதுகிறார்கள்.

1132. கறுப்பர்களைக் கொண்டுதானே வெள்ளையர்களைப் பகுத்தறிய முடியும். யாவரும் வெள்ளையராய் இருந்தால் நிறப் பிரச்சினைக்கே இடமிருக்காதே!

1135. "(மனிதனின்) கண்கள் அவனைக் காண்பதில்லை; ஆனால், அவன் (சகல) கண்களையும் காண்கிறான். ஏனெனில், அவன் யாவையும் காண்பான், யாவுமறிந்தவன்." (திருகுர் ஆன் அத் 6: வசனம் 103.)

ஸீனா மலையும், மூஸா (அலை) அவர்களும் பற்றிய விபரங்களுக்கு முன்னாலுள்ள 15-16-ம் பாடல்களுக்கான விளக்கவுரையைப் பார்க்கவும்.

1136. 'வடிவம்' என்பது பொருள்களின் புலனுக்குத் தட்டுப்படும் லக்ஷியப் படிவங்களையாகும். அவை யதார்த்தமென்ற மர்மமான, ஊடுருவ முடியாத காட்டிலிருந்து சிங்கங்கள்போல், குதித்து வந்துவிட்டு, மீண்டும் அந்தக் காட்டின் அடர்த்தியுள் சென்று மறைந்துவிடுகின்றன.

1140. (மூல) வார்த்தையாவது இறைவனின் 'ஆகுக' (குன்) என்பதாகும். மௌலானா அவர்களின் உபதேசங்களடங்கிய 'பீஹி-மா-பீஹி' என்ற நூலில் இதுபற்றி அவர்கள் எழுதுவதாவது:

"மெய்நிலை கண்டோர்க்கு வானங்கள், பூமி யாவுமே பேச்சாகவே உள்ளன. ஏனெனில், அவை பேச்சால் பிறந்தவை. அதாவது, (இறைவனின்) 'குன்-ப-யகூன்' (ஆகுக என்றதும் ஆகிவிட்டது) என்பதை நோட்டமிடுங்கள்."

*1141.* "நிச்சயமாக, நாம் இறைவனுக்கே உரியவர்கள். நிச்சயமாக, நாம் அவனிடமே மீள்பவர்களாயுள்ளோம்." (திருகுர்ஆன் அத். 2: வசனம் 156)

*1142 - 1148.* உலகம் மேல் தோற்றத்தில்தான் ஒரே நிலையிலிருப்பதுபோல் தோற்றமளிக்கிறது. உண்மையில் ஜடதத்துவம் யாவுமே ஒவ்வொரு கணமும் தெய்வ சக்தியின் வெளிப்பாட்டால் அழிக்கப்பட்டு, புதுப்பிக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறது.

"ஒவ்வொரு கணமும் ஓர் உலகம் சம்ஹரிக்கப்பட்டு அந்தக் கணமே அதுபோன்றது ஜீவிதமடைகிறது. ஏனெனில் இறைவனிலுள்ள முரண்பாடான கல்யாண குணங்கள் சதாவும் செயல்பட்டுக் கொண்டே இருக்கின்றன. அவன் 'முஹ்யீ' (உயிர் கொடுப்போன்) ஆகவும் இருக்கிறான். 'முமீத்' (உயிர் வாங்குவோன்) ஆகவும் இருக்கிறான். ஒருகணம் அவனுடைய அழகிய திருநாமங்கள் (அஸ்மாயெ-ஜமாலி) அவன் சிருஷ்டிகள்மீது ஜீவிதத்தைப் பொழிகின்றன; அதே கணத்தில் அவனுடைய தீவிரமான திருநாமங்கள் (அஸ்மாயெ-ஜலாலி) அவை யாவற்றிடமிருந்தும் ஜீவிதத்தை அகற்றிக்கொண்டிருக்கிறது. இதன்மூலம் அவனுடைய இயல்பின் இரண்டுவகை அம்சங்களின் செயல்படும் தன்மைகளும் சதா வெளிப்பட்டுக்கொண்டே இருக்கின்றன. ஆனால், அவை அதை உணரவில்லை - "ஆமாம், ஆனால், ஒரு புது சிருஷ்டி வெளியானதுபற்றி அவை ஐயத்திலுள்ளன" (திருகுர்ஆன் அத். 50: வசனம் 15). - இது வலி முஹம்மது அவர்கள் தந்துள்ள வியாக்கியானமாகும்.

*1146 - 1149.* ஜீவிதத்தின் வட்டம் முழுமையுமே ஒரே மையப் புள்ளியிலிருந்துதான் தொடங்கி அதிலேயே முடிவடைகின்றன. அதுதான் தெய்வசாரம். எனவே, "உலகம் ஒரு கணநேரமேயுள்ளது" என்று நபிபெருமானார் சொன்னது, ஒன்றைப் பலவாகவும், பலவை ஒன்றாகவும் காட்டும் தெய்வ ஒளியின் ஒரு சுடரை(தஜல்லியை)த் தான். நம் மனத்திலோ இந்தச் சுருக்கமான தன்மை நேரத்தின் நினைவை உண்டாக்கிவிடுகிறது. அதனால், உலகம் அதே நிலையில் தான் நீடித்துக்கொண்டிருக்கிறது என்று நாம் எண்ணிக்கொள்கிறோம். இதிலுள்ள உண்மையை உணர உன்னதமான மெய்நிலை கண்ட ஞானம் அவசியமாகும். இறைவனோடு காலமற்ற தன்மை

யில் ஐக்கியமாகிவிட்ட மகா ஞானிக்கே இது சாத்தியமாகும். ஏனெனில், அவர் சகல மர்மங்களும் தன்னில் பொறிக்கப்பட்ட ஹக்கின் நமூனாவாக இருக்கிறார்.

1148. திருகுர்ஆன் அத். 25: வசனம் 60, அத். 54: வசனம் 50 பார்க்க.

1159. முன்னுள்ள 943ம் பாடலுக்கான விளக்கவுரை பார்க்கவும்.

1164 - 1165. எல்லையற்ற கருணையுடைய கடலானது தன்னிடமிருந்து பெரிய ஆறுகளுக்கெல்லாம் மழையின் மூலம் தண்ணீர் கொடுத்து உதவுகிறது. அது அந்த ஆறுகளின் தண்ணீரை மட்டுமன்று, தன்னிடம் வரும் சகலவற்றையும் ஏற்றுத் தன்னில் ஐக்கியமாக்கிக்கொள்கிறது. இதுபோன்று, உன் தயாளம் உன் பிரஜைகளில் மிகவும் தாழ்வானவர்களுக்கும் கிட்டுமாக!

1179. "உண்மை எப்போதுமே கசப்பானதுதான்" என்பது ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்களுடைய பொன்மொழியாகும்.

1182. தானியங்களை அடித்து எடுக்கும் களங்களில் அதிலுள்ள பதர்களை எங்காவது ஒரிடத்தில் குவித்துவைப்பார்கள். மழை வந்தால் அதன் தண்ணீர் இந்தப் பதர்களைத் தன்னோடு அடித்துச் சென்றுவிடும். இங்கே முயல் தண்ணீரையும், சிங்கம் மலையையும் குறித்து நிற்கின்றன. அவற்றின் வெளி உருவைக் கவனிப்பவனுக்கு இது அற்புதமான காரியமாகத் தோன்றினும் புலனிச்சை, இச்சா பாசங்கள் என்ற ஜாலூத்தை (மாபெரும் உடல் பலமுள்ளவனை) மெய்யறிவு என்ற தாவூது (அலை) வெகு சுலபமாக வெற்றிகொள்ள முடியும் என்பதை மறந்துவிடலாகாது.

1189. இப்ராஹீம் (அலை) அவர்களை நெருப்புக் குண்டத்தில் தள்ளியவன் நம்ரூது. இறைவன் கட்டளைப்படி கொசு ஒன்று இந்த நம்ரூதின் மூக்கின் வழியாக இவன் மண்டையுள் மூளையைச் சமீபித்த இடத்தில் சென்று அமர்ந்துகொண்டு அவனைக் குடைந்துகொண்டிருந்தது. அதனால் நம்ரூது துடிதுடித்தான். அந்த வேதனையை அவன் நீண்ட நாட்கள் அனுபவிக்க வேண்டும் என்று இறைவன் அவன் ஆயுளை நானூறு ஆண்டுகள்வரை நீடித்தான்.

1190 - 1202. தன் ஆயுள் முடிவை நோக்கிச் சிங்கம் வேகமாக விரையும் குருட்டுத்தனத்தை எண்ணிப் பார்த்து மௌலானா அவர்கள் நல்ல நண்பர்களைத் தீயவர்களிலிருந்து பகுத்தறிந்து கொள்ள வேண்டுவதன் அவசியம் பற்றி எடுத்துரைக்கிறார்கள். ஆனால், தெய்வ நல்லருள் மட்டும் உதவாவிடின் நாமும் குருடர்கள் தாமே! பணிவுடன் இதயம் இளகி அழுது அவனிடம் மன்றாடுதல் ஒன்றுதான் நமக்கு நம்பிக்கை தரத்தக்கதாகும்.

*1191. ஹாமான்-பிர்அவ்னுடைய தலையாய மந்திரியாக இருந்தான்.*

*1198. முன்னுள்ள 789ம் பாடலுக்கான விளக்கவுரையைப் பார்க்க.*

***தலைப்பு : 'தெய்வ விதிப்பு வந்துவிட்டால் கண் பார்வை மறைந்துவிடும்...' :*** *மறைவான கண்ணியில் விழுந்த ஹுதுஹுதுப் பறவையின் கதை முகம்மதுஔபியின் 'ஜவாமிஉல் ஹிகாயத்' என்ற நூலில் இவ்விதம் தரப்பட்டுள்ளது : சிறுவன் ஒருவன் கண்ணி ஒன்றை ஊன்றுவதைக் கண்ட ஹுதுஹுதுப் பறவை ஏன் அவன் அதை வைக்கிறான் என்று வினவிற்று. ஒரு ஹுதுஹுதுப் பறவையைப் பிடிக்க என்று அவன் பதிலளித்தான். "நீ செய்வதைத்தான் நான் பார்த்து விட்டேனே, என்னை நீ எப்படிப் பிடிக்க முடியும்?" என்று அவனிடம் கேட்டுவிட்டு அது அருகிலிருந்த மரக்கிளையொன்றுக்குத் தாவிப்போய்விட்டது. அத்துடன் அந்த விஷயமும் அதற்கு மறந்துபோயிற்று. பையன் தான் ஊன்றிய கண்ணியை மண்ணால் மறைத்து, அதன்மீது தானியங்களைத் தூவி வைத்துவிட்டான். அப்போது மீண்டும் அங்கே வந்த ஹுதுஹுது தானிய மணிகளை மட்டும் கண்டது, கண்ணியைக் காணவில்லை. எனவே, அதைத் தின்பதற்காகக் கீழே கால்வைத்துக் கண்ணியில் சிக்கிக்கொண்டது. கண்ணி அதன் கழுத்தை நெருக்கியதும், "நான் உன்னைப் பிடிக்க முடியாது என்றாயே, இப்போது பார்த்தாயா?" என்று அந்தச் சிறுவன் வினவினான். "அது சரிதான், ஆனால் விதிவசம் வந்ததும் யார் கண்ணும் குருடாகிப் போகிறது" என்று பறவை பதிலளித்தது.*

*1202 - 1204. சுலைமான் நபி அரசபீடத்திலமர்ந்ததும் பறவைகளும் வந்து அவர்களுக்குத் தமது ராஜ விஸ்வாசத்தைத் தெரிவித்துக்கொண்டன. இறைவனால் பறவைகளின் பாஷை கற்றுத்தரப்பட்டிருந்த சுலைமான் நபி (தி. கு. அத். 27: வசனம் 16) அவற்றைப் பார்வையிட்டு, ஹுதுஹுதுப் பறவைமூலம் பல்கீஸ் அம்மாவுக்கு ஒரு செய்தி அனுப்பினார்கள்.*

*1217 - 1218. மனிதன் கண்ணாடிப் பாத்திரத்தில் தண்ணீர் இருப்பதைப் பார்க்க முடிவதுபோல் ஹுதுஹுது பூமிக்கு அடியிலுள்ள தண்ணீரைப் பார்க்கும் சக்தி படைத்ததாக இருந்தது என்று சொல்லப்படுகிறது.*

*1219 - 1220. சுலைமான் நபி அவர்கள் பாலைவனத்தில் பிரயாணம் செய்யும்போது, ஹுதுஹுது அவர்களுக்காகப் பூமியுள்*

சமீபமாகத் தண்ணீர் இருக்கும் இடத்தைக் கண்டு சொல்லும் பணியைச் செய்தது என்று பைளாவியின் திருகுர்ஆன் (அத். 27: வசனம் 22க்கான) விரிவுரையில் சொல்லப்பட்டுள்ளது.

1229. மனிதனுடைய சுயேச்சையான, அவன் இஷ்டப்படியான சகல செயலாற்றலும் இறைவனின் சர்வ சக்திக்கு உட்பட்டதுதான் என்பதை மறுப்பவனுக்குக் 'காகம்' சங்கேதமாயிற்று.

**தலைப்பு : ஆதம் (அலை) அவர்களைத் தெய்வ விதிப்பு கண்ணை மறைத்துவிட்டது,** ஹுஹுதுவின் கதையைத் தொடர்ந்து, அதே விஷயத்தை ஆதம் (அலை) அவர்கள் சம்பந்தப்பட்ட சம்பவம்மூலம் விளக்குகிறார்கள். மறைவான லௌஹிலிருந்து நேரடியாக எதையும் படிக்கும் பேறு பெற்றிருந்த, ஞானத்தில் அமரர்களையும் மிகைத்தவர்களாய் இருந்த ஆதம் (அலை), இறைவனின் பரிசுத்த இதயம் படைத்த திருத்தூதர், 'இந்த மரத்தை நெருங்க வேண்டாம்!' என்ற தெய்வக் கட்டளையைக் கேட்டபின்னும், அந்தக் கோதுமைக் கனியைக் கண்டபின்னும், தனக்குக் கண்ணிவைப்பவன் இப்லீஸ் என்பதை அறிந்துகொண்ட பின்னும் அவர்கள் எப்படி ஏமாற்றுக்கு ஆளாகிறார்கள்? தெய்வ ஆதி ஏற்பாடு அப்படி இருந்ததுதானன்றோ!

1234. "ஆதம் இறைவன் (அவருக்குக்) கற்றுக்கொடுத்த திருநாமங்களின் ஞானத்தை அடையப்பெற்றவராய் இருந்தார்" (குர்ஆன் அத். 2: வசனம் 31) முன்னுள்ள 1012 - 1013ம் பாடல்களுக்கான விளக்கவுரையைப் பார்க்கவும்.

ஆதம் (அலை) இறைவனின் உருவத்தில் (ஸூரத்தில்) சிருஷ்டிக்கப்பட்டார்கள்; தன் சிருஷ்டியாளனின் சகல கல்யாண குணங்களும், திருநாமங்களும் தன்னில் பிரதிபலிக்கும் பரிபூரண மனிதராக, மானிட இனம் அடையவேண்டிய பரிபூரணத்துவத்துக்கு முன்மாதிரியானவர்களாக விளங்கினார்கள். அவர்களுடைய அறிவு, (தனிநபர் தன்மையால் வரம்புக்கு உட்பட்டுவிட்டதாயினும்) இறைவனின் ஞானம் போன்றே விளங்கிற்று. பொருள்களின் யதார்த்தமான தன்மையில் அவைகளை அவர்கள் கண்டார்கள்.

1235. இறைவனிடமிருந்து ஆதம் (அலை) அவர்கள், பொதுப் படையானதிலிருந்து தனிப்பட்டவையானவற்றின் அறிவை அடைந்துகொண்டார்கள். இந்த அறிவையே அவர்களை அமரர்களிடம் தெரிவிக்கும்படி இறைவன் கட்டளையிட்டான். (குர்ஆன் அத். 2: வசனம் 33)

1240. திருகுர்ஆன் அத். 7: வசனம் 107 பார்க்க.

*1241. இப்பாடலின் முற்பகுதி ஹஜரத் உமர் (ரலி) முஸ்லிமாகு முன் இருந்த நிலையைக் குறிப்பிடுகிறது. பிற்பகுதி ஆத்ம உலகில் பிற ஆத்மாக்களுடன் ஹஜரத் உமரின் ஆத்மாவும் சிருஷ்டிக்கப் பட்டு, 'மீதாக்' என்ற வாக்குறுதி கேட்கும் நாளில், இறைவன் அவை யாவையும் நோக்கி, "நான் உங்கள் இறைவனல்லவா?" என்று கேட்டபோது அந்த ஆத்மாக்கள், "ஆம், அவ்வாறே நாங்கள் சாட்சியம் பகர்கிறோம்" என்று கூறின. (குர்ஆன் அத். 7: வசனம் 172 பார்க்க.) இப்படி வாக்குறுதியளித்த மெய்விஸ்வாசிகளில் ஹஜரத் உமரின் ஆத்மாவும் சேர்ந்திருந்தது. மேலும், அவர்கள் இஸ்லாத்தி லாகி இஸ்லாத்துக்குப் பெருந்தூணாக நின்று சேவை செய்ய இருப் பதை முன்பே இறைவன் குறித்திருந்ததையும் இது சுட்டிக்காட்டு கிறது.*

*1250. கோதுமைக் கனியை உண்ணக்கூடாது என்று இறைவன் இட்ட கட்டளை எத்தகையது என்று ஆதம் (அலை) அவர்களுக்கு ஐயமுண்டாகிவிட்டது. அந்த உத்தரவு 'தஹ்ரீமி' யானதா (அதாவது, அதை மீறியோர் தண்டனைக்கு உள்ளாகியே ஆகவேண்டும் என்ற ரகத்ததா) அல்லது 'தன்ஸீஹி' யானதா (அதாவது, தவறிழைத்தவன் மன்னிக்கப்படுவான் என்ற நிலையில் உள்ளதா,) என்று அவர் களுக்கு ஐயமுண்டாயிற்று. 'தன்ஸீஹி' யான உத்தரவுக்கு ஹதீஸி லிருந்து இந்த உத்தரவைக் குறிப்பிடலாம்: "வெள்ளைப்பூண்டு, வெங்காயம் தின்பவர்கள் நம் மஸ்ஜிதை நெருங்க வேண்டாம்". இந்த உத்தரவை மீறுவது வெறுக்கத்தக்க செயலேயன்றி வேறு எதுவுமல்ல. இறைவன் தங்களை அந்த மரத்தை நெருங்க வேண் டாம் என்பதையும் ஆதம் (அலை) அவர்கள் இத்தகைய தன்ஸீஹி யான உத்தரவாக இருக்கலாம் என்று எண்ணியதாலேயே தவறுக்கு ஆளானார்கள்.*

*1254. திருகுர் ஆன் அத். 7: வசனம் 23 பார்க்க.*

*1255-1256. இவ்விரண்டு பாடல்களுடனும் ஹுது ஹுதுப் பறவையின் பேச்சு முடிகிறது. இவற்றைத் தொடரும் பாடல்களில் மௌலானா அவர்கள் இதன் நீதியை உணர்த்துகிறார்கள். யாவரும் பாவஞ்செய்து, அந்த அந்த அளவுக்கு தண்டனையை அனுபவித் துத் தம் துயரத்தால் பரிசுத்தமானவர்களானதும் தன் நித்திய சாம்ராஜ்ஜியத்தையே அவர்களுக்குச் சம்மானமாகக் கொடுக்க வேண்டும் என்பது இறைவனுடைய திருச் சித்தமாகும். "அவன் நம் இதயத்தை இரத்தமாகவும், கண்ணீராகவும் மாற்றுகிறான், பின்னர் அதன்மீது தன் மர்மங்களை எழுதுகிறான்" என்று மௌலானா அவர்கள் வேறோர் இடத்தில் (இரண்டாம் கிதாப் : பாடல் 1828ல்) சொல்கிறார்கள்.*

1267. "அவர்களின் (முகக்) குறியைக்கொண்டே இவர்கள் அறிந்து கொள்வார்கள்." (குர்ஆன் அத். 7: வசனம் 46) "குற்றவாளிகள் அவர்களுடைய முகக் குறியைக்கொண்டே அறிந்துகொள்ளப் படுவர்" (குர்ஆன் அத். 55: வசனம் 41)

1268. முன்பேயுள்ள பாடல் 34ஐயும் அதற்கான விளக்கவுரையும் பார்க்க.

1270. "மனிதன் நாவினடியில் மறையுண்டுள்ளான்" என்பது ஹதீஸ்.

1273. "என் கையையும். . . என்னை முற்றுமே ஆட்கொண்டு விட்டது." தெய்வத்தீர்ப்பு (கலா.) அதன்படியே சிருஷ்டிக்கப்பட்ட யாவும் மக்கி மடிகின்றன.

1276. முன் பாடலில் சொன்ன மனிதனும், பிராணிகளும் கனிப்பொருளும், தாவரவர்க்கமும் பஞ்சபூதங்களுடையவும், மண்ணுலக, விண்ணுலகங்களுடையவும் பகுதியானவையாகும். அதாவது, முந்தியவை பகுதிகள், பிந்தியவை முழுமையானவை. இந்தப் பகுதிகளானவற்றில் பிராணி இனம், தாவர இனம், உலோக இனம் என்று மூவகையுண்டு.

1279. முன்னுள்ள 754ம் பாடலுக்கான விளக்கவுரையைப் பார்க்க.

1282. "ஒருவன் தன் மரணத் தருவாயில் தன் வாரிசுகளுக்கு விட்டுச்செல்வது" என்று மௌலானா இம்மையைக் குறிப்பிடு கிறார்கள். அதுபோல் இதுவும் நிலையற்றது என்று அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

1284. "தண்ணீரைக் கொண்டு ஜீவனுள்ள சகல பொருள்களையும் நாமே உண்டாக்கினோம்." (திருகுர்ஆன் அத். 21: வசனம் 30).

1286. தன் எண்ணங்களாலும், உணர்ச்சிப் பெருக்காலும் உந்தப்பட்ட ஒருவனை மௌலான கடலுக்கு உவமிக்கிறார்கள்.

1287. வான மண்டலம், அதாவது காலம் என்ற உலகம் தெய்வ அன்பெனும் மதுவைப் பருகி மஸ்தடைந்ததாகக் காட்டப்பட்டுள்ளது. அதனால், அது நிரந்தரமான சாரத்தையும், யதார்த்தத்தையும் அடையத் துடிக்கிறது. அதன் 'சிசுக்களை'ப்போல் (1276ம் பாடலுக்கான விளக்கவுரையைப் பார்க்கவும்) அதுவும் ஒரு கணமும் ஓய்வு கொள்வதில்லை.

1288. விண்மீன்கள் ஒரு சமயத்தில் ஓரிடத்திலிருக்கின்றன. வேறொரு சமயத்தில் வேறோர் இடத்திலிருக்கின்றன.

1289. அதாவது, மனித உடல் மண், தண்ணீர், காற்று, நெருப்பு ஆகிய நான்கு பூதங்களால் ஆனதாய் இருப்பதால், அவை தனித்தனியானால் அவற்றின் இயல்பு யாதாகும் என்பதை நாம் அறிவோமன்றோ! மனிதன் மாற்றத்துக்கும், ஜீணத்துக்கும் ஆளாவதுபோல, அகிலம் முழுவதுமே அழிந்துபடுவதுதாமே!

1292. இந்தப் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள ஆடும், ஓநாயும், 1294ம் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள சிங்கமும், கழுதைப் புலியும் குண முரண்பாடுள்ள மூலப்பொருள்கள் (பூதங்கள்) நம் உடலில் ஐக்கியப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றன.

1296. இம்மை நிலையற்றது; எனவே, அதன்மீது கொள்ளும் பந்தபாசமும் விட்டொழிக்கப்பட வேண்டியதுதான் என்று முயல் (மெய்யறிவு) சிங்கத்துக்கு (கீழான மனத்துக்கு) உணர்த்துகிறது. ஆனால், இந்தப் போதனையால் சிங்கத்திடம் எந்த மாறுதலையும் உண்டாக்க முடியவில்லை.

1298. இங்கே கிணற்றினுள் தோன்றிய சிங்கம் என்பது கீழான மனத்தின் மரணத்தை(பனாவை)க் குறிக்கிறது. அல்லது, இம்மை யின் விஷயத்தில் மரணித்தவராகி, அதன் ஆபத்துகளால் பாதிக்கப் படாத ஞானியையும் அது குறிப்பதாகக் கொள்ளலாம்.

1313. இறைவனின் நல்லருள் வந்ததும், அல்லாஹ்வின் மார்க்கத்தில் ஜனங்கள் கூட்டங் கூட்டமாகச் சேர்ந்தனர். எனவே பலஹீனர்கள் அக்கிரமத்துக்கு ஆளாகும்போது, இறைவனின் நல்லருள் அவர்களுக்குத் துணையாகி அவர்களைப் பாதுகாக்கும் என்று மௌலானா அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.('இதாஜாஅ நஸ்ருல்லாஹி' என்று ஆரம்பிப்பது திருகுர்ஆன் அத். 110 ஆகும்.)

1314. மக்காமீது படையெடுத்து வந்த ஆப்ரஹாவின் யானைப் படையை இறைவன் சிறு பறவைகளின் வாயில் கௌவி வந்த கற்களால் அழித்தொழித்ததை திருகுர்ஆனில் (அத். 105) இறைவன் சுட்டிக்காட்டியுள்ளானல்லவா!

1316. நீ செய்த குற்றத்துக்கு ஏற்ற தண்டனையை நீ அடைந்து கொள்வாய்.

1319 - 1332. இந்தப் பாடல்களில் இந்தக் கதையின் நீதி எடுத்துரைக்கப்படுகிறது. உன் தீய அகத்தின்மூலம் மற்றோரை நோட்டமிடாதே! அப்படிப்பார்த்தால் அவர்களில் உன் தீய அகத்தையே காண்பாய். அதனால் அவர்களை நீ உன் எதிரிகளாகக் கருதவும், அவர்கள்மீது சாடவும் இடமுண்டாகும். கண்ணாடியில் தெரியும் விகாரமான முகத்துக்குக் கண்ணாடி தான் காரணம் என்று

கருதக்கூடாதல்லவா! 'தீமை' என்பதே ஓர் உருவெளித் தோற்றம் தான். இறைவனின் கல்யாண குணங்கள் பலதரப்பட்டவையாய் உள்ளன. அவை மனிதனுள் பிரதிபலிக்கும்போது இத்தகைய தோற்றங்கள் உண்டாகின்றன. எங்குமே நன்மையின் ஆத்மாவைக் காண முடியாது நம்மைத் தடுப்பது நம் அகந்தைதான். நம்மில் தீமை இருக்கும்வரை - அதன் மூலஸ்தானம் யதார்த்தமற்றதான நிலையில் - நாம் இறைவனை விட்டுப் பிரிக்கப்பட்டவர்களாகவே இருப்போம். இதயத்தைவிட்டுத் 'தான்' என்பதை அகற்றினால் தீமை மறைந்துவிடும்.

*1327.* சிறிய தகப்பன் என்பது அண்டை வீட்டாரையாம். 'பீஹி-மா-பீஹி'யில் தன் நிழலைத் தண்ணீருள் கண்டுவிட்ட யானை யொன்று தண்ணீர் குடிக்காமல் வெகுண்டோடிய கதையைச் சொல்லும் ஆசிரியர் அதன்பின் இவ்வாறு எழுதுகிறார்கள் : "நீ உன்னிலுள்ள தீய குணங்களால் - அநீதி, வெறுப்பு, பொறாமை, பேராசை, கொடூரம், காமம், கோபம் போன்றவற்றால் நீ உன்மீது ஆத்திரங்கொள்கிறாயில்லை. ஆனால், மற்றவர்களில் நீ இவற்றைக் கண்டதும் உனக்கு ஆத்திரமும் வெறுப்புமுண்டாகிறது. உண்மையில் அப்போது நீ உன்மீதுதான் வெறுப்புக் கொள்கிறாய் என்பதை உணர். . . நீ மற்றோர்மீது வெறுப்புக் கொள்வதால் அவர்கள் உன்மீது வெறுப்புக் கொள்வதையும், கோபப்படுவதையும் நீ மன்னித்தேயாக வேண்டும்; உன் கோபம் அவர்களுக்கு ஓர் ஊன்று கோலாகிவிடுகிறது. அவன் உன்னில் காண்பதை நீ அவனில் காண்பதால் நீ கோபமடைகிறாய். ஏனெனில், 'ஒரு மெய்விஸ்வாசி மற்றொரு மெய்விஸ்வாசிக்குக் கண்ணாடி போன்றுள்ளான்.' நிராகரிப்பவன் மற்றொரு நிராகரிப்பவனுக்குக் கண்ணாடி போன்றுள்ளான் என்று நபிபெருமானார் அருளவில்லை. ஏனெனில், நிராகரிப்பவனிடம் கண்ணாடியொன்று இருப்பினும் அவன் அதைப் பிரகாசமுடையதாக ஆக்கவில்லை; அதைப்பற்றி எதுவும் அறியவுமில்லை."

*1328.* மெய்விஸ்வாசிகள் யாவருமே ஆத்மீகத்தில் ஒன்றானவர்கள்தாம். ஒவ்வொருவரும் தன் அயலானின் எண்ணங்களையும் செயல்களையும் தன்னுடையவற்றின் பிரதிபிம்பங்களாகவே காணவேண்டும்; பிறரைக் குறைகூறுவதைக் கைவிட்டுவிட்டுத் தன் குறைகளைக் களைவதிலேயே கருத்தாக வேண்டும்.

*1331.* "மெய்விஸ்வாசியின் திருஷ்டியைப்பற்றி எச்சரிக்கையாகுங்கள்; ஏனெனில், அவன் அல்லாஹ்வின் ஒளியால் காண்கிறான்" என்று நபிபெருமானார் அருளியுள்ளார்கள். இந்த (ஞான)

திருஷ்டி மறைவானவைபற்றி உண்டாகும் உதிப்பாகும். இது மெய்விஸ்வாசத்தால் (ஈமானால்) உண்டாகி, மெய்யுறுதியால் (யகீனால்) பலப்படும்.

1332. இறைவனின் நெருப்பாவது அவனுடைய தீவிரமான (ஜலால் ஆன) கல்யாண குணங்களாம். கீழான மனத்தின் தூண்டு தலுக்கு அடிமைப்பட்டோரிடம் இவை வெறுப்பு, பொறாமை, பேராசை போன்ற குணங்களாகப் பிரதிபலிக்கும்.

1344 - 1345. மரத்தின் இலைகளும், கனிகளும் இறைவனைத் துதிக்கும் நாவுகளாக உவமிக்கப்பட்டுள்ளன. தௌராத்திலும், இஞ்சீலிலும் அவர்களுக்கு (நபி பெருமானாரின் தோழர்களுக்குச்) சொல்லப்பட்டுள்ள உவமையாவது : "விதைக்கப்பட்ட தானிய விதைகளை இறைவன் முளைத்துக் கிளைத்தெழச்செய்து, உறுதி யானதாக்கி, அவை தம் தண்டின்மீது நிமிர்ந்து, பலமானவையாய் நிற்கச்செய்து, தம்மை விதைத்தவனுக்கு மகிழ்வூட்டும்படி செய்வதாகும்." (அத். 48: வசனம் 29) என்று திருகுர்ஆனில் அருளப் பட்டுள்ளது.

1349 - 1352. இந்தக் கதை முழுவதிலுமே மெய்யறிவையும், பகுத்தறிவையும் சங்கேதமாகச் சுட்டிக்காட்டிய முயல் இந்தப் பாடல்களில் கீழான தன்மையுடையதாகக் காட்டப்பட்டுள்ளது. இம்மையின் சுகங்களையெல்லாம் துய்ப்பதாக அது சுட்டிக்காட் டப்படுகிறது. ஆனால், 1353ம் பாடலில் முயல் மீண்டும் தன் அசல் தன்மையில் காட்சிதருவது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பாடல்களில், அகமியங்களை மறந்துவிட்டு, புற அம்சங்களில் மட்டும் கருத்துக்காட்டிக் கொண்டிருக்கும் சட்ட நிபுணர்களையும், அறிஞர்களையுமே மௌலானா அவர்கள் சாடுகிறார்கள். தமது கால அறிஞர் எவரையும் அவர்கள் குறிப்பாகச் சுட்டிக்காட்டுவதாகவும் அது இருக்கலாம்.

1350. இங்கே 'பக்ருத்தீன்' என்று குறிப்பிடுவது இமாம் பக்ருத்தீன் ராஜியை இருக்கலாம் என்று பலரும் அபிப்பிராயப் படுகின்றனர். தத்துவஞான அடிப்படையில் ராஜி நூற்றுக்கணக்கில் நூற்கள் எழுதினார்கள். திருகுர்ஆனுக்கு விரிவான விரிவுரை எழுதினார்கள். அத்துடன் மௌலானாவின் தந்தையான பஹாவுத் தீன் வலதுடன் பகைமை பாராட்டினார்கள் என்றும் சொல்லப்படு கிறது. ஆனால், இதற்குப் போதிய ஆதாரமில்லை.

1351. கிணறு: யதார்த்தமற்ற தனித்தன்மை என்ற கிணறு.

*1362 - 1364.* இந்தப் பாடல்களில் மிருகங்கள் தம்மை முயலின் சீடர்களாகவும், முயலைத் தமது குருநாதர் (முர்ஷித்) ஆகவும் பாவித்துப் பேசுகின்றன. புலனிச்சைகளை வெல்வது எப்படி என்று தமக்கு வழி சொல்லுமாறு அவை முயலிடம் கெஞ்சுகின்றன.

**தலைப்பு : "சிறிய ஜிஹாதிலிருந்து. . ." தாத்பரியம் :** நபிபெருமானார் காபிர்களை எதிர்த்து நடத்திய போராட்டம் ஒன்றின் முடிவில், ஊர் திரும்பியதும் இவ்விதம் அருளினார்கள். சிறிய ஜிஹாது என்பது இஸ்லாத்தின் எதிரிகளோடு நடத்தும் போராட்டத்தையும், பெரிய ஜிஹாது என்பது தன் கீழான மனத்துடன் நடத்தும் போராட்டத்தையும் குறிப்பனவாம்.

*1373.* "உன் மகாமோசமான எதிரி உன் கீழான மனம்தான், அது உன் இரண்டு விலாக்களுக்கும் இடையிலுள்ளது" என்பது ஹதீஸ்.

*1374.* இங்கே முயல் பகுத்தறிவாகக் காட்டப்பட்டுள்ளது; மெய்யறிவாக அன்று.

*1375.* கீழான மனத்துக்கும் நரகத்துக்கும் உள்ள தொடர்பை முன்னுள்ள 779-ம் பாடலிலும் அதற்கான விளக்கவுரையிலும் காணலாம்.

*1379 - 1380.* இந்தப் பாடல்களில் கருத்து எடுத்தாளப்பட்டுள்ள திரு குர்ஆன் வசனங்கள் வருமாறு: " அந்த நாளில் நரகத்தை நோக்கி, 'உன் வயிறு நிறைந்துவிட்டதா?' என்று நாம் கேட்போம். அதற்கு அது, 'இல்லை, இன்னும் அதிகமாக ஏதும் இருக்கிறதா?' என்று கேட்கும்." *(அத் 50 : வசனம் 30)*

*1381.* நரகம் இன்னும் அதிகமாக வேண்டும் என்று கேட்டதும் இறைவன் தன் பாதத்தை அதன்மீது ஊன்றுவான் என்றும், உடனே நரகம், "போதும்" என்று சப்திக்குமென்றும், அதன்பின் அது தன் வாயை மூடிக்கொள்ளும் என்றும், ஹதீஸில் சொல்லப்பட்டுள்ளது. இறைவனின் 'பாதம்' என்பது சம்பூரண மனிதனையே குறிக்கும் என்பது மெய்ஞானியர் பலருடைய கருத்தாகும்.

*1384.* அதாவது, கீழான மனத்திலிருந்து புறப்படும் யாவும் தவறானவையாகவும், பொய்யானவையாகவும் தாம் இருக்கின்றன.

*1385.* அதாவது, நேர்மையாளனாய் இரு: உன் இச்சைகளைப் பின் தொடராதே!

*1386 - 1389.* தன் பகைவன் தனக்குள்ளேயே இருக்கிறான் என்பதை உணர்ந்துவிட்ட ஒரு முஸ்லிம் போர் வீரன் (முஜாஹித்) ஆக நின்று, இந்தப் பாடல்களில் முயல் பேசுகிறது.

*1388. "ஊசியைக் கொண்டு மலையைப் பெயர்த்தாலும் பெயர்க்கலாம், சுயபிரதாபத்தை( தான் என்ற தன்மையை) அழித்தொழிப்பது தான் கடினமாகும்" என்பது ஓர் அரபிப் பழமொழியாகும்.*

***தலைப்பு: "கலீபா உமர் (ரலி)... கண்ட மாட்சிகள்"** இந்த விபரம் 1389-ம் பாடலில் சொல்லப்பட்ட உண்மையை விளக்குவதாகும். ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்களும், ரோமாபுரித் தூதுவரும் 'தன்னை' வெல்லும் உண்மையான வீரத்துக்கு முன்மாதிரியானவர்களாவர்.*

*1397. "கிழக்கு மேற்கும் அல்லாஹ்வுக்கே உரியவை; எனவே, நீங்கள் எங்கே திரும்பினாலும் அங்கே அல்லாஹ்வின் வதனமுள்ளது. அல்லாஹ் எங்கும் நிறைந்தவன், யாவுமறிந்தவன் என்பது உறுதி" (அத்2: வசனம் 115) என்ற திருகுர்ஆன் வசனத்தில் இறைவனின் திருவதனம்பற்றிப் பேசப்பட்டுள்ளதை நோட்டமிடுங்கள்.*

*1399. மெய்ப்பொருள் வெளிப்பாடு (கஷ்பு) அருளப்பட்டவன் தன் இதயக்கதவு திறக்கப்பட்டவனாவான். அல்லாஹ்வின் வதனத்தின் முன், சூரியோதயத்தில் விண்மீன்கள் மறைவதுபோல் பிரபஞ்சத்தின் சகல அம்சங்களும் மறைந்துபோவதை அவன் காண்பான்.*

*1402. நீ கண்களை மூடிக்கொண்டு இவ்வுலகைக் காணாவிடினும், அது ஜீவித்திருப்பது உண்மை; அஃதே போல், ஆத்மீக உலகமும் ஜீவித்திருப்பது உண்மைதான். அதை நீ காணாவிடின் குற்றம் உன்னுடையதுதான்.*

*1404. நூஹு (அலை) அவர்கள் குறிப்பிடும் திரை என்பது பிடிவாதமான அறியாமையையும், நிராகரிப்பையுமாகும். நூஹு (அலை) அவர்கள் இறைவனை நோக்கி, "நீ அவர்களுக்கு மன்னிப்பளிக்க (உன் பக்கம்) நான் அவர்களை அழைத்தபோதெல்லாம் அவர்கள் தங்கள் காதுகளில் தங்கள் விரல்களைப் புகுத்திக் கொண்டு, தங்கள் உடைகளால் (என்னைப் பார்க்காது) தங்கள் முகங்களை மறைத்துக்கொண்டனர்." (திருகுர்ஆன் அத். 71: வசனம் 7) என்று கூறினார்கள்.*

*1406. மனிதனுக்கு அகக் கண் உண்டு. அதன் உதவியால் அவன் யதார்த்த சொரூபத்தை எண்ணிப்பார்க்கும் சக்தியுடையவனாய் இருக்கிறான்; அதன் உதவியால் நிரந்தர ஒளியின் கண் ஆகவும் ஆக முடிகிறது. அந்த அகக் கண் இருப்பதாலேயே மனிதன் மனிதனாக இருக்கிறான்.*

*1412.* "தேடுபவன், சித்தசுத்தியுடன் தேடுவோனாயின் (தான் தேடுவதைக்) கண்டுகொள்வான்" என்பது ஹதீஸ்.

*1414.* இறைவன் அருளிய பாதுகாப்பை ஜனங்களுக்கு நல்குபவர் களானதால் கலீபா உமர் (ரலி) 'இறைவனின் நிழல்' ஆனார்கள். சம்பூரண மனிதர் இறைவனின் கல்யாண குணங்களைத் தன்னி டத்தே அடையப் பெற்றவராக, அவற்றை இவ்வுலகில் அவன் பிரதிநிதி என்ற முறையில் வெளிப்படுத்துபவராக இருப்பதால் மெய்ஞானிகள் அவரை இறைவனின் நிழல் என்று சொல்வார்கள்.

*1425.* "தன்னைப் போற்றுவோர்க்கு இறைவன் தன் சிருஷ்டி களை அஞ்சச் செய்வான்; தன் சிருஷ்டிகளைப் போற்றுவோரை அவர்களுக்கே அஞ்சச் செய்வான்" என்பது ஹதீஸ்.

*1428.* ஒரு முஸ்லிமுக்கு முஸ்லிமல்லாத ஒருவர் 'ஸலாம்' சொன்னால் அதற்குப் பதில் சொல்லவேண்டிய கடமை இல்லை. ஆனால், சொல்வதும் குற்றமில்லை. ஒரு முஸ்லிமுக்கு இன்னொரு முஸ்லிம் 'ஸலாம்' சொன்னால் அதற்குப் பதில் சொல்வது அவசியமாகும்.

*1429.* "எங்கள் இறைவன் அல்லாஹ்வேயாவான் என்று கூறி, நேர்மையுடன் நடந்துகொள்பவர்களிடம் அமரர்கள் இறங்கிவந்து, 'நீங்கள் அஞ்சவேண்டாம்; துயரப்பட வேண்டாம் . . . 'என்று கூறுவர்" (அத். 41: வசனம் 30) என்ற திருகுர்ஆன் வசனத்தின் கருத்தை இந்தப் பாடலில் காணலாம்.

*1430-1431.* ஆத்மசாந்தி உளப்பூர்வமாக விழையப்படும் இடத்தில்தான் அது சொரியப்படும். அதாவது, இறைவனுக்கு அஞ்சி நடக்கும் நேர்மையாளர்கள்மீதுதான் அது சொரியப்படும்; அதை விழையாத, இம்மையின் பாசத்தில் மூழ்கியுள்ளோர்மீதல்ல.

*1435 - 1438.* இந்தப் பாடல்களில் மௌலானா 'ஹால்' எது 'மகாம்' எது என்று எளிதாக விளக்குகிறார்கள். 'ஹால்' என்பது இறைவனை நாடுபவரின் ஆத்மீகப் பாதையில் தற்காலிகமான ஆத்ம அநுபவங்களாம். 'மகாம்' என்பது ஏகத்துவத்தில் இணைந்து, மாற்றத்துக்கு அப்பாற்பட்ட நிலையை எய்திவிட்ட பூரண ஞானியின் ஆத்மீகப் பரிபக்குவத்தையாம்.

*1435.* பரவச 'நிலை'கள் (ஹால்கள்) தெய்வப் பேரழகும், மாட்சியும் ஒருகணம் திரையகற்றப்படுவதால் உண்டாகின்றன. மெய்ஞானியர் இறைவனின் மணப்பெண்களாவர். இதுபற்றிய விளக்கத்தை முன்னுள்ள 1438-ம் பாடலுக்கான விளக்கவுரையில் காண்க.

*1436-1437.* மேல் குறிப்பிட்ட இரண்டு வகையாருக்கும் இறைவன் தன் பேரழகைக் காட்டுகிறான். ஆனால், முந்திய வகையினர் அவனோடு ஐக்கியமானால் மட்டுமே அதைப் பெற்று ஆனந்திக்க முடியும்.

*1440.* "(சிருஷ்டிகள்) காலத்தோடு பிணைக்கப்படாமலிருக்கும் உலகம்" உவமை உலகம் (ஆலம் மிதால்). அதில் ஆத்மா இறைவனோடு ஒன்றானதாய் இருந்தது. "உங்கள் இறைவனிடம் காலையுமில்லை, மாலையுமில்லை" என்ற ஹதீஸ் காண்க. 'அஹதிய்யத்தான' சுத்த பரிபூரண ஏகத்துவமான நிலை: இறைவன் இன்றுள்ளது போலும், என்றுமிருக்கப் பேர்வதுபோலும், முன்னர் இருந்தபோது - அவனோடு சிருஷ்டிக்கப்பட்ட எதுவும் இல்லாமல் இருந்த போதும் ஆனநிலையாகும்.

*1446.* ஆத்மா இவ்வுலகில் சிறைப்பட்டிருப்பது இறைவனின் சர்வசக்தித் தன்மையின் மர்மம்தான். இத்தகைய பிரச்சினைகளை (உதாரணமாக சுய இச்சைபற்றிய பிரச்சினையை) அறிவின் துணை கொண்டு தீர்த்துக்கொள்ள முடியாது. அதற்கு இறைவனோடு ஆத்மீகத் தொடர்பு கொண்டாக வேண்டும். பரிபூரணக் காதல்தான் சகல முரண்பாடுகளையும் சீர்செய்யமுடியும். முன்னுள்ள 595 - 641ம் பாடல்களில் இதுபோன்ற கருத்துத் தொடர்புகளைக் காணலாம்.

*1447.* ஆத்மாவில் தனித் தன்மையாகிய பிரமையை உண்டாக்கி, அதை ஜடதத்துவ உலகில் இறங்கச் செய்த மாயா ஜாலக்காரனாக இறைவன் விவரிக்கப்படுகிறான்.

*1448.* இறைவனின் ஞானத்தில் மறைவானவையாய் இருப்பினும், உள்ளமையற்றவையான பொருள்கள். முன்னுள்ள 606 - 610-ம் பாடல்களுக்கான விளக்கவுரையைப் பார்க்கவும்.

*1456 - 1458.* இயற்கை முழுவதுமே தெய்வ வார்த்தையைக் கேட்டுப் புரிந்துகொண்டு உடனே அதற்குக் கீழ் படிகிறது. ஆனால், மனிதன் மட்டுமே கீழ்ப்படிவதா, கீழ்ப்படியாமலிருப்பதா என்று தயங்குகிறான். இதில் எதைத் தேர்ந்தெடுப்பது என்ற சுதந்தரம் அவனுக்கு அளிக்கப்பட்டுள்ளது. அவனுடைய தயக்கத்தையும் (இறுதி முடிவையும் நிர்ணயிப்பவனும் இறைவன் தானாயினும்) இவ்விதம் - கீழ்ப்படிவதா வேண்டாமா என்று - முடிவுசெய்யும் சுதந்தரம் மனிதனுக்குண்டு.

*1460.* முன்னுள்ள 933ம் பாடலையும் அதற்கான விளக்கவுரையையும் நோக்குக.

*1463. முன் பாடல்களில் குறிப்பிடப்பட்ட இறைவனின் சர்வசக்தித் தன்மை காரணமாக, மனிதனுக்கு சுயஇச்சையுடன் நடப்பதற்கான சாத்தியமே இல்லாத நிர்ப்பந்த நிலை (ஜபர்) உண்டாகிவிட்டது என்று வாதிடும் ஜப்பாரிய்யாக்களுக்கு மௌலானா இங்கே பதிலளிக்கிறார்கள். இத்தகைய அபிப்பிராயத்தால் சிருஷ்டிகளுக்கும் சிருஷ்டியாளனுக்குமிடையில் பிரிவினை உண்டாவதும், இரண்டு சித்தங்கள் ஒன்றுடன் ஒன்று மோதுவதும், அவற்றில் பலஹீனமானது அடக்கப்படுதலும் உண்டு என்பது பெறப்படலாம். ஆனால், இறைவனை அன்பனாகவே காணும், அவனில் முற்றும் ஒன்றிவிட்டவர்களாக உணரும் மெய்ஞானியர் நிர்ப்பந்தத்துக்கு உள்ளானவர்களல்லர். 'தன்னை' இழப்பதால் உண்டாகும் பேரின்பப் பரவசத்தையும், தமது அன்பானவனின் சித்தத்தோடு இணைந்து உணர்வதாலும், செயல்படுவதாலும் உண்டாகும் பரிபூரண சுதந்தரத்தையும் அவர்கள் வரம்பற்று அனுபவிக்கின்றனர்.*

*1467. ஏகத்துவமான நிலையில் சென்ற காலமும், நிகழ்காலமும், வருங்காலமுமில்லை. யாவும் ஒன்றாகவே இருப்பதால், யாவரையும் தெளிவாகக் காணமுடிகிறது.*

*1468. முத்துக்கள் உண்டாகும் விதம்பற்றி முன்னுள்ள 21ம் பாடலுக்கான விளக்கவுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. முத்துச் சிப்பியுள் விழும் மழைத் துளிகள் முத்துக்களாவது போன்று, மெய்ஞானியரின் சடலங்களில் தீமை நன்மையாக மாறிவிடுகிறது. மனிதனை இறைவனின் எதிரியாக்கும் சுதந்தரம், நிர்ப்பந்தம் முதலிய கீழ்த்தரமான கருத்துக்களுக்குப் பகரமாக ஏகத்துவம், தெய்வக் காதல் ஆகியவை இவர்களை ஆட்கொள்கின்றன.*

*1478. முன்னுள்ள 118, 1077ம் பாடல்களுக்கான விளக்கவுரையைப் பார்க்க.*

***தலைப்பு : "ஆதம் (அலை) தங்கள். . . ."*** *இதுபற்றி திருகுர்ஆனில் அத். 7: வசனம் 16, அத். 7: வசனம் 23 பார்க்க. இந்தத் தலைப்பில் கூறப்பட்டுள்ள விஷயம் முன்னுள்ள 1463ம் பாடலுக்கான உதாரணம் போன்று விளங்குகிறது. ஆதம் (அலை) இறைவனை நேசித்தார்கள்; இப்லீஸ் நேசிக்கவில்லை. இருவரும் தத்தம் பாவங்களை ஒப்புக்கொண்டனர். ஆனால், ஆதம் (அலை) அவர்கள் அதற்குப் பொறுப்பு தாங்கள்தாம் என்றும் ஒப்புக்கொண்டார்கள். இப்லீஸோ அதற்கு இறைவன்தான் பொறுப்பானவன் என்று கூறிவிட்டான்.*

*1480 - 1481. ஜப்பாரிய்யாக்களின் 'பலவந்தக்' கொள்கைக்கு இங்கே மௌலானா மறுப்புக் கொடுக்கிறார்கள்.*

*1482. மனிதர்களே தத்தம் செயல்களுக்குக் கர்த்தாக்கள் என்ற முஃதஜிலாக் கோட்பாட்டை மறுத்தும், சன்மார்க்கப்படியுமான கருத்து இங்கு வெளியிடப்பட்டுள்ளது. சகல செயல்களுமே இறைவனால் சிருஷ்டிக்கப்பட்டு வெளிக்கொணரப்பட்டவைதாம். அவை நம்மிலிருந்து வெளிப்படுமளவுக்கும், நம்மால் தேர்ந்தெடுக்கப்படும் அளவுக்கும்தான் நமக்கு அவற்றின்மீது அதிகாரமுண்டு.*

*1483. மனிதன் தன் செயல்களைத்தானே உண்டாக்கிக் கொள்ளும் திராணியற்றவனாய் இருப்பதை இது சுட்டிக்காட்டுகிறது. காரணம், ஒரு செயலைச் சிருஷ்டிப்பதென்றால் அதுபற்றிய சகல அம்சங்களையும் சிருஷ்டிப்பவன் தன் கவனத்தில் கொண்டே அவ்வாறு செய்ய வேண்டும். அது இறைவன் ஒருவனுக்கே சாத்தியமான காரியமாகும்.*

*1489. சகலவற்றுக்கும் காரணகர்த்தன் இறைவனே, நன்மை தீமையான சகலவற்றையும் படைத்தவன் அவனே என்பதை ஆதம் (அலை) அவர்கள் மறக்கவில்லை. எனினும், மனிதரிடமிருந்து உண்டாகும் செயல்களோடு தொடர்புள்ள சுய இச்சையின் (இக்தியாரின்) அளவு சம்பந்தப்பட்டவரை தாம் குற்றவாளியே என்பதை அவர்கள் ஒப்புக்கொண்டுவிட்டார்கள்.*

*1493. ஞானியொருவர் இறைவனை நோக்கி, "என் இறைவா, நீ பாவத்தை உண்டாக்கியுள்ளாய்; உன் சித்தப்படியே அது உண்டாகியுள்ளது; என் ஆத்மாவில் அதைச் சிருஷ்டித்தவன் நீயே" என்று கூறினார். அப்போது அவர் இவ்விதம் ஒரு குரல் எழக் கேட்டார் : "என் ஏகத்துவத்தை விஸ்வாசிப்பவர்கள் இவ்வாறு ஊர்ஜிதப்படுத்துவது சரிதான்; ஆனால், என் அடிமையாய் இருப்போர் செய்யத் தகுதியானது எது?" உடனே அந்த ஞானி பதிலளித்தார், "தவறு என்னுடையதுதான்; நானே பாவமிழைத்தவன்; நானே தவறு செய்தவன்" என்று. "நான் உம்மை மன்னித்துக் கருணை காட்டிவிட்டேன்" என்று அந்தக் குரல் அருளியது.*

*1495. "தூய பெண்கள் தூய ஆண்களுக்கும், தூய ஆண்கள் தூய பெண்களுக்குமாவர்" (அத். 24 : வசனம் 26) என்ற திருவசனத்தின் கருத்து இந்தப் பாடலின் முற்பகுதியாக அமைந்துள்ளது.*

*1503 - 1504. ஹஜ்ரத் உமர் (ரலி) அபூஜஹ்லின் சகோதரன் மகனாவார்கள். அவர்கள் இஸ்லாத்தை ஏற்குமுன் தன் சிறிய தகப்பனுடன் சேர்ந்துகொண்டு நபிபெருமானை எதிர்த்து வந்தார்கள்.*

*தலைப்பு : "நீங்கள் எங்கிருப்பினும். . ." தாத்பரியம் : இது திருகுர்ஆன் அத். 58: வசனம் 7ன் ஒரு பகுதியாகும் :*

*1509. வேறு விஷயங்களைத் தொட்டபின்னர் மீண்டும் மௌலானா அவர்கள் திரும்பும் 'கதை' (1480 முதல் 1508 வரையுள்ள பாடல்களில் சொல்லப்பட்டதன் தொடர்ச்சியானது) இவ்வுலகினுள் ஆத்மா இறங்கி வந்தது சம்பந்தப்பட்டதாகும். ஆனால், மெய்ப்பொருள் துறையில் கண்ணோட்டமிடுவதாயின் இது சகலவற்றுக்கும் பொதுவானது, அகண்டமானது. ஏனெனில், இவ்வுலகமும், இவ்வுலகில் ஆத்மாவுக்கு உண்டாகும் அனுபவங்களும் சகலவற்றையும் பொதிந்துநிற்கும் தெய்வ அறிவினதும், சக்தியினதும் சுடர்கள் வெளியாதல் (தஜல்லியாத்துத்) தான். இந்தத் தெய்வ அறிவிலும், சக்தியிலும் - இவற்றினூடாகவும் தாமே - நாம் வாழ்கிறோம், அசைகிறோம், உள்ளமையுடையவர்களாக இருக்கிறோம்!*

*1514. நமது யதார்த்தமற்ற ஜீவிதத்தில் தன் கல்யாண குணங்கள் பிரதிபலிப்பது சம்பந்தப்பட்டவரைதான் இறைவன் நம்முடன் இருக்கிறான். 'மற்றவையான தன்மைகளைவிட்டும் அப்பாலான அவன் உள்ளமை முற்றுமே ஏகமானதுதான். எனவே, வெறும் நேர்கோடாக உள்ள- மேல் கீழ் புள்ளி எதுவும் இல்லாத- 'அலிப்' என்ற எழுத்துக்கு அவன் தனித்தன்மை உவமையாக்கப்பட்டது.*

*1515-1516. இந்தக் கேள்விக்கான விரிவான பதிலை மௌலான அவர்கள் பின்னர் வரவிருக்கும் சில பகுதிகளில் பேசுகிறார்கள். குறிப்பாக மூன்றாம் கிதாபில் 4159-ம் பாடலிலும், நாலில் 521, 2540, 3015-ம் பாடல்களிலும், ஆறில் 2102-ம் பாடலிலும் விவரித்துள்ளார்கள்.*

*1517-1518. காற்றைப்போல் உருவமற்ற கருத்தொன்றைப் பிறர் புரிந்துகொள்ளும் பொருட்டு நீர் வார்த்தைகளில் வெளியிட்டுள்ளீர்; இதுபோன்றே, இறைவன் தன் சொந்த நோக்கத்துக்காக ஆத்மாவை உடலுள் வைத்துள்ளான்.*

*1520. கருத்துக்களை வெளிப்படுத்த வார்த்தைகளை நாம் பயன்படுத்துகிறோம்; ஆத்மா சம்பந்தப்பட்டவரை உடல் பயனுள்ளதாய் இருப்பதை இறைவன் காணாமலிருந்திருப்பானா?*

*1521. கருத்துக்களைப் பேச்சுடன் தொடர்புடையவையாக்கியதால் உண்டாகும் பயன்கள் எண்ணற்றவை. ஆனால், மனிதனுக்கு இவனை இந்த சமத்துவ உடலுள் ஜீவிக்கச்செய்து, தெய்வீகக் கல்யாண குணங்கள் அவனில் பிரதிபலிக்க மார்க்க*

முண்டாக்கித்தந்த இறைவனின் செயலோடு ஒப்பிடின் இது ஒரு பொருட்டேயன்று. கண்ணாடி ஒரு பக்கம் இருண்டு (ரசம் பூசப்பட்டு) இருந்தால்தான் பிரதிபிம்பமுடையதாக இருக்க முடியும். இதுபோல் இந்த ஜடதத்துவ உடலில் இருந்துகொண்டே மனிதன் தன்னில் தெய்வீகக் கல்யாண குணங்கள் பிரதிபலிக்கச் செய்யமுடியும்.

*1525. கழுத்தில் பூட்டப்பட்ட பட்டையாகும்: முன்னுள்ள 452ம் பாடலுக்கான விளக்கவுரையைப் பார்க்க. கஷ்டங்கள்பற்றிக் குறைபட்டுக்கொள்வது தெய்வ விதிப்பையும், ஞானத்தையுமே மறுப்பதாகும்.*

*1527. சிகிஞ்சபீன் : முன்னுள்ள 53-ம் பாடலுக்கான விளக்கவுரையைப் பார்க்கவும். இறைவனுடைய அருட்கொடை களுக்காக உண்மையில் அவனுக்கு நன்றி தெரிவிப்பது என்பது காதலால் உண்டாகும் மெய்யறிவு நிலையை அடைவதுதான். இதை வார்த்தையால் வெளியிட்டுவிட முடியாது. "இதுபற்றி மேலும் நீ விளங்கிக்கொள்ள விழைந்தால், நான் சொல்வது என்ன என்பதை நீ புரிந்துகொள்ள அவாவினால், மெய்ஞானியரின் வழிகாட்டு தலுடன் கூடிய மெய்யறிவு வாழ்க்கையை நீ வாழ்ந்துதானாக வேண்டும்" என்கிறார்கள் மௌலானா அவர்கள்.*

***தலைப்பு : "இறைவனோடு இருக்க. . ." தாத்பரியம் :*** *இது எந்த ஞானி அருளியது என்று திட்டவட்டமாகக் கூற முடிய வில்லை. ஆனால், இதே கருத்துள்ள வேறு சில பொன்மொழிகள் வருமாறு: "இறைவனோடு தொடர்பு கொண்டிரு; அதற்கு உனக்குச் சக்தி இன்றெனின் இறைவனோடு தொடர்பு கொண்டோருடன் தொடர்புகொள்"- அபூபக்கர்தமஸ்தானி, "மெய்ஞானியரோடு நெருங்கிய தொடர்புடையவனாய் இருப்பது என்பது இறைவ னோடும் நெருங்கிய தொடர்புடையவனாய் இருப்பதுதான்" துன்னூனுல் மிஸ்ரீ. "இறைவனோடு நெருங்கியிருப்பதற்கு முதல்படி அவனுடைய நேயர்களை நேசிப்பதுதான்"- இப்னு அபில் ஹவாரீ.*

*1529 - 1534. இந்தப் பாடல்களில் இறைவனின் ஏகத்துவத்தில் ஒன்றியவரின் அனுபவம் விவரிக்கப்பட்டுள்ளது. இதுப்ற்றிய முன்னுள்ள 1528ம் பாடலில் ஒரு சமிக்ஞை காட்டப்பட்டுள்ளது. தூதுவரின் தனித்தன்மை இறைவனில் அல்லது சம்பூரண ஞானியைக் குறித்துநிற்கும் ஹஜ்ரத் உமரில் இழைந்து (பனாவாகி) விட்டது.*

*1536. "மரணித்தோரோடு தொடர்பு கொள்வது பற்றி எச்சரிக் கையாய் இருங்கள்" என்று நபிபெருமானார் அருளினார்கள்.*

"மரணித்தோர் யார்?" என்று வினவப்பட்டபோது, "இம்மையின் மீது பற்றுடையோர்" என்று அவர்கள் பதிலளித்தார்கள்.

1537. திருகுர்ஆனில் வெளியிடப்பட்டுள்ள உண்மைகளைக் கற்றறிவதில் ஈடுபட்டால் நபிமார்கள் அதன்படி நடந்து ஒழுகியதைத் கண்டுகொள்ளலாம். நபிபெருமானாருடைய ஆத்மீக, நீதி இயல்பு திருகுர்ஆனாகவே (திருகுர்ஆனோடு இயைந்ததாகவே) இருந்தது என்ற ஆயிஷாஸித்தீகா (ரலி) அவர்களுடைய வாய்மொழியைச் சிந்தியுங்கள்.

1545. அதாவது, சுயஜீவிதத்தில் வெறுப்பையும், இம்மையின் விஷயத்தில் மரணித்த நிலையையும் அடையுங்கள்.

1546. புகழாசை மெய்ஞானப் பாதையில் நீங்கள் முன்னேறப் பெருந்தடையாய் உள்ளதாகும்.

**தலைப்பு: "வர்த்தகனும் . . . செய்தி":** 1540-1545-ம் பாடல்களில் சொல்லப்பட்ட விஷயத்துக்கான மேற்கோளாக விளங்குகிறது இந்தக் கதை. மரணித்ததாகப் பாசாங்கு செய்து, சண்டையிட்டுத் தப்பிய கிளியின் கதை இது. இந்தியாவிலுள்ள தன் இனத்துத் கிளிகளுக்குச் சிறைப்பட்ட கிளி செய்தியொன்று அனுப்புகிறது. அந்தச் செய்தியைக் கேட்ட இந்தியக் கிளிகளுள் ஒன்று செத்தது போல் விழுந்து கிடக்கிறது. இவ்விஷயத்தைத் தன் எஜமானனான வர்த்தகன்மூலம் கேட்டறிந்த கூண்டுக் கிளி தான் விடுதலையடைய மார்க்கம் யாது என்று கண்டுகொள்கிறது. தான் கூண்டினுள் செத்தாற்போல் விழுந்து கிடக்கிறது. வர்த்தகன் தன்னை வெளியில் இழுத்துப்போட்டதும் சிறகடித்துப் பறந்து தப்புகிறது.

1552 - 1553. இந்தியக் கிளிகள் என்பது காலமாகிவிட்ட நபிமார்கள், ஞானியருடைய ஆத்மாக்களையும், ஜீவிதமாயுள்ள மகான்களையும் குறிப்பதாகக் கொள்ளலாம்.

1561 -1574. இங்கே மௌலானா அவர்கள் தாங்களும் அந்தக் கிளியின் நிலையில் இருப்பதாகக் காண்கிறார்கள். தன் காதலியை விட்டுப் பிரிந்து பிரிவாற்றாமையால் புலம்பும் ஒரு காதலனாக நின்று பேசுகிறார்கள்.

1562. இந்தக் கடையான அடிமைக்காக ஒரு துளி அக்கறையேனும் காட்டு.

1565 - 1570. தான் திருப்தியடையவில்லை என்பதற்காக காதலன் அதை வெளியில் காட்டிக்கொள்வதில்லை. அவன் அதை முறையிடட்டும் என்று காதலி எதிர்பார்க்கிறாள். அவனுடைய

அடிமைத்தனத்தை (உபூதியத்தை) அவன் ஒப்புக்கொண்டதற்கு அத்தாட்சியாக விளங்குவது இந்த முறையீடு. எனவே, இது காதலிக்கு அதிகமும் திருப்தியளிப்பதாகும். ஆனால், காதலி கருணை (லுத்பு) காட்டினாலும், கடுமை (சுஹ்ர்) காட்டினாலும் காதலன் அதுபற்றிக் கவலைப்படுவதில்லை. ஏனெனில், அவற்றை ஏகத்துவக் கண்கொண்டு பார்க்கும் அவன் அவற்றின்மீதே மஸ்துக்கொண்டவனாகிவிடுகிறான்.

1573. அவனுடைய காதல் இறைவனல்லாத சகலவற்றையும் விழுங்கித் தகித்துவிடும் நெருப்பாய் விளங்குகிறது.

1574. இறைவனின் கல்யாண குணங்களில் - சாத்வீகமானவை, தீவிரமானவை என்று - எந்தப் பாகுபாடும் பாராட்டாமல் யாவையும் நேசிப்பவன் யாவையும் அடையப்பெற்று, தனி மனிதன் என்ற ஜீவிதமே அற்ற நிலையை அடைந்துவிடுவான்.

**தலைப்பு: "தெய்வப் புலன்களான . . . பறவைகள்":** பரிசுத்த மான ஜீவனை (ருஹுல் குத்ஸியை) அடையப்பெற்ற நபிமார்களும், நாதாக்களும் தான் இந்தப் பறவைகளாவர். ('மிஷ்காத்துல் அன்வார்' நமது மொழிபெயர்ப்பு பக்கம் 73 பார்க்க.) அன்பு, பரவசம், தன்னை இழத்தல் ஆகிய இறக்கைகளின் உதவியால் இவர்கள் இறைவனளவில் பறந்துசெல்கின்றனர்.

1576. இங்கே ஞானியரின் மனிதத்தன்மை என்ற அம்சம் பேசப்பட்டது. சுலைமான் நபிபற்றி முன்னுள்ள 1202ம் பாடலின் விளக்கவுரையில் பேசப்பட்டுள்ளது.

1578. "அடிமை (அப்து) 'யா ரப்பு!' என்று அழைத்தால், இறைவன், (லப்பைக்க) இதோ குரல் கொடுத்தேன், என் அடிமையே, நீ உனக்கு வேண்டுவதைக் கேள், அது தரப்படும் என்று பதிலளிப் பான்" - ஹதீஸ். தன்னலமற்ற பிரார்த்தனைக்கு உடனே பயன் கிட்டும். அகத்தில் இறைவன் இருப்பதால் உண்டாவதுதான் அந்தப் பிரார்த்தனையே; எனவே, அது கேட்கப்படுமுன் நிறைவேற்றப் படுகிறது.

1579. இப்பாடலில் சொல்லப்பட்ட குறைகள்கூட சம்பிரதாய மான பின்பற்றலை(தக்லீதை)யும், இருமை சம்பந்தப்பட்ட மார்க்கத்தையும்விடச் சிறந்தவையாகும் என்பது கருத்தாகும். இப்பாடலில் சொல்லப்பட்ட சம்பூரண நிலைபற்றிய விளக்கத்தை முன்னுள்ள 224ம் பாடலின் விளக்கவுரையில் காணலாம்.

"இறைவனை அறிந்தவர்களுடைய பாசாங்கு, இன்னும் அவனைத் தேடிக்கொண்டிருப்போரின் சித்தசுத்தியான தன்மையை

விடச் சிறந்ததாகும்" என்று அபூஸையிதுல் கர்ராஜ் (ரஹ்) அருளியுள்ளதும் இங்கே சிந்திக்கத்தக்கதாகும்.

1583. சம்பூரண மனிதர் இடத்தையும், இடமற்றதையும் ஆட்சி செய்கிறார். பிரபஞ்சமே தன்மீது சுழலும் 'குத்பு' ஆக அவர் விளங்குகிறார். இரும்பு காந்தத்தின் பால் ஈர்க்கப்படுவதுபோல ஜீவிதத்திலுள்ள பொருள்கள் யாவின் உள்ளமையும் அவர் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதற்காக ஈர்க்கப்படுகின்றன.

சொர்க்கவாசிகள் நினைத்தால் அங்குள்ள பாலாறு, தேனாறு, மதுவாறு, நீராறு ஆகிய நான்கு ஆறுகளையும் தாங்கள் நினைத்த திக்குகளில் ஓடச்செய்ய முடியும் என்று ஹதீஸ்களில் சொல்லப்பட்டுள்ளது.

1593. சிக்கிமுக்கிக் கல்லும் பஞ்சும் சேர்ந்த கருவிக்கு நாவு உவமிக்கப்பட்டுள்ளது.

1597. நாவிலிருந்து கிளம்பும் ஒரு வார்த்தை பயங்கரமான பலாபலனையோ, அதி அற்புதமான நற்பயனையோ விளைவிக்கலாம். பின்னர் வரும் 1702ம் பாடல் பார்க்க.

1603 - 1604. மெய்ஞானப் பாதையில் முன்னேற விரும்பும் சாதகனுக்கு(முரீதுக்கு)த் துறவொழுக்கம் அவசியமானதாகும். அதன் மூலம் அவன் மனம் பரிசுத்தமடைந்துவிட்டால் பின்னர் அவன் எதைத் தொட்டாலும் அது பரிசுத்தமானதாகவே ஆகிவிடும்.

1606. நம்ரூதுபற்றி முன்னுள்ள 547-ம் பாடலுக்கான விளக்கவுரையில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இங்கே நம்ரூது கீழான மனத்தையும், நெருப்பு என்பது புலனின்பங்களையும் குறிக்கின்றன. நம்ரூது எழுப்பிய நெருப்புக் குண்டத்தில் இப்ராஹீம் நபி (அலை) அவர்கள் வீசப்பட்டதும் அது பூங்காவாக மாறிவிட்டது. எனவே, உன் கீழான மனத்தை அடக்கிச் சாந்தியுடையதாக்கினால் நீயும் சாயுஜ்ஜிய நிலையை எய்தலாம்.

1614. முன்னுள்ள 1605-ம் பாடலில் எழுப்பப்பட்ட எச்சரிக்கையை இந்தப் பாடல் மீண்டும் வலியுறுத்துகிறது. அதாவது, தன் ஆத்ம ஞான வழிகாட்டிக்குப் பூரணமாகப் பணியாத சாதகனுக்கு எந்த நம்பிக்கையுமில்லை.

**தலைப்பு : "மூஸா (அலை) அவர்களும், மந்திரவாதிகளும்."**

மூஸா (அலை) அவர்களால் தோற்கடிக்கப்பட்ட மந்திரவாதிகள் உடனே அவர்கள்மீதும், ஏக இறைவன்மீதும் விஸ்வாசம் கொண்டனர். (திருகுர்ஆன் அத். 7: வசனங்கள் 116-122 பார்க்க.)

*பெரியார்களுக்கு மரியாதை காட்டுவதால் உண்டாகும் பாக்கியத்தை இது காட்டுகிறது.*

*1622. "இறைவன் காதுகளை நோக்கி, 'மௌனமாகக் கேட்டுக்கொண்டிரு!' என்று கூறினான்"- திரு குர்ஆனில் இறைவன் கூறுகிறான், "குர்ஆன் ஓதப்படும்போது, வாய்மூடி மௌனமாக , காது தாழ்த்தி அதைக் கேளுங்கள். அதன்மூலம், நீங்கள் இறைவனின் கருணையை அடையப்பெறலாம்" (அத் 7: வசனம் 204) என்று. பொதுவாகவே, முரீதுகள் வாய்மூடி மௌனிகளாக இருக்க வேண்டுவதன் அவசியத்தை குருநாதர்கள் வலியுறுத்துவதுண்டு. குறிப்பாக, ஞான குருவின் சந்நிதியில் முரீது மௌனமாக அமர்ந்திருந்து அவர் சொல்வதைக் கேட்பது அவசியமாகும்.*

*1626. பிறவியிலேயே செவிட்டூமையானவன் பேசுவதெப்படி? அதுபோல, ஆத்மீக விஷயங்களில் செவிடாகப் படைக்கப் பட்டவர்கள் நபிமார்களாலும், மெய்ஞானியராலும் போதிக்கப்பட்ட உண்மைகளைத் தங்கள் இதயத்தால் புரிந்துகொள்ளவோ, வெளியிடவோ முடியாதவர்களாவர்.*

*1628. விழிப்புடன் கவனித்துக் கேட்பவர்களாகுங்கள்; கேள்விதான் பேச்சுக்கு வாயிலாகும். "நீங்கள் உங்கள் வீட்டினுள் அதன் தலைவாயில் வழியாகவே வாருங்கள்"- திருகுர்ஆன் அத் 2: வசனம் 189 -ல் பார்க்க.*

*1629 - 1631. தெய்வப் பேச்சு என்பது கேள்வியுடனோ படிப்புடனோ, வேறு காரணசாதனங்கள் எதனுடனோ எந்தத் தொடர்பு மற்றது. ஜீவிதமற்றதுக்கு ஜீவிதத்தை அருளும் சிருஷ்டி கருத்தனின் நிரந்தரமான இந்தக் கல்யாண குணத்தை இதய சுத்தி பெற்றோரே கேட்க முடியும். "நீ அதைக் கேட்க விரும்பினால், மெய்ஞானப் பாதையில் (தரீக்காவில்) நடந்தாக வேண்டும்" என்கிறார்கள் மௌலானா அவர்கள்.*

*1633 - 1634. முன்னுள்ள 817 - 822- ம் பாடல்களின் விளக்கவுரை காண்க.*

*1635. பள்ளிக்கூடத்தில் ஏதாவது தவறு இழைத்துவிட்ட மாணவனை ஆசிரியர் வகுப்பின் கடைசியில் சென்று ஒற்றைக் காலில் நிற்கும்படி செய்வாரல்லவா, அதுதான் மாணவர்கள் செருப்புக் கழற்றும் இடம். ஆதம் (அலை) அவர்கள் இறைவனிடம் பாவமன்னிப்புத் தேடுவதில் எத்துணை உருக்கம் காட்டினார்கள் என்பதை மௌலானா அவர்கள் இவ்விதம் சுட்டிக்காட்டுகிறார்கள்.*

*1639 -1640. சம்பூரண மனிதர் தான் விரும்பிய அளவு எவ்வளவு வேண்டுமாயினும் உண்ணலாம் என்ற (முன்னுள்ள 1621 -ம் பாடலில் குறிப்பிடப்பட்ட) கருத்தை இவ்விரண்டு பாடல்களும் வலியுறுத்து கின்றன.*

*1643. நமது இதயத்திலுள்ள அக விளக்கை அணைக்கும் எதுவும் - அது எண்ணெயாகத் (ஆத்மீகமானதாகத்) தோன்றினும் கூட - அது தண்ணீரேதான். (காமக்குரோதாதிகள் சம்பந்தப்பட்டது தான்.)*

*1662. 'ஷரீஅத்' என்ற சன்மார்க்கச் சட்டப்படி, "மனிதர்களுக்கு அவர்களுடைய செயலுக்குத்தக்க சம்மானமுண்டு; நல்லவற்றுக்கு நல்ல சம்மானமும், தீயவையாயின் தீய கூலியும் கிடைக்கும்" என்ற ஹதீஸுக்கு ஏற்ப, ஒருவனுடைய செயலின் நன்மை தீமைக்கு அவனே பொறுப்பாளியாவான்.*

*1663 - 1667. சிருஷ்டிகளைப் பொறுப்பாளியாக்கும் செயல்கள், பலாபலன்கள் ஆகிய யாவுக்குமே மூலகர்த்தா இறைவன்தான் என்பதை விளக்குவதற்கான மேற்கோள் இது.*

*1665. ஜைதினால் தான் வேதனை உண்டாக்கப்பட்டது என்று சொல்ல முடியாது; அப்படியாயின் அவர் செத்ததும் அவரால் வந்ததாகச் சொல்லப்பட்ட அந்த வேதனையும் அகன்றுவிட வேண்டுமன்றோ? அப்படி அகலவில்லையே!*

*1670. காரணம்பற்றி மெய்ஞானி பச்சாதாபப்படும் போது, இறைவனின் கரம் காரணத்தைவிட்டும் அதன் பலாபலன்கள் என்ற கதவையே அடைத்துவிடுகின்றது. உதாரணமாக, ஞானி ஒருவர் யாரையும் சபித்துவிடலாம். பின்னர் அதற்காக வருந்தலாம். அப்போது இறைவன் அந்தச் சாபம் பலியாதபடி செய்துவிடு கிறான். இந்தப் பாடல் முன்னுள்ள 1657-ம் பாடலுடன் தொடர்பு டையது.*

*1673. "நம் (முந்திய) வெளிப்பாடுகளில் நாம் மாற்றவோ மறக்கடிக்கவோ விரும்பும் வசனங்களுக்குப் பகரமாக அவற்றின் இடத்தில் அவற்றைவிடச் சிறந்த அல்லது, அவற்றுக்கு ஒப்பான வசனங்களைக் கொண்டுவருவோம்." (திருகுர்ஆன் அத். 2: வசனம் 106)*

*1674. "திண்ணமாக, நம் அடியார்களில் ஒரு கூட்டத்தார் இருந்தனர். அவர்கள் (என்னை நோக்கி), 'எங்கள் இறைவா, நாங்கள் மெய்விஸ்வாசிகள்; எனவே, எங்களை மன்னித்து, எங்கள்மீது கருணைகாட்டியருள். ஏனெனில், கருணைகாட்டுவோரில் நீயே*

மிகைத்தவன்' என்று பிரார்த்தித்துக்கொண்டிருந்தனர். ஆனால், நீங்களோ அவர்களை எள்ளி நகையாடிக்கொண்டிருந்தீர்கள். அப்படி நீங்கள் நகைத்துக்கொண்டிருக்கும்போதே அவர்கள், என் எச்சரிக்கையை நீங்கள் மறக்கும்படி செய்துவிட்டனர்." (திகுர்ஆன் அத். 23: வசனங்கள் 109, 110) இங்கே மெய்விஸ்வாசிகளைப் பற்றி அல்லது, நபிபெருமானாரின் நற்றோழர்களைப்பற்றிப் பேசப்படு கிறது. ஆனால், மௌலானா அவர்கள் மெய்ஞ்ஞானியரையே இவ்விதம் குறிப்பிடுகிறார்கள்.

1679. முன்னுள்ள 1004, 1406 ஆகியவற்றுக்கான விளக்கவுரை களைப் பார்க்கவும். 'லுகத்துல் கவ்வாஸ்' என்ற நூலில் காணப் படும் ஷைகுல் அக்பர் முஹியித்தீன் இப்னுல் அரபி (ரலி) அவர் களின் மேற்கோள் வருமாறு : "இப்பிரபஞ்சம் மாபெரும் மனிதனா கும்; அதன் ஆத்மாவே சம்பூரண மனிதர் ஆவார். மற்ற மனிதர் களுக்கு அவரோடுள்ள தொடர்பு கண்ணுக்கும் கருமணிக்கும் உள்ளது போன்றது. எனவேதான், அவர் பிரபஞ்சத்தைப் பிரதிபலிக் கும் கண்ணாடியாய் இருக்கிறார் என்கிறோம்."

1680. மத்தியிலிருப்பவர்கள் : சம்பூரண மனிதர்கள். பிரபஞ்சத் தைத் தம்மீது சுழலவிட்டுக்கொண்டிருக்கும் குதுபுகள் (அக்தாபு கள்).

1681 -1683. சம்பூரண மனிதர் இறைவனின் பிரதிநிதியாக இயங்குகிறார். இந்தப் பாடல்களில் அவர் அகமியமாக இறைவ னோடு ஒன்றியவராகப் பேசப்படுகிறார்.

1690. கிலாபத் ஆட்சியில் அவசரச் செய்திகளைக் கொண்டு செல்லப் புறாக்களைப் பழக்கி வைத்திருந்தார்கள். இதுபோன்று தனிப்பட்டவர்களும் புறாக்களைப் பயன்படுத்தி வந்தனர்.

1697. சுலைமான் (அலை) அவர்களுக்கும் பறவைகளுக்குமுள்ள தொடர்புபற்றி முன்னுள்ள 1202 -ம் பாடலுக்கான விளக்கவுரையில் காணலாம்.

1698. மெய்ஞ்ஞானியின் ஆத்மாவுக்கு உணர்வூட்டும் அன்பு அவருடைய சொந்த முயற்சியால் கிடைத்துவிடுவதில்லை; அது ஒரு தெய்வீக அருட்கொடையாகும்.

1699. ஏனெனில், நாவு தானே பேசுகிறது; தன்னைத்தானே குறைகூறிக் கொள்கிறது.

1700. நாவு நல்ல வார்த்தைகளையும் சொல்கிறது; கெட்ட வார்த்தைகளையும் பேசுகிறது. எனவே, அது நல்ல வார்த்தைகள்,

வேலைகள் யாவற்றையும் எரித்துவிடும் நெருப்புக்கு உவமையாக்கப்பட்டது.

1702. முன்னுள்ள 1597-ம் பாடலிலும் அதன் குறிப்பிலும் நாவின் நிலை பற்றிப் பேசப்பட்டுள்ளது.

1703. பறவைகள் வேடனால் அழிவுக்கு இலக்காவது போல், நாவு ஆத்மாவின் அழிவுக்கே காரணமாவதுமுண்டு. அதேபோல் அதைப் பேணுவது கொண்டு அது இன்பப் பொக்கிஷத்துக்குத் திறவுகோல் ஆவதும் உண்டு.

1706. அதாவது, ஒன்று என் குற்றச்சாட்டுக்குப் பதிலளி; அல்லது, அது சரிதான் என்று ஒப்புக்கொள்; அல்லது, எனக்கு நிவாரணமளி; அஃதுமின்றேல், நான் மற்ற யாவையும் மறப்பதற்காக இறைவனைத் துதித்து என்னைப் பரவசமடையச்செய்!

1707. இந்தப் பாடலில் வர்த்தகனின் புலம்பல் அவன் தன் அன்பானவளோடு ஐக்கியமாகக் கொண்டுள்ள தாபத்தை வெளியிடுகிறது.

1708. ஜடதத்துவ உலகில் ஜடதத்துவ உடலிலுள்ள ஆத்மாவின் கடைசி நிலை ‘இறக்கமாகிய அரைவட்டத்தின்’ பூர்த்தியைக் குறிப்பதாகும். வட்டத்தின் மறு பாதியைப் பூர்த்திசெய்ய அது பாக்கியுள்ள ‘ஏற்றமாகிய அரைவட்டத்தை’யும் சுற்றிவந்து, தன் மெய்நிலைகண்ட பிரயாணத்தால் ஏகத்துவத்தை எய்துவதன்மூலம் தன் முதல் நிலைக்குத் திரும்பியாக வேண்டும்.

1709. இங்கே பிரஸ்தாபிக்கப்பட்டுள்ள திருகுர் ஆன் வசனம் வருமாறு: “இந்த (மக்கா) நகரத்தின்மீது நான் சத்தியம் செய்கிறேன். (நபியே,) நீர் இந்த நகரத்தில் வாழ்ந்துகொண்டிருப்பவர் -(மூல) பிதா ஒருவர் (ஆதம் அலைஹி) மீதும், அவர் சந்ததியார்மீதும் சத்தியமாக, உண்மையாகவே மனிதனை நாம் தொல்லையில் மூழ்கியவனாகவே சிருஷ்டித்துள்ளோம்.” (அத் 90 : வசனங்கள் 1 - 4.)

1711. ‘தனக்கு’ மரணித்தவரான ஞானி தெய்வ தரிசனம் பெறுகிறார். ஆனால், அவருடைய நாஸ்தி நிலை (பனா) பூர்த்தியானதாக இல்லாவிடின் அந்தப் பேரின்பம் கிட்டாதவராக, அந்தத் ‘தான்’ என்பதில் மீதியுள்ள பகுதியையும், அதனுடன் ஒட்டியவைகளையும் தத்தம் செய்தாகவேண்டிய நிலையிலிருக்கிறார். இதனால் அவர் காதலின் வேதனைகளையும், துயரங்களையும் அநுபவிக்க நேரிடுகிறது.

1712 -1713. இறைவன் தன்னுடையதையன்றி, வேறு ஜீவிதம் இருப்பதுபற்றி பொறாமையுடையவனாவான். ஏனெனில்,

யதார்த்தத்தில் தெய்வ உள்ளமைதான் ஜீவிதமுள்ளது; யாவையும் கடந்தது. தன் காதலர்கள் தமது இச்சையின் முழு இலக்காகவும் தன்னையே கொள்ளவேண்டும் என்றும், தன்னிலேயே தங்களை அவர்கள் இழக்கவேண்டும்' என்றும் அவன் விரும்புகிறான்.

1715 - 1716. ஆத்மா யாவுக்கும் முந்திய ஜீவிதமுடையது, தனக்கு இவ்வுலகில் வரவிருக்கும் நன்மை தீமையானவற்றை அது ஆதியில் கண்டுள்ளது என்ற தத்துவம் இங்குப் பேசப்படுகிறது. சம்பூரண மனிதரின் அறிவு சகலவற்றையும் பொதிந்ததாகும்.

இங்கிருந்து இந்தக் கதையின் முடிவுவரை மௌலானா அவர்கள் தங்களை முன்நிறுத்தியே பேசுகிறார்கள். தெய்வ உதிப்படைந்த ஆத்மா சாரத்தில் 'ரூஹெ - முஹம்மதி'யுடன் ஒன்றியதாகும். இந்த 'ரூஹெ - முஹம்மதி' மூலம்தான் இறைவன் பல்வேறு தலைமுறைகளில் தன்னைத் தன் நபிமார்கள், சத்திய நேயர்களுக்கு வெளியாக்கிக் காட்டியுள்ளான். எனவே, இது சிருஷ்டிகள் யாவும் உண்டாகுமுன்பே இருந்துவரும் ஒன்றாகும். "நபிமார்களில் முதன் முதலில் சிருஷ்டிக்கப்பட்டவன் நான்; அனுப்பப்பட்டவர் (நபிமார்)களில் கடைசியானவன். ஏனெனில், ஆதம் (அலை) அவர்கள் மண்ணுக்கும் தண்ணீருக்கும் இடையிலிருந்தபோதுநான் நபியாக இருந்தேன்!" என்று நபிபெருமானார் அருளியுள்ளார். "சடலங்கள் சிருஷ்டிக்கப்படுவதற்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஆத்மாக்கள் சிருஷ்டிக்கப்பட்டுவிட்டன" என்றும் ஒரு ஹதீஸ் உண்டு.

1718. ஜடதத்துவ உலகில் நடக்கும் யாவும் நம்முள் மறைந்துள்ள ஆத்மாவில் (நப்ஸுந் நாத்திகாவில்) மறைந்துள்ள தெய்வீகக் கல்யாண குணங்களின் பிரதிபிம்பங்கள்தாம். ஜடதத்துவ ஜீவிதம் என்ற திரையில் தென்படும் பல்வேறு தோற்றங்கள் யாவும் உண்மையில் அந்தப் பிரதிபலிப்பாலேயே உண்டாகின்றன.

1719. யதார்த்தத்தைக் காணாதநிலையில், இந்த மறையும் பிரதிபிம்பங்களைப் பார்த்துவிட்டு உன் மகிழ்வை உண்மையிலேயே பறிக்கும் விஷயங்களில் நீ மகிழ்ச்சி பாராட்டுகிறாய்; துன்பத்தை நன்மை என்றும், நியாயமானது என்றும் கொள்கிறாய்.

1723. முழு மதி என்பது ஆத்மாவாகும்; மேகங்கள் என்பது அதை மறைத்துள்ள ஜடதத்துவத் திரைகளாகும். இறைவனைப் பரவசத்தோடு நேசிக்கும் காதலனாக மௌலானா அவர்கள் பேசுகிறார்கள்; 'தான்' என்ற அகந்தையாலும், இச்சாபாசங்களாலும் உண்டாகும் பிரமைகள்பற்றி வருந்துகிறார்கள். இந்தத்

திரைகளை எப்படி மாய்த்துக்கொள்வது என்பதற்கு இவ்விதம் உழல்வோர் தங்களைப் பார்த்துப் படித்துக்கொள்ளுமாறு உபதேசிக்கிறார்கள்.

1726. பயங்கரச் சிங்கம் - தெய்வக் காதல்.

1727 - 1733. ஹுஸாமுத்தீனுடன் மௌலானா அவர்கள் கொண்ட மெய்நிலை கண்ட ஐக்கியம் தனிப்பட்ட ஆத்மா உலக ஆத்மாவுடன் கொள்ளக்கூடிய ஐக்கியத்துக்கு உன்னதமான ஆதர்ஸமாகும். இந்த ஐக்கியத்தை அடிப்படையாகக்கொண்டு இந்தப் பாடல்களைப் படித்தால் இவற்றின் பொருள் புரியலாகும்.

1727. மௌலானா அவர்கள் 'மஸ்னவீ'யின் எந்தப் பகுதியையும் எழுதியபின், அதை ஹுஸாமுத்தீனிடம் படித்துக் காட்டுவது வழக்கம். (முதலில் மௌலானா அவர்கள் சொல்லச் சொல்ல ஹுஸாமுத்தீன்தான் அதை எழுதுவார்கள். பின்னர் அதை வாங்கி மௌலானா அவர்கள் சாவகாசமாக ஹுஸாமுத்தீனுக்குப் படித்துக் காட்டுவார்கள்.) மௌலானா அவர்கள் அந்தப் பாடல்களின் ஓசை நயம் வெளிப்படும்படி அவற்றைப் படிப்பதுண்டு. எனவே, ஓசை நயம், எதுகை மோனைபற்றிப் பெரிதாக எண்ணும் தங்களையே கடிந்தும் கொள்கிறார்கள்.

1729. தோட்டத்தில் முட்புதர்கள் திராக்ஷைக் குலைகளை அணுகத் தடையாய் இருப்பதுபோல, வார்த்தைகள் - 'தான்' எனும் தன்மையை வெளியிடும் இயல்பினவானதால் தெய்வச் சிந்தனைக்கு (முஷாஹதாவுக்கு) இடைஞ்சலாயுள்ளன.

1731 - 1732. மௌலானா அவர்கள் பிரபஞ்ச அந்தரங்கத்துடன் (அஸ்ராரெ - ஜஹானுடன்), அதாவது சம்பூரண மனிதருடன் தாங்கள் ஒன்றிவிட்டதாக உணர்கிறார்கள். அவர்களுக்கு இங்கே சம்பூரண மனிதர் ஹுஸாமுத்தீன் ஆவார்கள். இப்ராஹீம் நபி (அலை), ஈஸா நபி (அலை), ஜிப்ரயீல் (அலை) ஆகியோரிடம்கூட மறைக்கப்பட்ட தெய்வக்காதல் பற்றிய வெளிப்பாடு ஒன்றைத் தாங்கள் பெற்றுவிட்டதாகக் கூறுகிறார்கள்.

1733. ஐக்கியத்தின் இரகசியம் விவரிக்க முடியாதது. ஈஸா (அலை) அவர்கள் இறைவனின் ஜீவன் (ரூஹுல்லாஹ்) ஆக இருந்தாலும் அதை வெளியிடவில்லை. இறைவன் தனித்திருந்தபோது அதைக் கேட்க அவனையன்றி வேறு யாரும் இல்லாத நிலையிலும் அதை அவன் வெளியிடவில்லை. ஏனெனில், இறைவன் தன் பொறாமை காரணமாகத் தன்னையன்றியுள்ள எதன் ஜீவிதத்தையுமே அனுமதிக்கமாட்டான்.

இறைவன் தன்னையன்றி எதிலும் இணைவது குறித்துப் பொறாமையுடையவனாதலால், நான் முற்றும் அவனில் இணைந்து விட்ட நிலையில் ஈஸா (அலை)யிடமும், ஜிப்ரயீல் (அலை)யிடமும் வெளியிடாத தகவலை என்னிடம் கூறினான் என்று பொருள் கொள்வாருமுண்டு.

1734. 'மீம்' என்பது தனக்குத் தனித்த உள்ளமையுண்டு, தனக்குத் தனித் தன்மையுண்டு என்று எண்ணுபவனைக் குறிப்பதாகும். இவ்விதம் தனி உள்ளமையுண்டு என்று நினைப்பதே வெறும் பிரமைதான்; யதார்த்தமான உள்ளமை இறைவன் ஒருவனுக்கே என்பதை மெய்நிலைகண்ட ஞானிகள் அறிவர்.

1735. அதாவது, "என்னை இழப்பதில் என்னை நான் கண்டு கொள்கிறேன்."

1736 - 1737. உள்ளமை, உள்ளமையற்றது ஆகிய இரண்டுக்கு முள்ள தொடர்பை ஷைகுல் அக்பர் முஹியித்தீன் இப்னுல் அரபியின் வழியில் நின்று மௌலானா அவர்கள் விளக்குகிறார்கள். உள்ளமையாளன் - உள்ளமையற்றவை, ஒன்று - பல, சிருஷ்டியாளன் - சிருஷ்டிகள், எஜமானன் - அவன் அடிமை என்பதெல்லாம் ஒரே யதார்த்தத்தின் பல்வேறு அம்சங்களுக்கான பெயர்கள்தாம். இந்தப்படிபார்த்தால் (யதார்த்தத்தில்) இறைவன் மனிதனாகவும், மனிதன் இறைவனாகவும், அல்லது (கோட்பாட்டில்) இறைவன் மனிதனாய் இல்லாமலும், மனிதன் இறைவனாய் இல்லாமலும் இருக்கும்படியாயிற்று. இவ்விதம் (1736ம் பாடல் பார்க்க.) ஓர் அரசன் தன் பிரஜைகளின் அடிமையாவான். ஏனெனில், அரசனாய் இருக்க அந்தப் பிரஜைகள் அவசியமானவர்களாயுள்ளனரல்லவா! அன்புக்குரித்தானவன், தன்மீது அன்பு கொண்டோரிடம் அன்புடையவனாய் இருக்கிறான். எனவே, ஒவ்வொரு காதலனும் (ஆஷிக்கும்) காதலிக்கப்பட்டவன் (மஃஷூக்) ஆகவும் இருக்கிறான்; காதலிக்கப்பட்ட ஒவ்வொருவனும் ஒரு காதலன் ஆகவும் இருக்கிறான். காதல் அழகை விரும்பி இதன்மீது காதல் கொள்ளுமாயின், அழகும் காதலை அஃதேபோல் விரும்பிக் காதல் கொள்ளும். சுத்த பரிபூரணக் காதலும், அழகுமான இறைவன் தன்னைக் காதலிப்போரைக் காதலிக்கிறான். அவன் அவர்களைக் காதலிப்பதால், அவர்களில் அவர்களைப்பற்றிய எதையும் அவன் மீதம் வைப்பதில்லை; அவர்கள் அவனுடன் ஒன்றானவர்களாகிவிடுகின்றனர். எனவே, அந்த நிலையில் அவனே காதலனாகவும், காதலிக்கப்பட்டவனாகவும் ஆகிவிடுகிறான்.

*1742. அதாவது, இறைவனில் மஸ்துக்கொண்டவனாக (மஸ்தூப் ஆக) ஆகிவிடு!*

*1743. அதாவது, உன் பரவசப் பேச்சுக்களைக் கட்டுப்படுத்து; மார்க்க முரணான, உனக்கு அவப்பெயர் உண்டாக்கும் வார்த்தைகளை வெளியிடாது தவிர்த்துக்கொள்!*

*1744. முன்னுள்ள 454, 683-ம் பாடல்களுக்கான விளக்கவுரைகளைப் பார்க்கவும்.*

*1745. முன்னுள்ள 17 -ம் பாடலின் விளக்கவுரையைக் காண்க.*

*1746 - 1748. உண்மையான காதலனுக்குத் தன் சொந்த ஆசை என்றே ஒன்று கிடையாது; தன் காதலி விரும்புவதுதான் அவனுக்கு இன்பமளிக்கும். அது ஐக்கியத்திலுண்டாகும் இன்பமாயினும், பிரிவிலுண்டாகும் வேதனையாயினும் சரியே. (1746-ம் பாடலில்) அவன் அம்பு என்பது அவனுடைய தீவிரமான (ஜலால் ஆன) குணங்களையும், அவன் கவசம் என்பது அவனுடைய சாத்வீகமான (ஜமால் ஆன) குணங்களையும் குறிக்கின்றன.*

*1749. அதாவது, மெய்ஞானிமீது இறைவன் ஒவ்வொரு தடவையும் பொழியும் சுடர் ஒளியும் (தஜல்லியாத்தும்) அவர் தமது அறிவுப் புலன்களை இழந்ததற்கு நூறு மடங்கு சமன் செய்வதாகும்.*

*1752 - 1756. 'தான்' சம்பந்தப்பட்டவரை இறந்துவிட்டதாகக் கருதும் ஞானி, அந்த நிலையிலும் தன் நாஸ்தியைப்பற்றிய (பனாவைப்பற்றிய) உணர்வுடையவராய்இருப்பாராயின் அவர் இன்னும் தன்னை முற்றும் இழந்துவிடவில்லை என்பதற்கு அதுவே அறிகுறியாகும். இத்தகைய நிலையிலுள்ளவர் தெய்வக் காதலின் உண்மை மதிப்பை அறியமாட்டார்; அதை வெகு மலிவாக விற்கக்கூடத் தயங்கமாட்டார்.*

*1759. தெய்வ ஏகத்துவம் எனும் கடலுக்கு மெய்நிலைகண்ட ஞானி உதடாய் இருக்கிறார். "நான் 'இல்லை' என்னும்போது அது 'தவிர' என்ற பொருளில் பயன்படுவதைக் கண்டுகொள்." லாஇலாஹ இல்லல்லாஹ் (நாயன் 'இல்லை' அல்லாஹ்வைத் 'தவிர') என்பதைச் சுட்டிக்காட்டுகிறார்கள். மெய்நிலை கண்ட ஞானி தன் ஜீவிதத்தை மறுத்துக்கொண்டது மூலம் இறைவனோடு தாம் ஒன்றிவிட்டதை ஊர்ஜிதப்படுத்திக்கொள்கிறார்.*

*1760 - 1762. இறைவனோடு உரையாடும் பேறு பெற்றோர் அதைவெளியிடாது மௌனமாய் இருப்பதும், மற்றோரைவிட்டு விலகியிருப்பதுமுண்டு.*

***தலைப்பு : "பாதையில் (தரீக்காவில்) ...... விளக்கம் :*** ஹக்கீம் ஸனாயியின் வாய்மொழியான பாடல் அவர்களுடைய கஸீதாக் களில் ஒன்றின் ஒரு பகுதியாகும். இறைவனுடைய பொறாமையைப் பற்றிப் பேசும் பாடல் அது. நபிபெருமானாரின் நற்றோழர்களில் ஒருவரான சஅது இப்னுஉபாதா (ரலி) சற்றுப் பொறாமையுடைய வர்களாக இருந்தார்கள் என்பதுபற்றிய ஹதீஸ்கள் புஹாரீயில் உண்டு. நபிபெருமானார் பொறாமையுடையவர்களாக இருந்தார் கள் என்பதற்கான சம்பவமாவது : ஒரு சமயம் நபி பெருமானாரைக் காண அந்தகர் ஒருவர் வந்தார். அப்போது அங்கிருந்த ஆயிஷா நாயகி அவ்விடம் விட்டு உள்ளே ஒடினார்கள். அதைக் கண்ட நபி பெருமானார் கேலிக்காவது அவர்களை விளித்து, "இவர்தான் உன்னைப் பார்க்க முடியாதே, ஒளிய வேண்டாம்!" என்றார்கள். இவ்விஷயங்களில் பெருமானார் எத்துணை பொறாமையுடைய வர்கள் என்பதை அறிந்திருந்த ஆயிஷா நாயகி, தங்கள் கையால் சமிக்ஞை செய்துகாட்டி, அவர் பார்க்காவிட்டாலும், நான் அவரைப் பார்க்கிறேன்" என்று தெரிவித்துவிட்டு உள்ளே மறைந்துவிட்டார்கள்.

அப்துல் மஜீத் மஜ்தூத் ஸனாயீயின் வாழ்க்கை விபரங்களை "நமது பாரஸீகப் பெருங் கவிஞர்கள்" என்ற நூலில் காணலாம்.

1763. இறைவன் உலகின் ஆத்மாவாய் இருப்பதால் உலகிலுள்ள சகல பொறாமைகளுக்கும் மூல காரணமானது அவனுடைய பொறாமைதான்.

1765. தற்காலிகமாகக் காணக்கிடைக்கும் காட்சி காரணமாக ஒருவனுக்கு மறைவானதிலுண்டான நம்பிக்கை அகன்றுவிடுமா? இங்கே 'தக்லீத்' (சம்பிரதாயத்தைப் பின்பற்றல்), 'கஷ்பு' (தெய்வீகக் காட்சிகள் காணல்) ஆகிய இரண்டுக்கும் உள்ள வேற்றுமைகள் பேசப்படவில்லை. ஈமானுக்கும் (மெய்விஸ்வாசத்துக்கும்), இஹ்ஸானுக்கும் (பயபக்திக்கும்) உள்ள ஒற்றுமைதான் சுட்டிக்காட் டப்படுகிறது.

இஹ்ஸான் என்பது யாதுஎன்று நபிபெருமானாரிடம் வினவப்பட்டபோது அவர்கள், "தொழுகையில் நீங்கள் இறைவனை நேரில் காண்பதுபோன்ற அச்சத்துடன் நின்று தொழுவதுதான் இஹ்ஸான்" என்று பதிலருளியுள்ளார்கள்.

1772. இறைவன் யாவற்றையும் பொதிந்தவனாவான். ஒவ்வொன்றுக்கும் அதனதன் பகுதிகள் சம்பந்தப்பட்டவரை அவன் காரணனாய் இல்லாவிடினும், அவற்றாலுண்டாகும் பயன்கள்

சம்பந்தப்பட்டவரை அவனுக்குத் தொடர்புண்டு. அவனே அவற்றுக்கு காரணபூதன்.

1773. இனித் தெய்வசாரத்தின் சுடர் வெளிப்பாடுகள் (தஜல்லியாத்துகள்) கருணை, கோபம் போன்ற படிவங்களில் வெளியாவதுபற்றிப் பேசப்போவதாக மௌலானா அவர்கள் கூறுகிறார்கள்.

1780. இந்தக் கண்ணீர் துளிகளின் மகிமைபற்றி முன்னுள்ள 817-822-ம் பாடல்களிலும், அவற்றுக்கான விளக்கவுரைகளிலும் அழகாக விளக்கப்பட்டுள்ளது.

1781. முன்னுள்ள முதல் பாடலுக்கான விளக்கவுரை காண்க.

1782. நான் நகைக்கக் காரணம் என் இதயம் குறைகூறும் எனக்குண்டாகியுள்ள கஷ்டங்கள் உண்மையில் இறைவன் என்மீது கொண்ட அன்பின் அறிகுறி என்பதை நான் அறிந்திருப்பதுதான்.

1784. சத்தியம் மெய்ப்பொருள் கண்ட நிலையில் உணரப்படு மாயின் இறைவன் - அடியான் என்பது உள்ளிட்ட சகல தொடர்பு களும் மறைந்துவிடும். முன்னுள்ள 1736 - 1741-ம் பாடல்களுக்கான விளக்கவுரை காண்க.

1786. சகல சம்பவங்களும் யதார்த்த சொரூபனின் தனித் தன்மையின் வெளிப்பாடுகள்தாம். பன்மையான தன்மையின் தோற்றத்தை உண்டாக்கும் இந்தத் தனித் தன்மை (தஅய்யுன்) அகற்றப்பட்டால் அவை தமக்குள்ளும், யதார்த்த சொரூபனுடனும் ஒன்றாகவே ஆகிவிடும். எனவே, காதலுள்ள இதயங்களின் ஐக்கியம் ஒவ்வொன்றிலும் இறைவன் வெளிப்படுகிறான்.

1787. இறைவன் தன்னை வணங்குவதற்காகச் சிருஷ்டிகளைப் படைத்தான்; ஆனால், சாரத்தில் அவனே வணங்குபவன் (ஆபிது) ஆகவும், வணங்கப்பட்டவன் (மஃபூது) ஆகவும் இருக்கிறான். மற்றவையான தன்மை என்பதெல்லாம் யதார்த்தத்தைக் கண் ணோட்டமிட உதவும் இரண்டு அம்சங்களின் குறுக்கீட்டால் உண்டாகும் பிரமையேயன்றி வேறல்ல. (முன்னுள்ள 1718-ம் பாடலுக்கான விளக்கவுரை காண்க.)

1789. எங்களை ஜீவிதமுள்ளவர்களாக்கிய சிருஷ்டிக்கும் வார்த்தையை ('குன்' என்பதை) உடையவனே, நாங்கள் எங்க ளுடைய 'தான்' என்பதை இழப்பதற்காகவும், உன்னில் மறைந்து போவதற்காகவும் நீ உன்னை வெளியாக்கிக் காட்டுவாயாக!

*1790. நம் சடலத்துள் எல்லாம் அடங்கிப்போய்விட்டது என்று நினைப்பவர்கள் இறைவனின் ஆத்மீகமான கற்பனையை எண்ணிப்பார்க்க இயலாதவர்களாவர். அவர்கள் இறைவனுக்கும் நம் உடலின் குணா குணங்கள் உண்டாகிவிட்டன.. "இறைவன் நேற்றிரவு சிரித்தான்", "தன்னிடம் விஸ்வாசம் கொண்ட அடியானின் பச்சாதாபங் குறித்து இறைவன் மகிழ்ச்சியடைகிறான்", "திண்ணமாக, தெய்வக் கருணை தமக்கு மிக அருகாமையில் இருந்தும்கூடக் கைசேதமடைந்தவர்களான தன் அடியார்களின் நிலைகுறித்து இறைவன் சிரிக்கிறான்" என்பன போன்ற ஹதீஸ்களுக்கு உடலின் தத்துவங்களோடான பொருளை மேற்கொள்கின்றனர். இவற்றில் சிரிப்பு என்பதும் மகிழ்ச்சி என்பதும் இறைவனுடைய அருட்கொடைகள் வெளியாதல் என்பதை அறியாதவர்கள் இவர்கள்.*

*இந்தப் பாடலின் இரண்டாம் பகுதிக்கு, "உன் துயரமான நிலையும் உன் சிரிப்பும் இத்தகையோரைத் தவறான கற்பனைக்கு ஆளாக்கிவிட்டன" என்பது பொருளாகும்.*

*1791 - 1794. இறைவன்மீது கொள்ளும் காதல் இன்ப துன்ப உணர்வுகள் - அவை புலன்கள் சம்பந்தப்பட்டவையாயினும் சரி, ஆத்மா சம்பந்தப்பட்டவையாயினும் சரி அவற்றையெல்லாம் விட்டும் அப்பாற்பட்டது. அதாவது, உண்மையான காதல் (இஷ்கு) சகல பன்மையான தன்மைகளையும் கடந்ததாகும்.*

*1795. உன் பேரழகின்முன் யாசித்துநிற்கும் யாசகன் நான்; என்மீது உன் கருணையையும், அன்பையும் சொரிந்தருள்! உன்னையன்றியுள்ள யாவையும்விட்டு என் ஆத்மா பரிசுத்தமானது எவ்விதம் என்று எனக்கு எடுத்துரை!*

*1796. மெய்ஞ்ஞானியின் இதயத்தில் தெய்வப் பேரழகு சுடரொளி பாய்ச்சுவது (தஜல்லியாவது) இங்கே சுட்டிக்காட்டப்படுகிறது.*

*1797. முன்னுள்ள 1749-ம் பாடலுக்கான விளக்கவுரை காண்க.*

*1802. காதலியை (ரோஜாவைப்) பற்றிய வருணனையை நிறுத்திவிட்டு, காதலின் (புல்புலின்) நிலையை விவரிக்கத் தொடங்குகிறார்கள். அவனுடைய நிலை இந்த நிலையற்ற வாழ்வின் நன்மை தீமைகளைவிட்டும், இன்ப துன்பங்களைவிட்டும் அப்பாலானதாகும்.*

*1806. "(சகலவற்றுக்கும்) உயிர் கொடுத்தது நாம்தான்; யாவையும் மரிக்கச் செய்வதும் நாம்தான். நாமே யாவுக்கும் அநந்தரனு*

மாவோம்" (அத். 15: வசனம் 23) என்ற திருகுர்ஆன் வசனம் இங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

1807. பிரிவு என்ற இரவு கடந்துவிட்டது; ஐக்கியம் என்ற காலை புலர்ந்துவிட்டது.

இறைவனைப்பற்றிய தியானத்தில் தங்களை மறந்த மௌலானா அவர்கள் தங்கள் சார்பில் தங்களால் பேச இயலாதவர்களாகி, தங்களுக்கு உணர்ச்சியுண்டாகக் காரணபூதரான ஹுஸாமுத்தீனிடம் தங்கள் சார்பில் மன்னிப்பை வேண்டுகிறார்கள். தங்களுடைய 'மஸ்து' மிகவும் அதிகமாகித் தங்களுக்கு உணர்த்தப்பட்ட மர்மங்களை அவர்கள் வெளியிட முடியாதவர்களாகி விட்டார்கள். சில சமயங்களில் மௌலானா அவர்கள் இரவில் 'மஸ்னவீ'ப் பாடல்களை யாப்பதுண்டு. அவர்கள் சொல்லச் சொல்ல ஹுஸாமுத்தீன் அவற்றை எழுதிவருவார்கள். இப்படிக் காலைத் தொழுகை நேரம்வரை நடப்பதுண்டு. எனவே, இந்தத் தருணத்திலும் அப்படி ஆகி - இரவு முழுவதும் விழித்து எழுத்து வேலை செய்த ஹுஸாமுத்தீனிடம் தம் சார்பில் இறைவனை மன்னிப்புக் கேட்கச் சொல்கிறார்கள் என்றும் இதற்குப் பொருள் கொள்ளலாகும்.

"ஹுஸாமுத்தீனிடம் மன்னிப்புக்கேள்" என்பதற்கு "ஹுஸாமுத்தீனைக் கண்ணியப்படுத்து" என்பதுதான் பொருளாகும் என்பாருமுண்டு. ஒருவனுக்கு மறுமையில் கொடுக்கவிருந்த நற்பேறுகளுக்காக இம்மையின் செல்வங்களைக் கொடுக்காது நிறுத்திவிட்டதுகுறித்து நியாயத் தீர்ப்பு நாளில் இறைவன் அவனிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்வான் என்ற ஹதீஸ் ஒன்று உண்டென்றும், இதிலும் 'மன்னிப்புக் கேட்டல்' என்பது கௌரவப்படுத்தல் என்ற கருத்திலேயே கையாளப்பட்டுள்ளது என்றும் அவர்கள் மேற்கோள் காட்டுகிறார்கள்.

1808. சகலவற்றினுடையவும் அகச் சாரமானவனான இறைவன் சம்பூரண மனிதனிலுள்ள நூரெ- முஹம்மதீயிடம் மன்னிப்புக் கேட்போருக்காகப் பரிந்து பேசுபவனாய் இருக்கிறான். பவளம் என்பது கல்பு ஆகிய இதயத்தைக் குறிக்கும் என்பாருமுண்டு.

1809. மன்ஸூர் என்பது 'அனல் ஹக்' என்று சொன்னதற்காக (ஹிஜ்ரி 309-ல்) மரண தண்டனையடைந்த மன்ஸூர் ஹல்லாஜ் (ரஹ்) அவர்களையாகும். மன்ஸூர் (ரஹ்) அவர்கள் அருந்திய காலைப்பானம் 'அனல் ஹக்' (நானே சத்திய சொரூபம்) என்பதாகும்.

*1810. சம்மானம் - உன் யதார்த்த நிலையை நான் காட்சியாகக் கண்டு தரிசித்தது.*

*மது - ஜடதத்துவ உருவமும், இறைவனையன்றியுள்ள எந்த இச்சையையாவது தூண்டிவிடும் யாவும் மதுவாகும்.*

*1811 - 1813. இந்தப் பாடல்களில் மௌலானா அவர்கள் சம்பூரணமடைந்த ஞானியாக நின்று பேசுகிறார்கள். அகிலங்கள் அனைத்துக்கும் அறிவானதன் கருவியாக பேசுகிறார்கள். அந்த அறிவு ஆத்மீக, ஜடதத்துவ உலகங்களிலுள்ள, சகலவற்றின் மூலஸ்தானமும், அவற்றை இயக்குவதுமாகும்.*

*1811. பொங்கும் மது - தெய்வீகக் காதல். சுழலும் வான மண்டலம் - சம்பூரண அறிவு.*

*1813. சடலங்கள் நிறைந்தஉலகம் தேன் கூட்டுக்கும் சம்பூரண மனிதர் தேனீக்களுக்கும் உவமையாயின. தேனீக்கள் தெய்வ உதிப்பின்மூலம் அறை அறையாகத் தேன்கூடுகளைச் சமைக்கின் றன. அஃதேபோல், சம்பூரண மனிதரின் ஆத்மாவும் இவ்வுலகைத் தன் உருவில் சமைத்து ஒவ்வொரு சடலத்தையும் அதனதன் தகுதிக்கேற்ப இனிமையான தன்மையாலும், ஒளியாலும், அறிவா லும், இறைவன்மீது கொள்ளவேண்டிய அன்பாலும் நிரப்புகிறது.*

*1820. சம்பூரண மனிதரின் நிலையே இங்குச் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. மனிதனிடமுள்ள இயலாமைகளைக் கடந்துவிட்ட இவர் பிரார்த்திப்பதும், கெஞ்சி அழுவதும் அற்புதமான செயலா கும். அத்துடன், அளவற்ற அருளாளனான இறைவன் தமக்கு மேலும் மேலும் அருளானுக்கிரஹங்களைப் பொழியவேண்டும் என்று கேட்பவராயுமிருக்கிறார். காரணம், இறைவனின் கல்யாண குணங்கள் யாவும் இவரில் பிரதிபலிப்பினும்கூட இவர் இறை வனாக முடியாது; இறைவனல்லர். எனவேதான், இந்தச் சம்பூரண மனிதத்தன்மையைக் காட்டிக் கொள்ளுமுகத்தானும் இவர் இறைவனிடம் மேலும் அருள் சொரியுமாறு பிரார்த்திக்கிறார்.*

*அரசன் என்பது இறைவனையும், புகார் என்பது காதல் இச்சையை(ஷௌக்கை)யும் குறிக்கின்றன என்றும், இறைவன் பிணிக்கு ஆளாகவில்லை என்பதற்கு அவன் எதிலும் குறை யுடையவனன்று, அவன் கருணைமாரி ஒரு கணமும் ஓய்வதில்லை என்பதுதான் பொருள் என்றும் கூறுவாருமுண்டு. எனவே, அவனை அடையாதவரை எதுவுமே இல்லாதவர்களாயுள்ள நிலையில் அவனுடைய அன்பர்கள் அவனைக் கண்டு கொள்ளும்வரை அயர முடியாது.*

1821. இங்கு பிரஸ்தாபிக்கப்பட்டுள்ள திருகுர்ஆன் வசனம் அத். 55: வசனம் 29-ன் பகுதியாகும். இந்த வசனத்தின் அகமிய விளக்கமாக ஹஜ்ரத்கௌதுல் அஃலம் தங்களுடைய 'புதூஹுல் கைப்' என்ற நூலில் தந்துள்ள விளக்கவுரை மிகவும் அருமையானதாகும். (நமது 'கௌதுல் அஃலம்' முதல் பாகம் 357 அறுபத்து எட்டாம் மகாலா - பார்க்க.)

1824. "நீங்கள் எதைச் செய்தபோதிலும், நீங்கள் அதில் ஈடுபட்டிருக்கும்போதே நாம் உங்களைக் கண்காணிக்கிறோம்" (திருகுர்ஆன் அத். 10, வசனம் 61)

1826. முன்னுள்ள 857ம் பாடலுக்கான விளக்கவுரை காண்க.

1833 - 1834. தன்னில் மரணித்தவனாக ஆகவேண்டுவதன் அவசியத்தை இந்தப் பாடல்கள் வலியுறுத்துகின்றன. பொருளாவது: எதுவும் தெரிந்ததுபோல் காட்டிக்கொள்ளாதே; பிறரைக் கவரவைக்கும் எதுவும் அவர்களுக்கு வேட்டையாகிவிடும்; பிறரால் விழுங்கப்படும் கண்ணியிலுள்ள இரையை (அறிவை) மறைத்துவை: கண்ணியாய் இரு. (அதாவது, இறைவனிடமும், அவனுடைய மெய் நேசர்களான நாதர்களிடமுமிருந்து மெய்யறிவைப் பெற்றுக் கொள்!) சகல நற்பண்புகளையும், செயல்களையும் மறைத்துக் கொள்; ஏதேனும் கட்டடங்களின் மீதுள்ள, கவனிப்பற்ற, யாரும் கருத்துக்காட்டாத புல்லைப்போல் இருந்துவிடு!

1837. நண்பர்கள்கூட . . . - அவனுடைய நண்பர்களும் அவன் வாணாளை விரயமாகச் செய்கின்றனர்.

1838. அக்கறையற்றவன் - இந்த வாழ்வில் நற்செயல்கள் என்ற விதைகளை விதைக்காது புறக்கணித்தவன்.

1841. இறைவன் நூஹு (அலை) அவர்களுக்கு ஜலப் பிரளயத்திடைக் கப்பலில் பாதுகாப்பருளிய விபரத்தைத் திருகுர் ஆன் அத். 7: வசனம் 64ல் காண்க. மூஸா (அலை) அவர்களுக்கு இறைவன் கடலை வசப்படுத்திக் கொடுத்த விபரம் அத். 2: வசனம் 50ல் தரப்பட்டுள்ளது.

1842. இறைவன் இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு நெருப்பை வசப்படுத்திக் கொடுத்த விவரம் திருகுர்ஆன் அத். 21: வசனம் 69ல் சொல்லப்பட்டுள்ளது.

1843 - 1844. யஹ்யா (அலை) அவர்கள் தங்களைக் கொல்லவந்த யூதர்களிடமிருந்து தப்பி ஓடுகையில் ஒரு மலை பிளந்து, தன்னுள் அவர்களை ஏற்று மறைத்துக்கொண்டது.

***தலைப்பு : ஜனங்களால் . . . தீங்குகள் :*** *மேலேயுள்ள 1830 - 1837ம் பாடல்களில் சொல்லப்பட்ட கருத்தை இந்தத் தலைப்பில் தரப்பட்டுள்ள பாடல்கள் விவரிக்கின்றன.*

*1857 - 1862. உன்னைப் போற்றுபவன் ஏன் அப்படிச் செய்கிறான் என்பதற்கான நோக்கத்தை நீ அறிந்துகொள்ளாதவரை அந்தப் புகழால் உனக்கு எந்தத் தீங்கும் உண்டாக முடியாது என்று நீ எண்ண வேண்டாம்! உண்மையில், அவன் உன்னைப் புகழ்வதும், அவன் உன்னை இகழ்வதால் உண்டாக்குவது போன்ற அளவில் கெடுதலைத்தான் சேர்க்கிறது. உன்னை இகழ்பவன் விஷயத்தில் அதன் வேதனையை நீ உடனே உணர்கிறாய்; அவன் அப்படிச் செய்வது ஏன் என்று நீ அறிந்திருந்தும் அந்த இகழ்ச்சி உன் கோபத்தைக் கிளறிவிடுகிறது. ஆனால், உன்னைப் புகழ்பவன் விஷயத்திலோ அதன் தீய பலாபலன் மறைந்திருப்பதால் அதை உணராமலே நீ மகிழ்ச்சியடைகிறாய்.*

*1865. புகழ்ச்சியின் தீய பலாபலனும் (மறைவாகவேனும்) நீண்ட நேரம் நீடிக்கவே செய்கிறது. இகழப்படுவதன் எதிரொலியை எண்ணிப்பார்த்தால்தான் புகழப்படுவதன் தீய எதிரொலியும் நமக்கு நிதானப்படும்.*

*1871. அதாவது, நீ பேயாய் இருந்தால் ஓடுவதுபோல, அவர்கள் உன்னைக் கண்டதும் வெகுண்டு ஓடுவர்.*

*1873. அவன் தன் துடிப்பான பருவத்தைக் கடந்த பின் - செல்வத்தை இழந்தபின் - அவனுடைய அன்பர்கள் அவனைப் புறக்கணித்துவிடுவர்; ஷைத்தானுக்கும் அவனால் பயனொன்றும் இல்லாது போய்விடும்.*

*1877. "(நயவஞ்சகர்கள்) ஷைத்தானைப் போன்றுள்ளனர்; அவன் (ஷைத்தான்) மனிதனை நோக்கி, 'நீ நிராகரிப்பவனாகு' என்று கூறி, அவன் நிராகரிப்பவன் ஆனபின், நான் உன்னைவிட்டு விலகிவிட்டேன். . ." (அத். 59: வசனம் 16) என்ற திருகுர்ஆன் வசனத்தின் கருத்து இங்கே எடுத்தாளப்பட்டுள்ளது.*

***தலைப்பு : "இறைவன் நாடியது. . ." விளக்கம் :*** *உடலின் இச்சைகளைவிட்டும், கீழான மனத்தின் தூண்டுதல்களை விட்டும் விடுதலையடைவது என்பது, மற்ற விஷயங்களைப் போல், இறைவனுடைய சித்தத்தைப் பொறுத்ததுதான்.*

*1890. முன்னுள்ள 388ம் பாடல் பார்க்க.*

*1898. இதில், கிளைகள் என்பது எண்ணங்களையும், இலைகள் வார்த்தைகளையும், மலர்கள் மெய்ஞ்ஞான அறிவையும் குறிப்பதாகக் கொள்ளலாம்.*

*1899. இந்த "மஸ்னவீ" சம்பூரண மனிதரான ஹுஸாமுத்தீனால் (அவரிலுள்ள பிரபஞ்ச ஞானத்தால்) உணர்ச்சியூட்டப்பட்டது. அவர் இதயம் தெய்வீக அகமியங்கள் நிறைந்த ஒரு பூங்காவாகும். எனவே, அந்தப் பூங்காவிலுள்ள ஆத்மீக மலர்களின் நறுமணம் இந்த 'மஸ்னவீ'யில் ஊடாடுவதைக் காணலாம்.*

*1902. காணாமல்போன தம் மகன் யூஸுபு (அலை) அவர்களுடைய சட்டையை முகர்ந்ததும் யாக்கூப் (அலை) அவர்கள் தாங்கள் இழந்த கண் பார்வையை மீண்டும் பெற்றுக் கொண்டார்கள். (திருகுர்ஆன் அத். 12: வசனங்கள் 84, 96 பார்க்க.)*

*1904. யூஸுபு நபி (அலை) அவர்களைத் தன்னகத்தே தெய்வ அன்பைத் தேக்கி வைத்துள்ள மெய்ஞ்ஞானியாகவும், யாகூப் நபி (அலை) அவர்களைச் சாதகர் அல்லது காதலன் ஆகவும் மௌலானா காட்டுகிறார்கள். காதலியின்முன் காதலன் தன்னுடைய 'தான்' என்ற நிலையை வற்புறுத்த முயலாமலிருப்பதே முறையாகும்.*

*1906 - 1907. இவ்விரண்டு பாடல்களும் ஹக்கீம் ஸனாயியின் 'ஹதீகா'விலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளன. அகந்தையும், அகம்பாவமும் வெளியில் காட்டப்படும்போது முகவிகாரமும் அதிகப்படுகிறது. என்பது கருத்தாகும்.*

*1910. ஈஸா (அலை) அவர்களுடைய மூச்சு - தெய்வக் கருணையால் உண்டாகும் உதிப்பு அல்லது, மெய்ஞ்ஞானி ஒருவருடைய ஆத்மீகப் பார்வையால் உண்டாகும் மாறுதல்.*

*1911. நீ மண் தரைபோல் பணிவுடனும், தாழ்மையானவனாகவும், விஷயத்தை மனத்தில் வாங்குபவனாகவும் ஆகிவிடு.*

***தலைப்பு : ஹஜ்ரத் உமர் (ரலி) . . . . .கதை :*** *மேலேயுள்ள நான்கு பாடல்களில் சொல்லப்பட்ட விஷயத்துக்கு இந்தக்கதை மேற்கோளாக அமைந்துள்ளது. ஆத்மாவானது தனக்கு மரித்ததாக ஆவதன்மூலம் சாந்தியையும், அமரத்தன்மை வாய்ந்த பாக்கியத்தையும் அடைவதற்காக இம்மையின் சுகபோகங்களைவிட்டு முகம் திருப்பிக்கொள்வதை இது விவரிக்கிறது.*

*1916. இஸ்ராபீல் (அலை) - முன்னுள்ள 398 -ம் பாடலுக்கான விளக்கவுரை காண்க.*

*1920. மெய்நிலைகண்ட அனுபவத்தின் பொருளையும், இயல்பையும் மெய்ஞானிகளையன்றி மற்றவர்கள் அறியமுடியாது.*

*1924. திருகுர்ஆன் அத் 55: வசனம் 33 வருமாறு: "மனித இன, ஜின்னு இனக் கூட்டத்தாரே, வானங்களுடையவும், பூமியுடையவும் பிரதேச எல்லைகளை நீங்கள் கடந்துசெல்ல முடியுமாயின், செல்லுங்கள். ஆனால், (அதற்கான நமது) அனுமதியைப் பெற்றாலன்றி உங்களால் அவற்றைக் கடக்க முடியாது." "கடந்து செல்வது" என்பதற்கு திருகுர்ஆன் விளக்கவுரையாசிரியரான பைளாவி, "இறைவனையும், அவனுடைய விதிப்பையும்விட்டு ஓடுவது" என்று பொருள் கொள்வதுடன், "வானத்திலும், பூமியிலும் யாது உள்ளது என்று அறிவதற்காக அவற்றைத்தேடி ஓடுதலையும் இது குறிக்கும்" என்றும், "ஆனால், அதற்கான ஞானம் தெய்வ நல்லுதவியால்தான் கிடைக்கமுடியும்" என்றும் எழுதுகிறார்கள்.*

*ஆனால், ஞானி நஜ்முத்தீன் குப்ரா இந்த வசனத்துக்கு நல்கியுள்ள கருத்துரையாவது: "ஜடதத்துவமான, அகமியமான சக்திகளே, நீங்கள் ஆத்மீக வானுலகுக்கும் ஜடதத்துவ மண்ணு லகுக்குமாகப் பிரிந்து போக முடியுமாயின் பிரிந்து போகலாம். ஆனால், நமது அதிகாரமும், கட்டளையுமின்றி நீங்கள் அவ்விதம் போக இயலாது." அல்லது, "மெய்நிலைகண்ட உதிப்பின் வழி காட்டலின்றி மேலேயும், கீழேயுமுள்ள உலகங்களின் விஞ்ஞானங் களை நீங்கள் எய்திவிட முடியுமாயின் அவ்விதம் எய்திக்கொள்ள லாம். ஆனால், தெய்வ உதிப்பின் உதவியின்றி நீங்கள் இதில் ஒருகாலும் வெற்றிகாணமுடியாது." மௌலானா அவர்களின் கருத்தும் இதையே ஒட்டியதாயுள்ளது.*

*1925. நாஸ்தியின் - அல்லாஹ் அல்லாததோடு பிணைந்துள்ள வர்கள். இந்த நிலை யதார்த்த ஜீவிதத்தையே மறுப்பதாகும்.*

*1926. "லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற மூலமந்திரத்தைக்கூறி மற்றவையான தன்மையை உங்கள் மனத்தை விட்டே அப்பாற் படுத்துங்கள்."*

*1933. அதாவது, நாங்கள் ஆத்மீகமான புத்துயிர் பெற்ற அனுபவத்தை அடைந்தோம்.*

*1934. இந்தப் பாடலில் இறைவனின் குரலைப்பற்றிக் குறிப் பிடப்பட்டுள்ளது சம்பந்தமான திருகுர்ஆன் வசனம் வருமாறு : "தன்னோடு இறைவன் (நேருக்கு நேர்) பேசும் தகுதியை மனிதன்*

*பெற்றிருக்கவில்லை; எனவே, (வஹி எனும்) வெளிப்பாடுகள் மூலமோ, திரைக்குப் பின்னிருந்தோ அல்லது தன் அனுமதி கொண்டு தான் வெளியிடுவதை அறிவிக்கும் தூதர் ஒருவரை அனுப்புவதன்மூலமோ (அவன் மனிதருடன்) பேசுகிறான்." (அத். 42: வசனம் 51)*

*மரியம் (அலை) அவர்கள்மீது சொரிந்தது - ஈஸா (அலை) அவர்களை மரியம் (அலை) அவர்கள் தெய்வ ஜீவன்மூலம் கருத்தரித்ததைக் குறிக்கிறது. (திருகுர்ஆன் அத். 21 : வசனம் 91ம், அத். 66: வசனம் 12ம் பார்க்க.) இறைவன் சாதாரணத் தாய் - தகப்பன் நியதிப்படியன்றி, தன் 'குன்' (ஆகுக!) என்ற வார்த்தையின் அத்தாட்சியாகத் தகப்பனின்றி ஈஸா (அலை) அவர்களை உண்டாக்கினான். எனவே, அவர்கள் அவனுடைய அத்தாட்சியாகவும் விளங்குகிறார்கள். இதுபோன்றே, இறைவனுடைய பேச்சு ஒருவர் இதயத்தில் புகுமாயின், தெய்வ உதிப்பு அவர் ஆத்மாவில் நுழையுமாயின் அவருள் ஈஸாவுக்கொப்பான ஆத்மீகச் சிசு ஒன்று ஜனனமாகிறது; இது மரித்தோரை உயிர்ப்பிக்கும் சக்தி வாய்ந்ததாகும்.*

*1936. இங்கே நல்லடியார் என்றது நபிபெருமான் (ஸல்) அவர்களையும், அவர்களுடைய ஆத்மீக வாரிஸ்களான மெய்ஞானக் குரு பரம்பரையையுமாகும். "திண்ணமாக, இறைவன் தன் அடியார்களின் நாவுமூலம் சத்தியத்தை எடுத்துரைக்கிறான்" என்ற கருத்துள்ள ஹதீஸ் ஒன்றுண்டு.*

*1938. இங்கே இறைவன் பேசுவதாக வரும் வாசகம் ஹதீஸ் குத்ஸியில் உள்ளதாகும். அது வருமாறு : "இறைவன் சொன்னான் : 'என் அடியான் அவன்மீது கடமையாக்கப்பட்ட வணக்கங்களை நிறைவேற்றுவதன் மூலம் என்னை அணுக விழைவதைப்போல் வேறு எவ்வழியிலும் என்னை அணுகுவதை நான் விரும்புவதில்லை; என் அடியான், நான் அவனை நேசித்தாலன்றித் தன் இஷ்டப் பூர்வமான வணக்கங்களின்மூலம் மட்டும் என்னை அணுகிவிட முடியாது. அவனை நான் நேசிக்கத் தொடங்கியதும் அவன் என்னால் கேட்கும் அவனுடைய காதாகவும், என்னால் காணும் அவன் கண்ணாகவும், என்னால் பேசும் நாவாகவும், என்னால் எடுக்கும் கரமாகவும் நான் ஆகிவிடுகிறேன்." கடமையான வணக்கங்களை நிறைவேற்றுகையில் மெய்ஞானி 'பனா' ஆனவர் ஆகவும், இஷ்டப்பூர்வமான வணக்கங்களை நிறைவேற்றுவதால் அவர் 'பகா' ஆனவர் ஆகவும், இறைவன்மூலம் செயல்படுபவராகவும் ஆகிவிடுகிறார்.*

1939. "இறைவனுக்குச் சொந்தமானவன் அவனோடு தரிபட்டுவிடுவான்" என்ற கருத்துள்ள ஹதீஸுக்கான தத்துவப் பொருளாவது : இறைவனோடு 'பனாவில்' தன்னை முற்றும் இழந்தவன், 'பகா'வில் அவனோடு இணைக்கப்பட்டவனாவான்.

1940. ஏகத்துவ உணர்வு உண்டான நிலையில் தெய்வ - மானிட அம்சங்கள் ஒன்றுடன் ஒன்று மாற்றிக்கொள்ளக்கூடியவை.

1942. இருள் - அறியாமை, அவிஸ்வாசம், பாவம் ஆகியவை களான இருள்.

1943 - 1944. இறைவனால் ஆதம் (அலை) அவர்களுக்கு நாமங்கள் கற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. (முன்னுள்ள 1012ம் பாடலுக்கான விளக்கவுரை காண்க.) மற்றோர்க்குத் தெய்வ இயல்பின் மர்மங்களைக் கற்றுத் தரும் சம்பூரண மனிதராக ஆதம் (அலை) அவர்கள் இங்கே காட்டப்பட்டுள்ளார்கள்.

1945. ஜாடி - இறைவனையும், கிண்ணம் - ஞானியையும் குறிக்கின்றன.

1947 - 1949. சகல வெளிப்பாடுகளுக்கும் மூலஸ்தானமானது நூரெ-முஹம்மதிய்யாவாகும். சகல நபிமார்களும், நாதாக்களும் இந்த ஒளியிலிருந்தே தமது அக ஒளியைப் பெற்றுக்கொண்டனர். இந்த ஒளியைப்பற்றிய விளக்கத்தை முன்னுள்ள 425ம் பாடலுக் கான விளக்கவுரையில் காணலாம்.

**தலைப்பு : "உங்கள் இறைவன் . . ." . . . விளக்கம் :** இந்தத் தலைப்பிலுள்ளது ஒரு ஹதீஸின் முற்பகுதிதான். அதன் பிற்பகுதி வருமாறு : "ஒருகால் அந்த மூச்சுக்களில் ஒன்று உங்களை வந்தடையலாம்; அதன்பின் நீங்கள் என்றுமே துயரடைய மாட்டீர்கள்." இந்தத் தலைப்பில் தெய்வ உதிப்பு பற்றிப் பேசப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட இதே கருத்துள்ள வேறொரு ஹதீஸ் உண்டு. "அதாவது தெய்வக் கருணையின் இனிய மூச்சுக் களில் அக்கறை காட்டுங்கள். (அவை உங்களை அடைய வழி காணுங்கள்.)" சன்மார்கத்தின் கட்டாயக் கடமைகளைப் பூரணமாக நிறைவேற்றி அதுகொண்டு இவ்விதமாக வேண்டும் என்று மார்க்க அறிஞர்கள் இதற்கு விளக்கம் நல்குகிறார்கள். மௌலானா அவர்களோ மெய்ஞானியரின் ஆத்மீகப் படிப்பு, செல்வாக்கு, அருள் ஆகியவைபற்றிப் பேசுகிறார்கள்.

1955. நெருப்பு - கீழான மனத்தின் இச்சாபாசங்கள்.

1958 - 1959. இவ்விரண்டு பாடல்களிலும் பிரஸ்தாபிக்கப் பட்டுள்ள திருகுர்ஆன் வசனம் வருமாறு : "திண்ணமாக, நாம் அந்த

அமானிதத்தை வானங்கள், பூமி, மலைகள் ஆகியவைகள் ஏற்றுக்கொள்ளுமா என்று (அவற்றிடம்) கேட்டோம்; ஆனால், அவை அதைத் தாங்க மறுத்துப் பின்வாங்கிவிட்டன. மனிதன் அதை ஏற்றுக்கொண்டான். அந்தோ, அவன் அநீதிக்காரனாகவும் அறிவிலியாகவும் ஆகிவிட்டான்!" (அத். 33: வசனம் 72).

இந்த வசனத்தின் கருத்துரைபற்றி விரிவுரையாசிரியர்களிடை அபிப்பிராய பேதம் உண்டு. (பைளாவியின் விரிவுரை பார்க்க) ஞானி நஜ்முத்தீன் குப்ராவின் விரிவுரை வருமாறு : " 'மாபெரும் இன்பம்' என்று (அத். 4 : வசனம் 13ல்) விவரிக்கப்பட்டுள்ள இந்த 'அமானிதம்' என்பது உண்மையில் இறைவனில் நாஸ்தியாவதும், இறைவனில் நித்தியத்துவம் பெறுவதுமாகும். அதன்மூலம் உடனடியான தெய்வக் கருணை பொழியப்படுகிறது. இது மனிதன்மீது மட்டுமே சுமத்தப்பட்ட அமானிதமாகும். அதாவது, பிரபஞ்சத்தின் இதயமாக விளங்கும் சம்பூரண மனிதன்மீது சுமத்தப்பட்டுச் சிருஷ்டிகள் அனைத்துக்கும் அவன்மூலம் அருளப்படுகிறது. மனிதன்மீது மட்டும் பொறுப்பாக்கப்பட்ட பிரதிநிதித்துவத்தின் (கிலாபத்தின்) மர்மம் இதுதான். மனிதன் அநீதிக்காரனாய் இருக்கக் காரணம் தன்னையே நாஸ்தியாக்கும் (தன் நப்ஸை பனாவாக்கும்) ஒரு பொறுப்பை அவன் ஏற்றுக்கொண்டிருப்பதுதான். (இதனால் தன் நப்ஸுக்கு அதாவது தனக்கு அவன் அநீதியிழைத்தவன் தானே!) அவன் அறிவிலியாகக் காரணம் தன்னைப் புணரும், உண்ணும், பருகும் மிருகமாகவே அவன் எண்ணியிருப்பதாலும் இந்த மிருகத் தோற்றம் வெறும் மேல் தொலிதான், ஆத்மாவே அதனுள் இருக்கும் பருப்பாகும் என்பதையும், அந்த ஆத்மாவெனும் பருப்பிலும் தெய்வக் காதலே சத்தாய் உள்ளது என்பதையும் அவன் அறியாத வனாய் இருப்பதாலுமேயாகும். உண்மையில் அவன் இறைவனின் அன்பன், இறைவனை நேசிப்பவன். இறைவனையன்றியுள்ள எதையேனும் நேசிப்பவன் தன்னை அறியாதவனாவான். தன்னை யறிந்தவனோ தன் இறைவனை அறிந்தவனாவான். இவ்விதம் இறைவனை அறிவது எந்த இணைவைத்தலுமின்றி ஏகத்துவமான நிலையிலுண்டாகும் அறிவாகும்."

பொதுப்படையாக இந்தத் திருவசனத்துக்கு நாம் இவ்விதம் பொருள் கொள்ளலாம் : மனிதன் மட்டுமே ஏற்றுக்கொண்ட 'அமானிதம்' இஸ்லாத்தின்மீது மெய்யுறுதி கொள்ளுதலும், இறைவனின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிதலுமாம். எனவே, மெய்ஞானியர் அது மெய்விஸ்வாசத்தின் சாராம்சமான மெய்யறிவு (மஃரிபா) தான் என்கின்றனர். அல்லது மனிதன் இறைவனின்

பிரதிநிதியாக ஆக்கப்படக் காரணமாக அவனிடம் தெய்வக் கருணையினதும், அன்பினதும் உதிப்பு அருளப்பட்டது; அத்துடன், இறைவனின் கல்யாண குணங்களும் அவனில் பிரதிபலிக்கும்படி செய்யப்பட்டது. எனவே, இந்த உதிப்பே அவன் பெற்றுள்ள அமானிதம் என்பாருமுண்டு. பிரபஞ்சத்தில் இறைவனின் சொரூபத்தில் படைக்கப்பட்ட மனிதனையன்றி வேறு யாரும் எதுவும் இந்தப் பொறுப்பை ஏற்கத் தகுதியுடையதாய் இருக்கவில்லை.

1960 - 1961. புலனின்பங்களால் அலைக்கழிக்கப்படும் இதயத்தில், அல்லது இறைவனையன்றியுள்ள எதனுடனும் தொடர்புள்ள இதயத்தில் தெய்வ மூச்சுக்கள் ஏறமாட்டா.

1960. தெய்வீகச் சுடரின் வெளிப்பாடு எதுவும் இரண்டு தடவை ஒரேமாதிரியாக வெளிப்படுவதில்லை. அதனால், "அது வேறு தோற்றத்தில் வந்தது" என்கிறார்கள்.

ஒரு பிடி உணவு - "வயிறு நிறைந்துவிட்டால் அறிவு ஊமையாகி விடுகிறது" என்ற ஹதீஸின்படி உணவினால் உண்டான தடை மட்டும் இங்கே குறிப்பிடப்படவில்லை. ஆத்மீக முரண்பாடான எண்ணங்களையும், மனிதனிடமுள்ள குறைபாடுகளையும் இது குறிப்பதாகக் கொள்ளலாம்.

1961. அதாவது, இச்சாபாசங்களாலும், இம்மையின் மோகத்தாலும் உடலுள் கட்டிப்போடப்பட்டுள்ள பரிசுத்த ஆத்மாவை அந்தச் சிறையைவிட்டு மீட்க வேண்டியது அவசியமாகும்.

அறிவிற் சிறந்த பெரியார் லுக்மான். திருகுர்ஆனில் முப்பத்தோராம் அத்தியாயமே இவர்களுடைய பெயரைத் தாங்கியதாய் இருக்கிறது. "நாம் லுக்குமானுக்கு அறிவைக் கொடுத்தது உண்மை" (வசனம் 12) என்று, பிரஸ்தாப அத்தியாயத்தில் அவர்களைக் குறித்து இறைவனே அறிவித்துள்ளான். அவர்கள் நீக்ரோ அடிமையாக இருந்தவர்கள் என்றும், ஈசாப்புக் கதைகள் என்ற கதைகளை எழுதியவர்களே அவர்கள்தாம் என்றும் சொல்லப்படுகிறது. இங்கே லுக்மான் என்பது ஆத்மாவையாகும். உடலிச்சைகளுக்கு ஆத்மா பலியாகி வருவது இங்கே சுட்டிக் காட்டப்பட்டது.

1962. ஆத்மாவின்மீது சதையாகிய முள் குத்திக்கொண்டிருப்பது சம்பந்தமான உவமையை முன்னுள்ள 150 - 155ம் பாடல்களில் காணலாம்.

1963 - 1964. தெய்வீக மூலாம்சத்தையுடைய பரிசுத்த ஆத்மா உன்னுள் இருக்கிறது என்பதையும், அதுவே உண்மையான அகம் என்பதையும், இந்த ஜடதத்துவ ஜீவிதத்தால் உண்டான பிரமையே முள் என்பதையும் அறியக்கூடிய அகத் திருஷ்டி உனக்கு ஏற்பட வில்லை. தாவர வர்க்கத்தில் முள் என்பது மிகவும் அடித்தளத் திலுள்ள உயிராகும்; பேரீச்சம்பழம் மிகவும் உன்னதமான படித்தரத்திலுள்ளதாகும்.

1966. ஒட்டகம் - உடல். அதன்மீது சவாரி செய்பவர் - ஆத்மா. முஸ்தபா நபி (ஸல்) அவர்களுக்குப் பிறந்த ஒருவர் - ரூஹெ - முஹம்மதிய்யாவிலிருந்து உண்டான மனிதன் ஒருவன். ரூஹெ முஹம்மதிய்யா - சிருஷ்டிக்கப்பட்ட யாவுக்கும் மூலாதாரமாகும்; சகல ரூஹுகளுக்கும் (ஆத்மாக்களுக்கும்) அது தந்தையாகும். "நான் இறைவனின் ஒளியாவேன்; மெய்விஸ்வாசிகள் என் ஒளியிலிருந்து உண்டானவர்களாவர்" என்று நபிபெருமானார் அருளியுள்ளார் கள்.

1972 - 1991. 'தான்' என்னும் முள்ளை அகற்றுவதெப்படி? அதன்பின் ஒன்றுபடுத்தும் இயல்பால்தான் அது சாத்தியமாகும். இத்தகைய அன்புடையாரில் மகா உன்னதமாக நின்றிலங்கியவர்கள் நபிபெருமானாரே ஆவார்கள்.

1972. நபிபெருமானார் அன்னை ஆயிஷாவை அவருடைய சிவந்த நிறம் காரணமாக 'ஹுமைரா' என்று அழைப்பதுண்டு. இங்கே மௌலானா அவர்கள் தெய்வீக ஜீவனையே இவ்விதம் குறிப்பிடுகிறார்கள். காதலன் காதலியுடன் சல்லாபிப்பதுபோல, மெய்ஞானி தெய்வீக ஜீவனோடு உறவு கொண்டுள்ளார். "பெண்ணில் இறைவனைக் காண்போர் அவனை மிகப் பரிபூரண மாகத் தரிசிப்போராவர்" என்று ஷைகுல் அக்பர் இப்னுல் அரபி (ரஹ்) அவர்கள் தங்கள் 'புஸூ'ஸில் எழுதுகிறார்கள்.

1973. சூனியக்காரன் தன் சொல்படி நடக்க வைக்க விரும்பும் மனிதனுடைய பெயரைக் குதிரை லாடத்தில் எழுதி, அதை நெருப்பில் போட்டு மந்திரோச்சாடனம் செய்வானாம். இரத்தச் சிவப்பாகச் சூடேறிய லாடம், அதேபோன்ற உணர்ச்சியை அதன்மீது பேர் எழுதப்பட்டிருப்பவன் மனத்திலும் உண்டாக்கி அவனைச் சூனியக்காரனுக்கு வசப்பட்டவனாக்குமாம். இந்தப் பின்னணியில், இந்தப் பாடலின் பொருளாவது : "உன் அழகால் நான் வசமாகி, உனக்கு அருகில் ஈர்க்கப்படுவதற்கான மந்திரோச் சாடனத்தைச் செய்! அதன்மூலம் பரிசுத்தக் காதலின் சுடரொளி என் உடலியல்பு என்ற மலையை ஊடுருவிச் சென்று அதை முற்றும்

ஆத்மீகமானதாக ஆக்கட்டும்." ஞான நாதர்களின் சடலங்கள் இதன்மூலம் பரிசுத்தமாகவே இருப்பதைப் பின்னுள்ள 2000ம் பாடல் எடுத்தியம்புகிறது.

இதற்கு முந்திய பாடலுக்கும் இதற்கும் கீழ்க்காணும் விதமாக வியாக்கியானம் செய்வோரும் உண்டு: "உடலின் இயல்புகளை அனுபவப்பூர்வமாக அறிந்துகொள்வதற்காகவே நபிபெருமானார் 'லாஹூத்' என்ற தெய்வத் தன்மையின் தளத்திலிருந்து 'நாஸூத்' என்னும் மனிதத் தன்மையின் தலத்துக்கு இறங்கிவந்தார்கள். அப்படி இறங்காமல் அவர்கள் தங்கள் லக்ஷியத்தைப் பூர்த்தி செய்ய முடியாது. எனவே, அவர்கள் ஹுமைராவின் வனப்பினால் பரவச மடைய விழைந்தார்கள். மெய்ஞானம் என்ற ரத்தினங்களையும், சத்தியத்தின் மர்மங்கள் என்ற வைடூரியங்களையும் மனிதனுக்குப் புலனாகும் பல்வேறு வர்ணங்களிலும், படிவங்களிலும் வெளியிடு வதற்காகத் தெய்வீக உலகிலிருந்து அவர்கள் கீழே கொண்டுவரப் பட்டார்கள்." இவ்விதம் பொருள் கொண்டால் 'ஹுமைரா' என்பதற்கு ஜடதத்துவ அழகு (ஹுஸ்னு; இதற்கு எதிரிடையான ஜமால் என்பது பரிபூரணப் பேரழகாகும்) என்று பொருள் கொள்ள வேண்டும். ஆனால், அப்படியும் அடுத்த பாடலில் 'ஹுமைரா' வென்பது தெய்வீக ஜீவனையே குறிப்பதாக வருவதால் நாமும் மேலே முதலில் சொன்ன பொருள்தான் அத்துடன் இணைந்து வருவதாயுள்ளது.

1976. உலர்ந்த தன்மையும் ஈரமான தன்மையும் கலந்த ஜீவன் - ரூஹெ ஹைவானி என்னும் மிருக ஜீவன் இது. இது சூக்கும உடல் (ஜிஸ்ம லதீப்) எனப்படும். இது இதயத்தில் தொடங்கி இரத்தக் குழாய்மூலம் மூளையை அடைகிறது. இதற்கு உடலின் இயல்புகள் இருப்பதால் இதுவும் உலர்ந்த தன்மை, ஈரம், சூடு, குளிர்ச்சி ஆகிய இயல்புகளை உடையவையான பூதங்களால் ஆனது என்பதே பொருத்தமாகும்.

1978. மனித ஜீவன் (ரூஹெ இன்ஸானி) இறைவனிடமிருந்து நேரடியாக வருவதாகும். சம்பூரண மனிதனில் அது நன்மை நிறைந்த ஆத்மாவாக, உலகம் முழுவதுக்கும் நன்மை நிறைந்த ஆத்மாவாக, உலகம் முழுவதுக்கும் நன்மை அருளுவதாக இருக்கிறது.

தன்னகத்தே நன்மையானதை அடையப்பெறாதவன் நிரந்தர மான இன்பத்தை அடைய முடியாது.

1980. ஆத்மலோகத்தில் இறைவனிடம் செய்துகொடுத்த ஒப்பந்தப்படி (திருகுர்ஆன் அத். 7: வசனம் 172 பார்க்க.) முற்றும்

நடப்பதன்மூலம் கீழான இயல்புகளை இழந்தவனாகி, பரிபூரண நன்மையும், அன்புமான ஜீவனின் இயல்பை நீ அடையப் பெற்றவனாகிறாய். (சர்க்கரை பரிபூரண நன்மையும் அன்புமான ஜீவன். அதன் இயல்பைப் பெறும் ஆத்மாவும் அதுபோன்றதே யன்றோ!)

1982. பகுத்தறிவு - ஏன் எப்படி என்ற விவாதச் சர்ச்சையில் மூழ்கடிப்பதாகும். எனவே, அது ஷைத்தானின் குணமாகவும், ஆதமின் குணமான அன்புக்கு நேர் எதிரிடையானதாகவும் பேசப்படுவதுண்டு.

1983. பகுத்தறிவு இயல்பில் அமரர்களைப்போல் வானுலகின் பரிசுத்த வெளிச்சம் போன்றதாகும். ஆனால், அதனுடைய 'தான்' என்ற அகந்தை அந்த அமரனை ஷைத்தானாக ஆக்கிவிட்டது.

1984. மெய்யறிவு சம்பந்தப்பட்டவரை பகுத்தறிவால் ஒன்றும் சொல்ல முடிவதில்லை; அதை மறுத்து வேண்டுமானால் பேசும்.

1985. "மரணிக்குமுன் மரணமடை" என்ற ஹதீஸுக்கேற்ப, தன் உடல் மரணிக்குமுன் 'தான்' என்பதன் விஷயத்தில் அது மரணித்த தாக - தன்னை அழித்ததாக - ஆக்காததால் அது இவ்வித நிலையை அடைந்தது.

1986. ஜீவன் - முஹம்மதின் ஒளி அல்லது ஜீவன் அல்லது யதார்த்தம். இதிலிருந்து சகல நபிமார்களும் மெய்ஞானியரும் உதிப்பை அடையப்பெறுகின்றனர்.

ஹஜ்ரத் பிலால் (ரலி) அவர்களைத் தொழுகை அழைப்புக் குரல் எழுப்பச்சொல்லி, அந்த ஒலியில் நபிபெருமானார் தங்கள் கவலைகளை மறந்து பரவசமாவதுண்டு. ஹஜ்ரத் பிலால் (ரலி) இஸ்லாமிய உலகின் முதல் 'முஅத்தீன்' (தொழுகை அழைப்புக் குரல் எழுப்புபவர்) ஆவார்கள். நீக்ரோவான இவர்கள் ஆரம்பகால முஸ்லிம்களுள் ஒருவராய் இருந்து பல கஷ்டங்களை அனுபவித் தார்கள்.

1989 1991. கைபர் சண்டையில் வெற்றிபெற்றுவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்த முஸ்லிம்கள் இரவின் பின்நேரத்தில் வழியில் தங்கினர். அங்கே இந்தப் பாடல்களில் குறிப்பிடப்பட்ட சம்பவம் நடந்ததாகச் சொல்லப்படுகிறது. அந்த இரவில் அங்கே பாடி வீட்டில் பெருமானாருக்குக் கிடைத்த ஆத்ம இன்பத்தை மௌலானா அவர்கள் இறைவனோடு ஆத்மா மணம் புரிந்து கொண்டதாகக் கற்பிக்கிறார்கள்.

1992. இறைவன் காதலன் ஆகவும், காதலியாகவும் இருக்கிறான். எந்த அம்சத்தில் அவனை நோக்குகிறோமோ அதற்கேற்ற தோற்ற முடையவனாய் அவன் விளங்குகிறான்.

1996 - 1997. பரிபூரண நன்மையானவனான இறைவன் சம்பந்தப்பட்டவரை எதுவுமே முற்றும் தீமையானதாய் இல்லை. ஒரு பொருளில் அதை நன்மையானதாக்கும் நல்லியல்பு ஏதும் இல்லையாயின், அது தீமையானதாய் இருக்கிறது; அந்த இயல்பு அதில் வெளிப்பட்டால் அது நன்மையானதாய் விளங்குகிறது. இறைவன் எதையுமே ஒரு நோக்கமின்றிச் சிருஷ்டிக்கவில்லை. தீமை உண்டென்பது இறைவனுடைய சர்வ சக்தத் தன்மையையும், அவன் இயல்பிலுண்டான வரம்பற்ற சம்பூரணத் தன்மையையும் காட்டு வதாகும். ஆனால், அவன் சகல செயல்களையும் அவை செயல்கள் முறையிலேயே சித்தப்படுத்துகிறான், உத்தரவிடுகிறான், சிருஷ்டிக் கிறான். எனினும், அவற்றை நன்மையானவை அல்லது தீமை யானவை என்று அவன் சித்தப்படுத்தவோ, உத்தரவிடவோ, சிருஷ்டிக்கவோ செய்வதில்லை. இவை மார்க்க அடிப்படையில் ஆதரிக்கப்பட்ட, அல்லது புறக்கணிக்கப்பட்ட செயல்களுக்கு இறைவனாலோ நம்மாலோ கொடுக்கப்பட்ட பெயர்கள்தாம். விஸ்வாசமற்ற தன்மை இறைவனால் கட்டளையிடப்பட்டதாய் இருக்குமாயின் ஞானமாகும்; ஆனால், மனிதர்கள் சம்பந்தப் பட்டவரையோ அது இறைவனின் சட்டத்துக்குக் கீழ்ப்படியாமை யும், பெரும் பாவமுமாகும்.

2002. நர்த் என்ற விளையாட்டில் ஒரு வட்டம் எண்களின்மீது வீசப்படும். அது எந்த எண்ணில் விழுகிறதோ அது விளையாடு பவன் கணக்கில் கூட்டப்படும். அதில் சில எண்கள் எந்த மதிப்புமற்ற கற்பனை எண்களாயும் இருப்பதுண்டு. இவையே இங்கே பிரஸ்தாபிக்கப்பட்டன.

2003. ஞானியரின் மேனி தெய்வீகமான பரிசுத்தத்தையும், அழகையும் பெற்றுவிட்டது. உப்பு என்பது ஆத்மீகப் புத்துயிருக் கான சின்னமாகும்.

2004. நபிபெருமானாரின் அழகையும், அவர்களுடைய மொழி நயத்தையும் குறிக்கும் இரண்டு ஹதீஸ்கள் வருமாறு: "என் சகோதரர் யூஸுப் (புறத்தில்) என்னைவிட அதிக அழகுடையவர் களாயிருந்தார்களாயினும், (அகத்தே) நான் யூஸுபைவிட அதிக அழகுடையவனாய் இருக்கிறேன்." "நான் அரபிகள் யாவரிலுமே மிகுந்த சொல்வன்மை மிக்கவனாவேன்."

2005. நபிபெருமானாரின் அத்தகைய வாரிஸ்கள் - ஹகீகத்தெ முகம்மதிய்யாவின் வாரிஸ்கள் - சம்பூரணம்பெற்ற ஞானநாதர்களாவர்.

2006. இதே கருத்தை முன்னுள்ள 405 - 406 -ம் பாடல்களில் காணலாம். மெய்ஞானியர் கீழானவர்களுடைய பார்வையில் படாமல் மறைந்திருக்கின்றனர். அவர்களைக் காண்பதற்கு நீ இடம் என்ற சமவெளியைவிட்டு வரம்பற்றதைப் பற்றிய தியானத்தில் லயித்தவனாக வேண்டும். அங்கே (இடமற்றதில்) முன்னே, பின்னே என்பதெல்லாம் ஏது? ஆனால், இட வரம்புக்குள் இருந்துகொண்டு 'முன்'னையும் பின்னையும் பற்றி யோசிக்கும் ஆத்மா, (பிராணி ஆத்மா) இவ்வித நிலையை அடைவது எப்படி?

2010. சாரத்தில் மனிதன் ஸ்தூலமற்றவன்; அவனுடைய ஆத்மா புறத்தே ஜீவிதமற்றதாய் இருப்பதால் சகல இடவரம்புகளையும் கடந்ததாய் இருக்கிறது.

2011. அதாவது, உன் ஜீவிதத்தில் நான் என்பது இறைவனை நோக்கிச் செய்யப்படும் பிரயாணமாகும். நீ உன் இதயத்தைத் திறந்து இறைவனின் உதிப்பை ஏற்கத்தயாராயின் அவன் அந்த உதிப்பெனும் மழையை உன்மீது பொழிய எப்போதும் ஆயத்தமாகவே இருக்கிறான்.

## இதுவரை வெளியாகியுள்ள எமது பிரசுரங்கள்

முஸ்லிம் இளைஞர்களுக்கான தலைமைத்துவப்
பயிற்சி வழிகாட்டி
*– கலாநிதி ஹிஷாம் அல் தாலிப்*

நிராகரிப்புக்கும் தீவிரவாதத்துக்கும் மத்தியில்
இஸ்லாமிய எழுச்சி
*– கலாநிதி யூஸுப் அல்-கரளாவீ*

ஹதீஸ் முறைமையும் கிரந்தங்களும்
*– கலாநிதி முஹம்மத் முஸ்தபா அல்-அஸமி*

பிலால் (ரலி)
*– எச். ஏ. எல். க்ரெய்க்*

குர்ஆனும் ஸுன்னாவும்: கால-இட பரிமாணங்கள்
*– கலாநிதி தாஹா ஜாபிர் அல்-அல்வானீ*

மூலாதார நூல்களின் அடிப்படையில்
முஹம்மத் (ஸல்) அவர்களது வாழ்வு
*– கலாநிதி மார்டின் லிங்ஸ்*

இஸ்லாமிய உலகின் எதிர்காலம்
*– மாநாட்டுப் பேருரைகள் :*
*கலாநிதி மஹ்தி-அல்-மன்ட்ஜிரா; மஹாதிர் முஹம்மத்;*
*பேராசிரியர் ஷெய்க் அலி; ஸெய்யித் ஜமாலுத்தீன்-அல்-அப்கானீ*

பாரஸீகப் பெருங்கவிஞர்கள்
*– ஆர். பீ. எம். கனி பீ. ஏ., பீ. எல்.*

இஸ்லாமிய சட்டவியலில் பெண்களின் சாட்சியம்
*– கலாநிதி தாஹா ஜாபிர் அல்-அல்வானீ*

சர்வதேச உறவுகள் பற்றிய இஸ்லாமிய கோட்பாடு
*– கலாநிதி அப்துல் ஹமீத் அ. அபூஸுலைமான்*

மகாகவி இக்பால்
*– ஆர். பீ. எம். கனி பீ. ஏ., பீ. எல்.*